புதிய ஏற்பாட்டுப் புருஷர்



சாமுவேல் பவுல் ஐயர்

புதிய ஏற்பாட்டுப் புருஷர்

எழுதியவர்
சாமுவேல் பவுல் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

Published by :
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX NO. 501, PARK TOWN, CHENNAI-600 003

PUTHIYA ĒRPPAṬṬUP PURUṢAR
By SAMUEL PAUL IYER

COPYRIGHT C.L.S.

First Printed, 1963
Reprinted 1997

விலை ரூ. 90.00

Printed at The C.L.S. Press, Chennai-7. 1997—L6282

பதிப்புரை

கடந்த நூற்றாண்டில் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத்தை வளர்த்த பெருமை சாமுவேல் பவுல் ஐயர் அவர்களுக்கு உண்டு. **மோட்சப் பிரயாணம்**, **ஆத்தும நேசரின் அன்க மகத்துவம்** போன்ற அருமையான நூல்களோடு மேலும் அவர் எழுதிய நூல்கள் பல உள்ளன. கடந்த ஆண்டில் ஐயரின் **தியானச் சோலை**, **தியான ஆலயம்**, **உங்களோடு ஒரு நிமிடம்**, **கர்த்தருடைய ஜெபம்** ஆகிய நான்கு நூல்களின் மற்றபதிப்பு களைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்டது. அவர் எழுதிய **புதிய ஏற்பாட்டுப் புருஷர்** என்னும் நூலின் மற்ற பதிப்பை இவ்வாண்டில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் நாம் சந்திக்கும் சிறந்த தலைவர்களுள் பதினெட்டுப் பேருடைய வாழ்க்கையில் காணக்கிடக்கும் பண்பு நலன் களை ஆசிரியர் இந்நூலில் தம்முடைய கட்டுரைகளின் வாயிலாகத் தெரிவிக்கிறார்.

இரண்டு மூன்று தலைமுறையினர் இந்நூலை வாசித்துப் பயன் பெற்று வந்திருக்கிறார்கள். இக்காலக் கிறிஸ்தவர்களின் பக்தி வாழ்க் கைக்கு இந்நூல் துணைபுரிவதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

அன்புடன்

ஸ்வீட்லின் பிரபாகரன்
தமிழ்ப் பதிப்பாசிரியர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

சென்னை
ஜூன் 11, 1997

ராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

கீனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்கரையைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி பிறந்தார். இக்கிராமம் மெஞ்ஞானபுரத் திற்கருகில் உள்ளது. நிலவளம், நீர்வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவருடைய தந்தையார் கனம் தானியேல் பவுல் ஐயரவர்கள் சிறந்த பக்தன், வைராக்கிய பிரசங்கி. புகழ்பெற்ற மிஷனெரியாகிய கனம் ஜே. தோமாஸ் ஐயரவர்கள் இவ ருடைய பிரசங்கங்களைக் கேட்டு எழுப்புதலடைந்து கூறியதாவது: ''பவுல் தானியேல் ஐயர் செய்யும் பிரசங்கங்களைப்போலொத்த பிரசங் கங்கள் லண்டன் பட்டணத்துப் பொற்பங்களில் செய்யப்படுமாகில், ஆல யங்களில் இடம் காணாதேபோம். ஒருவேளை இந்தியாவில் எழும்பின குருக்களில் இவர்தான் மகோன்னத பிரசங்கியாயிருக்கலாம்.''

இச் சிறந்த பக்தனின் பதினொரு பிள்ளைகளில் சாமுவேல் பவுல் ஐயர் ஆறாவது பிறந்த ஆண் மகன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள். சாமுவேல் பவுல் ஐயர் இளமையில் தம் தந்தையார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக் கொண்டார். வேத அறிவைப் பெருக்கி வந்தார். மெஞ்ஞானபுரம் கலா சாலையில் கனம் ஜே. தோமாஸ் மிஷனெரியின்கீழ் உயர்தரக் கல்வி கற்றார். பாளையங்கோட்டையில் கனம் சார்ஜென்ற் மிஷனெரியின்கீழ் வேத சாஸ்திரக் கல்வி பெற்றார். பின்னர் சென்னப்பட்டணத்தில் கனம் சத்தியநாதன் ஐயரவர்களின்கீழ் உபதேசியாராகச் சிறந்த பணியாற்றி னார். திருநெல்வேலி அத்தியட்சாதீன குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயரவர்களின் குமாரத்தியை 1868ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து மீண்டும் சென்னப்பட்டணத்திற்கே தேவ ஊழியம் செய்யும்படி வந்தார். 1871இல் குருத்துவ ஊழியத்திற்கெனத் தெரிந்துகொள்ளப்பட்டு, அதற் குரிய பரீட்சைகளில் முதல்தரமாகச் சித்திபெற்று, 1874ஆம் ஆண்டு

அக்டோபர் மாதம் 11ஆம் தேதி மகா கனம் ஜெல் அந்தியட்சரவர்களால் திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. ஆலயத்தில் குருப்பட்டம் பெற்று, உதக மண்டலம் சி.எம்.எஸ். சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்: (1) மலை ஊழியம், (2) நகர ஊழியம், (3) நாட்டுப்புற ஊழியம்.

உதகமண்டலம்: (1) மலை ஊழியம் (1874-1883). உதக மண்டலத்துத் தமிழ்ச் சபையில் ஒன்பது வருடங்கள் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்துக் கடைசியாக மரணத்துக்கேதுவான வியாதிநிலையுண்டாகி அநேக நாள் ஆஸ்பத்திரியிலிருந்து சற்று சுகமான பின் நீலகிரி மலை அவருக்கு ஒத்துக்கொள்ளாதென்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால் அவ்விடத்தை விட்டு சென்னப்பட்டணத்துக்கு மாற்றப்பட்டார். நீலகிரியிலிருக்கையில் உவைநாடு சபையை (Wynaad Mission) ஸ்தாபித்துக் கவனித்து வந்தார். 1882ஆம் வருஷம் கள்ளிக் கோட்டையில் சிதறியிருந்த தமிழ்ச் சபை அங்கத்தினரை ஒன்றுசேர்த்து அச்சபையை ஸ்திரப்படுத்தினார். அங்ஙனமே குன்னூரிலும் சர்ச் மிஷன் சபையை ஸ்தாபித்தார். உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலைசெய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும்படியாக வேலைக்காரர் மிஷன் (Servants' Mission) என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீட்டிலும் மாதம் 1 ரூபாய் வீதம் வசூல் செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்விதமாய்க் கிடைக்கும்படி ஒழுங்குசெய்தார். இதர மதஸ்தருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல முறைகளைக் கையாடி வந்தார். ஹோபார்ட் பாடசாலையில் இரண்டு வாரத்துக்கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்தருக்கு விசேஷ பிரசங்கம் செய்து பிரசங்கம் முடித்தபின் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சந்தோஷமாய் விடையளிப்பார். வாரந்தோறும் சந்தைக்கூட்டங்களில் புறமதஸ்தருக்கென்று பிரசங்கம் நடத்துவார். மாதத்துக் கொரு முறை பௌர்ணமி தின இரவில் சதுர்ப் பிரசங்கம் செய்வார். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார்.

சென்னையில் குருத்துவ ஊழியம்: (2) நகர ஊழியம் (1883-1887) சென்னைப்பட்டணம் உக்கர் கோவிலுக்கு 1883ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் குருவாக நியமிக்கப்பட்டு அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப்பித்தார். இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்களும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவைகளாயிருந்தன. இவர் காலத்தில் தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டுக் கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட்டன. இளைப்பாறும் நேரமெல்லாம் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமுமான நூல்களைத் திரளாக எழுதினார். இதினால் தமிழ்ச் சபையோரெல்லாம் ஐயருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சாட்சியாபுரம்: (3) கிராம ஊழியம் (1887-1900). இது வட திருநெல்வேலி சபையை விசாரணைசெய்த காலத்தைக் குறிக்கும். வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக் கொடுத்த கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்து ஞாபகஸ்தம்பமாக விளங்கிநிற்கும் சிவகாசியென்னும் ஊருக்கருகிலுள்ள சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் அவர் தம் கிராம ஊழியத்தை ஆரம்பித்தார். சாட்சியாபுரம், வானகக் குளம் ஆகிய இரண்டு வட்டாரங்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டு மரணபரியந்தம் அங்கேயே தங்கி மிக ஆர்வத்துடன் திருப்பணியாற்றினார். தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின்படிதான் தவச உற்சவம் நம் நாட்டில் முதல் முதலாக 1891ஆம் வருடம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் கொண்டாடப்பட்டது.

இதர தொண்டு: 1890ஆம் வருஷம் முதல் 'நற்போதகம்' என்னும் மாதாந்தர தமிழ் பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந்தார். 1894ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி சென்னை அத்தியட்சரவர்கள் இவரை ஆனரெரி சாப்பிளனாக (Honorary Chaplain) நியமித்தார். திருநெல்வேலி சபைகளைக் கண்காணித்து வந்த கனம் மோர்ளி (Bishop Morley) அத்தியட்சரவர்களுக்கும் இவர் ஆனரெரி சாப்பிளனாக விருந்தார்.

ராவ் சாஹிப் பட்டம்: சபையின் வாழ்வை வெகுவாய்க் கருதியிருந்தது மல்லாமல் இராஜாங்க விஷயமாகவும், பொதுஜன நன்மைக்காகவும் பலவாறாகத் தம்மால் கூடியமட்டும் உழைத்து வந்தார். சீர்வேலிப் புத்தூர் தாலூகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமகம் பெற்று அச் சங்கங்களில் நல்ல ஆலோசனை கொடுத்துவந்தார். பிரஜைகளின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புத்தகங்களை நன்கு மதித்து இந்தியாவின் கவர்னர்-ஜெனரலவர்கள் 1898ஆம் வருஷம் இவருக்கு "ராவ் சாஹிப்" (Rao Saheb) என்னும் பட்டம் கொடுத்துக் கனப்படுத்தினார்கள். இந்தியாவில் இந்தக் கவுரவத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது சுதேச குரு இவரே.

இவர் மரிப்பதற்கு முந்தின வருடமாகிய 1899ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி, அனைவரும் கலங்கி நிற்கையில், கலகத்துக்குத் தலைகர்த்தனாயிருந்தவனோடு இவர் சமாதான உடன்படிக்கை செய்து சாட்சியாபுரத்தையும் அதிலிருந்த கிறிஸ்தவர்களையும் தற்காத்தார்.

இறுதிக் காலம்: தமிழ்க் கிறிஸ்தவச் சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சியைக் கருதிக் கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல் (Imago Christi) என்னும் ஓர் அருமையான புத்தகத்தை எழுத எண்ணங்கொண்டு ஆறு மாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, ஆழ்ந்த யோசனையுடன் அதை எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று 1900 வருஷம் மார்ச்சு மாதம் 4ஆம் தேதி ஞாயிறு காலை ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் இருமலும் கலந்து, வைத்தியர்களின் பிரயாசத்துக்கு வியாதி அடங்காமல், மார்ச்சு மாதம் 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்குச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் தம் பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரை தம் வேலையில் மிக ஊக்கமுள்ளவராயிருந்தார். வியாதிப்படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குத் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

மரணப்பதிக்கை: அவர் மரிப்பதற்கு முன் செய்த கடைசி ஜெபத்தில் ஏறெடுத்தவரே சிறு வயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணைகூர்ந்தீர். இப்போதும் என்னை உமது சமூகத்துக்கழைத்துக்கொள்ளச் சித்தங் கொண்டீர். ஆனால் இன்னும் சில காலமாத்திரம் ஜீவித்திருப்பேனானால் நான் இயற்றத் துவக்கின இரண்டு புத்தகங்களை (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்றார். கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனாகிய அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்துத் தம் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது! இது என் வீடல்ல. நான் போகும் மாளிகைக்கு இது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் மிக அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போக வேண்டும்; கோவில் மணியடிக்கிறது; கோவிலுக்கு நான் போகிறேன் என்று சொன்னார். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமை மனைவி அவரிடம் வந்து தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க, தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணை மூடினார். அதன்பின் அவர் மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாயப் பிரவேசமாயிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியும், சந்தோஷமும், அழகும் அனைவரையும் பிரமிக்கச் செய்தன. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டை அத்தியட்சாலயத்தில் ஒரு ஞாபகார்த்த கல்லும் பதிக்கப் பட்டிருக்கிறது.

அவர் எழுதிய 16 சிறந்த நூல்களில் ''ஆத்தும நேசரின் அங்க மகத்துவ''மும், மொழிபெயர்த்த 26 நூல்களில் ''மோட்சப் பிரயாணம்'' என்னும் புத்தகமும் இன்றுவரை மிக அருமையாக மதிக்கப்பட்டு வருகின்றன. பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம்.

பொருள் அட்டவணை

	பக்கம்
சகரியா	1
சிமியோன்	27
சாஸ்திரிகள்	35
யோவான் ஸ்நானகன்	48
அந்திரேயா	79
நாத்தான்வேல்	91
மத்தேயு	104
சகேயு	112
சிமோன் பேதுரு	128
யோவான் அப்போஸ்தலன்	175
யூதாஸ் ஸ்காரியோத்	196
பொந்தியு பிலாத்து	222
குணப்பட்ட கள்ளன்	244
ஸ்தேவான்	258
பவுல் அப்போஸ்தலன்	274
கொர்நேலியு	348
தீமோத்தேயு	363
ஒநேசிமு	369
முடிவுரை	383

முகவுரை

வேதபுருஷர் என்னும் பிரபந்தத்தின் மூன்றாம் பாகத்தை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையையும் அவருடைய ஆவியின் அநுக்கிரகத்தையும் முன்னிட்டு உங்கள் முன் படைக்கிறோம். இந்த ஆகமங்களும், இதனோடு சம்பந்தப் பட்டதாகிய **வேத ஸ்தீரீகள்** என்னும் ஆகமமும் எழுதி அச்சிட்டு முடிய ஒன்பது வருஷங்கள் சென்றிருக்கின்றன. ஆதலால் இவ் வாகமங்கள் தகுந்த ஆயத்தத்தோடும், மிகுந்த பிரயாசத்தோடும் உங்கள் முன் படைக்கப்பட்டன என்று அறிந்துகொள்ள வேண்டு மென்று விரும்புகிறோம். இக் காலங்களில் தேவன் தமது நிழலுக் குள் என்னை வைத்து, தமது காருண்யத்தால் என்னை நடத்தி இந்த வேலையை நிறைவேற்றும்படி தயவு செய்ததற்காக அவ ருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

வேதபுருஷர் என்னும் பிரபந்தத்தின் மூன்றாம் பாகமாகிய இந்த நூலில் புதிய ஏற்பாட்டிலுள்ள பதினெட்டுப் பேருடைய சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இந்தச் சரித்திரங்கள், பழைய ஏற்பாட்டுச் சரித்திரங்களைப் பார்க்கிலும் ஒரு விதத்தில் சற்று வித்தியாசப்படும் என்கிறதை வாசிக்கிறவர்கள் கவனித்துக் கொள்ளக் கூடும். பழைய ஏற்பாட்டுச் சரித்திரங்கள் பெரும் பாலும் சன்மார்க்க விருத்திக்கும், நல் நடக்கைக்கும் ஏதுவான போதனைகளைத் தருகின்றன. புதிய ஏற்பாட்டுச் சரித்திரங்களோ அவைகளையும் அவைகளோடு புது ஜீவ மார்க்கத்தின் தன்மை யையும், பரிசுத்த ஜீவனத்தின் போங்குகளையும் நமக்கு உணர்த்து கின்றன. இதினாலே நாம் பழைய ஏற்பாட்டு மகாத்துமாக்களை தாழ்த்துகிறதாக நினைக்கலாகாது; அவர்கள் தங்களுக்கு அருளப் பட்ட இரட்சண்ய ஜோதியின் அளவுக்குத் தக்கதாக நன்றாய் விளங்கியிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுப் பக்தரோ நீதியின் சூரியனாகிய இயேசுவின் ஜோதியையும், அவருடைய ஆவியின் பிரகாசத்தையும் அடைந்தவர்களானதால் தங்கள் ஆத்தும அழகில்

அதிகத் துலக்கமாய் விளங்குகிறார்கள். இவர்களுடைய சரித்திரத்தை வாசித்துப் பலனடைகிறவர்கள் அவர்களில் விளங்கும் பரிசுத்த அலங்காரத்தையுடையவர்களாய் இருக்கவேண்டியது.

இதின் வாசகநடையும், பொருட்போங்கும், வாசிக்கிறவர்களின் மனதை கவர்ந்துகொள்ளும்படி நம்மாலானமட்டும் பிரயாசப்பட்டிருக்கிறோம். இந்த நூலை வாசிக்கிறவர்கள் நிலையான பக்தியிலும் பரிசுத்தத்திலும் விருத்தியாகி, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, காலம் கழித்த விசுவாசிகளின் மாதிரியைப்போல் நடந்து தங்கள் ஜீவ காலத்தைப் பின்னிட வேண்டுமென்பதே நமது நோக்கம்.

திரியேக தேவன் இதை வாசிக்கிற ஒவ்வொரு சிநேகிதனையும் தமது இரட்சண்ய ஜோதியால் சந்தித்து, தம்முடைய ஆவியால் பரிசுத்தமாகுதலைக் கட்டளையிட்டு, இவ்வுலகத்தில் அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்கைப்போலும், மறு உலகத்தில் சூரியனை அல்லது சந்திரனை அல்லது நட்சத்திரத்தைப்போலும் விளங்கும்படி அருள் அளிப்பாராக.

சாட்சியாபுரம்
சிவகாசி
ஜனுவரி, 1890

கிறிஸ்துவுக்குள்ளான
உங்கள் உத்தம சிநேகிதன்
S. பால் ஐயர்

சகரியா

(ஊமைப் பூசாரியார்)

வேதாகமத்திலடங்கிய விசேஷித்த புருஷாட்களுடைய சரித்திரத்தைப்பற்றிய முந்தின பிரபந்தங்கள் இரண்டையும் வாசித்தறிந்தவர்கள் இந்தப் பிரபந்தத்தை அசட்டை பண்ணமாட்டார்களென்று நம்புகிறேம். முந்தின இரண்டும் விசேஷமென்றால், இந்த மூன்றும் பிரபந்தம் அவ்விரண்டிலும் அதிக விசேஷமுள்ளதாகவே இருக்கிறது. எப்படியெனில், அவைகளில் அடங்கிய சங்கதிகள் பழைய ஏற்பாட்டின் காலம் என்று சாதாரணமாகச் சொல்லப்படும் கிறிஸ்துவின் காலத்துக்கு அநேக வருஷங்களுக்கு முந்தினவைகளாயிருக்கின்றன. இந்தப் பிரபந்தத்தில் நாம் சொல்லும் புருஷாட்களின் வரலாறே, கிறிஸ்துவின் காலத்திலும் அதற்கு அடுத்த காலத்திலுமிருந்த பக்தாட்களின் சரித்திரமாயிருக்கிறது. முந்தின சரிதைகள் இராக்காலத்து கிரக ஜோதிகள் போலிருந்தால், இச்சரித்திரங்கள் பகற்காலத்து சூரிய ஜோதிபோலிருக்கின்றன. இதினாலே நாம் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் வெட்டிப் பிரிக்கிறேமென்று ஒருவரும் எண்ணலாகாது. இரட்சண்ய சாஸ்திர சம்பந்தமாய்ச் சொல்லவேண்டுமானால், இரண்டும் ஒரே தொடர்ச்சியான காலமாகவே இருந்தன. மனுஷ ஆயுளின்படியும் உலகசரித்திர முறையின்படியுமாத்திரம் நாம் இதைச் சற்றுப் பிரித்து ஒன்றைப் பழைய ஏற்பாட்டின் காலமென்றும், ஒன்றைப் புதிய ஏற்பாட்டின் காலமென்றும் வகுத்துக்கொள்ளுகிறேமேயன்றி வேறல்ல. இரட்சண்யத்தின் மூலப்பொருளான தேவனும், அவருடைய இரட்சண்ய அன்பும், கால வித்தியாசமின்றி ஏகவிஷயமாகவே இருந்தன. ஆனால் அவ்வன்பு வெளிப்படுத்தப்பட்ட

முறையோ, அமாவாசை மாறி வளர்பிறை தோன்றி பௌர்ணமி வருகிறதுபோலும், விடிவெள்ளி தோன்றி கிழக்கு வெளுத்து பகலோன் புறப்பட்டு உச்சி நேரத்தில் வல்லமையாய்ப் பிரகாசிப்பதுபோலும் இருக்கிறதேயன்றி வேறல்ல.

இப்போது நாம் வாசிக்கப்போகும் சகரியாவின் விஷயத்துக்கும், பழைய ஏற்பாட்டின் கடைசிச் சரித்திரம் முடிந்திருக்கிற காலத்துக்கும் மத்தியில், சுமார் நானூறு வருஷங்கள் சென்றதாக வேத வியாக்கியானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த நானூறு வருஷ காலங்களுக்குள் உலக இரட்சகர் எழும்பும் யூத ஜாதியானது சன்மார்க்கம், இராஜாங்கம் முதலிய விஷயங்களில் தாழ்வுபட்டுக்கொண்டே வந்தது. அதற்குப் பதிலாக சீர்கேடும், வெளிவேஷபக்தியும், இராஜ்யபார மாறுதலும், கலகங்களும், குழப்பங்களும் அவர்களை ஆண்டுகொண்டு வந்தன. மழை மேகத்திரளிலே எங்கேயோ ஓரோர் நட்சத்திரங்கள் தோன்றி மின்மினிப் பூச்சியின் வெளிச்சம்போல் வெட்டுமோ அவ்விதமாகவே பக்தர்கள் மினுங்கினார்களேயன்றி வேறல்ல. அந்த நானூறு வருஷங்களின் முடிவில் இராஜ்யபாரம் யூத ஜாதியாரிடத்திலிருந்து ரோமரால் பிடுங்கப்பட்டு, ஏதோமியனான ஏரோதுவின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. இவன் காம விகாரத்தினாலோ அல்லது வேறெந்த முகாந்தரத்தினாலோ தன் பல மனைவிகளோடு யூதப் பெண்ணொன்றையும் கலியாணம் செய்து கொண்டு அதினிமித்தம் யூதமார்க்கத்தில் பேருக்கு அமைந்திருந்தான். அரசாட்சியின் விஷயத்தை அவன் நடத்தினானேயன்றி மார்க்க விஷயத்தில் அவன் தலையிடவில்லை. மார்க்க விஷயமானது அதற்குமுன் நடந்து வந்ததுபோல கிழமைதோறும் தங்கள் முறைபடி வந்து பலிகளையும், தூபதீப ஆராதனைகளையும் செலுத்தி வந்த ஆசாரிமாரால் நடத்தப்பட்டு வந்தது.

இப்படியிருக்குங்காலத்தில் எருசலேம் நகருக்குச் சுமார் இரண்டு காதவழிக்குத் தெற்கே எபிரோன் என்னும் ஊரில் பல ஆசாரிமார் குடியிருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்குச் சகரியா என்று பெயர். அவரை நாம் இவ்

விடத்தில் 'ஊமைப் பூசாரியார்' என்று அழைத்திருக்கிறதில் ஒரு நோக்கமிருக்கிறது. ஏனெனில், அவர் அற்புதமாய் ஊமையாகி, அற்புதமாய்க் குணமானார்.

அவருக்கு எலிசபெத்து என்னும் பேருடைய மனைவி இருந்தாள். இவ்விருவருடைய பூர்வோத்தரங்களைப்பற்றி நமக்கொன்றும் விபரமாய்த் தெரியாது. ஆனால் சகரியா என்பவர் 'அபியா என்னும் ஆசாரிய வகுப்பில்' சேர்ந்தவரென்று, அவருடைய பாரியாளாகிய எலிசபெத்து யூத ஜாதியாருக்கு முதலாம் பிரதான ஆசாரியரின் தலைவனாகிய ஆரோனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவளென்று மாத்திரம் நமக்குத் தெரியும். ஆகவே, இவ்விருவரும் யூத ஜாதிக்குள் பிரபல்லியமாய் பேரெடுத்த மோசே, ஆரோன், மீரியாம் இவர்களுடைய குடும்பக் கொடியைச் சேர்ந்தவர்களென்று விளங்குகிறது.

சகரியாவும் எலிசபெத்தும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். சன்மார்க்கப் பிரமாணத்தின்படி நடக்கவேண்டிய விஷயத்திலும் சடங்குப் பிரமாணத்தின்படி நடந்துகொள்ளவேண்டிய வகையிலும் அவர்களிடத்தில் யாதொரு குற்றம் காணவில்லை. இந்தக் குடும்பத்தைப்போல உத்தமமான குடும்பங்கள் உலகத்தில் அதிகக் கொஞ்சமிருக்கலாம். நாம் பெரும்பாலும் மார்க்க விஷயத்தில் வெவ்வேறு சிந்தையும் மனப்போங்குமுள்ள அநேகக் குடும்பங்களைப் பார்க்கிறோம். அவைகளில் சிலதரம் புருஷன் வேத வாசிப்பிலும், தேவாராதனைக்கு வருவதிலும் நற்கிரியைகளைச் செய்வதிலும், பண்டிகைகளை மதிக்கிறதிலும் பேரெடுத்தாலும் அவன் மனைவி அதற்கெல்லாம் நேர்விரோதம் செய்கிறவளுமாயிருக்கப் பார்க்கிறோம். வேறு சில வீடுகளில் மனைவி மார்க்க விஷயத்தில் ஒழுக்கமும் கிரமமு முடையவளாயிருந்தாலும், அவளுடைய புருஷன் அதைக் குறித்து எவ்வளவேனும் சட்டைபண்ணுதவனாயிருக்கிறதைக் காண்கிறோம். ஆனால் இந்தக் குடும்பமோ அப்படியல்ல. அவ்விருவரும் ஏக மனநிர்ணயத்தோடு தேவபக்தியையே தங்கள் ஆபரணமாகவும்,

மார்க்கவிஷயமான ஆசாரங்களைக் கைக்கொள்வதையே தங்களுடைய கடமையாகவும் எண்ணி வந்தார்கள். இவர்கள் தங்களுக்கும் தேவனுக்கும் பிறருக்குமான பரிசுத்த கடமைகளென்னவோ அவையனைத்தையும் திட்டவட்டமாய் நிறைவேற்றி, தங்கள் காலத்தில் நீதிமான்களென்று பேரெடுத்தார்கள் நாம் இவ்வுலகத்தில் மார்க்க விஷயமாய் புருஷன் நல்லவன் மனைவிகெட்டவள் என்றுவது, மனைவி நல்லவள் புருஷன் கெட்டவன் என்றுவது சொல்வதுண்டு. ஆனால் சகரியாவும் அவர் மனைவியும் ஆள் விஷயத்தில் பிரிந்திருந்தாலும், ஆண்டவர் விஷயத்தில் பிரிந்தவர்களாயிருக்கவில்லை. அவர்களுடைய விவாகம் மெய்யாகவே தேவ ஏற்பாட்டின்படி நடந்தபடியால் தேவன் அவர்களைச் சரீரத்திலும் ஆத்துமத்திலும் ஒன்றுக்கிவிட்டாரென்று சொல்லவேண்டியது. இவர்களுடைய குடும்பமோ தலைமுறை தத்துவமாய் தேவ பக்தியுள்ளதாயிருந்தது. இந்தப் பூசாரியும் அவர் மனைவியும் இருந்த காலத்துக்கும் அவர்களுடைய குடும்பத் தலைவனுகிய மோசேயின் தகப்பனார் இருந்த காலத்திற்கும் இடையில் சுமார் ஆயிரத்தைந்நூறு வருஷங்கள் கடந்துபோயிருந்தன. இந்த நெடுங்காலத்திலுள்ள அக்குடும்பத்தார் பக்திநிலை தவறுதபடி நடந்து வந்தபடியினாலே தான் ஆயிரத்தைந்நூறு வருஷத்திற்குப் பின்பு அக்குடும்பத்தில் தோன்றின பிள்ளைகளும் பக்தராயிருந்தார்கள்.

சகரியா என்னும் பூசாரி மகா அன்புள்ள மனுஷனுயிருந்தார். அவருடைய மனைவி மலடியாயிருந்தாள். அதையிட்டு உள்ளுக்குள் சற்று ஆயாசமிருந்தபோதிலும் அதினிமித்தம் அவளைப் பகைக்கவில்லை. ஆசாரியக் குடும்பத்தைச் சேர்ந்த வேறு சிலர் பிள்ளைக்காக வேறு மனைவிகளையும் கலியாணஞ்செய்திருந்தாலும், இவர் அவர்களுடைய கெட்டமாதிரியைப் பின்பற்றவில்லை. இவருடைய மனைவிக்கு மலட்டுக்குரிய குறிப்புகள் காணப்பட்டதேயன்றி, கர்ப்பக்கனிக்கேற்ற குறிப்புகள் யாதொன்றும் காணப்படவில்லை. என்றாலும், மலடியாயிருந்த சாராளும் அன்னாளும் தேவவல்லமையினால் கர்ப்பக்கனிகளைத் தங்கள் கைகளில் ஏந்திகடவுளைத் துதித்தார்களே, நமக்கும் அப்படிப்பட்ட கிருபை

கிடையாதா என்று அவ்விருவரும் பக்திவிநயமாய் எண்ணி கடவுளை நோக்கி, தங்களுக்குப் புத்திரபாக்கியத்தைக் கடாட்சம் செய்யவேண்டுமென்று கனிவாய் ஜெபித்து வந்தார்கள். இவர்களுடைய ஜெபம் காற்றோடுபோன ஆகாய அணுக்கள் போலும், கடலுக்குள் வார்த்த தேன் சொட்டுகள் போலும் கடந்துபோனதேயன்றி உடனே கைகூடினதில்லை. அவ்விருவரும் இவ்வண்ணம் ஜெபம் பண்ணியும் பிள்ளைபலன் காணுத விருத்தாப்பியரானார்கள். அவர்கள் தலை நரைத்து, கண் மங்கி, முதுகெலும்பு பெலவீனப்பட்டு, தேகம் மெலிந்து, நடை அடங்கி, கிழவர் வரிசையில் சேர்ந்தார்கள். அப்பால் அவர்கள் பிள்ளைக்காக முன்போல ஜெபஞ் செய்வார்களா? இல்லை. அவர்கள் தங்களுடைய அந்த ஜெபத்தை நிறுத்திவிட்டு, ஆண்டவரே நரைமயிரையும் முதிர் வயதின் பெலவீனத்தையும் கண்டோம், இனி அடியாரைச் சமாதானத்தோடு மண்ணுலகிலிருந்து விண்ணுலகுக்குக் கூப்பிட்டுக்கொள்ளும் என்று ஜெபித்திருப்பார்கள்.

இப்படியிருக்குங்காலத்தில் கிழ ஆசாரியனாகிய சகரியா தன் முறைப்படி ஒரு தரம் எருசலேமிலுள்ள தேவாலயத்தில் ஊழியஞ்செய்யும்படி வந்தார். இப்படி முறைப்படி தேவாலயத்தில் வந்து ஊழியஞ்செய்யும் வழக்கமானது சகரியாவின் காலத்துக்கு சுமார் ஆயிரம் வருஷத்துக்கு முன்னே அந்நாட்டை ஆண்டு வந்த இராஜபுலவராகிய தாவீது அரசனால் ஏற்படுத்தப்பட்டது. தாவீது தன் காலத்திலிருந்த ஆசாரியக் குடும்பத்தார் தொகையில் அதிகப்பட்டு வந்தால் வாயுள்ளவர்களான ஆசாரியக் குடும்பத்தார் வாயிளைத்தவர்களைக் கீழ்ப்படுத்தித் துன்பப்படுத்தாமலும், சகலருக்கும் தேவாலயத்து வரும்படியும் வேலையும் கிடைக்கவும், சச்சரவுக்கும், மனஸ்தாபங்களுக்கும் இடமுண்டாகாதபடிக்கும் ஆசாரியரை இருபத்து நாலு வகுப்பாகப் பிரித்து, ஒவ்வொரு வகுப்பார் ஒவ்வொருவாரம் வந்து தேவாலயத்தில் ஊழியஞ்செய்யவும், எல்லாருக்கும் வருஷத்தில் இரண்டு முறை வரவுமாக ஒழுங்கு பண்ணியிருந்தார். அந்த ஒழுங்கின்படி சகரியாவின் வகுப்பு முறை வந்தபோது

அவர் எருசலேமுக்குப் போயிருந்தார். இதுவுமல்லாமல் அந்தந்த வகுப்பார் தங்கள் வாரத்தில் அவரவர் செய்ய வேண்டிய வேலை இன்னதென்பதைச் சீட்டினால் குறித்துக் கொண்டு செய்கிறதுண்டு. சகரியாவின் முறை வந்த வாரத்தில் அவருக்குத் தூபங்காட்டுகிற வேலையென்று சீட்டினால் குறிக்கப்பட்டது.

சகரியா சீட்டினால் குறிக்கப்பட்ட தேவ நியமனத்தின் படி தூபகலசத்தை ஏந்தி, திரு அக்கினியால் அதை நிரப்பி, பொற் கிண்ணங்களிலிருந்த தூபவர்க்கங்களைப் போட்டு அதன் புகையை தேவ சந்நிதிக்கு ஏறெடுத்து வந்தார். ஆசாரியன் தூபவர்க்கமானது ஜெபத்தின் அடையாளமாயிருந்தது. ஆசாரியன் தூபங்களை அக்கினியில் போட்டுப் புகைத்து தேவ சந்நிதிக்கு ஏந்தும்போது ஜனங்கள் தங்கள் இருதயங்களை ஆவிக்குரிய தூபமாகப் புகைத்து பச்சாத்தாப மனதோடு தங்கள் விண்ணப்பங்களின் அணுத்திரளை அந்த தூப அணுக்களோடு கலந்து செலுத்தி வந்தார்கள். தூபமானது காலையிலும் மாலையிலும் கொளுத்தப்பட்டு வந்தது.

சகரியா இந்தப் பரிசுத்த பணிவிடையிலிருக்கையில் கர்த்தருடைய தூதன் தூபபீடத்தின் வலது பக்கத்திலே நின்று அவருக்குத் தரிசனமானார்.[1] இந்தத் தரிசனையுண்டானது காலையிலோ, மாலையிலோ என்று நிர்மானமாய்ச் சொல்ல ஏதுவில்லை. தேவ தூதனைக் கண்டவுடனே சகரியா கலங்கி பயமடைந்தார்; இந்தப் பயத்துக்கு ஒரு காரணமுண்டு. ஆதாம், ஆபிரகாம், எசேக்கியேல் முதலியவர்களாயிருந்தால் தூதர் காட்சியானது அவர்களுக்குப் பயமாயிருக்கமாட்டது. இந்தக் காலத்திலோ தூதர் காட்சியைப் பற்றி யாதொரு விஷயமும் தெரியாது. சகரியாவின் காலத்துக்கு முன்னே சுமார் 400 வருஷங்களாக தீர்க்கதரிசன ஆவியின் வரமும், தூதரின் காட்சிதரிசனைகளும் நின்று

[1] தேயோனிடத்தில் வந்த தூதன் அவன் செலுத்தின பலிப்புகையின் வழியாய்ப் பரலோகம் போனார். சகரியாவிடத்தில் வரவேண்டிய தூதன் தூபப்புகையின் வழியாய் இறங்கி தேவாலயத்துக்கு வந்தார். ஜெபத்தின் வழியாய் தேவதூதரும் தேவ அருளும் இறங்கலாம்.

போனதால், இக்காட்சி நூதனமாகவே இருந்தது. சகரியா தூபம் காட்டின நாள் முதல் இரட்சண்ய யுகத்தின் புதுக் காலம் ஆரம்பிக்கிறதென்பதையும் அவர் அறியாதே போனார். சகரியா பயப்பட்டதினாலே நாம் அவர் பேரில் குற்றம் சொல்லுகிறதில்லை. எப்போதும் பயந்திருக்கிறவன் என்று வேதம் சொல்லுகிறது. ஒரு வேளை சகரியா அக்காலத்து ஜனத்தாரின் அவிசுவாசத்தையும் சன்மார்க்கத் தாழ்வையும் கவனித்து, இந்தப் போல்லாத சந்ததியின்மேல் வருகிற தேவசாபத்தை நமது மூலமாக தேவதூதன் கூறப்போகிறாரோ என்று அஞ்சியிருக்கலாம். அல்லது தான் அந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் நடந்துகொள்ளவேண்டிய வண்ணமாக நடவாததால், தன்னைக் கொலைசெய்து தண்டிக்கும்படி வந்திருக்கிறாரோ என்று எண்ணினாலும் எண்ணியிருக்கலாம்.

சகரியாவின் பயம் அவ்வளவு அதிகமாயிருந்ததால் தேவதூதனே அவரைத் தைரியப்படுத்தவும் வேண்டியதாயிருந்தது. தூதன் அவரைத் தைரியப்படுத்தாத பட்சத்தில் சொல்லவந்த செய்தியைச் சொல்லாமல் மறுபடியும் பரலோகத்தில் ஒப்புவிக்கவேண்டியதுதான். தேவனிடத்திலிருந்து வரும் ஈவுகள் நமது சரீரத்தைக் கீழே விழுந்தள்ளின பிறகுதான் அருளப்படுகிறது என்று சொன்னாலும் குற்றமில்லை. அவர் யாக்கோபின் சந்ததித் தொட்டு நொண்டியாக்கி அவன் குந்திக்குந்தி நிற்கையில் வாக்குத்தத்தங்களின் குப்பியைத் திறந்து திருவாக்கபிஷேக தைலத்தை அவன்மேல் பொழிந்தார்; பரி. பவுலின் கண்ணைக் குருடாக்கி தமது தாசரில் முக்கியமானவர்களில் ஒருவனாக்கினார்; பரி. பேதுருவை ஜலத்தில் கொஞ்சம் அமிழச்செய்து தூக்கியெடுத்து அவரை விசுவாசத்தில் வல்லவனாக்கினார். தேவன் நன்மை செய்கிறபோங்கும், சந்தோஷங்களை அருளுகிற போங்கும், உலக இயற்கைக்கு முற்றும் விரோதமாகவே இருக்கும். ஆதலால் கஷ்டத்தையும், கண்ணீரையும், பயங்கரத்தையும் கண்டு காரியம் நஷ்டமாய் முடிந்துவிட்டதென்று ஒருக்காலும் தீர்மானஞ்செய்யாதே. சங்கீதக்காரன் சொல்லுகிறதுபோல இதெல்லாம் பலவீனப்படும் முறை; காரியத்தின் மாறுதல்

உன்னதமானவருடைய கரத்திலிருக்கிறது என்று அறிந்து கொள்வாயாக.

தேவதூதன் சகரியாவின் பயத்தை நீக்கின பின்பு சொல்லுவான்: 'சகரியாவே! உன் விண்ணப்பம் கேட்கப் பட்டது, உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக' என்றான். இதைவிட மனதுக்குச் சந்தோஷ மான செய்தி சகரியாவுக்குக் கிடைக்குமோ? அவர் தன் ஜீவ காலத்திலுண்டான மனக்கவலைகளை யெல்லாம் ஜெபத்தின் மூலமாய் ஆண்டவரிடத்தில் சொல்லி வந்தார். இப்பொழுது அவையனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட செய்தியைப்போல வேறென்ன செய்தி சகரியாவுக்கு வேண்டியது? சகரியாவின் விண்ணப்பம் கேட்கப்பட்ட தென்கிற செய்தியோடு அதற்கு உத்தரவும் வருகிறது. ஏனெனில், 'உனக்கு ஒரு குமாரன் பிறப்பான்' என்கிற வாக்குத்தத்தம் அதைப் பின் தொடர்ந்தது. சகரியாவின் காரியம் வானத்திலும் க்ஷேமம், பூமியிலும் க்ஷேமம். வானத்திலும் அவர் ஜெபம் கேட்கப் பட்டது, பூமியில் அவருக்குப் புத்திரசந்தானமுண்டா கிறது. சகரியாவுக்குப் பிறக்கும் பிள்ளைக்கு யோவான் என்று பேரிடவேண்டுமென்று தேவதூதன் சொன்னான். இது அந்தத் தூதனுடைய மன இஷ்டத்தின்படி சொல்லப் பட்ட பேராயிராமல், அவனை யனுப்பின தேவன் சொல்லி யனுப்பின பேராயிருந்தது. யூதருக்குள் ஞானத்தாய் தகப்பன்மார் பேர் கொடுத்து விருத்தசேதனம் செய்கிற துண்டு. இவ்விஷயத்தில் தேவனே சகரியாவின் மகனுக்குப் பேர் சொல்லியிருக்கிறதைக் கவனித்தால், நானே அவனுக்கு ஞானத்தகப்பனையிருக்கிறேன் என்று திரித்துவ தேவன் அறிக்கையிடுகிறது போலிருக்கிறது.

அந்தப் பரலோகவாசி இம்மட்டோடே தன்னுடைய பேச்சை நிறுத்தவில்லை. அந்தப் பாலகனைக் 'உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பி னிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்த ருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனுகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்' என்றும் சொன்னான். இச்செய்தியைப் பார்க்கிலும் சந்தோஷமான செய்தி சகரியாவுக்கு வேண்டியதா? ஆ! பிதா மாதாக்களே, பிறந்தால் இப்படிப்பட்ட பிள்ளை பிறக்கவேண்டும்; மற்றப்படி சும்மாயிருக்கிறது நலமல்லவா? கெட்ட பிள்ளைகளைப் பெறுகிறதைவிட கல்லேட் பெறுகிறது நலமல்லவா? மலடான எலிசபெத்தின் கர்ப்பத்திலிருந்து மகத்தான கனி உண்டாகிறதென்பதைப் பார்க்கிறோம். இந்த அருங் கனியை ஏந்தத்தான் அவள் கர்ப்பம் இம்மட்டும் அடைபட்டிருந்ததாகும். தேவன் தீர்மானித்த இந்த முத்து அவள் கர்ப்பத்தில் விளைய இவ்வளவு காலம் அவள் மலடியாயிருக்க வேண்டியதாயிருந்ததாகும். இவ்வளவு பாக்கியத்திற்கும் அருளுக்கும் தேவனே ஆதிகாரணமாயிருந்தபோதிலும், அவ்விருவருடைய பக்தியும், பக்தி முறையாய்த் தங்கள் சரீர பாண்டத்தை அவர்கள் சுத்தமாக வைத்திருந்ததும், ஒரு கருவி காரணமாயிருந்ததென்று சொன்னாலும் குற்றமில்லை. தேவ தயவின் அருள் பிரசாதங்கள் அதிகமாய்த் தங்கவும், அவருடைய கிருபை அருள் ஊறவும், மனுப்புத்திரர் தங்கள் சரீர உறுப்புகளைக் காத்துக்கொள்ள கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

கிழ ஆசாரியன் இந்தச் சங்கதியைக் கேட்டவுடனே தாழ விழுந்து சம்மனசே! உமது வார்த்தையின்படி ஆகக் கடவது, கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டதால் அவரை ஸ்தோத்திரிக்கிறேன் என்று சொல்லவேண்டியதாயிருக்க, அப்படிச் செய்யாமல் தூதனுடைய வார்த்தையைக் குறித்து சந்தேகித்து, 'இதை நான் எதினால் அறிவேன்? நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே' என்று சொன்னார். இச்சமயத்தில்

சகரியா பேசின வார்த்தைகள் ஒருவகையில் நிசமாயிருந் தாலும் இப்படி அவர் பேசலாமா? பேசக்கூடாதா? என்பதும், இவர் பேசினதில் பிசகென்னவென்றும் பல கேள்விகள் வரலாம். சகரியாவின் வார்த்தைகளைச் சற்றே கவனித்தால், அவ்வித கேள்விகளுக்கு இடமில்லையென்பது விளங்கும். எப்படியெனில், சகரியா 'இதை நான் எதினால் அறிவேன்' என்று மாத்திரம் கேட்டு அம்மட்டில் நிறுத்தியிருந்தால் அவர் கேட்கிறது நியாயந்தான். மனுஷனுடைய தன் விசுவாசத்தை அதிகமாகப் பலப்படுத்திக்கொள்ளும்படி சிலர் அடையாளங்களைக் கேட்டதுபோல் இவரும் கேட் கிறார். அதில் தோஷமில்லையென்று நாம் அவர் பட்சம் பேசலாம். ஆனால், 'நானும் கிழவன், என் மனைவியும் கிழவி' என்று சொல்லும் வாசகத்தில்தான் அவரிடத்தில் குறைவு காணப்படுகிறது. இவர்கள் இருவரும் விருத்தாப் பியர் என்பது ஆண்டவருக்கும் தெரியும், தேவதூதனுக்கும் தெரியும். இவர்கள் வயதையறிந்த தேவனே இவர்களுக் கொரு புத்திரசந்தானத்தை வாக்குத்தத்தஞ் செய்யும்போது இவருக்குச் சந்தேகமென்னத்துக்கு? மேலும் இவருக்கு ஆதிகாலமுதல் தேவன் ஆபிரகாம், சாராள் என்பவர்களுக்கு ஈசாக்கைப் பிறக்கச் செய்த அற்புதம் நன்றாகத் தெரிந் திருக்கவேண்டியது. ஏனெனில், ஆசாரியரிடத்திலே சகலரும் வேதம் கேட்கவேண்டியது. இந்தக் கேள்வியினால் தான் ஈசாக்கின் ஜநநத்தை நம்பாதவர்போல் காட்டுகிறார். அல்லவென்று தேவதூதன் யோவானுடைய பிறப்பின் வர லாறுகளைச் சொல்லும்போது இவர் தன் சரீர பலவீனத்தை யும், நரைத்த தாடியையும், மங்கின கண்களையும், சுருங்கிப் போன உடலையும், தன் மனைவியின் சரீரக் கூறுபாடுகளையும் சிந்தித்துக்கொண்டு, எங்களில் கர்ப்பக் கனியுண்டாகும் அற்புதஞ்செய்ய தேவனுலும் கூடாது என்று தனக்குள் தீர்மானம் பண்ணியிருக்கலாம். இப்படி அவர் தீர்மானித் திருந்தால் அது தண்டனைக்கேதுவான அவிசுவாசமேயன்றி வேறல்ல. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப் படும் விஷயத்தைப்பற்றி நாம் தியானிக்கும்போது, ஒருக் காலும் நமது நிலைமையையும், நமது முன்பின் காரியங்களை யும் நோக்குகிறவர்களாயிராமல், தேவவல்லமையையும்,

ஞானத்தையுமே பார்த்துத் தியானிக்கிறவர்களா யிருக்க வேண்டியது.

சகரியாவின் பக்தியுள்ள ஜெபமெல்லாம் நிறைவேறப் போகிற காலத்தில் அவிசுவாசம் அவருக்குள் தலைப்படுகிறது என்பது நமக்குச் சற்று துக்கத்தைக் கொடுக்கிறது. விசுவாசம் விளக்குப்போல் எரியவேண்டிய நேரத்தில் அத்திரிமங்குவது யாருக்குத்தான். விசனமாயிருக்காது! ஆசாரியனுடைய பேச்சுக்கு மறுமொழியாக தேவதூதன் சொல்லுவான்: 'நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்' என்றான். இந்த வார்த்தைகளைக் கவனிக்கும்போது சகரியாவின் அவிசுவாசம் இன்னதென்பது சற்றுத் தெளிவாகிறது. அவர் தன்னையும் தன் மனைவியையும் நினைத்து அவிசுவாசப்பட்டது மாத்திரமல்ல, தன்னுடன் பேசின ஆளைப்பற்றியும் அவிசுவாசமுள்ளவராயிருந்தார். நமக்குத் தோன்றுகிறபடி அவனைத் தேவதூதன் என்றெண்ணுமல் பிசாசாயிருக்கலாமென்று எண்ணியிருந்தாற்போலிருக்கிறது. மற்றப்படி தேவதூதன், நான் தேவ சந்நிதானத்தில் நிற்கிறவன், என் பேர் 'காபிரியேல்' என்று வற்புறுத்திச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சகரியா தனக்குக் காணப்பட்ட தூதனை ஒளியின் வேஷம்பூண்டு வரும் சாத்தான் என்று நினைக்க எவ்வளவேனும் இடமிருந்ததில்லை. எப்படியெனில், பிசாசுக்கு மனுஷரைப் பயப்படுத்தத் தெரியுமேயன்றி பயப்படாதே என்று சொல்லத் தெரியாது. மேலும் பிசாசுக்கு அவர்கள் செய்த ஜெபத்தைக் கேட்க வல்லமையுண்டா? யாருக்காவது பிசாசு பிள்ளை வரம் கட்டளையிட்டதுண்டா? பிசாசுக்கு யோவான் என்று பேரிடவுந் தெரியுமா? அப்படிப் பேரிடுமா? பிசாசு திராட்சரசத்தைத் தடுக்குமோ? பரிசுத்த ஆவியைக் கர்ப்பமுதல் அருளுமா? அநேகரை மனந்திருப்புமா? பிசாசின் மூலமாய் எலியாவின் வரம் இறங்குமா? இதெல்லாம் பார்க்கும்போது, சகரியாவின் அவிசுவாசம் எவ்வளவு பலத்ததென்று தோன்றுகிறது. தேவதூதன் அம்மட்டோடே நிறுத்தாமல் 'இதோ, தகுந்த காலத்தில்

நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையனாயிருப்பாய்' என்றான்.

ஐயோ! சகரியாவின் தண்டனை எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது. அநேக ஆண்டுகளாக தேவபக்தியாய் ஜீவனம் பண்ணி, கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும் நியமங்களின்படியும் குற்றமற்றவனாய் நடந்த ஆசாரியன், தன் சரீர பலவீனத்தை நோக்கினதால் இடறிவிழுந்து அவிசுவாசியாகி, சுமார் பத்து சொல் சொன்னதற்காக பத்து மாதம் ஊமையாகப்போகத் தண்டனை பெற்றிருக்கிறான். நம் முடைய பலவீனத்தில் தேவனுடைய பலம் விளங்கும். ஆதலால் நாம் நம்மை வைத்து காரியங்களைத் தீர்மானிக்க வேண்டாம். மேலும் நாம் நமது வாயிலிருந்து பேசும் வார்த்தைகளைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டியது; நாம் பேசும் தகாத வார்த்தைகளுக்கும் கணக்குக் கொடுக்க வேண்டியதுண்டு.

சகரியாவுக்கு வேறெந்த தண்டனையும் வராமல் இந்தத் தண்டனையைக் கொடுக்கவேண்டியதென்ன? அவரைத் தேவன் குஷ்டரோகத்தால் தண்டித்திருந்தால் அந்நிமிஷமுதல் அவருடைய ஆசாரிய ஊழியம் நின்றுபோம் (லேவி. 52:4). அல்லது குருடனாகவாவது, சப்பாணியாகவாவது கூனனாகவாவது தண்டனை பெற்றாலும் ஆசாரிய ஊழியத்திலிருந்து அகற்றப்படுவார். ஏனெனில், மோசேயின் பிரமாணத்தில் ஆரோனுடைய சந்ததியாருக்குள்ளே 'அங்கவீனமுள்ளவன் தலைமுறை தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தும்படி சேரலாகாது என்றும், அங்கவீனமுள்ள ஒருவனும் பரிசுத்த பணிவிடையைச் செய்ய நெருங்கலாகாதென்றும், குருடனாலும், சப்பாணியனாலும், குறுகின அல்லது நீண்ட அவயவமுள்ளவனாலும், காலொடிந்தவனாலும், கையொடிந்தவனாலும், கூனனாலும், குள்ளனாலும், பூ விழுந்த கண்ணனாலும், சொறியனாலும், அசடுள்ளவனாலும், விதை நசுங்கினவனாலும் கர்த்தரின் தகனபலியைச் செலுத்தச் சேரலாகாது. அவன் திரைக்குள்ளே போகாமலும் பலிபீடத்தண்டை

சோமலுமிருப்பானுக' என்று கட்டளையாயிருந்தது (லேவி. 21:17-23).

சகரியாவுக்கு தேவதூதன் மேலே காட்டிய எந்தத் தண்டனையையும் செய்யவில்லை. பேசும் அவயவமாகிய அவருடைய நாவு குறுகிற்று என்று சொல்லவேகூடாது. அது சரியாக இருந்தாலும் தேவவல்லமையால் அந்த நாவு ஆணியடிக்கப்பட்டதுபோல தன் கிரியையை நடத்த சக்தியற்றுப்போயிற்று. ஒருவேளை நாவுமாத்திரம் திமிர்வாதம் பிடித்திருக்கலாம், அல்லது அதை வசியச்செய்த நரம்பு சுளுக்கியிருக்கலாம். யாக்கோபு ஆற்றோரத்தில் தேவ தரிசனை பெற்றபோது தொடையின் நரம்பு சுளுக்கினதால் நொண்டி நடந்தான். இவருக்கோ நாவின் நரம்பு சுளுக்கினால் பேசத் தடைபட்டிருக்கலாம்; இந்த ஒரே தண்டனை மாத்திரம் அவர் தமது ஊழியத்தை வழக்கம்போல் தடையின்றி நடத்திவரக்கூடிய தண்டனை முறையாயிருந்தது. மேலும் மற்றத் தண்டனைகளின் மூலமாய் அவருடைய பாவம் பிரபலப்படலாம். இதினாலோ தேவ வல்லமை அவருடைய பாவத்தைவிட அதிகமாய்ப் பிரபலப்படலாம் என்பது தெரியவருகிறது; வேறுவித தண்டனைகளாவது, வேறு இடத்தில் நடக்கும் தண்டனைகளாவது தற்செயல் என்று சொல்லிக்கொள்ளப்படலாம்; தேவாலயத்தில் நடந்த இந்தத் தண்டனையோ தேவநீதியைப் பிரசித்தப்படுத்துகிறதாயிருந்தது. சகரியா தேவாலயத்தில் பேசக்கூடாத ஊமையனை விஷயமானது காணும் முழுவதிலும் தேவ வல்லமையைப் பிரசித்தப்படுத்தும் எக்காளதொனி போல இருந்தது. மேலும் வாயைத் தொடாமல் தேவன் வேறெந்த அவயவத்தையும் தொட்டிருப்பாரானால் சகரியா எரிச்சலடைந்து தேவனுக்கு விரோதமாகக் கடினவார்த்தைகள் பேசி பாவியாகிறதற்கும் இடமிருக்கலாம்; அதுவுமன்றி, சகரியா தன் வாயால் தன் தரிசனையின் உண்மையை மற்றவர்கள் மனதில் பதியவைக்கிறதிலும், தன் ஊமைத்தனத்தால் அதிக வல்லமையாய்ப் பதியவைக்கக்கூடுமென்பதும் தேவனுக்குத் தெரிந்திருந்தது. மொத்தமாகச் சொன்னால், சகரியாவுக்குண்டான தண்டனையானது தேவன் அவர்

பேரில் வைத்த அதிக தயவைக் காட்டுகிறதேயன்றி, எரிச்சலைக் காட்டுகிறதில்லை. தேவன் நமது ஆத்தும வாழ்வுக்கென்று அனுப்பும் தண்டனைகளெல்லாம் இவ்வண்ணமுள்ளதாகவே இருக்கின்றன. இதின் இரகசியங்களை அறியாத மனுஷர் தேவன் என்னை இப்படித் தண்டிப்பானேன், இன்னின்ன விதமாய்த் தண்டிக்கலாகாதா? என்று முறையிடுகிறதுண்டு. 'எருது நினைத்தபடி புஞ்சை உழமாட்டார்கள்' என்ற பழமொழிபோல் மனுஷன் நினைத்தபடி தேவன் அவனை நடத்துகிறதில்லை. பக்தரோ தங்களுக்குண்டாகும் தண்டனைகளைச் சீர்தூக்கிப்பார்த்து மலைகிறவர்களாய் அல்லது முறுமுறுக்கிறவர்களாயிராமல், 'கர்த்தர் என்னைத் தண்டிக்கவே தண்டித்தாலும் என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடார்' என்று சொல்லித் தங்களை ஆறுதல்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

சகரியாவுக்குத் தண்டனை வந்ததோடு தயவும் வந்தது. அவனுடைய நாவை அடைத்த தேவன் அவருடைய மனைவியின் கர்ப்பத்தைத் திறந்தார். தேவன் ஒரு இடத்தில் பூட்டுவார், இன்னொரு இடத்தில் திறப்பார். அவருடைய திறப்பின் வாழ்வு பூட்டினதின் கஷ்டத்திலும் அதிகமானதாகவே இருக்கும். எப்படியும் சகரியாவின் தண்டனை பலத்த தண்டனைதான். அத்தண்டனையின் பலத்தை தேவதூதன் குறைத்துவிட்டான். எப்படியெனில், அவருக்குக் கொடுத்த தண்டனைக்கு ஒரு காலம் குறிக்கப்பட்டது. 'இவைகள் சம்பவிக்குமட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையனாயிருப்பாய்' என்று தேவதூதன் சொன்ன வாசகமானது அத்தண்டனையைக் குறைக்கும் ஆசீர்வாதமாயும், அவருடைய விசுவாசத்தைப் பெருகி எரியச்செய்யும் தேவதைலம்போலுமிருந்தது. இதினால் சகரியா தன் தண்டனையைத் தண்டனையாக எண்ணவே இல்லை. இந்த முறையான தேவதண்டனையானது, ஒரு தகப்பன் தன் மகனை அடிக்கிற சமயத்தில் அவனுக்கு அதிகநோவுண்டாகாதபடிதன்கையை அவன் முதுகின்மேல் வைத்துக்கொண்டு, தன்கையின்மேல் படுகிற அடியின் தாக்கை தன் மகன் சற்றே உணர்ந்தால் போதும் என்று நினைத்துத் தண்டிக்கிறது போலிருக்கிறது.

சகரியாவுக்குத் தரிசனையுண்டான நாளில் ஜனங்கள் வழக்கத்திலும் அதிக நேரம் காத்திருந்தார்கள். அவர் தாமதித்தது அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர்கள் அன்றையத்தினமும் தங்கள் வழக்கம்போல் ஆசாரியன்மூலமாய் அருளப்படும் தேவாசீர்வாதத்தைத் தங்கள் சிரசின்மேல் ஏந்திக்கொண்டு போகலாமென்று காத்திருந்தார்கள். இதிலே அன்று கூடின சபையார் நல்ல தீர்மானமுடையவர்களாய் இருந்தார்களென்று விளங்குகிறது. இக்காலத்திலோ ஆராதனையாவது பிரசங்கமாவது சற்றே நீளுமானால் கடிகாரத்தைப் பார்த்து எழுந்துபோய் விடுகிறவர்கள் உண்டு. அவர்கள் தங்கள் வயிற்றின் பசியையும் உத்தியோக ஆவலையும், தேவகாரியங்கள் தடைசெய்யக் கூடாதென்று அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லலாம். தேவாலயத்திற்கு வந்தால் தேவனுடைய ஆசாரியர்மூலமாய் தேவன் கூறும் ஆசீர்வாதத்தையும் பெற்றுப் போகிறது நியாயமாயிருக்கிறது. இதினாலே நாம் மனுஷருடைய சரீரபலவீனத்தைக் கவனிக்காமல் நெடுநேரம் பிரசங்கஞ் செய்துவருகிறவர்களை உற்சாகப் படுத்துகிறோமென்று நினைக்கவேண்டியதில்லை.

வெகுநேரம் வரத்தடைப்பட்ட சகரியா தூபகலசத்தோடு மறுபடியும் வெளிப்பட்டார். வெளிப்பட்ட அவருக்கோ பேசக்கூடாமற்போயிற்று. அதினாலே தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டார் என்று சகலரும் அறிந்துகொண்டார்கள். இதைப் பார்க்கிறபோது சகரியாவின் முகத்தில் ஒருநாளும் விளங்காத ஒரு விசேஷ அருள் ஒளியோ, ஜோதிமயமோ இருந்ததென்று தோன்றுகிறது. தேவபிரசன்னத்தின் மாட்சிமை மனுஷனுடைய சரீரதத்துவங்களையும் மாறுதலடையச்செய்யும். சூரியவெப்பத்தின் அகோரத்தால் சரீர அவயவங்கள் கறுத்துப்போகிறதுண்டு. ஞானசூரியனாகிய தேவ அருளின் ஜோதிமயத்தால் நமது சரீர அவயவங்களிலும் அழகுண்டாகிறது. சகரியாவின் முகத்தில் காணப்பட்ட ஏதோ விசேஷித்த சாயலினாலேதான் அன்று ஆலயத்திலிருந்தவர்களெல்லாரும் தங்கள் ஆசாரியன் ஒரு தரிசனத்தைக் கண்டிருக்கிறார் என்று தீர்மானிக்கலாயிற்று.

ஆசாரியன் திரும்பவும் வந்தபின்பு வழக்கப்படி கூறவேண்டிய ஆசீர்வாதத்தைச் சொல்ல ஏதுவில்லாமல், சைகைகாட்டி ஜனங்களைப் போகும்படி செய்யவேண்டியதாயிற்று. ஒருவேளை அவர் தன் கையால் வானத்தையும், பரிசுத்த ஸ்தலத்தையும், தன் வாயையும் சுட்டிக்காட்டி தன்னுடைய நாவு கட்டப்பட்டுப் போயிற்றென்பதைத் தெரியப்படுத்தியிருக்கலாம். சகரியா இந்தச் சைகையினால் ஜனங்களைப் போகும்படி ஏவினபோதிலும், அதுவே தேவ மகிமையையும் அவருடைய வல்லமையையும் அவர்களுக்கும் திருஷ்டாந்தப்படுத்தும் அடையாளமாயும், நீங்கள் இங்கே இன்னும் சிலகாலம் தரித்திருந்து யேகோவாவின் நீதியைத் தியானித்து அவருடைய பாதபடியிலே பணியுங்கள் என்று கட்டியங் கூறுகிறதுபோலும் இருந்ததென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.

சகரியா ஊமையானதால் பேச்சு நின்றுபோனாலும் அவருடைய ஊழியம் தடைபடவுமில்லை, நின்றுபோகவுமில்லை. அவர் தம்முடைய முறை முடியவேண்டிய நாள் வரைக்கும் குறிக்கப்பட்ட தமது தூபதீப ஊழியத்தை நிறைவேற்றினார். இதற்குள்ளாக இந்தச் சமாசாரம் அத்தேசத்தின் பல இடங்களிலும் அறிவிக்கப்பட்டிருக்கலாம். இதின் உண்மையை அறிய பலரும் பல இடங்களிலிருந்து வந்து எருசலேமில் தொழுதுகொண்டிருக்கலாம். நிச்சயமாகவே சகரியாவுக்குண்டான தேவ தரிசனையானது தேவாலயத்தையும், எருசலேமையும் ஆராதனைகளையும், வணக்கத்தையும், பலியையும், காணிக்கையையும், ஆசாரியரையும், ஜெபத்தையும்பற்றிப் புது எண்ணங்களையும், ஆலோசனைகளையும், ஜனங்களுடைய மனதில் உண்டுபண்ணும்படி செய்தது. சகரியாவின் வாய் ஊமையானாலும் மனமானது ஊமையாயிருக்கவில்லை. நிச்சயமாகவே கர்த்தர் தனக்கு அருளின பெரிய கடாட்சத்தை அவர் பக்தியுடன் தியானித்தார்.

ஆம்; ஆசாரியரே, உமது முகத்தில் விளங்கும் சந்தோஷமானது உமது உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாயிருக்கிறது. ஆ! நீர் தேவகாட்சியால் முகக்களையாய் விளங்கு

கிறீர். உமது ஊமைத்தனமே உம்முடைய வாயில் விளங்கும் மகத்துவமாயிருக்கிறது. அரசர் சிரசில் இரத்தினகிரீடம் சூடி அவர்களைக் கனப்படுத்தும் தேவன், உமக்கு ஊமை என்னும் கிரீடஞ் சூட்டி சகல ஆசாரியருக்கும் மேலாக உயர்த்தியிருக்கிறார். இப்பொழுது நீர் போரடிக்கிற மாடு களைப்போல் வாய்கட்டப்பட்டுப்போனீர். ஆனால் இது கொஞ்சக்காலத்துக்குத்தான். கட்டப்பட்ட உமது மதகு திறக்கப்படுங்காலத்தில் அது கட்டப்பட்ட காலத்திலுண் டான மகிமையிலும் அதிக மகிமை அதில் விளங்கும். அதை நானே பார்ப்பேன்.

சகரியாவின் ஊழியநாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப் போனார். ஒருவேளை அவருடைய மனைவிக்கு இந்தச் சமாசாரம் பலர் மூலமாயும் தெரிந்திருக்கலாம். அந்தச் சமாசாரத்தை அவளுக்குச் சொன்னவர்கள் சகரியா வைக் குற்றப்படுத்தி, ஏதோ தேவசாபம் அவரைப் பிடித்து விட்டதென்று சொல்லியிருக்கலாம். அவளும் ஒருவேளை அதை நம்பி, இம்மட்டும் நமக்குப் பிள்ளையில்லாத சாபத் தோடு இந்தச் சாபமும் தொடர்ந்ததா என்று அங்கலாய்த் திருக்கலாம். அதினாலேதான் அவள் வெட்கப்பட்டு எருசலேமுக்குத் தன் புருஷனைப் பார்க்கப் போகாமலிருந் திருக்கலாம். சகரியாவோ, தன் மனைவி அவிசுவாசத்தில் அதிகரித்து, கிடைத்த கிருபையை மறுபடியும் இழந்து போகக்கூடாதென்றும், அவளும் ஒருவேளை எங்கே தன்னைப் போல் இப்படிப்பட்ட அல்லது இதிலும் வித்தியாசமான தண்டனையினாலே சந்திக்கப்படாமலிருக்கும்படி கருதி தன் ஊழியநாட்கள் 'நிறைவேறினவுடனே' தன் வீட்டிற்குப் போனார். காரியத்தின் இரகசியத்தைப் பூரணமாய் அறியாத எலிசபெத்து தன் ஊமைப் புருஷனைக் கண்டவுடனே அழாமலிருப்பாளோ! அவள் உள்ளம் பொங்காமலிருக் குமோ! அவள் தன் புருஷனைத் தொடர்ந்த தண்டனையானது ஆசீர்வதித்த தண்டனையென்று எப்படி உணர்ந்துகொள்ளக் கூடும்! துவக்கத்தில் அவள் தன் புருஷனைப்பற்றி பலவாறுக நினைத்து அநுதாபப்பட்டிருக்கலாம். தன் புருஷன் வெளிக்கு பக்தனும் உள்ளுக்கு அவபக்தனுமாயிருந்திருக்கிறான் என்று

ஒருவேளை தீர்மானித்திருக்கலாம். தேவன் அவர்களுடைய ஜெபத்தை இம்மட்டும் கேளாமற்போனது அவருடைய கபடமான இருதயத்தினிமித்தமேயன்றி வேறல்லவென்றும், அவர் தன்னைப்போல் உண்மையுள்ள பக்தனாயிருந்தால் அவள் அநேகம் குமாரருக்குத் தாயாயிருந்து தன் ஜாதியால் மதிக்கப்பட்டு தன் முக்காட்டின் கொம்பை உயர்த்தியிருக்கலாமென்றும், பலவாறாக எண்ணியிருக்கலாம். அவளுடைய பலவிதமான எண்ணங்களெல்லாம் சீக்கிரம் கலைந்து போய்விட்டது. சகரியா எருசலேமில் நடந்த தரிசனையின் வரலாறுகளையெல்லாம் அவளுக்கு எழுத்துப் பலகையிலே எழுதிக் காட்டினார். மேலும், அவையெல்லாம் உண்மை என்பதற்கு அத்தாட்சியாக அவள் கர்ப்பவதியானாள். அவள் தன் கர்ப்பம் பூத்ததைக் கண்டு கடவுளை ஸ்துதித்தபோதிலும், கிழவி கர்ப்பமானாள், பிள்ளை பெற்றாள் என்று உலகம் நகைக்குமே என்று எண்ணி ஐந்துமாதம் தலைமறைவாகத் திரிந்தாள். என்றாலும், அவளுக்கு தேவன்பேரில் நல்ல விசுவாசமிருந்ததால் அவள் தன் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக உயர்த்தி 'ஜனங்களுக்குள்ளே எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கும்படியாகக் கர்த்தர் இந்த நாட்களில் என்மேல் கடாட்சம் வைத்தார்' என்று பக்திவிநயத்தோடு சொல்லிவந்தாள்.[1]

சகரியா ஊமையனும் எலிசபெத்து கர்ப்பவதியாயுமிருந்தகாலத்தில் இயேசுவின் தாயாகிய மரியம்மாள் அவர்களுடைய வீட்டுக்குப் போனதாக நாம் அறிகிறோம். மரியம்மாள் சகரியாவின் வீட்டுக்குப் போயிருந்தகாலத்தில் தான் எலிசபெத்துக்குப் பிரசவகாலம் நேரிட்டிருக்கலாம். ஏனெனில், எலிசபெத்து ஆறுமாதம் கர்ப்பவதியாயிருந்தபோது காபிரியேல் தூதன் மரியம்மாளுக்கு தரிசனமளித்து அவளை வாழ்த்தி திருக்குமாரனின் அவதாரத்தைக் கூறி, அவளுடைய நம்பிக்கைக்கு ஆதாரமாக 'மலடியென்னப்

[1] சகரியா ஊமையாயிருந்த காலத்தில் அவருடைய முறையில் அவருக்காக சாமுவேல் என்னும் ஒரு ஆசாரியன் தேவாலயத்தில் ஊழியஞ்செய்துவந்ததாக அப்போகிரிப்பா ஆகமங்களில் ஒன்றாகிய யாக்கோபின் சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது (யாக். 10).

பட்ட சகரியாவின் மனைவிக்கு இது ஆறும் மாதம்' என்று சொன்னான். அப்பால் யோசேப்பு மரியம்மாளின் அற்புத கர்ப்பத்தின் இரகசியமறியாமல் சிலகாலமிருந்தார். அதன் பின்பு மரியம்மாள் மூன்றுமாதம் நிலையாய் சகரியாவின் வீட்டில் போய்த் தங்கினாள். ஆகவே, மரியம்மாள் எலிசபெத்தின் பிரசவநாளில் கூட இருந்ததாக நாம் தீர்மானமாகச் சொல்லக்கூடும்.

எலிசபெத்துக்குப் பிரசவம் நேரிட்டவுடனே அவளுடைய இனபந்துக்களெல்லாரும் வாழ்த்துதல் சொல்லும்படி கூடிவந்தார்கள். எலிசபெத்துடைய பேரும் அவளுடைய நிலைமையும் அவ்விடமெங்கும் அறியப்பட்டிருந்தால் அவளுக்கு மலடியென்னப்பட்ட வசைப்பேர் வழங்கிற்று. இந்த வசைப் பேரின் அபயம் வானமட்டும் எட்டி தேவதூதர் எல்லாருடைய காதுகளிலும் விழுந்திருந்தது. ஆதலால்தான் காபிரியேல் சம்மனசானவர் மரியம்மாளிடத்தில் பேசின சமயத்தில் 'மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதம்' என்று சொல்ல நேரிட்டிருக்கிறது. நாம் மற்றவர்களைத் திட்டுவதும், நிந்தித்துப் பேசுவதும் பரலோகத்துக்குத் தெரியுமென்று இதினால் உணர்ந்து கொள்ளவேண்டியது. மலடி பிள்ளைபெற்றாள் என்ற செய்தி அந்த மலைநாடெங்கும் தொனித்தது. அது சகலருக்கும் சந்தோஷத்தையும், விசேஷமாக இனத்தாருக்குள் களிப்பையும் உண்டாக்கிற்று.

பிள்ளை பிறந்த எட்டாம் நாள் அதின் முதலாம் நாளை விட விசேஷமானதாயிருந்தது. மோசேயின் பிரமாணத்தின் படி பிறந்த அந்த ஆண் குழந்தைக்கு விருத்தசேதனத்தைச் செய்யும்படி பந்துக்களெல்லாரும் விசேஷ அழைப்பின்படி கூடினார்கள். அச்சமயத்தில் இப்படி அகால வயதில் அற்புதத்தோடு பிறந்த பாலகனுக்கு என்ன பேரிடலாமென்பதே அவர்களுடைய சம்பாஷணையாயிருந்தது. கூடிவந்திருந்த பந்துக்களெல்லாரும் பிள்ளைக்குத் தகப்பன் பேரிடவேண்டுமென்று சாதித்தார்கள்; தாயோ, அல்ல அல்ல, இதற்கு யோவான் என்று பேரிடவேண்டுமென்று சொன்னாள். இந்தப் பேரை சகரியா முன்னமே தன் மனைவிக்குப் பலகை

யில் எழுதிக்கொடுத்திருக்கலாம். ஏனெனில், இது தேவ தூதனால் கொடுக்கப்பட்ட பேரேயன்றி வேறல்ல. இந்தப் பேரை மாற்றுகிறதாயிருந்தால் தேவன் தன் மகனுக்கு ஞானத்தகப்பனும், தேவதூதன் சாட்சிக்காரனுமாயிருக்கிற சகரியாவிடத்தை இழந்துபோகவேண்டியதாயிருக்குமல்லவா! எலிசபெத்து சொன்ன பேர் அவர்கள் குடும்பத்திலில்லாத புதுப்பேராயிருந்ததால் பந்துக்கள் சம்மதப்படவில்லை. கடைசியாகத் தங்கள் வழக்கைத் தீர்க்க ஊமை ஆசாரியனாகிய சகரியாவிடம் வந்து பிள்ளைக்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர்? என்று சைகையினாலே கேட்டார்கள். அவர் எழுத்துப்பலகையைக் கொண்டுவரும்படி சைகை காட்டி, 'இவன் பேர் யோவான்' என்று எழுதினார். பிரசவித்த அறையிலிருக்கும் தாய் வாக்கும் இவர் வாக்கும் ஏகவாக்காயிருக்கிறதே என்று அவர்களனைவரும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அதோடு அவர்களறிய ஒரு அற்புதமும் நடந்தது. அதாவது, சகரியாவின் வாய் திறக்கப்பட்டு. அவருடைய நாவின் கட்டவிழ்க்கப்பட்டது; அவர் கடவுளைத் தன் பாட்டினால் துதித்தார். இப்போது சகரியாவின் ஊமைக்கு மருந்து இன்னதென்று வெளியாகிறது. அவிசுவாசத்தினிமித்தம் உண்டான தண்டனையைப் பொறுமையாய்ச் சகித்ததும், தூதன் சொன்ன பேரைத் தன் மகனுக்கு இட்டதுமே மருந்தாக இருக்கிறது. யோவான் என்ற பேர் சகரியாவின் ஊமைவாயைத் திறக்கும் திறவுகோலாகவும், அவர் நாவின் கட்டை வெட்டும் கத்தரிக்கோலாகவும் இருக்கிறது. தேவ கட்டளையின்படி நிறைவேற்றுவது அநேக புது ஆசீர்வாதங்களுக்கு வழியாயிருக்கிறதென்பது மெய்.

சகரியாவின் வாயின் கட்டவிழ்க்கப்பட்டவுடனே அவர் தன் வாயால் செய்த முதல் வேலை. தேவனை தோத்தரித்தான். மனுஷப்பிரகாரமாயும் உலகப்பிரகாரமாயும் இவர் தன் வாயால் செய்யவேண்டிய முதல் வேலை வந்தவர்களை வாழ்த்துவதும், பிள்ளையை முத்தமிடுவதும், தன் பத்துமாத ஊமை வரலாற்றைச் சொல்வதும், அக்காலங்களில் அவர் மனதிலுண்டான பல அபிப்பிராயங்களை வெளியிடவேண்டியதுந்தான். இந்தப் பக்தனை தன் வாயின் முதற் பலனை

இவைகளில் ஒன்றுக்கும் பலியிடாமல் தேவநாமத்தின் மகிமைக்கென்றே பலியிட்டார். இந்தப் பத்துமாதமும் அவருடைய நாவு கட்டப்பட்டபோதிலும் அவருக்குள் குடிகொண்டிருந்த கீதவாத்திய கன்னிகைகளெல்லாம் கட்டப்பட்டுப்போகவில்லை. இக்காலத்தில் அவருடைய இருதயத்துக்குள் தேவாவியின் அருள்பிரசாதம் இறங்கினதால் அவர் அருள்புலவரும் கவிப்புலவரும் தீர்க்கதரிசனப் புலவருமானார். தரிசனையின் காலமுதல் அவருடைய வீட்டுக்குள் கவிவரமும் தீர்க்கதரிசனவரமும் நிறைந்திருந்தது. அவ்வீட்டிலிருந்த இவரும் பாடினர், அவ்வீட்டுக்கு வந்த மரியம்மாளும் பாடினாள். சகரியா இச்சமயத்தில் பாடின பாட்டைக் கிறிஸ்து சபை நாடோறும் பாடும்படி குறித்திருக்கிறது. அந்தப் பாட்டாவது:—

'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு
ஸ்தோத்திர முண்டாவதாக.
அவர் நம்முடைய பிதாக்களுக்கு
வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்;
தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி.
உங்கள் சத்துருக்களின் கைகளினின்று
நீங்கள் விடுதலையாக்கப்பட்டு,
உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல்,
எனக்குமுன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும்
எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று,
அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு
இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்;
ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த
தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே,
தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு,
நம்முடைய சத்துருக்களினின்றும்,
நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும்,
நம்மை இரட்சிக்கப்படும்படிக்கு,
தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே
நமக்கு இரட்சண்யகொம்பை ஏற்படுத்தினார்.
நீயோ பாலகனே, உன்னதமானவருடைய

தீர்க்கதரிசி என்னப்படுவாய்;
நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,
நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே
அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய
இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும்,
அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.
அந்தகாரத்திலும் மரண இருளிலும்
உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்
நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே
நடத்தவும்,
அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய
அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது'

என்பதே அந்தப் பாட்டு. இந்தப் பாட்டில் மூன்று பங்குகள் அடங்கியிருக்கிறது. இதின் முதல் பங்கு வானத்துக்கும், பிந்தின இரண்டு பங்கும் பூமிக்கும் அடுத்ததாகப் பாடப்பட்டது. முதலாம் பங்கினால் சகரியா தேவனை ஸ்துதிக்கிறார். தேவன் தமது வாக்குத்தத்தத்தையும் உடன்படிக்கையையும் நினைவுகூர்ந்து, தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்த இரட்சண்யத்தை இக்காலத்தில் தோன்றப்பண்ணினதை அறிவிக்கிறார். பிந்தின பாகத்தில் இரண்டு ஆட்களைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். அதில் ஒன்று தன் பாலகனையடுத்ததாகவும், மற்றது பிறக்கப்போகிற உலக இரட்சகரையடுத்ததாகவும் இருக்கிறது. சகரியா வானத்துக்கு தன் கண்களை உயர்த்தி கடவுளை ஸ்துதித்தபின்பு, அந்தப் பிள்ளையிடமாய்த் திரும்பி அவனோடு பேசுவதுபோல 'நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய்' என்று சொன்னார். ஒருவேளை இந்த வாசகத்தைச் சொல்லும்போது அவர் தம்முடைய மகனை கையில் தூக்கி வைத்துக்கொண்டிருக்கலாம். இந்த வாசகத்தினால் சகரியா தன் மகனுக்கு எட்டாம் நாளில் தீர்க்கதரிசியின் பட்டத்

தைச் சூட்டுகிறார் என்று தெரியவருகிறது. யோவான் என்ற பேரோடு 'உன்னதமானவருடைய தீர்க்கதரிசி' என்ற பட்டமும் அவனுக்குக் கிடைத்தது. அவன் விருத்தசேதனம் பெற்ற அன்றே 'தீர்க்கதரிசி' என்ற பட்டத்தையும் பெறுகிறான். அதிலால் குறிக்கப்பட்ட ஞானஸ்நானத்தினூலே ஒரு குழந்தை 'தேவனுடைய புத்திரன்' என்கிற புதுப் பிறப்பின் நாமத்தைப் பெற்றுக்கொள்ளுகிறதோடு, 'மரண பரியந்தம் கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யும் போர்ச்சேவகன்' என்ற உத்தியோகப் பட்டத்தையும் பெற்றுக்கொள்ளுகிறான். தேவன் புத்திரசுவிகாரத்தினால் தமக்குப் பிள்ளைகளாகும் ஒவ்வொருவரும் தமது பட்சத்தில் போர்வீரராக இருந்து, யுத்தத்தில் வல்லவர்களாகவேண்டுமென்றும் விரும்புகிறார். தேவன் தாமாய் பிசாசோடே எதிர் யுத்தஞ் செய்வதில் தம்மை அவர்களுக்குச் சமமாக்கக்கூடாதென்றே, தம்முடைய பிள்ளைகளைக்கொண்டு அவனோடு யுத்தஞ்செய்வதால் அவனுக்கு அதிக வெட்கமும் அவமானமும் உண்டாகுமென்றே, அவர்களைக்கொண்டு தமது யுத்தத்தை நடத்தச் சித்தமாயிருக்கிறாராகும். இந்தச் சேனையனைத்துக்கும் திருஅவதாரமெடுத்த பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவே தலைவரும் சேனாதிபதியுமாயிருக்கிறார். ஞானஸ்நானத்தால் தேவனுடைய புத்திரராகும் ஒவ்வொரு பிள்ளைகளும் அவரையே தங்கள் சேனாதிபதியாக ஒப்புக்கொண்டு அவருடைய கொடியின்கீழ் நின்று பிசாசு, பாவம், உலகம் என்னும் சத்துருக்களுக்கு விரோதமாக மரண பரியந்தம் போராடிவரவேண்டியது.

எட்டாம் நாளில் தீர்க்கதரிசி பட்டம் பெற்ற பாலகனுக்குத் தகப்பன் இரண்டு பெரிய வேலைகளைக் குறிக்கிறார். அதிலொன்று கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவேண்டிய வேலையாயும், மற்றது அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவேண்டிய வேலையாயுமிருந்தது. கர்த்தருக்கு வழியை ஆயத்தம்பண்ணும் வேலையில் பள்ளங்களை உயர்த்தி, மேடுகளைத் திருத்தி ஆறுகளில் பாலங்களைக் கட்டி, மணலில் சரல்களைப் பரப்பி, கர்த்தர் தமது சேனைகளோடும் தூதர்களோடும் பூமியின்

எத்திசையிலும் மகிமையாய் ஊர்க்கோலஞ்செய்ய அகன்ற பெரும்பாதைகளை எல்லாத் தேசங்களிலும் போடவேண்டிய திருந்தது. அதாவது, இந்தப் பிள்ளை தீட்டும் அறிவினும் மான பள்ள இருதயங்களைச் சுவிசேஷ சத்தியத்துக்கு அநுகூலமாக உயர்த்தி, கர்வமும் மேட்டிமையும் உலகசிந்தை யும் செல்வச்செருக்குமுள்ள மேடான இருதயங்களைச் சுவிசேஷ தெளிவுக்குத் தாழ்த்தி, பாவப் பிரளய வெள்ளங் கள் புரண்டோடும் இருதயங்களில் தேவகுமாரன் செல்லும் படி இரட்சண்யப் பாலங்களைக் கட்டி, உலகக் கவலையாலும் ஜீவனத்தின் பெருமையாலும் குவிந்திருக்கும் குப்பைக்குழி போன்ற இருதயங்களில், சிலுவையின் உபதேசம் சிரேஷ்ட மாக விளங்கும்படி கல்வாரிமலையின் இரட்சண்ய இரத்தினக் கற்களாகிய கிறிஸ்துவின் நேச மகத்துவங்களைச் சொல்லி, கிறிஸ்துவின் இராஜ்யம் எங்கும் பிரபல்யமாகும்படியாக வேலைசெய்யவேண்டியதாயிருந்தது. இது மாத்திரமல்ல, கிறிஸ்துவினுலே மாத்திரம் பாவமன்னிப்புண்டென்று பூலோக மெங்கும் விளம்பரஞ்செய்யும் வேலையுமிருந்தது.

அதுவுமின்றி, உலக இரட்சகராகிய இயேசுவுக்கும் சகரியா ஒரு புது பேரைக் கொடுத்தார். அந்தப் பேர் 'அருணோதயம்' என்பதுதான். அக்காலத்தில் மரியம்மா ளுடைய கர்ப்பத்தில் அடங்கியிருந்த அந்தத் தேவ சிசுவான வர் 'அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிற வர்களுக்கு வெளிச்சம் தரவும், நமது கால்களைச் சமாதானத் தின் வழியிலே நடத்தவும் உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயமாயிருக்கிறார்' என்றும் வாழ்த்தினார்.

இந்தப் பாட்டின் வரலாறுகளை நாம் கவனிக்கையில், சகரியா தன் ஊமைத்தனமாகிய தண்டனையிலிருந்து விடுதலை யான சமயத்தில் இறங்கின ஆவியானது, அவருக்குக் கவி கட்டும் உலக அறிவைமாத்திரமல்ல, பின்வரும் காரியங்களை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசனமாகிய பரலோக அறிவையும் அருளியிருக்கிறதென்று காண்கிறோம். தேவனுடைய நேச முள்ள பிரம்புக்குப் பின்னே பாலும் பழமும் போன்ற இரட்டை ஆசீர்வாதங்கள் பெரும்பாலும் மனுஷருக்குக் கிடைக்கிறது; ஆதலால் தேவனுடைய அன்புள்ள அடி

களுக்கு நமது முதுகைப் பொறுமையோடு குனிந்து கொடுப்போமாக. அவர் அடித்தது மெய்யானால் இரட்டை ஆசீர்வாதம் கிடைப்பதற்குக் குறைவில்லை. ஆனால் நாம் அவருடைய சிட்சையைக் குறித்து மொறுமொறுக்காமல், 'அவர் அடிக்க அடிக்க, என் கர்த்தர் என்னைத் தண்டிக்கவே தண்டித்தாலும் என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடார்' என்று சொல்லிக்கொண்டிருக்கவேண்டியது உலகத்தின் மக்களுக்கு நாம் சொல்வது பைத்தியம்போல் காணப்படலாம். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் அவர்களுடைய மனதின்படி நடக்கவேண்டியதில்லை.

சகரியாவுடைய ஜீவியத்தின் பிந்தின நடபடிகள் ஒன்றும் சுவிசேஷத்தில் எழுதப்படவில்லை. இவர் மகனாகிய யோவான் ஸ்நானகனின் நிமித்தமே இவருடைய பேர் சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கலாம். எழுதப்பட்டிருக்குமட்டும் இது நல்ல சரித்திரந்தான். இந்த பக்தனின் முடிவு என்னவென்பதை எவரும் அறியும்படி ஆசைப்படலாம். இதைப் பற்றி நிச்சயமாய் சுவிசேஷங்களில் எழுதப்படாதேபோனாலும் யாக்கோபின் சுவிசேஷம் என்று அழைக்கப்படும் புதிய ஏற்பாட்டு அப்போகிரிப்பா ஆகமங்கள் ஒன்றில் அவர் மரணமடைந்த வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, இரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட பாலகர் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் ஏரோது அரசன் சகரியாவிடத்தில் அவருடைய மகன் எங்கே என்று விசாரித்ததாகவும், அதற்கவர், அவனும் அவன் தாயும் போனவழி தனக்குத் தெரியாதென்று சொன்னதாயும், பின்பு அவன் தேவாலயத்தில் இருக்கையில் பலிபீடத்தண்டை இராஜாவின் ஆட்கள் மறுபடியும் வந்து, அவர் பிள்ளை தப்பிப்போன வரலாற்றை விணவினபோது இராஜ கட்டளையால் அந்த இடத்திலேயே கொலைசெய்யப்பட்டார் என்றும் எழுதியிருக்கிறது. இதுதான் அவருடைய அந்திய கால வரலாறு என்று நாம் திட்டமாய்ச் சொல்லாமல், புறச் சரித்திரத்தின் மூலமாய் அறியக்கூடிய வரலாறென்று மாத்திரம் சொல்லுகிறோம்.

சகரியாவின் சரித்திரத்தில் விளங்கும் விசேஷித்த குறிப்புகள் இரண்டு என்று சொல்லலாம். தேவசித்தத்தின்

படி செய்யப்படும் ஜெபம் கேட்கப்படும் என்பதும்; தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அவிசுவாசம் விளங்குமானால் அவர்கள் தப்பாமல் தண்டனையடைவார்கள் என்பதுந்தான். தேவனுடைய பிள்ளைகளுக்கு ஜெப குணம் இருக்கவேண்டியது. அவர்கள் அந்த ஜெபத்திலே தங்கள் சரீரத்துக்கும் விசேஷமாய் ஆத்துமாவுக்கும் வேண்டிய எல்லாக் காரியங்களையும் கேட்கலாம். ஆனால் அவர்கள் அவிசுவாசத்துக்கு இடங்கொடுக்கவே கூடாது. அப்படியவர்கள் இடங்கொடுப்பது உண்டானால் தேவன் பிள்ளையென்றும் பாராமல் தமது பிரம்பைக் கையாடுவார். ஆனால் நமது ஜெபங்களில் 'எங்கள் அவிசுவாசம் ஒழிந்துபோகவும், விசுவாசம் பெருகவும் கிருபைசெய்தருளும்' என்று மன்றாடவேண்டியது. கடைசியாக, சுவிசேஷத்திலடங்கிய இவருடைய சரித்திரம் இவர் பாடின பாட்டோடே முடிகிறது. நம்முடைய ஜீவியகாலமும் இஸ்ரவேலின் கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாகும் பாட்டோடே முடிவதாக.

சிமியோன்

இப்பொழுது நாம் எழுதுகிற சரித்திரம் மற்ற அநேக சரித்திரங்களைப்போல விரிவானதல்லவென்றாலும். நல்ல போதனையைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது. ஒரு பெரிய சாஸ்திரத்திலிருந்து படித்துக்கொள்ளுகிற அவ்வளவு ஞானத்தை இதிலுலேயும் படித்துக்கொள்ளலாம். இரத்தினங்கள் பதித்திருக்கும் ஒரு பதக்கத்தில் மேகவர்ணமான இந்திரநீலக்கல்லாவது, பசும்புல்நிறமான பச்சைக்கல்லாவது, வெள்ளைநிறமான புஷ்பராகமாவது எப்படி விசேஷித்து விளங்குமோ அவ்வண்ணம், வேதபுருஷருக்குள் இவரும் இருந்திருக்கிறாரென்று நாம் எண்ணிக்கொள்ளவேண்டியது. இவர் நமக்குமுன் ஒரு பாலியனாய் அல்லது வாலிபமாய்க் காணப்படாமல், விருத்தாப்பியனாய் கல்லறைக்குச் சமீபமாய் குடியிருக்கிற நிலைமையுடையவராய் வெளிப்படுத்தப்படுகிறார். உலக இரட்சகராகிய இயேசுவின் ஜனசரித்திரத்தில் இவருடைய பேர் மின்னல்போலத் திடீரென்று தோன்றி மறைகிறது. இவரை நாம் அவருடைய சொந்த வீட்டிலாவது தோட்டத்திலாவது முதலாவது காணுமல், தேவாலயத்திலே பார்க்கிறோம். எப்படியெனில், திரு அவதாரமூர்த்தியாகிய இயேசுசுவாமி பிறந்த நாற்பதாம் நாளில் அவருடைய தாயார் மோசேயின் பிரமாணத்தின்படி தன் குழந்தையைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவும், குறிக்கப்பட்ட பலிகளைச் செலுத்தவுமாக எருசலேமுக்குப் போனாள்; அச்சமயத்தில் சிமியோன் என்பவர் அங்கே இருந்தார்.

அவர் எருசலேமிலே அக்காலத்தில் குடியிருந்தார். அவர் நீதியும் தேவபக்தியுமுள்ளவராயிருந்ததோடு இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவராயுமிருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எவரும் கவனிக்கத்தக்க ஒரு பெரிய விஷயமுண்டு. அதாவது, உலக இரட்சகருடைய வருகைக்கு எதிர்பார்க்கிற எண்ணிறந்த ஜனங்கள்

அக்காலத்திலிருந்தார்கள். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியானவர் தங்கள் காலத்தில் வரவேண்டுமென்பது அவர்கள் எல்லாருடைய விசுவாசமாயுமிருந்தது. இந்த விசுவாசத்துக்கு மோசே சொன்ன தீர்க்கதரிசன காலமும், தானியேல் தீர்க்கதரிசியின் வாசகங்களும் ஏதுவாயிருக்கலாம். சமாதான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் வரும்போது யூதரிடத்திலிருந்து அரசாட்சி முற்றிலுமாய் எடுபட்டுப்போகாவிட்டாலும், அதின் முடிவில் வரவேண்டியதென்பதே தீர்க்கதரிசனத்தின் கருத்தாயிருந்தது. சிமியோன் என்பவர் வசித்த காலத்தின் ஸ்திதியானது பலரும் மேசியாவின் வருகையைக்குறித்து விசேஷமாய் விசாரிக்கவும், விசுவாசிக்கவும், எதிர்பார்க்கவும், காத்திருக்கவும் ஏவுகிற காலமாயிருந்தன. வரப்போகிற மேசியா யூதருடைய இராஜதானியாகிய எருசலேமிலேதான் தோன்றுவாரென்பது அவர்கள் மனதின் எண்ணமாயிருந்தபடியால், பக்தியுள்ள பலர் பல இடங்களிலிருந்து எருசலேமில் வந்து வாசஞ்செய்து அந்த நாளுக்காக ஜெபத்தோடும் தீர்க்கதரிசன ஆராய்ச்சியோடும் காத்திருந்தார்கள். இந்த சிமியோன் என்பவர் அயல் ஊர்களிலிருந்து வந்து காத்திருந்த பக்தரில் ஒருவரோ அல்லது உள்ளூரில் குடியிருந்த ஒரு பக்தரோ நமக்கு நிச்சயம் தெரியாது.

உலக இரட்சகர் சீக்கிரம் பிறப்பார் என்பதைப்பற்றி இவருக்கு முன்சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசன நம்பிக்கையோடு ஒரு விசேஷித்த நிச்சயமும் இருந்தது. எப்படியெனில், 'கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணு முன்னே மரணமடையமாட்டாய்' என்று பரிசுத்த ஆவியினாலே அவருக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. இந்த வெளிப்படுத்தலின் தன்மை எப்படிப்பட்டதென்று நாம் கண்டுபிடிக்க இயலாது. 'கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்திலிருக்கிறது' என்று வேதவசனம் அறிவிக்கிறது. கர்த்தருக்குப் பயந்து அவருடைய பிரமாணங்களின்படி நடக்கிறவர்கள் இதை நிசம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள். பேர்க்கிறிஸ்தவர்களும், சாதாரண உலகத்தாரும் இப்படிப்பட்ட வாசகங்களைப்பற்றிச் சந்தேகிக்கிறது வழக்கந்

தான். பரிசுத்த ஆவியானவர் பக்தரின் சரீரத்தைத் தமது ஆலயமாகவும் வாசஸ்தலமாகவும் தெரிந்துகொண்டு, அதற்குள் நிச்சயமாகவே வாசம்பண்ணிவருகிறார் என்பது மறுக்கப்படாத சத்தியமாயிருக்கிறது. 'நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவியானவர் உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாமலிருக்கிறீர்களா?' என்று பரிசுத்த வேதாகமம் அறிவிக்கிறது (1 கொரி. 3:16,17).

உலக இரட்சகரைப்பற்றி அறிவிக்கப்பட்ட சங்கதியை சிமியோன் பூரணமாக விசுவாசித்தார். இந்த விசுவாசந்தான் இவரிடத்தில் விளங்கும் முந்தின குணமாயிருக்கிறது. இந்த விசுவாசத்தினாலேதான் அவர் நீதியும் தேவபக்தியுமுள்ளவராய்த் தமது காலத்தைக் கழிக்க ஏவப்பட்டிருக்கிறார். இவர் தமது விசுவாசத்தின் பலனை இவ்வுலக ஜீவியத்திலே கண்டு களிகூர்ந்திருந்தார். அநேக விசுவாசிகள் மேசியாவைக் கண்ணாரக் கண்டு களிகூர விரும்பி எதிர்பார்த்தும், காணுதபடி மாண்டார்கள்; இவரோ, மனதால் விசுவாசித்து எதிர்பார்க்கப்பட்டவரைக் கண்ணால் பார்க்கவும் கையால் தொடவும் அருள் பெற்றார். மேசியாவைக் கண்ணால் காணும்படியாகவே தேவன் இவருடைய மரணத்தைத் தாமதப்படுத்தியிருந்தார். தேவனுடைய நாமத்தின் மகிமைக்கேற்ற விசேஷித்த ஒரு வேலையினிமித்தம் அல்லது அருளினிமித்தம் நமது மரணம் தாமதப்படுத்தப்பட்டால் அதற்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டியது. அவபக்தியுள்ளவனுய் இவ்வுலகத்தில் ஒருநாள் பின்னிடுகிறதிலும் தேவபக்தியுள்ளவனுய்ப் பதினுயிரம் வருஷம் ஜீவித்திருக்கிறது உத்தமம். இதினிடையில் எண்ணிறந்த துன்பங்கள் உண்டாகுமென்பது மெய். துன்ப துக்கங்களினிமித்தம் உலகத்தை வெறுப்பது சரியான வெறுப்பல்ல. அவைகளைப் பொறுமையாய்ச் சகித்து அவைகளின் மூலமாய் பக்தியில் விருத்தியாகிறவன், தன் நீண்ட ஜீவகாலத்தால் உலகத்துக்கு அதிகப் பிரயோஜனமுள்ளவனுயிருப்பான்.

இவர் தமது விசுவாசத்தின் பலனைக் கண்ட விபரம் அதிசயப்படத்தக்கதாயிருக்கிறது. சிமியோன் தமது வழக்கம்

போல தேவாலயத்துக்குப் போய் தேவனைத் தொழுது கொள்ளுகிறபோது மரியம்மாள் இயேசு பாலனை ஏந்திக் கொண்டு குறிக்கப்பட்ட பலியைச் செலுத்தும்படி படிகளின்மேல் ஏறிப்போனாள். சிமியோன் உடனே அப்பாலனைத் தமது கைகளில் வாங்கினார். அட்சணமே உன்னத வரம் அவர்மேல் இறங்கினது; அவர் கவிபாடும் அருள்பெற்று, பின்வரும் ஸ்தோத்திர கீதத்தைப் பாடினார்.

'ஆண்டவரே உமது வார்த்தையின்படி:
உமது அடியேனை இப்பொழுது
சமாதானத்தோடே போகவிடுகிறீர்.
புறஜாதிகளுக்கு: பிரகாசிக்கிற ஒளியாகவும்
உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு: மகிமையாகவும்,
தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக:
ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை
என் கண்கள் கண்டது'

என்பதே அந்த ஸ்தோத்திர கீதம். இது மகா சின்ன கீதமாயிருந்தாலும் சுவிசேஷம் முழுவதும் இதில் அடங்கியிருக்கிறது என்று சொல்லலாம். இந்தக் கீதத்தால் சிமியோன் தன் மனமகிழ்ச்சியையும் உலக இரட்சகரின் மேன்மையையும் வெளிப்படுத்துகிறார். ஆண்டவரே! இப்பொழுது இவ்வுலகத்தை மறக்கும்படி எனக்கு அறிக்கைவந்ததுபோலிருக்கிறது. நல்லதுகர்த்தாவே, யாதொரு விசனமும் கலக்கமுமின்றி இவ்வுலகத்தை மறக்க சித்தமாயிருக்கிறேன்; என் ஆசையும் முடிந்தது, என் விருப்பமும் நிறைவேறிற்று; இனிமேல் உமது ராஜ்யத்தில் சேர்வதேநியாயம் என்று சொல்லுகிறதுபோல் இருக்கிறது. மரணத்தையடைய இப்படி ஆயத்தப்பட்டவர்களாயிருக்க வேண்டும். மேலும் நித்திய ஜீவனின்பலனை இவ்வுலகத்தில் ருசிபார்த்து, அதின் ஆவலால் மரணத்துக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளுகிறவனுக்கு மரணம் கசப்பாயல்ல, இன்பமாயிருக்கும்.

சிமியோன்: தன் கையிலிருக்கும் பிள்ளையின் மகத்துவத்தைப்பற்றி, அவர் புறஜாதியாருடைய ஒளியும் இஸ்ரவேலருடைய மகிமையுமாயிருக்கிறாரென்று சொல்லுகிறார். நிச்சயமாகவே அஞ்ஞானமும் பாவ அந்தகாரமும்

நிறைந்த பூலோகத்தில் கிறிஸ்து, இரட்சிப்பை அளிக்கும் ஞானஜோதியாயிருக்கிறார். இயேசுபாலன் தேவாலயத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது அவருடைய முகத்தைச் சுற்றிலும் ஒருஜோதி வட்டமிட்டுப் பிரகாசித்ததென்றும், அதின் மூலமாக சிமியோன் அவரை இனமறிந்து இப்படிப் புகழ்ந்து பாடினரென்றும், ஒரு ஆகமக்காரன் பாரம்பரையைக்கொண்டு எழுதுகிறான். இதை நாம் நிஜம் என்று நம்புகிறதைவிட இயேசுபாலன் கொண்டுவரப்பட்ட சமயத்தில் சிமியோன்மேல் தங்கியிருந்த பரிசுத்த ஆவியானவர் அவனுடைய நெஞ்சத்தில் விசேஷித்த வண்ணமாய்த் தமது செயலை நடப்பித்து, இவர்தான் நீ காணும்படி காத்திருந்த கர்த்தர் என்று அறிவித்ததால் அவரை அறிந்து இப்படிப் பாடினரென்று தைரியமாய்ச் சொல்லலாம்.

இந்தக்கீதத்தால் சிமியோனுடைய விசுவாசமும் மேசியாவின் மகத்துவமும் பிரஸ்தாபிக்கப்பட்டதோடு மரியம்மாளுடைய விசுவாசமும் யோசேப்பின் விசுவாசமும் பலப்படுத்தப்பட்டதென்றும் நாம் சொல்லவேண்டியது. தான் பெற்ற பாலன், எல்லாருடைய வாயிலும் பாட்டையும் துதியையும் எழும்பப்பண்ணுகிறாரென்ற மகிழ்ச்சி மரியம்மாளை நிரப்பினபோதிலும், அவரே பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களின் பொருளாயும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாயுமிருக்கிறாரென்ற அறிவும் அவளுக்குண்டாயிற்று.

சிமியோன் பாடிய இந்தக் கீதம், தினந்தோறும் ஒவ்வொருவரும் நித்திரைக்குப் போகுஞ்சமயத்தில், பாடிக்கொண்டு தலைசாயவேண்டிய கீதமாயுமிருக்கிறது. ஒவ்வொருநாள் இரவின் தூக்கமும் நமக்கு மரணத்தை நினைப்பூட்டுகிறதாயிருக்கிறதும் அதின் முன்குறிப்பாயிருக்கிறது. இரவில் நித்திரைபோகும் மனுஷன் எவனுவது, நான் மறுபகலைக் காண்பேன் என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாதே! ஆதலால் நாம் ஒவ்வொரு இரவும் இதுதான் என் கடைசிநாள் என்று நினைத்துப் பாவமன்னிப்பைப் பெற்ற இருதயமுடையவர்களாய்ச் சுத்த மனச்சாட்சியோடு 'ஆண்டவரே! உமது அடியேனை சமாதானத்தோடே போக

விடுகிறீர், எத்தனமாக்கப்பட்ட இரட்சிப்பை என் கண்கள் கண்டது' என்று பாடிப் படுத்துத் தூங்கக்கூடுமானால் அது நியாயமாயிருக்கும்.

இப்படிப் பாடினவுடனே அன்று அச்சமயத்தில் தேவாலயத்தில் தொழுதுகொள்ள வந்திருந்த எல்லா ஜனங்களும் இந்தப் பாலனைச் சுற்றிலும் வந்து நின்றிருப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை. பாடி முடிந்தவுடனே சிமியோன் தீர்க்கதரிசனங்களைக் கூறினார். அவருள் தங்கியிருந்த ஆவியானவர் மேசியாவைக் காணும் வரத்தையும், அவரைப் புகழ்ந்து பாடும் வரத்தையும், அவரைப்பற்றிக் கூறும் தீர்க்கதரிசன வரத்தையும் கொடுத்தார். 'ஆண்டவரே!' என்று வானத்தைப் பார்த்துப் பாடின கீதம் முடிந்தவுடனே, சிமியோன் தாழப்பார்த்துப் பிள்ளையையும் அதைச் சேர்ந்தவர்களையும் ஆசீர்வதித்து, கடைசியாக மரியம்மாளை நோக்கி, 'இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்' என்றார். இந்த வார்த்தைகள் முழுமையும் மரியம்மாளை நோக்கிச் சொல்லப்பட்டாலும், அதில் சில வார்த்தைகள் தவிர மற்றதெல்லாம் கிறிஸ்துவை அடுத்ததாகவேயிருக்கிறது. இயேசுபாலன்: இஸ்ரவேலர் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், பேசப்படும் அடையாளமாயிருக்கிறார் என்று சிமியோன் சொன்ன வாசகம் இக்காலத்திலும் நிச்சயமான தீர்க்கதரிசனமாயிருக்கிறது. புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாயிருக்கிறவர், யூதருக்கு இடறுங் கல்லும் தடைச்சீலை மறைவுமாயிருக்கிறார். கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தையும் கிரியையையும் சிலுவையையும் பலியையும் அவிசுவாசத்தால் அடக்கிப் போடுகிறவர்கள், இரட்சண்ய பாதையில் செல்லக்கூடாமல் இடறிவிழுந்து, ஒருநாளும் எழுந்திராமல் போகிறார்கள். வாசிக்கிறவனே! கிறிஸ்து உனக்கு இடறுதலின் கல்லாயிராமல், நீ வந்து நித்திய ஜீவனைக் கண்டடையும் கன்மலையாய் இருப்பாராக.

'உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்' என்ற ஒரே வாசகம்மாத்திரம் இயேசுவின் தாயாரை அடுத்ததாயிருக்கிறது. இந்த வாசகம் மரியம்மாளுடைய மனதை, உடனே அம்புபோல் தைத்தது! இம்மட்டும் பரிசுத்தாவியின் பலத்தாலும், தூதர் காட்சியாலும், மங்கள வாக்கு லும், வானசேனையின் கீதத்தாலும், பொங்கியோடின அவளுடைய இரத்தத்தோடு, இந்த துக்க அணுக்களும் கலந்தோடின. தன் பாலனைப் பெற்றது முதல் நடந்த மகத்துவங்களோடு இதுவும் அவள் மனதை அநுதினமும் கடந்துபோயிற்று. தன் ஆத்துமாவை ஊடுருவும் கத்தி இன்னதென்பதும், அது எந்தக்காலத்தில் என்னவிதமாய் யாரால் பிரயோகிக்கப் படும் என்னும் எண்ணங்களும் அவளுடைய மனதுக்கு எட்டாத பரம இரகசியமாயிருந்தது. என்றாலும், என்றென்றைக்கும் இரகசியமாகவே இருந்துபோகவில்லை. சுமார் முப்பத்துமூன்று வருஷமாய் மறைவாயிருந்த இந்தத் தீர்க்கதரிசன இரகசியமானது இயேசுசுவாமி யூதாசால் காட்டிக் கொடுக்கப்பட்டு, பிலாத்துவால் மரணக்கினைத் தீர்ப்படைந்து, சிலுவை சுமந்து, முள்முடி சூடி, சிலுவையில் அறையப்பட்டு கொல்கதாவில் தொங்கின சமயத்தில் பூரணமாய் நிறைவேறுதல் பெற்றது. இயேசு சிலுவையில் தொங்கும்போது தமது தாயை ஊடுருவிப்பாய்ந்த பட்டயத்தின் படுகாயத்தை நன்றாய் அறிந்தவராய், அவளை ஆறுதல் படுத்தவும், அவள் ஆத்துமாவை ஊடுருவிக் குத்தின துக்க பாணத்தைப் பிடுங்கி அந்தக் காயத்தை ஆற்றவும் சித்தங் கொண்டு, 'ஸ்திரீயே, அதோ, உன் மகன்; சீஷனே, அதோ, உன் தாய்' என்று சொல்லி மொழிந்தார். அந்த வாசகம் அவளுடைய காயத்தை ஆற்றும் கல்வாரி தைலமாயிருந்தது. கிறிஸ்து மரித்த மூன்றாம் நாளில் மகிமையோடு உயிர்த்தெழுந்ததால் மரியம்மாளைக் குத்தின பட்டயத்தாலுண்டான காயம் மூன்று நாளுக்குள் ஆறிப்போய்விட்டது.

இம்மட்டோடு நாம் சிமியோனுடைய சுருக்கமான சரித்திரத்தை முடிக்கவேண்டியதாயிருக்கிறது. இதற்குப் பின்பு அவர் எவ்வளவுகாலம் உயிரோடிருந்தாரென்றும், எவ்விதமாக மரித்தாரென்றும் வேதாகமத்திலே சொல்லப்

படவில்லை. அவருடைய மரணமானது கிறிஸ்துவைக் காணும்படியாகமாத்திரம் தரமதப்படுத்தப்பட்டிருந்தபடியால் அவரைக் கண்ட மகிழ்ச்சியால் சிமியோன் சீக்கிரம் மரணமடைந்திருக்கவேண்டியது.

சிமியோன் மேசியாவின் முதலாம் வருகைக்குக் காத்திருந்தார்; இக்காலத்தாராகிய நாம் அவருடைய இரண்டாம் வருகைக்குக் காத்திருக்கிறோம். இயேசுவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் அதிக வித்தியாசமிருக்கும். இனி அவர் முன்போல ஏழையாக வரமாட்டார்; 'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்' (1 தெச. 4:16). முன்னே சிமியோனுக்கு வரங் கொடுத்ததுபோல் அவர் இரண்டாந்தரம் வருமட்டும், 'நான் உயிரோடிருக்க வரம் தரலாகாதா' என்று ஒரு பக்தனும் ஆசைப்படலாகாதா? அப்படி ஆசைப்பட்டால் அது துணிகரமாயிருக்கும். மேலும், அவர் வருமட்டும் உலகத்தில் பக்தியுள்ளவர்களாயிருந்தாலும், வருவதற்குமுன் அவர் பேரிலுள்ள விசுவாசத்தோடு மரித்தாலும், இரண்டும் சரிதான். ஏனெனில், அவர் வருமுன் கிறிஸ்துவுக்குட்பட்டவர்களாய் முந்தி மரித்துப்போனவர்களும், அச்சமயத்தில் மரியாமல் உயிரோடிருக்கும் பக்தரும், அவர் வரும்போது ஏக கூட்டமாகி ஆகாயத்தில் அவருக்கு எதிர்கொண்டு போவோம் (1 தெச. 4:16,17). ஆதலால் ஒவ்வொருவரும் நமது சாவுநாளே நமக்கு கிறிஸ்துவின் வருகையாயிருக்கிறதென்று உணர்ந்து, சிமியோனைப்போல நீதியும் தேவபக்தியுமுள்ளவர்களாயிருந்து எந்த முகாந்தரத்தையிட்டாவது மரணம் வரும்போது தூக்கப்படாமல்,

'ஆண்டவரே, உமது அடியேனை
சமாதானத்தோடே போகவிடும்.
எத்தனமாக்கப்பட்ட இரட்சகரை
என் ஆத்துமா கண்டு களிகூர்ந்தது.'

என்று தேவனுக்கு ஸ்தோத்திரம் பாடி இவ்வுலகத்தை மறப்போமாக.

சாஸ்திரிகள்

இப்பொழுது நாம் வாசிக்கப்போகும் வரலாறு வேறு அநேக சரித்திரங்களிலும் விசேஷமானதென்று நாம் நினைக்க வேண்டியது. தேவன் மெய்த் தேவபக்தியையும் ஆராதனையையும் எப்போதும் காத்துவந்தார். ஆபிரகாமைத் தெரிந்துகொண்டு அவன் சந்ததி மூலமாய் உலகத்தில் வரவேண்டிய இரட்சணை மூர்த்தியை சகல உலகமும் அறிந்துகொள்ள வேண்டுமென்பது தேவ சித்தமாயிருந்தது. ஆபிரகாமுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஜனங்கள் எந்த முகாந்தரத்தினிமித்தமாவது எங்கெங்கே சிதறியிருந்தார்களோ அங்கெல்லாம் அவர்களால் மேசியா என்று அழைக்கப்பட்ட உலக இரட்சகரின் வருகையைப்பற்றி அறிக்கையிட்டு எதிர்ப்பார்த்துக்கொண்டே இருந்தார்கள். உலக இரட்சகர் ஒரு ஜாதிக்கு மாத்திரமல்ல, சர்வ லோகத்தாருக்கும் பொதுவான இரட்சகராயிருக்கிறார் என்ற அறிவு, எல்லாருடைய மனதிலும் ஒப்புக்கொள்ளப்பட்டபடியால் வரப்போகிற அவரை யூதர்மாத்திரமல்ல, அச்செய்தியை அறிந்த வேறு அநேக தேசத்தாரும் ஞானிகளும் விசுவாசித்து வந்தார்கள்.

இப்படி உலகத்திலிருந்த பல ஜாதியாரும் தேசத்தாரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த காலத்திலே அவர் பெத்லகேம் என்னும் ஒரு சிறு ஊரில் ஜநநமானார். அக்காலத்தில் ஏரோது என்னும் அரசன் அத்தேசத்தில் செங்கோல் செலுத்தி வந்தான். இவனொரு பரமசண்டாளன். இவனுடைய நிஷ்டூரங்களையும், பரிதானங்களையும், கொலைகளையும், இவன் செய்த அநியாயங்களையும் வாயால் சொல்லி முடியாது. இவனுடைய பேர் இந்த சாஸ்திரிகள் சரித்திர முழுவதிலும் அடிக்கடி வருமாதலால் இவனைப்பற்றி ஜாடையாய் சில குறிப்புகளை அறிந்துகொள்ளுகிறது நியாயமாயிருக்கும். இவனுக்கு மகா அல்லது பெரிய ஏரோது

என்ற பட்டப்பேர் வழங்கப்பட்டது. இவன் சகல பொல் லாப்புக்கும் தீமைக்கும் பெரியவனுகவே இருந்தான். ஜாதி யில் இவன் இதுமேயன்; ரோமருடைய சகாயத்தால் இவன் அத்திசைக்கு அரசனுனன்; இவன் முப்பத்தேழு வருஷம் செங்கோல் செலுத்தி, உலக இரட்சகர் பிறந்து இரண்டு மூன்று வருஷத்துக்குள்ளாக இறந்துபோனன். இவனுக்கு இதுமேய ஜாதியிலும், அஸ்மோனியக் குடும்பத்திலும், யூத குலத்திலும், சமாரிய ஜாதியிலுமாக பத்து மனைவிகளிருந் தார்கள். அந்தந்த ஜாதிக்குத் தன்னைச் சொந்தப்படுத்திக் கொள்ளும்படிக்குத் தந்திரமாக ஆலோசித்து இப்படிச் செய்தான்போலிருக்கிறது. இவன் தன் மனைவிகளிலும் பிள்ளைகளிலும் அநேகரைக் கொலைசெய்து தன் நாட்களை இரத்தஞ் சிந்துதலால் தீட்டுப்படுத்திவந்தான். சாகுந் தருணத்திலும் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தும் குணத்தை அவன் மறக்கவில்லை. எப்படியெனில், தன் நாட் கள் சாவுக்குச் சமீபிக்கிறதைக் கண்டு தன் மரணத்துக்காக இராஜ்யம் களிகூருமேயன்றி கலங்கித் தவிக்கமாட்டாதென் பதை அவன் நினைத்து, தன் பிரபுக்கள் பெரியோர் அனை வரையும் பட்சமாய் வரவழைத்து அவன் உயிர்போன வுடனே தந்திரமாக அவர்களனைவரையும் சிரசாக்கினை செய்துவிடும்படி திட்டம் பண்ணினன்.

இந்தக் கொடுங்கோல் மன்னனுடைய செங்கோல் நடக் கிற காலத்தில்தான் ஒருநாள் சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள். இவர்கள் கிழக்கிலிருந்து வந்தார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதினால் கானானுக்குக் கிழக்கி லுள்ள ஒரு தேசத்திலிருந்து அவர்கள் வந்தார்களென்று தெரியவருகிறது. கானானுக்குக் கிழக்கில் அக்காலத்தில் அராபியா, கல்தேயா, பார்சியா, இந்தியா, சீனு முதலிய தேசங்கள் விசேஷமுள்ளதாயிருந்தன. இதில் எந்தத் தேசத்திலிருந்து சாஸ்திரிகள் வந்தார்களோ தெரியவில்லை. இந்த சாஸ்திரிகள் கல்தேய தேசத்து சோதிடர்கள் என்று சிலரும், அராபியர் என்று வேறு சிலரும், பாரசீகர் அல்லது சீனர் என்று பின்னும் சிலரும், இந்து தேசத்தார் என்று மற்றும் சிலரும் சொல்லியிருக்கிறார்கள். இதினால் அவரவர்

தம்தம் சாதனையைக் கல்வித் திறமையால் வெளிப்படுத்தும் படி பிரயாசப்பட்டிருக்கிறார்களென்று நாம் சொல்லிவிடா மல், இந்த விசேஷ சம்பவத்தின் மகத்துவத்தை அறிய ஆவல்கொண்டு இப்படி எழுதியிருக்கிறார்களென்றே நாம் நினைக்கவேண்டியது. சாஸ்திரிகளுடைய இருப்பிடத்தைப் பற்றி மேலே சொல்லிய எல்லா அபிப்பிராயங்களிலும் அவர் கள் நம்முடையதேசத்து இந்து ஞானிகளாயிருந்தார்களென் பதை நாம் ஒப்புக்கொள்ள அதிக நியாயமாயிருக்கிறது. அந்த சாஸ்திரிகள் சுமார் இரண்டு வருஷப் பிரயாணஞ் செய்யவேண்டிய தூரத்திலிருந்து வந்தார்கள். மற்றப்படி ஏரோது இரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண் குழந்தை களைக் கொலை செய்யும்படி கட்டளையிட வேண்டியதிராது. மேலும் அவன் நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைத் திட்ட மாய் விசாரித்து அப்படி உத்தரவு கொடுத்திருக்கிறான். அராபி, பார்சு, கல்தேய தேசத்தார் எருசலேமுக்குப் பிரயாணஞ்செய்ய இரண்டு வருஷம் வேண்டியதில்லை; சீன தேசத்திலிருந்து வரவேண்டுமானால் இரண்டு வருஷம் அக் காலத்து பயணத்துக்குப் போதாதென்று சொல்ல வேண்டியது. இந்தியாதான் அவ்வளவு காலத்துக்கு ஏற்ற இடமாயிருக்கிறது. மேலும் அந்த சாஸ்திரிகள் இந்தியர் என்பதே, கல்வி விருத்தியான இந்தக் காலத்தின் அபிப் பிராயமாயிருக்கிறது. இந்தக் கருத்தால் ஒவ்வொரு இந்து வும் விசேஷமாக இந்திய கிறிஸ்தவனும் மனமகிழ்ச்சியடைய வும், இரட்சிப்பின் தேவனை ஸ்துதிக்கவும் எவ்வளவோ நியாயமிருக்கிறது. இந்தியாவுக்குக் கர்த்தருடைய கண் களில் விசேஷித்த தயவு கிடைத்திருக்கிறது; அதற்கு இரட்சண்ய ஜோதி வானத்து நட்சத்திரத்தின் மூலமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வானத்தில் விளங்கும் ஒரு விசேஷித்த ஜோதி அல்லது வால்நட்சத்திரம் பூலோகத்தில் நடக்கும் ஒரு பெரிய மாறுதலை உணர்த்துகிறதென்பது பூர்வ உலகத்தாரின் பொது கோட்பாடாயும், இந்தியாவின் விசேஷ அபிப்பிராயமாயு மிருக்கிறதென்பதை எவர்களும் ஒத்துக்கொள்வார்கள். கிறிஸ்துவின் சரித்திர விஷயத்தில் அது சத்தியமாயிருக்கிறதென்கலாம். 'அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம்

தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது' என்ற சகரியாவின் கவிவாசகம் ஒவ்வொரு இந்துவின் வாயிலும் வரவேண்டிய வாசகம்போலிருக்கிறது.

கிறிஸ்துமின் சரித்திரத்தையடுத்து நமது இந்தியா தேசம் சம்பந்தப்பட்டிருக்கிற வேறொரு குறிப்பும் சுவிசேஷத்தில் இருக்கிறதென்கலாம். அதையும் இவ்விடத்தில் சொல்வது அப்பிதமாயிருக்கமாட்டாது. இயேசு சுவாமி தம்மை சிலுவையின்மேல் யாகமாக்குவதற்கு இரண்டு தினங்களுக்கு முன் பெத்தானியாவூர் குஷ்டரோகியாகிய சீமோனுடைய வீட்டில் விருந்துண்டாரென்றும், அச்சமயத்தில் ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற கலப்பில்லாத நளதம் என்னும் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாளென்றும் வாசிக்கிறோமே (மாற். 14;3; யோவா. 12:3). இந்த நளது தைலம் இந்தியாவின் சொத்தாக இருக்கிறது. பூதத்துவ சாஸ்திரிகள் யாவரும் இந்தச் செடி இமயமலையடிவாரத்திலும் கங்கா நதியோரங்களிலுந்தான் உண்டென்று எழுதியிருக்கிறார்கள்; ஆதலால் அந்தத் தைலம் இந்தியாவின் சரக்கேயன்றி வேறல்ல. இதினால் இந்தியா முழுவதும் நளது தைலமூலமாய் இயேசு சுவாமியின் தேகாதி பாதம்வரையும் பரிமளமாய் அபிஷேகம் பண்ணப்பட்ட மகத்துவமுள்ள வாசனைச் சரக்காய்ப் படைக்கப்பட்டாயிற்றென்று சொல்லலாம். இனி இந்தியாவை இயேசு தவிர வேறொருவனும் தனக்கென்று சொல்லக்கூடாது. எல்லா இடங்களும் அவருக்குச் சொந்தமானாலும் இந்தியா அவருடைய விசேஷ சொந்தமாயும், அவர் மனமகிழ்ச்சியடையும் வாசனை தைல புட்டியாயும் இருக்கிறது. வாசனை தைலத்துக்குள்ளே செத்த ஈக்களிருப்பதுண்டே; இந்தியாவின் பல அவமார்க்கங்கள் அந்த செத்த ஈக்களைப்போலிருந்து அது இயேசுவுக்குக் கொடுக்க வேண்டிய ஜீவவாசனையைக் கெடுத்து வருகிறது. ஆனால் இன்னுமொரு சாலத்தில், ஒருவேளை சிக்கிரத்துக்குள்ளாக இது அந்த ஸ்திரீ பூசின தைல வாசனையைப்போல் இரட்சிப்பின் வாசனையாலும். நேச ஸ்துதியாலும் பரிமளிக்குமென்ப

தற்குச் சந்தேகமில்லை. இந்தியாவே! உலக தேசங்களிலெல்லாம் உனக்கு அந்தக் கனம் கிடைக்காதே; நீ பாக்கியமுள்ள தேசந்தான்; நீ, எந்நாளும் ஆண்டவரின் வாசனைச் சரக்காக இரட்சண்ய மனத்தால் பூரணப்படும்படி கடவுள் அநுக்கிரகஞ் செய்வாராக. சாஸ்திரிகள் கீழ்த்திசையிலிருந்து வந்தார்கள் என்ற சம்பந்தமாக நாம் நமது தேசத்தைப்பற்றி இவ்வளவு சொன்னது போதுமானது. இனி அவர்களியடுத்த காரியங்களைத் தொடர்ந்துபோவோமாக.

அவதாரமெடுத்த தேவ திருப்பாலனைப் பார்க்க வந்த இவர்கள் சாஸ்திரிகளாயிருந்தார்கள். இவர்கள் வேத சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் வல்லவர்களாயிருந்தார்கள். வேத சாஸ்திரத்தில் வல்லவர்களாயிருந்தபடியினாலேதான் தாங்கள் கண்ட விசேஷ ஜோதி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உலக இரட்சகரைத்தான் காட்டுகிறதென்று நிர்மானித்தார்கள். இதற்கு அநுகூலமாக ஒரு வாசகம் கூறப்பட்டிருந்தது. எப்படியெனில், இந்த சம்பவத்தைக் குறித்து பிலேயாம் என்ற தீர்க்கதரிசி சுமார் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னே 'ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து தோன்றி ஒரு செங்கோல் யூதாவிலிருந்து எழும்பும்' என்று அறிவித்திருந்தான். இந்த அறிவிப்பை ஆராய்ந்த நிச்சயத்தாலேதான் இவர்கள் வானத்தில் கண்ட இந்த அதிசய ஜோதியைக் கவனித்திருக்கிறார்கள். வானத்தில் விளங்கிய அந்த விசேஷ வெள்ளியானது அவர்கள் இருதயத்தில் உதயமாகி, உணர்த்தின வாக்குத்தத்தத்தின் விடி வெள்ளியின் இரகசியத்தைத் தெரிவித்ததென்று சொல்லலாம் (2 பேது. 1:19). இயேசு சுவாமியைப் பார்க்க வந்த இந்த சாஸ்திரிகளின் தொகை பன்னிரண்டு என்று அகுஸ்தீன், கிரிசொஸ்தம் என்னும் பூர்வ பிதாக்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் படைத்த மூன்று விதமான காணிக்கையால் மூன்றுபேர் வந்தார்களென்றும் அம்மூவரும் அரசராயிருந்தார்களென்றும் பெரும்பாலாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. கனம் பொருந்திய பீட் (Venerable Bede) என்பவர் அவர்களுடைய பேர்,

ஊர், சாயல் இலைகளையுங்கூட சொல்லியிருக்கிறார்.[1] இந்தப் பாரம்பரைகள் மெய்யாலுல் பூலோகத்தின் சகல குடும்பமும் சகல நிலைமையுடைய மனுஷரும் தேவகுமாரனுக்குக் காணிக்கைப் படைத்தார்களென்ற கருத்தை இது காட்டுகிற தென்று சொல்லலாம். இவையனைத்தும் கட்டுக்கதையாக இருந்தபோதிலும் அதின் மூலமாய் நல்ல கருத்துகளை மனதுக்குள் இழுத்துக்கொள்ளுகிறதில் தோஷமில்லை யென்று சொல்லவேண்டியது.

இந்தச் சாஸ்திரிகள் எருசலேம் நகரத்தை நோக்கி வந்தார்கள். இந்தக் காரியமானது எருசலேமைப்பற்றி அவர் களுக்கிருந்த மதிப்பையும், யூதேயா தேசத்தைப்பற்றி முன் சொன்ன தீர்க்கதரிசனத்தையும் காட்டுகிறது. ஒரு பெரிய வர் யூதேயாவில் தோன்றி, உலகத்தின் ராஜ்யங்களையெல் லாம் கீழ்ப்படுத்தி, தானே ஏகசக்கராதிபதியாய் அரசாளு வார் என்ற எண்ணம் அக்காலத்தில் சீர்திருத்தமுள்ள தேசங் களின் பொது அபிப்பிராயமாயிருந்தது. இந்த எண்ணத் துக்கு பிலேயாமின் தீர்க்கதரிசனமே காரணமென்று சொல்ல வேண்டியது.

இந்த ஞானிகள் வெகுகாலம் பிரயாணஞ்செய்து கடைசி யாக எருசலேம் நகரத்தைச் சேர்ந்து, அரண்மனை ஏறி, 'யூத ருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம்' என்று சொன்னார்கள். 'யூதருக்கு இராஜாவாக' என்ற வார்த்தையினுல் வந்த சாஸ்திரிகள் யூதராயிராமல் புறசாதியாராய் இருந்தார்களென்று விளங்கு கிறது. 'பிறந்திருக்கிறவர்' என்ற வார்த்தையால் அவர்கள் இந்த அற்புத பாலகனைப்பற்றி ஒரு விசேஷித்த தரிசனை யடைந்திருந்தார்களென்றும் தெரியவருகிறது. இந்தச்

---

[1] அவர்கள் நாமங்களாவன:—மெல்கியோர் (Melchior) என்ப வர் நரைத்து நீண்ட தாடியுடைய கிழவர்; பால்தாசர் (Balthusar) இவர் நடுப்பிராயமுள்ளவராம். காஸ்பார் (Caspar) இவர் மீசை தாடி முளையாத வாலிபராம். இம்மூவரும் முறையே சேம், காம், யாப்பேத்து என்பவர்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்களென்றும் பாரம் பரையாகச் சொல்லப்பட்டுவருகிறது (Farrar's Life of Christ).

சாஸ்திரிகள் தங்கள் நாடுநகர்விட்டுப் புறப்பட்ட நோக்கம் அந்தத் திருப்பாலனைப் பணிந்துகொள்ளும்படியாகத்தான். 'அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்' என்றார்கள். இதினால் அந்தப் பாலன் சாதாரணமான இராஜகுமாரனுயிராமல் தேவபுத்திரன் என்பதை நமக்கு உணர்த்துகிறது. தேவனுக்கு மனுஷர் செய்யவேண்டிய கடமைகளில் அவரைப் பணிந்துகொள்ள வேண்டியதுதான் விசேஷித்த கடமையாயிருக்கிறது. இவர்கள் நெடுந்தூரம் பிரயாணஞ்செய்து வந்தார்கள். இயேசு பிறந்தவுடனே ஆரம்பித்த இவர்கள் பயணம் அவருக்குச் சுமார் இரண்டு வயதாகையில் முடியுத் தக்கதாக அவ்வளவு நீண்ட பயணமாகவும், வழியில் அநேக மோசமும் இடைப்புழுள்ளதாயுமிருந்ததென்று எண்ண வேண்டியதாயிருக்கிறது. இயேசு பாலனைப் பார்க்கும்படி வந்த எல்லாரிலும் இவர்கள்தான் அதிக பிரயாசமெடுத்திருக்கிறார்கள். மேய்ப்பர்கள் இரண்டொரு மைல் தூரமாத்திரம் பிரயாணஞ்செய்தார்கள்; சிமியோன், அன்னாள் முதலியவர்கள் பிரயாணம் பண்ணுமலே அவரைக் கண்டார்கள்; இவர்களோ, சுமார் இரண்டு வருஷப் பிரயாணத்தின் பின் கண்டார்கள்.

இந்தச் சமாசாரம் ஏரோது இராஜாவின் காதில் எட்டினது; அது எட்டவே கிடுகிடுகலக்கமானான். அரசன் வீடும், பிரதானிகள் தலகர்த்தர் வீடும், போர் வீரர் இரத வீரர் கூட்டமும் இந்தச் செய்தியைக் கேட்டுக் குலுங்கிற்று. இச்சமயத்தில் ஏரோதுவுக்குச் சுமார் எழுபது பிராயம். இந்தக் கிழவன் சமாதானத்தோடும் தன் நரைமயிரைக் குழியில் இறங்கும்படிச் செய்யலாமென்றிருக்கையில் இந்த சஞ்சலச்செய்தி அவன் நெஞ்சைப் பிளந்தது; ரோமரும் இனி இந்த இராஜ்யமும் இதின் வாழ்வும் நமக்குச் சொந்தந்தான் என்றிருந்த காலத்தில் இச்செய்தியைக் கேட்டது மட்டற்ற மனக்கலக்கமாயிருந்தது. சுருக்கிச்சொன்னால் இச்செய்தியால் 'ஏரோதுவும் எருசலேம்நகரத்தார் யாவரும் கலங்கினார்கள்.' உடனே அவன் பிரதான ஆசாரியரையும் வேத பாரகரையும் வரவழைத்து, கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார் என்று அவர்களிடத்தில் விசாரித்தான். பிறந்

திருக்கிற தேவ பாலனுக்குக் கிறிஸ்து என்ற பேரை முதலாவது ஏரோதுதான் இடுகிறான் என்று பார்க்கிறோம். கிறிஸ்து என்ற வார்த்தைக்கு அபிஷேகம் பெற்றவர் என்று பொருள். ஏரோது கொடுத்த இந்தப் பெயர் அவருக்கும் அவருடைய அடியாருக்கும் காலதுமட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசன் கேட்ட கேள்வி யூத ரபிமாருக்கு அவ்வளவு வருத்தமான கேள்வியாயிருக்கவில்லை. அவர்கள் பூர்வ ஆகமங்களில் அடிக்கடி வாசித்ததும் நாடோறும் எதிர்பார்த்ததுமான சங்கதியை அவன் கேட்டபடியால் உடனே அவர் 'யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்' என்று சொல்லி, அதற்குக் குறிப்பாய் ஆதாரத்தையும் எடுத்துக்கூறினார்கள் (மீகா 5:1). இந்த வரலாறுகள் ஒன்றும் சாஸ்திரிகளுக்குத் தெரியாது. அப்பால் அரசன் அவர்களை இரகசியமாய் அழைத்து நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக் குறித்து திட்டமாய் விசாரித்து, 'நீங்கள் அதைக் கண்ட பின்பு நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள்' என்று சொல்லி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான். இதினால் அச்சமயத்தில் ஏரோதுவின் மனதிலிருந்த தீயநோக்கம் இன்னதென்பது தெரியவராமட்டாது. அவன் கருத்தோடு சாஸ்திர இரகசியம் கேட்டதும், ஆவலோடு சொன்ன ஆலோசனையும் வெளிக்குநலமாகவே காணப்படுகிறது. அந்தத் திருப்பாலனைத் தானும் போய்ப் பணிந்துகொள்ள நோக்கங்கொண்டிருக்கிறதாகச் சொன்ன விஷயமானது அவன் இருதயத்திலிருந்த இரத்தஞ்சிந்தும் குணத்தையெல்லாம் மனுஷர் கண்ணுக்கு மறைத்துப்போடுகிறதாயிருக்கிறது.

இந்தச் சாஸ்திரிகள் எருசலேம் நகரத்தை நோக்கி இராஜ அரண்மனையில் போய்த் தாங்கள் நாடிவந்த காரியம் இன்னதென்று வெளிப்படுத்துகிறதற்குள்ளாக அவர்களை வழி நடத்தின நட்சத்திரம் மறைந்துபோயிற்று. இது தேவச்செயலேயன்றி தற்செயலென்று நாம் சொல்லக்கூடாது. தேவன் தமது குமாரனின் ஜநநத்தை தூரதேசத்து மனுஷருக்கு அற்புதமுறையாக வெளிப்படுத்த சித்தங்கொண்டாலும் சமீபத்திலிருந்த ஏரோதுவுக்கு அச்செய்தியை

மறைத்துவைக்கும்படி தீர்மானித்தார். சாஸ்திரிகள் அறியாமல் அவனிடம் போய்க் கேட்க நேரிட்டாலும் அவன் அக்குழந்தையைக் காணுதபடி தேவன் திட்டஞ்செய்தார். சாஸ்திரிகள் அரசனிடம் இருக்குமட்டும் காணப்படாதிருந்த நட்சத்திரமானது அவர்கள், அவன் நகரத்தைவிட்டு பெத்லகேம் திசையை நோக்கவே மறுபடியும் தோன்றி, பிள்ளையிருந்த ஸ்தலத்துக்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது. நட்சத்திரம் மறைந்தது முதல் அதிகமாய்த் துக்கப்பட்டவர்கள் அது மறுபடியும் காணப்பட்டபோது அதிக சந்தோஷப்பட்டார்கள். 'அவர்கள் மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்' என்ற பதமானது, அவர்கள் மகிழ்ச்சியின் மட்டற்ற வளர்ச்சியைக் காட்டுகிறதாயிருக்கிறது.

கடைசியாக இந்த சாஸ்திரிகள் தாங்கள் நாடிவந்த பொக்கிஷத்தைக் கண்டு பிடித்தார்கள். அப்பொக்கிஷமாகிய திருப்பாலன், அரண்மனைக்குள் தந்தத்தால் செய்து தங்கம் பூசின ஊஞ்சலில் அல்ல, ஒரு குடிசைக்குள் தரையில் கிடத்தப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள். அந்தப் பாலகன் பிறந்திருந்த இடமும் படுத்திருந்த இடமும் அவர்களுடைய விசுவாசத்தைக் குறைக்கவுமில்லை கலைக்கவுமில்லை. 'இளங்கிளையைப்போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும்' அவர் எழும்புவார் என்றும், 'அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருப்பார்' என்றும், அநேக ஆண்டுகளுக்கு முன்னே ஏசாயா தீர்க்கனால் கூறப்பட்ட வாசகம் ஸ்திதியே அவர்கள் மனதிலிருந்ததால் அந்த சாஸ்திரிகள், இந்த தாழ்ந்த ஸ்திதியே அவரின் அறிகுறி என்று நிச்சயித்துக் கொண்டார்கள். மேலும் தங்களை வழி நடத்தின நட்சத்திரமானது தன் ஜோதியின் கதிர்களை அவ்வீட்டில் விழப் பண்ணினதால் அவர்கள் எவ்வளவேனும் சமுசயப்பட வேண்டிய காரணமிருக்கவில்லை. 'அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும்

தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.' இதிலுல் நாம் அறிந்து கொள்ளுகிற சில கருத்துகளுண்டு. 'சாஷ்டாங்கமாய் விழுந்து' என்ற வாசகமானது அவர்கள் வந்த சமயத்தில் பிள்ளை தரையில் படுத்து அல்லது உட்கார்ந்திருந்தது என்ற கருத்தைக் கொடுக்கிறது. புதிய ஏற்பாட்டில் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்த குறிப்பு இது ஒன்றுதான். இது சிருஷ்டி கர்த்தாவை சிருஷ்டிகள் கும்பிடும் முறையாயிருக்கிறது. சாத்தான் கிறிஸ்துவைச் சோதித்த சமயத்தில் தன்னை இவ்வுலகத்தின் தேவனுக்கும்படி சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கவேண்டுமென்று இயேசுவைக் கேட்டான் என்று பார்க்கிறோம் (மத். 4:9). அப்போது கிறிஸ்து அந்த வணக்கம் தமக்கே உரியதென்று அவனை உதம்பியிருக்கிறார். இந்த சாஷ்டாங்க வணக்கமானது சாஸ்திரிகள் தங்கள் சரீர அவயவமனைத்தையும் கிறிஸ்துவுக்குக் காணிக்கையாக படைத்தார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. கிறிஸ்துமார்க்க பொது ஆராதனைகளில் இந்த சாஷ்டாங்க வணக்கம் வழங்கப் படாதது துக்கமான காரியமென்று சொல்லவேண்டியது. என்றாலும் அந்தரங்க பணிதல்களிலும் தனிச்செபங்களிலும் இந்த சாஷ்டாங்க வணக்கத்தைக் கையாடுவது நலம். கர்த்தர் இருதயத்தை மாத்திரம் கவனிக்கிறார்; ஆதலால் இதெல்லாம் வீண்சடங்கென்று சொல்லுகிறவர்கள் தங்களைத் தலை கொழுத்த பாவிகளென்றும் தாழ்மையற்ற புத்திரென்றும் நிரூபப்படுத்துகிறார்கள். நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவனுமாய் பரிசுத்தமுமாய் தேவனுக்குப் பிரியமுமான பலியுமாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று பரி. பவுல் புத்தி சொல்லியிருக்கிறார் (ரோம. 12:1). சாஷ்டாங்க வணக்கம் ஐரோப்பா முதலிய தேசங்களில் வழங்கப்படாவிட்டாலும் இந்தியா தேசத்துக்கு சொந்தமானதல்லவா? விக்கிரகத்துக்குமுன் சாஷ்டாங்கஞ்செய்யும் இந்திய கிறிஸ்தவன் தன் தனி ஜெபத்திலாவது சாட்சாத்கடவுளுடைய பாதத்தண்டை சாஷ்டாங்கமாய் விழக்கூடாதா? நமது இரட்சகர் இந்த சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கும் முறையை அநுசரித்து வந்தார். அவர் கெத்செமனே தோட்டத்தில் வியாகுலப் பட்ட தருணத்தில் 'தரையிலே விழுந்தும்' 'முகங்குப்புற

விழுந்து' ஜெபம் பண்ணினார் என்று பார்க்கிறோம். இவ் விரண்டு பதங்களும் சாஷ்டாங்க வணக்கம் தனி ஜெபங் களுக்கு அடுத்தமுறை என்பதை நமக்கு விளக்குகிற தல்லவா?

சாஸ்திரிகள், ஒரு முறைக்காக மாத்திரம் இந்த வணக் கத்தை கையாடாமல் பக்தி விசுவாசத்தோடு கையாடினார்களென் பது அவர்கள் வணங்கின ஆளில் விளங்குகிறது. சாஷ்டாங்க மாய் விழுந்த சாஸ்திரிகள் பிள்ளையைப் பணிந்தார்கள். சாஷ்டாங்கமாய் விழுதல் சரீர சம்பந்தமான முறையாயும் பணிதல் ஆத்தும சம்பந்தமானதாயுமிருக்கிறது. தங்கள் முன்னிருக்கும் பாலன் தேவ குமாரன் என்று அவர்கள் தங்கள் ஆத்துமாவில் உறுதியாய் விசுவாசித்ததினாலேதான் ஏரோது ராஜனுக்கும் செலுத்தாத மரியாதையை இயேசு பாலனுக்குச் செலுத்தினார்கள். இந்தப் பணிதலானது நாங்கள் எங்கள் சரீரங்களையும் அதின் அவயவங்களையும் மாத்திரமல்ல, எங்கள் ஆவியையும் ஆத்துமாவையும் அதின் அந்தகரணங்கள் தத்துவங்கள் அனைத்தையும் உமக்கே தத்தஞ்செய்கிறோம் என்று ஒப்புக்கொடுக்கிறது போலிருக் கிறது.

இவ்வண்ணம் சரீரத்தினாலும் ஆத்துமாவினாலும் ஆவி யினாலும் தேவபாலனைப் பணிந்த சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தை யும் வெள்ளைப் போளத்தையும் அவர்முன் காணிக்கையாகப் படைத்தார்கள். இவர்கள் வித்தியாசமுள்ள மூவகையான பொருட்களைப் படைத்தது சற்று கவனிக்கப்படத்தக்கது. அவர்கள் படைத்த பொருள்கள் பொன், வெள்ளி, இரத்தி னம் என்ற மூன்று வித்தியாசமான வஸ்துக்களாயிருக்கலா காதா? அல்லவென்று அக்காலத்தில் செலாவணிபான நாண யங்களாயிருக்கலாகாதா? இல்லை. இந்த வித்தியாசமான காணிக்கையில் பரம இரகசியங்கள் அடங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டியது. ஆதி கிறிஸ்தவர்கள் இந்தக் காணிக்கை களில் வெள்ளைப்போளம் கிறிஸ்துவின் ஆசாரியத்துவத் தையும், பொன் அவருடைய இராஜத்துவத்தையும், தூப

வர்க்கம் அவருடைய தெய்வீகத்தையும் குறிப்பிக்கிறதாக வியாக்கியானப்படுத்தி வந்தார்கள். வேறு சிலர், பொன் சேமின் சந்ததியையும், வெள்ளைப்போளம் காமின் சந்ததியையும் தூபவர்க்கம் யாப்பேத்தின் சந்ததியையும் குறிக்கிறதென தாற்பரியப்படுத்தி, இந்த மூன்று வித காணிக்கையால் சர்வ மனுஷரும் இயேசுவுக்கு சுதந்தரமாக்கப்பட்டார்களென்று சொல்லி வந்தார்கள். இவையெல்லாம் பக்தி அனலின் அபிப்பிராயங்களேயன்றி வேறல்ல. எப்படியும் இதின்மூலமாக வெளியாகிற தேவ இரகசியம் ஒன்று இருக்கிறது. அதாவது, இந்த சாஸ்திரிகள் தங்களுடைய காணிக்கைகளால் இந்தப் பாலன் சாதாரண மனுஷனல்ல, தேவனுயிருக்கிறார் என்று பிரசித்தப்படுத்துகிறார்கள். அவர் மனுஷருக்குள் உயர்ந்த ஒரு மனுப்பிறவி என்று மாத்திரம் மதித்திருந்தால் தூபவர்க்கமும் வெள்ளைப்போளமுமல்ல, மனுஷருடைய ஜீவனுர்த்தத்துக்கு உதவத்தக்க வேறு பதார்த்தங்களைப் படைத்திருக்கலாம். அவர்கள் அந்தப் பாலனுக்காவது தாய்க்காவது உலகப் பிரகாரமாக உதவத்தக்க சகாயமின்னதென்பதைக் கவனியாமல், அவரை முற்றிலும் தெய்வமாக எண்ணினதினுலேயே தங்கள் ஊரிலிருந்தே இந்த மூவகை காணிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவை மூன்றும் ஒன்றுகக் கூடும்போது அக்காலத்து தேவ வணக்கத்துக்கேற்றதேயன்றி மனுஷ மரியாதைக்கேற்றதல்ல. ஒரு வேளை பக்தி விநயத்துக்காக இந்தப் பொன் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், வெள்ளைப்போளம் அவருடைய மனுஷீகத்தையும் குறிப்பித்து, தேவனும் மனுஷனுமான நீர் எங்களுக்காக தேவ கோபம் என்னும் அக்கினியில் இரட்சண்ய தூபவர்க்கமாகப் புகைவீர் என்று முன்னடையாளத்தால் குறிப்பித்தார்கள் என்றும் சொல்லலாம். ஆ, பொன்னே! பொன்னிலும் மேலான பசும் பொன்னே! உமது தெய்வீக மகத்துவத்தை நீர் மறந்து, வெள்ளைப்போளம்போல கசந்த பாவமனத்தையும் ஏற்றுக்கொண்டு, அவையனத்தையும் விறகாகவும் அதின்மேல் நீர் தூபவர்க்கமாகவுமிருந்து, தேவ கோபத்தின் அக்கினியால் கொளுத்தப்பட்டு இந்நாளிலும் எந்நாட்களுக்கும் இரட்சண்ய வாசனையை என் ஆத்துமாவின் நாசியில் ஏறப்பண்ணினீரே!!

சாஸ்திரிகள் படைத்ததுபோலவே ஒவ்வொருவனும் தன் இரட்சகராகிய கிறிஸ்துவுக்குத் தன் பொன்னையும் தூபவர்க் கத்தையும் வெள்ளைப்போளத்தையும் படைக்கவேண்டியது. நாம் படைக்கவேண்டிய பொன் நமது இருதயந்தான். தூபவர்க்கமாகிய துதிதோத்திரங்களையும் வெள்ளைப்போள மாகிய பாவங்களையும் தினந்தோறும் கிறிஸ்துவுக்குப் படைத் துக்கொண்டே வரவேண்டியது.

அப்பால் சாஸ்திரிகளுடைய சரித்திரம் அதி சீக்கிரத்தில் முடிகிறது. 'பின்பு அவர்கள் ஏரோதுவினிடத்தில் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்ச ரிக்கப்பட்டு வேறு வழியாய்த் தங்கள் தேசத்துக்குத் திரும் பிப்போனார்கள்' என்பதோடு முடிகிறது. கிறிஸ்துவைக் கண்ட பின்பு அவர்கள் கிறிஸ்துவினால் வழி நடத்தப் படுகிறார்கள். அவர்கள் தாங்கள் முன் வந்த பாவ வழியா யல்ல, புதுவழியாய் பரமகானானில் பிரவேசிக்கிறார்கள். இந்த அறிவிப்பு சாஸ்திரிகளுக்கு சொப்பனத்தின் மூல மாய்க் கிடைத்ததென்று பார்க்கிறோம். ஆகையால் சொப் பனங்களைக்கொண்டும் தேவன் மனுஷரோடு பேசுகிறார் என்பது தெளிவாகிறது. உன் சொப்பனங்கள் தேவன் உன்னோடு தமது செயல்களை வெளிப்படுத்தும் முறையா யிருக்குமானால் எவ்வளவு பாக்கியமாயிருக்கும்!

யோவான் ஸ்நானகன்

(வனத்து ரிஷி)

பாலிய பருவம்

வேதாகமமானது பெரும்பாலும் கட்டளைகளால் உணர்த்தாமல், விருத்தாந்தங்கள் மூலமாகப் போதிக்கிறதாயிருக்கிறதென்று சொல்லலாம். உலக இரட்சகரையும் அவருடைய இராச்சிய பாரத்தையும் அடுத்த விஷயமே அதின் விசேஷித்த நோக்கமாயிருக்கிறது. இவ்விஷயமானது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கியிருந்தபோதிலும், பிந்தினதில் அது தெளிவாக உணர்த்தப்பட்டு மயக்கமின்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதென்று காண்கிறோம். இதினாலே நாம் புதிய ஏற்பாட்டை பழைய ஏற்பாட்டைப் பார்க்கிலும் அதிகமாய் உயர்த்தவும், மதிக்கவும், வழங்கவும் ஆசைப்படுகிறோம். இப்படிச் சொல்வதால் நாம் பழைய ஏற்பாட்டை அவமதிக்க ஆரம்பித்து விட்டோமென்று சொல்லவுங்கூடாது, எண்ணவுங்கூடாது. பாவிகளும் இரட்சண்யம் வேண்டியவர்களுமாகிய நமக்கு அதின் வழியும் வகையும் எதிலே நமது பலவீனத்துக்கும், அறிவீனத்துக்கும் தக்கதாக தெளிவிக்கப்படுமோ அதை நாடுகிறோமேயன்றி வேறல்ல. புதியேற்பாடான தேவனுடைய அன்பின் சாஸ்திரத்தையும், பூலோக மாந்தரின் மீட்பின் சாஸ்திரத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டுகிறதாயிருக்கிறது. ஆதியாகமம் முதலிலுள்ள சங்கதிகள் மூலமாக இரட்சண்ய சங்கிலியைப் பிடித்துக்கொண்டு வருகிறவன், புதிய ஏற்பாட்டிலுள்ள யோவான் ஸ்நானகனுடைய சரித்திரத்துக்கு வந்தவுடனே இருட்டறையிலிருந்து வெளிச்சமுள்ள அறைக்கும், கிணற்றுக்குள்ளிருந்து தோட்

டக்காட்டுக்குள்ளும், கன நித்திரையிலிருந்து கண் விழிப் புக்கும் வந்த மனுஷனைப்போல், தெளிவையும் பூரண காட்சி யையும் காண்கிறான். இப்பொழுது நாம் எழுதுகிற யோவான் ஸ்நானகனுடைய வரலாறுனது பாவமன்னிப்பின் சாஸ்திர மயக்கத்திலிருக்கிற சகலரையும் பார்த்து 'எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடையமகிமை உன்மேல் உதித்தது' என்று கட்டியம் கூறுவதுபோலிருக்கிறது. அந்தி மாறு முன்னே விடிவெள்ளி தோன்றி அப்பால் கிழக்கு வெளுத்து கடைசியாகப் பகலோன் தன் மணவறையிலிருந்து புறப் படுகிற மணவாளனைப்போல் ஒய்யாரமாய் எழுந்தருளி தன் கதிர்களால் வானத்தையும் பூமியையும் ஜோதிமயமாக்கு கிறதுபோல, நீதியின் சூரியனும் தமது பரலோக மணவறை யிலிருந்து புறப்படுகிறார். அவர் தமது வருகைக்குமுன் ஸ்நானக யோவானெகிய கட்டியக்காரனை அனுப்பச் சித்த மானார்.

ஸ்நானக யோவான் சாமானிய மனுஷனல்ல. இவர் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருந்தார் என்று இயேசு இரட்சகரே அறிக்கையிட்டிருக்கிறார். மேலும் வேறொரு சமயத்தில் 'ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பின தில்லை' என்றும் சொன்னார். இதைப் பார்க்கும்போது மனுமக்களில் ஆதாம் நீங்கலாக இவர்தான் விசேஷித்தவர் ஆகிறார். ஆபிரகாம் முதலிய பிதாக்களும், தாவீது முதலிய பக்தியுள்ள அரசரும், ஏசாயா முதலிய தீர்க்கதரிசிகளும், ஆரோன் முதலிய ஆசாரியரும் இவருக்கு முந்தியிருந்தாலும் பிந்திப்போனார்கள் என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. முந்தினவர்கள் எல்லாரும் சர்வலோக இரட்சகரின் பேரை யும் ஊரையும், தொழிலையும், முடிவையும் சொல்லிவிட்டுப் போனார்கள். இவரோ கோடானுகோடி மனுமக்களுக்கு மத்தியில் ஒரு மனுமகனைப்போலிருந்த இயேசு சுவாமியை, இவர்தான் சுவாமி, இவரே உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்று சுட்டிக்காட்டி, அவ ரண்டை இரட்சிப்புக்கு ஓடும்படி தன்னண்டை வந்த சகலரையும் துரத்தினார்.—இரட்சகர் ஸ்நானக யோவானை

இப்படி உயர்த்தினதினாலே நம்மெல்லாரையும் உதவாதவர்களென்று தாழ்த்திவிட்டாரென்று எண்ணவேண்டாம்; தம்முடைய காலமட்டுமுள்ளவர்களில் ஸ்நானக யோவான் பெரியவராயிருந்தபோதிலும் பிற்பாடு அவரிலும் பெரியவர்கள் உண்டு என்று சொன்னார். 'ஆகிலும் பரலோக இராச்சியத்தில் சிறியவனுயிருக்கிறவன் அவனிலும் பெரியவனுயிருக்கிறான்' என்று சொன்னார். இதினாலே கிறிஸ்து சபையில் யார் அற்பமாய் கிறிஸ்துவுக்கு ஊழியக்காரனுயிருப்பானே அவனுக்கு முதலாய் பரலோகத்தில் உயர்ந்த பதவி உண்டென்று உற்சாகப்படுத்தியிருக்கிறார். இயேசு தமது ஜீவகால முழுவதிலும் ஸ்நானக யோவானை மறந்துபோகவே இல்லை. அவரிடத்தில் காணப்பட்ட அஞ்சாத நெஞ்சமும், ஆழ்ந்த பக்தியும், ஞானநிலையும் மற்றவர்களுக்குத் திருஷ்டாந்தமாயிருந்ததால் பல தடவைகளில் அவனுடைய பேரைக் காட்டி ஜனங்களை உணர்த்தி வந்தார்.[1]

ஸ்நானக யோவானைக்குறித்து பொதுவாக இவ்வளவு நேரம் பேசினதை நிறுத்தி, இவருடைய வரலாற்றைச் சொல்லுவோமாக. இவர் ஏரோது இராஜாவின் நாட்களில் பிறந்தார். இதினாலே அக்காலம் எவ்வளவு கேடுபாடுள்ள சந்ததியின் காலமாயிருந்ததென்பது விளங்கும். இவன் 'பெரிய' அல்லது 'மகா' ஏரோது என்று அழைக்கப்பட்டு மூப்பத்திமூன்று வருஷம் செங்கோல் செலுத்திவந்தான். இவன் எல்லாத் தீமைக்கும் பெரியவனாகவே இருந்தான். சிற்றின்ப ஜீவனத்திலும், பேரின்ப வெறுப்பிலும் இவன் பெரியவன் தான்; கொலைசெய்வதிலும் கொள்ளையாடுவதிலும் இவன் பெரியவன் தான்; வேடிக்கை பண்ணுவதிலும் விளையாட்டுக் காலட்சேபத்திலும் இவன் பெரியவன் தான்; போராடுவதிலும் பொருள் சம்பாதிப்பதிலும் இவன் பெரியவன் தான்; காலத்துக்கேற்ற கோலம் பண்ணுவதிலும் காரியத்தை முடிக்கத் தந்திரம் பண்ணுவதிலும் இவன் பெரியவன் தான். இவன் கல்நெஞ்சனுய் இருந்து பெரும்

---

[1](1) மத். 3:13. (2) மத். 11:7-15; லூக். 7:24-30. (3) மத். 17:10-13. (4) மாற். 9:11-13. (5) மத். 21:24-32. (6) யோவா. 5:32.

பாதகங்களை நடப்பித்து அத்திசையெங்கும் பேரெடுத்தவனாயிருந்தான். இவன் பேரைக் கேட்டவுடனே அக்காலத்து பூலோகம் அதிரும். இவன் பேருக்கு ரோமருக்குள்ளும், உள்ளபடி சர்வ சுயாதீனன்போலிலும் அரசாட்சி செலுத்தி வந்தான். அரசனின் வண்டோலம் இப்படியானால் அவன் ஆளுகைக்குட்பட்ட குடிகளின் சன்மார்க்கஸ்திதி இன்னபடியென்று ஒருவர் சொல்லவும் வேண்டியதா? இந்த ஏரோது சகல கேட்டிலும் பெரியவனாயிருந்ததுபோல தந்திரத்திலும் மாய்மாலத்திலும் பெரியவனாகவே இருந்தான். அவன் தன் அக்கிரமங்களுக்கு எல்லாம் முடியாயிருக்கும்படி தான் இதுமேயனாயிருந்தாலும் பேருக்கு யூதமார்க்கத்தைப்பற்றிக்கொண்டு தன் பல மனைவிகளோடு யூதப்பெண் ஒன்றையும் கட்டி சகல யூதருக்கும் வெண்ணெய் தடவுவதுபோல எருசலேம் தேவாலயத்தையும் திரும்பவும் எடுத்துக் கட்டினான். இவ்வண்ணம் அவன் நகரத்தில் சன்மார்க்கன் போல வேஷம்காட்டி நாடெங்கும் துன்மார்க்கத்தை நடப்பித்துவந்தான். இவனைப்போலொத்த கள்ளத்தனக்காரரை இன்றைக்கும் நாளைக்கும் காணலாம். சகல மாய்மாலங்களிலும் பக்தி மாய்மாலத்தைப்போல இரகசியமும் வெளிக்குத் தெரியாததுமான காரியம் ஒன்றுமில்லை என்று சொல்ல வேண்டியது.

இப்படிப்பட்ட சண்டாளன் எருசலேமில் செங்கோல் செலுத்தின காலத்தில் ஸ்நானக யோவான் ஜநமானார். இவருடைய பிறப்பு சாதாரண பிறப்பாயிராமல் அற்புதமாயிருந்தது. இதின் வரலாறுகளை நாம் இவருடைய தகப்பனைக்குறித்து எழுதின முந்தின சரித்திரத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறதால் இவ்விடத்தில் அதை மறுபடியும் சொல்லவேண்டியதில்லை. ஸ்நானக யோவானின் பாலிய சரித்திரத்தைப்பற்றி நமக்கொன்றும் தெரியாது. சொல்ல வேண்டுமானால் முப்பதுவயது மட்டுமுள்ள அவருடைய சரித்திரமனைத்தும் 'கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே.....அந்தப் பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டு இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் வரைக்கும் வனாந்தரங்களில் இருந்தான்' என்ற சிறிய வாசகங்

களுக்குள் அடங்கியிருக்கின்றன. இவர் படித்த பள்ளிக் கூடம், படிப்பித்த சாஸ்திரியார், கட்டின வஸ்திரம், படித்த சாஸ்திரம், இவைகளைக்குறித்து நமக்கொன்றும் தெரியாது. என்றாலும் அவருடைய தாயாரும் தகப்பனாரும் பரலோகப் பிராப்தியடையுமட்டும் தங்கள் கடமையின்படி அவருக்கு மோசேயின் பிரமாணத்தையும் போதித்து, நல்லறிவுக்கடுத்த பல போதனைகளைச் சொல்லியிருப்பார்கள் என்றெண்ண வேண்டியது. ஏனெனில் ஒவ்வொரு யூதப்பிதாவும் கர்த்தருடைய பிரமாணங்களைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசவேண்டுமென்பது மாறாத தேவ கட்டளையாயிருந்தது. கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்குமுன்பாக நீதியுள்ளவர்களாயிருந்த அவருடைய பெற்றோர் தங்கள் ஏககுமாரனின் பக்தி விருத்தி விஷயத்தில் ஏனோதானோ என்றிருந்திருப்பார்கள் என்று சொல்லவேகூடாது. அவர்கள் அவருடைய அதிபாலியமுதல் அவரை ஜெபத்திலும், பக்தியிலும் பழக்கும்படி பண்டிகை உற்சவங்களுக்கும், பலியிடும் சடங்குகளுக்கும் அவரைத் தூக்கிச் சுமந்துபோயிருப்பார்கள். அவருடைய பேச்சுத்திருந்தினவுடனே அவர் தகுந்த பள்ளிக்கூடத்தில் வைக்கப்பட்டு பக்தியுள்ள உபாத்தியாயரிடத்தில் போதனை பெற்றுவந்தார். ஆனால் அவருடைய மாதாபிதாக்கள் சீக்கிரம் இறந்துபோயிருக்கவேண்டியது. எப்படியும் அவர் இரண்டு வயசுக்குட்பட்ட பாலனாயிருக்கையில் ஒரு பெரிய ஆபத்து அவரைச் சூழ்ந்தது. அக்காலத்தில் அரசாண்டதாக நாம் சொன்ன மகா ஏரோது, தான் செய்துவந்த சகல அக்கிரமங்களுக்கும் கிரீடமாக, இரண்டு வயசுக்குட்பட்ட ஆண்குழந்தைகளையெல்லாம் கொலைசெய்யும்படி உத்தரவுகொடுத்தான். அந்த உத்தரவு இவரையும் தொடர்ந்து பிடித்தது. எத்தனையோ பாலகர் அவ்வுத்தரவால் மாண்டுபோனாலும் இவர் எப்படியோ தப்பிக்கொண்டார் என்று பார்க்கிறோம். இதன் விபரங்களைப்பற்றி நமக்கொன்றும் எழுதப்படாதேபோனாலும்

'கர்த்தருடைய கரம் அந்தப பிள்ளையோடிருந்தது' என்று கூறப்பட்டிருக்கும் வாசகமானது, அவர் அக்காலத்தில் தேவ பராமரிப்பினுல் எப்படியோ தப்பினர் என்பதை நமக்கு ருசுப்படுத்துகிறது. அப்போகிரிப்பா சுவிசேஷங்கள் ஒன்றில் அக்காலத்தில் எலிசபெத்து அவரைத் தூக்கிக் கொண்டு மறைவாய் ஓடி ஒரு மலைக்குப்போய், தேவனை நோக்கி மன்றாடினதாகவும், அப்போது அந்தமலை பிளந்து அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததென்றும் எழுதியிருக்கிறது.[1] இதை நாம் நம்பவேண்டியதில்லை. கர்த்தருடைய கரம் பிள்ளையோடிருக்கையில் மலைக்குள்ளே போவானேன். மண்ணறைக்குள் இறங்குவானேன்? தேவகரத்திலுள்ள ரிஷியை ஏரோதுவின் கத்திவெட்ட அவ்வளவு வல்லமையுள்ளதா? இல்லை, அந்தப் பட்டயம் ஓடியுமேயன்றி அதால் வெட்டு விழாது. இயேசுபாலன் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டு தற்காக்கப்பட்டதுபோல இந்த பாலிய ரிஷியும் தேவ உத்தரவால் வேறே இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டிருக்கலாமே. அல்லது கிறிஸ்துவைப் பாதுகாக்கும்படியோசேப்பு கண்ட தரிசனையை மரியம்மாள் எலிசபெத்துக்கும் சொல்லி முந்தியே எச்சரித்து அதற்கேற்ற ஆலோசனைகள் செய்திருக்கலாமே. எனெனில் அவ்விரு பாலருடைய வரலாறும் ஆதிமுதல் அவ்வளவு சம்பந்தப்பட்டிருந்ததால் ஒரு பிள்ளையின் வாழ்வு இன்னொரு பிள்ளையின் வாழ்வாக அவ்விருபட்சத்தாராலும் எண்ணப்பட்டு வந்திருக்கலாம்.

வனப் பருவம்

எப்படியிருந்தபோதிலும் அவருடைய பெற்றோர் சீக்கிரத்தில் மரித்துப்போய்விட்டதால் இவர் அனுதை பாலனுனர். இவருடைய போசனப்போங்கும், பேச்சின்போங்கும் குணப்பாகங்களும் எல்லாம், எல்லாருடைய மனதிலும் இவரைப் பற்றி உயர்ந்த எண்ணத்தையுண்டாக்கினது என்பது மெய். இவர் தமது தகப்பனைப்போல் ஆசாரியனுகி தூபங்காட்டித் தங்கள் குடும்ப சவரட்சனைக்கு நியமிக்கப்பட்டிருந்த மானிபத்தைக் கையாட்சிசெய்து காலங்கழிக்க மனமுடைய

[1] யாக்கோபின் சுவிசேஷம் 22ஆம் அதிகாரம்

வர்போலிராமல், உலகம் எனக்கு வேண்டாமென்று தள்ளி வனங்களில் வசிக்கும் சந்நியாசிகள் சிந்தையுடையவர் போலிருந்தார். இவர் இயல்பாகவே மெலிந்ததேகமுடைய வராயிருந்தாரென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது, ஏனெனில் 'அவர் ஆவியிலே பலன்கொண்டிருந்தார்' என்பது சரீர புஷ்டி இல்லை என்பதை உணர்த்துகிறது. அவர் தமது தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்தாவியினால் நிரப்பப் பட்டிருந்தபடியால் முற்றிலும் வித்தியாசமுள்ள பாலனாகவே இருந்தார். திராட்ச இரசமும் மதுவும் அவருக்கு இயல்பாகவே நஞ்சுப்பானம்போல எண்ணப்பட்டது. இந்தப் பிள்ளையின் இயல்பான தத்துவங்களும் போங்கும் முற்றிலும் வித்தியாசமாயிருந்ததால், பாலிய முதல் அவர் எல்லா வகைக்காரராலும் மதிப்பாய் எண்ணப்பட்டார். அக்கால உலகமும், அதிலுள்ள மனுஷரும் அவருடைய போங்குக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறார்களென்று அவர் அறிந்து, நாடு நகர் நமக்கு வேண்டாமென்று தள்ளி காடு, வனங்களில் போய்க் காலங்கழித்தார்.

அவருக்குப் புத்திதெளிந்து வாலிப வயதில் வளரும் போது அவருடைய தகப்பனார் தன்னைப் பார்த்துப் பாடினதாகச் சொல்லப்பட்ட வாசகம் அடிக்கடி மனதில் வந்தது என்று சொல்லலாம். தான் இந்த உலகத்தில் உண்ணவும் உடுக்கவும், உறங்கவும் பிறவாமல், இஸ்ரவேலரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திருப்பவும் உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தவுமான பெரியவேலை தனக்கு முன்னிருக்கிறதென்றும், கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும் அவருக்கு முன்பாக நடக்கவேண்டிய வேலை தனக்கிருக்கிறதென்றும் உணர்ந்துகொண்டார். இந்தப் பெரிய வேலைக்கு, தமது சொந்த ஊராகிய எபிரோனிலாவது, எருசலேமிலாவது சஞ்சரிப்பது தடையாயும் கெடுதலாயும் இருக்குமென்று எண்ணி, காட்டையே வீடாக்கிக்கொண்டார்.

அந்தக் காலத்தில் எசேனர் என்றபோல் அழைக்கப்பட்ட ஒருவித ரிஷிகள் கூட்டத்தார் அம்மலைக்காடுகளில்

வாசம் பண்ணிவந்தார்கள். அவர்களை நம்முடைய தேசத்தி லுள்ள ரிஷிகள் சந்நியாசிகளுக்குச் சமமென்று ஒருவாறு சொல்லலாம். சாமுவேல் தீர்க்கதரிசியின் காலத்தில் ஸ்தா பிக்கப்பட்டு, எலியா, எலிசா காலங்களில் விருத்திபெற்ற தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய கல்விச்சாலையே இதின் அஸ்திபாரமாயிருந்தது என்றும், அப்பள்ளிக்கூடத்தின் கிரமங்களும் கோட்பாடுகளும் நாளடைவில் கூடுதலும் குறைதலும் பெற்று எசேனர் கூட்டத்துச் சட்டங்களாய் முடிவுபெற்றதென்றும், நாம் எண்ணவேண்டியதாயிருக் கிறது. இந்த எசேனர் கோட்பாடுகளை இந்து தேச ரிஷிகள் கபோதனர் முதலியவர்களுடைய ஆரம்பத்துக்கும், ரோம சபை சந்நியாசிகள் வரிசைகளின் உற்பத்திக்கும் ஆதாரமா யிருந்ததென்று சொல்லலாம். பூர்வ எசேனருடைய கோட் பாடுகளையும் கிரமங்களையும் நுட்பமாய் நாம் அறிந்துகொண் டால் இவ்விடத்தில் நாம் அவர்களைப்பற்றிச் சொல்லிய அபிப்பிராயம் சரிதான் என்று எவரும் ஒத்துக்கொள்ளு வார்கள். இவர்களைக்குறித்து யோசேப்புஸ் என்ற யூத சரித்திரக்காரன் அதிக விபரமாய் எழுதியிருக்கிறான். அவர்கள் கடும் சட்டங்களுக்கு அமைந்து தங்கள் பட்சத்தா ரோடே மட்டற்ற பட்சம் காட்டுவார்கள். அவர்கள் உலக இன்பங்களை ஒழித்து சரீர தத்துவங்களை அடக்கி சன்மார்க் கமே சிறந்ததென்று கைக்கொள்ளுவார்கள். அவர்களில் அநேகர் விவாகத்தைத் தள்ளி, சிறுவரை வசப்படுத்தி தங்கள் கோட்பாடுகளுக்கு அவர்களைப் பழக்குவார்கள். பாலியரே தங்கள் பந்துக்கள் என்பார்கள். ஒரு ஸ்திரீயை நம்பக்கூடாது என்பதே அவர்கள் அபிப்பிராயம் அவர்கள் ஐசுவரியத்தை அருவருத்துத் தங்களுக்குள்ளதை எவர்களுக்கும் கொடுப் பார்கள். சகல வஸ்துகளும் அவர்களுக்குள் சம அளவாகவே அநுபவிக்கப்பட்டுவரும்; அவர்களுக்குள் ஐசுவரியவான் ஆண்டி என்றவித்தியாசமிராது. எல்லாச்சொத்தும்எகசொத் தாகவே எண்ணப்பட்டது. அவர்கள் எண்ணெயைத் தீட்டு என்று சொல்லி, வேர்வைக்கு மிஞ்சின தைலமில்லை யென் பார்கள். பெரும்பாலும் வெண்வஸ்திரமே அவர்கள் உடையா யிருந்தது. எல்லா ஊரும் அவர்களுக்குச் சொந்தமாயும், எந்தக்காடும் எந்தவனமும் அவர்கள் வீடுமாயுமிருந்தது.

அயலூரிலிருந்து வரும் தங்கள் வகுப்பினர் சொந்தக்காரர் போலவே அவர்கள் பதார்த்தங்களில் பங்குபெற்று சகஜமாயிருப்பார்கள்; அவர்கள் திருட்டுக்கு அஞ்சி ஆயுதம் கையிலே கொண்டுபோனலும், பசிக்கு அஞ்சி போசன பதார்த்தம் கொண்டுபோகவே மாட்டார்கள். அந்நியரை உபசரித்து அவர்களுக்கு அன்னவஸ்திரமளிக்கும்படி ஒவ்வொரு கூட்டத்துக்கும் குறிக்கப்பட்ட ஒருவனிருப்பான். பயந்து கடுகடுங்குகிற பிள்ளைகளுடைய செய்கைபோல் தாங்கள் செய்யப் பழகுவார்கள். கட்டின வஸ்திரமும் தரித்த பாதரட்சையும் கந்தையாகக் கிழிந்துபோகுமட்டும் மாற்றவே மாட்டார்கள். அவர்கள் எந்த வஸ்துவையும் விற்கிறதுமில்லை, கொள்ளுகிறதுமில்லை; மற்றவனுக்கு வேண்டியதாய்த் தன்னிடமிருப்பதைக் கொடுத்து, தனக்குவேண்டியதாய் அவனிடமிருப்பதை மாற்றிக்கொள்ளுவதே அவர்கள் வழக்கம். அன்றுடகம் சூரியன் எழும்புமுன் அவர்கள் குறிக்கப்பட்ட ஜெபங்களைச் சொல்லி, அது முடியுமட்டும் ஒருவரோடும் எந்தக் காரியத்தையிட்டும் பேசவேமாட்டார்கள். அதிகாலைமுதல் பகல் பதினொரு மணிவரையும் அவரவருக்குக் குறிக்கப்பட்ட வேலைகளை அங்குமிங்கும் போய் நிறைவேற்றிப்போட்டு, அப்பால் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து போசனத்துக்கு உட்காருவார்கள். அவர்கள் தங்கள் போசனத்தை ஜெபத்தோடு துவக்கி அமைதலாய் உண்டு மறுபடியும் ஜெபத்தோடு முடிப்பார்கள். அப்பால் மறுபடியும் அவர்கள் வேலைகளுக்குப் போய்த் திரும்பிவந்து இரவிலும் அப்படியே போசனம் செய்வார்கள். ஒரு அந்நியன் அவர்கள் நடுவில் இருந்தால் இங்கே ஏதோ தேவ இரகசியம் இருக்கிறதென்று பிரமிக்கத்தக்கதாக எல்லா விஷயங்களும் அவ்வளவு அமைதலும் ஒழுங்குமாக நடத்தப்படும்; அவர்கள் புசிக்கும் போசனத்தின் அளவும், அதின் கால திட்டமும் மற்றச் சட்டதிட்டங்களுமே அவர்களைப் பற்றி இவ்வளவு மதிப்பான எண்ணத்தை மற்றவர்கள் மனதில் உண்டாக்குகிறதென்று சொல்லவேண்டியது. தேவையுள்ளவர்களுக்குக் கொடுப்பதிலும், மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுகிறதிலும் மாத்திரம் அவரவர் தம்தம் மனதின் படி செய்வார்கள். மற்ற விஷயங்களிலெல்லாம் அவர்களுக்குச்

சட்டதிட்டமுண்டு. கோபக் குணத்தை அடக்குவதில் அவர்களுக்கு மிஞ்சினவர்கள் இல்லை. அவர்கள் விசுவாச துரோகமே செய்யமாட்டார்கள். சமாதானம் பண்ணுவதில் ஜாக்கிரதையாயிருப்பார்கள். அவர்கள் பேச்சு ஆணையிலும் உறுதியாயிருக்கும், ஆணையிடவேமாட்டாகள். தங்கள் ஆத்தும சரீர வாழ்வுக்கு அநுகூலமாக, பூர்வ ஆகமங்களிலும் சாஸ்திரங்களிலும் அடங்கிய புதையல்களைக் கண்டுபிடிக்கிறதும், தங்களுடைய தகாதகுணங்களை மாற்றுவதற்கேதுவான மூலிகைகளையும் மருந்துக் கற்களையும் பரிசோதிப்பதுமே அவர்கள் வேலை. அவர்கள் தங்களோடு சேர விரும்புகிறவனை ஒரு வருஷம் பரீட்சை பார்ப்பார்கள். அதுமுதல் அவனுக்கு ஒரு கைக்கோடாரியும், கச்சையும், வெண்வஸ்திரமும் கொடுப்பார்கள். ஒரு வருஷம் ஆன பின்பும் அவனை உடனே தங்களிடம் சேர்க்காமல் சுத்திகரிப்பின் ஜலத்திலில் மாத்திரம் தீட்சைகொடுத்து பின்னும் இரண்டு வருஷம் அவனுடைய குணங்கள் பரீட்சிக்கப்பட்டு, தங்கள் கூட்டத்துக்குத் தகுதியுடையவனென்று காணப்பட்டால் அதன்பின்பு அங்கீகரிக்கப்படுவான். அவர்களுடன் பந்தியிருந்து உண்ணுமுன், தான் தேவதாபக்தியை தனக்குள் விருத்தி செய்வேனென்றும், எல்லாருக்கும் நீதி தவறாமல் நடப்பேனென்றும், தானாகவாவது மற்றவர்களால் ஏவப்பட்டாவது ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யேன் என்றும், தான் எப்போதும் துன்மார்க்கரைப் பகைத்து சன்மார்க்கருக்குத் துணைசெய்வேனென்றும், எல்லாருக்கும் விசேஷமாய் அதிகாரிகளுக்கும் விசுவாசமாய் நடப்பேன் என்றும், அதிகாரிகளைத் தூஷிக்கவேமாட்டேனென்றும், நடை உடை பாவனைகளில் மினுக்கையும், தளுக்கையும் பின்பற்றேன் என்றும், தன் ஜீவகாலமெல்லாம் சத்திய நேசனும், பொய்ப்பகைஞனுமாயிருப்பேன் என்றும், தன் கைகளைத் திருட்டுக்கும் தன் மனதை அநியாய ஆதாயத்துக்கும் விலக்கமாய்க் காப்பேனென்றும், தன் இரகசியத்தைத் தன் கூட்டாளிகளுக்கு மறைக்கமாட்டேனென்றும், தங்கள் கூட்டத்து இரகசியங்களை மற்றவர்களுக்கு உயிர் போனாலும் வெளியிடமாட்டேனென்றும், தங்கள் வகைக்காரருடைய ஆகம சாஸ்திரங்களைத் திருடமாட்டேனென்றும்,

அவ்வாகமங்களையும் தேவதூதரின் நாமங்களையும் வெளிக்கு விடாமல் காத்துவருவேன் என்றும் பிரமாணம் செய்து கொடுக்கவேண்டும். அவர்களுடைய மதிப்பில் பெரும் பாதகன் என்று ஒருவன் கண்டுபிடிக்கப்பட்டால் தங்கள் கூட்டத்திலிருந்து தள்ளிவிடப்படுவான். அப்படித் தள்ளி விடப்பட்ட எசேனன் பெரும்பாலும் நிர்ப்பாக்கியமான மரணமடைவான். ஏனெனில் அவனைக் கட்டியிருக்கும் பிரமாணங்களும், நெடுங்காலம் அவன் கைக்கொண்டுவந்த பழக்கமும், போசனமும், மற்றப் போசனங்களைச் சாப்பிடக் கூடாதென்கிற அவனுடைய பயமும், புல்லையும் தழைகளை யும் தின்னும்படி ஏவுவதால் அதையே தின்று பசியால் வருந்திச் சாவான். ஆனால் அப்படிச் சிறுமைப்பட்ட நிலைமையிலிருக்கிற அவனை அவர்கள் கண்டுபிடித்தால், இம்மட்டும் அவனடைந்த தண்டனை போதும், இனி கிரமமாயிருப்பானென்று திரும்பவும் சேர்த்துக்கொள்ளு வார்கள். அவர்கள் எந்தக் காரியத்தையும் திட்பநுட்பமாய் விசாரணை செய்வார்கள். நூறு பேருக்குக் குறைந்தால் அவர்கள் ஒரு காரியத்தையும் விசாரியார்கள். ஆனால் நூறு பேருக்கு அதிகமாய்க் கூடி எந்தவிஷயத்தைத் தீர்மானிக் கிறார்களோ அது மாறாத் தீர்மானமாகும். அவர்கள் மோசே யின் நாமத்தை தேவ நாமத்துக்கு இரண்டாவதாக மதிப் பார்கள். அவர்கள் ஓய்வுநாளை மற்ற யூதரைவிட அதிகக் கண்டிப்பாகக் கைக்கொள்ளுவார்கள்; அவர்களுக்குள் நாலுவகுப்புகள் உண்டு. தாழ்ந்த வகுப்பார் உயர்ந்த வகுப் பாரைத் தொடும்படி நேரிட்டால், தங்களை ஸ்நானத்தால் சுத்திகரித்துக்கொள்ளவேண்டியது; மற்றப்படி தீட்டு என்றெண்ணப்படும். அவர்கள் பெரும்பாலும் நூறு வயதுக்கு அதிகமாய் உயிரோடிருப்பார்கள். அவர்க ளுடைய போசன கிரமங்களும் மற்றதின் கால ஒழுங்கு களுமே அதற்குக் காரணமாக இருக்கலாம். நோவும் சஞ்சலமும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல, மரணமானது தங்கள் மகிமைக்கேற்றதாக வாய்த்தால் உயிரோடு நெடுங் காலம் வாழ்வதிலும் சாவே நலமென்று எண்ணுவார்கள். ரோமரால் அவர்கள் அடைந்த நிந்தைக்கும், அவமானத் துக்கும், துன்பங்களுக்கும், சாவுக்கும் ஒரு கணக்கில்லை

என்றாலும் அதையெல்லாம் பொறுமையோடு சகித்தார்கள். துன்பப்படுத்தப்படும்போது நகைப்பதும், துன்பம் செய்வோரைப் பரியாசம் செய்வதும் அவர்கள் வழக்கம். இவர்களில் சிலர் பின்வரும் காரியங்களை முன் அறிவிக்கவும் வல்லவர்களாயிருந்தார்களாம்.[1]

மேலே சொல்லியவைகளே எசேனர் என்ற யூதப் பிரிவு ஒன்றைப்பற்றிய வரலாறுகளின் பொருள் அடக்கமாயிருக்கிறது. நாம் இந்த எசேனரைக் குறித்து இவ்வளவு விபரமாகச் சொன்னதற்கு இரண்டொரு முகாந்திரமுண்டு. கிறிஸ்துவின் விரோதிகளும், சுவிசேஷ பகைஞருமான பலர்: இயேசுவையும் அவருடைய முன் தூதனாகிய யோவான் ஸ்நானகனையும், இந்த எசேனர் வகுப்பைச் சேர்ந்த எசேனர் மாத்திரம் என்று சொல்லத் துணியலாம்; அவர்களுடைய விபரங்களையெல்லாம் அறியும்போது ஸ்நானகனும் விசேஷமாய் இயேசுவும் இவர்களோடு சேர்ந்தவர்கள் அல்லவென்று தெளிவாக விளங்குமல்லவா? மேலும் இம்மட்டும் தமிழ் நூல்களில் இந்த எசேனரைப்பற்றி விபரமாக ஒன்றும் தெரியாதால், பலர் ரிஷிகளையும் தபோதனரையும்பற்றி மட்டுமிஞ்சி எண்ணி, துறவறத்தைப் புகழலாம். ஆனால் இது பூர்வ எசேனர் கோட்பாட்டின் பாகம் என்று காணும்போது சந்நியாசி மார்க்கத்துக்கு ஏதோ விசேஷ வல்லமை இருக்கிறதென்கிற தப்பெண்ணம் நீங்கிப்போகிறதே. இதை வாசிக்கிறவர்கள் இலேசாக கிரகித்துக்கொள்ளவே நாம் இவ்வளவு தூரம் அந்த எசேனரைப்பற்றிப் பேச நேரிட்டது.

ஸ்நானக யோவான் எசேனரோடு சேர்ந்தவருமல்ல, அல்லது ரோமைச் சபையை அடுத்த சந்நியாசி போன்றவருமல்ல. இவருடைய காரியம் இரண்டுக்கும் முற்றிலும் வித்தியாசமானது. இவர் பழைய ஏற்பாட்டின் நசரேயன்போலிருந்தவரென்று எண்ணவேண்டியது (எண். 6:1–12; லேவி. 10:8–11; 21:10–12). எல்லா நசரேயரும் ஒரு காலமுதல் மறுகாலமட்டும் நசரேயராயிருக்கப் பொருத்தனை செய்கிறதுண்டு. இவரோ தன் தாயின் கர்ப்பமுதல் மரணபரியந்தம்

[1] யோசேப்புச் சரித்திரம். யூதருடைய யுத்த ஆகமம் II புத். 8 அதிகாரம் பார்.

கசரேயனுயிருந்தார். சந்நியாசிகளுக்குள் இயல்பாயிருக்கும் சுய பெருமையும் தன்னிஷ்டப்போங்கும் இவரிடத்தில் காணப்படவில்லை. இதை அற்ப வித்தியாசமென்று சொல்லக் கூடாது.

ஸ்நானகர் நெடுங்காலம் வனசஞ்சாரம் செய்வது அவருடைய பிற்கால ஊழியத்துக்கு மிகவும் அநுசரணையாயிருந்தது. உலகத்தில் சன்மார்க்கத்தை வித்திப்பண்ணும்படி முயன்ற பல பக்தருக்கு இது வழக்கமென்று காண்கிறோம்; வனசஞ்சாரமே அவர்களைத் திருத்திப் பக்குவப்படுத்தும் பாடசாலைபோலிருந்தது. மோசே மீதியான் வனங்களில் ஆடு மேய்க்கவும், எலியா கேரீத் சரெப்தா என்னும் காட்டுப்புறங்களில் திரிந்தலையவும், பவுல் அரபி தேசத்தின் பாலைவனங்களில் மூன்று வருஷம் காலங்கழிக்கவும் தேவன் சித்தம்கொண்டது அவரவரால் பிற்காலத்தில் நிறைவேற்றப்படவேண்டிய தேவ ஊழியங்களுக்கு அவர்களை ஆயத்தப்படுத்தும் முறைகளாயிருந்தன. பக்தியுள்ள நெஞ்சம் பாழான காடுகளைக் கண்டு பயப்படாமல் விசுவாசத்தில் வல்லமையடைகிறது.

தீட்சை பருவம்

அநேக வருஷங்களாக கானனின் காடுகளில் ஒண்டியாய்த் திரிந்த ஸ்நானகன் தமது முப்பதாம் வயதில், தீர்க்கதரிசிகளாலும், தேவதூதனாலும் தனக்குக் குறிக்கப்பட்ட தேவ வேலையை ஆரம்பித்தார். அவர் எலியா என்ற பேரைத் தமக்குத் தரித்துக்கொள்ளாதே போனாலும் அவருடைய ஆவியையும் பலத்தையும் தரித்துக்கொண்டிருந்தார். கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணுவதே இவருடைய வேலையாயிருந்தது. இந்த வேலையை இவர் பட்டயங்களோடும் சேனைகளோடும் நடப்பியாமல் தனிமையாகவே ஆரம்பித்தார். சாமுவேலையும் எலியாவையும்போல தீர்க்கதரிசிகளின் புத்திரர் இவரைப் பின்தொடரவில்லை. அவர் தனிமையாய் நின்று அகங்கார மலைகளை அடியோடு உடைத்து, அஜாக்கிரதை யென்னும் பள்ளங்களை நிரப்பி, மகிமையின் இராசா ஒவ்வொரு இருதயத்திலும் கனமாக

அங்கீகரிக்கப்படுவதற்கு வேண்டிய பிரயத்தனங்களையெல்லாம் செய்தார்.

ஸ்நானகன் பிரசங்கம் பண்ண ஆரம்பித்த காலத்தைக் குறிக்கும்படி ஆறு குறிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன (லூக். 3:1,2). இந்தக் குறிப்புகளினூலே அந்தக்காலத்தில் கானான் தேசத்தில் இராச்சியபார குழப்பமும் கலக்கமும் பூரணமாயிருந்ததென்பது தெளிவாகிறது. இவர் உலக இராச்சியத்தைப்பற்றி ஒன்றும் கவலைப்படாமல் பரம இராச்சியத்தைப்பற்றி மாத்திரம் கவலைப்பட்டுவந்தார். இவர் ஒட்டகமயிருடையைத் தரித்து இடுப்பிலேவார்க்கச்சையைக் கட்டிக்கொண்டு திரிந்தாலந்தார். வெட்டுக்கிளிகளும் காட்டுத் தேனும் அவருக்கு ஆகாரமாயிருந்தன.

இவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தகாலத்தில் கானானிலிருந்த கேடுபாடுகளுக்கு ஒரு எல்லையில்லை. அங்குள்ள யூதர் விரியன் பாம்பின் குட்டிகளுடைய குணமுடையவர்களாய்ச் சத்தியத்தை அசட்டைசெய்து, வருங்கோபாக்கினையைக் குறித்து எவ்வளவும் எண்ணுமல் இருந்தார்கள். இப்படிப்பட்ட மார்க்கச் சீர்கேடான காலத்தில் பிரசங்கம் செய்யும்படி யோவானுக்கு தேவனுடைய வார்த்தையுண்டாயிற்று. இவர் தமது கர்ப்பமுதல் தேவஆவியால் நிரப்பப்பட்டு பாலியத்திலும் வாலிபத்திலும் அறநெறி தவருமல் நடந்துவந்த பக்தனாயிருந்தபோதிலும், தேவ ஊழியத்துக்குத் தாமாய்த் துணியாமல் தேவனுடைய வார்த்தை வருமட்டும் பொறுமையோடு காத்திருந்தார். இந்த தேவவார்த்தையுண்டான காலத்தில் அவர் வனத்திலே வாசம்பண்ணிக் கொண்டிருந்தார். இந்த வார்த்தை எவ்வண்ணம் அவருக்கு வந்ததெனறு அறிய ஏதுவில்லை. ஒருவேளை சொப்பனத்தின் மூலமாய் அல்லது தேவதூதன் மூலமாய் வந்திருக்கலாம். கர்த்தருடைய பணிவிடைகளை, அனுப்பப்படாமலும் அழைக்கப்படாமலும் தம் மனப்பாங்கின்படி செய்கிற முறை இதனால் கண்டிக்கப்படுகிறதென்று சொல்லலாம்.

ஸ்நானகர் தேவ சத்தத்துக்கு உடனே கீழ்ப்படிந்து தமது போதக ஊழியத்தை ஆரம்பித்தார். அவருடைய உடையும், உணவும், அவருடைய போதனையின் போங்கும் எல்லாம்

ஜனங்களுடைய மனதுக்கு ஒரு அசைவையுண்டாக்கிற்று. அவர் தம்மிடம் கூடும் ஜனங்களின் அந்தஸ்தையும் நிலைமையையும் பார்த்துப் பேசாமல் சத்தியமாகிய சத்தியைத் தீட்டி சகல நிலைமையுள்ளோரையும் ஒரே நிலைமையாக எண்ணிப் போதித்துவந்தார். முதலாவது அவர் யோர்தான் நதிக்கருகான தேசமெங்கும் போய் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புவதற்கேற்ற ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். 'மனந்திரும்புங்கள் பரலோக இராச்சியம் சமீபித்திருக்கிறது' என்பதே அவருடைய பிரசங்கத்தின் சுருக்கமாயிருந்தது (மத். 3:1). இதினூலே அவர் தானியேல் தீர்க்கதரிசியின் மூலமாய் முன்னறிவித்திருந்த ஆவிக்குரிய பரிசுத்த இராச்சியபாரத்தை இப்பூலோகத்தில் ஸ்தாபிக்கும் காலம் வந்துவிட்டதென்றும், தங்கள் பாவங்களை அகற்றி மனந்திரும்பாதவர்கள் அந்த இராச்சியத்தில் பங்குபெறமாட்டார்களென்றும் ஜனங்களுக்கு உணர்த்தினார் (தானி. 2:44; 7:14-27). அவர் ஒரு மனுஷனுடைய சரீரத்தைப்பற்றியாவது அது அரசாளப்படவேண்டிய முறையைப்பற்றியாவது ஒன்றும் பேசாமல் எல்லா ஆத்துமாக்களும் அந்தப் புது இராச்சியத்துக்குட்படவேண்டுமென்று போதித்தார். அவருடைய போதனைக்கு இணங்கி தங்கள் மனதை அந்தப் புது இராச்சியபாரத்தின் பக்கமாய்ச் சாய்த்தவர்களெல்லாரும் ஜல தீட்சையை அவரால் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிருந்தது. இந்தத் தீட்சை முறையினால் தாங்கள் பாவிகள் என்பதையும், ஆவிக்குரிய புதுப்பித்தல் தங்களுக்கு வேண்டியதாயிருக்கிறதென்பதையும், இனிமேல் பழைய தீமைகளைத் தள்ளிவிடுவோமென்றும் பிரசித்தப்படுத்துகிறவர்களாயிருந்தார்கள்.

இப்படிப்பட்ட போதகன் ஒரு இடத்தில் எவ்வளவு அதிசயமாய் மதிக்கப்படுவான் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. இந்த அரிய போதனையும் தீட்சை முறையும் அவ்விடங்களில் ஆவிக்குரிய யுத்த அமளிபோல பிரபல்யமானதால், புருஷரும் ஸ்திரீகளும் சேனை சேனையாகத் திரண்டு அவரிடம் போய், உபதேசம் கேட்டு நித்திய ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை அடைந்தார்கள். அவர் தம்மிடம்

வந்த திரள்கூட்டத்தால் பெருமையடையவுமில்லை, அவர்களுடைய சகாயத்தால் உலகப்பிரகாரமான ஒரு வாழ்வையும் சலாக்கியத்தையும் சம்பாதிக்கவுமில்லை. அவர் ஆளைப்பார்த்து நயவசனிப்பான வார்த்தை ஒன்றும் பேசாமல் அவர்கள் இருதயத்தைப் பார்த்து தேவ சத்தியங்களாகிய அம்பைப் பலமாய் எய்தார். எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தான் நதிக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படி போனார்கள். அவர்களில் பரிசேயரும் சதுசேயரும், ஆயக்காரரும் போர்ச்சேவகரும் இருந்தார்கள். இந்தப் பரிசேயரும் சதுசேயரும் தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளானதால் தங்களுக்கு மோட்சம் எப்படியும் கிடைக்குமென்று தப்பாக எண்ணிவந்தார்கள். ஆதலால் ஸ்நானகர் அவர் எண்ணத்தைக் கண்டித்து, விரியன் பாம்புக் குட்டிகளே! மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாமின் பேரைச் சொல்லி ஆண்டவருடைய தயவைப் பெற்றுக் கொள்ளலாமென்று எண்ணுதேயுங்கள். தேவன் ஆபிரகாமுக்கு இந்தக் கல்லுகளாலும் பிள்ளைகளை உண்டுபண்ணக் கூடும் என்று போதித்தார்.

அவர் தம்மிடம் வந்த ஆயக்காரரைப் பார்த்து, குறிக்கப்பட்ட விதிப்புக்கு மிஞ்சி குடிகளிடத்தில் வரிதண்டவேண்டாமென்று எச்சரித்து, ரோமைப் போர்ச்சேவகரை நோக்கி 'நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும், பொய்யாய்க் குற்றம் சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள்' என்று புத்தி சொன்னார். அவர் ஒருவருக்கும் இளக்காரம்காட்டாமலும், ஒருவர்பாவத்தையும் மூடாமலும் அவர்களுக்கு வரப்போகிற தேவ தண்டனையைப் பலத்தோடு கூறினார். அவர் தம்மிடம் வந்தவர்களை நோக்கி, ஓ! ஜனங்களே! 'இப்பொழுதே கோடரி மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்' என்று தெளிவாகச் சொன்னார். அதைக் கேட்ட அநேக பரிசேயரும் சதுசேயரும், ஆயக்காரரும், போர்ச்சேவகரும் மனந்திரும்பி அவரால் ஞானதீட்சை பெற்றார்கள்.

இவருடைய காரியங்களையெல்லாம் ஆதியோடந்தமாய்க் கவனித்து வந்த பலர், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா இவர்தானே என்று முதலாய்ச் சந்தேகமாக எண்ணினார்கள். உலகத்தில் எழும்பி அடங்கின பல எத்தரைப்போல இவரும் ஒரு எத்தனென்று ஜனங்களை ஏமாற்றி அக்காலத்தில் தன்னைப் பெரியவனுக்கிக்கொள்ளலாம். இவரோ அப்படி செய்யாமல் நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினால் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னார். இக்காலத்தில் எழும்பும் பல தேவ ஊழியக்காரருக்கும் இவருக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறதென்பதைக் காண்கிறோம். புகழ்ச்சி, மேன்மை ஆதிக்கம், அதிகாரம், சொற்சதி முதலிய கீர்த்தி களுக்கு முந்திக்கொள்ளுகிறதும், தங்களைத் தாங்களே உயர்த்திப் பேசுகிறதும், எழுதுகிறதும், காட்டுகிறதுமான பலரை அடிக்கடி பார்க்கிறோம். இப்படிப்பட்ட பிரயத்தனங் கள் விருத்தியானதினாலேதான், பாப்புகளின் ஆதிக்கம் ரோமை சபையில் தலைப்பட்டது. இப்பொழுது ரோமையில் மாத்திரம் பாப்பு உண்டென்று நாம் சொல்லக்கூடாது. பாப்பு என்ற பேர் மாத்திரம் இராமல் அவனுடைய குணம் குறிகள், பேச்சு நடத்தை முதலியவைகளுள்ள பல தேவ ஊழியக்காரரை அடிக்கடி பார்க்கலாம். தேவனுடைய பணிவிடைக்காரர் ஒவ்வொருவரும் பரி. யோவான் ஸ்நானக னுடைய தாழ்மையைப் பின்பற்றுவது நலமாயிருக்கிறது. பரி. யோவான் ஸ்நானகன் சொன்னதுபோல அவருக்குப் பின்வந்த மேசியாவாகிய இயேசுகிறிஸ்து திருச்சபையின் மேல் பரிசுத்த ஆவியை அக்கினிமயமாய் வந்திறங்கும்படி செய்தார். மேலும் அந்தப் பெரியவர் ஒருகாலத்தில் தன் மார்க்கரை சன்மார்க்கரிலிருந்து பிரித்து, அவருடையகிரியை களின்படி நியாயத்தீர்ப்புக் கொடுக்கவும் அதிகாரமுடைய வராயிருப்பாரென்றும் அறிவித்தார். மொத்தமாய்ச் சொன் னால் யோவான் ஸ்நானகன் தன்னிடத்தில் வந்தவர்களெல்லா ருக்கும் உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மகத்துவங் களைக் கூறி அவரண்டை போகும்படி ஜனங்களை ஏவினார்.

தேவ ஊழியக்காரர் கிறிஸ்துவை உயர்த்தி மேன்மைப்படுத்தவும் அவரண்டை ஜனங்களைச் சேர்க்கவும் வேண்டியது. தங்களை உயர்த்தும் தேவ ஊழியர்கள் கிறிஸ்துவையும் அவராலுண்டான இரட்சண்யத்தையும் தாழ்த்திப்போடுகிறவர்களாயிருக்கிறார்கள்.

இவ்வண்ணமாக ஸ்நானக யோவான் கிறிஸ்துவை மேன்மைப்படுத்தி மனந்திரும்பும்படி ஜனங்களை ஏவிக்கொண்டிருந்த சமயத்தில் ஒருநாள் கிறிஸ்து அவரிடத்தில் வந்து தமக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டார். அவர் இன்னாரென்று ஸ்நானகருக்குத் தெரியவே தெரியாது. இருவரும் அதற்குமுன் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. இவ்விருவருடைய தாய்மாரும் ஒருவருக்கொருவர் இனத்தாராயிருந்து ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போக்குவரவாயிருந்தபோதிலும் அவரவர்க்குப் பிள்ளைகள் பிறந்தபின்பு முன்போல அவர்களுடைய போக்குவரவு இருக்கவில்லை என்று விளங்குகிறது. மேலும் ஸ்நானகன் பிறந்த கொஞ்சகாலத்துக்குள், அல்லது ஏரோது பாலியரைக் கொலைசெய்த காலத்திற்கு முந்தியாவது சற்று பிந்தியாவது, சகரியாவும் எலிசபெத்தும் மரித்துப்போயிருக்கலாம். அதுவன்றி அவர்கள் உயிரோடிருந்தபோதிலும் ஏரோதின் சட்டம் அவர்களை ஒருவரைவிட்டு ஒருவரை என்றென்றைக்கும் பிரித்துவிட்டது. ஏனெனில் ஒரு பிள்ளை அகப்பட்டால் அடுத்த பிள்ளையை அது காட்டிக்கொடுக்கிறதுபோலிருக்கும். ஆதலால் இயேசுபாலனும் ஸ்நானகனும் அவரவர்மட்டில் ஒருவரையறியாமல் ஒருவர் வளர்ந்து புருஷராஞர்கள் என்று சொல்லவேண்டியது; என்றாலும் ஸ்நானகனுக்கு அற்புதமூர்த்தியைக் காணும் காலமும் அடையாளமும் தேவ ஆவியால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இயேசு தீட்சை பெறும்படி வந்தவுடனே, தனக்கு அறிவிக்கப்பட்ட வானத்து மனுஷன் இவர்தான் என்று அவர் அறிந்து, நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா? என்று கேட்டார். தன்னிடத்தில் வந்தவர்களெல்லாரையும் மனந்திரும்ப ஏவின இவர், இயேசுவைக் கண்டவுடன் இப்படிப் பேசினது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

ஸ்நானகன் இயேசுவை இதற்குமுன் கண்டு பழகாதேபோனாலும் தேவ ஆவியினால் அவருக்கு இது வெளிப்படுத்தப்பட்டது. இயேசு அவருக்கு மறுமொழியாக 'இப்பொழுது இடம்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது' என்று சொன்னார். உடனே யோவான் அவருக்கு தீட்சை கொடுத்தார். கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்தினின்று விடுதலையாக்கும் படிக்கு, அதன் நிபந்தனைகளுக்கெல்லாம் அடங்கி அவைகளைக் கடந்துபோனார்.

இரட்சகர் ஞானதீட்சை பெற்ற சமயத்தில் ஸ்நானகன் இம்மட்டும் காணாத புதுக் காட்சிகளைக் கண்டார்; வானம் திறக்கப்பட்டது, தேவ ஆவியானவர் புறாவைப்போல் இறங்கி இயேசுவின்மேல் தங்கினார், வானத்திலிருந்து 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவர்மேல் பிரியமாயிருக்கிறேன்' என்று சத்தமுண்டாயிற்று. இந்த அதிசயக் குறிப்புகள் தன்னிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றவர் இன்னாரென்பதை வனத்து ரிஷிக்கு உறுதியாக வெளிப்படுத்திக் காட்டிற்று. வானத்திலிருந்து சத்தமுண்டானதைக் குறித்து வனத்து ரிஷி இதற்குமுன் கேள்விப்பட்டிருந்தபோதிலும், அது திறக்கப்பட்டதையும், பரிசுத்த ஆவி இறங்கினதையும் அவர் இப்போதுதான் முதலாவது காண்கிறார். இந்த அற்புத செயல்கள் இயேசுவைக் கனப்படுத்துகிறவைகளாயிருக்கிறதோடு, வனத்து ரிஷியின் ஊழியத்தையும் தெய்வீகப்படுத்துகிறவைகளாயிருக்கின்றன என்று சொல்லவேண்டியது. யூதர்கள் எப்போதும் மேசியாவை ஒப்புக்கொள்ள வானத்திலிருந்து ஒரு அடையாளம் வேண்டுமென்று சொல்லிக் கொண்டார்கள். அப்படியிருந்தாலும் இந்த அடையாளத்தை அவர்கள் கவனிக்கவில்லை.

கைதிப் பருவம்

வனத்து ரிஷியானவர் லோக குருவுக்குத் தீட்சை கொடுத்தது முதல் ஒரு புதுக்காலம் அவருடைய ஜீவியத்தில் தொடங்கிற்று. சூரியன் உதித்தவுடன் விடிவெள்ளியின் மகத்துவமும் பிரயோசனமும் எப்படி இயல்பாய் அடங்கிப்

போமோ, அப்படியே அவருடைய காரியமும் இருந்தது. இயேசு ஞானஸ்நானம் பெற்றவுடனே தம்முடைய வேலையை ஆரம்பிக்க முயன்றார். அதுமுதல் வனத்து ரிஷி தம்மிடம் வந்த ஜனங்களை அவரிடத்தில் கூட்டிவிடுகிற ஒரு கூலியாள் போல் தமது காலத்தைக் கழித்துவந்தார். இது வனத்து ரிஷியை அதிகமாய் அடுத்து அவருக்கு சீஷராயிருந்தவர் களுக்கு சற்று மனவருத்தமாயிருந்ததென்று தோன்றுகிறது. சில நாட்களுக்குள்ளாக இயேசுவின் பக்கம் பலத்தது. ஏனெனில் அவர் வனத்து ரிஷியைப்போல மனந்திரும்பு தலைப் பிரசங்கித்தாலும் அற்புத கிரியைகள் அவருடைய போதனைகளில் கலந்திருந்தது. அதுவுமன்றி இயேசுவின் பேர் அவர் சம்பாஷணைகளில் வரும்போதும் அவர் தற்செய லாக அவர்கள் கூட்டத்தைக் கடந்துபோகிறதும் வனத்து ரிஷி: இவரே தேவனுடைய குமாரன், இவரே உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி; இவரே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர், என்று ஜனங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்தார். இதினாலே அவ ருடைய நெருங்கின சீஷர் சிலர் இயேசுவின் பிறகாலே போய் அவரோடு கூடிக்கொள்ளவும் காரணமாயிற்று. இதினால் அவருடைய பட்சத்தார் சிலர் மனதில் சங்கடப் பட்டார்கள். இப்படி இவர்கள் செய்தது சரியல்ல; இவர்கள் சிலரைப்போல மார்க்க விஷயத்திலும் இரட்சிப்பின் விஷயத் திலும் கட்சிவளர்க்கிற ஊழியக்காரரைப்போலொத்தவர்களே யன்றி வேறல்ல; தேவ ஊழியக்காரர் பலர் என் சபை, என் கோவில், எங்கள் வழக்கம், எங்கள் உபதேசம், எங்கள் கோட்பாடு என்று அடிக்கடி பேசுகிறதுண்டு. இப்படிப் பட்டவர்கள் தங்களைக் கிறிஸ்துவுக்குச் சமமாக்கும் பதிதர் என்றும், அந்திக் கிறிஸ்துக்கள் என்றும் தாராளமாய்ச் சொல்லலாம்.

இப்படி கட்சிப்பட்ட இருதயமுடைய சிலர் கிறிஸ்து வைத் தங்களுடைய ரிஷிக்கு எதிரிபோல எண்ணினார்கள். அவர்கள் ஒருநாள் அவர்கள் குருவினிடத்தில் வந்து, மா ரிஷியே 'உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே அவரைக் குறித்து நீரும் சாட்சி கொடுத்

தீரே, இதோ அவர் ஞானஸ்நானம் கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள்' அதினுலே நம்முடைய கூட்டம் குறைகிறது என்பதுபோல சொன்னர்கள். அப்பொழுது ஸ்நானகன்; நான் கிறிஸ்து அல்ல, அவர்தான் கிறிஸ்து, நான் அவருக்கு முன்னே அனுப்பப்பட்டவனேயன்றி வேறல்ல; அவரிடத்தில் எல்லாரும் போகிறார்களென்பதை நான் கேள்விப்பட்டுச் சந்தோஷப்படுகிறேன். 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்;' நான் பூமியிலிருந்து பிறந்தவன் அவரோ உன்னதத்திலிருந்து வந்தவர்; பிதாவாகிய தேவன் அவர் கையில் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்திருக்கிறார், அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனையுடையவனுயிருக்கிறான். அவரை விசுவாசியாதவனே ஜீவனைக் காண்பதில்லை; அவன் தேவனுடைய கோபாக்கினைக் குள்ளாயிருக்கிறான் என்று விபரமாய்ச் சொன்னர். இதினுலே வனத்து ரிஷியின் தாழ்மை, அடக்கம், சுயநயம், வெறுத்தல் ஆகிய இந்த அரிய குணங்களின் அலங்காரம் விளங்குகிறது. தேவ ஊழியக்காரர் இதனுல் படிக்கவேண்டிய விசேஷித்த காரியங்கள் அநந்தமிருக்கின்றன. அவர்கள் தங்கள் ஊழியங்களை உண்மையோடு செய்யும்படி இப்படிப்பட்ட குணங்களில் பழகிவரவேண்டியது, அவர்கள் தங்களைக் கிறிஸ்துபோல சபைகளுக்குப் பாராட்டி தங்கள் சொற் சக்தியையும் அதிகாரத்தையும் அதின் மூலமாய் வெளிப்படுத்தி அதைத் தங்கள் சுயபெருமையின் நாடகசாலைபோல பிரயோகியாமல், தங்கள் கனம், புகழ், அறிவு, பலம் எல்லாம் அதற்குக் காணிக்கையாக எண்ணி மனத்தாழ்மையே உடையாய் அணிந்து எவ்விதத்திலும் தங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரைப்போல் வெளிப்படுத்தி வரவேண்டியது. 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்' என்று மாயமாலமாய்ச் சொல்லிக்கொண்டு திரிகிற பல தேவ ஊழியக்காரர் கிறிஸ்துவின் இராச்சியம் பெருகுவதற்குத் தங்கள் அந்தஸ்தும் சொற்சக்தியும் அதிகாரமும் பெருகவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. இப்படிப்பட்டவர்கள் கள்ள ஊழியக்காரரும் கபடமுள்ள உக்கிராணக்காரருமேயன்றி வேறல்ல. கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படத் தன் பெருமையும் பேரும் குறையவேண்டுமென்று கருதி

தங்களைத் தாங்களே குறைத்து கிறிஸ்துவைப் பெருமைப் படுத்துகிறவர்களோ கொஞ்சப் பேர் மாத்திரமுண்டு.

வனத்து ரிஷியின் ஜீவியப்போக்கும், போதனைப்போக் கும் அவரை நெடுங்காலம் உலகத்துக்கு அவசியமானவர் போல காட்டினாலும் தேவன் தமது திருவுளத்தில் வேறு விதமாய்த் தீர்மானித்திருந்தார். நமக்கு பாலியம் தேவ னுக்கு முதுமைபோலும், நமது துவக்கம் அவருக்கு முடிவு போலும் இருக்கின்றன. 'கர்த்தருடைய செயல்களை அறிந்த வன் யார்' என்று தீர்க்கதரிசி சொல்லும் வாசகம் சத்தியம் தான். வனத்து ரிஷி சுமார் மூன்று வருஷக் காலமாகச் செய்த வேலை, வானத்துக் கர்த்தருக்குப் பூரணமாகக் கண்ட தால் அவருடைய நாட்களை இப்பூமியில் குறுக்கும்படி சித்தமானார். அவருடைய அந்தியகால நடபடிகள் எவர்க ளுடைய மனதையும் அசைத்துவிடத்தக்க சரித்திரமாயிருக் கிறது.

ஸ்நானக ரிஷி அந்த இடத்திலிருந்த சாதாரண ஜனங்க ளெல்லாராலும் கண்யமாய் மதிக்கப்பட்டார். அவருடைய பேர்ப்பிரஸ்தாபம் அந்நாடெங்கும் தொனித்தன. அரசர் அரண்மனையிலும் அவருடைய பேர் சொல்லிக்கொள்ளப்பட் டன. அக்காலத்தில் கலிலேயா நாட்டில் மகா ஏரோதுவின் குமாரரில் ஒருவனாகிய அந்திப்பா ஏரோது என்கிறவன் அரசு செலுத்தி வந்தான். ஸ்நானகனைப்பற்றி ஊரெங்கும் சொல்லிக்கொள்ளப்பட்ட பெரும்படியான பேச்சைக் கேட்டு அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவனுக்குண்டா யிற்று. உடனே ஏரோது அவரைத் தன்னண்டை வரும்படி கட்டளையிட்டான். யோவான் அவனிடம் போனது அவ ருடைய ஜீவனுக்கு முடிவாயிற்று. ஏனெனில் அவர் தமது வழக்கம்போல ஏரோதுவின் அரண்மனைக்குள் மனந்திரும்பு தலையும், பாவங்களை விட்டுவிடுவதையும் பற்றிப் பேசினார். பெரும்பாலும் இராஜ தரிசனை பெறும்படி போகிறவர்கள் அரசனைப் புகழ்ந்து கவி பாடி, அல்லது முகஸ்துதி பேசி, முகங்குப்புற விழுந்து வணங்கி, அவன் கொடுக்கும் வெகு மதிகளைப் பெற்றுக்கொள்ளுவது வழக்கம். இவரோ அப்படிச் செய்யாமல் நீதியையும், இச்சையடக்கத்தையும், மனந்

திரும்புதலையும் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தார். அவருடைய வார்த்தைகளைக் கேட்கவே அரசனுக்கு கிடுகிடு கலக்கமுண்டாயிற்று. அந்த அரசன் சன்மார்க்க நெறி தவறி, தன் சகோதரன் மனைவியைத் தனக்கு மனைவியாக்கி, தன் மனைவியை அவள் தாய்வீட்டுக்கு அனுப்பியிருந்தான். ஸ்நானக ரிஷி அதை எப்படியும் அவனுக்கு உணர்த்திக் காட்டுவது தமது கடமை என்று கண்டு, அவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக நின்று, மகா இராஜாவே நீர் உம்முடைய சகோதரனுடைய மனைவியைப் படைத்துக் கொள்ளுகிறது நியாயமல்ல என்று சொன்னார். இது எலியாவின் குணமேயன்றி வேறல்ல. இந்தக் குணம் ஒவ்வொரு தேவ பணிவிடைக்காரருக்கும் இருக்கவேண்டியது. அரசர் சன்மார்க்க நெறி தவறுகிறதற்கும், பிரபுக்கள் சன்மார்க்கத்தில் நிலைத்திருக்கிறதற்கும், தேவதாபக்தி ஒரு கிறிஸ்தவர்கள் கூட்டத்தில் குறைகிறதற்கும், சிலதரம் அந்தந்த தேவ ஊழியரே ஆதிகாரணமாயிருக்கிறார்கள். அவர்கள் ஆள் பார்த்து, முகஸ்துதியாய்ப் பேசி, இதமான வார்த்தைகளைப் போதித்து, சன்மார்க்கரை அவர்கள் போக்கில் வளரவிடுகிறார்கள். அவர்கள் இருபுறமும் கருக்குள்ள தேவவசனத்தை வீசி அக்கிரமத்தை அதமாக்கும் சேவகரானதால், பொல்லாப்பைக் கண்டிக்கும் விஷயத்தில் அவர்கள் ஸ்நானக ரிஷியைப்போல நடந்துகொள்ளவேண்டியது. இந்த பகிரங்க கண்டனைகளைக் கூறும்போது அரசன் மாத்திரம் தனித்திராமல் கலிலேய நாட்டு அதிபதிகளும், ஒருவேளை அந்தக் கள்ள மனைவியும்கூட இருந்திருக்கலாம். ஏரோதுக்கு இந்த வார்த்தை ஈட்டிபோல் பாய்ந்தது. அவன் அச்சமயத்தில் தன் குற்றத்தை உணர்ந்தான் என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டியது. ஆனால் அவன் பக்கத்திலிருந்தவர்கள் இராஜகனம் இப்படிப்பட்ட வார்த்தையால் இகழப்பட்டதென்று முகஸ்துதியாகப் பேசி அவன் கோபத்தை எழுப்பிவிட்டிருக்கலாம். அந்நிமிஷமே அவரைச் சிரசாக்கினை செய்து போடவேண்டுமென்பதும் சிலருடைய நோக்கமாயிருக்கலாம். என்றாலும் அரசனுடைய உள்ளத்துக்குள் அவன் வார்த்தைகள் யதார்த்தமென்று பட்டதினால் அவ்வளவு பெரும் பாதகத்தைச் செய்ய உடனே துணியாமல் அவரைக்

காவலில் அடைத்தான். ஸ்நானக ரிஷிக்கு காடும் சரி காவ லறையும் சரி. அவர் அதற்காக விசனப்படவே இல்லை.

அவர் எவ்வளவு காலம் காவலில் இருந்தாரென்று சொல்ல ஏதுவில்லை. என்றாலும் அவர் இருந்த காவல் கடுமையான காவலாயிராமல் சற்று லேசான மாதிரியாக இருந்தது. ஏரோது தன்னுடைய மனவெறுப்பினால் அல்ல, மற்றவர்களுடைய கட்டாயத்தினிமித்தம் அவரைக் காவலில் வைத்து அவரை மெதுவாய் நடத்தும்படி கட்டளையிட் டான்போல் தோன்றுகிறது. அந்தக் காவற்சாலைக்கு யோவானுடைய சீஷர் தாராளமாய் வந்துபோக இடம் கொடுக்கப்பட்டதாக நாம் காண்கிறோம் (லூக். 7:18–35; மத். 11:1–19).

ஸ்நானகன் காவலில் இருந்த காலத்தில் கிறிஸ்துவின் பேர்பிரஸ்தாபம் அந்நாடுகளில் அதிக வல்லமையாய்த் தொனித்தது. அது யோவானுடைய சீஷரில் சிலருக்கு எவ்வளவேனும் பிரியமாயிருக்கவில்லை. அவர்கள் தங்கள் குருவுக்கு மிஞ்சின குரு ஒருவருமில்லையென்று நினைத்துக் கொண்டவர்களாயிருந்தார்கள். ஸ்நானகன் அவரைக் குறித் துச் சொன்ன சாட்சிகளையும் அவர்கள் நம்பவில்லை. வனத்து ரிஷி காவலறையில் இருக்கையில் ஒருதரம் அவருடைய சீஷரில் சிலர் வந்து இயேசு செய்த அற்புத கிரியைகளையெல் லாம் சொன்னார்கள். இவர்கள் தங்களுடைய குரு கைதியாகி காவலறையில் போனவுடனே தாங்களாகவே கிறிஸ்துவைப் பின்தொடர்ந்திருக்கலாம்; அல்லவென்று ஸ்நானக ரிஷியே அவர்களுக்குச் சொன்னதின்பேரில் அவர்கள் கிறிஸ்து வண்டை போயிருக்கலாம். அவர்கள் கிறிஸ்து செய்த பல அற்புதங்களைக் கண்டும் அவரை மேசியாவென்று விசுவா சிக்க மனமில்லாமல் சந்தேகப்பட்டு அதைப்பற்றி தங்கள் குருவின் ஆலோசனையைக் கேட்கவந்தார்கள் போலிருக் கிறது. அவரோ நீங்களேபோய் அவரிடத்தில் சங்கதியைத் தெளிவாகக் கேளுங்கள்; அவர் அதின் இரகசியத்தைச் சொல்லுவார் என்று அனுப்பினார்; அவர்கள் இயேசுவினிடத் தில் வந்து 'வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று யோவான் ஸ்நானகன்

கேட்டுவரச் சொன்னார்' என்று கேட்டார்கள். தங்களுடைய மனதின் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள ஸ்நானகன் கேட்கச் சொன்ன கேள்விகளையே கேட்டார்கள். உடனே இரட்சகரும் அவர்களுடைய சந்தேகத்தை யோவான் மூலமாய்த் தீர்க்கிறதற்போல 'நீங்கள் போய்க் கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்' என்று சொன்னார். அவர்கள் அப்படியே கிறிஸ்துவின் அற்புத கிரியைகளை அவர்கள் குருவிடம் சொல்லப்போனார்கள்.

அந்த ஆட்கள் போனபின்பு கிறிஸ்து யோவானைப் புகழ்ந்து பேசியிருக்கிற வார்த்தைகளால் அவர் கிறிஸ்துவைக் குறித்து எவ்வளவேனும் சந்தேகப்பட்டவராயிருக்கவில்லை என்பது விளங்குகிறது (மத். 11:1–11). வரவேண்டிய மேசியா மரியம்மாளிடத்தில் பிறந்த இயேசுவேயன்றி வேறல்லவென்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர் தம்முடைய விசுவாசத்தில் நாணலைப்போல அசையவில்லை. ஸ்நானகனைக் காவலில் அடைத்தது ஏரோதுவுக்கு எப்போதும் கலக்கத்தையும் மன விசனத்தையும் உண்டாக்கிற்று. யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து அவருக்குப் பயந்து அவரைப் பாதுகாத்து அவர் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து விருப்பத்தோடு அவர் சொல்லைக் கேட்டு வந்தான் என்று பரி. மாற்கு சொல்லுகிறார் (மாற். 6:20). இதினாலே கைதிபண்ணப்பட்ட ஸ்நானகன் காவலறையில் தீர்க்கதரிசி உத்தியோகமும் மந்திரி உத்தியோகமும் செய்து வந்திருக்கிறார் என்று விளங்குகிறது. இவ்வளவு கனத்துக்கும் மேன்மைக்கும் அவருடைய பரிசுத்தமும் பக்தியுமே காரணமாயிருந்தது; பக்திமானுக்கு பராக்கிரம அரசன் பாலகன்தான். பக்தியுள்ள வார்த்தைகள் பளபளப்புள்ள பட்டயத்திலும் பராக்கிரமமுள்ளது என்பதை மறக்கலாகாது. ஏரோது எல்லாக் காரியங்களிலும் ஸ்நானகன் யோசனையைக் கேட்டு, அவர் சொன்ன பிரகாரம் விருப்பத்தோடு அவைகளை நிறைவேற்றி வந்தபோதிலும் தன் பாவத்தை விடவே இல்லை. எப்படியும் சமயம் வாய்த்த போதெல்லாம் ஸ்நானகன் தன் வழக்கப்படி அரசனை எச்ச

ரித்து ஏரோதியாளை அனுப்பிவிடும்படி ஏவி வந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை.

இக்காலங்களில் ஏரோதுவின் மனதில் உண்டான நல்லெண்ணங்களையும், அதை அழிக்க வந்த தீய எண்ணங்களையும் இவ்விடத்தில் விளக்கிக் காட்டுவது அவசியமில்லை. ஏரோது ஸ்நானகனிடத்தில் பேசும் சமாசாரமும், அவர் இவனை அடிக்கடி எச்சரிப்பதும் ஏரோதியாளுக்கும் அந்நாட்டு அதிபதிகளுக்கும் தெரியவந்தது. வரவர ஸ்நானகனும் ஏரோதுவும் ஒரு பட்சமும், ஏரோதியாளும் கலிலேயா நாட்டுப் பிரபுக்களும் வேறு பட்சமுமாய் அந்தரங்கத்தில் பிரிந்திருந்தார்கள் என்று சொல்லவேண்டியது. ஏரோது யோவானை விடுதலைசெய்ய நோக்கமாயிருந்தான். ஆனால் எதிர்பட்சத்தாரோ அவருடைய இரத்தத்தைக் குடிக்கவும் அவர் உயிரை வாங்கவும் நோக்கமாயிருந்தார்கள்.

சிரச்சேத பருவம்

ஸ்நானகருடைய பேரைக் கேட்பது ஏரோதியாளுக்கு மனநோவாயும், அவரைப் பார்ப்பது கலிலேய பிரபுக்களுக்கு கண்ணேவாயுமிருந்தது. ஏரோது வீட்டுக்குள் நடந்து கொள்ளும் நடபடிக்கை சற்று விசித்தியாசப்பட்டதினாலோ அல்லது இன்னும் சிலகாலம் சென்றால் வனத்து ரிஷி அவளைத் துரத்தும்படி ஏரோதுவின் மனதைத் திருப்பி விடுவாரென்றோ அவரைக் கொலை செய்யும்படி தீர்மானித்துக் கொண்டாள். இவன் தொலைந்தால் நாம் சுகமாய்த் தூங்கலாமென்பது அவள் சிந்தையின் தீர்மானமாயிருந்தது. கலிலேயா நாட்டுப் பிரபுக்கள் யோவானால் தங்கள் சொற் சக்தி குறைகிறதையும், அரசன் தங்கள் ஆலோசனையின்படியல்ல ஒரு கைதியின் ஆலோசனைப்படி எல்லாவற்றையும் விருப்பத்தோடு செய்து வருகிறதையும் கவனித்து அவர் மேல் காய்மகாரப்பட்டு இதற்கு என்ன வழி செய்யலாமென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். இவ்விரு பட்சத்து சத்துருக்களின் அந்தரங்கமும் சீக்கிரத்துக்குள்ளாக கலந்து பேசப்பட்டு ஏக ஆலோசனையாயிற்று. ஐயோ சத்தியத்தைச் சொல்லும் போதகனும், துன்மார்க்கத்தையும், அநியாயத்தை

யும் வெட்டிப் பேசும் மனுஷனும், எப்பொழுதும் மற்றவர்க ளால் பகைக்கப்படுகிறான். அவனை வருத்தப்படுத்தவும் தாழ்த்தவும், கூடுமானால் கொலை செய்யவும் கூட்டம் கூடு கிறதையும் அந்தரங்க தீர்மானங்களைச் செய்கிறதையும் இன்றைக்கும் காண்கிறோம். வாசிக்கிறவனே நீ நீதியைப் பிரசங்கித்து துன்மார்க்கத்தைக் கண்டித்துப் பேசுகிற எந்த மனுஷனுக்கும் விரோதியாய் இராதே.

இப்படியிருக்கும் காலத்தில் அரசனுடைய ஜநநநாளைக் கொண்டாடும் உற்சவம் வந்தது. ஏரோது அந்த நாளில் ஒரு பெரிய விருந்து வைக்கவும், நடனக் களிப்பிலும் பாட்டி லும் அதைக் கழிக்கவும் யோசித்து அதற்கேற்ற பிரயத் தனங்களைச் செய்தான். கலிலேயா நாட்டுப் பட்டவர்த்தன ரும், பிரபுக்களும், சேனாதிபதிகளும், தானாதிபதிகளும், மற்றப் பெரியோர் யாவரும் அதற்கு வரவழைக்கப்பட்டிருந் தார்கள். வந்த விருந்தாளிகள் அனைவரும் அவரவர் அந்தஸ்துக்கேற்ற வெகுமதிகளை அரசன் பாதத்தில் படைத்து மங்கள வார்த்தைகளைக் கூறினார்கள். விருந்து மண்ட்ப மானது இரத்தின கம்பளங்களாலும். பொற்சரிகை இழைத்த படுதாக்களாலும், பட்டுக் குஞ்சங்கள் தொங்கும் ஜாலர்க ளாலும், இரத்தினங்கள் இழைத்த பொன் வெள்ளிப் பாத்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன, வெட்டிவேர் விசிறிகளில் பன்னீர் தெளித்து பணிவிடைக்காரர் பல திசையிலுமிருந்து வீசினார்கள். சகலவித வாசனைத் தைலங் களும் தண்ணீர்போல் தெளிக்கப்பட்டு அம்மண்டபம் கமகம வென வீசினது. பதினெண்வகைக் கறி சமைத்த பண்ட பலாதிகளும் அறுசுவையுள்ள கறிபதார்த்தங்களும் திராட்ச ரசமும் பரிமாறப்பட்டன. அரசனும் தேவியும் அனைவரும் அகமகிழ்ந்து உண்டு மனங்களித்து முகமலர்ந்தார்கள்.

இராஜ விருந்து முடிந்த பின்பு கூத்தும் நடனமும் நடக்க ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது. இதற்குரிய விசே ஷித்த பிரயத்தனத்தை ஏரோதியாளாகிய கள்ளப் பெண்சாதிதான் முஸ்திப்பு செய்தாள் என்று நினைக்கத் தக்கதாயிருக்கிறது. கூத்தாடி அவளுடைய மகள்தான், எல்லாரும் தங்கள் பெண்மக்களுக்கு நாணம், மரியாதை,

அடக்கம் ஆகிய சாஸ்திரங்களைப் படித்துக் கொடுப்பார்கள்; இவளோ தன் மகளுக்கு நடனமாட நன்றாய்ப் படித்துக் கொடுத்திருந்தாள். வேசிகள் படிக்கும் சாஸ்திரத்திற்கும் குடித்தனப் பெண்கள் படிக்கும் சாஸ்திரத்திற்கும் அதிக வித்தியாசமுண்டல்லவா? இவளுடைய நாடக உடையும், ஆட்டமும், பாட்டும் எவர்களையும் பிரமிக்கச் செய்தன. அவர்கள் தங்கள் காமவிகார வளர்ச்சியாலுண்டாகும் சந்தோஷத்தை விருத்திசெய்யும்படி திராட்சரசமும் தாராளமாய்ப் பரிமாறப்பட்டது. அவளுடைய ஆட்டத்தைக் கண்டு ஆனந்தம் கொண்ட அரசன்: பெண்ணே உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள்; அதை உனக்குத் தருவேன்; நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும் அது என் இராச்சியத்தில் பாதியானாலும் அதை உனக்குத் தருவேன் என்று சொன்னான். உடனே அந்தப் பெண் தன் தாயின் ஆலோசனை என்னவென்று கேட்கப் போனாள். இப்படிப்பட்ட சமயத்துக்குத்தான் ஏரோதியாள் காத்திருந்தாள். அவள் தன் மகள் தெரிந்துகொள்ளவேண்டிய வெகுமதி இன்னதென்று காதில் ஓதி அனுப்பினாள். மகள் திரும்பவும் வந்து 'நீர் இப்பொழுது ஒரு தாலத்தில் யோவான் ஸ்நானகனுடைய தலையை எனக்குத் தரவேண்டும்' என்று கேட்டாள். ஐயோ அவரை போட துவரை முளைக்குமா? காக்கைக்கு கொக்குக்குஞ்சு பொரிக்குமா? ஏரோதியாளுக்கு அவள் ரூபத்தின்படியான பிள்ளை பிறக்குமல்லவா? அரசன் கொடுத்த வாக்கு அன்று வந்திருந்த பிரபுக்கள் அனைவருக்கும் மதியீனம்போல் காணப்படலாம். பெரிய யுத்தங்களை நடத்தினவர்களுக்கு இல்லாத வெகுமதி இந்தக் கூத்தாடின பெண்ணுக்குக் கிடைக்கிறது சரியா என்று உத்தேசித்தார்கள். அந்தப் பெண் கேட்ட வெகுமதியால் அவர்கள் மனம் களித்தது. அரசன் அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே 'மிகுந்த துக்கமடைந்தான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மட்டும் புத்தியீனமாயிருந்து இப்போது துக்கப்பட்டுக் காரியமென்ன? இதினாலே துன்மார்க்கர், பக்தரை எவ்வளவு வல்லமையோடு விழுங்கிவிடுகிறார்கள் என்று பார்க்கிறோம். ஒரு சன்மார்க்கனைப் பட்சிக்க உலகமும் பாதாளமும் ஒன்றாகக் கூடிக்கொள்ளுகிற

துண்டு. இதிலுல் தேவன் அவர்களிலும் பலவீனர் என்று தீர்த்துவிடக்கூடாது. துன்மார்க்கர் நல்லோரை விழுங்குவது அவர்கள் வயிற்றுக்கே வலியாயும் அவர்கள் மனதுக்கே அதிக வேதனையாயுமிருக்கிறதென்கிற ஞானத்தை மறந்து போகலாகாது. விழுங்கப்பட்ட பக்தன் மோட்சத்தின் படிகளில் முந்தி ஏறுகிறான். விழுங்கின பாவிகளோ இம்மை முதல் நரகத்தை அநுபவிக்க ஆரம்பிக்கிறார்கள். ஆகையால் பரலோக சாஸ்திரத்தின்படி துன்மார்க்கரால் சீக்கிரம் விழுங்கப்படும் பக்தன் பாக்கியவான் என்று சொல்ல வேண்டியது. ஏரோது அந்தப் பெண் கேட்ட விஷயத்தை மாற்றும்படிப் பிரயாசப்பட்டிருக்கலாம். ஆனல் அன்று கூடின ஆட்களும் ஏரோதியாளும் அந்தப் பெண்ணும் மாற்றுவார்களா? எத்தனையோ காலமாய்க் காத்திருந்த காரியம் இன்று நிறைவேற வேண்டியதாயிருக்கிறது. ஏரோது பாதி இராச்சியத்தையல்ல முழுவதையும் தத்தம் செய்தபோதிலும் ஏரோதியாள் மாற்றமாட்டாள். தேவ பக்தனுகிய யோவான் ஸ்நானகனுடைய தலை அவளுக்கு ஏரோதுவின் இராச்சியத்தைவிட பெரிய வெகுமதியாயிருந்தது. ஏனெனில் அந்த இராச்சியத்தில் அவளுடைய செய்கையைக் கண்டித்துப் பேசினது இந்த ஒரே தலைதான். கடைசியாக தான் கொடுத்த ஆணையினிமித்தமும் கூடப் பந்தியிருந்தவர்களினிமித்தமும் அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல் உடனே அவருடைய தலையைக் கொண்டு வரும்படி சேவகரை அனுப்பினான். அந்தப்படி அவர்கள் போய் காவல் கூட்டத்திலே அவரைச் சிரச்சேதம் பண்ணி தலையை ஒரு தாலத்திலே கொண்டுவந்து அந்தச் சிறு பெண்ணுக்குக் கொடுத்தான். அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொடுத்தாள். தாய் அதை வாங்கினவுடனே நாவை இழுத்து ஒரு பெரிய ஊசியால் ஆணியடித்தாள் என்று பரி. எரோம் என்பவர் எழுதியிருக்கிறார்.

இவ்வண்ணமாக நீதியைப் பிரசங்கித்த வனத்து ரிஷி வானலோகம் சேர்ந்தார். இப்பொழுது நாம் இந்த மரணத்துக்குக் காரணமாயும் கருவியாயும் இருந்தவர்களைப்பற்றி ஒன்றும் கவனிக்கவேண்டாம். இதோ நமது கண்ணுக்கு

முன் தலையற்ற பிணமாய்க் கிடக்கும் யோவான் ஸ்நானகனைப் பற்றியே பேசுவோமாக. இந்தத் தலைபோன காரணம் என்ன? இப்படி அநாதி பிணமாய் இது கிடப்பானேன்? இராஜபட்டயம் இவருடைய கழுத்தைக் கடந்துபோன தென்ன? சத்தியத்தை நேராகப் பேசினதினாலேதான் இப்படிப்பட்ட சாவு வந்திருக்கிறது. இவர் ஆள் பார்த்து, அந்தஸ்து பார்த்து, முகம் பார்த்துப் பேசினதுண்டானால் இவ்வளவு சங்கடம் வந்திருக்கவே மாட்டாது. இந்தப் பிணமே கலிலேயா நாட்டு மந்திரியாயிருக்கலாம். இந்தப் பிணத்தைப் பார்க்கிற உலகத்தான் தன் உதட்டைக் கடித்து, முகத்தைச் சுளித்து, இந்தப் பெரிய எடுப்பு இவனுக்கென்னத்துக்கு. ஆயிரம் பேரோடு ஆயிரத்தோராம் பேராக சும்மாயிருந்துவிடக் கூடாதா? 'பூனில் வாயால் கெட்டது' என்ற சுலோகம்போல் இவன் தன் வாயால் கெட்டான். இவன் புத்தியற்றவன். இவ்வளவு பக்திமானுக்குப் புத்தியில்லாத காரணம் என்ன? இவன் கெட்டான் போ என்று பழிப்பாகப் பேச வாய்வரும். வாசிக்கிறவனே நீ அவன் புத்தியற்ற வார்த்தைக்கு சரிசரி என்று சொல்லவேண்டாம். நீ இந்தப் பிணத்தைப் பார்த்து தேவனுடைய புத்திரனைப் போல தியானம் பண்ணுவாயாக. நாம் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய இராச்சியத்தில் சேரவேண்டுமென்பதற்கு இது ஒரு அடையாளமாயிருக்கிறது. 'நீங்கள் என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்' என்று இரட்சகர் சொன்ன வாசகம் இங்கே உறுதிப்படுத்தப்படுகிறது. 'என் நாமத்தினிமித்தம் தன் ஜீவனையும் இழந்து போகிறவன் நித்திய ஜீவனையடைவான்' என்ற வாசகம் இப்போது நமது மனதில் வருவதாக. இந்தப் பிணத்தை நோக்கும் யதார்த்த பிரசங்கியே! நீ பயந்து உன் பிரசங்கத்தை மாற்றவேண்டாம். இந்த இரத்தம் உன் தைரியத்தைக் குறைக்கவேண்டாம்; இந்த அகால மரணம் உன்னைத் திடுக்கிடப் பண்ணவேண்டாம். இதோ இந்தப் பிணத்தின் முன் நீயும் நின்று இவ்வண்ணமாகவே என் தலைபோனாலும் நான் சத்தியத்தையும் நீதியையுமே பிரசங்கித்து வருவேனாக என்று தீர்மானம் செய்வாயாக. 'நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராச்சியம்

அவர்களுடையது' என்று உலக இரட்சகர் உரைத்திருக்கிறார்.

இவர் சிரசாக்கினை செய்யப்பட்ட செய்தி உடனே ஊரெங்கும் பிரபல்லியமாயிற்று. அவருடைய சீஷர் அதைக் கேள்விப்பட்டு வந்து அவருடைய உடலை அடக்கம் பண்ணினார்கள். ஏரோதியாள் அந்தத் தலையை அப்புறம் என்ன செய்தாளென்று தெரியாது. ஒருவேளை தைலம் பூசி தன் கோபத்தின் வெற்றி விருதாக வைத்திருக்கலாம். அவள் அதை வெற்றி விருதாகப் பிரயோகித்தாலும் தேவன் அதை அவளைக் குத்தும் ஈட்டியாக இருக்கும்படி சித்தம்கொண்டார் என்று சொல்லலாம். சில காலத்துக்குள்ளாக இந்த ஏரோது பாண்டு வியாதிபிடித்து உப்பி புழுக்களால் தின்னப்பட்டான் - என்றும், ஏரோதியாளின் மகள் பனிக்கட்டியிருந்த ஒரு குளத்தில் விளையாடுகையில் அக்கட்டி வெடித்து கழுத்துமட்டும் வந்து கத்திபோல் அவளை வெட்டிப்போட்டதென்றும், அவருடைய தாயாகிய ஏரோதியாள் அந்தத் துயரக் காட்சியைத் தாங்காமல் அழுது கண் குருடாகி அந்தத் தலையைத் தன் மடியில் வைத்து தடவித் தடவிப் புலம்பினாள் என்று ஆகமங்களில் எழுதப்பட்டிருக்கிறது. எப்படியும் ஏரோதியாளால் சிரசாக்கினையடைந்த ஸ்நானகருடைய ஆவி கர்த்தரிடம் அவளுக்கு முந்திப் போய், தன் நித்திய இளைப்பாறுதலின் பலனைப் பெற்று, தன் போதனையால் உலக இரட்சகரை விசுவாசித்து அந்த லோகத்துக்கு வரும் சகல ஆத்துமாக்களோடும், சந்தோஷத்தை அநுபவிக்கிறது.

அந்திரேயா

நாம் இது முதல் கிறிஸ்துவின் சீஷர் என்றும் அப்போஸ்தலரென்றும் அழைக்கப்பட்ட பக்தாட்களைப்பற்றி வரலாறுகளைத் தொடர்ச்சியாக எழுதப்போகிறோம். இந்த பக்தர்களில் அந்திரேயா அப்போஸ்தலனுடைய பேர் முதலாவது வருகிறது நியாயமாயிருக்கிறது. இவர் இயேசுவை உலக இரட்சகராகிய மேசியா என்று விசுவாசித்தவர்களிலும், அவரைப் பின் சென்றவர்களிலும், அவரோடு தங்கியிருந்தவர்களிலும், அவரிடத்தில் மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தவர்களிலும், முதல்வராயிருக்கிறார் என்று காண்கிறோம். ஒரு ஆக்கியோன் சொல்லுகிறபடி, 'பரி. அந்திரேயா அப்போஸ்தல கும்பின் சிரேஷ்ட புத்திரனும் சபையின் விசேஷித்த ஆதித்தனும், மலைக்கு (பேதுரு) முந்தின மலையாயும், அப்போஸ்தல அஸ்திபாரத்துக்கு அஸ்திபாரமாயும், ஆதிசபையின் முதல் பலனும், தான் அழைக்கப்படுமுன் மற்றவர்களை அழைத்தவராயுமிருந்தார்.'

இவருடைய பேர் மனுஷர் கவனிக்கத்தக்க பிரகாரமாய் வராமல் ஒரு சரித்திரப்போக்கில் திடீரென்று வருகிறது. 'யோவான் சொன்னதைக் கேட்டு அவருக்குப் பின்சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா' என்ற வாசகந்தான் இவரைப்பற்றி நாம் அறிகிற முதலாம் குறிப்பாக இருக்கிறது. இதினாலே நாம் அவருடைய பிறப்பையும் வளர்ப்பையும், அவருடைய முன் சரித்திரங்களையும் குறித்து விபரமாய் ஒன்றும் அறியாதே போனாலும், பக்தி விருத்திக் கேதுவாகவும் இரட்சண்ய ஆவலின் விருத்திக்காகவும் தியானிக்கக்கூடிய சில விசேஷித்த குறிப்புகளைக் காண்கிறோம். மேலும் நாம் இந்த நூலில் ஒரு மனுஷன் சரீர மகத்துவத்தையும், கல்வித் திறமையையும் கண்டறிந்து நமது மனதை மகிழச் செய்கிற

வர்களாயிராமல் அவர்களுடைய இலட்சணங்களை மாத்திரம் தியானித்து அவைகளின் மூலமாய் நம்மைப் பிரயோசனப் படுத்திக்கொள்ளும்படிப் பிரயாசப்படுகிறோமல்லவா?

ஸ்நானக யோவான் கிறிஸ்துவுக்குமுன் வனசஞ்சாரியாக இருந்து உலக இரட்சகரைக்குறித்துப் பிரசங்கம் பண்ணி வந்தாரென்று நாம் பார்த்தோமே; அக்காலத்தில் அந்திரேயா அப்போஸ்தலனுக்கு, அவருடைய போதனையின் நிச்சயம் மனதில் பட்டிருக்கிறது. ஆகவே இவர் ஸ்நானக யோவானுடைய சீஷனானர். அக்கால வழக்கத்தின்படி சீஷனாயிருக்கிறது சின்ன காரியமல்ல. யாருக்கு ஒருவன் சீஷனாகிறானோ அவனுடைய போங்குக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுக்கிறது வழக்கம். இவ்வுலகத்தில் சன்மார்க்கத்தை விருத்தி பண்ணும்படி எழும்பின பல தபோதனர் தங்கள் கோட்பாட்டை ஸ்தாபித்து பிரபல்லியப் படுத்தும்படி தங்கள் மனதுக்கேற்ற சீஷரைத் தெரிந்து அவர்களை சகல விஷயத்திலும் பழக்கிப் போதித்து வந்தார்கள். பரி. அந்திரேயா யோவான் ஸ்நானகனுக்கு சீஷனாய் இருந்தார் என்கிற விஷயமானது அவருடைய மதிப்பை விருத்தி பண்ணுகிறதாயிருக்கிறது. அவர் மெய்யாகவே தமது எஜமானும் குருவும் உண்ணும் வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும் உண்டு அவர் ஏறும் மலைமேடுகளில் தங்கி, அவர் நுழையும் கெபிக்குள் கூடப்போய், அவர் படுத்த வனத்தில் படுத்து தமது காலத்தை கழித்தார் என்று சொல்லவேண்டியது. அந்திரேயாவோடு வேறொரு பக்தனும் சீஷனாயிருந்தார். அவருடைய வரலாறு ஒன்றும் நமக்குத் தெரியாது.

ஒருநாள் ஸ்நானகனும், அவருடைய இரண்டு சீஷரும் ஒரு வனத்தில் தங்கியிருந்த காலத்தில் உலக இரட்சகராகிய இயேசு அவ்வனவழி நடந்துபோனார். ஸ்நானகர் இயேசுவைக்குறித்து விசேஷமாய் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிற வழக்கமுண்டு; தான் இயேசுவின் பாதரட்சையின் வாரை அவிழ்க்க முதலாய்ப் பாத்திரனல்ல என்று சொன்னது முண்டு. இயேசுவைப்பற்றி அந்த சீஷர் தங்கள் குருவின் மூலமாய்க் கேள்விப்பட்ட விசேஷ செய்திகள் அவரைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தை அவர்களுக்

குள் உண்டாக்கிற்று. இப்படிப்பட்ட காலத்தில் ஒருநாள் இயேசு அவ்வழியே கடந்துபோனபோது ஸ்நானகன் தன் சீஷருக்கு அவரைச் சுட்டிக்காட்டி 'இதோ தேவ ஆட்டுக் குட்டி' என்று சொன்னார். தீத்தட்டிக்கல்லோடு இலவம் பஞ்சை அணைத்து வைத்துக்கொண்டு அதைத் தட்டினால் உடனே அக்கினி அப்பஞ்சில் பற்றிக்கொள்வதுபோல இந்த சிறுவாசகம் அவர்கள் நெஞ்சில் இயேசுவில் வைக்கும் நேச அக்கினியைப் பற்றச்செய்தது. ஸ்நானகன் சொன்னதை 'அந்த இரண்டு சீஷரும் கேட்டு இயேசுவுக்குப் பின்சென்றார் கள்.' இதினால் அந்திரேயாவின் மனம் கிறிஸ்துவைப்பின் செல்ல எவ்வளவு ஆயத்தப்படுத்தப்பட்டதாய் இருந்த தென்று காண்கிறோம். தங்கள் ஆயுற்பரியந்தம் கிறிஸ்து வைப் பின் செல்ல ஏவப்பட்டும் அவரைப் பின் செல்லாமல் மரிக்கிறவர்களுமிருக்கிறார்களே? வாசிக்கிறவனே (ளே)! நீ கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்ட செய்திகளுக்கும், தடவை களுக்கும் ஒரு கணக்குண்டா? அப்படியிருந்தும் நீ இன்னும் பின்செல்லாதிருக்கிறாயே, முகாந்தரமென்ன? உன் இருதயம் அவர் முகமாய்த் திரும்பவில்லை; உன்னிடத்தில் விசுவாசிக் கும் தத்துவமும், நேசிக்கும் தத்துவமும், பின் தொடர்ந்து போகும் தத்துவமும் குறைவாயிருக்கிறது. ஒரே வாசகத் தால் இயேசுவைப் பின்செல்லும் அந்திரேயாவின் இருதயத் துக்கும் உன் இருதயத்துக்கும் அவ்வளவு வித்தியாசம் இருக் கிறதென்பது நீயே நிதானித்து அறிந்துகொள்ளவேண்டி யது. 'இதோ தேவ ஆட்டுக்குட்டி' என்று சொன்ன வுடனே அந்திரேயா அவரைப் பின்பற்றினார் என்பது சற்று அதிசமாயிருக்கிறது. ஸ்நானகன் இச்சமயத்தில் 'மேசியா' என்ற பேரை வழங்கியிருந்தால் நாம் அதிசயப்பட நியாய மிராது. 'தேவ ஆட்டுக்குட்டி' என்ற சத்தம் எப்படியோ அந்திரேயாவை இழுத்திருக்கிறதென்பது சற்று அதிசயம் தான். இதினாலே அந்திரேயா 'அவர் ஆட்டைப்போல் அடிக்கப்படக் கொண்டு போகப்படுவார்' என்ற வாசகத்தை நன்றாய் அறிந்திருந்தாரென்றும், இரட்சண்யம் அவர் மூல மாக மாத்திரம் தனக்குண்டென்பதை நன்றாய் விசுவாசித் தாரென்றும் தெரிய வருகிறது. தேவாட்டுக்குட்டியின் பின்னாலே, காணுமற்போன இரண்டு ஆடுகள் கூடிப்போகிற

முதலாம் காட்சி இதுதான்; தேவாட்டுக்குட்டியே! இதோ! நானும் உமது பின்னுலே வருகிறேன்.

இயேசு திரும்பி அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு 'என்ன தேடுகிறீர்கள்' என்று கேட்டார். அதற்கு அவர்கள் போதகரே, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள். இதினுலே இயேசு இவர்கள் பின்தொடர்ந்தபோது சில தூரம் ஒன்றும் பேசாமல் விசையாய் நடந்துபோனர் என்று தெளிவாய்த் தெரியவருகிறது. அவர்களுடைய பற்றுசையையும் உண்மையையும் சோதிக்கும்படி அப்படிச் செய்திருப்பார். அவர்கள் விடாமுயற்சியாய்த் தொடர்ந்துவரும் உத்தமத்தைக் கவனித்து திரும்பிப் பார்த்து பேசுகிறர். இதில் இரட்சண்ய ஞானத்தின் ஒரு பொறி விளங்குகிறது. நமது நேசத்தை தேவன் பரிசோதிக்கும்படி நமக்குமுன் விளங்கி நம்முடைய காரியத்தைப்பற்றிக் கவலைப்படாதவர் போல சிலகாலம் மனதுக்கு விளங்கலாம். ஆனல் நாம் விடாமுயற்சியாய் அவர் பிறகாலே ஓடுகிறதுண்டானல் நம்மை மறவாமல் திரும்பிப் பார்த்து இரட்சணிய சம்பாஷணையால் நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளுவார்; இச்சமயத்தில் அவர்களோடு பேசின முதலாம் வாசகத்தில் ஒரு மயக்கமிருக்கிறது! அவர்கள் பின்செல்லுகிறதைக் கண்டு 'என்ன தேடுகிறீர்கள்' என்கிறது அச்சமயத்துக்கேற்றதாகத் தோன்றுகிறதில்லை; நீங்கள் யார், ஏன் வருகிறீர்கள், எங்கே போகிறீர்கள் என்றிப்படிக் கேட்டிருந்தால் அது காலத்துக்கும் காரியத்துக்குமேற்ற கேள்வியாயிருக்கும். ஆனல் 'என்ன தேடுகிறீர்கள்' என்று கேட்டதினுலே கிறிஸ்துவைப் பின்சென்ற சமயத்தில் அவர்கள் சில தரம் வழி தெரியாமல் திகைத்து அவருடைய காலடி எங்கே என்று தரையில் குனிந்து பார்த்திருக்கலாம் என்றும், ஒருவேளை கிறிஸ்து சில வேளாவேளை அவர்களுக்குக் காணப்படாமல் மறைந்து போனதால் அவருடைய காலடிகள் காணப்படாமல் போய், தேடினர்களென்றும் அல்லது அன்று அவர்கள் போன பாதை குருடர் தடவுவதுபோல தடவி நடந்து போகத்தக்க காடும் புதருமுள்ள மலைப்பாதையாய் இருந்ததென்றும், அச்சமயத்தில் வழி தெரியாமல் மயங்கத்தக்கதாக

மேகமந்தாரமும் முகிலும் அவர்களை மூடியிருக்கலாம் என்றும் எண்ணவேண்டியதாயிருக்கிறது. இவைகளொன்றையும் வீணான மனோராஜ்யம் என்று இகழாமல் இக்கருத்துகள் சீஷரின் ஆத்தும ஆவலையும், இரட்சகரின் நேசத்தையும் விளக்கும் குறிப்புகள் என்று எண்ணிக்கொள்ளவேண்டியது.

'என்ன தேடுகிறீர்கள்?' என்ற கேள்விக்கு அவர்கள் சொன்ன உத்தரவு அதிசயமாயிருக்கிறது. 'போதகரே நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?' என்று கேட்டார்கள். கேள்விக்கு உத்தரவு மறுகேள்வியாயிருக்கிறது. 'நீர் எங்கே தங்கியிருக்கிறீர்' என்ற வாசகம் நாம் முன் சொன்ன கருத்தை உறுதிப்படுத்துகிற தென்கலாம். இயேசு ஒருமலை மேலோ, கெபிக்குள்ளேயோ, வனத்திலோ இருக்கையில் அவர் சத்தத்தை மாத்திரம் கேட்டு சுவாமி உமது சத்தம் மாத்திரம் கேட்கிறது, நீர் எங்கே போய் தங்கியிருக்கிறீர், நீர் இருக்குமிடம் தெரியாமல் மயங்குகிறோமே என்று சொல்லுகிற பாவனையாய் உத்தரவு சொல்லுகிறார்கள். ஒரு வகையில் இயேசுவின் கேள்விக்கு நேர் உத்தரவாயும் இது இருக்கிறது, நாங்கள் தெடுகிற பொருள் நீர்தான். உம்மைக் காணுமல் ஒரு புதையலைத் தேடுவதுபோல தேடுகிறோமேயன்றி வேறல்ல என்று சொல்லுகிறதாகவும் இருக்கிறது. அப்போது இயேசு நானிருக்கிற இடத்தையா கேட்கிறீர்கள்? 'வந்து பாருங்கள்' என்று மாத்திரம் சொன்னார். இரட்சிப்பின் கிருபை தேவனுடைய இலவசமான ஈவாயிருக்கிறதென்பது மெய்யானாலும் மனுஷர் ஆவலோடும் வாஞ்சையோடும் அதைத் தேடிப்போகவேண்டியது. அப்படியே அவர்கள் வந்து அன்றையத்தினம் அவரோடு தங்கினார்கள். அந்திரேயா இதற்கு முன் யோவான் ஸ்நானகனோடு தங்கியிருந்தார். இயேசுவோடு தங்கியிருக்கிற பாக்கியம் இன்று அவருக்குக் கிடைத்தது. இயேசுவோடு தங்கியிருப்பதினாலுண்டாகும் வாழ்வு ஆவியின் பிரகாரமாய் அவரோடு தங்கியிருப்பவர்களுக்கு நன்றாக விளங்கும்.

அதுமுதல் அந்திரேயா யோவான் ஸ்நானகனை விட்டு இயேசுவோடு தங்கியிருந்தார். அவர் இயேசுவோடு அறிமுக

மான காலமுதல் ஞான உபதேசங்களைக் கற்றுக்கொண்டு வந்தார். அவ்வுபதேசங்களில் ஒன்று தாமே மோசேயாலும் தீர்க்கதரிசிகளாலும் முன்னறிவிக்கப்பட்ட மேசியா என் பதுதான். அந்திரேயா வேதாகம அறிவில் பூரணப்பட் டிருந்தார். ஆதலால் இயேசுவின் வாக்கில் விளங்கும் விஷயங்களை அவைகளோடு ஒத்துப்பார்த்து இவரே உலகத் தில் வருகிறவரான மேசியா என்று நன்றாக அறிந்து தன் ஊருக்கோடி தன் சொந்த சகோதரனாகிய சீமோன் பேதுரு வைக் கண்டு 'மேசியாவைக் கண்டோம்' என்று சொல்லி அவரைப் பார்க்கும்படி தன் சகோதரனை அழைத்து வந்தார். இந்தச் செய்கையால் அந்திரேயா யூதமார்க்க மலையிலிருந்து கிறிஸ்து சபை பருவதத்தைக் கட்டும்படி முதல் அஸ்தி பாரக்கல்லை உருட்டி வந்து இயேசுவென்னும் வான சிற்பா சாரியின் பாதத்தின் முன் வைத்தார் என்று சொல்லலாம். இதினாலே நாம் அறிந்துகொள்ளுகிற இரண்டொரு போதனை களுண்டு. கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிப்பது இலேசல்ல. அவரைப்பற்றிப் பூரணமாய் அறிய விரும்புகிற புறமதஸ்தர் தங்கள் தங்கள் மார்க்கத்தில் இருந்துகொண்டு பார்ப்பதில் பிரயோசனமில்லை. அவர்கள் கிறிஸ்துவைத் தேடி அவருடைய சபையில் வந்து சேர்ந்து, அவருடைய வேதத்தை தாழ்ந்த சிந்தையோடு ஆராய்ந்து கண்டுபிடித்து தங்கள் விசுவாசத்தில் விருத்தியடையவேண்டும். அந்தி ரேயாவிடத்தில் இன்னொரு சிறந்த இலட்சணத்தையும் காண்கிறோம்; மேசியாவைத் தான் கண்டதுபோல தன் சகோதரனும் காணும்படி அழைத்துக்கொண்டு வந்தார். இது இயேசுவின் தாசன் ஒவ்வொருவனையும் பார்த்து நீ உன் சகோதரனை இயேசுவண்டை அழைத்துக்கொண்டுவா என்று உத்தரவு கொடுக்கிறது போலிருக்கிறது. மேசியாவின் வருகையைப்பற்றி அக்காலத்தில் இருந்த நிச்சயமும் அவரைக் காணும்படி பக்தர்கள் ஒவ்வொருவரும் தேடி விசாரித்ததும் இதினாலே வெளியாகிறதென்றும் சொல்ல லாம்.

இந்த நடபடிக்குப் பின்பு அந்திரேயாவும் அவர் சகோதர னும் தங்களுடைய சொந்தத் தொழிலை சிலகாலம் பார்த்து

வந்தார்கள். ஒரு நாள் கலிலேயாக் கடலோரத்தில் நின்று வலை வீசி மீன் பிடிக்கிற சமயத்தில் இயேசு கண்டு 'என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்' என்று சொன்னார். உடனே அவர் தமது வலையைக் கரையில் எறிந்து விட்டு இயேசுவுக்குப் பின்சென்றார். இதிலுலே இவரும் முதலாந்தரம் இயேசுவைக் கண்டு பழகின பின்பு இவருடைய சகோதரனும் தங்கள் இஷ்டப்படி இயேசுவை விட்டுப் பிரியாமல், அவருடைய சொல்லின் படி சிலகாலம் அவரை விட்டுப் பிரிந்தார்கள் என்று நினைக்க வேண்டிதாயிருக்கிறது. அவர் சில நாள் பொறுத்து வந்து, வாருங்கள் என்று கூப்பிட்டவுடனே அவர்கள் பின்சென்றார்கள். அதுவுமன்றி 'உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்' என்ற வார்த்தையானது அந்தப் புது சாஸ்திரத்தின்மேல் ஆவல்கொண்டு அவர்களை இழுக்கும் முறை போலுமிருந்தது. குருவிகளைக் கண்ணிகளாலும், மீன்களை வலையினாலும் பிடிப்பார்கள், மனுஷரையோ அன்பின் கயிறுகளால் பிடிக்கவேண்டியது; அன்பின் கயிற்றால் மானிடர் அனைவரையும் பிடித்து வானத்துக்குக் கொண்டுபோக வேண்டுமென்று தேவன் அவதாரமெடுத்தார். அத்திரு அவதாரமாகிய திருமேனி மூலமாய் வெளிப்பட்ட அன்பைப் பிரஸ்தாபிப்பதே இக்காலத்திலும் இனி வருங்காலத்திலும் மனுஷரைப் பிடிக்கும் கருவியாகப் பிரயோகிக்கப்படவேண்டியது. இதுதான் சுவிசேஷம். ஆனால் இக்காலத்திலுள்ள பலர் தேவ அன்பு மூலமாய் மனுஷரைப் பிடியாமல், கல்வி, கைத்தொழில், நாகரிகம் ஆகிய இவைகளைப் பிரயோகித்து மனுஷரை இரட்சண்யத்துக்குப் பிடிக்கப் பார்க்கிறார்கள். இந்த முறை அதிகமாய்ப் பலியாதது மாத்திரமல்ல, இதின் மூலமாய்ப் பிடிக்கப்படுகிற மானிடர் பெரும்பாலும் பரலோக இராச்சியத்துக்குரிய பூரண மனமாறுதலுடையவர்களாய் இருக்கவும் மாட்டார்கள். வாசிக்கிறவனே, நீ கல்வி, நாகரிகம் முதலிய லோக வலைகளை வீசி கிறிஸ்துவுக்கு மனுஷரைப் பிடியாமல் இயேசுவின் தனிச்சரித்திரமாகிய சுவிசேஷம் என்னும் வான வலையை வீசி ஆத்துமாக்களைப் பிடிப்பாயாக.

இயேசு பன்னிரண்டு சீஷரையும் தெரிந்துகொண்ட பின்பு அவர்களை இரண்டிரண்டுபேராக பல கிராமங்களுக்கு அனுப்பினகாலத்தில் அந்திரேயாவோடுகூடபோனது இன்னு மென்று தெரியவில்லை. ஒருவேளை அவர் தன் ஊராகிய பிலிப்புவுடன்கூட போயிருக்கலாம். அவர் அக்காலத்தில் பிரசங்கித்த சுவிசேஷத்தின் மொத்தமெல்லாம் 'மேசியா வைக் கண்டோம், யோசேப்பின் குமாரனும் நாசரேத் தூரானுமாகிய இயேசுவே அவர்' என்ற வாசகத்துக்குள் அடங்கியிருந்ததென்று சொல்லலாம். அதை ருசுபடுத்த இயேசு செய்த அற்புதங்கள் பலவற்றை அவர் எடுத்து திருஷ்டாந்தப் படுத்தியிருக்கலாம்.

இந்தச் சங்கதிகள் நடந்த சில காலத்துக்குப் பின்பு ஒருதரம் இயேசு கலிலேயா கடலுக்குப் போய்ப் போதகம் பண்ணினார். இதற்குமுன் அவர் பல அற்புதங்கள் செய் திருந்தபடியால் அதைத் கேள்விப்பட்ட பல ஜனங்கள் அங்கே கூடி, அவருடைய உபதேசத்தைக்கேட்டார்கள். அவருடைய உபதேசம் அவ்வளவு இனிமையும் ஆத்துமாவுக்கு எழுப்பு தலாயுமிருந்ததால் ஜனங்கள் தங்கள் பசியையும் கவனியாமல் காத்திருந்து கேட்டார்கள். இயேசு சுவாமி அவர்களுடைய பசியை அறிந்து, அவர்களெல்லாருக்கும் ஒரு விருந்து கொடுக்க ஆசைப்பட்டு, இவ்வளவு பேருக்கும் நாம் எங்கே போசனம் வாங்கலாம் என்று கேட்டார். அக்கூட்டத்தி லிருந்த ஸ்திரிகளும் பிள்ளைகளும் தவிர புருஷர் மாத்திரம் ஐயாயிரம் பேராயிருந்தார்கள். அச்சமயத்திலே அந்திரேயா அப்போஸ்தலன் இயேசுவண்டை போய், ஆண்டவரே! இது வனமாயிருக்கிறது, இங்கே அப்பம் வாங்கக் கடையுமில்லை, அப்பம் விற்க வியாபாரியுமில்லை, ஆனால் இந்தத் திரண்ட கும்புக்குள்ளே ஒரு பையனிருக்கிறான், அவன் கையில் ஐந்து கோதுமை ரொட்டியும் இரண்டு மீன்களுமிருக்கிறது, இத்தனை ஜனத்துக்கும் இது எம்மாத்திரம் என்று சொன் னார். அந்திரேயா இதைப் பரியாசத்துக்கு சொல்லவே இல்லை. அல்லது இவர்களுக்கு சாப்பாடு கொடுக்கவேண்டு மென்றே யோசனையை நிறுத்தவேண்டும் என்ற கருத்தாக சொல்லவுமில்லை. இதற்குமுன் இயேசு தண்ணீரைத்

திராட்ச இரசமாக்கினதையும், தன் சகோதரனுடைய மாமியை ஜுரத்தினின்று குணமாக்கினதையும் வேறு சில புதுமைகளையும் அவர் கண்டிருந்ததால், நீர் அற்புதம் செய்து இவர்களைப் போஷித்தாலன்றி வேறு முறை இல்லையென்று சொல்லும் கருத்தாக மாத்திரமிருந்தது. இக்கருத்துக்கும் இயேசுவின் கருத்துக்கும் இசைவாயிருந்தது. உடனே அவர் அவ்வைந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வாங்கி ஆசீர்வதித்து சகல ஜனத்தையும் போஷித்து அனுப்பினார். இதினுலே நாம் அந்திரேயாவின் குணத்தின் ஒரு பாகத்தைக் காண்கிறோம். அதாவது: அவர் பாலிய ரோடு பழக்கமாயிருந்தார். அச்சிறு பையன் அவர்பேரி லிருந்த பாசத்தால் தன்னிடத்திலிருந்த ஐந்து அப்பத்தை யும் கொடுத்துவிட்டது ஆச்சரியமாயிருக்கிறது. இந்தப் பையனோடு அந்திரேயா அவ்வளவுக்குப் பழகிப்போன அதிசயம் தெரியுதில்லை. இந்தச் சிறுவன் கிறிஸ்துவின் போதனையை இரண்டு மூன்று நாளிருந்து கேட்கவும், அவ ருடைய அற்புதத்தைப் பார்க்கவுமாக போதுமான உண வோடு வந்திருந்தான்போலிருக்கிறது. அவன் தன் நோக் கத்தை அந்திரேயாவுக்குச் சொல்லி தன் ஆவலைத் திருப்தி யாக்கிக்கொள்ள இவரைச் சிநேகம் பிடித்துக்கொண்டான். கடைசியாக இந்தப் பையனுக்கு அந்திரேயாவால் கனம் கிடைத்தது. இந்தப் பையன் அநேகமாயிரம் பேருக்குத் தகப்பனைப்போலிருந்தான். ஏனெனில் அவன் தனக்கென்று கொண்டுவந்த அப்பத்தை ஆண்டவர் விருத்திபண்ணினார்.

இதற்கப்புறம் சிலகாலமாய் நாம் அந்திரேயாவைப்பற்றி யாதொரு குறிப்பும் அறிகிறதில்லை. எப்படியும் இயேசு பாடுபட்ட வாரத்தில் அவருடைய பேரைக் காட்டும் இரண்டு குறிப்புகளைக் காண்கிறோம். எருசலேமில் பண்டிகை கொண்டாட வந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள். அவர்கள் முதலாவது பிலிப்புவினிடத்தில் வந்து 'ஐயா இயேசுவைக் காண விரும்புகிறோம்' என்று கேட்டார்கள். இயேசுவின் அற்புதங்களையும் உபதேசங்களையும் பற்றி இவர்கள் தங்களுடைய தேசத்தில் அதிகமாய்க் கேள்விப் பட்டதால் அவரை முகமுகமாய்த் தரிசித்து, அவரிடத்தில்

ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள விரும்பினர்களாக்கும். இயேசுவைக் காண ஆசையாயிருக்கிறது நல்லதுதான் அப்படி ஆசைப்பட்டவர்களில், பெரிய ஏரோது அவரைக் கொலைசெய்ய மனதில் யோசித்து காண ஆசைப்பட்டான். அவனுடைய குமாரனுகிய கலிலேயா நாட்டதிபதி அவரை அற்புதங்கள் செய்யும்படிச் சொல்லி வேடிக்கை பார்க்கும் நோக்கமாய் காண ஆசைப்பட்டான். ஆனால் வேறு அநேகர் அவருடைய தெய்வீகத்தையும், இரட்சண்ய மகத்துவத்தை யும், அன்பின் அருள் பிரகாசத்தையும் பார்க்க ஆவலாய் அவரைக்காண ஆசைப்பட்டார்கள். கீழ்த்திசை சாஸ்திரி கள் தொட்டிலில் தூங்கும் தேவபாலனைப் பார்க்க வந்தார் கள். இந்த கிரேக்கர் சிலுவையில் தொங்கப் போகும் அந்த தேவ பாலனைக் காண வந்தார்கள். மனந்திரும்புகிற் இரு தயங்களுக்கு இன்றைக்கும் இயேசுவைக் காண ஆசைதான். இந்த கிரேக்கர் நல் நோக்கத்தோடுதான் இயேசுவைக் காண வந்தார்கள். இது அந்த அப்போஸ்தலனுக்கு மட்டற்ற மனமகிழ்ச்சியைக் கொடுத்ததால் தன் தோழனுகிய அந்தி ரேயாவினிடத்தில் போய் கிரேக்கரின் ஆவலை அறிவித்தான். அந்திரேயா அவர்களை இயேசுவோடு அறிமுகப்படுத்தினர். இதினுலே அந்திரேயா எந்த ஆட்களை கிறிஸ்துவுடன் அறி முகப்படுத்தும் குணமும் வழக்கமுமாயிருந்தாரென்று விளங்குகிறது. இந்தச் சமயத்தில் கிறிஸ்து இரட்சகர் அந்திரேயாவோடும் கிரேக்கரோடும் என்ன காரியத்தைக் குறித்துப் பேசினர் என்று தெளிவாய்த் தெரியுவில்லை என்றாலும், 'மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது' என்றும், 'இப்பொழுது என் ஆத்துமா கலங்கு கிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே இந்த வேளை யினின்று என்னை இரட்சியுமென்று சொல்வேனே? ஆகிலும் இதற்காக இந்த வேளைக்குள் வந்தேன்' என்றும் சொல்லிய வாசகமாகிய சம்பாஷணையானது கிறிஸ்துவின் பாடுகளின் சம்பந்தமாயிருந்த தென்பதை உணர்த்துகிறது (யோவா. 6:20-28).

மேலும் அன்று சாயந்திரம் இயேசு எருசலேமை விட்டுப் புறப்பட்டு வரும்போது அந்த நகரத்தின் அழிவை

யும் தேவாலயம் எடுபட்டுப் போகிறதையும் குறித்து கிறிஸ்து சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சற்று விளக்கும்படி அந்திரேயாவும் வேறு சில அப்போஸ்தலரும் இயேசுவைக் கேட்டதாக நாம் அறிகிறோம் (மாற். 13:3).

இவைகளையன்றி வேறொன்றும் நமக்கு இந்த அப்போஸ் தலனைக் குறித்து வேதத்தில் அறிவிக்கப்படவில்லை. பாரம் பரையின் மூலமாய் அவர் சின்னாசியா, இஸ்கித்தியா முதலிய இடங்களில் பிரசங்கித்து அநேகரைக் கிறிஸ்துவின் சீஷராக்கி அப்பால் கிரேக்க தேசத்திற்குப் போய் அங்குள்ள பாற்றி ரூஸ் நகரத்தில் பலரை இரட்சண்ய வழிக்குத் திரும்பினா ரென்றும் தெரிவிக்கப்படுகிறது. அவர் அந்த நகரத்திலுள்ள பல பிரபுக்களை விசுவாசத்திற்குத் திருப்பினதோடு, அதி பதியாயிருந்த ஈஜியஸ் என்பவனுடைய மனைவியாகிய மக்சி மில்லாளையும் குணப்படுத்தி அவள் தன் விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடவேண்டுமென்று சொன் னதை அதிபதி கேட்டு உக்கிரமாகி அப்போஸ்தலனைப் பிடித்து வாரினாலடித்து சிலுவையில் அறையும்படி கட்டளை யிட்டானென்றும், கொலைக்களத்துக்குப் போனவுடன் தன்னை அறையும் சிலுவைக்குமுன் முழங்காலான்றி 'வாழ்க சிலுவையே வாழ்க, நீ என் தேவனுகிய இயேசு கிறிஸ்து வின் சரீரத்தினாலே எனக்குப் பிரதிஷ்டையாக்கப்பட்டிருக் கிறாய்' என்று ஜெபித்தார் என்றும், அவர் சிலுவை யிலிருந்து இரண்டு நாள் பிரசங்கித்தார் என்றும், கடைசி யாக இரண்டு தூதர் வானத்திலிருந்து வந்து அவருடைய சிலுவைக்குமேல் கிரீடமும் குருத்தோலையும் பிடித்து நின்றார்களென்றும், அவர் தமது பாடுகளைச் சந்தோஷமாய்ச் சகித்து மாண்டார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

மொத்தமாக நாம் அந்திரேயா அப்போஸ்தனைக் குறித்து அறிகிற குறிப்பு கிறிஸ்துவண்டை மற்றவர்களை அழைத் துக்கொண்டு வருகிறதும், அறிமுகப்படுத்துகிறதும்தான். அவருடைய பேர் வரும் வரலாறுகளெல்லாம் அப்படியே இருக்கிறது. இது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்க வேண்டிய குணமாயிருக்கிறது. இவரைப்போல நாம் ஒவ்

வொருவரும் அவரவர் தன்தன் சகோதரனையும், அறிமுக முானவர்களையும், சிறு பையனையும், அந்நியரையும் கிறிஸ்து வண்டை இழுத்து வருவோமாக. அப்பொழுது நாமும் உயிர்த்தெழுதலின் காலத்தில் அநேகரை நீதிக்குள்ளாக்கின வர்களின் பலனுக்குப் பங்காளிகளாவோம்.

நாத்தான்வேல்

பர்த்தலோமேயு

இவ்விடத்தில் நாம் ஒரே ஆளுக்கு இரண்டு பேரைக் காட்டிருப்பதால் முதலாவது இந்த சம்பந்தத்தைத் தெளிவித்துக் காட்டுவது நியாயமாயிருக்கும். இவ்விரண்டு நாமங்களும் வெவ்வேறு ஆட்களைக் குறியாமல் ஒரே ஆளுக்கு வழங்கப்பட்ட இரட்டைப் பேர்களென்பதே சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்படுகிற அபிப்பிராயமாயிருக்கிறது. இந்த அபிப்பிராயம் அசாத்தியமானதாயிராமல் சத்தியமானதென்பதைப் பின்வரும் நியாயங்களினாலே அறியலாம். 1ஆவது, முதல் மூன்று சுவிசேஷகரும் எழுதிவைத்திருக்கிற அப்போஸ்தல அட்டவணையில் பர்த்தலோமேயு என்று காட்டப்பட்டாலும், நாத்தான்வேலைக் குறித்து பரிசுத்த யோவான் எழுதியிருக்கிற சங்கதியின் சம்பந்தத்தில் அந்தப் பேரைக் காட்டியிருப்பதால் இரண்டு நாமங்களும் ஒரே ஆளையே குறிக்கிறதென்று தோன்றுகிறது. 2ஆவது, நாத்தான்வேல் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவனாயிராவிட்டால், யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாகத் தெரிந்துகொண்டு சீட்டுப் போட்ட ஆட்களில் இருவரும் ஒருவராயிருக்கவேண்டியது. அப்படி இவரும் ஒருவராயிராதபடியால் அவர் அதற்கு முன்னமே அப்போஸ்தலர் கூட்டத்தில் சேர்ந்திருந்தாரென்பது ருசுவாகிறது; 3ஆவது, எனெனில் இயேசுவால் ஆதியில் அழைக்கப்பட்டு, புகழ்ச்சியாகப் பேசப்பட்டு, அவர்கள் ஐக்கியத்தில் பங்குபெற்ற இவரை மறந்து மற்றவர்களைத் தெரிந்தெடுத்து சீட்டுப்போடுவது அசாத்தியம். 4ஆவது, பர்த்தலோமேயு என்பது ஊர்ப்பொதுப் பேரேயன்றி ஆளின் இடுகுறிப்பேரல்ல; பர்த்தலோமேயு என்பது தலோமேயுவின் குமாரன் என்பதுதான் அர்த்தம்.

ஒருவனை அவனுடைய சுயபேரால் அழைக்காமல் தகப்பன் பேரைச் சொல்லி அழைக்கிற வழக்கம்போல இது இருக்கிற தேயன்றி வேறல்ல. இப்படிப் பிதாவின் பேரால் பிள்ளைகளை இனம் சொல்லி அழைக்கிற வழக்கம் யூதருக்குள் வழங்கப்பட்டு வந்தது. அப்படியே சீமோன் பேதுரு யோனுவின் குமாரன் (Barjona) என்றும், யோசே பர்னபா (Barnabas) என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பரபாசு (Barabas), பர்த்திமேயு (Barthimas), பர்யேசு (Barjesus) என்ற பேர்கள் அந்த முறையாகவே வழங்கப்பட்டு வந்தது. ஆதலால் பர்த்தலோமேயு என்று தகப்பன் வழியாய் அழைக்கப்பட்டவருக்கு நாத்தான்வேல் என்பதுதான் சொந்தப் பேராயிருந்தது என்று தோன்றுகிறது.

இவர் கலிலேயா நாட்டிலுள்ள காணு ஊரான் என்று பரி. யோவான் சொல்லியிருக்கிறார் (யோவா. 21:2). இது தவிர இவருடைய பூர்வோத்தரத்தைப்பற்றி நாமொன்றும் அறியோம். இவருடைய தகப்பனுருக்கு தலோமி என்று பேர் வழங்கப்பட்டதென்றும், அவர் அந்த ஊரில் பேரெடுப்பாய்க் காலம் கழித்துவந்து எவராலும் பெருமையாய் எண்ணப்பட்டு வந்தாரென்றும் நாம் சொல்லலாம். நாத்தான்வேல் என்ற பேருக்கு 'தேவ ஈவு' என்பது பொருள். இதினாலே இவர் தமது பெற்றோரின் ஏக புத்திரனாயிருந்தாரென்றும், இவருடைய பிதாவும் மாதாவும் நெடுங்காலம் புத்திரசந்தானமில்லாதிருந்து, கடைசியாக இவரைப் பெற்று, கடவுளை ஸ்துதிக்கும் வண்ணமாய் 'தேவ ஈவு' என்னும் அர்த்தமுள்ள நாத்தான்வேல் என்ற பேரை இவருக்கு இட்டார்கள் என்றும் சொன்னாலும் சொல்லலாம். எப்படியும் இவர் பிறந்ததற்கு சற்று முன்னே இவருடைய கர்ப்பக்காலத்திலோ அல்லது பிறக்கும்போதோ அவர்கள் வீட்டுக்கு ஒரு பெரிய தேவ தயவு கிடைத்திருந்ததால் இந்தப்பேரால் தங்கள் பிள்ளையை விருத்தசேதனம் செய்தார்களென்பது நிசம் என்று சொல்லலாம். சிலர் பிலிப்பு அப்போஸ்தலனுடைய பேர் இவரோடும் சம்பந்தப்பட்டு வருவதால் இருவரும் சகோதரராயிருந்தார்களென்று அபிப்பிராயப்படுகிறதுண்டு. ஆனால் பிலிப்பு பெத்சாயிதா பட்டணத்தானென்

றும், இவர் கலிலேயா நாட்டு கானா ஊரானென்றும் தெளிவாக சொல்லப்பட்டபடியால் அந்த அபிப்பிராயத்தை நாம் தள்ளிவிடவேண்டியது.

இனி நாம் நாத்தான்வேல் அழைக்கப்பட்ட வரலாறைப் பற்றி பரி. யோவான் மாத்திரம் அறிவிக்கும் வாசகத்தைக் கவனித்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. பர்த்தலோமேயு என்னும் இந்த அப்போஸ்தலனைக் குறிப்பிக்கிற மூன்று சுவிசேஷகரும் தங்கள் அட்டவணையில் இவர் பேரைக் காட்டுகிறார்களேயன்றி, வேறொன்றும் சொல்லவில்லை; இவருடைய சரியான பேரைச் சொல்லும் பரி. யோவானே இவரைப்பற்றிய இரண்டு வரலாறுகளை மாத்திரம் தம்முடைய சுவிசேஷத்தில் காட்டியிருக்கிறார். இதில் முதலாவது இயேசுவால் அழைக்கப்பட்ட வரலாறைச் சொல்லுவோம்.

இயேசு அந்திரேயா, பேதுரு முதலியவர்களை அழைத்துத் தமக்கு சீஷராக்கின மறுநாளில் கடலோரத்தை விட்டு சற்று உள்நாட்டிலுள்ள ஊர்களுக்குப் போகச் சித்தங்கொண்டு நடந்துபோகையில் பிலிப்புவைக் கண்டு 'எனக்குப் பின்சென்று வா' என்று கூப்பிட்டார். பிலிப்பு உடனே இயேசுவைப் பின்சென்று நடந்தார் என்று தெளிவாய் விளங்கவில்லை, தன்னை அழைத்தபோது, தன் தகப்பனை அடக்கம் பண்ணிவிட்டு வருகிறேன் என்று மறுமொழி கொடுத்ததாக பரி. மத்தேயு சொல்லும் ஆள் பிலிப்புதான் என்று சிலர் சொல்லுகிற துண்டு. அதை நாம் அங்கிகரிக்கலாகாது. எப்படியும் பிலிப்புதான் நாத்தான்வேலை இயேசுவினிடத்தில் இழுத்துக்கொண்டு வந்தார். இதினாலே இவ்விருவருக்கும் நெருங்கிய சிநேகிதமிருந்ததென்று தெரியவருகிறது. ஒரு வேளை இயேசு பிலிப்புவை அழைக்கும் போதே அவன் தன் ஊரைவிட்டு நாத்தான்வேலுடைய வீட்டுக்குப் போகும் பயணத்திலிருந்தாலுமிருக்கலாமே.

பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு 'நியாயப் பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதினவரைக் கண்டோம். அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானு

மாகிய இயேசுவே' என்று சொன்னான். இதிலே பிலிப்பு இயேசுவின் குடும்பவரலாறை நன்றாய் விசாரித்தறிந்து கொண்டான் என்பது தெளிவாயிருக்கிறது. பிலிப்பு சொன்ன செய்தி நாத்தான்வேலுக்குச் சந்தோஷத்தையும் சற்று சந்தேகத்தையும் கொடுத்தது. 'மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதினவரைக் கண்டோம்' என்ற வார்த்தை அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது என்பது மெய். அம்மட்டோடே பிலிப்பு நிறுத்தியிருந்தால் எல்லாம் சந்தோஷமாய்த் தானிருக்கும்; ஆனால் அதன் பிறகு சொன்னது அவருக்கு சந்தேகத்தைக் கொடுத்தது. யோசேப்பின் குமாரன், நாசரேத்தூரான் என்ற இரண்டு குறிப்பும் அந்தச் சந்தேகத்துக்கு ஏதுவாயிருந்தது. உடனே நாத்தான்வேல் மனந்தளராமல் 'நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையுண்டாகக் கூடுமா?' என்று அதிர்ச்சி கொண்டவர்போல் பேசினார். அவருடைய ஊருக்கும் நாசரேத்தூருக்கும் பத்துமைல் தூரம் மாத்திரமிருந்ததால் அதின் வண்டோலமெல்லாம் நாத்தான்வேலுக்குத் தெரிந்திருந்தது. மேலும் அந்த ஊரைப்பற்றி அத்திசை எல்லாம் தாழ்வான எண்ணமே இருந்தது. பிலிப்பு மேசியா பிறக்கும் இடமாகத் தீர்க்கதரிசனத்தில் குறித்திருந்த பெத்லகேமின் பேரைச் சொல்லியிருந்தால் ஒரு சந்தேகத்துக்கும் இடமிராது. நாசரேத் என்ற பேர் பழைய ஏற்பாட்டாகமத்தில் வருகிறதே இல்லை, ஆதலால் அந்த ஊரின் பேரைக் கேட்டவுடனே ஆச்சரியத்தோடு இப்படிப் பேசினாரேயன்றி அவநம்பிக்கையினாலே பேசினதாக நாம் நினைக்கலாகாது. நாத்தான்வேலுடைய ஆட்சேபனைக்கு பிலிப்பு உத்தரவாக,

'வந்து பார்'

என்று சொன்னார். கிறிஸ்துவுக்கு அவருடைய மார்க்கத்துக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் எல்லாவிதமான பலத்த நியாயங்களுக்கும் 'வந்து பார்' என்ற வாசகந்தான் கடைசி உத்தரவாக சொல்லவேண்டியது. இதற்கு மிஞ்சின தகுதியான உத்தரவு வேறில்லை. கிறிஸ்துமார்க்க விரோதிகள் இயேசுவை வந்து பாராமல் அவரை விசுவாசிக்கிற கிறிஸ்தவர்கள் கூட்டத்தைக் கவனித்து, அவர்களுக்குள்

ளிருக்கிற சில பலவீனங்களை நினைத்து, அவர்களை வைத்து இயேசுவையும் அவருடைய சுவிசேஷ மார்க்கத்தையும் அவமதிக்கிறார்கள். இது சரியல்ல, இயேசுவை இயேசுவில் கண்டு பிடிக்கக்கூடுமேயன்றி வேறெங்கும் சரியாகக் கண்டு பிடிக்கக்கூடாது. இந்த வாசகம் மயக்கமாகக் காணப்பட வேண்டியதில்லை. இயேசுவின் சீஷரில் சிலர் முதலாய் பழுதுள்ளவர்களாயிருந்தார்களென்று காண்கிறோம். அவர் தமக்கு சாட்சிகளாகத் தெரிந்துகொண்ட பன்னிரண்டு பேருக்குள்ளும் அவரை மறுதலிக்கிற பேதுருவும், காட்டிக் கொடுக்கிற யூதாசும், சந்தேகிக்கிற தோமாவும், திடீரென்று கோபங்கொள்ளும் இடிமுழக்கத்தின் பிள்ளைகளுமிருந்தார்க ளென்று அறிகிறோம். இப்படிப்பட்டவர்கள் கூட்டத்தில் போய் இயேசுவைத் தேடுகிற ஒரு அவமார்க்கத்தான் அவரி டத்திலும் இவைபோலொத்த மனுஷ பலவீனங்களிருந் திருக்குமென்று தீர்மானித்துக்கொள்வது ஆச்சரியமல்ல; ஆனால் அப்படிப்பட்டவன் கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து கவனிக்கிறதுண்டானால், அவர் பாவியல்லவென்றும், அவர் வாயிலே வஞ்சனை இல்லையென்றும்; அவர் குணம் தெய்வீக மூள்ளதென்றும் கண்டு, அவரால் ஸ்தாபகமான மார்க்கத் தில் தடையின்றி சேர வழியாகும். பெத்லகேம் இடை யரும், கீழ்த்திசை சாஸ்திரிகளும், பண்டிகைக்கு வந்த சில கிரேக்கரும், நிக்கோதேமுவும், இன்னும் அநேகம் பேரும் அவரிடத்தில் வந்து அவரைக் கண்டு அவர் மெய்யாகவே உலகத்தில் வரவேண்டிய தேவகுமாரனாகிய மேசியா என்று அறிந்துகொண்டார்கள்.

கிறிஸ்தவர்களில் பலரும் இன்னும் இயேசுவினிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்களென்று சொல்ல ஏதுவில்லை; உலகக் கல்வியில் தேறி உயர்ந்த பரீட்சைகளால் தங்கள் மூளை களைப் பிரகாசிக்கச் செய்கிற சிலர் இயேசுவின் அருமை இன்னம் சரியாய்த் தெரியாததால் அவருடைய இரட்சண்ய வல்லமையைப்பற்றியும், தெய்வீகத்தன்மையைப் பற்றியும் சற்று மயக்கமுடையவர்களாகவே இருக்கிறார்கள். இயேசு வைப்பற்றிய மகத்துவங்களும், இரகசியங்களும், கணக்கு களைப் பகுத்தறியும் மூளைக்கும், தர்க்க சாஸ்திரம், நீதி

நூல், அளவுநூல், தத்துவ சாஸ்திரம், இயல்பு சாஸ்திர முதலிய விஷயங்களை ஆழ்ந்து பரிசோதிக்கக்கூடிய புத்திக்கும் எட்டவேண்டியது என்றும், எட்டவே எட்டுமென்றும் சொல்லவே கூடாது. உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறதென்பதே வேதநூலின் தீர்மானமாயிருக்கிறது. ஆதலால் ஞானமென்று தப்பாக அழைக்கப்படும் உலக பைத்தியத்தைக்கொண்டு பரம ஞானத்தைக் கண்டறியவேகூடாது. அப்படிக்கூடும் என்றும் கூடவேண்டியது என்றும் தீர்மானமாய் சாதிப்பதே உலக ஞானத்தை யடுத்த பூரண பைத்தியஸ்திதி என்று சொல்லவேண்டியது. இயேசுவை உலக ஞானத்தில் கண்டுபிடிப்பது அசாத்தியம்; இயேசுவை அவருடைய பக்தருக்குள் கண்டு பிடிப்பது வருத்தம், இயேசுவை இயேசுவில் கண்டு பிடிப்பது பிராயாசை. ஏனெனில் இயேசுவானவர் நேற்றும் இன்றும் என்றைக்கும் ஒரே விதமாயிருந்தபோதிலும் அவருடைய வெளிப்படுதல்கள் ஒரே விதமாயிருக்கவில்லை. அவருடைய அவதாரக் காலத்தை மாத்திரம் பார்த்தால் பலவித காட்சிகளை அவரில் காண்கிறோம். ஒரு காலத்தில் அவர் தேவன் என்று சொல்லக்கூடாத மனுஷனையும், இன்னொரு காலத்தில் மனுஷன் என்று சொல்லக்கூடாத தேவனையும், வேறு காலங்களில் இருதன்மையும் பொருந்தினவர்போலும் அவருடைய சரித்திரங்களால் துலங்குகிறார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கு முன்னும், அதற்குப் பின்னுள்ள அவருடைய தேகத்தின் தோற்றமே வித்தியாசமாயிருக்கிறது. இவைகளில் தெளிவான இரகசியங்களை அறிந்தவன் எவன்? எந்த உலகஞானி, அல்லது தத்துவசாஸ்திரி இதின் வகைகளைக் கண்டறிந்து சொல்லவல்லவன்? ஞானிகள் என்று தப்பாய்ப் பேர் பெற்றிருக்கும் இந்த மூடர்கள் தங்கள் கோசர புத்திக்கு இவை ஒன்றும் எட்டாத இரகசியங்களென்று கண்டு அவை அனைத்தையும் பொய்யெனவும் அசாத்தியமெனவும் தீர்ப்பிடுகிறார்கள். நானே இவையனைத்தும் அவன் புத்தி கட்டை என்றும், இயேசுவும், அவரை அறியும் ஞானமும் அதற்கு மிஞ்சின ஆழமென்றும் சொல்லுவேன். இப்படிப்பட்ட கோசர புத்திக்காரரும், தீட்சண்ய மூளையுடையவர்களும் பக்திவினயத்தோடு வந்து,

இரட்சகா! உலக ஞானத்தை அளந்து காட்ட நீர் தந்த அளவுகோலால் உம்மை அளந்து பார்த்தும் நீர் கிட்டவில்லை, அதை ஆராய நீர் தந்த கண்ணின் கயணங்களைக்கொண்டு உம்மைப் பார்க்கக்கூடுவதில்லை. நீரே உம்மை எங்களுக்குக் காட்டியருளும், எங்கள் கண்களை குருடர்போல மூடிக் கொள்ளுகிறோம் என்று கூப்புறக்கிடப்பது உண்டானால் அவர் தமது அருளின் கலிக்கத்தால் அப்படிப்பட்டவனுடைய மனக்கண்ணைத் தெளிவித்துத் தம்மை அவனுக்கு வெளிப்படுத்துவார். அப்படியே வெளிப்படுத்தியுமிருக்கிறார். இதுதான் தேறின உலக ஞானியாயிருந்து இயேசுவைப் பகைத்து வந்த தர்சு பட்டணத்தானுடைய சவுல் இயேசுவின் தாசனான முறை. இவை எல்லாவற்றையும் கொண்டு நாம் மொத்தமாய்ச் சொல்லும் வாசகம் என்னவென்றால் 'இயேசுவை இயேசுவிலே மாத்திரம் பார்' என்பதுதான்.

'வந்து பார்' என்று சொன்னவுடன் நாத்தான்வேல் வந்து பார்த்தார். அச்சமயத்தில் அவரை மேசியா என்று அவர் கண்டறியும்படியான வெளியரங்க ஏதுக்களில் ஒன்றுமில்லை; அவர் இரத கஜதுரக பதாதிகளுடனுவது, ஈட்டி வல்லயங்களோடாவது, கட்டியம் கூறும் வீரோடாவது வராமல் வெற்றுக்காலால் நடந்து, வேடன்போல் வழியில் சில சீஷரோடு நின்றார். மேசியாவிடத்தில் யூதர் எதிர்பார்த்த ஆரவாரமொன்றும் அம்பொழுது விளங்கவில்லை. நாத்தான்வேல் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, தமக்குச் சமீபமாய் நின்றவர்களைப் பார்த்து, அவரைச் சுட்டிக்காட்டி 'இதோ கபடற்ற மெய்யான இஸ்ரவேலன்' என்று சொன்னார். இதினால் இயேசு முகஸ்துதி பேசி நாத்தான்வேலைத் தமக்குச் சீஷனாக்கினார் என்று அபிப்பிராயப் படலாகாது; இது அவரைப் பார்த்து சொல்லப்படாமல் அவரைக் குறித்து மற்றவர்களுடன் பேசின வார்த்தையாயிருக்கிறது. எப்படியும் இந்த வாசகம் சொல்லப்பட்டபோது நாத்தான்வேல், அச்சத்தம் கேட்கும் தூரத்துக்குள்தான் வந்தார். இந்த வாசகம் அவரைக் குலுங்கப் பண்ணிற்று; ஒரு நாளும் முகமறியாத இவர் என் குணாதிசயங்களையும் கண்டறிந்து சொல்வது அதிசயமென்று சரியானபடி நினைத்து 'நீர்

என்னை எப்படி அறிவீர்' என்று கேட்டார். ஆ! இவர் அறியாமல் நாத்தான்வேல் எங்கிருந்து வந்தார்? இயேசு இவர் ஊரில் பிறந்து, சிறு பிராயத்தில் இவரோடு விளையாடி, கல்வி கற்று, கடைவீதி, கடல் வீதிக்கு உலாவப் போய், கூட்டு வியாபாரம் செய்து, கொடுக்கல் வாங்கல் பண்ணினால் தானு இவரை அறிவார்? அவர் அவதாரமெடுத்த கடவுளல்லவா? இந்தப் பரமரகசியம் அவருக்குத் தெரியாது. ஆனபடியினாலே,

'நீர் என்னை எப்படி அறிவீர்'

என்று கேட்டார்.. இதினால் நாம் நாத்தான்வேலைக் குற்றம் சொல்லக்கூடாது. இது மனுஷ அறிவின் அளவேயன்றி வேறல்ல. 'நீர் என்னை எப்படி அறிவீர் என்ற கேள்விக்கு இயேசு உத்தரவு சொல்லவேண்டாமா? அவர் சொல்வார்: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்' என்று சொன்னார். இந்த வாசகம் நாத்தான்வேலைக் குலுங்கப்பண்ணிற்று. ஏனெனில் இவர் அத்திமரத்தின் கீழிருந்த விஷயம் ஒரு அந்தரங்க சமாசாரமாயிருந்தது. இந்த அந்தரங்கம் தனக்கும் தேவனுக்கும் மாத்திரம் தெரிந்த அந்தரங்க விஷயமாயிருந்தது. அதை இயேசு அறிந்து கொண்டார். இந்த அத்திமரத்து அந்தரங்கமென்ன? என்று கேட்பாயோ?— நாத்தானுடைய வீட்டுக்கொல்லையிலோ, காட்டுத் தோட்டத்திலோ இவர் ஜெபத்தியானம் செய்து வருகிற வழக்கமிருந்தது. அந்த இடம் இரகசியமானதாயும், அங்கே நடந்த தியானங்கள் அதிக அந்தரங்கமானதாயுமிருந்தன. அதை இயேசு கண்டு பிடித்தார். அவர் இரண்டு பேர் மூன்று பேர் அவருடைய நாமத்தை முன்னிட்டு கூடிவந்திருக்கிற இடத்தில் மாத்திரமல்ல, ஒண்டியாளாயிருக்கிற இடத்திலும் தமது தரிசனத்தை அளிக்கிறார். யூதர்கள் பெரும்பாலும் தங்கள் வீட்டின் உள்முற்றத்தில் ஒரு அத்திமரத்தை வைத்து முற்றத்தை மூடும் பந்தல்போல் திராட்சக்கொடிகளைப் படரவிட்டு அதின் நிழலிலுட்கார்ந்து நியாயப் பிரமாணத்தை வாசித்து ஜெபத்தியானங்கள் செய்கிறதுண்டு. 'உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சச்

செடியைப் போலிருப்பாள்' என்ற வாசகம் இதின் சம்பந்தத்தையே உணர்த்துகிறது. சிலர் காடுகளில் இருக்கிற தங்கள் தோட்டங்களில் ஜெபத்தியானம் செய்து வருகிறதுண்டு. இதில் நாத்தான்வேல் எந்த முறையைக் கையாடினாரோ தெரியுதில்லை. எப்படியும் இவர் அந்தரங்கமாய் அரவம் காட்டாமல் ஆண்டவரை நோக்கி செய்து வந்த ஜெபத்தியானம் இப்பொழுது தெருவில் பிரசித்தம் செய்யப்பட்டது. ஜெபத் தியானத்தைப்போல இன்பமான பக்திமுறை வேறுன்றில்லை; ஜெபம் செய்யும் வழக்கமுடையவர்கள் இப்படி நாத்தான்வேலைப்போல தனித்த இடம் தெரிந்து கொண்டு ஜெபத்தியானம் செய்து வருவது நல்லது. விக்கிரகங்களை வணங்குவோருக்குள்ள தியான குணமுதலாய் இக்கால கிறிஸ்தவர்கள் அநேகரிடத்தில் இல்லை என்று காண்கிறோம். தமிழ்ச் சபையார் கடலோரங்களிலும், மலையோரங்களிலும், வனங்களிலும், சோலைகளிலும் தியானம் செய்யும் முறையை எப்பொழுது காணலாமோ தெரியவில்லை.

இந்த வாசத்தைக் கேட்டவுடனே நாத்தான்வேலுக்குத் தன்னுடனே பேசுகிறவர் இன்னாரென்கிற நிச்சயம் தெரிந்து போயிற்று. இனி அவர் கேள்வி கேட்க வழியைக் காணோம். இனி கேட்கிறதுண்டானால் தம்மை அடுத்த வேறு அநேக சங்கதிகள் வெளியாகி விடுமென்றெண்ணி,

'ரபி, நீர் தேவனுடைய குமாரன்
நீர் இஸ்ரவேலின் ராஜா'

என்று அறிக்கையிட்டார். இந்த அறிக்கையானது இயேசுவின் தெய்வீகத்தை அங்கிகரிக்கிறதாயும், அவர் அவதாரமெடுத்து வந்த இரட்சகர் என்பதை ஒப்புக்கொண்டதாயுமிருக்கிறது. இயேசுவை மேசியாவென்று அறிக்கையிடுவது இலேசாக இருந்தாலும், அவரை தேவனுடைய குமாரனென்று சொல்வது இலேசல்ல. இதற்குமுன் யூதராவது மற்றெவர்களாவது உலகத்தில் தோன்றின எந்த மனுஷனையும் தேவனுடைய குமாரனென்று சொன்னதுமில்லை; சொல்ல கேள்விப்பட்டதுமில்லை; பூலோகம் ஆரம்பமானது முதல் இவர் ஒருவரே அந்த நாமத்தை முதலாவது பெற்றுக்

கொண்டவர்; இந்த வாசகத்தை நாத்தான்வேல் தேவாவியின் ஏவுதலால் சொன்னரென்று சொல்லவேண்டியது. ஏனெனில் பரிசுத்த ஆவியை அல்லாமல் ஒருவரும் கிறிஸ்துவை தேவகுமாரனென்று அறிக்கையிடமாட்டார்கள். இந்நாள் வரைக்கும் அத்திமரத்தின் கீழிருந்து, மேசியாவாகிய என் நேசரைக் காணுமே என்று கவலையாய்த் தியானித்து, பெருமையான காரியங்களையெல்லாம் செய்த இவர்களில் ஒருவர்தான் அப்படியிருப்பார்களோ என்று கவனித்து இல்லை என்று தீர்மானித்து, எப்போ காண்பேனே என் மேசியாவை எப்போ பார்ப்பேனே என்று ஏங்கிக்கொண்டிருந்த நாத்தான்வேலுக்கு மேசியா அகப்பட்டார். தேவகுமாரன் வெளிப்பட்டார். இயேசுவே தம்மை அவருக்கு வெளிப்படுத்தினார். அல்லாவிட்டால் எத்தனமாக்கப்பட்ட என் இரட்சகரை என் கண் காணுமல் போயிற்றே என்று ஏங்கி மரணமடைந்திருப்பார். இயேசுவைத் தன் ஜீவகாலத்தில் கண்டு பிடித்து அவருடைய சீஷனாகிக்கொள்வதில் அனந்த பாக்கியமுண்டு.

இயேசு அவரை நோக்கி, அத்திமரத்தின் கீழே நான் உன்னைக் கண்டேனென்று சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய், மேலும் வானம் திறந்திருப்பதையும், தேவதூதர் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்களென்று ஆணையோடு சொன்னார். இந்த வசனத்தின் கருத்து சற்று மயக்கம்போலத் தோன்றலாம். இயேசுகிறிஸ்துவின் கால முதல் அவர் மூலமாய் மண்ணுக்கும் விண்ணுக்கும், வானத்துக்கும் பூமிக்கும், மனுஷனுக்கும் தேவனுக்கும், பாவிக்கும் பரிசுத்தமுள்ள ஆண்டவருக்கும் நெருங்கிய உறவும் அந்நியோன்னிய பாந்தமும் உண்டாகும் என்பதே இதின் பொதுக் கருத்து. இந்த ஐக்கியத்துக்கு சம்மன்சுகள் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். ஆகவே பாவத்தினால் பிரிக்கப்பட்டிருந்த வானமும், பூமியும் கிறிஸ்துவில் பொருந்துகிறது என்பது தெளிவாகிறது. தேவனும் தேவதூதரும் ஒரு பட்சமும், மனுமக்கள் மறுபட்சமுமாயிருந்து பாவ யுத்தம் புரிந்த காலம்

போக இருவரும் இயேசுவுக்குள் ஒன்றுகி விண்ணுலகோர் மண்ணுலகைத் தங்கள் சுய தேசம்போலும், மண்ணுலகோர் விண்ணுலகைத் தங்கள் சுய தேசம்போலவும் எண்ணி நடமாடக் காலம் வந்தது. தேவ அன்பே இந்த உன்னத ஐக்கியத்திற்கு ஆதிகாரணமாயிருந்தது. தேவன் நம்மேல் வைத்த அன்பினால் நம்மைத் தம்மோடு ஒட்டவைக்கும்படி தாமே அவதாரமெடுத்து நம்மோடு ஒட்டிக்கொண்டார்; அப்பால் அவர் ஆகாயத்தில் சிலுவை வாகனமேறி வானத்தையும் பூமியையும் ஒன்றுய் இணைக்கும் அத்தி முளைபோல் விளங்கினர். ஆ! அவர் தமது சிரசால் வானத்தையும், காலால் பூமியையும், விரித்த தமது கரங்களால் சராசரமனைத்தையும் அணைத்துச் சேர்த்து ஐக்கியப்படுத்திவிட்டார். மெய்யாகவே இயேசு பூமியின்மேல் நடப்பட்ட சிலுவைமேல் இரு கைகளையும் விரித்து காலொடுங்கியிருப்பது, பூலோகத்தை தம்மோடு முறியடித்துக்கொண்டு கழுகுபோல் பறந்து அதை வானலோகத்துக்குத் தூக்கிக்கொண்டு போகிறதுபோலத்தானிருக்கிறது. என் இரட்சண்ய இராஜாவே! என் நேச இயேசுவே! உமது அன்புக்கு எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக. நீர் சிலுவையின் மூலமாய் சம்பந்தப்படுத்தின பூமியையும் அதின் ஒரு அவயமாகிய அடியேனையும் மறவாதேயும். உமது இரட்சண்ய அன்பின் இந்த இரகசியத்தை பூமியிலுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும் கண்டு, அந்தச் சிலுவையில் தன்னையும் மாட்டிக் கொண்டு பரலோகம் ஏற அருள்புரியும். ஒட்டக்கூடாத இரண்டு லோகங்களையும் ஒட்டப்பண்ணின உமது திரு உதிரத்தை பக்திவிநயத்துடன் பணிகிறேன்.

வானத்துக்கும் பூமிக்குமுள்ள ஐக்கியத்துக்கு இயேசு 'மனுஷகுமாரன்' என்று அழைக்கும் தம்மையே மத்தியாக வைத்துப்போகிறார். இவ்விடத்தில் தம்மை மனுஷகுமாரன் என்று சொல்வதால் இவர் தமது தெய்வீகத்தை அல்ல வென்று ரூபிக்கிறார் என்று நாம் எண்ணக்கூடாது. தம்மிடத்தில் விளங்கும் தெய்வீகங்களின் திரளை மனுஷர் கண்டு பயந்து, சமீபத்தில் வராமல் மறைந்துகொள்வார்களென்றும், எல்லாரையும் தம்மிடத்தில் நெருங்கிவரப் பண்ணவேண்டு

மென்றும் அவர் எண்ணி தம்மை எப்போதும் 'மனுஷ குமாரன்'[1] என்று அழைத்துவந்தார் என்று சொல்லலாம். இது இவர் ஏற்படுத்தின புதுப் பதமாயிராமல் தீர்க்கதரிசிகள் இட்ட பேராகவே இருந்தது. தேவன் மனுஷாவதாரமெடுத்துத் தம்மை 'மனுஷகுமாரன்' என்ற பேரால் அழைத்துக்கொண்டு, மனுஷர் நடுவில் சஞ்சரித்துக்கொண்டு, அவர்கள் சாப்பிடுகிறதை சாப்பிட்டு, குடிக்கிறதைக் குடித்து, உடுக்கிறதை உடுத்து, அவர்களோடு கலந்து திரிந்து, அவர்களைத் தமது தெய்வீகப் பிரகாச பிரசன்னத்தால் பயப்படுத்தாதபடியினாலேதான் சகலரும் அவரை நாடி., அவர் பின்னாலே ஓடி, என் வீட்டிலே வந்து தங்கும், எனக்கு இரங்கும், என் மகனைச் சுகமாக்கும் என்று கேட்க இடமாயிற்று. அவர் தமது கேருபீன் பிரகாசத்தோடாவது, சீனாயிலிறங்கினவண்ணமாயாவது, தாபோரில் விளங்கிய தேமாயாவது தமது காலத்தை இப்பூலோகத்தில் கழித்தது மெய்யானால் எந்தப் பாவியும் அவரண்டை நெருங்கியிருக்க மாட்டான். இது நிசம்: 'மனுஷகுமாரன்' என்னும் நாம தேயத்தால் எங்களோடு நெருங்கிக்கொள்ளச் சித்தம் கொண்ட தேவகுமாரனே! உமக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

இயேசு சொன்னதுபோல நாத்தான்வேல் அதுமுதல், பெரிதானவைகளை அவரிடத்தில் கண்டார். அவர் குருடருக்குக் கண்ணையும் செவிடருக்குக் காதையும் கொடுத்து மரித்

---

[1] 'மனுஷகுமாரன்' என்னும் பதம் எல்லா மனுஷரையும்பற்றிச் சொல்லக்கூடிய பொதுப் பதம்தான் (யோசு. 25:6; சங். 144:3). ஆனால் எசேக்கியேலுக்கு ஒரு விசேஷ கருத்தின்படி இது வழங்கப்படுகிறது. என்றாலும் 'மனுஷபுத்திரன்' என்னும் பதம் எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் சுமார் 90 தடவை வந்தாலும் ஒருதரமாவது, தீர்க்கதரிசி தம்மை அப்பெயரால் அழைக்கிறதேயில்லை; இயேசுவை மனுஷகுமாரன் என்று சுமார் 80 தரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த 80 தடவையும் அவரே தம்மை இந்தப் பெயரால் அழைத்திருக்கிறார், மற்றவர்கள் இயேசுவை அந்தப் பெயரால் அழைக்கவேயில்லை. அப். 7:56; வெளி. 1:13–20; 14:14. வசனங்களில் வரும், 'மனுஷகுமாரன்' என்னும் பதம் இந்த 80க்குள்பட்டதல்ல.

தோரையும் எழுப்பி, சிலுவையில் தொங்கி மாண்டு, உயிர்த் தெழுந்து தன் கண் காண மேகவாகனரூடராய் வானத்துக்கு எழுந்துபோனதையும் அவர் கண்டு மேன்மேலும் அவர் பேரில் பக்திவிநயத்தை ஸ்தாபித்து வந்தார். அவருடைய பக்தியும், வேலையும், அடக்கமும் ஒழுக்கமுமாயிருந்தது.

அவருடைய அந்தியகால நடபடியைக் குறித்து நமக் கொன்றும் தெரியாது. ஆனால் பாரம்பரையின் மூலமாய் நாம் அறிகிறபடி அவர் இந்தியாவின் திசைகளில் சுவிசேஷத் தைப் பிரசங்கித்து இரத்தச்சாட்சியாக மரித்தாரென்று சொல்லுகிறார்கள். அக்காலத்தில் எத்தியோப்பியாவின் தென்பாகமும், அராபியாவின் திசைகளும், இந்தியாவின் சுற்றுப்புறங்களும் பொதுவாக இந்தியாவென்று அழைக்கப் பட்டதால் நாத்தான்வேல் அப்போஸ்தல ஊழியம் நடத்தின இடம் இன்னதென்று திட்டமாய்ச் சொல்ல இடமில்லை. எப்படியும் அவர் தம் வாலிப காலமுதல் விளங்கின அந்தரங்க பக்தியால் அத்திமரத்தின் கீழிருந்து அனுஷ்டித்து வந்த பரமபிதாவின் சமுகமேறி அங்குள்ள ஜீவமரத்தின் நிழலுக் குள்ளிருந்துகொண்டு, அதின் பழத்தைத் தின்ற பலத்தால் தினந்தோறும் கடவுளின் பரிசுத்தத்தைப் போற்றிப் புகழ்ந்து பரலோகமெங்கும் தமது துதியின் குரல் கேட்கும்படி செய் கிறார். கபடமில்லாத நாத்தான்வேல் என்ற பட்டப் பேர் அந்த சுத்த லோகத்தின் குடிகளுக்குள் கண்ணியமாய் மதிக்கப்பட்டு வருகிறது.

மத்தேயு

புதிய ஏற்பாட்டாகமமானது மத்தேயுவின் சுவிசேஷத்தைக்கொண்டு ஆரம்பிக்கிறதாலும் இவர் மற்ற அப்போஸ்தலரைப்போல செம்படவராயிராமல், கிறிஸ்துவுக்கு சீஷனாகுமுன் சர்க்கார் உத்தியோகஸ்தனாயிருந்தபடியாலும் இவரைப்பற்றிச் சில காரியங்களை நாம் அறிந்துகொள்ளுகிறது நன்மைதான். பன்னிரு சீஷரும் அழைக்கப்பட்ட வரலாறு இன்னதென்று சுவிசேஷத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் அழைக்கப்பட்ட வரலாறுள்ள சீஷர்களில் இவரும் ஒருவராயிருக்கிறார். இவருடைய பேர் மத்தேயு என்றும் லேவி என்றும் இரண்டுவிதமாய் வழங்கப்பட்டிருக்கிறது. இவருடைய தகப்பனாருக்கு அல்பேயு என்று பேர். தோமா அப்போஸ்தலன் இவருடைய சகோதரனென்று சொல்வாருமுண்டு.

இவருடைய பிறப்பையும் வளர்ப்பையுங் குறித்து நமக்கொன்றும் தெரியாது, என்றாலும் பெற்றோர் இவரை அக்காலத்துப் பாடசாலையில் படிக்கவைத்து கணக்கு வழக்குகளில் திறமையுடையவராக்கினார்கள் என்று நாம் சொல்லவேண்டியதுண்டு. அவர் தேறின கணக்கனும் திட்டவட்டமுள்ளவருமாயிராவிட்டால் சர்க்காரையடுத்த உத்தியோகசாலை சம்பந்தமாய் வேலைசெய்ய இடமிருக்கமாட்டாது. இவர் பெற்றிருந்த ஊழியத்திற்கு ஆயத் தொழில் என்று பேர் வழங்கப்பட்டது. தொழிலைக்கொண்டு ஆட்களைக் குறிப்பிடுகிற வழக்கம் எத்தேசத்திலுமுண்டு. ஆகவே இவருக்கு ஆயக்காரனாகிய மத்தேயு என்ற பட்டப் பேர் வழங்கப்பட்டது. அக்காலத்தில் பணங்களை வட்டிக்குக் கொடுத்து அந்தவிதமாய் வியாபாரம் செய்துவந்தவர்களுக்கும் ஆயக்காரர் என்ற பேர் வழங்கப்பட்டதுண்டு. இவர் அப்படிப்பட்டவராயல், கொஞ்சம் பணக்காரனாயுமிருக்கவேண்டியது. ஆயக்காரர் என்பதில் இருவித அந்தஸ்துடையவர்கள் இருந்தார்கள்.

அவர்களை முறையே மேலான ஆயக்காரர் கீழான ஆயக்காரர் என்று சொல்லலாம். மேலான ஆயக்காரர் உரோமரா யும் கீழான ஆயக்காரர் யூதராயுமிருந்தார்கள். துரைத்தன சம்பந்தமான பெரும் வேலைகளையும் வரிகளையும் ஏலத்தில் எடுக்கிறதுபோல் எடுத்து யூதரைக் கீழான ஆயச் சேவகங் களில் அமர்த்தி திரண்ட லாபம் சம்பாதித்து வந்தார்கள். மத்தேயு இப்படிப்பட்ட ஒப்பந்தக்காரருக்குட்பட்ட ஆயக் காரனுயிருந்தாலு மிருக்கலாம். அல்லது கலிலேயாக் கட லோரத்தில் ஒரு இடம் பிடித்து, அநேக வியாபாரம் செய்து வந்த பல வியாபாரிகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கி அவ்வித ஜீவனம் செய்தாலும் செய்திருக்கலாம். எப்படியும் இவருடைய வேலை, நினைத்தவுடனே நிறுத்தி விடத்தக்க சுயாதீனமான விதமாக இருந்ததென்பது நிச்சயம். இவ்வித வேலையை ஒப்புக்கொள்ளுகிறவர்களும் செய்கிறவர் களும் யூதச் சாதியாரிடத்தில் சட்டத்திட்டத்தின்படி பணங்களை வாங்கி, திட்டவட்டமாய் காரியங்களை நடத்திவர வேண்டியதிருந்ததால் தன்னினத்தைக் கெடுத்து எதிரிக்குத் துணை செய்யும் துரோகிகள் என்ற மற்ற யூதரால் பகைக்கப் பட்டு வந்தார்கள். அந்நியர் தங்களிடத்தில் எந்த விஷயத் துக்கும் வரி வாங்கக்கூடாதென்பதே யூதருடைய பிடிவாதமா யிருந்தது. மேலும் இக்காலத்திலும் நாம் பார்க்கிறபடி இப்படிப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர் சட்டப்படியுள்ள தொகையை மாத்திரம் சமாதானத்தோடு கேட்டுப் பெற்றுக் கொள்ளுகிறவர்களாயிராமல் கள்ளக் கணக்குகள் பண்ணி, அது சட்டத்துக்கு விரோதம், இது திட்டத்துக்கு விரோதம் என்று சொல்லி, குறிக்கப்பட்ட தொகையிலும் அதிகம் வாங்கி குடிகளையும் வியாபாரிகளையும் திருடித் தங்கள் பொக்கிஷத்தை விருத்திபடுத்தி வந்தார்கள். இதினிமித்த மும் குடிகள் இவர்களைச் சபித்து, இவர்களைப்போல பஞ்சப் பாவிகள் எவரும் இல்லையென்று சொல்லி வந்தார்கள். தியோக்கிரேற்றஸ் என்பவனிடத்தில் சிலர் போய் காட்டு மிருகங்களில் எந்த ஜாதி மிருகங்கள் அதிக மோசமும் இரத்தப்பிரியமுள்ளதுமானவை என்று கேட்டபோது 'மலையிலுள்ள காடியும் சிங்கமும், நகரியிலுள்ள வரி வாங்கு வோரும், கலாபனைக்காரரும்தான்' என்று மறுமொழி

சொன்னார். இந்த வழக்கம் அக்காலத்திலிருந்ததென்பது மெய்தான். ஏனெனில் யோவான் ஸ்நானகன் தன்னிடம் உபதேசம் கேட்க வந்த ஆயக்காரரைப் பார்த்து 'உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்' என்று புத்தி சொல்லியிருக்கிறார்.

மத்தேயு ஆயக்காரனாயிருந்தபடியால் இவரும் இப்படிப்பட்ட சண்டாளனுக்குத்தானிருப்பார் என்று நாம் சொல்லத் துணியலாகாது. 'எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது' என்ற பழமொழியை எல்லா விஷயத்திற்கும் உபயோகிக்கலாகாது. வியாபாரத்தைக் கொண்டு எப்போதும் ஆளின் குணத்தையும் செய்கையையும் தீர்மானிக்கக் கூடாது. இவருக்கு ஒரு சொந்த வீடு இருந்தது. இயேசு பேதுரு, யோவான் முதலிய சீஷருக்கு அற்புதமாய் மீன் அகப்படச் செய்து, அவருக்கு அவர்களை சீஷராக்கின அன்றையத்தினமே இவரை இயேசு அழைத்தார். பேதுருவும் யோவானும் இயேசு தங்களை அழைத்தவுடனே தங்கள் வலைகளையும் வரும்படிகளையும் விட்டுப் போட்டு அவரைப் பின்சென்ற அதிசயத்தை அங்கிருந்த ஜனமனைத்தும் கண்டு பிரமித்து அவரைத் தொடர்ந்துபோனார்கள். இயேசு போகப் போக அவர்களுக்குப் பிரசங்கம் செய்து மத்தேயு இருந்த இடமட்டும் வந்து:

'எனக்குப் பின்சென்று வா'

என்று அழைத்தார். வார்த்தைகள் கொஞ்சமானாலும், அதின் வல்லமை தெய்வீகமுள்ளதாயிருந்தது. ஆகவே மத்தேயு உடனே பின்சென்றார். இவர் தம்முடைய ஊழியங்களை எப்படி ஒழுங்குப்படுத்தினாரென்று நமக்கொன்றும் தெரியாது. என்றாலும் அவருடைய வேலையில் ஒழுங்கும் கிரமமுமிருந்ததென்பது மெய். அவர் திடீரென்று தொழிலை நிறுத்தினதையிட்டு யாதொரு தொந்தரவும் தகராறும் நேரிடவில்லை. இயேசுவைப் பின்பற்றினவுடனே, அவர் இயேசுவை விடவில்லை; அவரைத் தன் வீட்டில் வைத்துக் கொண்டு தமது சிநேகிதர் அனைவரையும் வரவழைத்து ஒரு பெரிய விருந்து செய்யத் தீர்மானித்தார். இந்த விருந்தின் நோக்கம் பலவாறாக இருக்கலாம். தான் அன்றுமுதல் அவ்

வுரைவிட்டு கிறிஸ்துவின் சீஷருகப்போகிறபடியால் தன் சிநேகிதர் முதலியவர்களிடத்தில், வரலாறுகளைச் சொல்லி வழியனுப்பிக்கொள்ளவும், தன்னுத்துமாவில் பெற்ற வாழ்வின் சந்தோஷத்தை வெளிப்படுத்தவும், தான் புதிதாய் விசுவாசித்த இரட்சகரைத் தன் இனத்தாருக்கும் தோழருக்கும் அறிமுகப்படுத்திவைக்கவும், அவ்வூராரும் விசேஷமாய்த் தன் சிநேகிதரும் இயேசுவின் போதனையைக் கேட்க வர வழைக்கப்படவும் நோக்கமாய் இந்த விருந்தை செய்யும்படி தீர்மானித்திருக்கலாம். இவ்விடத்தில் அழைப்பு மாறுகிறது என்று பார்க்கிறோம். முதலாவது இயேசு மத்தேயுவை என் பின்னே வா என்று அழைத்தார். இப்பொழுது மத்தேயு அவரை என் வீட்டிற்கு வாரும் என்று கூப்பிடுகிறார். இயேசுவால் இரட்சண்ய நன்மையைப் பெற்றவன் அவரை விடமாட்டான். நாம் அவரை முதலாவது பின்செல்லுகிறதுண்டானால், நாம் கூப்பிட்ட சமயமெல்லாம் அப்புறம் அவர் நம்மைப் பின்சென்று நமது இருதய வீட்டில் விருந்துக்கு வருவார். இதை வாசிக்கிறவனே! உன்னை அழைத்த இயேசுவை நீ எப்போதாவது உன் ஆத்துமாவுக்குள் வர அழைத்ததுண்டா? இதோ உன்னைப்போலுள்ள மத்தேயு செய்கிறபடி நீ ஏன் செய்யவில்லை? ஏன் செய்யக்கூடாது? அவர் என் வீட்டுக்குள் வா நான் பாத்திரனல்ல என்கிறாயோ? அந்த வாசகம் நன்றாய்த்தான் தொனிக்கிறது. ஆனால் தங்களை அபாத்திரர் என்று எண்ணுகிற உத்தமரும், அவரைப்பற்றி எங்களுக்குக் கவையில்லை என்று சொல்லுகிற அதமரும் இதே வாசகத்தையேச் சொல்லுகிறதுண்டு; நீ பிந்தினவனாயிருக்கலாகாதோ? மத்தேயு பாத்திரவானாயிருந்தபடியால் இயேசு அவர் வீட்டுக்குப் போகாமல், அவர் வருந்தி அழைத்து, அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்து, பந்தியை ஆயத்தப்படுத்திவந்து உட்காரும் ஐயா என்று கெஞ்சினதினால் போகிறோமேயன்றி வேறல்ல; அவர் இச்சமயத்தில் உன் வாசலைத் தட்டி, இதோ வாசற்படியிலிருந்து தட்டுகிறேன், என் சகோதரனே, என் பிரியமே, என் புறாவே, என் உத்தமனே கதவைத் திற, என் தலை பனியினாலும், என் தலைமயிர் தூறலினாலும் நனைந்திருக்கிறது. ஒருவன் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான்

பிரவேசித்து அவனோடு போசனம் பண்ணுவேன், அவனும் என்னோடு போசனம் பண்ணுவான் என்று சொல்லுகிறு ரென்று உணர்ந்துகொள்ளுவாயாக.

இயேசு மத்தேயுவின் வீட்டில் பந்தியிருந்தார். இது மத்தேயுவுக்குக் கிடைத்த பெரிய வாழ்வு என்பதற்குச் சந்தேகமோ? இராஜாக்களும் பிரபுக்களும் சாதாரண குடிக ளுடன் பந்தியிருக்க விரும்பார்கள், ஆனால் அவதாரமெடுத்த தேவன் நீசப் பாவிகள் நடுவில் பந்தி இருக்கப் பார்க்கிறது அவருடைய அன்பின் ஆழத்தை ஒருவாறு அளந்து காட்டு கிறதல்லவா? அநேக ஆயக்காரரும, வேறு சில சிநேகிதரும் அந்தப் பந்திக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இச்சமயத் தில் இயேசுவின் சீஷர், வந்த ஜனங்களை ஒழுங்குபடுத்துவதி லும் உட்கார வைப்பதிலும் அதிக உதவி செய்திருக்கிறார் கள். இந்த விருந்தையும் வேடிக்கையையும் பார்க்கும்படி அநேக வேதபாரகரும் பரிசேயரும் அந்த வீட்டுக்குமுன் கூடி நின்றார்கள். புஷ்பமுள்ள இடத்தில் வண்டினங்கள் வந்து கூடுவது இயல்புபோல இயேசு இருந்த இடத்தில் மனுவண்டு திரண்டுருண்டு வந்தனர். இயேசு ஆயக்கார ரோடும் பாவிகளோடும் உட்கார்ந்திருப்பதும், சகஜமாய்ப் பேசுவதும், சந்தோஷமாயிருப்பதும், சாப்பிடப்போவதும் அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. இயேசு பாவிகள்மேல் பாராட்டும் நேசம் பாதாளத்தின் குட்டிகளுக்கு ஆச்சரிய மாகவே இருக்கிறது. அவர்கள் தங்களுடைய சுபாவத்தை வைத்து தேவ சுபாவத்தை அளவிடப் பார்க்கிறதினாலேதான் இந்த ஆச்சரியமுண்டாகிறதென்று சொல்லவேண்டியதா யிருக்கிறது. அவர்கள் எப்படியும் ஆச்சரியப்படட்டும்; நாம் இயேசுவையே கவனிப்போம். வாசல் முகப்பில் வழி யில்லாமல் அடைத்துக்கொண்டிருக்கிற வேதபாரகர் முதலியவர்கள் எப்படியோ இயேசுவின் சீஷரிடத்தில் பேசு கிறார்கள். இந்த சீஷர் எதோ அவசரமாக வெளியே போயிருக்கலாம். அல்லவென்று காற்று வரும் வாசலை அடைத்துக்கொண்டு நின்ற கும்பலை விலக்கும்படி போயிருக்கலாம். இதற்குள்ளாக பந்தி பரிமாறப்பட்டு இயேசுவும் மற்றவர்களும் சாப்பிட்டார்கள். வேதபாரகரும்

பரிசேயரும் இதைக் கண்டு, சீஷரை நோக்கி உங்கள் போதகர் பக்ஷன்தான், உத்தமர்தான், ஞானிதான், ஆனால் அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்ன என்று சடைவாக சொன்னார்கள். இயேசு அதைக் கேட்டு,

நோயாளிக்கு வைத்தியன் வேண்டும்
நோயற்றோனுக்கு அவன் வேண்டாம்,
நான் நீதிமான்களை அழைக்க வரவில்லை
நான் பாவிகளை மனந்திருப்ப வந்தேன்

என்று உத்தரவு சொன்னார். இந்த ஞான இரகசியம்தான் இந்த விருந்தையும், மத்தேயுவின் வீட்டையும் மகிமைப் படுத்துகிறதென்கலாம். பாவிகள் கூடிசைக்குள்தான் பாவ மன்னிப்பின் திவ்விய விளம்பரம் கூறப்படும். ஒருவன் தன்னைப் பாவி என்று உணருவதும் அறிக்கையிடுவதும் நலமாயிருக்கிறது. பரிசேயர் முதலியவர்கள் தங்களைப் பாவிகள் வரிசையில் சேர்க்காததால் இயேசு அவர்களைப் பாவ மன்னிப்பைப் பெற்றவர்கள் வரிசையில் சேர்க்கவில்லை. இயேசு மனுஷாவதாரமெடுத்த பல நோக்கங்களில் ஒன்று இப்பொழுது வெளிப்பட்டது. அதாவது 'பாவிகளை மனந் திருப்ப அழைக்கும்படியாகவே.' மனந்திரும்பாத பாவியே, குணப்படாத உள்ளமே, உன் இரட்சண்ய வழிக்குத் திரும்பும்படியாக ஒரு ஆள் பரலோகத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்க நீ இன்னும் மனந்திரும்பாமலிருக்கலாமா? உன்னை ஒருநாளும் நீதிமான் என்று சொல்லாதே! ஒரு பக்தன், நான் என்னை நீதிமான் என்று சொன்னாலும் என் வாய் என்னைக் குற்றம் கண்டுபிடிக்கும் என்று சொன்னார். இன்று மத்தேயு வீடு கலியாண வீடுபோலக் களித்தது. ஒரு ஸ்திரீ தன்னைத் தன் கணவனுக்கு ஒப்புக்கொடுத்து மனமகிழ்ச்சியாயிருப்பதுபோல மத்தேயு தன் சரீரத்தையும் ஆத்துமாவையும் ஆஸ்தியையும் தொழிலையும் இயேசுவுக்குள் தத்தம் செய்து அவரைத் தன் ஞான மணவாளனாகக் கலியாணம் செய்துக்கொண்டார் என்று சொன்னாலும் குற்றமில்லை.

மேலே சொல்லிய பெரிய விருந்திற்குப் பிற்பாடு மத்தேயு சமூலமாய் தமது வீட்டையும் பந்துக்களையும் விட்டு கிறிஸ்து

வின் அப்போஸ்தலரில் ஒருவராக அபிஷேகம் பெற்றார். இவருடைய அப்போஸ்தல ஊழியத்தின் வரலாறுகளைப்பற்றி நமக்கொன்றும் சொல்லப்படவில்லை. இதிலிருந்தே இவர் யாதொரு விசேஷித்த வேலையை செய்திருக்கமாட்டாரென்று நாம் தீர்ப்புசெய்யக்கூடாது. எப்படியும் தன்னைத் தாழ்த்தும் தாழ்மை இவரிடத்தில் நன்றாயிருந்தது. அப்போஸ்தலருடைய அட்டவணையை இவர் எழுதும்போது தம்மை 'ஆயக்காரனாகிய மத்தேயு' என்று சொல்ல கூச்சப்படவில்லை. இவர் பேதுரு முதலியவர்களுடைய பேரைக் காட்டும்போது 'செம்படவர்' என்று சொல்லவுமில்லை. நாம் வெட்டியெடுக்கப்பட்ட கன்மலையும், தோண்டியெடுக்கப்பட்ட துறவையும் மறந்துபோகக் கூடாது.

எப்படியும் இவர் ஒரு ஆயக்காரராயிருந்தாரென்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவோம். இயேசுவின் வரலாற்றை எழுத்தில் உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று முதலாவது மனதில் எண்ணினவர் இவர்தான். புதிய ஏற்பாட்டுக்கு அஸ்திபாரமாக இவரே முதலாம் ஆகமத்தை எழுதியிருக்கிறார். அது பெரும்பாலும் மத்தேயுவின் சுவிசேஷம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இவர் எகிப்து எத்தியோப்பியா தேசங்களில் பிரசங்கித்து, பிலிப்புவினால் தீட்சை பெற்ற கந்தாகேயின் மந்திரியிடம் வாசம்பண்ணி இயல்பான மரணமடைந்தார் என்றும், இரத்தச் சாட்சியாக மரித்ததாக வேறு சிலரும் சொல்லுகிறார்கள். இவர் இயேசுவின் மலைப்பிரசங்கத்தையும், பாடுபட்ட வாரத்தில் அவர் பேசின சம்பாஷணைகளையும் அதிக நுட்பமாய் எழுதியிருப்பதால் கவனிக்கிற குணமும், ஞாபக சக்தியும் அதிகமாயிருந்ததென்று விளங்குகிறது. ஒருவேளை அவைகளை ஞாபகக் குறிப்பில் எழுதி வைத்திருந்தாரென்று சொல்வோமானால், இயேசுவின் போதனைகளை மேன்மையாய் மதிக்கிற குணம் இருந்ததென்பது தெளிவாகிறது. இவருடைய சுவிசேஷத்தில் அநேக பழைய ஏற்பாட்டு எபிரெயு வாசகங்களிருக்கின்றன. இதிலிருந்தே இவர் எபிரெயு பாஷையில் தேறினவராயிருந்ததோடு அநேக பழைய ஏற்பாட்டு வாசகங்களைப் பாராமல் படித்தவராயுமிருந்தாரென்று சொல்லலாம்.

ஏனெனில் அநேக வசனங்கள் எபிரெயு பிரதியிலுள்ளபடியே இவருடைய சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்று பார்க்கிறோம். இவர் தமது ஆகமத்தை முதலாவது எபிரெயு பாஷையிலும் பின்பு கிரேக்க பாஷையிலும் எழுதிப் பிரசித்தப்படுத்தினரென்று எண்ணப்படுகிறது; இவருடைய சுவிசேஷம் இல்லாத பட்சத்தில் கிறிஸ்துவின் சரித்திர சம்பந்தமாயுள்ள விசேஷித்த வரலாறுகளாகிய சாஸ்திரிகளின் சந்திப்பு, இயேசு எகிப்துக்குக் கொண்டுபோகப் பட்டது, குற்றமில்லாத பாலகர் கொலையுண்டது, பத்து கன்னிகைகளின் உவமை, பிலாத்துவின் மனைவி கண்ட சொப்பனம், பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்தது, போர்ச் சேவகருக்குப் பரிதானம் கொடுத்தது ஆகிய இச்சங்கதிகள் என்றென்றைக்கும் உலகத்துக்கு மறைக்கப்பட்டே இருக்கும்.

சகேயு

குள்ளபக்தன்

இக்காலத்தில் நாம் ஒரு வேளாவேளை குள்ளரைக் காண்கிறதுண்டு. தன் ஜீவகாலத்தில் முதலாந்தரம் இப்படிப்பட்ட குள்ளரைக் காணும் மனுஷர் அதிசயப்பட்டு தங்கள் நடையை நிறுத்தி அப்படிப்பட்டவர்களுடைய அவயவக் கூறையும் அதின் அளவையும் நடையையும் கவனிப்பார்கள். அவைகளைக் கண்டவுடனே அதிசயமாய்ப் பார்ப்பாரும், சம்பாஷிப்பாருமுண்டு; அவர்களுக்காகப் பரிதபிப்பாரும், உதவிசெய்கிறவர்களுமுண்டு. அவர்கள் பிச்சைக்கென்று கைவிரித்தால், கன்னெஞ்சனும் காசு போட ஏவப்படுவான். வேதாகமத்திலும் ஒரு குள்ள பக்தன் இருக்கிறார். அவர் பேர் சகேயு. இந்தக் குள்ளபக்தனின் வரலாறுகளை நாம் சற்று நேரம் தியானிப்பது நமது மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கும் என்பதற்கு ஐயமில்லை.

இவருடைய பூர்வோத்தரத்தைக் குறித்தாவது, இவருடைய பிதா, மாதாவின் வரலாற்றைப்பற்றியாவது நமக்கொன்றும் தெரியாது. என்றாலும் இவர் அக்காலத்து உரோமை அதிகாரிகளுடைய உயர்ந்த உத்தியோகத்துக்குத் தகுதியுடையவராயிருந்தாரென்பதை நாம் பார்க்கும்போது, இளமையில் உயர்ந்த கல்வி கற்று தேறினவராயிருந்தாரென்று விளங்குகிறது. இவர் பார்த்துவந்த உத்தியோகத்துக்கு ஆயத்தொழில் என்று பேர். இதற்குமுன் இந்தத் தொழிலையுடையவராயிருந்த வேறொருவரைப்பற்றி (மத்தேயு) நாம் சொல்லிய பல குறிப்புகளால் இந்த வேலையைச் செய்துவந்த ஆட்கள் யூதருக்குள் எவ்வளவு தாழ்வாய் எண்ணப்பட்டார்களென்று அறிவீர்கள். அதை இவ்விடத்தில் சொல்லவேண்டியதில்லை. எப்படியும் மத்தேயுவின்

ஆயத்தொழிலுக்கும் இந்தக் குள்ளபக்தர் பார்த்த ஆயத் தொழிலுக்கும் சற்று வித்தியாசமிருந்தது. மத்தேயு கடலோரத்திலும் இவர் உள்நாட்டிலும் உத்தியோகம் செய்து வந்தார்கள். மத்தேயுவின் தொழில் காசுக்கடைக்காரன் போலுள்ளதும், அல்லது கடலையடுத்த வேலையுமாயிருந்தது. இவருக்கோ உள்நாட்டு வியாபார சரக்குகளின் ஆயத்தை யடுத்த வேலையாயிருந்தது. மேலும் மத்தேயு சாதாரண ஆயக்காரனுயும் இவர் ஆயக்காரருக்குத் தலைவனுயும் இருந் தார் என்று காண்கிறோம். ஆகவே ஆயத்துறை உத்தியோகத் தில் இவர் உயர்ந்த படியிலும் மத்தேயு தாழ்ந்த படியிலும் இருந்தார்கள். இவர் வளர்த்தியில் மகா குள்ளனுயிருந்தார். பெரும்பாலும் ஆளும் கனமும், அதிகாரம் செய்யும் பாத்திப மும் ஆளில் நெட்டையும் ஆணவத்தில் மூப்புமாய இருக்கிற வர்களுக்குக் கிடைக்கிறதுண்டு. இது உலகத்தின் வழக்கம். இந்த சாதாரண வழக்கம் சகேயுவின் விஷயத்தில் மாறி யிருக்கிறதென்று காண்கிறோம். ஆயக்காரருக்குத் தலைவ னுகிறது சின்ன காரியமல்ல; அதிலும் குள்ளன் அதைப் பெறுவது அசாத்தியம். அந்தக் குள்ளனிலிருந்த ஏதோ விசேஷம் இவரைப் பெரியவனுக்கிற்றேயன்றி வேறல்ல. இவர் தமது புஜபல பராக்கிரமத்தின் நிமித்தமும், சொற் சாதுரியத்தினிமித்தமும் இந்த உயர்ந்த அலுவலுக்கு வந்திருக்கமாட்டார். ஏனெனில் இப்படிப்பட்ட சித்திரக் குள்ளருக்கு பராக்கிரமமேது? சொற்சாதுரியமேது? ஒரு வேளை இவர் தமது பண பராக்கிரமத்தினுலே பெரியதனக் காரராகி யிருக்கலாமென்று சொன்னுல் பணத்திரட்சி இப்படிப்பட்ட குள்ளரைத் தன் வீட்டுக்குள் அம்பலம் பண்ணச் செய்யுமேயன்றி ஐசுவரியமுள்ள உரோமை சேவ கத்தை இவருக்குத் திருப்பி அதை இவர் திருப்திகரமாய் நடத்த வழி பண்ணுமா? இவருக்குக் கிடைத்த உயர்ந்த உத்தியோகம் இவருடைய உண்மையினுலும் சாந்த குணத்தி னுலுமென்றே சொல்லவேண்டியது. உண்மையும் சாந்த குணமும் தவிர வேறென்றும் சர்க்கார் உத்தியோகத்தில் ஒருவனைப் பெரியவனுக்கமாட்டாது.

இவர் தேவதாபக்தி உடையவருமாயிருந்தார். இதுவே இவருடைய மேன்மைக்கும் உயர்வுக்கும் காரணமாயிருந்

தது. இவர் ஜாதியில் யூதனுயிருந்தும் மற்ற யூதரைப்போல் உரோமை அதிகாரத்தை எதிர்க்கிறவரும் பழிக்கிறவருமா யிராமல் தங்களுடைய நிலைமை தேவச் செயலால் மாற்றப் பட்டிருக்கிறதென்பதை பக்தி விநயமாய் சிந்தித்து அவர் களுக்கு அடங்கி நடந்து வந்தார். இவர் உரோமருடைய நுகத்தைப் பொறுமையோடு சுமந்தாலும் தங்களுக்குள் ளிருந்து தோன்றுவாரென்று முற்பிதாக்கள் மூலமாயும் சொல்லப்பட்ட மேசியாவை தினந்தோறும் எதிர்பார்த்துக் கொண்டே வந்தார். அக்காலத்தில் நடந்துவந்த பல இராச்சியபாரத்தின் மாறுதல்களும், யூத ஜனத்திற்குள் நடந்த பல நடவடிக்கைகளும் எல்லாம் கூடி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் வருகை சமீபித்திருக்கிறதென் கிற எண்ணத்தை அவர் மனதில் உணர்த்தினது என்பது மெய்; இப்படியிருக்கும் காலத்தில் இயேசு என்ற ஒருவரைப் பற்றி அங்காடெங்கும் பிரபலியமாய்ப் பேசிக்கொள்ளப் பட்டது. அவருடைய வாயழகு, முக அழகு, கண்ணழகு, சொல்லழகு இவைகளைப்பற்றி மாத்திரமல்ல, அவர் குருட ருக்குப் பார்வையும், செவிடருக்கு கேட்கும் சக்தியும் கொடுக்கிறரென்றும், அவரிடம் போகிற நோயாளிகள் யாவரும் குணமாகிறார்கள் என்றும் செத்தவர்களையும் அவர் உயிரோடெழுப்பி இருக்கிறரென்றும் இந்தக் குள்ளபக்தர் கேள்விப்பட்டார்; கேள்விப்பட்டவுடனே ஒருவேளை இவர் தான் வரவேண்டிய மேசியாவோ என்று தமக்குள் நினைத்து அவரை எப்படியும் பார்க்க வேண்டுமென்று எண்ணினார். தலையானது பூமிக்குச் சமீபமாயிருக்கும் குள்ளனுக்கு இருக் கிற ஆசையின் வளர்த்தியை சற்றே பாருங்கள்! இந்தக் குள்ளபக்தரைப் பழித்து பரியாசம் பண்ணவேண்டுமென்று விரும்புகிற பலர், இந்தக் குள்ளன் ஆத்தும ஆவலாலாவது, ஞான உணர்ச்சியினுலாவது இயேசுவைப் பார்க்க விரும்பா மல், குருடருக்குக் கண் கொடுக்கிறதாக நாம் கேள்விப் படுகிற இயேசு குட்டையனை நெட்டையனுக்க மாட்டாரா என்று உள்ளத்தில் எண்ணி இப்படி ஆசைப்பட்டிருப்பான் என்று சொன்னாலும் சொல்லலாம். இவர் குள்ளனுகி உலகப் பிரகாரமாய் ஒரு குறைவையும் அநுபவிக்கவில்லை. மேலும் இவர் ஞான உணர்ச்சியால் இயேசுவைக் காண ஆசைப்பட்

டாரேயன்றி வேறல்லவென்று பின்வரும் வரலாறு தெளிவாக விளக்குகிறது.

இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்கவே அவர் ஆசைப்பட்டார். அவர் ஆசைப்பட்டது மாத்திரமல்ல, தன் ஆசையை நிறைவேற்ற வகைதேடினார். என்னென்ன வகையில் அவரைத் தேட வகைதேடினரென்று தெரியாது; ஒருவேளை அவர் இன்ன ஊரிலிருக்கிறரென்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்க பலதரம் தமது வேலைமார்க்கமாய்ப் புறப்பட்டுப் போய் இருக்கலாம். அதற்குள்ளாக இயேசு வேறொரு ஊருக்குப் புறப்பட்டுவிடலாம். இவர் ஏமாந்து போகலாம். இப்படிப் பலதரம் ஏமாந்து கடைசியாக ஒரு நாள் தன் வீட்டுக்கு வரவழைக்கலாமோ என்றும் யோசித்து வகைதேடி இருக்கலாம். இந்த எண்ணம் அவர் மனதுக்குள் வெகு காலமாயிருந்தும் தான் ஆயக்காரனைபடியால், இயேசு வரமாட்டாரென்று உத்தேசித்து அந்த எண்ணத்தை நிறுத்தி இருக்கலாம். பின்பு கடைசியாக அவர் கலிலேயா கடலோரத்தில் மத்தேயு என்று சொல்லப்பட்ட ஒரு ஆயக்காரனுடைய வீட்டில் விருந்துண்டாரென்ற செய்தியைக் கேட்டபோது இனி நாம் கூப்பிட்டாலும் வருவார் என்று தீர்மானித்திருக்கலாம். இதெல்லாம் அவர் இயேசுவை எப்படியாவது ஒருதரம் பார்க்க வேண்டுமென்று வகை தேடின முறையென்று சொல்லலாம்.

இயேசு கடைசியாக கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் பயணப்பட்டபோது ஒருநாள் எரிகோ என்னும் பட்டணத்திற்கு வந்தார். இந்தக் குள்ளபக்தன் இந்தப் பட்டணத்தில்தானிருந்தார். இவர் ஆசையை நிறைவேற்றவே இயேசு சுவாமி இந்த ஊருக்கு வந்தார் என்று சொன்னாலும் குற்றமில்லை. இப்பொழுது எரிகோ சிற்றூராய் சில துலுக்கர் வசிக்கும் குடிசையுள்ளதாயிருந்தபோதிலும் முன்காலத்தில் இதின் மாட்சிமை அதிகமாயிருந்தது. யோசுவாவின் காலத்தில் இது யோர்தானுக்கு மேற்கேயுள்ள பூமியனைத்துக்கும் ஒரு திறவுகோல்போல் இராஜதானியும், கோட்டை கொத்தளமுமுள்ள நகரியாயுமிருந்தது. இதின் மதில்களை ஆண்டவர் அற்புதமாய்க் குப்புறக் கிடத்தாத

பட்சத்தில் இஸ்ரவேலர் காணானை சுதந்தரிக்கவே மாட்டார் கள். இந்தப் பூமியும் பொருளனைத்தும் கர்த்தருக்குப் பரி சுத்தமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்ததால் பிற்காலத்தில் இது ஆசாரியருடைய தலைநகரியாயுமிருந்தது. யூத ஆசாரியர் குடும்பங்களில் ஆயக்காருமிருந்தார்கள். இந்தக் குள்ள பக்தன் பூர்வ ஆசாரிய குடும்பத்தின் கொடிவழியைச் சேர்ந்தவராயிருந்தாலும் இருக்கலாம். உரோம அரசாட்சி யின் காலத்திலும் இது சற்று பேர்போன ஊராயும், பல வியாபாரத்தின் பண்டகசாலைப் பட்டணம்போலும் இருந் தது. இதில் நடந்து வந்த மிச்சமான வியாபாரம் கந்த வர்க்கமும், பிசினும், வாசனைத் திரவியங்களுந்தான். இந்த ஊரெங்கும் சுகந்த பரிமளம் வீசும், இது 'கந்தவர்க்க நகரம்' என்றும், 'புஷ்பப் பட்டணம்' என்றும், 'பேரீந்து சோலை' என்றும், 'கர்த்தருடைய பரதீசு' என்றும் அழைக்கப்பட்டு வந்தது. யோசுவா இதற்குள்ளிருந்த ஒரு வேசியை இரட் சித்தார். இயேசு இதற்குள்ளிருக்கிற ஒரு ஆயக்காரனின் தலைவனை இரட்சிக்க எழுந்தருளிப் போகிறார்.

இயேசு எரிகோவுக்குச் சமீபமாய் வந்தபோது திரள் ஜனங்களுடைய கூட்டமுண்டானது. அது அவ்வூர் ஜனங்க ளுடைய கூட்டமாய் மாத்திரமிராமல், பல பிரயாணிக ளடங்கிய கூட்டமாயுமிருந்தது. ஏனெனில் எருசலேமில் வருஷந்தோறும் கொண்டாடப்பட்ட பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்ததால் அதற்கென்று வடநாட்டிலிருந்த பல பிரயாணக்காரர் அவ்வழியாய் நடந்து போகவேண்டிய பாதையுமாயிருந்தது. இதுதான் இயேசு எரிகோவுக்கு வந்த முதலாம் பயணமாயுமிருந்தது. அவர் பட்டணத்துக்குள் பிரவேசிக்கும் முன்னேயே பெருங்கூட்டம் அவரைச் சுற்றிக் கொண்டதற்கு ஒரு காரணமிருந்தது. ஏனெனில் அவர் ஊருக்குள் வருகிற வழியில், ஊர் அருகே வழியோரத்தில் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த ஒரு குருடனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவனுக்குப் பார்வையைக் கொடுத் தார். அந்த அற்புதத்தைக் கண்டு ஜனங்கள் ஏகமாய்க் கூடி தங்கள் மனம் போனபடியெல்லாம் மகிழ்ந்து தேவனைத் துதித்தார்கள். அந்தக் குருடனைக் குணமாக்கினது ஊருக்கு

அருகே நடந்தபடியால் அச்செய்தி ஊருக்குள் ஒரு நொடிக் குள் தொனித்தது. குள்ளபக்தனுடைய வீடும் அதற்குச் சமீபமாய் இருந்திருக்க வேண்டியது.' இப்படி ஊரடங்கலும் திரண்டோடும் காட்சியும் குருடனுக்குக் கண் கிடைத்ததாம் என்கிற வரலாறும் குள்ளபக்தரையும் தூக்கிவிட்டது. நெடு நாளாய்க் காத்திருந்த காரியம் இன்று கைகூடுகிறதென்று சந்தோஷப்பட்டு இவரும் போனார். ஐயோ இவர் போய் காரியமென்ன? இவர் குள்ளனல்லவா? இவருடைய தலை மற்ற வர்களுடைய இடுப்பளவு இருந்ததாக்கும்; இவர் தமது குள்ளக்காலால் குடுகுடுவென்றோடி கும்பலோடு கூடிக் குதித்துக் குதித்துப் பார்த்தும் இயேசுவின் முகம் தெரிய வில்லை. ஒருவேளை அவர் பேசின ஞானபோதனைகளைக் கேட்டாலும் கேட்டிருக்கலாம். ஆளைப் பாராமல் சத்தம் கேட்டால் பிரயோஜனமென்ன? அப்படியானால் இவரும் ஒரு குருடன்தானே, குருடருக்கு ஆள் உருவம் தெரியா விட்டாலும், சத்தம் தெரியுமல்லவா? மற்றவர்களுக்கு இடுப் பும் வயிறும் இருந்த இடத்தில் இவருக்குக் கண்ணும் தலையு மிருந்தது. இவருடைய உயரம் இயேசுவை இடுப்புமட்டும் பார்க்க ஏதுவாயிருந்தும். கூட்டத்தின் நெருக்கத்தாலும் அவரவர் தரித்திருந்த உடையாலும் அவர் ஒன்றும் பார்க்கக் கூடாதே போயிற்று. ஆனாலும் இந்தக் குட்டையனுக்கு நெட்டையான புத்தியிருந்தது. எப்படியும் இயேசுவைப் பாராமல் தீராது என்கிற ஆவல் அவருக்குள்ளிருந்தது. அந்த ஆசைக்கேற்ற மூளையும் அவருடைய தலையிலிருந்தது, அந்த விவேகத்தைச் சற்றே கவனியுங்கள். ஜனக்கூட்டத்தில் அவரைக் காண்பது அசாத்தியமென்று கண்ட குள்ளபக்தர், ஊருக்குள் பாதையில் முன்னுக ஓடி இயேசுவைப் பார்க் கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக்கொண்டார். ஆள் குட்டையானாலும் புத்தி நெட்டையாய்த்தானிருக்கிறது. 'முன்னுக ஓடி' 'மரத்தில் ஏறினார்' என்று வரும் இரு வாசக மும் இவருடைய ஆசையின் அளவை நன்றாய்க் காட்டு கிறது. இவர் சிறு பையனாயிராமல் பெரிய ஆளாயிருந்தார்; வளர்த்தியில் குட்டையும் வயதில் முதிர்ந்து மிருந்தாரென் பதற்குச் சந்தேகமில்லை. ஆயக்காரருக்கெல்லாம் பெரிய உத்தியோகஸ்தனும் பணக்காரனுமான இவர் ஓடுகிறதும்

மரத்தின்மேல் ஏறுகிறதும், அதின் இலைகளுக்குள் அணில் போல் மறைந்திருந்து, அவ்வழியாய் வரப்போகிற இயேசுவைக் கவனிக்கிறதும் விந்தையாயிருக்கிறதல்லவா? ஆம் இது விந்தையிலும் விந்தையே. இவர் ஓடினதையும் மரத்தின்மேல் தொத்தினதையும் மற்றவர்கள் கண்டால் பரியாசம் பண்ணுதிருப்பார்களோ? எவரும் அறியாமல் இவர் ஓடி மரத்தின்மேல் ஏறிக்கொண்டது இவருடைய சாமர்த்தியம் தான். இவருக்கு சவ்வாசு பட்டம் கொடுக்கிறதில் குற்றமில்லை. இந்த சித்திரக் குள்ளபக்தர் எப்போது மாமேறப் படித்தாரோ தெரியவில்லை. இவருடைய தொழில் பெரும்பாலும் மரங்களின் சம்பந்தமாகவே இருந்தது. ஏனெனில், நாம் முன் சொன்னபடி இவர் அத்திசைகளில் உண்டான சாம்பிராணி, பிசின், கற்பூரம் முதலிய கந்த வர்க்கங்களின் வியாபாரத்துக்குரிய ஆயத்துக்குத் தலைவராயிருந்தார். இந்த சம்பார வர்க்கங்கள் பெரும்பாலும் மரங்களிலிருந்து தான் எடுத்து வந்தார்கள். அப்படிப்பட்ட மரங்கள் எரிகோவின் மைதானங்களில் மிச்சமாயிருந்தது. ஆதலால் அவர் தமது பாலிய காலத்தில் இப்படிப்பட்ட சம்பார மரங்களில் ஏறி கந்த வர்க்கங்கள் சேகரித்து வரவர உயர்ந்த உத்தியோகத்தில் வைக்கப்பட்டிருக்கலாம். இதெல்லாம் ஒரு அபிப்பிராயமேயன்றி வேறெல்ல. என்றாலும் அவர் இயேசுவைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினது நிசம்தான். இப்படி ஏறினதற்கு முந்தின வழக்கம் துணைசெய்யாத பட்சத்தில் அன்று அவருக்குள்ளிருந்த நீங்காத ஆசையின் வீறுப்பே தைரியத்தையும் பலத்தையும் கொடுத்திருக்க வேண்டியது. இதை ஒருவரும் ஆட்சேபிக்கக் கூடாது. இயேசுவின்மேல் ஆசை எழும்பினால் இப்படி எழும்ப வேண்டும்; மற்றபடி அந்த ஆசையில் இலாபமென்ன? இயேசு பக்தரால் எப்போதும் ஆசைப்பட்டவராகவே இருக்கிறார். அவருடைய அவதாரத்துக்கு முன்னமே அநேக தீர்க்கதரிசிகளும், இராஜாக்களும் அவரையும் அவருடைய செய்கைகளையும் காண ஆசைப்பட்டும் கண்டுகொள்ளாமலே மரித்தார்கள். சிமியோன் அவரைக் காணக் காத்திருந்து கண்டவுடனே, என் இரட்சகரைக் கண்டேன், இனி நான் சமாதானத்தோடு மரிப்பேனாக என்று சொல்லி தமது கல்லறைக்

குள் அடங்கினர். சாஸ்திரிகள் அவரைப் பார்க்க ஆசைப் பட்டு வெகுதூரம் பயணப்பட்டு வந்து தங்கள் காணிக்கை களைச் செலுத்தினர்கள். இவர்களெல்லாருக்கும் மேலான வாழ்வு குள்ளபக்தருக்குக் கிடைத்தது. இவர் தமது மன தில் கொண்டிருந்த ஆசையை நிறைவேற்ற இயேசுவே அவ ருடைய ஊருக்குப் போனர். இயேசுவுக்கும் பாவிக்கும் உள்ள சம்பந்தம் சிலதரம் இவ்வண்ணமாகவும் நடக்கிறது. சிலதரம் பாவிகள் தம்மண்டை ஓடிவரும்படியான வழிகளை யும், சிலதரம் தாம் அவர்களண்டை போய் தேடுகிறதுமான வழிகளையும் கட்டளையிடுகிறார்; விசுவாசத்தில் வளர்ந்தவனைத் தம்மிடத்தில் வரவைக்கிறதும் விசுவாசத்தில் குள்ளனைவ னிடத்தில் தாம் போகிறதுமாக இரட்சண்ய செயல்களை நடத்துகிற முறையுமிருக்கிறது. இயேசுவே! நானொரு விசு வாச குள்ளன்; என்னிடத்தில் வந்து என்னை ஆசீர்வதியும் என்று ஒவ்வொருவரும் மன்றாடுவது தகுதி.

இயேசு ஊருக்குள் வர விரும்பவே ஜனங்கள் கலந்து அவருக்கு வழிவிட்டுக் கூடவே வந்தார்கள். என்றாலும் அவர் தாராளமாய் நடந்துபோக ஏதுவில்லை. அவர் சில தூரம் வரவே தம்மைப் போகவிடாத வண்ணமாய் முன் தொடர்ந்து வருகிறவர்கள் திரள் அதிகப்பட்டது. அவர்களுக்கு ஞானோபதேசம் சொல்லாமலும், பரம ஞானங்களைப் பகிர்ந்து கொடாமலுமிருப்பது தகுதியல்லவென்று கண்டு வழியோ ரத்திலிருந்த அந்த அத்திமரத்தண்டை அந்த கும்பலோடு போனர். ஒருவேளை வெயில் அந்நேரத்தில் அதிக உஷ்ண மாயிருந்ததால் மரத்தின் நிழலை அவர் நாடிப்போயிருக்க லாமென்று சிலர் நினைக்கலாம். அப்படி நினைக்க ஏதுவில்லை, குருடனை குணமாக்கினது முதல் இந்நேரமட்டாக வெயிலில் நின்றவருக்கு இது ஒரு விசேஷித்த காரணமாயிருக்க மாட்டாது. அங்கே சகேயு என்ற ஒரு குள்ள பக்தரைத் தமக்குப் பிள்ளையாக்கும் சிறந்த நோக்கத்தோடு போனாரே யன்றி வேறல்ல. இயேசு தான் ஏறியிருக்கும் மரத்தடியில் வந்து நிற்பது குள்ள பக்தருக்கு ஆனந்தமாயிருந்தது. ஆகா நாம் விரும்பின வண்ணம் இயேசுவை நன்றாய் பார்த் துக்கொள்ளலாமென்று நினைத்துத்தான் அவர் ஆனந்தமா

யிருந்தார். ஆனாலும் ஐயோ அவருடைய ஆசை கைகூட வில்லை. தம்மை ஒருவரும் கண்டுகொள்ளாதபடி குள்ள பக்தர் செழித்துப் படர்ந்திருந்த இலைகளுக்குள்ளே மறைந் திருந்தார். அக்கிளைகளின் இடைவழியாய் இயேசுவின் முகத்தைப் பார்ப்பது அசாத்தியமாயிருந்தது. இது அவருக் குச்சொல்லமுடியாதமனவருத்தத்தைக்கொடுத்தது;வேஷம் போட்டும் காசைக் காணேம் என்று ஒரு பண்டாரம் புலம்பு வதுபோல இவருடைய காரியமுமிருந்தது. இயேசுவின் மேல் தாபமுண்டு இவ்வளவு பாடுபட்டும், அவரும் இவ் வளவு சமீபத்தில் வந்தும் இன்னம் முகம் தெரியவில்லையே என்ற ஏக்கம் அவருக்குள் மேலிட்டது. ஏனெனில் மரத் தின்மேலிருக்கிற ஒருவனுக்கு மரத்தடியில் பேசிக்கொண் டிருக்கிறவனுடைய தலையும் தலைப்பாகையும் தெரியுமேயன்றி முகமும் கண்ணும் தெரியாதே. இதெல்லாம் முக்கத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படும் ஒரு பிள்ளைக்கு முது கைக் காட்டுகிறதுபோல் இருந்ததேயன்றி வேறல்ல; குள்ள பக்தரின் இருதய சிந்தனைகளையும் மனச்சோர்வையும் மரத் தடியில் நின்ற இயேசு தேவன் அறிந்து, தாய்முகம் பாராத பிள்ளைபோல் தவிக்கும் குள்ள பக்தருக்கு தமது திருமுக தரிசனம் கிடைக்கும்படி அண்ணாந்துபார்த்தார். ஆ! கருணை நாதனே! கனிந்த இயேசுவே! உமக்குத் துதியம்! துதியம்!! பாவப்பிள்ளையின் ஏக்கம் அறிந்து, மயக்கம் கண்டு, தியாகம் பார்த்து இரட்சண்யம் கொடுக்கும் புண்ணியநாதரே உமக்குத் துதியம்! துதியம்!! உம்மைக் காண விரும்பும் பிள்ளைக்கு நீர் வெகுகாலம் உமது முகத்தைக் காட்டாதே போனாலும் அப்பிள்ளை ஏமாந்து போகாதபடி நீர் காட்டவே காட்டுகிறீர், இயேசுவே உமது பார்வையிலும் நீர் பலனைக் கண்டடைகிறீர். ஆண்டவரே நீர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரானதால் உமது கண் எங்கும் பார்த்தறியக்கூடிய சக்தியுள்ளதாயிருந்தது. சகேயு அந்த மரத்தின்மேலேறினதையும், இலைகளுக்குள் ஒளித்திருந்துகொண்டு உம்மை நோக்குவ்வதையும் நீர் ஒருவரே அன்று அறிந்துகொண்டீர். அத்திமரத் தின் மேலிருந்த குள்ள பக்தரை அண்ணாந்து பார்த்த அருள் கண்ணனே எட்டிமாத்தின் மேலேறி கிடந்து பாவ

மாகிய எட்டிப் பழங்களைத் தின்று உம்மைப்பற்றிக் கேள்விப்பட்டு உமது இரட்சண்யத்தைக் காணும் காலத்திற்கு எதிர்நோக்கும் என்னை அண்ணாந்து பார்ப்பீராக. நான் இருக்கும் எட்டிமரத்தண்டை நீர் எட்டி நடந்து வந்து ஏறிட்டுப் பாரும்! இயேசுவே ஏறிட்டுப் பாரும்!!

இயேசு அண்ணாந்துபார்த்தது அத்திப்பழத்துக்கல்ல, ஒரு பக்தி பழத்துக்காகத்தான். பட்சிகள் பிரியமாய்த் தின்னும் அந்தக் காட்டத்திப் பழங்களோடு தேவனுக்குப் பிரியமான ஒரு மனுஷ பழமிருந்தது. ஆதித்தாய் ஏதேன் வனத்திலே பார்வைக்கு இன்பமும் நாவுக்கு ருசியுமாயிருக்கிறதென்று கண்டு ஒரு பழத்தை பிடுங்கினாளே, இயேசு எரிகோ வனத்திலே நின்று ஒரு காட்டத்திமரத்தின்மேல் சகேயு[1] என்றழைக்கப்பட்ட நீதியும் பரிசுத்தமுமுள்ள ஒரு திவ்விய கனியிருக்கிறதைக் கண்டு அதைப் பறிக்க மகிழ்ச்சியாக அண்ணாந்துபார்த்தார். இயேசு அண்ணாந்து பார்த்து அவரைக் கண்டுகொண்டார். அவருடைய காட்சியை இலைகளாவது, கொம்புகளாவது, கிளைகளாவது, மேகமாவது, முகிலாவது, தூரமாவது, ஆழமாவது குறைத்து விடவும் மறைத்துவிடவும் கூடாது. பாவத்தைப் பாராத அந்த சுத்த கண்ணன் வானத்திலும், பூமியிலும், ஆகாயத்திலும், ஆழத்திலுமுள்ள சகல விஷயங்களையும் அதே நேரத்தில் அறிந்துகொள்ளுகிறார். அத்திமரத்தின் மேலிருக்கும் சகேயு என்னும் அந்த பக்தி பழத்தைத் தமது கைவசப்படுத்தும்படி அவர் தமது காட்சி பாணத்தை எய்யவே அது பலமாய்த் தன் கிரியையை நடப்பித்தது. அப்புறம் அவர் தமது சத்தபாணத்தைக்கொண்டு அப்பழம் தாழ்ந்த தரையில் தமது பாதத்தண்டை விழும்படிச் செய்யக் கருதி,

'சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கிவா
நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்'

என்றார். அந்நிமிஷமே சகேயு இறங்கி சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டுபோனார் என்று அறிகிறோம். இச்சமயத்தில் நாமும்கூட நின்றிருந்தால் என்ன நினைவுண்

---

[1] சகேயு என்ற பேருக்கு சுத்தவான், நீதிமான் என்றர்த்தம்.

டாகும்? நாம் இந்தக் குள்ளபக்தரைக் கேலிபண்ணும்படி வாயெடுத்தாலும் எடுக்கலாம். ஆனல் இவருடைய நடபடிக் கைகளெல்லாம் இயேசுவின்மேல் அவருக்கிருந்த பூரண நேசத்தின் கூறுபாடுகளும், பாசத்தின் போங்குமாயிருக்கிற தேயன்றி வேறல்ல. நிச்சயமாகவே அச்சமயத்தில் இயேசு வுடன்கூட நின்ற கும்புகளில் பலர், சகேயு கிளைகளை விலக்கி கொம்புகளில் தாவி கீழே இறங்குகிற வேடிக்கையைப் பார்த் துக் கொல்லென்று நகைத்திருப்பார்கள். ஆனல் குள்ள பக்தருக்கு இதெல்லாம் வெட்கமாக அல்ல, கனமான செய்கைபோல எண்ணிக்கொள்ளப்பட்டது. ஒருவேளை இவ்வளவு விசுவாசமும் பாசமும் காட்டாத பட்சத்தில் கடவுளின் கருணை அவருக்குக் கிட்டாதிருக்கலாம். நான் கிறிஸ்துவை மட்டுமிஞ்சி நேசிக்கிறதாகக் காட்டினல் உலகம் நகைக்குமே என்று ஒரு கிறிஸ்தவனும் எண்ணலாகாது. அவர்மேல் பூரணபாசத்தைக் காட்டும் பக்தர் எக்காலத்திலும் உலகத்தாரால் நகைக்கப்பட்டுத்தான் வருகிறார்கள். மெய் பக்தியினிமித்தம் உலகத்தால் பக்தருக்குண்டாகும் பழிப்பும் பரியாசமுமே அதின் உலக இலாபமாக ஆண்டவர் தீர்மானித் திருக்கிறார் என்று சொல்லவேண்டியது.

சகேயுவுக்கு இயேசுவின்மேலுண்டான விருப்பமும் ஆசை யும் வேடிக்கைப் பிரகாரமாயிராமல் இரட்சண்ய சம்பந்தமா யிருந்தது; அது வேடிக்கைப் போங்காய் இருந்தது; மெய்யா லும், மரத்தின்மேல் ஒளித்துக் கிடக்கும் தன்னை இவ்வளவு கூட்டத்துக்கு முன் பேர் சொல்லிக் கூப்பிட்டு அவமானம் செய்துவிட்டாரே என்று மனத்தாங்கலுண்டாகி அந்த மரத்தைவிட்டு இறங்கவேமாட்டார், அல்லது இந்த அவ மானத்தைக்கேட்டு இனி உயிர் வைத்திருப்பது தகாது என்று மரத்திலிருந்து விழுந்து செத்திருக்கலாம். அவர் தமது ஆசை நிறைவேறின முறையிலே தேவ நடத்துதலும் இரட்சண்ய தெய்வீகமும் இருக்கிறதென்று கண்டு மகிழ்ச்சியோடு மரத்திலிருந்து இறங்கினர். 'சகேயுவே' என்று இயேசு பேர் சொல்லிக் கூப்பிட்டது இந்த இரட்சண்ய சந்தோஷத் துக்குக் காரணமாயிருந்தது. தன்னை இதற்குமுன் அறியாத வரும், தன் ஆசையைப்பற்றிக் கேள்விப்படாதவரும் தன்

குடும்பத்தோடும் ஊரோடும் சம்பந்தப்படாதவருமான ஒரு புது ஆள் தன்னுடைய விருத்தசேதனச் சடங்கு நடந்த சமயத்தில்கூட இருந்த சாட்சிபோலும், ஒரே பள்ளிக் கூடத்தில் வாசித்து, ஒரே தெருவில் விளையாடின சிநேகிதன் போலும், ஒரே கலத்தில் உண்ட உறவன்போலும் சகேயுவே என்று பேர் சொல்லிக் கூப்பிட்டது அவருடைய மனதை முற்றிலும் மாற்றி, இயேசுவின் தெய்வீகத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட வரலாறு முழுவதையும் நம்பப் பண்ணிற்று. இயேசு நம்மையும் அறிவார், நமது பேரையும் அறிவார், நமது குணத்தையும் அறிவார். ஏனெனில் அவர் வெறும் மனுஷனுய் மாத்திரமல்ல, அவதாரமெடுத்த தேவனுகவு மிருக்கிறார்.

சகேயு இயேசுவைப் பார்க்க மாத்திரம் ஆசைப்பட்டார்; இயேசு அந்த ஆசையையும் தீர்த்து அவரோடு தங்கியிருக்கவும் தாழ்ந்தார். இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டு மென்று கூப்பிட்டார். இதினுல் சகேயுவின் குணமுழுவதும் தமக்குத் தெரிந்திருக்கிறதென்று காட்டினர். எல்லாரும் அழைத்தால் விருந்துக்குப் போகிறதுண்டு. இவரோ தானுய் தங்க இடம் கேட்கிறார். இது உலகப் போங்குக்கு வித்தி யாசமாயிருந்தாலும் பூரணநேசபாசத்தின் போங்குக்கு வித்தி யாசமில்லை. உலகத்தார் அழையாத வீட்டில் நுழையார்கள். இயேசுவோ அழையாத வீட்டிலும், தம்மை அசட்டை பண்ணும் வீட்டின் வாசற்படியிலும் போய் நின்று 'இதோ வாசற்படியிலிருந்து தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் அவனேடு இராப்போசனம் பண்ணுவேன், அவனும் என்னேடு இராப்போசனம் பண்ணு வான்' என்று கூப்பிடுகிறார். இதை வாசிக்கிற சிநேகிதனே! சகேயுவுக்குக் கிடைத்த பாக்கியத்துக்கு நீயும் ஆசைப் படுவாய் என்பதை அறிவேன். இயேசு உன் இருதய கமலத் துக்குள் தங்கவும் உன்னை மகிழ்ச்சியாக்கவும் நீ ஆசைப் படுகிறதுண்டானுல் குள்ளபக்தனைப்போல அவரைத் தேடி விண்ணப்பத்தாலும் தியான உணர்ச்சிகளாலும் அவரை காடித்தேடும்படி அலைந்து திரி. அப்படிச் செய்வாயானுல்

தமக்கு சித்தமானகாலத்தில் இயேசு உன் அகத்தில் வந்து தங்கி ஆசீர்வாதங்களை அருளுவார். சகேயு சந்தோஷத்தோடே இயசுவை அழைத்துக்கொண்டு போனரே, ஆனல் எத்தனையோ கிறிஸ்தவர்கள், தங்களுக்குள் தங்கும்படி விரும்புகிற கிறிஸ்துவைத் துரத்திவிடுகிறவர்களாயிருக்கிறார்கள். வாசிக்கிறவனே நீ அப்படிப்பட்டவனுயிராதே.

இயேசு சகேயுவின் வீட்டுக்குப் போகிறதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு இவர் பாவியான மனுஷனிடத்தில் போகிறரென்று முறுமுறுத்தார்கள். துன்மார்க்கருடைய முறுமுறுப்புக்கு ஒரு கணக்குமில்லை, வழக்குமில்லை. இந்தப் பரிசேயர் தாங்களும் இயேசுவை விசுவாசிக்கவில்லை, விசுவாசித்தவர்களையும் பழித்தார்கள். ஊருக்கெல்லாம் பாவி உன்னத தேவனுக்குச் சிநேகிதனுகிவிட்டான் என்ற காய்மகாரத்தினுல் அல்ல, அவர் ஏன் தங்களில் ஒருவருடைய வீட்டுக்கு வந்தாரில்லை என்ற எரிச்சலினுல் அப்படி முறுமுறுத்தார்கள். அப்படிப்பட்ட பரிசேயர், ஐயா போதகரே! என் வீட்டிலே வந்து தங்குமென்று கேட்கக் கூடாதோ? எல்லாராலும் பாவி என்றழைக்கப்பட்ட ஆயக்காரனிடத்தில் அவர் தங்குகிறதை அவர்கள் கண்டவுடனே தாங்களும் தாராளமாய் அவர் வீட்டில் நுழைய இடமில்லாத இடத்துக்குப் போய்விட்டாரே என்றெண்ணியும் முறுமுறுத்திருக்கலாம். இந்த முறுமுறுப்புக்கும் சுடுசொல்லுக்கும் இயேசு பயந்தவரல்ல. தங்களை நீதிமான்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுக்கும் இயேசுவுக்கும் உறவாகிறது கூடாது. சகேயு தன்னைப் பாவி என்று உணர்ந்து இயேசுவினிடத்தில் பாவமன்னிப்படைய விரும்பி அங்குமிங்கும் ஓடி அலைந்தபடியால் அப்படிப்பட்ட பிள்ளையைக் கனப்படுத்தும்படி அவர் வீட்டுக்குப் போனர்.

எல்லாரும் வீட்டுக்குள் அமைதலாய் உட்கார்ந்தவுடனே சகேயு எழுந்திருந்து இயேசுவோடு பேசத் துவக்கினர். அவர் சொல்வார்: 'ஆண்டவரே என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானுல் நாலத்தனையாய்த் திரும்ப செலுத்துகிறேன்' என்றர். இதனுலே

நாம் மெய்த் தேவபக்தியின் பூரணஸ்திதி இவரிடத்திலிருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளலாம். இவர் இயேசுவை ஆண்டவரே என்று சொல்வது அதிசயமாயிருக்கிறது. இந்த வார்த்தையால் நான் இன்று முதல் உமக்கு என்னை அடிமையாக்கி விட்டேன் என்று சொல்லுகிறது போலிருக்கிறது. இவர் பேசுகிற வார்த்தை ஒருவன் மரணநேரத்தில் மரணசாதனம் செய்வது போலிருக்கிறது. மெய்தான், இவர் இன்று முதல் உலகத்துக்குச் செத்து கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கத் தீர்மானம் செய்திருப்பதால் ஒருவகையில் இதை அவருடைய மரணசாதனம் என்று சொன்னாலும் குற்றமில்லை. இந்தச் சாதனத்தின் மூலமாய் அவர் தமது திரண்ட ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கு தத்தம் பண்ணுகிறார். தான் ஏதாவது அநியாயமான விதமாய் பொருள் சம்பாதித்திருக்குமானால் ஒன்றுக்கு நாலத்தனையாகச் செலுத்துகிறேன் என்று தீர்மானம் செய்கிறார். ஆயக்காரர் குடிகளிடத்தில் அநியாயமாய்க் குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் வாங்கினால் அதற்கு நாலத்தனை கொடுக்கவேண்டுமென்று உரோமில் ஒரு சட்டமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அச்சட்டத்தின்படி சர்க்கார் மூலமாயல்ல, நானே கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லுகிறார். இது இவருடைய உண்மையை விளக்குகிறது. சிலர் இந்த சகேயு தன் திரண்ட ஆஸ்தியை அடிக்கடி அநியாயமாய் சம்பாதித்திருப்பானென்று சொல்லுகிறார்கள். அப்படி நாம் எண்ணவே படாது. இவர் அத்திசையிலுள்ள சம்பாரக் குத்தகையை எல்லாம் மொத்தத்தில் எடுத்து உரோமைருக்கு மொத்தத்தில் தீர்வை செலுத்திவந்ததால் திரண்டலாபம் வந்ததேயன்றி அநியாய சம்பாத்தியத்தால் வந்ததென்று சொல்லக்கூடாது. இந்த வாசகம் நன் உத்தமத்தை ஊரார் எல்லாரும் அறியச் சொல்லி, உங்களில் யாரிடத்திலாவது நான் அநியாயமாய்த் தீர்வை வாங்கினதுண்டானால், இப்போதே வந்து சொல்லுங்கள், நான் ஒன்றுக்கு நாலு தருகிறேன் என்று அறிவிக்கிறது போலும் இருக்கிறது.

குள்ள சகேயு நல்ல சகேயுவாயிருந்தார். அவர் தன் ஆஸ்தியை ஒரு பொருட்டென்று எண்ணுமல் இயேசுவையே

பொருட்டென்று எண்ணினார். ஐசுவரியவான்களை உலகமும், கனமும் இழுக்குமே, சகேயு அவைகளின் வல்லமைக்கு மிஞ்சி இயேசுவை நேசித்தார். மரத்தின்மேலிருந்து விசுவாசித்தவர் இப்பொழுது வீட்டுக்குள் தன்னையும் தன் பொருளனைத்தையும் இயேசுவுக்கு தத்தம் செய்தார். அப்பொழுது இயேசு குள்ள பக்தரைப் பார்த்து:

'இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது' என்று சொன்னார். இப்படிப்பட்ட சிறந்த ஆசீர்வாதமுள்ள வார்த்தை சகேயுவின் குடும்பத்துக்கு மாத்திரம் கிடைத்தது. இந்த வார்தைகளினால் சகேயு பூரண பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டானென்பது தெளிவாகிறது. குள்ளபக்தர் இதற்கு முன்னே ஆபிரகாமின் சந்ததியாயிருந்தாலும், ஆவியின்படி இன்று தான் தேவன் அவரை ஆபிரகாமின் மகனாக அங்கிகரித்தார். 'இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே' என்ற வாசகம் சகேயுவின் விசுவாசத்தை ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் விசுவாசத்தோடு ஐக்கியப்படுத்துகிறதாயிருக்கிறது. இப்படிச் சொன்னதோடு 'இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்' என்று இயேசு சொன்னார். இது பாவிகளுக்கும், தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்தவர்களுக்கும் சற்றே களிகூரும்படியான வாசகமாயிருக்கிறதல்லவா? குணப்படாத பாவி ஒவ்வொருவனையும் இயேசு இழந்துபோன பொருளைத் தேடுகிறதுபோல தேடுகிறார். உதவாத பொருளை இழந்தால் ஒருவரும் அதைத் தேட கவலைப்படமாட்டார்கள். மனுஷர்களை தேவன் தேடி இரட்சிக்கப் பிரயாசைப்பட்டு அலைந்து திரிகிறதால் அவன் உதவாத பொருளோடு சேர்ந்தவனல்லவென்று விளங்குகிறது. பாவியே! இயேசு உன்னைத்தேடி இரட்சிக்கவே உலகத்துக்கு வந்தார். உன்னைத்தேடும் இயேசுவை நீ தேடவேண்டாமா?

சகேயுவின் வீட்டிலேயிருந்து இயேசு ஒரு இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்படி தூரதேசம் போன ஒரு பிரபுவின் உவமையையும் சொன்னார். இதற்கப்பால் நாம் குள்ளபக்தரைப்பற்றி ஒன்றும் அறியோம். எப்படியும்

அவர் தமது ஆஸ்திகளால் கிறிஸ்துவுக்கு உதவிசெய்து தமது காலத்தை அவர்மேலுள்ள பக்தியோடு கழித்து தமது ஜீவ காலத்தை முடித்தார் என்று சொல்லவேண்டியது. இவர் குணப்பட்ட அடுத்த வாரத்தில் இயேசு சிலுவையில் மாண்டு மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்து அப்பால் பரலோகம் போனார். இவர் அந்த பண்டிகைக்கு அவரோடுகூடப் போய் தன் ஆண்டவருக்குண்டான பாடுகளைக் கண்ணாரக் கண்டு இருக்கலாம். எப்படியும் ஒரு காலத்தில் அத்திமரத்தி லேறிக் கிடந்த குள்ளபக்தர் இப்பொழுது பரலோகத்தில் ஜீவநதியோரத்தில் நிற்கும் ஜீவமரக்கிளைகளில் ஏறி தமக்குத் தேவையான மட்டும் அதின் கனியைப் புசித்து, பரதீசின் மத்தியில் சிம்மாசன பதியாய் வீற்றிருக்கும் தன் ஆண்டவ வரைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை.

சீமோன் பேதுரு

சீமோன் பேதுருவைக் குறித்து புதிய ஏற்பாட்டில் வருகிற சரித்திரமானது சற்று விபரமாயிருக்கிறதென்பதை யாவரும் அறிவார்கள். ஆதலால் மற்ற அப்போஸ்தலரைப் பற்றி எழுதுவதிலும் இவரைப்பற்றி அதிகம் எழுதவேண்டிய தாகவே இருக்கிறது. மற்ற பதினொரு அப்போஸ்தலரையும் பற்றிய சரித்திரம் மொத்தம் எவ்வளவோ அவ்வளவு இவ ருடைய சரித்திரமானது மனுஷ சுபாவத்தின் சாரமாயிருக் கிறது. இவரிடத்தில் விளங்கிய தவறுதல்கள் நமது சுய தவறுதல்களைக் காண்பிக்கிறதாயும், இவரில் காணும் நற் குணங்கள் நம்முடைய சுய முயற்சியால் பின்பற்றக் கூடிய வைகளாயுமிருக்கின்றன.

இவருடைய ஜீவிய விருத்தாந்தத்தின் பல நுண்ணிய குறிப்புகளைக் கண்டுபிடித்து எழுதுவது இலேசான காரிய மல்ல; அப்போஸ்தலர் கூட்டத்தைப் பல நிறமுள்ள நூலால் பின்னப்பட்ட ஒரு சுயிற்றுக்கொப்பிட்டால், மற்ற அப் போஸ்தலர் ஒரோர் நிறமுள்ள தனி நூல்போலவும் பேதுரு மாத்திரம் பல நிறமும் கொண்ட ஒரே நூல்போலவுமிருக் கிறார் என்று சொல்லலாம். மற்றவர்களுடைய குணகுணங் கள் இன்னதென்பது தெளிவாய் விளங்குகிறதாயும், இவ ருடையதோ விளங்காததாயுமிருக்கிறது. இவரைப் பல நிறம் காட்டும் வானவில்லுக்கும் ஒருவித பளிங்குக்கும் ஒப்பிடவேண்டியதாயிருக்கிறது. இவரிடத்தில் தைரியமும் கோழைத்தனமும், துணிவும் பயமும், சத்தியமும் பொய்யும், மகிமைப்படுத்தும் குணமும் மறுதலிக்கும் சுபாவமும் கலந்து இருந்தது என்று காணலாம்.

இவருடைய பேர் தீர்ப்பையுகிய எலியாவின் பேரைப் போல் திடீரென்று நமக்குமுன் வைக்கப்படுகிறது. 'யோவான்

சொன்னதைக் கேட்டு அவருக்குப் பின்சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா' என்ற வசனத்தில் இவருடைய பேர் தற்செயலாய் வருகிறது. இதினாலே யோவான் சுவிசேஷம் எழுதப்பட்ட காலத்தில் பேதுரு அப்போஸ்தலனுடைய பேர் எவ்வளவு உயர்வாக ஆதிச் சபையில் எண்ணிக்கொள்ளப்பட்டு வந்ததென்பது தெளிவாகியது. அந்திரேயா இன்னானென்பது பேதுருவின் பேராலும் சம்பந்தத்தாலும் திட்டமாக விளங்குமென்று சுவிசேஷகன் இப்படிச் சொல்லுகிறான். 'பூனினால் நாரும் மணம் பெற்றது' என்று சொல்லப்படும் பழமொழிபோல பேதுருவால் அந்திரேயா அதிக கனமடைகிறார்.

இவருடைய தகப்பனாருக்கு யோனா என்று பேர். இவருடைய தாயாருக்கு பெற்றுவாள் அல்லது கோண்கார்டியாள் என்பது பேர் என்று பாரம்பரையில் இறங்கி வந்திருக்கிறது. இவருக்கு பெத்சாயிதாவில் வீடு இருந்தாலும் கலிலேயாக் கடலில் சில பங்காளிகளுடன் கூடி மீன் பிடித்து வந்தார். இவருக்கு சீமோன் என்று துவக்கத்தில் பேர் வழங்கப்பட்டது. சீமோன் என்பதற்கு கேட்கிறவன் என்று அர்த்தம். இவர் அக்காலத்திலிருந்த நாட்டுப் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்று எழுத வாசிக்கத் திறமையுள்ளவராயிருந்தார். கிறிஸ்து இரட்சகரோடு முதலாவது பழகின போது இவருக்குக் குறைந்தது முப்பது வயது இருந்ததென்று சொல்லலாம்.

இவருடைய சகோதரன் ஒருநாள் திடீரென்று வந்து 'மேசியாவைக் கண்டோம்' என்று சொன்னபோது அவருக்குண்டான ஆச்சரியம் இவ்வளவென்று நம்மால் சொல்லி முடியாது. எந்த யூதனுக்கும் அந்த செய்தி ஆச்சரியத்தைக் கொடுத்து மேசியாவென்று சொல்லும் அந்த ஆளைப் பார்க்கும்படி அவனை ஏவுமென்பதற்குச் சந்தேகமில்லை. இச் செய்தியைப் பேதுரு கேட்டவுடனே மேசியாவைப் பார்க்கும்படி வந்தார். இயேசு அவரைப் பார்த்தவுடனே 'நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்று சொன்னார். இச்சமயத்தில் இயேசு பேதுருவைக்

கண்டவுடனே நீ இன்னுனுடைய மகனுகிய சீமோன் என்று சொன்னது அவருடைய தெய்வீக தீர்க்கதரிசன வரத்தைக் காட்டுகிறதென்று பலர் சொல்லுவார்கள். ஆனால் அதற்கு முன் அந்திரேயா தன் பிதாவையும், தன் சகோதரனையும் குறித்துச் சொன்ன நிறமும் குறிப்பும் கிறிஸ்துவின் ஞாபகத்தில் வந்தாலும் இரண்டு சகோதரரின் முகச் சாயலின் ஒற்றுமையாலும் ஒருவேளை அவர்களுக்குள் அச்சமயத்தில் அண்ணு தம்பி என்று முறைசெப்பி பேர் சொல்லிக்கொண்டிருந்ததாலும் கிறிஸ்து அப்படிச் சொல்லியிருக்கலாம். எப்படியும் 'நீ கேபா என்னப்படுவாய்' என்ற பின்பாகம் தெய்வீக தீர்க்கதரிசனம் என்பதை ஒருவரும் ஆட்சேபிக்கக் கூடாது. கேபா என்றால் கல் என்று அர்த்தம். 'சீமோன் நீ கல் என்னப்படுவாய்' என்று சொல்லுகிறதுபோலிருக்கிறது. இந்தப் புதுப்பேர் இவருக்குள்ளிருந்த எல்லா குணங்களுக்கேற்ற பொதுச் சொல்லாகவும் திருச்சபை சம்பந்தமாய் இவரை முக்கியப்படுத்துகிற புது மொழியாகவுமிருந்தது. இரட்சகருடைய வாசகத்துக்கு மறுமொழியாக பேதுரு யாதொரு வார்த்தையும் பேசினதாக நாம் அறிகிறதில்லை. அவர் உடனே தமது வேலைக்குத் திரும்பிவிட்டார். என்றாலும் கிறிஸ்துவின் வசனமும் அவருடைய இரட்சண்ய பார்வையும் அவரை வரவழைக்கும் தெய்வீக வசிய மைபோலிருந்ததால் அவர் சீக்கிரத்துக்குள்ளாக இரட்சண்ய வலையில் சிக்குண்டு இயேசுவால் மறுபடியும் பிடிக்கப்பட்டார். அதன் வரலாற்றைச் சொல்லுகிறோம்.

உலக இரட்சகராகிய இயேசு தமது இரட்சண்ய சுவிசேஷத்தைப் பல இடங்களிலும் போய் பிரசங்கித்து வருகையில் ஒருநாள் கலிலேயாக் கடலோரம் வந்தார். அச்சமயத்தில் பேதுருவும் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இரண்டுபேரும் சேர்ந்து வலைபோட்டதால் இது பெரிய வலையாக அல்லது வீச்சு வலையாக இராமல் அரிப்புவலையாக இருக்கவேண்டியது. அரிப்புவலைக்கு இரண்டுபேரில்லாமல் வேலை முடியாது. ஒருவேளை அன்று கடலோரமாக மீன்கள் வந்திருக்கிறதை திட்டமாய் அறிந்து அவர்கள் இப்படிப்பட்ட வலையால் மீன்

பிடித்திருக்கலாம். இயேசு அவர்களை நோக்கி 'என் பின்னே வாருங்கள் உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்' என்று சொன்னார். இந்த அழைப்பின் வாசகம் அவர்களுக்குச் சற்று ஆச்சரியமாயிருக்கலாம். மனுஷரைப் பிடிக்கிற மருந்து, மை இவரிடத்திலிருக்கிறதாக்கும், அது நமக்குக் கிடைத்தால் அம்மருந்தைக்கொண்டு மீன்களை இலேசாகப் பிடித்து வியாபாரம் செய்யலாம் என்று எண்ணியுமிருக்கலாம். இந்த வாசகத்தைக் கேட்டவுடனே அவர்கள் வலைகளைவிட்டு அவருக்குப் பின்சென்றார்கள். அப்பால் சற்றுநேரம் அவரோடுகூடத் திரிந்தலைந்து அவரை வழியனுப்பிவிட்டு மறுபடியும் தங்கள் வீடுகளுக்குப் போய் பழையபடி தங்கள் வேலைகளைப் பார்த்து வந்தார்கள்.

கலிலேயாக் கடலானது மீனுக்குப் பேர்போன ஒரு கடலாயிருந்தது. இதில் நடக்கும் மீன் வியாபாரத்தால் இதைச் சுற்றிலும் பல பட்டணங்கள் உண்டாயின. இக் காலத்தில் யாததிரை பண்ணும் பலர் கலிலேயாக் கடலில் காணும் மீன்களின் திரள் கூட்டத்தைக் கண்டு அதிசயத்தோடு எழுதியுமிருக்கிறார்கள். இரவும் பகலும் இந்தக் கடலோரம் கடைவீதி போலவே ஜனசந்தடியுள்ளதாயிருக்கும்.

அப்புறம் ஒருநாள் இயேசு கலிலேயாக் கடலோரமாய் நின்றபோது திரளான ஜனங்கள் தேவ வசனத்தைக் கேட்கும்படி அவ்விடம் வந்து நெருங்கினார்கள். இதினாலே இயேசுவின் போதனையும், அற்புத வல்லமையும் பல ஜனங்களுக்கும் பிரசித்தமாகத் தெரிந்திருந்தது என்று விளங்குகிறது. கூட்டம் அதிகப்பட்டு ஜனங்கள் நெருக்கவே இயேசு தாம் நின்று பிரசங்கிக்கும்படித் தமக்குத் தாராளமான இடம் வேண்டுமென்று கண்டு ஒரு படவின்மேலேறி உட்கார்ந்து ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்தார். அந்தப் படவு பேதுருவின் படவாயிருந்தது. படவு கொடுத்தவனுக்குக் கூலி கொடுக்கிறதுபோலும், அதிலிருந்து செய்த அரும் போதனைகளை உறுதிப்படுத்துகிறது போலும், ஒரு அற்புதத்தை இயேசு அங்கே செய்தார். எப்படியெனில் அவர் அந்தப் படவுக்குச் சொந்தக்காரராயிருந்த பேதுருவை நோக்கி ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய் மீன் பிடிக்கும்

படி வலைகளைப் போடுங்கள் என்றார். அச்சமயத்தில் பேதுருவும் அவருடைய கூட்டாளிகளும் கடலிலிருந்து வந்து தங்கள் வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். உடனே பேதுரு ஐயரே இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்று சொல்லி படவை கடலுக்குள் தள்ளி தண்டு வலித்து ஆழத்துக்குப் போனார்கள். பேதுரு சொன்ன வாசகத்தாலும் அவருடைய செய்கையாலும் கிறிஸ்துவின் மகிமை விளங்குகிறதென்பதைக் காண்கிறோம். 'ஐயரே' என்ற பதத்தால் அவரைத் தன் ஞானபோதகரென்று அங்கீகரித்து, தன் சுயபிரயாசம் ஒன்றும் வாய்க்காதே போனதென்பதையும் அறிக்கையிடுகிறார். 'உம்முடைய வார்த்தையின்படி வலையைப் போடுகிறேன்' என்ற வாசகம் இயேசு தெய்வீக வல்லமையுடையவர் என்பதை அவர் அறிந்து அறிக்கையிட்டதைக் காட்டுகிறது; நான் மனுஷன் என் பிரயாசத்தால் பலனில்லை, நீரோ தேவன் நீர் சொல்ல ஆகும், நீர் கட்டளையிட நிற்கும் என்பதே அவர் சொன்ன வாசகத்தின் கருத்து. அவர்கள் ஆழத்துக்குள் போனவுடன் இயேசு சொன்ன இடத்தில் சொன்ன பிரகாரம் வலைகளைப் போட்டபோது தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அவர்கள் அகப்பட்ட மீன்களை வலையோடு இழுக்க சக்தியற்று சமீபத்திலிருந்த வேறொரு படவுக்காரையும் சைகைகாட்டி கூப்பிட்டார்கள்; அன்று வலையில்பட்ட மீன்கள் இரண்டு படவுகளையும் அமிழ்த்தத்தக்கதாக அவ்வளவு அதிகமாயிருந்தது. ஆண்டவர் மீன் பிடிக்கப் போகும்போது மீன் அகப்படுகிறது அதிசயமல்ல; சமுத்திர ஜலங்களைக் குவியலாக நிறுத்தி ஆழங்களில் அதிகாரம் நடத்தி வருகிற தேவனுகிய இயேசு தமது அதிகாரத்தினாலே மீன்களை வலைகளில் கட்டி கரையிலே சேர்த்தார். பேதுருவும் அவர் கூட்டாளியும் கூடி மீன்கள் வழக்கமாய் கிடைக்கிற இடத்தில் இராமுழுவதும் வலை வீசிப் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; இயேசு பட்டப்பகலில் போய் மீன் பிடித்து இரண்டு படவு நிறைய மீன் கொண்டுவந்தார். ஒரு படவோடு மீன்பிடிக்கப் போனவர்கள் இரண்டு படவு,

மீனெடு வருவது அதிசயமாயிருந்தது. ஒருவேளை மீன் கிடையாது என்று அவர்கள் நினைத்திருந்த இடத்தில் இயேசு வலைபோடச் சொல்லி இவ்வளவு மீன்கள் பிடித்திருக்கலாம். அதினால் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள் என்றெண்ணத் தக்கதாயிருக்கிறது. எல்லாரையும் பார்க்கிலும் இந்தக் காரியம் பேதுருவுக்கு பிரமிப்பை உண்டாக்கினபடியால் அவர் இயேசுவின் பாதத்தில் விழுந்து 'ஆண்டவரே நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்' என்றார். இந்த வாசகம் மன வெறுப்பாலும், ஆவேச அச்சத்தாலும் சொன்னதாக நாம் நினையாமல் தன் அபாத்திரத் தன்மையை உணர்ந்ததாலும் இயேசுவின் அற்புத வல்லமையைக் கண்டதாலும் பிரமிப்படைந்து பேசுகிற பக்தி விநயமான வாசகம் என்று நாம் எண்ணிக்கொள்ள வேண்டியது. எப்படியும் அச்சமயத்தில் தெய்வாதீனமான ஒரு பயம் கிறிஸ்துவைப்பற்றி அவருடைய மனதிலிருந்தது என்பது நிஜம். ஏனெனில் இயேசு அவரை நோக்கி 'பயப்படாதே; இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்' என்று சொன்னார். மனுமக்கள் தம்மை விசுவாசிக்கும்படி இவர் அநேகரைச் சேர்த்துக்கொண்டு வருவார் என்பதே இதின் கருத்து. இந்த வாசகம் கூறப்பட்டது முதல் அவருடைய உத்தியோகமும் மாறியது. தமக்கு ஒரு புதிய வேலை கொடுக்கப்பட்டது என்பதை அவர் தமது நெஞ்சில் உணர்ந்து, தம்முடைய படவுகளையும் வலைகளையும் விட்டுப்போட்டு இயேசுவுக்குப் பின்சென்றார். இதுமுதல் பேதுரு அப்போஸ்தலன் இயேசுவின் சீஷனானார் என்று சொல்லவேண்டியது. இதை அடுத்து வேறிரண்டு காரியங்கள் நடந்தது. அதாவது: இயேசு சுரத்தால் அவதிப்பட்ட பேதுருவின் மாமியைச் சுகப்படுத்தி அதன் பின்பு தாம் தெரிந்துகொண்ட பன்னிருவருக்கும் அப்போஸ்தலப் பட்டம் கட்டி அவர்கள் அத்திசைகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படித் திட்டம் செய்தார். பேதுரு தமக்குக் குறிக்கப்பட்ட எல்லைகளில் போய் இயேசுவைப்பற்றியும் அவருடைய வல்லமைகளைப் பற்றியும் பிரசங்கித்துவந்தார்; அவர் போன இடங்களில் எல்லாம் தமது மாமியார் விஷக் காய்ச்சலிலிருந்து அற்புதமாய் குணமானதையும், கடலில்

அதிகமாய் அகப்பட்ட மீன் வரலாற்றையும் சொல்லி யிருப்பாரென்பது மெய்.

இதற்கப்பால் நடந்ததாக நாமறியும் வரலாறு சற்றே கவனிக்கப் படத்தக்கதுதான். இயேசு கலிலேயாக் கடலோரத்தை விட்டு அதன் வடபாகத்திலிருந்த பெத்சாயிதா ஊருக்கடுத்த ஒரு மலைக்குப் போனார். அதின் அடிவாரத்தில் பசும் புல்லுள்ள விஸ்தாரமான மைதானமொன்று இருந்தது. அந்த மலைமேலிருந்து பார்த்தால் பச்சென்ற மைதானமும், பலவிதமான வீடுகளுள்ள நகரமும், வெண்வஸ்திரம் போன்ற கடலோரத்து மணலும், நீல வர்ணமான கடலும், கண்ணுக்குத் தோன்றும். அக் கடலின் மத்தியிலும் கரையோரத்திலும் திரண்டு மடிந்து விழும் அலைகள் வெள்ளிமலை உருகிச் சாடுகிறதுபோல காணப்படும். லீபனோன் மலையிலிருந்து வெள்ளிக் கம்பிபோல் புரண்டுவரும் யோர்தானின் ஜலம் இந்தப் பட்டணத்தின் ஓரமாய் பெரும் இரைச்சலோடு கலிலேயாக் கடலின் முகத்துவாரத்தில் சாடும். இவ்விதம் அழகிய கண்காட்சிக்கென்று இயேசு சுவாமி மலைமேலேறி மல் தமது சீஷரோடு தனித்து ஜெபத்தியானம் செய்யவும் அவர்களுக்கு சுவிசேஷ ஊழியத்துக்குரிய பல போதனைகளைக் கொடுக்கவும் ஏறினார் என்று சொல்லவேண்டியது. இவ்வளவு காலத்துக்குள்ளாக இயேசு பல அற்புதங்களைச் செய்திருந்தபடியால் அதைக் கேள்விப்பட்ட பலர் கூட்டமாக வந்து மலையடிவாரத்தில் இரைச்சலிட்டார்கள். அவர்களில் சிலர் நோயாளிகளாயுமிருந்தார்கள். இயேசு அவர்கள்மேல் மனதுருகி அவர்கள் நோய்களைக் குணமாக்கி அப்பால் அங்கே அகப்பட்ட ஐந்து அப்பத்தாலும் இரண்டு மீனாலும் அன்று வந்த ஜனமனைத்துக்கும் அற்புதமாய் அமுதளித்தார். அன்று சாப்பிட்ட ஆண்களின் தொகை ஐயாயிரம்; இந்த ஐயாயிரத்தோடு வேறு எத்தனையோ ஆயிரம் பெண்களும் பிள்ளைகளுமிருந்தார்களோ தெரியாது. உடனே இயேசுவை இராஜாவாக்கும்படி அவர்களெல்லா

ரும் ஆலோசனை பண்ணினார்கள். அவரோ அவர்களுடைய மாம்ச சிந்தையைத் தடுக்கும்படி ஜனங்கள் அனைவரையும் அனுப்பிவிட்டுத் தமது சீஷரைத் துரிதப்படுத்தி நீங்கள் இந்த க்ஷணமே படவேறி கப்பர்நகூமுருக்குப் போங்கள். நான் உங்களுக்குப் பின்னே வருகிறேன் என்று சொல்லி யனுப்பிவிட்டார். ஒருவேளை சீஷர் இருந்தால் அவர்கள் ஜனங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவகாசம் ஏவுவார்களென்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம். சீஷர் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்ட சமயத்தில் காற்றும் கடலும் பயணத்துக்கு அநுகூலமாயிருந்ததால் பொழுது அஸ்தமிக்கு முன் பாதி வழியைக் கடந்து கடலின் மத்தியில் வந்தார்கள். இயேசு தனிமையாய் மலையில் ஜெபத்தியானம் செய்யப் போனார். அன்று அவர் பண்ணின ஜெபத்தின் வரலாறு இன்னதென்றும், அவருடைய தியானத்தின் முறை இன்னதென்றும் நமக்குத் தெரியாது. எப்படியும் அவர் பொழுது அஸ்தமிக்கிற நேரமுதல் இரவின் நாலாம் சாமம்மட்டும் அன்று தமது ஜெபத்தியானத்தை நடத்தியிருக்கிறார். இப்படி அவர் சுமார் இருபத்தைத்து நாழிகை நேரம் ஜெபத்தியானம் செய்யும்படி அந்த மலைமேல் வீசின குளிர்ந்த காற்று அதிக அநுகூலம் செய்திருக்கிறது. தியானத்தால் பொங்கின அவருடைய மனதின் வாஞ்சையைப் பூரணமாய் நிறைவேற்ற சரீர பலம் அவ்வளவு நேரமும் நன்றாயிருந்தது என்பது தெரியவருகிறது. அவர் அன்று பூலோகத்தாருக்காக அந்த மலையின்மேலிருந்து பெருங் கூச்சலாக ஜெபித்த சத்தத்தை மனுஷர் கேளாதபடி யோர்தான் ஆற்று ஜலமும் அம்மலையும் செடிகளின் சலசலப்பும் விழுங்கிப்போட்டதாக்கும். இனி நாம் கடலின் மத்தியிலிருக்கும் சீஷரையும் அவர்களுக்குள் விசேஷமாய் பேதுருவையும் குறித்த வரலாறுகளைத் தொடர்ந்துபோவோமாக.

பொழுதடைந்து இருள் பூமியை அன்று மூடத்துவங்கின நேரமுதல் கடலில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. நடு கடலில் பெருங் காற்றுண்டாகி அலைகள் திரண்டு அவர்கள் பயணத்தைத் தடுத்தது. ஆழ்கடலே தங்கள் நித்திய வீடு

என்பது அவர்கள் மனதில் பட்டது. அந்தப் படவில் இருந்தவர்கள் அதே கடலில் அநேக இரவு படவு ஓட்டியிருக்கிறார்கள். அநேகந்தரம் புசலில் அகப்பட்டுமிருப்பார்கள். ஆனால் அன்றையத்தினம் நடந்த புசலின் தன்மை அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர்கள் ஒரு முழம் முன்னுக்குத் தண்டுவலித்தால் அலை ஒன்பது முழம் அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. ஆகவே அவர்கள் அசந்துபோனார்கள். இவ்வளவும் சம்பவிக்கும்போது இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். இது அவருடைய சித்தத்தினாலுண்டான புசலேயன்றி வேறல்ல. தாம் அன்று இந்த புசலின்மூலமாய் மகிமைப்படவும், உலகத்தாருக்கு என்றென்றைக்குமுள்ள ஞானபோதனையை இதன் மூலமாய் படிப்பிக்கவுமே இப்படிச் செய்தார். பேதுருவும் மற்ற சீஷரும் அக்கடலில் அவதிப்பட்ட சமயத்தில் இயேசு புசலையறிந்துதான் நின்று போனார் என்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம்; இப்படி அவர் நம்மை அவஸ்தைப்படவிடலாமா என்றும் அவர்கள் மொத்தத்தில் முறுமுறுத்திருந்தாலும் இருக்கலாம். ஆனால் கிறிஸ்து இந்த சமயத்தில் சும்மாயிருக்கவில்லை. அவர்கள் கடலின் அலையோடு அவதிப்பட்டார்கள். அவர் பாவ அலையோடு அவதிப்பட்டார். அவர்கள் தங்கள் உயிரைத் தப்புவிக்கும்படி கஷ்டப்பட்டால் இவர் சர்வ லோகத்தின் உயிரும் நரக பாதாளத்தின் அழிம்புகளுக்குத் தப்பும்படி அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். அவர்கள் தூங்கவில்லையானால் இவரும் தூங்கவில்லை. ஆனால் இரண்டொரு விஷயத்தில் மாத்திரம் இருபட்சத்தாருக்கும் வித்தியாசமிருந்ததென்று சொல்லலாம். அவர்கள் ஜலத்திலும் இவர் தரையிலும் இருந்தார்கள். அதையும் ஒரு வித்தியாசமென்று சொல்வது தகாது. ஏனெனில் அவர்கள் தரையின் மனுஷர் போலிராமல் தங்கள் தொழிலின்படி கடலின் குட்டிகள்போலிருந்தார்கள். கடைசியாக அவர்களுக்கு இருந்த குறைவெல்லாம் இயேசுவோடு இம்மட்டுமிருந்தவர்கள், இப்போது இயேசு இல்லாமல் தனித்திருந்தார்கள். இதுதான் அன்றைன அவஸ்தைகளின் மொத்தக் காரணம்.

பேதுருவும் மற்ற சீஷரும் இப்படி அவதிப்பட்டிருக்கும்போது இயேசு இரவின் நாலாம் சாமத்தில் கடலின்மேல்

நடந்து அவர்களுடைய படவின் பக்கத்தில் கடந்துபோனார். அவர் கடலின்மேல் நடக்கிறதை அவர்கள் கண்டு பயந்து ஆவேசம் என்று அலறினார்கள். உடனே இயேசு அவர்களை நோக்கி:

'திடன்கொள்ளுங்கள், நான்தான் பயப்படாதிருங்கள்'

என்று சொன்னார். இனி அவர்கள் திடன்கொள்வார்களோ? பயப்படுவார்களோ? இதற்குமுன் ஒருதரம் உண்டான கடலின் கொந்தளிப்பு அடங்கிப்போன வரலாறு அவர்களுக்குத் தெரியாதா? இதெல்லாம் இயேசு தமது சீஷரோடு திருவிளையாட்டுக் கொள்ளுவதுபோலிருக்கிறது. ஆம், இரட்சண்ய விஷயத்தில் இயேசு இப்படி அடிக்கடி செய்கிறார். தமது பிள்ளைகளைத் துன்ப சமுத்திரத்திலும், துக்கசாகரத்திலும் படவேறிப் போகும்படி செய்து அதின் துவக்கத்தை இலேசாகக் கடந்துபோகவும், அதின் மத்தியில் அவர்கள் மதிமயங்கி முனைவிழுந்து சங்கடப்படவும் வைக்கிறார். பூரண பக்தனுக்கும் இவ்வித தேவ நடத்துதல் அவசரமாயிருக்கிறது. ஆதுமம விஷயமாய்ப் பேசினால் மனுஷனைப் போல கருவங்கொண்டு, பக்தி மலையிலிருந்து பாவ பாதாளத்திற்கு உருளுகிறவன் யாருமில்லை; அவனை வருஷத்துக் கொருதரம் அல்லது பத்து வருஷத்துக்கொருதரமாகிலும் இப்படித் துன்பக்கடலில் யாத்திரை பண்ணவைத்து தம்மை சற்று தூரமானவர்போல் காட்டித் திருந்தாதபட்சத்தில் பாவத்தின் தீமையால் நரகத்தைச் சேருகிறவர்களின் தொகையிலும், பரிசுத்தத்தின் கர்வத்தால் கெட்டலைந்து நரகம் சேருகிறவர்களின் தொகை அதிகமாயிருக்கும். பக்தரே, பரிசுத்தரே, மெய்க் கிறிஸ்தவர்களே உங்களுக்குத் துன்பமில்லையானால் துக்கப்படுங்கள், உபத்திரவத்தின் அலைகளை நீங்கள் காணவில்லையானால் ஓலமிடுங்கள். எப்படியும் உங்களுடைய துன்பத்துக்கும் உலகத்தின் துன்பத்துக்கும் வித்தியாசமுண்டு. உங்களுடைய பக்தி, விசுவாசம், பரிசுத்தம், அன்பு, உத்தமம் ஆகிய இவைகளினிமித்தமே உங்களுக்குத் துன்பமுண்டாகும். இவைகளுக்கு மற்றவைகளைப்போல் துன்பம் உபத்திரம் போன்ற ஒரே பதம் உலகத்தில் வழங்கப்படுகிறதினிமித்தம் நீ கலங்கிப்போக

வேண்டாம்; நீ அதற்கு இன்பம், மகிமை, கீர்த்தி என்ற வேறு பேரை வைத்துக்கொண்டு உன் ஆயுளின் நாலாம் சாமம் வருமட்டும் அதை சகித்துக்கொண்டு வலி, அப் பொழுது உன் ஜீவகால நாலாம் சாமமும், உன்னுடைய நித்திய ஜீவனின் அருணோதய காலமுமாகிய அந்திய காலத் தில் உன் இரட்சகர் அந்தத் துன்பக்கடலில் உனக்குத் துணைசெய்ய ஆவேசம்போல் எழுந்தருளியாகி, திடன் கொள், நான்தான், பயப்படாதே என்று சொல்லுவார்.

கிறிஸ்து இந்த வார்தை பேசினவுடனே எல்லாரைவிட பேதுருவுக்கு அதிக தைரியமுண்டாகி பயம் விலகிற்று. அவருடைய சரீரத்தின் இரத்த ஓட்டம் இயேசுவின் சொல் லைக் கேட்டவுடனே பலத்தைக் கொடுத்தது. அவருடைய மனதின் விசுவாசம் திடப்பட்டது. அப்போது பேதுரு இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே நீரேயானால், நான் ஜலத் தின்மேல் நடந்து உம்மிடம் வரக் கட்டளையிடும்' என்றார். இது எவ்வளவு ஆச்சரியமான ஆசை. இந்த ஆசை மாம்ச சிந்தையுள்ளவனுக்கு வருமா? இதினாலே பேதுரு எவ்வள வாய்க் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தாரென்றும் அவ ருடைய தெய்வீக வல்லமையை நம்பினாரென்றும் தெரியவரு கிறது. கர்த்தருடைய பிள்ளைகளுக்குண்டாகும் திடாரிக் கத்தைக் கண்டீர்களா? அவர் நடக்கிற இடமெல்லாம் இவனும் நடக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறான். இதைப் பெருமையென்று சொல்லாமல் தேவபாசத்தின் பலம் என்று சொல்லவேண்டியது. இந்தப் பெரிய வரம் அவர் உத்தரவு கொடுத்தால்தான் கிட்டும் என்று சரியாக நினைத்து 'வரக் கட்டளையிடும்' என்றார். அதற்கு அவர் வா என்று சொன் னார். இதற்குச் சில காலத்துக்குமுன் ஒருதரம் இயேசு தமது சிஷரை நோக்கி, 'இதோ சர்ப்பங்களையும் தேள்களை யும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமைகளையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது' என்று வரம் கொடுத்திருந்தார். இப்பொழுது பேதுருவை, கடலின் மேல் நடந்துவா என்று சொன்னதால் இந்த வரமும் அவருடைய பக்தருக்குக்கூட கொடுக்கப்படுகிறது. பேதுரு தமக்கு

வரமருளின வாக்கை நம்பி உடனே கடலில் குதித்துக் கொஞ்சதூரம் நடந்தார். அப்பால் காற்று பலமாயிருக்கிற தைக் கண்டு பயந்து ஜலத்தில் அமிழ்ந்திஞர். உடனே இயேசு கையை நீட்டி அவரைப் பிடித்து அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்று கண்டித்து அவரைப் படவில் ஏற்றி தாமும் ஏறிக்கொண்டார். இதிலல் பேதுரு எவ்வளவு சீக்கிரத்தில் தமது விசுவாச ஏணியிலிருந்து தடுமாறி சந்தேக சமுத்திரத்தில் விழுந்தாரென்பது தெரியவரும். அவிசுவாசம் மனதை ஆளும்படி ஆண்டுகள் செல்லாது. விசுவாச கிரியையின் மத்தியிலேயே அவிசுவாசம் நுழைந்து கெடுத்து விடலாம். இச்சமயத்தில் இவருக்கு அவிசுவாசம் உண்டானதற்குக் காரணம் தெளிவாயிருக்கிறது. கடலின்மேல் நடக்கிற இவர் யாரைப் பார்க்கவேண்டியது? தன்னை நடக்கப்பண்ணின இயேசுவையல்லவோ நோக்கிப் பார்க்க வேண்டியது? இவரோ அப்படிச் செய்யாமல் காற்றின் விசையையும் கடலின் அலைதிரளையும் கண்டு தன்னுடனிருக்கும் இயேசுவை நோக்க மறந்தார். ஆதலால் ஆழ்ந்து ஐயோ அதமானேன் என்று அபயமிட்டார். துன்பகாலத்தில் தேவனை நோக்காமல் அத்துன்பதையே நோக்குகிறவர்கள் அதிலேயே ஆழ்ந்து சாவார்கள்.

இயேசு படவிலேறினவுடனே காற்று அமர்ந்தது. காற்றுக்கும் கடலுக்கும் கர்த்தாவாயிருக்கிற இயேசு சுவாமியே உமக்கு மகிமையுண்டாவதாக. நீர் என் துன்பப்புசலை ஆண்டு என்னை இரட்சண்ய படவிலேற்றி மோட்சக்கரை சேர்ப்பீராக.

நாம் பேதுருவுக்கிருந்த நேர்பேசும் சுபாவத்தை இங்கே தெளிவாகக் காண்கிறோம். இக்காலத்தில் மூடனும் மௌனமாயிருந்தால் ஞானியென்று எண்ணப்படுகிறதுண்டு. இந்த எண்ணம் சரியென்று சொல்லப்படாது. இந்த முறையை அறிவீனன் கையாடி ஞானியென்றும் புத்திமானென்றும் வெளிக்குப் பேரெடுப்பது வஞ்சகமும் கபடமுமாயிருக்கிறது. அறிவீனன் தனக்கு அறிவுண்டாகும்படி தன் மூட மனதை மூடிவையாமல் திறந்தால்தானென்ன? வாய் திறந்து தங்கள் மனதிலுள்ளதைச் சொல்லிக்கொள்ளுகிறதும் அது பிசகா

னல் தங்களைத் திருத்திக்கொள்ளுகிறதும் புகழப்படத்தக்க குணங்களாயிருக்கிறன. இந்தக் குணம் பேதுருவினிடமிருந்தது; இந்தக் குணத்தினல் என் மதியீனத்தை நீர் அறிவீர், நான் அறியாததை எனக்குப் போதியும் என்று அவர் அறிக்கையிகிறவர் போலிருந்தார்.

ஒருதரம் இயேசு செய்த போதனையை ஜனங்கள் கிரகித்துக்கொள்ள இயலாமல், இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்று சொல்லிக்கொண்டு அவரவர் மட்டில் போனர்கள். இயேசு அச்சமயத்தில் தமது பன்னிரு சீஷரையும் பார்த்து, நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்று கேட்டார். உடனே எப்போதும் புத்தியாயாவது புத்தியீனமாயாவது பேசும் சுபாவமுடைய பேதுரு மறுமொழியாக, 'ஆண்டவரே, யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவனுள்ள வசனங்கள் உம்மிடத்திலுண்டே, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து என்று விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்' என்று சொன்னர். இதினல் நாம் அப்போஸ்தலர் எல்லாரிலும் பேதுரு கிறிஸ்துவின் வரலாறுகளை நுட்பமாகக் கவனித்து உத்தமமாய் அவரைத் தேவன் என்று விசுவாசித்தாரென்பது தெளிவாகத் தெரியவருகிறது.

ஒருதரம் இயேசு பிலிப்பு செசரியாபட்டணத்தின் எல்லையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவருடைய போதனையையும், போங்கையும், அற்புதங்களையும் கண்ட பலர், மரித்துப்போன பக்தருடைய பேரைச் சொல்லி மறுபிறப்பாய் வந்திருக்கிறதாக அறிவினத்தால் பேசிக்கொண்டார்கள். அப்போது இயேசு நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்கள் என்று சீஷரைக் கேட்டார். உடனே பேதுரு முன்போல மற்றவர்களுடைய வாயாயிருந்து 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து' என்று அறிக்கையிட்டார். அப்போது ஆண்டவர் அவருடைய அறிக்கையினிமித்தம் அவரை வாழ்த்தி 'நீ பாக்கியவான், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலுள்ள பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினர்' என்று சொன்னர். இதினலே இயேசுவை இன்னரென்று கண்டு

பிடிப்பதும், அவர்பேரில் நிலையாய் விசுவாசத்தை சின்ன காரிய மல்லவென்றும், தேவன் ஒருவனுக்கு அவருடைய மகிமையையும் இரட்சண்ய இரகசியத்தையும் தெரியப்படுத்தினலன்றி மற்றப்படி அது அறியப்படாமலே போகலாமென்றும் விளங்குகிறதல்லவா? இந்தக் கருத்தை நாம் அநுசரித்துக் கொண்டால் இத்தேசத்தார் இயேசுவை இன்னும் விசுவாசியாமலிருப்பதையிட்டு நாம் அவர்கள் மேல் எரிச்சலடையக் கூடாதென்றும், அவர்களை மதியீனர் என்று தூஷிக்கக்கூடாது என்றும் உணர்ந்து கொண்டு, பரம பிதாவை நோக்கி, பிதாவே உமது குமாரனை அறியும் அறிவை எங்கள் தேசத்தார் அடையும்படி அவர்களுக்கு அவரை இன்னாரென்று வெளிப்படுத்தியருளும் என்று ஜெபம் செய்வோமாக.

பேதுரு அப்போஸ்தலன் செய்த அறிக்கையானது பெருங் கீர்த்தியையும் கனத்தையும் அவருக்கு வருவிக்கும் அறிக்கையாயிருந்தது. அந்த அறிக்கையைக் கேட்ட இயேசு முன் சொன்ன நல்வார்த்தையோடு 'நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை, பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருகிறேன், பூலோகத்திலே நீ கட்டுவது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்' என்று சொன்னார். இந்த வாசகமானது மகா மயக்கமும் ஆழமுமாயிருக்கிறது. இதை அவரவர் மனப்படித் தாற்பரியப்படுத்தி மற்றவர்களும் தங்களைப்போலவே நினைக்கவேண்டுமென்று கட்டாயம் பண்ணினதினிமித்தம் கிறிஸ்து சபைக்குள் பல குழப்பங்களும் பிரிவினைகளும் எதிரிடை தத்துவமும் உண்டாகி இருக்கிறதென்பதை எவரும் அறிவார்கள். இவர்களில் எந்தப் பட்சத்தார் சரியானபடி அர்த்தப்படுத்துகிறார்கள் என்பதைக் கவனிப்பதும் நமது காரியமல்ல. அதன் தாற்பரியங்கள் எப்படியிருந்தபோதிலும் இதினால் பேதுரு அப்போஸ்தலன் சாமானியமானவரல்லவென்றும்,

அவர் விசேஷ வேலைக்கென்று விசேஷ வரம் பெற்றவரா யிருந்தாரென்றும் நாம் சொல்லத் தடையில்லை. அதை ருசுப் படுத்தும் வேறு பல குறிப்புகளையும் சுவிசேஷத்தில் காண் கிறோம். அவைகளை இவ்விடத்தில் விபரிப்பது நமது வேலையல்ல.

மேலே சொல்லிய மேன்மையான வாழ்வும் வரமும் பேதுருவுக்குக் கிடைத்த சில நாட்களுக்குப் பின்பு இயேசு பலதரம் தமக்குச் சிக்கிரத்தில் துன்பமும் பாடும் மரணமும் நேரிடப்போகிறதென்று சொல்லிவந்தார். ஒருநாள் அவர் தம்முடைய பாடுகளைப்பறிச் சற்று தெளிவாகப் பேசின போது, பேதுரு அவரைத் தனியே அழைத்துப்போய், சுவாமி உம்முடைய பாடுகளைப்பற்றி நீர் சொல்லும் வார்த்தை கள் பயங்கரமாயிருக்கிறதே, இப்படிப்பட்ட ஈனச்சாவு உமக்கு வராதபடி கடவுள் கிருபை செய்வாராக என்று சொல்லுகிற பாவனையாகப் பேசினார். பேதுரு பேசின வார்த்தையின் போங்கு இயேசுவுக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அவர் உடனே, 'எனக்குப் பின்னுகப் போ சாத் தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், தேவனுக்கு ஏற்ற வைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளாக சிந்திக் கிறாய்' என்று சொல்லிக் கடிந்துகொண்டார். இது பேதுருவைக் கண்டிக்கிறதாயிராமல் அவரை அச்சமயத்தில் ஏவிப் பேசப் பண்ணின சாத்தானைக் கண்டிக்கும் வார்த்தை களாயிருக்கின்றன என்கலாம். சாத்தான் சமயம் பார்த்து இரட்சண்ய வேலையைக் குதர்க்கப் படுத்தும்படி பேதுருவை இந்த வாசகத்தால் ஏவிவிட்டிருக்கலாம். சர்ப்பத்துக்குள் புகுந்து மனுஷ ஜாதியின் வாழ்வனைத்தையும் கெடுத்த சாத்தான் பேதுருவில் புகுந்து இரட்சண்யத்தைக் குதர்க்கம் செய்ய அஞ்சுவானா?

எப்படியும் பேதுருவின் விழுதலால் அவருடைய விசு வாசத்தின் கயிறுகள் அறுந்து போகவுமில்லை, இயேசுவின் மேலுள்ள அவருடைய அன்பின் அனல் அணைந்துபோகவு மில்லை. அவர் சிக்கிரத்துக்குள் தமது குறைவிலிருந்து நீங்க லாகி பழைய ;னத்தைப் பெற்றுக்கொண்டாரென்பதைப் பின்வரும் வரலாறு தெளிவாக ரூபிக்கிறது.

இப்படிக் கண்டித்த ஆறுநாளைக்குப் பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி ஒரு மலையின்மேலேறினார். ஆதலால் அவர் தன் புத்தியீனத்தை அறிக்கையிட்டு கிறிஸ்துவினுல் மன்னிப்பைப் பெற்றுப் பழைய சிநேகத்தைச் சம்பாதித்துக் கொண்டாரென்று சொல்லவேண்டியது. இந்த மலைக்குத் தாபோர் என்று பேர் என்பதாக பாரம்பரியங்களில் சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. தாபோர்மலை நாசரேத்துக்குத் தென்கிழக்கில் ஆறு மைல் தூரத்திலிருக்கிறது. நாம் வேதாகமத்தைக் கவனித்தால் தேவ மகிமைகள் அடிக்கடி பூமியின் மலைகளின்மேல் விளங்கியிருக்கிறதென்பதைக் காண்கிறோம். சீனாய் மலையில் தேவ மகிமை வெளிப்பட்டுப் பத்துக்கட்டளைகள் கொடுக்கப்பட்டன. மோரியாவில் ஈசாக்கு பலியிடப்பட்டான். ஏபால் கெர்சீம் மலைகளில் ஆசீர்வாதமும் சாபமும் கூறப்பட்டன. கர்மேல் மலைமேல் மெய்த்தேவன் பாகாலின் பூசாரிகள்மேல் வெற்றிகொண்டார். சகல யூதரும் தங்களுக்கு ஒத்தாசைவரும் சீயோன்மலைக்குத் தங்கள் கைகளை ஏறெடுத்தார்கள். இம்மானுவேல் என்னும் இரட்சகரும் கொல்கதா மலையின்மேல் இரட்சண்ய கிரியையை முடிக்கும்படி, சிலுவையிலே வெற்றிசிறந்தார். உயர்ந்த மலைச் சிகரத்தை மோட்சத்துக்கு அடையாளமாக மனுமக்கள் பழைய காலங்களில் எண்ணிவந்தார்கள். பூர்வ விக்கிரக வணக்கம் மலைகளின்மேல் நடந்ததற்கு இது ஒரு காரணம். தென் இந்தியாவின் பல சிகரங்களில் விக்கிரக ஆலயங்களைக் கட்டியிருப்பதும் அந்த அபிப்பிராயத்தைத் தழுவினதென்றே சொல்லவேண்டியது. தென் இந்தியாவின் மலைமேடுகளில் கிறிஸ்துவ ஆலயங்கள் அவ்வளவு சிறப்போடு காணப்படுவதுண்டானுல் எவ்வளவு மகிமையாயிருக்கும்.

அவர் அந்த மலையின்மேல் போன நோக்கம் வேடிக்கை பார்க்கவும், நல்ல காற்று உட்கொள்ளவுமல்ல. அவர் ஜெபம் செய்யும்படிப் போனதாக பரி. லூக்கா சொல்லியிருக்கிறார். அவர் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும்போதே மறுரூபமானார். அவருடைய வஸ்திரம் வெண்மையாய்ப் பிரகாசித்தது. அவருடைய முகரூபம் மாறிற்று. இதினுல்

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை விளங்குகின்றது. அவர் பூமியிலிருக்கும் பொழுதே, அதாவது அவருடைய அவதார உடலோடே மகிமை பொருந்திய தெய்வீகமும் அமைந்திருந்தது. இந்த தெய்வீகசாயல் எப்போதுமல்ல, ஒரு வேளா வேளைகளில் மாத்திரம் காணப்பட்டது. கடலின் மேல் நடந்த வரலாற்றில் அவரை ஆவேசம் என்று சீஷர் நினைத்ததும் அவரைப் பிடிக்குப்படி முயன்ற சமயத்தில் மறைந்து போனதும் அவர் மறுரூபமான சமயத்தில் காணப்பட்ட சாயலும் அதை ருசுப்படுத்துகிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்மட்டும் இப்படி வேளாவேளை காணப்பட்ட அதிசய உடல் உயிர்த்தெழுதலின்பின் அதுவே சுயமான உடல்போல் விளங்கி, கூடநடந்தும் கண்டுபிடியாத சாயலாகவும், பேசியும் இனம்றியாத உடலாயும், வாயுவேகமாய்ப் பல இடங்களுக்குச் செல்லும் தேகமாயும், பூட்டின வீட்டுக்குள் திறவாமல் நுழையும் சக்தியுடையதும், காயமிருந்தும் நோகாத் தன்மையுடையதும், ஆகாயத்தில் ஏறிப் போகத்தக்க சக்தியுடையதுமான மேனியாக இருந்ததென்று காண்கிறோம். இவ்வண்ணம் இயேசு மகிமையடைகிற சமயத்தில் சுமார் 1480 வருஷங்களுக்கு முன் மரித்த மோசேயும் சுமார் 930 வருஷங்களுக்கு முன் மரித்த எலியாவும் அவரோடு பேசுகிறதாக காணப்பட்டார்கள். மரித்துப்போன ஆவிகளோடு பேசும்படியாக அவர்கள் மரணத்துக்குப்பின் பெற்ற கனமான தெய்வீக உடலை இவர் உயிரோடிருந்த சமயத்தில் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. மரித்த மகாத்துமாக்களும், உயிரோடிருக்கும் மனுமக்களும் ஒருவரொடாருவர் பேசிக்கொள்ள வேண்டியதால் இரு பட்சத்தாரும் ஒரே மாதிரியான தேகநிலைமையுடைவர்களாயிருக்கவேண்டியது அவசியம்; அன்று வந்த மகாத்துமாக்கள் இருவரும் பூரண மனுஷராயிருந்ததால் காலத்துக்கும் அவசியத்துக்கும் ஏற்றவண்ணம் தங்கள் உடலை மாற்றிக்கொள்ள சக்தியற்றவர்களாயிருந்தார்கள். இயேசு தேவனுடைய படியால் அவரே தமது சரீரத்தை மறுரூபப்படுத்தி அவர்களோடு சம்பாஷணை பண்ணிக்கொண்டார். வந்த இவருடைய பேர் இன்னதென்று பேதுருவுக்குக் கிறிஸ்து சொல்லியிருக்கவேண்டியது. இதினால் இம்மைக்கும்

மறுமைக்கும் இருக்கும் சம்பந்தமும் மரித்தோருக்கும் உயிருள்ளோருக்கும் இருக்கும் ஐக்கியமும் இன்னதென்று விளங்குகிறது. இந்த மூவரும் சம்பாஷணை பண்ணின விஷயம் ஒவ்வொரு மனுஷனையும் விசேஷமாக கிறிஸ்தவனையும் மகிழ்ச்சியால் நிரப்புகிறது; அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்களென்று பரி. லூக்கா சொல்லுகிறார். இந்த சம்பாஷணையின் வரலாறு பரி. பேதுருவுக்கு எப்படித் தெரியும்? அவர்கள் அச்சமையத்தில் பூலோக பாஷையில் பேசினார்களோ, பரலோக பாஷையில் பேசினார்களோ? யார் அறிவார்? ஒருவேளை இயேசு அதின் வரலாறுகளைப் பின்பு பேதுருவுக்கும் அவரோடிருந்தவர்களுக்கும் சொல்லியிருக்கலாம். இதினாலே எருசலேமில் நடக்கப் போகும் பாடுகளின் விபரம் சுமார் ஒரு வருஷத்துக்குமுன் இயேசுவுக்குத் தெரிந்திருந்தது என்று காண்கிறோம். ஆ! இயேசுவே! நீர் எனக்காகவும் உலகத்தார் எல்லாருக்காகவும் அடையவேண்டியதும் சகிக்கவேண்டியதும் அநுபவிக்க வேண்டியதுமான வியாகுலம், துக்கம், மனோவு, பெரு மூச்சு, இரத்தவேர்வை, கட்டுகள், வாரடிகள், நிந்தை, உமிழ்நீர், சபிப்பு, முள்முடி, மூங்கில்தடி, சிலுவை ஆகிய அனைத்தையும் ஒரு வருஷத்துக்கு முன் அறிந்து மன மகிழ்ச்சியோடு காலங்கழித்தது என்ன காரணம்? சுவாமி! எங்கள் மேலுள்ள நேசத்தினால்அல்லவா; பாசத்தினால் அல்லவா; உமக்கே ஸ்தோத்திரம். மரித்த மகாத்துமாக்கள் எருசலேமின் பாடுகளையே நம்பியிருக்கிறார்கள் என்பதை வெளியிடுகிறார்கள்.

பரலோகத்திலிருந்து வந்த ஆட்களோடு இயேசு பேசிக் கொண்டிருக்கிற சமயத்தில் பேதுரு திடீரென்று போய் இயேசுவை நோக்கி, ஆண்டவரே நாம் இங்கே யிருக்கிறது நல்லது, உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கு ஒரு கூடாரமும் மோசேக்கு ஒரு கூடாரமும் எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றார். அன்று வந்திருந்த இருவரும் இன்னாரென்று பரி. பேதுருவுக்கு எவ்விதமாகவோ தெரிந்திருக்கிறது. 'நாம் இங்கே இருக்

கிறது நல்லது' 'மூன்று கூடாரங்களைப் போடுவோம்' என்ற வாசகங்கள் அந்த நேரத்தில் அம்மலையின்மேல் விளங்கிய தேவ மகிமையை ருசுப்படுத்துகிறது. பேதுரு அப்படிப் பேசும்போதே இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது; அந்த மேகத்திலிருந்து 'இவர் என் னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவ ருக்குச் செவி கொடுங்கள்' என்று ஒரு சப்தம் தொனித்தது. இவ்வளவு தாழ்வாக இறங்கி உமது குமாரனை எங்களுக்கு வெளிப்படுத்தும் பிதாவாகிய தேவனே உமக்கு மகிமையும், கனமும், ஸ்தோத்திரமும், கீர்த்தியும் உண்டாவதாக. இவ் வண்ணம் நீரே இறங்கி சாட்சி கொடுத்தும் இந்த தேசத்தார் இன்னும் அவரை உமது குமாரனென்று விசுவாசியாமலும், அவர்மேல் பிரியப்படாமலும், அவருடைய சுவிசேஷத் துக்குச் செவிகொடாமலும் இருக்கிறார்களே; எங்கள் தேசத் தின் அவிசுவாசம் அழியும்படி நீர் மறுபடியும் ஒருதரம் என் ஜனத்தோடு பேசுமேன் கர்த்தாவே; பரி. பேதுரு பூமி யில் உயிரோடிருக்கும்போதே மோட்சத்தைக் கண்டு கொஞ்ச நேரம் அநுபவித்திருக்கிறார். இது பிதாவின் சத்தம்; இந்த மலையின்மேல் பிதாவும், குமாரனும், மரித்த பக்தரும், உயிரோ டிருக்கும் பக்தரும் ஒன்றாய்க் கூடி மகிழ்ச்சியடைகிறதைப் பார்க்கிறோம். மரண பிரவினையை இங்கே காணோம். மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டுப் போயிற்று. இந்தக் காட்சியை யும் இன்பத்தையும் பேதுரு ஒரு காலத்திலும் மறந்துபோக வில்லை. அவர் இந்த மலையை 'பரிசுத்த பர்வதம்' என்று சொல்லி தேவ மகத்துவங்களைக் கண்ணாரக் கண்டதாகச் சொல்லுகிறார். உன்னத வானத்தில் ஒளியுள்ள மேகங் களுக்கூடே கேட்ட அந்தச் சத்தம் பேதுருவையும் அவ ருடைய தோழரையும் முகம் குப்புற விழப்பண்ணிற்று. அவர்கள் மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இயேசு வந்து அவர்களைத் தொட்டு எழுந்திருங்கள் என்று சொல்லி தேற்றினார். தேவனைக் காண ஒருவனும் ஆசைப்படக் கூடாது; அவருடைய சத்தம் உயிருள்ளோரை சாவுக்குரிய பயத்தால் நிரப்புகிறது மெய்யானால் அவருடைய சாயலால் மனுஷர் அதமாவார்கள் அல்லவா? இந்தச் சரித்திரத்தில் பேதுரு தைரியமும், இயேசுவின்மேல் பாசமும், மோட்சத்

தின்மேல் வாஞ்சையுமுடையவரா யிருந்தாரென்று தெரிய வருகிறது.

ஒருநாள் இயேசு கப்பர்நகூமிலிருக்கையில் சர்க்கார் வேலைக்காரர் பேதுருவினிடம வந்து வரிப்பணங் கேட்டார் கள். இயேசு பேதுருவைப் பார்த்து, கடலுக்குள் தூண்டில் போட்டு முதலாவது அகப்படுகிற மீனுக்குள்ளிருக்கும் வெள்ளிப் பணத்தை எடுத்து வரி கட்ட உத்தரவு கொடுத் தார். பேதுரு அப்படியே செய்தார். இதனாலே பொதுச் செலவு செய்வதில் பேதுருவும் சில வேலைகளைச் செய்து வந்தாரென்று நினைக்கத்தக்கதாயிருக்கிறது.

இயேசு கடைசி விசையாய் எருசலேமுக்குப் போகையில் ஐசுவரியத்தின் நஷ்டத்தையும் விசுவாசத்தின் இலாபத்தை யும் குறித்து சம்பாஷித்துக்கொண்டே போனார். உடனே பேதுரு வழக்கம்போல திடீரென்று வாய் திறந்து 'இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?' என்று கேட்டார். இதை நாம் கர்வமும் சுயநயமுமான ஒரு வாசகம் என்று தீர் மானிக்கக் கூடாது. இது கிறிஸ்துவினிமித்தம் உலகத்தை வெறுத்த சந்தோஷத்தினாலும், பரலோக பாக்கியங்களை எதிர்பார்க்கும் நம்பிக்கையின் ஆவலாலும் கேட்கப்பட்ட கேள்வி என்று நாம் எண்ணவேண்டியது. இந்தக் கேள்வி யைக் குறித்து இரட்சகர் சொல்லியிருக்கும் சந்தோஷமான உத்தரவை நாம் பார்க்கும்போது (மத். 19:28,29) இது பெருமையால் உண்டான தன்னய ஆவல் அல்லவென்பது தெளிவாயிருக்கிறது. இயேசுவை உத்தமமாய்ப் பின் பற்றினவர்கள் புதிய வானமும் புதிய பூமியும் தோன்றும் மாட்சிமையான காலத்தில் அவரோடுகூட ஆசனங்களில் வீற்றிருந்து நித்திய ஜீவனுக்கும் பங்காளிகளாவார்கள்.

இதுமுதல் நாம் பரி. பேதுருவைக் குறித்து சொல்லும் விஷயங்கள் இம்மட்டும் சொன்னவைகளிலும் விசேஷமா யிருக்கின்றன. ஏனெனில் கிறிஸ்து பாடுபட்ட வாரம் துடங்கியுள்ள பேதுருவின் சரித்திர வரலாற்றை இவ்விடத் தில் ஆரம்பிக்கிறோம். இயேசு பாடுபட்ட வாரத்தின் திங்கட்கிழமையில் எருசலேமுக்குப் போனபோது கனி

கொடாத அத்திமரத்தைச் சபித்தார். அன்று இரவு திரும்பு கிறபோது இருட்டிப்போனதால் அந்த மரத்துக்குண்டான முடிவை ஒருவனும் கண்டுபிடியாமல் போனார்கள். எப்படி யும் மறுநாளின் காலையில் மறுபடியும் எருசலேமுக்குப் பயணப்பட்டு வரும்போது, பேதுரு அற்புதமாய் பட்ட மரத்தைக் கவனித்து 'ரபீ இதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று' என்று சொன்னார். இதிலுலே பரி. பேதுரு இரட்சகருடைய அற்புதங்களை நுட்பமாய்க் கவனித்து வருகிற சுபாவமுடையவரா யிருந்தாரென்று விளங்குகிறது.

பரி. பேதுரு மற்றெல்லா சீஷரையும் பார்க்கிலும் கிறிஸ்துவை மதித்து வந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனல் அவருடைய இந்த சிறந்த குணமானது இரட்சண்ய கிரியையின் சம்பந்தமாயும், போதனையின் சம்பந்தமாயும் கிறிஸ்து வெளிப்படுத்தும்படி சித்தமாயிருந்த அன்புகளைத் தடுக்கிறதாய், அல்லது அதற்கு ஆலோசனை சொல்லுகிற தாய்க் காணப்பட்டது. இயேசு தம்மை கனம் பண்ணுகிற வர்களைக் கனம் செய்தாலும், இரட்சண்ய கிரியையைத் தடுக்கும்படியாக வரும் கனத்தையும், அக்கனத்தைக் கொடுக்கும் ஆட்களைக் கண்டித்தும் வந்தார். நமக்காகப் பாடுபடுவது அவருக்கு இன்பமாயிருந்ததால் அதை அடிக்கடி பேசி அதைத் தடுத்த பேதுருவைக் கடிந்துகொண் டார். அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி யில் பஸ்காவைத் தமது சீஷரோடு கொண்டாடுகிற சமயத் தில் தமது சீஷரிடத்திலிருக்கவேண்டிய உன்னத தாழ்மையை ஒரு செய்கையால் உணர்த்திக் காண்பிப்பது நலமென்றெண்ணி போஜனத்தை விட்டெழுந்து வஸ்திரங் களைக் கழற்றிவைத்து ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண் டிருந்த சீலையினல் துடைக்கவும் தொடங்கினர். அவர் பேதுருவினிடத்தில் வந்தபோது அவர் இயேசுவின் செய்கை யைத் தடுத்து 'ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவ லாமா' என்று கேட்டார். இப்படிப் பேதுரு கேட்டதும்,

கேட்கவேண்டியதும் நியாயம்தானென்று சொல்லுவோம்; ஆனால் இயேசு மறுமொழியாக: 'நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் நீ அறிவாய்' என்று சொன்னார். இதிலுலே இயேசுவினுடைய செய்கையின் தன்மையைப் பேதுரு அறிந்துகொள்ளவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஜலத்தில் வாழும் மீன்களின் பாதையையும், ஆகாயத்திலுள்ள பட்சியின் பாதைகளையும் மனுஷன் கண்டறியக் கூடாதே, அவனுக்கு தேவனுடைய கிரியைகளின் பாதை என்னமாய்த் தெரியும்? பேதுரு தன் மனதை மறுபடியும் திடப்படுத்தி 'நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவக்கூடாது' என்று சாதித்தார். இப்படிப் பேதுரு சொன்னது சரியல்ல. இயேசு அவருக்குப் பிரதியுத்தரமாக: 'நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை' என்று சொன்னார். ஆதலால் இயேசுவின் செய்கை ஒரு வீண் சடங்காயிராமலும், ஒரு போதனையின் திருஷ்டாந்தமாய் மாத்திரமிராமலும் ஒரு வரும் அறியாத ஒரு வாழ்வின் பங்கைப் பகிர்ந்து கொடுக்கிறதுமாயிருந்தது; இலாசருவின் சகோதரியாகிய மரியாள் அந்த நல்ல பங்கை கிறிஸ்துவின் பாதத்தில் உட்கார்ந்திருந்து சம்பாதித்தாள். சீஷரோ கிறிஸ்து அவர்களுடைய பாதங்களைக் கழுவும்படி இடங்கொடுத்தும் பெற்றுக்கொண்டார்கள். இவ்வளவும் சொன்னவுடனே பேதுரு மறுபேச்சுப் பேசலாமா? அவர் தன்னுடைய இரு கரங்களாலும் தன் வாயை மூடிக்கொண்டு காலே நீட்டி, சுவாமி கழுவும், அடியேன் நீட்டுகிறேன் என்றல்லவா சொல்லவேண்டியது. அவர் அப்படிச் சொல்லாமல் பின்னும் தர்க்கமாடி ஆண்டவரே, என் கால்களே மாத்திரமல்ல, என் கைகளையும் தலையையும்கூட கழுவவேண்டும் என்று பேசினார். இரட்சண்ய விஷயத்தில் கிறிஸ்துவைக் கனம் பண்ணுகிற பாவனையாய் இப்படி வாது கூறுவதும் வழக்குப் பண்ணுவதும் சரியல்ல; நம்முடைய மூலமாய் தாம் மகிமையையும் கனத்தையும் சம்பாதிக்க வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமாயிராமல் தம்முடைய மூலமாய் பாவமன்னிப்பையும் பரிசுத்த இருதயத்தையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே விருப்பமுடையவராயிருக்கிறார். இவ்விடத்தில்

காணப்படுகிற கிறிஸ்துவின் உன்னத தாழ்மையைத் தியானிப்பது நமது நோக்கமாயிராமல் பேதுருவின் வரலாறுகளைக் கவனித்துக்கொண்டு போவோமாக.

கிறிஸ்து தமது சீஷருடைய கால்களைக் கழுவி பேதுருவோடு அதைப்பற்றி வாதாடி வரலாறுகளால் அந்தச் செய்கையின் பல நோக்கங்கள் அடங்கியிருக்கின்றன; நம்மில் எவன் பெரியவன் என்று சீஷர் பேசினதைத் தடுக்கவும், தம்முடையவர்களை முடிவு பரியந்தம் அன்புகூர்ந்தாரென்பதை யுணர்த்தவும், தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை சற்றே சுட்டிக் காட்டவும், தாழ்மையைப் படிப்பிக்கவும், தம்மிடத்திலிருந்த ஒரு பெரிய பங்கை அவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவும் நோக்கமாய் அப்படிச் செய்தார். அவர் சீஷருடைய கால்களைப் பரிசுத்த இராப்போஜனத்தை ஏற்படுத்துமுன் கழுவினதால் பரிசுத்த நற்கருணையில் சேருகிறவர்கள் விசேஷ ஆயத்தத்தோடும் பாவ அறிக்கை செய்த சுத்த மனசாட்சியோடும் வரவேண்டுமென்பது உணர்த்தப்படுகிறது. இராப்போஜனக்காரர் கிறிஸ்துவின் இரத்தத்தால் தெளிக்கப்பட்ட இருதயமுடையவர்களாக வருவார்களானால் அதின் மூலமாகக் கிடைக்கும் பங்காகிய கிறிஸ்துவின் சரீரத்தைப் பெற்று வாழ்வார்கள்; அப்படிக் கழுவப்படாத இருதயமுள்ளவர்களுக்குக் கிறிஸ்துவில் பங்கில்லை என்ற பெரிய இரகசியம் இந்த வரலாற்றின் மூலமாய்த் திருஷ்டாந்தப்படுத்தப்படுகிறது.

சீஷர் பின்னும் பஸ்கா பந்தியிலிருக்கையில் இயேசு தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனைப்பற்றி ஜாடையாய்ப் பேசினார். அச்சமயத்தில் பேதுரு அதின் இரகசியத்தை அறியும்படி பரி. யோவான் மூலமாகப் பிரயாசப்பட்டார். இதினாலே கிறிஸ்துவுக்கு யாதொரு துன்பமும், கனவீனமும் உண்டாகக் கூடாதென்கிற குருபக்தி பரி. பேதுருவுக்கு இருந்தது என்பது விளங்குகிறது. தன் குருவைக் காட்டிக் கொடுக்கிறவன் இன்னானென்று இரகசியமாய் பேதுருவுக்கு உடனே தெரிந்தபோதிலும் அவன்மேல் கோபம் கொள்ளாமல் யூதாசை இலேசில் விட்டது சற்று அதிசயமாயிருக்கிறது. ஒருவேளை இச்செய்தியைக் கேள்விப்பட்ட

வுடனே இவனுல் வருகிற சங்கடத்தை நாம் நிவிர்த்திசெய்து நம் குருவைக் கரையேற்றக் கூடாதா என்று பரி. பேதுரு நினைத்து சும்மாய் இருந்துவிட்டு மிருக்கலாம். அப்பால் அவர் தமது அன்புக்கு அத்தாட்சியும் தமது மரணத்துக்கு என்றுமுள்ள ஞபாகமுமாக ஆசீர்வதிக்கப்பட்ட சாக்கிர மந்தாகிய பரிசுத்த இராப்போஜனத்தை ஏற்படுத்தி ஸ்தோத்திரப் பாட்டோடே அந்தப் பஸ்காவையும் பரிசுத்த நியமத்தையும் முடித்தார்.

அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு கெத்சமனே என்ற தோட்டத்திற்குப் போனர்கள். இந்த தோட்டத்துக்குப் போன நோக்கத்தை இயேசு தவிர வேறொருவரும் அறியாதிருந்தார்கள்; அத்தோட்டத்துக்குப் போகும் வழியில் இயேசு சுவாமி தமது சீஷரைப் பார்த்து 'மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப் படும்' என்ற வாசகப்படி இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள், ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு உங்களுக்கு முன்னே கலிலேயா வுக்குப் போவேன் என்று சொன்னர். இயேசு சுவாமிக்கு நமக்காக சாகும்படியான ஆசை அதிகமாயிருந்தது; அவர் நம்மேலுள்ள தமது அன்பைத் தமது சிலுவையின் பாடுகள் மூலமாயும் சாவின் மூலமாயும் காண்பிக்க விரும்பினர். என்றாலும் தமது சீஷர் மனக் கவலைக்கும் துக்கத்துக்கும் இடங்கொடாதபடி தமது உயிர்த்தெழுதலையும் சேர்த்துச் சொல்லிவந்தார். சீஷரோ அவருடைய சாவின் வரலாறுகளை நினைத்து மயங்கினர்களேயன்றி உயிர்த்தெழுதலின் வரலாறு களை ஞாபகத்தில் வைத்து மனம் தேறவில்லை. இயேசு சுவாமி இவ்வளவும் சொன்னவுடனே பேதுரு தமது வழக்கம்போல முந்தி வாய் திறந்து 'உமது நிமித்தம் எல் லாரும் இடறலடைந்தாலும் நான் ஒருக்காலும் இடறலடை யேன்' என்றார். இது தன் மன பலமறியாமல் பேசின வார்த்தையா யிருக்கிறதென்று பின்வரும் வரலாறுகளால் விளங்கும். இயேசு அவரை நோக்கி இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லு

கிறேன் என்றார். அதற்குப் பேதுரு நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் மறுதலிக்கமாட்டேன் என்று சொன்னார். பக்திமான்கள் எல்லாரிடத்திலும் நாம் காண்கிற இப்படிப்பட்ட ஒரு பொதுக் குணத்தை பேதுரு வில் காண்கிறோம். நாம் பெரும்பாலும் கிறிஸ்துவின் மேலுள்ள நமது நேசத்தையும் பாசத்தையும் அதிக உறுதி யானதென்று நினைத்துக்கொண்டு பலதரம் மன எழுச்சி யடைந்து, பரி. பேதுரு பேசினது போலவே பேசலாம். ஆனல் நமது மனதின் பலவீனமும் அல்லது பலன் குன்றிப் போகும் என்பதும் தேவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆத லால் தன்னே தேவபக்தி விஷயத்தில் நிலைப்படுத்திக்கொண் டேன், இனி பயமில்லே என்று நாம் திடீரென்று சொல்லா மல், நான் பலவீனனாயிருக்கிறேன், என்னைப் பலப்படுத்து கிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்யத் தராணி யுண்டு என்று அறிக்கையிடுகிற குணமுடையவர்களாயிருப் பது நல்லது. பேதுரு நான் உம்மோடு மரிக்கவேண்டியதா யிருந்தாலும் மறுதலிக்கமாட்டேனென்று சொன்னாரே, அந்த வார்த்தையை எவ்வளவு தூரம் காப்பாற்றிக்கொண்டா ரென்று பின்னாலே அறிவோம்.

இயேசு சுவாமி கெத்சமனே தோட்டத்தின் வாசலில் போனவுடனே எட்டு சீஷரை நிறுத்திவிட்டு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் மாத்திரம் கூட்டிக்கொண்டு தோட்டத்துக்குள்ளே போய் துக்கமடையவும் வியாகுலப் படவும் துடங்கி, 'என் ஆத்துமா மரணதுக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது, இங்கே தங்கி என்னோடுகூட விழித்திருங்கள்' என்று சொல்லி கல்லெறிதூரம் அவர்களை விட்டுப் போய் முகங்குப்புற விழுந்து ஒருமணி நேரம் ஜெபம் செய்து சீஷர்களிடத்தில் வந்தார்; அவர்களோ நித்திரை செய்தார்கள். எப்படியும் பேதுரு அவர் வந்த அரவங்கேட்டு விழித்திருக்கலாம். அவர் பேதுருவை நோக்கி தம்மோடு விழித்திருக்க மறுபடியும் எச்சரித்து முன் போல ஜெபம் செய்யப் போனார். இப்படி இயேசு சுவாமி மூன்றுதரம் ஜெபம் செய்து, ஆத்தும வியாகுலமடைந்தார்.

அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.

கெத்சமனே தோட்டத்தில்
என்னை மீட்கவென்று நீர்
இரத்த வேர்வை சிந்தினீர்
இரட்சகா! தஞ்சம்! தஞ்சம்.

இயேசு சுவாமி தோட்டத்தில் பாடுபட்டு இரத்தவேர்வை வேர்த்து மயங்கிக் கிடக்கையில் வானத்திலிருந்து ஒரு தேவ தூதன் வந்து அவரைத் தேற்றினான். அவர் பராக்கிரமனைப் போல் மறுபடியும் வந்து சீஷரைத் தட்டி எழுப்பித் தமக்கு முன்வரும் பெருங் கூட்டத்தைக் காட்டி, 'என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ வந்துவிட்டான்' என்று சொல்லி அவர்களோடு அந்தக் கூட்டத்துக்கெதிரே போனார். இந்தக் காட்சி பேதுருவுக்கு அதிசயமாயிருந்தது. இவையனைத்தும் ஆகாயத்தில் உள்ளங்கை மேகமில்லாமல் சந்திரன் பிரகாசிக்கையில் பேரிடியும் மழையுமிருக்கிறதுபோல பேதுருவின் சத்துருக்கள் கொண்டுவந்த கத்திகளும், ஈட்டிகளும், தடிகளும், கயிறுகளும் அவருடைய கண்களுக்குத் தெரிந்தன. அவைகளில் ஒன்று தன் எஜமானுகிய கிறிஸ்துவுக்கு என்று கொண்டுவரப்பட்டதுதானென்று அவர் துவக்கத்தில் எண்ணியிருக்கவேமாட்டார். இதற்குள்ளாக துரோகியாகிய யூதாஸ் மனதுக்குத் தோன்றியிருக்கலாம். மெய்யாகவே இவைகள் கிறிஸ்துவின் வாசகத்தையும், அவருடைய தெய்வீக முன்னறிவிப்பையும் அவர் மனதில் நன்றாக உறுதிப்படுத்தினதேயன்றி வேறல்ல. பேதுருவின் மனம் இக்கூட்டத்தின் தன்மையை கிரகித்துக்கொண்டேயிருக்கிறபோது பந்த வெளிச்சத்தில் சத்துரு முந்தியோடி வந்து இயேசுவை முத்தத்தால் காட்டிக்கொடுத்தான். மற்றவர்கள் சந்தோஷத்தால் ஓலமிட்டு இயேசுவைப் பிடித்துக் கட்டினார்கள். உடனே பேதுரு தன் குரு பக்தியால் பொங்கி இயேசு சுவாமியைக் கட்டித் துன்பப்படுத்தின மல்குஸ் என்பவன் கையைத் தமது பட்டயத்தால் வெட்டினார். அந்த வெட்டு அவன் கையில் விழாமல், அவன் வலது காதில் விழுந்ததால் அது அற வெட்டப்பட்டது. உடனே

இயேசு அவன் காதைத் தொட்டு குணமாக்கினார். ஆ! தீமை செய்கிறவனுக்கு நன்மை செய்வதில் நமது இரட்சகராகிய இயேசுவுக்குச் சமானமானவர்களுண்டா? இல்லை. இல்லை. மல்குஸ் என்பவன் காது வெட்டப்பட்டவுடனே பேதுரு ஓட்டம் பிடித்திருக்கலாம். அவனுடைய காது குணமாக்கப்பட்ட அற்புதமானது பேதுருவுக்குச் சத்துருக்களால் உண்டாகிறதாகத் தோன்றும், சகல சங்கடங்களையும் நிவிர்த்தியாக்கிப் போட்டது என்று சொல்லவேண்டியது. இச்சமயத்தில் விளங்கிய பேதுருவின் அபிமானத்தை நாம் புகழவேண்டியதுதான். ஆனால் இயேசு தமது இரட்சிப்பின் மகிமைகளைக் கத்தியினால் அல்ல, அன்பினாலும் பக்தியினாலும் பிரபல்லியப்படுத்தும்படிச் சித்தம் கொள்ளுகிறார்.

பேதுரு தமது கத்தியைப் பிரயோகித்த நிமிஷம்முதல் சற்று தலைமறைவாய்த்தான் திரிந்தார். அவர் தம்மை இன்னாரென்று காட்டிக்கொள்ளக்கூடாதென்று எண்ணி தூரத்திலே இயேசுவுக்குப் பின்சென்று இயேசுவுக்குச் சம்பவிப்பதை அறியும்படி பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்குள் போனார். அந்த அரண்மனை, நடுவிலே முற்றமுள்ள சதுரமான கட்டடமாயும், மேல் மெத்தை உள்ளதாயும் இருந்தது. அரண்மனையின் தலைவாசல் கமான் வளைவுள்ளதாயிருந்தது. நினைத்தவர்களெல்லாம் உள்ளே வர இடம் கொடாதபடி அவ்வாசலைக் காக்க ஒரு பெண்பிள்ளை இருந்தாள். அவள் அந்த கமான்வாசல் வழியாய்க் கடந்து உள்ளே போகும் ஒவ்வொருவரையும் நன்றாகக் கவனித்துத் தன் மனதில் சமுசயப்பட்டவர்களை எல்லாம் தடுத்துவிட்டாள். அப்படித் தடுக்கப்பட்டவர்களில் பேதுருவும் ஒருவராயிருந்தார். அவருடைய முகச்சாயலிலும், நடைச்சாயலிலும் ஏதோ விசேஷமான அடையாளம் காணப்பட்டதால் அவர் உள்ளே போய் கலகம் செய்வார் என்று நினைத்துத் தடுத்திருந்தாலும் இருக்கலாம். ஆனால் பேதுருவுக்கு அரண்மனைக்குள் நடக்கும் வரலாறுகளை அறிய அதிக ஆவலிருந்தது. யோவான் அப்போஸ்தலன் எவ்விதமாகவோ தடையின்றி உட்பிரவேசித்து விட்டதால் அவருடைய பிரயத்தனத்தால் பேதுருவும் உள்ளே விடப்பட்டார். பேதுரு வெளியே இருந்து

விட்டால் அதிக நலமாயிருக்கும்; அவர் உள்ளே வந்ததில் இலாபமில்லை. எப்படியெனில், உள்ளே வந்த பேதுரு அரண்மனை முற்றத்தில் நெருப்புண்டாக்கிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த சேவகர் நடுவில் போய் உட்கார்ந்தார். வெளிக்குத் தன்னை யூதர் பட்சத்தானென்று காட்டவும் உள்ளுக்கு இயேசுவைப்பற்றிப் பேசிக்கொள்ளும் வார்த்தைகளைக் கவனிக்கவும் இப்படிச் செய்திருக்கலாம்.

வாசலைக் காத்த அந்தப் பெண் இந்தக் கூட்டத்துக்கு வந்து சற்றுநேரம் பேதுருவை உற்றுப்பார்த்து நீயும் கலிலேயனாகிய இயேசுவோடு இருந்தாய் அல்லவா என்று கேட்டாள்; அதைக் கேட்டவுடனே பேதுருவின் மனம் கலங்கிவிட்டது. அவர் தன்னை இந்த அபாயத்திலிருந்து விடுதலையாக்குகிறது அவசியமென்று புத்தியீனமாய் எண்ணிக்கொண்டு 'நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது' என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தார். ஆ! இந்தச் சமயத்தில் சாத்தான் அடைந்த சந்தோஷத்தைச் சொல்ல வேண்டுமா? சகல சத்தியத்திற்கும் பகைஞனாகிய பிசாசு இந்தப் பொய்யைக் கேட்டவுடனே அகமகிழ்ந்து, ஆகார் பேதுருவைப் பிடித்துக்கொண்டேன் என்றான். இந்த மறுதலிப்பு ஒருதடவையோடு முடிந்துபோகவில்லை. இந்த முற்றத்திலிருந்தால் சங்கடமென்று வெளியே போக யோசித்து வாசல் மண்டபத்தண்டை வந்த பேதுரு வேறொருத்தி (இவள் முந்தினவளுக்குப் பதிலாக வாசல் காத்து நின்ற ஸ்திரீயாக இருக்கலாம்) பேதுருவைக் கண்டு, 'இவனும் நசரேயனாகிய இயேசுவோடு இருந்தான்' என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள். உடனே பேதுரு 'அந்த மனுஷனை அறியேன்' என்று ஆணையிட்டு மறுபடியும் மறுதலித்தார். இதற்குள்ளாக சேவல் சத்தம் ஒருதரம் பேதுருவின் காதில் விழுந்தது. அப்பால் அவர் இனி வெளியே போனால் சமுசயம் அதிகப்படுமென்று உத்தேசித்து அங்கங்கே கூட்டம் கூட்டமாய் நின்று பேசிக்கொண்டிருக்கிறவர்களோடு தமது காலத்தைக் கடத்தினார். இப்படிச் சுமார் ஒரு மணி நேரம் கடத்தினபின்பு இயேசு ஒரு அறையில் கொண்டுபோகப்பட்டு, வாயால் சொல்லிமுடியாத

அவமானங்களையும், நிந்தைகளையும் சத்துருக்களால் அடையும்போது இவரும் அக்கூட்டத்தில் நின்றார். அச்சமயத்தில் சிலர் இவரிடம் வந்து, நாங்கள் உன்னை அவரோடு கெத்சமனே தோட்டத்தில் பார்க்கவில்லையா? மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; நீ கலிலேயன் அல்லவா? உன் பேச்சு அதை வெளிப்படுத்துகிறது என்றிப்படிப் பலவாறுக வினவினார்கள். உடனே பேதுரு இச்சமயத்தில் நாம் பொய்சத்தியம் பண்ணித் தப்பாவிட்டால் மோசம் நேரிடுவதற்கு யாரைக் கேட்கவேண்டுமென்று நினைத்து, 'அந்த மனுஷனை அறியேன்' என்று சொல்லி சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினார். ஐயோ பேதுருவே, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்ட வாயாலே 'அந்த மனுஷனை' என்கிற பழிப்பான வார்த்தையும் பிறந்தது என்ன அதிசயம்! ஒரு கிறிஸ்தவ புலவன் உன் குணத்தைக் கவனித்து,

> கேபாவே, கேபாவே, கேபாவென்ற பேருனக்
> காகுமோ, ஆகுமோ, அற்ப விசுவாசியே!

என்று சொல்லியிருக்கிறது சரிதான். ஆ! பன்னிரு அப்போஸ்தலரிலும் மூத்தவரும், தைரியசாலியும், வாக்கு வல்லவனும், பரலோகத்தின் திறவுகோல்களைப் பெற்றவருமான பேதுருவின் விழுதலை நாம் பார்க்கும்போது, நம்மை எவ்வளவாகத் தாழ்த்திக்கொள்ளவேண்டியது.

பேதுருவின் ஆணையும் சாபவார்த்தைகளும் முடியுமுன் சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. அந்த சமயத்தில் இயேசுவும் பேதுருவை நோக்கிப் பார்த்தார். உடனே பேதுரு தன் மறுதலிப்பை உணர்ந்து வெளியே போய் மனம் கசந்து அழுதார். சேவல் சத்தம் பேதுருவின் காதின் வழியாயும், கிறிஸ்துவின் காட்சி அவருடைய கண்ணின் வழியாயும் சென்று அவருடைய தப்பிதத்தை உணர்த்திற்று. தேவன் சிலதரம் மனுஷரை உணர்த்தும்படி மிருகங்களையும், பட்சிகளையும் தூதர்களாக்குகிறார். பீலேயாமுக்குக் கழுதையைக் கொண்டு போதனை செய்தவர் இப்போது பேதுருவுக்குச் சேவலைக்கொண்டு உபதேசித்தார். கழுதை பேசியும் பீலேயாம் குணப்படவில்லை, சேவல் சத்தத்தால் பேதுரு

மனம் கசந்து அழுது பாவ மன்னிப்பைப் பெற்றார். பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் காட்சியை அடைகிறவர்கள் பாக்கியவான்கள்.

மறுதலித்த கேபாவை
பார்த்த கண்ணே பாருமென்னை
பார்த்தால் பாவத்தைக் காண்பேன்
பார்த்தால் மன்னிப்படைவேன்.

பேதுரு ஆதி மனுஷனைப்போல் தன் பாவ செய்கையினிமித்தம் வெட்கப்பட்டுத் தமது முகத்தை மூடிக்கொண்டு வெளியே போய்விட்டார். அப்பால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மட்டும் நாம் அவரைப்பற்றி ஒன்றும் அறியோம். அவருடைய பாவம் அவரை எங்கேயோ மறைத்துவிட்டது. அந்த மறைவு கிருபையைவிட்டு விலகச்செய்யும் மறைவாயிராமல், கிருபைக்காக மன்றாடும்படி ஏவும் காரணமாயிருந்தது என்று காண்கிறோம். உம்மோடேகூட சாகவும் ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொன்ன பேதுரு அந்த சாவைத் தன் கண்ணால் முதலாய்ப் பார்க்கவில்லை என்று தோன்றுகிறது; அவர் அப்புறம் கிறிஸ்துவைப் பார்க்க வெட்கப்பட்டு எங்கேயோ ஒளித்துக்கொண்டார். பாவத்தைச் செய்த ஆதாம் ஒளித்தாலும் தேவன் அவனைக் கண்டு பிடித்துப் பாவமன்னிப்பின் வாக்குத்தத்தங்களைக் கூறினது போல, தம்மை ஆணையோடும் சாபத்தோடும் மறுதலித்த பேதுருவையும் இயேசு உயிர்த்தெழுதலுக்குப்பின் சந்தித்து தமது கிருபைக்குள் அவரை மறுபடியும் சேர்த்துக்கொண்டார். அதன் வரலாறுகள் பின்வரும் வரிகளால் விளங்கும்.

இயேசு சுவாமி பாடுபட்டு அடக்கம் பண்ணப்பட்ட மூன்றும் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இருட்டோடே சில ஸ்திரீகள் அவருடைய உடலுக்குப் பரிமளத் தைலம் பூசும்படிப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் போகிறதற்குள்ளாகக் கல்லறையிலிருந்து கர்த்தர் எழுந்து விட்டார். அதை அந்த ஸ்திரீகள் அறியாமல் கல்லறையண்டை போனபோது, அங்கிருந்த தேவதூதன் அவர் உயிர்த்தெழுந்துவிட்டாரென்றும் கலிலேயாவுக்குப் போகிறார் என்றும் சொல்லி, இந்தச்சங்கதியை அவருடைய சீஷருக்கும்,

பேதுருவுக்கும் சொல்லும்படிக் கட்டளையிட்டான் (மாற். 16:7). இது தூதனுடைய சுய நினைவாலுண்டான பேச்சா யிராமல் கிறிஸ்துவால் சொல்லப்பட்ட கட்டளையாயிருந்தது. இந்த சம்பந்தத்தில் பேதுருவின் பேர் விசேஷித்து வருகிற தால் இவர் அப்போஸ்தலரில சிரேஷ்டராக மதிக்கப்பட்டா ரென்று சொல்வாருமுண்டு. நாம் இதனால் பேதுருவின் சிரேஷ்ட தன்மையையல்ல, இயேசுவின் நேசத்தின் அளவை சற்றே தியானிப்போமாக. பிரதான ஆசாரியனுடைய அரண் மனை முற்றத்தில் தன் முகத்தை மூடித் தலை கவிழ்ந்து, மனங்கசந்த பாவியாகிய பேதுருவுக்கு அவர் காண்பிக்கும் பட்சம் எவ்வளவு அதிகமாயிருக்கிறது. என்னை மறுதலித்த பேதுருவே! சபித்த கேபாவே! நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறவேன்; உன் கண்ணீரையும், மனக் கசப்பையும், வெட்கத்தையும், உணர்வையும் நான் அங்கிகரித்தேன். உனக்குப் பாவமன்னிப்பை அருளினேன் என்பதற்கும், என் கண் உன்மேல் கிருபையாக வைக்கப்பட்டிருக்கிற தென்பதற்கும் இதுவே அத்தாட்சி என்று சொல்லுகிறது போலிருக்கிறது. மனந்திரும்பின பாவிகளுக்கு இயேசு அதிக இரட்சண்ய சிலாக்கியங்களைக் கொடுத்துவருகிறார்.

அதிகாலையில் கல்லறைக்குப் போய்த் திரும்பிவந்த ஸ்திரீகளின் வார்த்தை மற்ற சீஷருக்குக் கட்டுக்கதை போலிருந்தாலும் பேதுருவுக்கு அப்படியிருக்கவில்லை. அவர் தமது சிநேகிதனாகிய யோவானுடன் உடனே ஓடினார். ஆனால் அவருடைய வயதும், ஒருவேளை அவருடைய ஸ்தூ லித்த உடலும் ஓட்டத்துக்கு இசைவாயிராததால் வாலிப னை அவருடைய தோழன் முந்தி ஓடினான். எப்படியும் இவர் அவருக்குப் பின்னாலே போய் கல்லறையைப் பரிசோ தித்துத் தனக்குச் சொல்லப்பட்ட செய்தியின் நிச்சயத்தை அறிந்தார். இயேசு இதற்குள்ளாக மகதலாவூர் மரியாளுக் குத் தரிசனமளித்தார். எப்படியும் அன்றையதினம் பகலில் எதோ ஒரு இடத்தில் கிறிஸ்து பேதுருவுக்குத் தரிசனமளித்திருக்கிறார் என்று விளங்குகிறது. அன்று சாயந்திரம் எம்மாவூரிலே இயேசுவைக் கண்ட சீஷர் எருசலேமுக்கு வந்து தாங்களடைந்த தரிசன வரலாற்றைச்

சொல்லுமுன்னமே, 'கர்த்தர் மெய்யாகவே எழுந்திருந்து சீமோனுக்குத் தரிசனமானார்' என்று மற்ற சீஷர் மூலமாகக் கேள்விப்பட்டார்கள். ஆகவே சீஷரில் முதலாவது தரிசனை பெற்றவர் பேதுருதானென்பது தெளிவாயிருக்கிறது. இவ்வண்ணமாய்த் தன் பாவத்துக்காக மனங்கசந்து அழுத பேதுரு, சீஷருக்குள் உயிர்தெழுதலின் முதல் செய்தியைக் கேட்கவும் முதல் காட்சியைக் காணவும் அருள் பெற்றார்.

உயிர்த்தெழுதலுக்குப் பின்னுள்ள கிறிஸ்துவின் காட்சி அபூர்வமாயிருந்தது. சிலவேளை சீஷர் ஆசைப்பட்டும் கிட்டாமலும், வேண்டிக்கொண்டும் கைகூடாமலுமான அற்புத காட்சிகளாயிருந்தன. அக்காட்சிகளின் ஆரம்பத்தில், இயேசு உலகப்பிரகாரமான ஒரு இராச்சியத்தை ஸ்தாபிப்பா ரென்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம். வரவர அந்த எண்ணம் அற்றுப்போயிற்று. ஆதலால் அவர்கள் அடிக்கடி தங்கள் பூர்வ தொழிலைச் செய்து வந்தார்கள். சீஷர் இப்படித் தங்கள் பூர்வ வேலையைப் பின்தொடர்வது கிறிஸ்துவுக்குச் சித்தமாயிருக்கவில்லை; அவர்களை அவர் அழைத்த நோக்கத்தின்படி அவர்கள் எப்போதும் மனுஷரை இரட்சண்ய மார்க்கத்துக்குப் பிடிக்கிறவர்களாகவே இருக்க வேண்டுமென்பது அவருடைய தீர்மானமாயிருந்தது. ஆதலால் ஒரு விசேஷித்த அற்புத தரிசனையினால் அதை உறுதிப்படுத்தும்படி அவர் சித்தங்கொண்டார். எப்படியெனில், ஒருநாள் ஏழு சீஷர் ஓரிடத்தில் கூடியிருக்கையில் பேதுரு அப்போஸ்தலன் 'நான் மீன்பிடிக்கப் போகிறேன்' என்று சொன்னார். அவர்களெல்லாரும் நாங்களும் வருகிறோம் என்றார்கள். ஒருவேளை கிறிஸ்துவின் காட்சிக்காக அநேக நாள் ஜெபத்தியானத்திலிருந்தும் அது கிட்டாததால் தங்கள் மனச்சோர்பு நீங்கும்படி இப்படி மீன்பிடிக்க ஆரம்பித்திருக்கலாம். அப்படியே அவர்களனைவரும் படகிலேறி வலைவீசியும் ஒன்றும் அகப்படவில்லை; விடியற்காலத்தில் விசனத்தோடு படகைக் கரைக்குக் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி படகுக்கு வலது பக்கத்தில் வலைபோடச் சொன்னார். அப்படியே அவர்கள் செய்து நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களை ஒரே தடவையில்

பிடித்தார்கள். உடனே பேதுரு கர்த்தரை வணங்கித் தன் நன்றியறிதலைச் செலுத்தும்படி கரைக்கு இன்னும் இருநூறு முழம் தூரமிருக்கும்போதே கடலில் குதித்து நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தார். அவர்கள் மீன்களைக் கரையில் கொண்டுவந்தபோது, அப்பமும் மீனும் சமைத்துவைக்கப் பட்டிருக்கிறதைக் கண்டு அதிசயித்தார்கள். ஆ! இயேசு தமது பிள்ளைகளின் பசியையும் வருத்தத்தையும் நன்றாய் அறிந்தார். பணப்பையைச் சுமந்த யூதாசு சீஷருக்கு வைத்த பணத்தையெல்லாம் மோசம்பண்ணிவிட்டதாலும் இயேசு மரணமடைந்ததோடு மற்ற புறவரும்படிகள் எல்லாம் நின்றுபோனபடியாலும், சீஷர் சாப்பாட்டுக்கு அதிகக் கஷ்டப்பட்டிருக்கவேண்டியது; கடற்கரையில் ஒரு நாளும் இப்படிப்பட்ட விருந்து அவர்களுக்கு அகப்பட வில்லை.

அவர்கள் அனைவரும் கடற்கரையில் தேவனால் அளிக்கப் பட்ட ஆகாரத்தையுண்டு அகமகிழ்ந்திருக்கையில் இயேசு பேதுருவை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்; கேபா என்ற பேரைக் கிறிஸ்து இந்தச் சமயத்தில் வழங்கவில்லை. பெண்பிள்ளைகளுக்குப் பயந்து தன் ஆண்டவரை ஆணையோடும் சாபத்தோடும் மறுதலித்த வருக்குக் கேபா என்ற பேர் தகுமா? தகாது. அந்த கனத்தை அவர் இழந்துபோனார். இவர்களிலும் அதிகமாய் அன்புகூருகிறாயா என்று கேட்கிறதற்கும் நியாயமுண்டு. பேதுரு எல்லாருக்கும் மூத்தவராயும், பேச்சில் அதிகப் பட்டவராயுமிருந்ததோடு இயேசு மற்றவர்களுக்குக் காட்டாத பட்சத்தை இவருக்குக் காட்டினார். மற்ற அப்போஸ்தலருடைய வீட்டுக்குச் செய்யப்படாத கிருபை இவர் குடும்பத்துக்குக் கிடைத்தது. இவருடைய மாமியை இயேசு அற்புதமாய்க் குணமாக்கினார். ஜலத்தின்மேல் நடக்கவும், சாத்தானால் புடைக்கப்பட்டபோது விசுவாசம் குறைந்து போகாதபடிக்குக் காக்கப்படவும், மறுதலித்தபோது இரட்சண்ய காட்சியால் நோக்கிப்பார்த்து மீட்கவும் இவருக்கு மாத்திரம் கிருபை கிடைத்தது. ஆதலால் மற்ற அப்போஸ்

தலரிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று கேட்கிறது நியாயந்தான். இயேசு சுவாமி கேட்ட கேள்வியின் கருத்தை உத்தமமாயுணர்ந்து, ஆம், ஆண்டவரே. உம்மை நேசிக்கிறேனென்கிறதை நீர் அறிவீரென்று சொன்னார். இது மரியாதையும் பாசமுமுள்ள ஒரு உத்தரவுதான். ஆனால் இதில் தன் குறையைக் காட்டும் குறிப்பு வார்த்தை ஒன்றுமில்லை. ஆதலால் கிறிஸ்துவின் கேள்விக்கு இது பூரண உத்தரவென்று சொல்லக்கூடாது. இயேசு இரண்டாந்தரம் பேதுருவைப் பார்த்து, 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?' என்று கேட்டார். இந்த இரண்டாம் கேள்வியில் 'இவர்களிலும் அதிகமாய்' என்ற வார்த்தையைக் கிறிஸ்து வழங்கவில்லை. பேதுரு மாறுத்தரமாக முன்போலவே சொன்னார். மூன்றாந்தரம் இயேசு அவரை நோக்கி, 'யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ என்னை நேசிக்கிறாயா?' என்றார். இப்படி மூன்றாந்தரம் கேட்டது பேதுருவின் மனதில் அதிக உணர்ச்சியை உண்டாக்கிற்று. ஒருவேளை இயேசு மூன்றாந்தரம் கேட்டது மாத்திரமல்ல, அவர் கேட்டபோது அவரை பார்த்த பார்வை, பேசின சத்தத்தின் தொனி, கையின் ஜாடை, முகத்தின் குறி ஆகிய இவையெல்லாம் கூடி பேதுருவின் மனதில் அக்கேள்வியின் தன்மையை உணர்த்தியிருக்கலாம். உடனே அவர் துக்கப்பட்டு 'ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்; நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்' என்று சொன்னார். இதற்கு மிஞ்சின பூரண உத்தரவு ஒரு பாவியின் வாயிலிருந்து எழும்பவு மாட்டாது. இதில் தாழ்மையும், அவையடக்கமும், பாசமும் பச்சாத்தாபமும் கலந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. 'நீர் எல்லாவற்றையும் அறிவீர்' நான் உம்மை நேசித்ததையும் அறிவீர், மறுதலித்ததையும் அறிவீர், உம்மை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்னதையும் அறிவீர், 'அந்த மனுஷன்' என்று சொன்னதையும் அறிவீர், நீர் எல்லாவற்றையும் அறிவீர், நீர் எனக்குக் கேபா என்று பேரிட்டதையும் அறிவீர், சாத்தானென்று பேரிட்டதையும் அறிவீர், என்னைப் பின்பற்றி வா என்று சொன்னதையும் அறிவீர், எனக்குப் பின்னாலே

போ சாத்தானே என்று சொன்னதையும் அறிவீர், நீர் எல்லாவற்றையும் அறிவீர், நான் கடலில் நடந்ததையும் அறிவீர், அதில் அமிழ்ந்ததையும் அறிவீர், சாத்தான் என்னைப் புடைத்ததையும் அறிவீர், எனக்காக நீர் வேண்டிக் கொண்டதையும் அறிவீர், உரோமைச் சேவகருக்கும் அஞ்சாமல் கத்தியை வீசினதையும் அறிவீர், வேலைக்காரிக்குப் பயந்து பொய் சொன்னதையும் அறிவீர்; நீர் எல்லாவற்றையும் அறிவீர்; என் பலத்தையும் பலவீனத்தையும், குணத்தையும் பேச்சையும் எல்லாம் அறிவீரென்று அறிக்கையிடுகிறார். அதோடு இயேசுவின்மேலுள்ள பாசத்தைப் பற்றியும் அவர் சொல்ல மறக்கவில்லை. நான் உம்மை நேசிக்கிறேனென்பதையும் அறிவீர் என்கிறார். இதிலிருந்தே பேதுரு தம்முடைய பலவீன விழுதல்கள், மறுதலிப்புகள் எல்லாவற்றிற்கூடாக உத்தமமாய் இயேசுவை நேசித்துக் கனப்படுத்தி வந்தார் என்பது விளங்குகிறது. பக்தரின் சில பல விழுதல்களினால் கிறிஸ்துவின் கிருபையிலிருந்து அவர்கள் முற்றிலும் விலகிப்போய் விட்டார்களென்று சொல்லிவிடலாகாது.

பேதுருவுடன் இயேசு கேட்ட கேள்வியானது லோக பாசத்தை விருத்திபண்ணும் சாதாரண கேள்வியாயிராமல் ஒரு விசேஷித்த நோக்கத்தை உடைத்தாயிருந்தது. ஏனெனில் ஒவ்வொரு தடவை கேட்டபோதும் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று அல்லது ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்று இயேசு சொன்னார். இதிலிருந்தே பேதுருவைக் கொண்டு திருச்சபையில் அதிக வேலை செய்யும்படியாகவே இந்த தரிசனையும் கேள்வியும் உண்டாயிற்று என்று எண்ணத்தக்கதாயிருக்கிறது. ஒரு பாவியின் நேசம் இயேசுவின்மேல் அதிகப்படும்போது, இயேசுவின் வேலை அவன் தோளின்மேல் சுமத்தப்படுகிறது. இயேசுவை நேசிப்பதால் இவ்வுலகத்தில் இளைப்பாறுதல் கிடையாமல் அதிக வேலை கிடைக்கிறது; அந்த வேலை காணுமல்போன ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் போஷிப்பதுதான். இந்த வேலையை இயேசு திரும்பத்திரும்ப மூன்று தரம் சொல்லியிருக்கிறதால் இனி பேதுரு மீன்பிடிக்கும் வேலையை முற்றிலும்

விட்டுவிடவேண்டுமென்று கட்டளையிடுகிறதுபோலிருக்கிறது; ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்கும் வேலையாகிய சுவிசேஷ ஊழியத்தை இக்காலத்தில் அநேகர் செய்யும்படி ஆசைப்பட்டுவந்தாலும் அடிக்கடி உலகவேலைகளிலும் தலையிட்டு ஆடுமேய்க்கும் வேலையை மாற்றி தங்களையும் தங்கள் குடும்பங்களையும் உலக விஷயத்தில் ஐசுவரியவான்களாக்கும் பிரயத்தனங்களில் தலைப்படுகிறார்கள். இது சரியல்ல, இந்த வேலையை இயேசு பேதுருவுக்குக் கொடுத்தபோது அவர் இவ்வூழியத்தினுலடையும் பல சங்கடங்களையும் சொல்லாமல் விடவில்லை; 'நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களில் நடந்து திரிந்தாய், நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்' என்றும் சொன்னார். பேதுருவுக்குக் கடைசியாக தேவ ஊழியத்தினிமித்தம் உண்டாகிற மரணத்தை முன்னறிவிக்கும்படி இப்படிச் சொன்னார். இக்காலத்தில் துன்பமில்லாத தேவ ஊழியமும் நெஞ்சு நோகாமலும், தொண்டை கம்மிப் போகாமலுமிருக்கிற தேவ ஊழியமும், அதிகாரம்பண்ணி ஆட்களை மிரட்டிச் செய்யும் வேலையும் கடைசியில் சொகுசான மரணமும் வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட வேலை கிறிஸ்துவினிடத்தில் இல்லை. அவர் அநேக உபத்திரவங்களின் மூலமாய் தமது பிள்ளைகளைப் பரலோகத்துக்குப் பக்குவப்படுத்துகிறவராயிருக்கிறார்.

பேதுரு அப்போஸ்தலன் இந்தக் காட்சியாலும் சம்பாஷணையாலும் வெகுதூரம் ஆத்தும விஷயத்தில் மாறுதலடைந்தாலும் நினைத்தவுடனே பேசும் சுபாவம் இன்னும் ஒழிந்து போகவில்லை. தம்முடைய முடிவைப்பற்றி அறிந்ததோடு யோவான் அப்போஸ்தலனுடைய மரணத்தின் தன்மை எப்படியிருக்குமென்று அறிய விரும்பி அவரைச் சுட்டிக் காட்டி 'ஆண்டவரே இவன் காரியமென்ன' என்று கேட்டார். அதற்கு இயேசு 'நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன' என்று சொன்னார்.

இதிலுல அவரவர் தன்தன் முடிவைக் கவனித்துக்கொண்டு தேவ ஊழியத்தை நடப்பித்து வரவேண்டுமேயன்றி மற்ற தேவ ஊழியக்காரனுடைய வாழ்வுகளைப்பற்றிக் கருத்தோடு விசாரித்து வன்கண் படலாகாது என்பது தெரியவருகிறது. இம்மட்டோடு சுவிசேஷத்திலடங்கிய பேதுருவின் சரித்திரம் முடிகிறது. இனி நாம் கிறிஸ்து பரமேறினது முதல் ஆதிச் சபை சம்பந்தமாய் வரும் அவருடைய சரித்திரத்தைச் சற்றே ஆராய்வோமாக.

கிறிஸ்து பரமேறின பின்பு பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் தங்களுக்குக் கட்டளையிட்ட பிரகாரம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தாவிக்காகவும், அவரால் அருளப்படும் உன்னத பலத்துக்காகவும் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள், அந்நாட்களில் ஒருநாள் ஏறக்குறைய நூற்றிருபது பேர் கூடியிருந்தபோது இயேசுவை காட்டிக் கொடுத்து தற்கொலைபுரிந்துமாண்ட யூதாசுக்குப் பதிலாக வேறொருவனைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பேதுரு புத்திசொல்லிக் கடைசியாக சீட்டுப் போட்டு மத்தியாவைத் தெரிந்துகொண்டார்கள். எப்படியும் கிறிஸ்து பரமேறின பத்து நாட்களுக்குள்ளாக அப்போஸ்தலரால் பல விசேஷித்த காரியங்கள் எருசலேமில் நடந்திருக்கின்றன; அவர்கள் ஆவியின் வரப்பிரசாதம் பெற்று இயேசுவே இரட்சகரென்று பிரசங்கம் செய்து வந்தார்கள் போலத் தோன்றுகிறது. அவர்கள் விசேஷித்த வரம் பெற்றிருக்கிறார்களென்ற செய்தி எருசலேமெங்கும் பேசிக்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் பெந்தேகொஸ்தே என்று அழைக்கப்பட்ட ஐம்பதாம் நாள் பண்டிகையும் வந்தது. அதைக் கொண்டாடும்படி கணக்கற்ற ஜனங்கள் எருசலேமுக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கும் அப்போஸ்தலருடைய அரிய வரப்பிரசாதத்தின் செய்தி அறிவிக்கப்பட்டது, அந்தப் பண்டிகை நாளில் அப்போஸ்தலரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் ஒரு இடத்தில் ஒருமனப்பட்டுக் கூடியிருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த

வீடு முழுமையும் நிரப்பிற்று; அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் மேல் அமர்ந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டு வெவ்வேறு பாஷைகளிலே பேசத் துடங்கினார் கள். அவர்கள் பேசுகிறதைக் கேட்ட அவபக்தர் மதுபானத் தால்பேசுகிறதாக தூஷித்தார்கள். இச்செய்தியைக் கேள்விப் பட்டு அநேகாயிரம் பேர் அங்கு வந்து கூடினார்கள். அச் சமயத்தில் பேதுரு உரத்த சத்தமாய் நெடுநேரம் பிரசங்கித்து இயேசுவின் வரலாறுகளையும், அவருடைய உயிர்த்தெழுதலை யும் சொல்லி அவரே தீர்க்கதரிசிகளால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று உறுதிப்படுத்தினார். அதைக் கேட்ட அநேகர் மனந்திரும்பி தங்கள் பாவங்களை அறிக்கை யிட்டார்கள். அன்றையத்தினம் மூவாயிரம் பேர் ஞான ஸ்நானம் பெற்று கிறிஸ்துவைச் சேர்ந்தார்கள். இதுதான் கிறிஸ்து சபையின் பிறப்பு நாள் என்று சொல்லிக்கொள்ளப் படுகிறது. இப்படி மூவாயிரம் பேர் ஒரே நாளில் மனந் திரும்பி ஞானஸ்நானம் பெறத்தக்கதான ஜீவ வார்த்தைகளை பேதுருவின் வாயில் அருளின தேவனுக்கு ஸ்தோத்திர முண்டாவதாக. இக்காலத்து தேவ ஊழியருடைய வசனத் தையும் அவர் அடிக்கடி ஆசீர்வதித்து வருகிறார்.

இப்படி மூவாயிரம் பேர் பேதுருவின் பிரசங்கத்தால் குணப்பட்டதால் அவரைப்பற்றிய பயமும் மதிப்பும் அதி கரித்தது. ஒருநாள் சாயங்காலம் மூன்று மணிநேரத்தில் பேதுரு தேவாலயத்துக்குப் போனார். அப்பொழுது அங் கிருந்த சப்பாணி அவரிடத்தில் பிச்சைக் கேட்டான். பேதுருவிடம் அச்சமயத்தில் யாதொரு பணமும் இருக்க வில்லை; அவர் அச்சப்பாணியைப் பார்த்து 'வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை, நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட' என்று சொல்லி, வலது கையால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். இதைச் சனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்போஸ்தலருக்குள் முதலா வது அற்புதம் செய்தது பேதுருதான். அற்புதமாய்க் குண மாக்கப்பட்ட சப்பாணியின் வரலாறு பலரையும் பேதுருவி

னிடத்தில் ஓடி வரப்பண்ணிற்று. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிப்படி, இச்சமயத்தை விட லாகாதென்று பேதுரு நினைத்து, உடனே இயேசுவைக் குறித்துப் பிரஸ்தாபித்து தன்னுடைய வல்லமையினால் அல்ல, அந்த இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே, அவருடைய நாமத்தை முன்னிட்டே இந்த சப்பாணி குணமானான் என்று உணர்த்தி அவர்களைக் கிறிஸ்துவண்டை மனந்திரும்பும்படி ஏவினார், அதினாலே வேறு இரண்டாயிரம் பேர் குணப்பட்டார்கள்.

பேதுரு இச்சமயத்தில் செய்த பிரசங்கமும் ஜனங்களைக் கிறிஸ்து மார்க்கத்துக்கு வரும்படி ஏவின போதனையும் யூதப் போதகன்மாருக்கு கோபத்தையுண்டாக்கிற்று. ஆசாரியரும் தேவாலய அதிகாரிகளும், சதுசேயரும், அவரைப் பிடித்து கைதியாக்கி மறுநாள் வரையில் காவலில் வைத்தார்கள். மறுநாளிலே பேதுருவும் யோவானும் அவர்களால் விசாரணை செய்யப்பட்டார்கள். அச்சமயத்திலும் பேதுரு கிறிஸ்துவின் மகிமைகளைச் சொல்லி, அவரை யூதர் அவமதித்து கொலைசெய்த அநியாயத்தை எடுத்துக் காட்டி, 'அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை' என்று சொன்னார். கிறிஸ்துவை மரணக்கினை செய்த அன்னாவும் காய்பாவும் அந்தச் சமயத்திலிருந்தார்கள். அவர்களும் மற்ற யூதரும் பயப்படும்படி இந்த ஒரு வாசகம் போதுமானதாயிருந்தது. இவ்வளவுங் கேட்டவுடனே அவர்கள் தீர்க்கமாய் ஆலோசனை செய்து அப்போஸ்தலரைத் துன்பப்படுத்தி மல் பயமுறுத்தி இனி இயேசுவைக் குறித்து அங்குமிங்கும் பிரசங்கிக்கக் கூடாது என்று கட்டளையிட்டார்கள். அப்போது பேதுருவும் யோவானும் தேவதாபக்தி வைராக்கியத்தால் மூண்டு, நாங்கள் உங்களுக்கு அல்ல தேவனுக்கு பயப்படுவோம் என்று சொன்னார்கள். இச்சமயங்களில் பேதுரு காட்டின தைரியம் பரிசுத்தாவியின் அருளினாலுண்டான இரட்சண்ய தைரியமேயன்றி வேறல்ல. முன் வேலைக்காரிக்கு பயந்து மறுதலித்த

குணம் ஒன்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் அவரிடத்தில் காணப்படவே இல்லை. தேவாவியைப் பெற்ற போதகன்மார் உலகத்தாருடைய பயத்துக்கு அஞ்சமாட்டார்கள். உலகத்தில் பயமுறுத்தல்கள் அவர்களுடைய ஆவியைத் தைரியப்படுத்துகிறதாகவே அவர்கள் எண்ணிக் கொள்ளுவார்கள். பேதுரு இந்த விசாரணையிலிருந்து திரும்பிவந்து தங்களுக்குண்டான சங்கடங்களையும், பயமுறுத்தல்களையும் எச்சரிப்புகளையும் மற்ற சீஷரிடத்தில் சொன்னார்கள். அப்போது அவர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, தங்களைப் பரிகரிக்கும் சத்துருக்களின் ஆலோசனைகள் அவமாகவும் அதிக தைரியத்தோடும் ஊக்கத்தோடும் அவர்கள் சுவிசேஷ வசனத்தைப் போதிக்கும்படி வரம் கொடுக்கவும் ஜெபம் செய்தார்கள். அப்போது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு தேவ வசனத்தை தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள். அதுவுமன்றி அவர்கள் தங்கள் ஆஸ்திகளனைத்தும் கர்த்தருடைய சொத்து என்று தீர்மானித்து எல்லாருடைய சொத்துக்களையும் பொதுச் சொத்தாகப் பாவித்து செலவிட்டு வந்தார்கள். இது ஒரு கட்டுப்பாட்டினால் நடத்தப்படாமல் அவரவர் மன விருப்பத்தின்படியே செய்யப்பட்டன. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அதைத் தாங்களே விற்று அதின் கிரயத்தை அப்போஸ்தலர் வசம் ஒப்புவித்து அவனவனுக்கு அன்றுடகம் தேவையானது எவ்வளவோ அவ்வளவு மாத்திரம் வாங்கிக்கொண்டார்கள். இந்த வழக்கம் தற்காலத்தில் கிறிஸ்து சபைகளில் வழங்கப்படுகிறதில்லை; இந்த வழக்கமே நடந்து வரவேண்டுமென்று சொல்லவுங்கூடாது. ஏனெனில் துவக்கத்தில் ஒரே ஊரில் உண்டான ஒரு பங்கு கிறிஸ்தவர்கள் தங்களுடைய சாவகாசத்தையும், அக்காலத்து துரைத்தனப் போங்கையும், மற்ற யூதக் குடிகளின் நிஷ்டூரங்களையும் கவனித்து இந்த ஒழுங்கை செய்துகொண்டார்கள். இப்பொழுதோ சுவிசேஷம் சகல தேசங்களிலும் பரம்பி கிறிஸ்தவர்கள் பல இடங்களிலும் பயமின்றி தங்கள் ஜீவனுர்த்தங்களைப் பார்த்துக் கொள்ளக் கூடியதாயிருக்கிறபடியால் இப்படிப் பொதுவில் வைத்து ஆளும் வழக்கம் அவசரமில்லை. அங்கங்கேயுள்ள

கிறிஸ்தவர்கள் தங்கள் நடுவில் தேவ ஊழியங்கள் கிரமமாய் நடந்து வரும்படி தங்கள் வரும்படிகளுக்குத்தக்கதாக தேவாலயத்துக்கு உற்சாகமாகக் காணிக்கை செலுத்தி வருவார்களானால் அதுவே போதுமானது. மேலும் இப்படி ஆஸ்திகளைப் பொதுவாக வைக்க வேண்டுமென்பது பேதுரு அப்போஸ்தலனுடைய போதனையாயிராமல் ஜனங்கள் தங்களுடைய மனதின் ஒருமைப்பாட்டினாலே செய்துகொண்டு வந்த ஒரு வழக்கமாக மாத்திரமிருந்தது.

இக்காலத்தில் ஆதிச்சபையில் அனனியா சப்பீராள் என்ற புருஷனும் மனைவியும் தங்கள் காணியாட்சியையும் விற்று அதில் ஒரு பங்கை ஒளித்து வைத்துக்கொண்டு மீதியைப் பேதுருவிடம் கொடுத்து எங்கள் நிலமுழுவதையும் இவ்வளவுக்கு விற்றோம், இதைப் பொக்கிஷத்தில் சேர்த்துக் கொண்டு மற்றவர்களுக்கு அன்றாட படி கொடுப்பதுபோல கொடும் என்று கேட்டார்கள். இவர்கள் விலையில் ஒரு பங்கை மறைத்து வைத்ததை பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு வெளிப்படுத்தியிருந்தார். அவர்கள் அந்தப் பணத்தை மோசம் பண்ணி பேதுருவினிடம் பொய் சொன்னதினிமித்தம் அவருடைய பயமுறுத்தலினால் தேவன் அனனியாவையும் அவன் மனைவி சப்பீராளையும் நின்றபடியே விழுந்து சாகும்படி செய்தார். இந்த சாவைக் கண்டவாவரும் பயப்பட்டார்கள். பொய் இலேசான பாவமல்ல, நமது தேசத்தில் பொய் பேசுவது தாகத்துக்குத் தண்ணீர் சாப்பிடுகிறதுபோல அவ்வளவு சாதாரணமாயிருக்கிறது. இந்த வழக்கத்தை மாற்றி அவனவன் உள்ளதை உள்ளபடிச் சொல்லும்படி நாம் ஏவவேண்டியது. கிறிஸ்து சபை ஆரம்பத்தில் பேதுரு அப்போஸ்தலனால் அநேக அற்புதங்கள் நடந்தன. 'பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டிலின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவருடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.' அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.

ஒருகாலத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனிமித்தம் பரி. பேதுருவும் மற்ற எல்லா அப்போஸ்தலரும் பொதுவான

சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்கள். அன்று இராத்திரியிலே தேவதூதன் சிறைச்சாலையின் கதவைத் திறந்து அவர்கள் அனைவரையும் வெளியே கொண்டுவந்து, 'நீங்கள் போய் இயேசுவைக் குறித்து விபரமாய் ஜனங்களுக்கு சொல்லுங்கள் என்று தெரியப்படுத்தினான். மறுநாள் அதிகாலையில் அவர்கள் அப்படியே தேவாலயத்தில் போய்ப் பிரசங்கித்தார்கள். உடனே ஆசாரியரும் சங்கத்தாரும் மூப்பருங்கூடி கைதிகளாய் அடைக்கப்பட்டிருந்தவர்கள் வெளிப்பட்ட காரணத்தைக் கேட்டு கலக்கமடைந்து அவர்களைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டு வந்து இயேசுவைக் குறித்து அந்த நகரத்தில் பிரசங்கம் செய்யக்கூடாதென்று பயமுறுத்தினார்கள்; அதற்குப் பேதுருவும் மற்றவர்களும் கூடி 'மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது' என்று சொல்லி எங்கும் பிரசங்கம் செய்தார்கள். உடனே அவர்கள் மூர்க்கங்கொண்டு பேதுருவையும் மற்றவர்களையும் கொலைசெய்ய ஆலோசித்தும் பின்பு அப்படிச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். இதிலெல்லாம் உத்தம போதகன்மாருக்கு இருக்க வேண்டிய மதாபிமானமும், பக்தி வைராக்கியமும் உணர்த்தப்படுகிறது. கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு அவரைப் பிரஸ்தாபிப்பதில் சிரேஷ்டரானார். நிச்சயமாகவே பெந்தெகொஸ்தே நாள்முதல் அவர் கல்லைப்போல் உறுதியாய் நின்று, நீத்தட்டிக் கல்போல் அஞ்சாத நெஞ்சனாகி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை எங்கும் கூறினார்.

பேதுரு பெரும்பாலும் தமது ஊழியத்தில் யோவான் அப்போஸ்தலனைச் சேர்த்துக்கொண்டார். சமாரியரில் பலர் கிறிஸ்தவர்களான செய்தி எருசலேமுக்கு வந்தெட்டின போது அவர்களை ஸ்திரப்படுத்தும்படி பேதுருவும் யோவானும் அனுப்பப்பட்டார்கள். இவர்கள் இருவரும் அங்கே போய் புதிய கிறிஸ்தவர்களுக்காக ஜெபம் செய்து அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்தாவியைப் பெற்றார்கள். இம்முறையைத்தான் இக்காலத்தில் திடப்படுத்தல் என்ற போல் பொதுவான திருச்சபையில் நடத்தி வருகிறார்கள். அப்போஸ்தலர் கைகளை வைப்ப

தால் பரிசுத்தாவி அருளப்படுகிறதை சீமோன் என்ற ஒருவன் கண்டு, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து, நான் எவன்மேல் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்தாவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டான். இதினாலே தேவ ஊழியத்தின் மேன்மையும் அந்த ஊழியக்காரர் மூலமாய் தேவனருளும் ஆவியின் வரங்களின் மகிமையும் விளங்குகிறது. அநேக தேவ ஊழியக்காரர் இதைக் கவனியாமல் தாங்கள் பெற்றுக்கொண்டிருக்கும் பரம ஊழியத்தை கூலிவேலையாக்கி விடுகிறார்கள். சீமோனுடைய உலக சிந்தையை பேதுரு அறிந்து 'தேவனுடைய வரத்தைப் பணத்தினால் சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பணம் உன்னோடுகூட நாசமாய்ப் போகக் கடவது' என்று சபித்துக் கடிந்துகொண்டார். உடனே அவன் நடுநடுங்கி பேதுருவினிடத்தில் மன்னிப்பைக் கேட்டுத் தன் வழியே போனான். பூமிக்குரிய உயர்ந்த கனத்தைப் பணங்கள் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்; ஆனால் வானத்துக்குரிய அருள்களை பணத்தினால் சம்பாதிக்கலாகாது. அவையனைத்தும் ஜெபத்தினால் சம்பாதிக்கலாமென்றும் தீர்மானமாய் சொல்லக்கூடாது. எந்த நல்ல ஈவும் நிறைவுள்ள எந்தவரமும் உயரத்திலிருந்து சுடர்களின் பிதாவினால் அருளப்படுகிறதென்பதே கிறிஸ்துமார்க்கச் சித்தாந்தமாயிருக்கிறது. இக்காலத்தில் பரி. பவுல் குணப்பட்டு எருசலேமுக்கு வந்தார். அவரை ஏற்றுக்கொள்ளும்படி மற்றவர்கள் அஞ்சினாலும் பேதுரு அஞ்சவில்லை. இவரே பவுலின் தோழனாயிருந்து பதினாறு நாளாக அவரைத் தன் வீட்டில் வைத்து பவுலைப்பற்றி மற்றவர்களுக்கிருந்த பயத்தை நிவர்த்தியாக்கினார்.

பேதுரு எருசலேமில் மாத்திரமல்ல, பல ஊர்களுக்கும் போய் சபைகளை ஸ்திரப்படுத்தினார். அவர் தமது சபை விசாரணையாகப் போனபோது ஒருதரம் லித்தா ஊருக்கு வந்தார். அந்த ஊரிலே எட்டு வருஷமாய் கட்டில் படுக்கையாய் கிடந்த ஐநேயாவென்ற ஒரு திமிர்வாத நோயாளி யிருந்தான். பேதுரு அவனிடத்தில் போய் 'ஐநேயாவே இயேசு

கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார், நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்' என்று சொன்னார். உடனே அவன் எழுந்திருந்தான். இந்த அற்புதத்தைக் கண்டவர்களும் கேட்டவர்களுமான அத்திசை குடிகளெல்லாம் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். இந்த ஊருக்குச் சமீபமாய் யோப்பா என்ற பட்டணமொன்றிருந்தது. அந்த ஊரில் தோற்காள் என்ற ஒரு உத்தமி யிருந்தாள். அவள் நற்கிரியைகளிலும், தருமங்களிலும் பேர்பெற்று யாவருக்கும் விசேஷமாய் விதவைகளுக்கும் தாய்போலிருந்தாள். அவள் திடீரென்று வியாதிப்பட்டு மரணமடைந்தாள். பேதுரு தங்கள் ஊருக்குப் பக்கத்தில் வந்திருக்கிற செய்தியை அறிந்து தாமதமில்லாமல் தங்களிடம் வரவேண்டுமென்று இரண்டு ஆட்களை யனுப்பினார்கள். பேதுரு அப்படியே போய் முழங்கால்படியிட்டு ஜெபம்செய்து பிரேதத்தின் புறமாய்த் திரும்பி தபீத்தாளே எழுந்திரு என்றார். உடனே அவள் உயிரடைந்து எழுந்தாள். பேதுரு யோப்பா பட்டணத்திலிருக்கையில் கொர்நேலியு என்ற ஒரு அதிபதியை கிறிஸ்தவனாக்கினார். அதன் வரலாற்றை நாம் கொர்நேலியுவைப்பற்றி எழுதும்போது சொல்லுவோம். மொத்தமாகச் சொன்னால் பேதுரு அப்போஸ்தலன் கிறிஸ்துவின் நாமத்தைப் பிரசங்கிப்பதில் ஓயவே இல்லை. அவர் யூதருக்குள்ளும் புறஜாதியாருக்குள்ளும் அநேகரைக் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தார். மேலும் அவர் யூதனாயிருந்தும் புறசாதியாருடன் கலந்து சாப்பிடவும், தங்கவும் பின்தாங்கவில்லை. இதையிட்டு அவர்மேல் சிலர் குறைகூறினபோதிலும் அவர் அதை எண்ணாமல் தாம் செய்தது பிசகல்ல என்று அவர்களுக்கு விளக்கிக் காட்டினார். இதினாலே ஜாதி பெருமை மனுஷருக்குண்டாகிறது இயல்பென்றும் கிறிஸ்தவ போதகன்மார் அதைப் பாராட்டாமல் எல்லா வகையான கிறிஸ்தவர்களையும் ஏக சகோதரராக மதிக்கவேண்டுமென்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

அக்காலத்திலே இருந்த ஏரோது ராஜா கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்த முயன்று யாக்கோபைக் கொன்று

பேதுருவைப் பிடித்துக் கொலைசெய்யும்படி சிறையிலடைத்து வைத்தான். சபையார் அவருக்காக ஊக்கத்தோடு தேவனை நோக்கி ஜெபம் பண்ணினார்கள். ஏரோது பேதுருவை வெளியே கொண்டுவர வேண்டுமென்று குறித்திருந்த நாளுக்கு முந்தின இராத்திரியில், கர்த்தருடைய தூதன் வந்து ஜோதி மயமாய்ப் பிரகாசித்து பேதுருவைத் தட்டி எழுப்பினான். உடனே அவரைக் கட்டியிருந்த சங்கிலிகள் தானாய்க் கழன்று விழுந்தன. சம்மனசு அவரைக் கூட்டிக் கொண்டு வந்தபோது கோட்டையிலுள்ள இரும்புக் கதவுகள் தானாய் திறவுண்டு வழிவிட்டன. அவர்கள் கோட்டையைத் தாண்டி நகரத்தின் வீதியில் வந்தவுடன் தூதன் மறைந்து போனான். உடனே பேதுரு நாம் நமது உயிரைத் தப்புவித்துக்கொள்ள இது தேவனால் வந்த சகாயம் என்று உணர்ந்து கிறிஸ்தவர்களிடத்தில் வந்து, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விபரித்து, மற்றவர்களுக்கும் அறிவிக்கும்படி சொல்லி புறப்பட்டு வேறொரு இடத்திற்குப் போனார். 'வேறொரு இடத்திற்கு' என்று இவ்விடத்தில் வரும் வார்த்தையைக்கொண்டு சிலர் இந்த இடம் உரோமாபுரிதான் என்று சாதிக்கிறதுண்டு, அந்த அபிப்பிராயம் எப்படியும் பேதுருவை உரோமாபுரியோடு இணைத்துவிட வேண்டுமென்ற தகாத எண்ணத்தாலுண்டானதேயன்றி வேறல்ல.

ஏரோதுவினாலுண்டான துன்பத்தினிமித்தம் பேதுரு பல திசைகளில் திரிந்தலைந்தாலும் விருத்தசேதனத்தைப் பற்றி ஆதிச் சபையிலுண்டான தர்க்கத்தை முடிவு செய்யும்படி கூட்டப்பட்ட முதலாம் சங்கத்தில் பேதுருவும் இருந்தார். அந்தச் சங்கத்தில் அவர் புறச்சாதியார் நடுவில் செய்த வேலைகளையும், அதினாலுண்டான விர்த்திகளையும், சொல்லக் கேட்டவுடன் தர்க்கம் அடங்கிவிட்டது. இந்தச் சமயத்திலும் தன் சிநேகிதனாகிய பவுலைக் கண்டு சந்தித்துக்கொள்ள அவருக்கு இடமுண்டாயிற்று. இந்தக் கூட்டத்துக்குச் சற்று பின்னே பேதுரு அந்தியோகியாவுக்குப் போனார். அவர் அங்கிருந்த காலத்தில் புறச்சாதியாருடன் சாப்பிட்டு சகஜமாயிருந்தார். பிறகு எருசலேமிலிருந்து சில யூதர்

வந்தபோது அவர்களுக்கு பயந்து விலகிப் பிரிந்தார். இதைப் பார்த்து வேறு சில யூதரும் ஜாதி வித்தியாசம் பார்க்க ஆரம்பித்தார்கள். இந்தக் காரியம் பேதுருவின் மறு விழுதல் என்று சொல்லலாம். இப்படி அவர் செய்த காரியம் கிறிஸ்து மார்க்கத்துக்கு முற்றும் விரோதமான நடக்கையாயிருக்கிறது. இந்தச் சமயத்திலும் பேதுருவைக் கண்டித்து உணர்த்தும்படி ஒரு போதகன் இல்லாமல் போகவில்லை. எப்படியெனில் பரி. பவுல் பேதுருவை முகாமுகமாய்க் கண்டித்தார் (கலா. 2:11–15). பேதுருவுக்குத் தன் குற்றத்தை உணரும் சுபாவமிருந்ததால் பவுலின் எச்சரிப்பையும் கண்டனையையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டார். இதினிமித்தம் அவர்களுக்குள்ளிருந்த உறவு முறிந்து போகவுமில்லை. ஏனெனில் இந்தச் சங்கதி நடந்து அநேக வருஷங்களுக்குப் பின்பு எழுதப்பட்ட அவருடைய அந்திய கால நிருபத்தில் அவர் பவுல் அப்போஸ்தலனைக் குறித்து 'எனக்குப் பிரியமான சகோதரனாகிய பவுல்' என்ற வாசகத்தை வழங்கியிருக்கிறார். மேலும் பரி. பவுலைப்பற்றியும் அவருடைய நிருபங்களைப்பற்றியும் உயர்ந்த மதிப்பு அவருக்கு இருந்தது (2 பேது. 3:15,16).

பேதுரு தமது ஜீவகாலத்தில் பொந்து, கலாத்தியா, கப்பதோக்கியா, ஆசியா, பித்தானியா, பாபிலோன் முதலிய இடங்களில் சுவிசேஷத்தைப் போதிப்பித்து சபைகளை ஸ்தாபித்தார். இவருடைய பேர் ஆதிச்சபையில் அதிகப் பிரபலமாய் இருந்ததால் பிரிவினையான சில சபையார் தங்களை இவருடைய பேரால் அழைத்துக்கொண்டார்கள். அவர் தமது மரணத்துக்கு எப்போதும் ஆயத்தப்பட்டவராயிருந்தார். அவருக்குண்டாகும் மரணத்தின் தன்மை இப்படிப்பட்டதென்று கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினால் முன்னறிவிக்கப்பட்டதுபோல, அவர் மரணமடைய வேண்டிய காலமும் பின்னால் இயேசுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது (2 பேது. 1:13). கிறிஸ்துவின் ஜீவகாலத்தில் தான் அவரோடு தங்கியிருந்தபோது மறுரூபமான மகத்துவ சங்கதியை அவர் ஒருநாளும் மறக்கவில்லை (2 பேது.1:16–18). அவர் தமது ஜீவகாலமெல்லாம் தர்மம் வாங்கி சுவிசேஷத்தைப்

பிரசங்கித்து வந்தார். உலக முடிவு மட்டுமுள்ள கிறிஸ்தவர் களுக்கு ஆஸ்தியாக அவருடைய இரண்டு நிருபங்களுமிருக் கின்றன என்கலாம். அவைகளைக் கவலையாய் வாசிக்கிறவர் கள் துன்பங்களில் ஆறுதலடைந்து, விசுவாசத்தில் வளர்ந்து, கள்ளப் போதகருக்கு விலகி, தங்கள் நம்பிக்கையைக் கிறிஸ்துவில் ஸ்திரப்படுத்தும்படி ஏவப்படுவார்கள் என்பது மெய்.

கடைசியாக அவர் தம்முடைய ஜீவ ஓட்டத்தை மகிமை யாய் முடித்தார். அவர் சுமார் எழுபத்தைந்து பிராயமா யிருக்கையில், நேரோ இராயனுடைய துன்ப காலத்தில் தமது சாட்சியை இரத்தத்தால் முத்திரையிடும்படி குருசி லறையப்பட்டார். பேதுருவும் பவுலும் ஏக காலத்தில் இரத்தசாட்சியாளர்களென்றும், பேதுரு தன் இரட்சகரைப் போல் சிலுவையில் நேராய் அறையப்படப் பாத்திரனல்ல வென்று எண்ணித் தன்னைத் தலைகீழாக அறையும்படி கேட்டுக்கொண்டு அப்பிரகாரமே மாண்டாரென்றும் சரித் திரங்களினால் அறிகிறோம்.

கலிலேயாக் கடலில் மீன் பிடித்த பேதுரு கிறிஸ்துவின் ஆவியை நிறைவாய்ப் பெற்று, பல இடங்களிலும் சென்று மனுஷரை இரட்சண்ய வலைக்குட்படுத்தி, புதிய ஏற்பாட்டின் மோசேபோலிருந்து, தலைகீழாய்ச் சிலுவையிலறையுண்டு இன்றையத்தினம் இரத்தசாட்சிகளாகிய தைரிய சேனையுடன் கூடி நின்று ஆட்டுக்குட்டியானவருக்கு அல்லேலூயா பாடிக் கொண்டிருக்கிறார். அநேக ஆண்டுகளுக்குமுன் புதைக்கப் பட்ட அவருடைய உடலையுடைய கல்லறை உரோமாபுரியின் ஒரு மேட்டின்மேல் இரவும் பகலும் பிரகாசிக்கும் எண்பது விளக்குகளால் கனப்படுத்தப்பட்டு, ஆகாயத்தை அளாவிய பேதுருவின் ஆலயத்தாலும் மேகத்தை முட்டும் கோபுரங்க ளாலும் மகிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

யோவான் அப்போஸ்தலன்

அப்போஸ்தலரில் யூதாஸ் ஸ்காரியோத்தைத் தவிர மற்ற ஒவ்வொருவரும் சிறந்த குணங்களை உடையவர்களாயிருந்தாலும், அவர்களுக்குள் சிலர் மற்றவர்களைவிட பல விஷயங்களில் விசேஷித்தவர்களாயிருந்தார்கள். அவர்களனைவரும் ஒரே காரியத்தை விசுவாசித்து ஒரே நோக்கத்தைக் கருதி சம உண்மையும் யதார்த்த குணமுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களிடமிருந்த தனிக் குணங்கள் அவரவரை வித்தியாசப்படுத்தி வந்தது. அந்த வித்தியாசத்துக்குத் தக்கதாக கிறிஸ்துவின்மேலுள்ள இயல்பான பாசமும் ஏற்றத்தாழ்வாயிருந்தது என்று சொல்லவேண்டியது. இரட்சண்ய சம்பந்தமாய் மனிதர் உள்ளத்தைச் சந்திக்கும் தேவகிருபையானது, அதின் தன்மையிலும் இலட்சணத்திலும் நோக்கத்திலும் ஒரே மாதிரியாயிருந்தபோதிலும், இயல்பான மனுஷ சுபாவத்தின் போங்குபடி அது வெளிக்கு பலவிதமாகக் காணப்படுகிறதுண்டு. பதினொரு அப்போஸ்தலரும் கிறிஸ்துவால் நேசிக்கப்பட்டிருந்தாலும் அந்நேசம் அவர்களெல்லாருக்கும் சம அளவாய்க் கிடைக்கவில்லை. அவர்களில் சிலர் விசேஷ நேசத்தைப் பெற்றவர்களாயிருந்தார்கள். இதைப் பாரபட்சம் என்று பழுதுகூறவுங் கூடாது, இதின் காரணமென்னவென்று கேட்கவுங் கூடாது. இயேசு நமது மாம்ச சுபாவத்தை எடுத்ததினாலே அந்தச் சுபாவ இயற்கையின்படி ஒருவர்பேரில் அதிக நேசமும் இன்னொருவர்பேரில் கொஞ்ச நேசமும் காட்டினார் என்று நாம் சொல்லாமல் தமது தெய்வீக சுபாவத்தின்படி தமது நேசத்தை தமது சித்தத்தின்படியுள்ள அளவாக அளித்துவந்தாரென்று நாம் சொல்லவேண்டியது. பன்னிரு சீஷரில் மூன்றுபேர் இயேசுவின் நேசத்துக்கும் கூட்டுறவுக்கும் அதிகப் பங்காளிகளானார்கள். அம்மூவரும் அந்நேசத்தை சம அளவாக அல்ல, வித்தி

யாசமான அளவாகவே அநுபவித்து வந்தார்கள் என்று காண்கிறோம். அம்மூவரில் ஆண்டவருடைய அன்பில் அதிகப் பங்கை பெற்றது யோவான் அப்போஸ்தலன்தான். இதினாலே 'இயேசுவுக்கு அன்பான சீஷன்' என்ற பட்டப் பேர் இவருக்கு வழங்கப்பட்டது. இவருடைய சரித்திரத்தையே நாம் இப்பொழுது தியானிக்கப்போகிறோம்.

யோவான் அப்போஸ்தலனிடத்தில் பாசமுள்ள சுபாவம் இருந்ததென்பதை எவரும் ஒத்துக்கொள்ளவேண்டியது. இந்தப் பரம சுபாவம் பரம புருஷனாகிய இயேசுவுடன் அவருக்கிருந்த அந்நியோந்நியத்தை நன்றாய்க் காட்டுகிறது. இயேசுவை நெருங்க நெருங்க அன்பின் வாசனையை அடையலாம். அந்த அன்பின் வாசனை அதை உடையவனுடைய மனதையும் பக்கத்திலுள்ளவர்களுடைய இருதயத்தையும் சந்தோஷப்படுத்தும் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்துவின் அப்போஸ்தலர் ஒருவரும் உலகத்தின்படி உயர்ந்த அந்தஸ்தும் அறிவுமுடையவர்களல்ல. ஆண்டவர் அந்தஸ்தையும் ஆளையும் பார்த்து தமது ஆசீர்வாதமாகிய மழையைப் பொழியாமல் தாழ்ந்த சிந்தையுள்ளவர்கள்மேல் பெய்யப் பண்ணுகிறார். தேவன் 'தமது அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்' என்று ஒரு பக்தியுள்ள ஸ்திரீ பாடியிருக்கிறது உண்மைதான்.

இவருடைய தகப்பனுருக்கு செபெதேயு என்றும் தாயாருக்கு சாலோமே என்றும் பேர். இவருடைய குடும்பம் பிரபுக்கள் வரிசையைச் சேர்ந்ததென்று சொல்லக்கூடாவிட்டாலும், அதிகத் தாழ்ந்த வரும்படியுள்ள குடும்பமல்ல. இவர்கள் வீட்டில் அன்றன்றுள்ள ஆகாரத்துக்கு யாதொரு குறைவிருந்ததில்லை. இவருடைய பெற்றோர் சிறுபிராயமுதல் சன்மார்க்கத்தைத் தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்து வந்ததால் இவர் இளம்பிராயமுதல் யாவரும் விரும்பப்படத்தக்க குணமுடையவராய் வளர்ந்தார். இவருடைய சகோதரனுக்கு யாக்கோபு என்று பேர். இவ்விருவரும் தலையெடுக்குமுன் அவர்களுடைய வீட்டுக் காரியங்கள் க்ஷேமமாய்த்தானிருந்தது. இவருடைய தகப்பனார் அதிக கஷ்டவாளி

என்று சொல்லவேண்டியது. இவர் தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்ததை தமது பக்தியுள்ள மனைவியிடம் ஒப்புவித்து சமாதானமாய்க் காலங்கழித்ததால் சற்று ஸ்திதிவந்தாளுர் கள். இவர்களுக்கு பெத்சாயிதா பட்டணத்திலும் எருச லேம் நகரத்திலுமாக இரண்டு சொந்த வீடுகளிருந்தன. மேலும் இவருடைய தாயார் தங்கள் ஆஸ்திகளால் கிறிஸ்து வுக்கு ஊழியம் செய்த சில ஸ்திரீகளில் ஒருத்தியிருந்தாள். இதினுலே அவர்கள் பணக்காராராயிருந்தார்களென்றுசொல்ல லாம். இவர்கள் தங்கள் வியாபாரத்தில் பங்கு சேரவும் கூலியாட்களை வைத்து வேலைகளை நடத்தவும் தகுதியுடைய வர்களாயிருந்தார்கள்.

இவர் பெரும்பாலும் பேதுருவோடு பங்கு சேர்ந்து மீன் பிடித்து வந்தார். ஒருநாள் கிறிஸ்து அந்தக் கடலோரத்தில் நின்று ஆச்சரியப்படத்தக்கதாக அதிக மீன்களைப் பிடிக்கச் செய்தபோது இவரும் கூட இருந்தார். அந்த அற்புதமே இவர் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி அவரை ஏவினது. அச்சமயத்தில் கிறிஸ்து அழைத்தவுடனே அவர்கள் தங்கள் வலையையும், வேலையையும், தகப்பனையும் விட்டு அவரைப் பின்பற்றினர்கள். கிறிஸ்துவின் வாயிலிருந்து புறப்பட்ட அழைப்பின் வார்த்தையானது தெய்வீக வரமும் வல்லமை யும் பொருந்தியிருந்தபடியால் அவர்கள் உடனே அதற்குக் கீழ்ப்படியும்படியாய் நேரிட்டது. கர்த்தருடைய வேலையில் பிரவேசிக்கிறவர்களும் அவருடைய வல்லமையைக்கொண்டு அதைச் செய்ய பலப்படுத்தப்பட்டு அதினிமித்தமுண்டாகும் துன்பங்களையும் இடையூறுகளையும் சகிக்கும்படி ஸ்திரப் படுத்தப்படுகிறார்கள். ஆதலால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவை நோக்கி, உம்முடைய அப்போஸ்தலரை நீர் அழைத்தபோது அவர்கள் தாமதமில்லாமல் கீழ்ப்படிந்து தங்கள் பெற்றோரையும், தங்களுக்குண்டான யாவற்றையும் விட்டு அவருக்குப் பின்சென்றது போல நாங்களும் உலகத் துக்கும் மாமிசத்துக்குமுரிய எல்லா ஆசாபாசங்களையும் வெறுத்துவிட்டு, உமது பரிசுத்த கற்பனையின்படி நடக்கிற தற்கு ஆயத்தமுள்ளவர்களாயிருக்க கிருபை செய்தருளும் என்று மன்றாடவேண்டியது.

யோவானுடைய குணமும் அவருடைய சகோதரனுடைய குணமும் சுமார் ஒன்றுபோலிருந்ததென்று தோன்றுகிறது. ஆதலால் கிறிஸ்து அவர்களிருவருக்கும் இடிமுழக்கங்கள் என்று அர்த்தங்கொள்ளும் 'பொவனெர்கேஸ்' என்ற பேரைக் கொடுத்தார் (மாற். 3:17). இதினாலே யோவான் அப்போஸ்தலன் பெரும் சத்தமும், துடுக்குமுடைய குணமுள்ளவரென்பது கருத்தல்ல. அவர் எப்போதும் சாந்தமும் அன்புமுடையவராயிருந்தார். ஆனால் அவருடைய போதனையானது இளகாத மனதையும், உடையாத நெஞ்சையும், உணராத இருதயத்தையும் இளகச் செய்து நித்திய ஜீவனுக்குரிய மாறுதலை அடையும்படிச் செய்ததால் ஆவியின் சுபாவத்தின்படி அவர் இடிமுழக்கத்தின் மகனாயிருந்தார் என்று சொல்லவேண்டியது. இப்படிப்பட்ட போதகன்மார் இக்காலத்தில் கிறிஸ்து சபையில் எழும்புவார்களானால் எவ்வளவோ நல்ல மாறுதலுண்டாகும்!

யோவான் அழைக்கப்பட்டபோது அவருக்குச் சுமார் இருபத்தைந்து பிராயமிருந்ததென்று அநுமானிக்கப்படுகிறது. எப்படியும் பன்னிரு அப்போஸ்தலரிலும் இவரே குறைந்த வயதுடையவராயிருந்தார். இளமையும் வாலிபத்தையும் கர்த்தருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பதே தகுதியாயிருக்கிறது. நாமோ பெரும்பாலும் பலமுள்ள வயதை பேய்க்கும், பலவீனமுள்ள வயதை தேவனுக்கும் கொடுக்கிறோம். இது ஒரு பக்தன் சொல்வது போல், பேய்க்கு அடிக் கரும்பையும் தேவனுக்கு நுனிக் கரும்பையும் கொடுக்கிறதுபோலிருக்கிறது. இளவயதையும் வாலிபத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறது மெய்யானால் எத்தனையோ தீமைகளுக்கு நாம் விலகிக்கொள்ளக் கூடியவர்களாயிருப்பதோடு எத்தனையோ நன்மையைச் செய்யும்படி ஏதுவிருக்கும்.

இயேசு இரட்சகர் மறுரூபப்பட்ட மகிமையைக் கண்ணாரக் கண்ட மூன்று சீஷரில் இவரும் ஒருவராயிருந்தார். இந்த மகிமையின் காட்சியே அவருடைய தியான நிலையின் ஆதாரமாயிருந்து மோட்சத்தையும் அங்குள்ள வாழ்வுகளையும் தரிசனையில் காணும்படி ஏவிவிட்டிருக்கவேண்டியது.

கிறிஸ்துவுக்குரிய இரகசியங்களை இவரைப்போல வேறொரு வரும் படித்தறிந்துகொள்ளவில்லை (1 யோவா. 1:1–3). அப்படியிருந்தபோதிலும் மனுஷசுபாவத்துக்குரிய சில தாழ்ந்த குணங்களையும் நாம் இவரிடத்தில் காண்கிறோம். இயேசு தமது சீஷருக்குத் தாழ்மையைப் போதித்த ஒரு நாள், இவர் அவரை நோக்கி, 'போதகரே நம்மைப் பின்பற்றாத ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுக்களைத் துரத்துகிறதைக் கண்டோம், அவன் நம்மை பின்பற்றாதவனாதலால் அவனைத் தடுத்தோம்' என்று சொன்னார். இந்த விஷயத்தைக்கொண்டு யோவான் பொறாமையுடையவராயிருந்தாரென்று நமக்குத் தோன்றுகிறது. இயேசு அவரைக் கண்டித்து 'அவனைத் தடுக்கவேண்டாம், என் நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் என்னைக் குறித்து தீங்கு சொல்லமாட்டான்' என்று சொன்னார். இந்த மனுஷன் ஒருவேளை யோவான் ஸ்நானகனுடைய சீஷனாயும் அற்புதவரம் பெற்றிருந்தவனாயுமிருந்திருக்கலாம். இக்காலத்திலும் கிறிஸ்துவைச் சேராத பலர் அவருடைய மார்க்கத்துக்குப் பல அநுகூலங்களைச் செய்யலாம். அதை நாம் தடுக்கவேண்டிய அவசியமில்லை. கிறிஸ்துவுக்காக அதிகமான வேலை செய்கிறவர்களும் அவருடைய சபையின் சரியான ஐக்கியத்துக்குட்படாதவர்களாயிருக்கலாம். அவருக்காக ஊழியம் செய்கிற எல்லாரையும் நாம் நேசிக்கவேண்டியது; எப்படியும் சாத்தானுடைய அரண்கள் இடிந்து, அவனுடைய இராச்சியம் அழியவேண்டுமென்பது நமது மனதிலிருக்கவேண்டியதேயன்றி பொறாமைக்கு இடம்கொடுப்பது சரியல்ல.

ஒருதரம் கிறிஸ்து கலிலேயாவிலிருந்து சமாரியாநாட்டின் பாதையாய் எருசலேமுக்குப் போகப் பயணப்பட்டார். அவர் அங்கே இராத்தங்கி சுகமாய்ப் பயணப்படவேண்டிய ஆயத்தங்கள் என்ன உண்டோ அவைகளைச் செய்து, தமது வருகையைப்பற்றி முந்தியே அறிவிக்கும்படி சில தூதர்களை அனுப்பினார். இயேசு தங்களுடைய இருப்பிடத்துக்கு வருவது அவர்களுக்குச் சந்தோஷமாயிருந்தாலும், அப்புறம் அவர் எருசலேமுக்குப் போகிறது அவர்களுக்கு இணக்கமாயிருக்கவில்லை. எருசலேமையும் அங்குள்ள மகிமைகளையும்

அவர்கள் பகைத்தார்கள். ஜாதி வித்தியாசமே இந்த பகைக்குக் காரணமாயிருந்தது. அவர் எருசலேமையும் தமது சந்திப்பினல் கனப்படுத்துகிறதுண்டானல் எங்கள் திசையில் அவருக்குத் தங்க இடமாவது தாபரிக்க ஸ்தலமாவது கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். இவ்விஷயத்தில் சமாரியர் பிசகு செய்துவிட்டார்கள். கிறிஸ்துவைத் தள்ளினதால் அவர்மூலமாயுண்டாகும் எத்தனையோ நன்மைகளையும் தள்ளிவிட்டார்கள். அவர்கள்மாத்திரம் அக்காலத்தில் அவரை மங்களமாய் ஏற்றுக்கொண்டிருப்பார்களானல் சமாரியாவிலுள்ள எத்தனையோ குஷ்டரோகிகள் குணமாகியிருப்பார்கள். சப்பாணிகள் நடந்திருப்பார்கள்! குருடர் காட்சியடைந்திருப்பார்கள்! நோயாளிகள் நோய்தீர்ந்திருப்பார்கள்! சமாரியர் கிறிஸ்துவை அசட்டைபண்ணிவிட்டார்கள் என்ற சமாசாரமானது யோவானையும் அவருடைய சகோதரனையும் உள்ளபடியே இடிமுழக்கத்தின் குட்டிகளாக்கிவிட்டது. இரண்டு மேகங்கள் ஒன்றோடொன்று மோதி பளிச்சென்று மின்னி மடமடவென்று இடிவிழுவது போல் இச்சேதியைக் கேள்விப்பட்ட யோவானுடைய மன மேகமும் யாக்கோபுடைய மனமேகமும் ஏகமாய் மோதி பயங்கரமான ஒரு இடிபோன்ற வாசகத்தை வெளியிட்டன; 'ஆண்டவரே எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா' என்று கேட்டார்கள். இதினுலே யோவானுக்கும் அவருடைய சகோதரனுக்கும் பழைய ஏற்பாட்டு சரித்திரங்கள் நன்றாய்த் தெரிந்ததென்று விளங்குகிறது. இவர்கள் சமாரியர்மேல் வரும்படி விரும்பின தண்டனையைப் பார்க்கும்போது, இவ்விருவருமே இயேசுவால் தூதனுப்பப்பட்டிருக்கலாமென்றும், சமாரியர் இவர்களையும், இயேசுவையும் கண்டபடி கனவீனமாய்ப் பேசி அவர்கள் மனதை நோகப்பண்ணியிருக்கலாமென்றும் நாம் அநுமானிக்கலாம். இம்மட்டும் கிறிஸ்துவைப் பின்பற்றினதால் பலரால் கனமாய்ப் பேசிக்கொள்ளப்பட்ட இவர்கள் தாங்கள் நினைத்திராதவிதமாய் தாழ்வாக நடத்தப்பட்ட படியால் இவ்வளவு தூரம் கோபப்பட ஏதுவுண்டாயிருக்கலாம். மேலும் இச்சமயத்தில் தங்களுக்கு இருந்த அற்புத

வரத்தைப்பற்றிய பெருமையுமிருந்ததென்று தோன்றுகிறது; 'நாங்கள் கட்டளையிட' என்று அவர்கள் சொல்வது அதிசயமாயிருக்கிறது. தேவ வரங்களைப் பெற்றவர்கள் அந்த வரங்களால் கருவத்துக்கு இடம்கொடுக்கிறதும் அவ் வரங்களைத் தங்கள் மனம்போன மார்க்கமாய்ச் செல்லவிடுவ தும் கூடாது. அவர்கள் பேசின வார்த்தைகள் இதின் மூலமாய் இயேசுவைக் கனப்படுத்தும்படி இருந்தாலும் தங்கள் கனத்தையும் பூரணமாய்க் கருதியிருந்தது. பலவித மான வரங்களைப் பெற்றவர்கள் நாங்கள் இவைகளின் மூலமாய் இயேசுவைக் கனப்படுத்த முயலுகிறோமென்று சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. ஆனால் அதில் தன் கனமும், கீர்த்தியும், பேர்பிரஸ்தாபமும் கலந்திருக்கவில்லையோ என் பதை அவரவர் ஆராய்ந்து கண்டறிவது நலமாயிருக்கிறது. இக்காலத்திலும் 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்' என்று அடிக்கடி சொல்லுகிற பலர் தாங்கள் எவ்வளவேனும் சிறுகாமல் எப்போதும் பெருகும்படி விழிப்பாகத் தங்கள் காரியங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு வருகிறார்கள். எப்படி யிருந்தபோதிலும் யோவானிடத்தில் இச்சமயத்தில் விளங்கு கிற ஒரு நற்குணத்தையும் காண்கிறோம். அதாவது எங்கள் விருப்பத்தின்படிச் செய்ய 'உமக்குச் சித்தமா' என்று கேட் டார்கள். இயேசுவின் சித்தத்தின்படி செய்யவேண்டுமென் பதே அவருடைய நோக்கமாயிருந்தது. இது புகழப்படத் தக்க சிறந்த குணமாக்கும். இந்தக் குணம் இவருக்கிருந்த படியால் தப்பாய் நோக்கங்கொண்டபோதிலும், அதை நிறை வேற்ற இடமில்லாதிருந்தது. 'தீயநோக்கம் பாவம்' என்ற வேதசுலோகப்படி அவருடைய ஆத்திரப்புத்தியால் கொண்ட ஆதிக் கருத்து குற்றமுள்ளதாயிருந்தாலும், அது நிறை வேற்றப்படாததால் திருத்தப்படுவதற்கு ஏதுவாயிருந்தது. அவர்கள் இயேசுவின் சித்தத்தை இவ்விஷயத்தில் கேட்டது, நினைத்திருந்த தீமையைத் தடுத்துவிட்டது. இயேசு அவர் கள் விரும்பினபடி வானத்திலிருந்து அக்கினிவரப்பண்ணி சமாரியரை அழித்துவிட இடம்கொடுப்பாரா? ஆ! அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடியசாந்தமும், மிகுந்த கிருபையும், ஆயிரம் தலைமுறைமட்டும் மன்னிக்கிற தயாள ரல்லவா! தண்டனைக்குப் பாத்திரராகிய நம்மேல் கிருபையாய்

இருக்கிறார் அல்லவா! கோபம்கொள்ளுகிற காலத்திலேயும் இரக்கத்தை நினைவுகூருகிறதல்லவோ அவருடைய சுபாவம். அவர் நமது பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நமது அக்கிரமங்களுக்குத் தக்கதாகச் சரிகட்டாமலுமிருக்கிறாரல்லவா! அவருடைய கிருபைக்கு எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக. இயேசு திரும்பிப் பார்த்து, அதாவது அவர் அப்படி எண்ணங்கொள்ளுவது தப்பிதம் என்பதை தமது கண்காட்சியால் உணர்த்தி, 'நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்' என்று அதட்டி தாம் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கல்ல இரட்சிக்கிறதற்கே வந்தேன் என்றார். ஆதலால் இச்சமயத்தில் ஏதோ ஒரு விசேஷித்த சாத்தான் அவர்களை ஏவிவிட்டு இந்தப் பள்ளத்தில் விழப்பண்ணியிருக்கிறதென்று விளங்குகிறது. மனுஷ ஜீவனை அழிக்க இயேசுவுக்கு சித்தமானால் வெகு நேரம் செல்லுமா? அப்படியானால் அவர் அவதாரமெடுக்க வேண்டியதில்லையே; அவர் ஜலத்தைப் பார்த்து ஜலமே பூமியைக் கவிந்துகொள் என்றும், காற்றை நோக்கி பூமியைப் பறக்கடி என்றும், அக்கினியைப் பார்த்து உன் வல்லமையால் பூமியை உருக்கிவிடு என்றும் சொல்ல வெகுநேரம் செல்லுமா? பூமியை அழிக்கிறதை அவர் தமது சிருஷ்டிகளைக் கொண்டு செய்துவிடலாம்; ஆனால் அதை இரட்சிக்கிறதை அவர் தாமாய் செய்யவேண்டியதாயிருந்தது. ஆனபடியினாலே தான் அவதாரமெடுத்த அந்த புண்ணியநாதர் விண்ணை மறந்து மண்ணை முகர்ந்து முப்பத்துமூன்று வருஷம் நடமாடி சகல உபத்திரவங்களையும் சகித்து, சிலுவையைத் தமது சிம்மாசனமாக்கி அதன்மேல் இரட்சண்ய அன்பால் மாண்டு உலகத்தை மீட்டார். எங்களை அழிக்கவராமல் இரட்சிக்க வந்த இம்மானுவேல் என்னும் இயேசுவே! உம்மைத் துதிக்கிறோம், புகழுகிறோம், மகிமைப்படுத்துகிறோம். உமது சிறந்த நேசத்தினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். சமாரியர் இயேசுவைத் தங்கள் ஊரில் ஏற்றுக் கொள்ள மாட்டோமென்றதையிட்டு நாம் அவர்களை நிந்திக்க வேண்டியதில்லை; இவ்வண்ணம் ஒரேதடவை மாத்திரம் நடந்தது. ஆனால் நாம் எத்தனையோதரம் கிறிஸ்துவை நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளமாட்டோமென்று சொல்லுகிற

தோடு, நமக்குள் தங்கும் ஆவியானவரையும் துரத்திவிடுகிறோம். உள்ளபடி சொன்னால் நம்மையும் வானத்திலிருந்து அக்கினி வந்து பட்சிக்கவேண்டியதல்லவா? நாம் கிறிஸ்துவை இம்மட்டும் அசட்டைசெய்ததுபோல இனிமேலும் அசட்டை செய்யாதிருப்போமாக. அவர் நமக்கு நன்மைசெய்யும்படி நம்முடைய வீட்டுக்கு வர விரும்புகிறாரேயன்றி வேறல்ல, கிறிஸ்துவை இழந்தவர்களே! நீங்கள் விண்ணப்பத்தினாலும் வேண்டுதலினாலும் இயேசுவை உங்கள் இருதயகமலத்தில் வந்து வாசம்செய்யும்படி மன்றாடுங்கள்.

சுவிசேஷ பிரசங்கிகள் அடிக்கடி கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் புறமதஸ்தாரால் துரத்தப்பட்டு அசட்டைபண்ணப்படுகிறபோது மனம்சோர்ந்து இப்படிப்பட்ட சந்ததி பூமியிலிருந்து அற்றுப்போக வேண்டியதென்று மனதில் அனல்கொள்ளுகிறதுண்டு; அது சரியல்ல மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நிறைவேற்றுகிறதில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது. சுவிசேஷத்தின் போங்குயுத்தமும் கலகமுமாயிராமல் அன்பும்சமாதானமுமாயிருக்கிறது.

யோவான் அப்போஸ்தலனுடைய வேறொரு குணமும் சுவிசேஷத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இயேசு எருசலேமுக்கு கடைசிவிசையாய்ப் பயணப்பட்டுப் போகையில் அவ்விடத்தில் தமக்குண்டாகும் பாடுகளை விபரமாய் அறிவித்தார். அப்படியிருந்தபோதிலும் இவரும் இவருடைய சகோதரனும் அதை நம்பாமல், எப்படியும் இந்தத் தடவையில் இராஜாவாகிறதை மாற்றி சொல்லுகிறாரென்று உத்தேசித்து தங்களுடைய தாயார் மூலமாய் கிறிஸ்துவினிடத்தில் பேசவும் அவ்விதமாய்த் தங்களுக்கு கிறிஸ்துவின் சிங்காசனத்தில் உயர்ந்த மேன்மை கிடைக்கவும் வேண்டுமென்று விரும்பினார்கள். இவருடைய தாயார் தன் ஆஸ்தியால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்த ஸ்திரீகளில் ஒருத்தியாய் இருந்தபடியால் அவளுடைய ஆலோசனையை இயேசு இலேசாகத் தட்டிவிடமாட்டாரென்று எண்ணியிருக்கலாம்; இதேசமயத்தில் மக்களும் வந்து சேர்ந்து போதகரே! உமது மகிமையிலே எங்களில் ஒருவன் உமது இட்துபாரிசத்திலும், ஒருவன் உமது

வலதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்ய வேண்டுமென்று கேட்டார்கள்! இவர்கள் தங்களுடைய தாயாரை எவி ரீ முந்திப்போய் பேச்சைத் துவக்கு நாங்கள் வந்து அந்த சம்பாஷணையை நடத்தி முடிக்கிறோமென்று ஒழுங்குபண்ணிக்கொண்டார்கள் என்று நினைக்கலாம். இது ராகப்பன் வீட்டில் தரித்திரமிருக்கையில் மக்கள்கூடி மாளிகை கட்ட ஆலோசனை செய்கிறப்போல் இருக்கிறதல்லவா? இதோ எருசலேமுக்குப் போகிறோம். அங்கே மனுஷகுமாரன் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவரை மரணக் கினைக்குத் தீர்த்து, பரியாசம்பண்ணி, வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி கொலைசெய்வார்கள் என்று சொன்னதை இவர்கள் கேட்டபோதிலும் இவ்விருவரும் வேறு நினைவு பட்டு, கீர்த்திக்கும் மேன்மைக்கும் யோசனைசெய்வது அதிசயமாயிருக்கிறதல்லவா? இயேசு அவர்களை நோக்கி 'நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னதென்று உங்களுக்கே தெரியவில்லை' என்று கண்டித்தார். இப்படிப்பட்ட குற்றத்தில் நாமும் அடிக்கடி அகப்படுகிறதுண்டு. எத்தனையோதரம் நாம் நமக்கு அடாததை விரும்பி விண்ணப்பத்திலே அதைக் கேட்டு குற்றவாளிகளாகிறோம்: மேலும் இயேசு அவர்களைப் பார்த்து எனக்குண்டாகும் பாடுகளில் நீங்களும் பங்கு பெற்று, என் அவஸ்தைகளை அநுபவிக்கக்கூடுமா என்று கேட்டார். அவர்கள் இது வீண் பயமுறுத்தலேயன்றி அப்படி நடவாத காரியமென்று உத்தேசித்து, 'கூடும்' என்று சொன்னார்கள். அது உங்களால் கூடியபோதிலும், என் வலது இடதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கும்படி எவர் களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்லவென்று சொன்னார். மற்றப் பத்துப்பேரும் இந்த வரலாறுகளனைத்தையும் கேள்விப்பட்டு யோவான்மேலும் அவருடைய சகோதரன்மேலும் எரிச்சலானார்கள். ஆகவே இடிமுழக்கத்தின் மக்கள் இச்சமயத்தில் எடுத்த பிரயத்தனத் துக்கு இயேசுவின் கண்டனையும், மற்ற சீஷரின் எரிச்சலுமே இலாபமாயிருந்தது. நாம், நாமே கனத்தையும், மேன்மை யையும் மற்றவர்கள்மேல் ஆளும் வல்லமையையும் நாடும்போது தேவதண்டனையும் மற்றவர்களுடைய பொறுமையும் நம்மேல்

வரப் பார்க்கலாம். இப்படிப் பெரியதனத்துக்கு ஆவல் கொண்ட விஷயமானது, நம்மில் எவன் பெரியவன் எவன் தாழ்ந்தவன் என்ற பெரும் கலக்கத்தை சீஷருக்குள் எழுப்பி விட்டதென்று காண்கிறோம். கிறிஸ்து அந்தக் கலக்கத்தை ஒழிக்கும்படி உங்களில் எவனுகிலும் பெரியவனுயிருக்க விரும்பினுல் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனுயிருக் கக்கடவன், எவனுகிலும் முதன்மையாயிருக்க விரும்பினுல் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனுயிருக்கக்கடவன் என்று தீர்ப்புக்கூறி, தம்மையே அதற்குத் திருஷ்டாந்தமாக வைத்து நான் ஊழியம்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும்பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்று சொன்னர். அதோடு இந்த வாது முடிந்தது. சேனைசேனையாய் அணிவகுத்து நிற்கும் சம்மனசுகளை வைத்து வேலைவாங்கி ஊழியம் கொண்டுவந்த சேனைகளின் தேவனுகிய இயேசுவே! நீர் உமது அவதார காலத்தில் அடிமையின் வேஷம் பூண்டு ஊழியம் செய்யும்படி தாழ்ந்ததோடு எங்களை மீட்கும்படி உமது ஜீவனையும் விட்ட ஆழ்ந்த நேசத்தைத் தாழ்ந்து தியா னித்து உம்மை வணங்குகிறோம்.

இந்த வரலாறோடு இயேசுவுக்கும் யோவானுக்கும் இருந்த பாசம் அற்றுப்போகவில்லை. அவர் தம்முடைய பிள்ளைகளுடைய தப்பிதத்தினிமித்தம் அவர்களைக் கண்டித்து உணர்த்தினுலும், தமது அன்பை அவர்களைவிட்டு எடுத்துப் போடுகிறதில்லை. இயேசு பஸ்காவை ஆயத்தம்பண்ணும்படி பேதுருவோடு யோவானையும் அனுப்பினர். மேலும் பஸ்கா பந்தியில் யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண் டிருந்தான். கிறிஸ்து தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனைப் பற்றி சாடையாய் சொன்னபோது இவர் அவனை இன்ன னென்று துலக்கும்படி, 'ஆண்டவரே அவன் யார்?' என்று கேட்டு தன் இரட்சகரைக் காட்டிக்கொடுக்கிறவன் பேரை சீஷர் எல்லாரிலும் முதலாவது அறிந்துகொண்டார். இயேசு கெத்சமனேயில் மனவியாகுலத்தால் பாடுகளை அனுபவித்த காலத்தில் இவரும் பேதுரு யாக்கோபு என்னும் இருவ ரோடுகூடப்போய்க் காத்திருந்து விழித்திருந்து ஜெபம்

பண்ணுவதற்குப் பதிலாக ஏதோ சோதனைக்குட்பட்டு நித்திரைபண்ணினார். இயேசு அநியாயமாய்ப் பிடிப்பட்டவுடனே இவரும் மற்றவர்களைப்போல பயந்து ஓட்டம்பிடித்தபோதிலும், அப்பால் பயம் தெளிந்து, அவரை விசாரணை செய்கையில் கூடஇருந்து இயேசுவுக்கு நேரிட்ட அவமானங்கள் தூஷணங்கள் முதலிய சகல இம்சைகளையும் பார்த்தார். ஒரு மலையின்மேல் இயேசு மறுரூபப்பட்ட மகிமையைக் கண்ட கண்ணால் இந்தக் கனவீன காட்சியைக் காண்பது எப்படிப்பட்ட ஆச்சரியத்தை மனதில் உண்டாக்கியிருக்கும் என்பதை நான் உனக்குச் சொல்லவும் வேண்டுமா?

இயேசுவின்மேல் இவர் கொண்டிருந்த அன்பை இவர் கடைசிமட்டும் விடவில்லை. அவரை மரணக்கினைக்குட் படுத்தி சிலுவையில் அறைகிற சமயத்தில் மற்ற சீஷரைப் பற்றி நாம் ஒன்றும் அறியக்கூடாதேபோலுலும் இவர் தமது நேசமுள்ள நெஞ்சத்தால் உருகி, அழகிய கண்ணால் அழுது கொண்டிருந்தார். இயேசு சிலுவை சுமந்து எருசலேமின் தெருக்கள் வழியாய் விழுந்தெழுந்து கடந்துவரும் காலத்தில் இவர் என்ன அவசர வேலையிலிருந்தாரோ தெரியவில்லை, ஒருவேளை இவர் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவராயிருந்ததால் இவரைக் கட்டாயம்பண்ணி இயேசுவின் சிலுவையைத் தாங்கும்படி பண்ணவில்லையாக்கும். அல்லவென்று இவர் மகா வியாகுலத்தோடு நடக்கத் தடுமாறி சங்கடப்பட்ட இயேசுவின் தாயாரை மற்ற ஸ்திரீகளுக்கு உதவியாகத் தாங்கியிருக்கலாம். மற்றபடி சிரேனே ஊர் சீமோனையல்லாமல் இவரைத்தான் சத்துருக்கள் பிடித்திருக்கலாம். இவரும் அப்படியே சுமந்துமிருக்கலாம். எப்படியும் இவர் மற்ற சீஷரைப்போல ஓடிமறைந்து கொள்ளாமல் சிலுவையண்டை வந்ததற்கு இலாபமில்லாமல் போகவில்லை. இயேசுவின் தாய் அவருக்குத் தாயாகும் வரம் கிடைத்தது, அவர் சிலுவையில் தொங்கிக் கொண்டே தமது தாயாரைக் கூப்பிட்டு அதோ உன் மகன் என்றும், யோவானை நோக்கி அதோ உன் தாய் என்றும் சொல்லி ஒப்புக்கொடுத்தார். அந்நேரமுதல் அவர் இயேசுவின் தாயாகிய மரியம்மாளைத் தன்னிடமாகச் சேர்த்துக்

கொண்டார். இவ்வுலகத்தில் ஆவியின்பிரகாரமாய்த் திருச்சபை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தாயாயிருக்கிறது. அந்தத் தாயைப் பேணுவதும் அதற்கு வேண்டிய உதவிகளைத் செய்வதும் ஒவ்வொரு பிள்ளையின்மேலும் விழுந்த கடனுயிருக்கிறது. சபையைச் சேர்ந்த தேவஊழியக்காரர், ஏழைகள், பின்னும் ஆலயத்தையடுத்த செலவுகள் இவையனைத்தும் ஒரு பிள்ளை தன் தாய்க்குச் செய்யும் ஆதரவுகள்போலிருக்கின்றன. அப்படி சபையை ஆதரிக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடமைப்பட்டிருக்கிறான். நாமோ பெரும்பாலும் பல போக்குகளைச் சொல்லி அயல்தேசத்துப் பணங்களைக்கொண்டு இத்தேசத்து சபையாகிய தாயைப் பராமரிக்கப் பார்க்கிறோம். அது சரியல்ல; அவரவர் தங்கள் வருமானத்துக்குத்தக்கதாக கர்த்தருடைய சபையின் வேலைகளுக்கென்று காணிக்கைகள் செலுத்தி அதை நடத்திவர வேண்டியது.

உலக இரட்சகர் உயிர்த்தெழுந்த சமாசாரத்தைக் கேட்டு இவரும் பேதுருவும் ஓடிக் கல்லறையண்டை போய்ப் பார்த்து, கிறிஸ்து மெய்யாகவே எழுந்திருந்தாரென்று விசுவாசித்தார். சொல்லவேண்டுமானால் இயேசுவின் உயிர்த்தெழுதலை விசுவாசித்தவர்களில் இவர்தான் முதல்வர் (யோவா. 20:1–10). அன்று சாயந்தரம் இரட்சகர் காட்சியளித்த கூட்டத்தில் இவரும் இருந்தார். ஆனால் இவருக்கு மாத்திரம் தனிமையாய் தரிசனமளித்ததாக நாம் அறிகிறதில்லை. அந்த விஷயத்தில் யோவான் அப்போஸ்தலனுடைய விசுவாசம் எவ்வளவேனும் பலவீனப்பட்டிராததால் அப்படித் தனித் தரிசனமளிப்பது அவசியமில்லாதிருந்தது. ஒருதரம் இயேசு கலிலேயாக் கடலோரத்தில் சீஷருக்குத் தரிசனமளிக்கும்படி போன சமயத்தில் இவர்தான் அவரை முதலாவது இனமறிந்து 'அவர் கர்த்தர்' என்று பேதுருவுக்குச் சொன்னார். ஆகவே உயிர்த்தெழுதலுக்குப் பின்னிருந்த இயேசுவின் மகிமையான சரீரத்தின் தன்மையை யோவான் மற்றவர்களைவிட நன்றாய் ஆராய்ந்தறிந்துகொண்டார் என்று சொல்லலாம். இவருடைய அந்திகால முடிவின் தன்மையைக் குறித்து பேதுரு இயேசுவினிடத்தில் கேட்ட

போது 'நான் வருமளவும் இவனிருக்க சித்தமானால் உனக்கென்ன' என்று இயேசு சொன்னார். இதை சீஷர் தப்பாக அர்த்தம்பண்ணி யோவானுக்கு மரணமில்லையென்று சொல்லிக்கொண்டார்கள். அவருக்கு ஒருநாளும் மரணமில்லையென்பது அதின் கருத்தாக இராமல், எருசலேம் பட்டணத்தின் அழிவுமட்டும் அவருக்கு மரணம் சம்பவியாதுஎன்பதே அதின் கருத்தாயிருந்தது. காரியமும் அப்படியே நிறைவேறிற்று என்பதைப் பின்னால் அறிவோம்.

இயேசு பரமண்டலத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளுக்குப் பின்னால் யோவான் என்பவர் முன்னிலும் அதிக சிறந்தவராய் விளங்குகிறார். அவர் அப்போஸ்தலருடைய ஐக்கியத்தில் நிலைத்திருந்து கிறிஸ்துவினிமித்தம் உண்டான சகல துன்பங்களையும் சகித்தார். பெந்தேகொஸ்தே நாளில் உண்டான பெரிய வரப்பிரசாதத்தில் இவரும் பங்குள்ளவராயிருந்து, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சாட்சியிட்டார். அப்பால் இவர் பெரும்பாலும் பேதுருவின் கூட்டாளியாக இருந்தாரென்று காண்கிறோம். பேதுரு கல், இவரோ இடிமுழக்கத்தின் மகன், கல்லும் இடியும் ஏகமாய்க் கூடி கிரியை நடத்தும்போது எவ்வளவு மாறுதல் நடப்பது இயல்பு. இவ்விருவரும் கிறிஸ்துவைப் பிரசங்கித்த விஷயத்திலும் அப்படியே இருந்தது. பேதுரு அலங்காரவாசலிலிருந்து சப்பாணியைக் குணமாக்கின சமயத்தில் இவரும் கூட இருந்தார். அப்பால் ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்ததினிமித்தம் இருவரும் ஏகமாய் சிறையாக்கப்பட்டார்கள். சிறைப்பட்டாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதை அவர் விடவில்லை; பின்பு இரண்டாந்தரமும் இருவரும் சிறையில் போடப்பட்டு தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டார்கள் (அப். 5:19). அப்பால் அவர்களை அடித்து இயேசுவின் நாமத்தைக்குறித்து பேசக்கூடாதென்று கட்டளையிடப்பட்டாலும், இவரும் பேதுருவும் ஆவியிலே பெலன்கொண்டு தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். இவர் பேதுருவோடு சமாரியா நாட்டுக்குப் போய் அங்கே கிறிஸ்துவை விசுவாசித்தவர்களைத்

திடப்படுத்தும்படி அப்போஸ்தலரால் அனுப்பப்பட்டார். சிலகாலத்துக்குமுன் இவர் இதே சமாரியர் அனைவரையும் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து அழித்துப் போட நோக்கங்கொண்டார் என்று முன்னே சொன்னேம்; முன்னே கூடாதென்று தடுத்துக் கண்டித்த இயேசு சுவாமி இக்காலத்தில் தமது நேச அக்கினியால் சமாரியருடைய இருதயங்களைப் பட்சித்து அவர்களைத் தம்மை விசுவாசிக்கும் பிள்ளைகளாக்கினார். இந்தப் பெரிய மாறுதலை யோவான் கண்டு, முந்தி தம்மிடத்தில் வெளிப்பட்ட புத்தியீனத்தை அதிகமாய் உணர்ந்திருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை.

யோவான் பெரும்பாலும் எருசலேமிலே தங்கி மரியம்மாளைக் காப்பாற்றிவந்தார். இயேசுவின் தாயார் இன்ன காலத்தில் மரித்தாள் என்று நாம் அறியக்கூடாது. எப்படியும் அவர் அப்போஸ்தலருடைய முதலாம் சங்கக் கூட்டத்துக்குப் பின்பும் எருசலேமிலிருந்தாரென்பது மெய்; ஏனெனில் பவுல் அப்போஸ்தலன் அதற்குப் பின்பு ஒருதரம் பர்னபாவோடு எருசலேமுக்குப் போனபோது, இவர் அங்குள்ள சபையின் ஒரு தூணாக எண்ணப்பட்டு வந்திருக்கிறாரென்றும், பவுல் இவரைக் கண்டு பேசினார் என்றும் விளங்குகிறது (கலா. 2:9). இக்காலத்தில் பேதுருவின் வேலை ஏறக்குறைய முடிகிறதாயிருந்தது. அந்தக் குறையிலிருந்து பவுல் தமது வேலையை ஆரம்பித்தார்; யோவானுடைய வேலையின் காலமோ இன்னும் பிந்தியிருந்தது. பவுல் அப்போஸ்தலன் விட்டுப்போகும் குறைவேலையை இவர் நிறைவேற்றி கோடிக்கல்லை வைத்துப் பிரதிஷ்டையை நடத்த வேண்டுமென்று தேவ திருவுளமாயிருந்ததென்று பார்க்கிறோம். ஒருவர் சொல்லுகிறபடி பேதுரு ஆரம்பித்தவரும், பவுல் பிரபல்லியப்படுத்தியவரும், யோவான் முடித்தவருமாயிருந்தார்கள். பேதுரு சுவிசேஷத்தின் காலையும், பவுல் உச்சிவேளையும், யோவான் மாலையும் போலிருக்கிறார்கள். யோவான், சுவிசேஷ இரகசிய இரத்தினங்களையெல்லாம் தமக்குள் அடக்கிக்கொண்டு அதற்குரிய காலம் வந்தபோது எடுத்துக்காட்டி கிறிஸ்துவை மகிமைப்படுத்தினார்.

யோவான் அப்போஸ்தலன் கிறிஸ்து பரமேறினபின்பு எவ்வளவுகாலம் எருசலேமில் காலம் கழித்தாரென்பது திட்டமாய் விளங்காதேபோனாலும் இருபது வருஷத்துக்குக் குறைவில்லை என்று சொல்லவேண்டியது. இந்த இருபது வருஷத்தையும் அவர் எவ்வகையாய்ப் பின்னிட்டார் என்று குறிப்பிக்கக் கூடாவிட்டாலும், பிற்பாடு அவரிடத்தில் விளங்கிய வேலைகள் மூலமாய் இக்காலங்களில் மிச்சமான பாகம் தியானத்திலும், இயேசுவின் தாயாரோடு பரம விஷயங்களை சம்பாஷிப்பதிலும் கழிந்ததென்று சொல்ல வேண்டியது. பரம இரகசியங்களின் ஆழங்களைக் கண்டறிய விரும்பும் பக்தர் தியானசிந்தையை வளர்த்து முயற்சிப்பது தகுதி. பவுல் அப்போஸ்தலனுடைய ஜீவகாலத்துக்குப் பின்பு இவர் எபேசு சபைகளின்மேல் அதிகாரத்தைப் பெற்றார். அத்திசைகளில் இதற்குள்ளாக அநேக கள்ள உபதேசிகள் எழும்பி சபையை விசுவாசத்திலிருந்து மருள விழப்பண்ணினார்கள். அவ்வுபதேசங்களைத் தகுந்தபடி கண்டித்து உணர்த்தும்படி இவரே தகுதியுடையவராயிருந்தார். அக்காலத்திலிருந்த ஒரு பிரிவார் இயேசுவின் மனுஷதன்மையை முற்றிலும் மறுத்து வந்தார்கள். அதை நிலை நிறுத்தாத பட்சத்தில் ஆத்தும இரட்சிப்புக்கு அவசியமான கிறிஸ்துவின் மனுஷாவதாரமும், சிலுவை மரணத்தாலுண்டான பிராயச்சித்த பலியும், உயிர்த்தெழுதலின் நிச்சயமும் அழிந்துபோக வேண்டியதாயிருக்கும். ஆதலால் யோவான் கிறிஸ்துவானவர் மாமிசத்தில் வெளிப்பட்ட மெய்யான தேவன் என்று ருசுப்படுத்தும்படி தமது சுவிசேஷத்தை எழுதினார்.

இதனடியில் இவருடைய சரித்திர சம்பந்தமாய் ஆதி சபை பிதாக்களால் எழுதப்பட்டிருக்கிற இரண்டு வரலாறுகளைக் காட்டுவது தோஷமல்ல. அலெக்சாந்தரியா கிளெமெந்து என்பவர் யோவான் அப்போஸ்தலனையும் ஒரு வாலிபனையும் பற்றிய பின்வரும் சரித்திரத்தை எழுதி வைத்திருக்கிறார். அதாவது: யோவான் அப்போஸ்தலன் ஏதோ வேலையாய் எபேசு நகரத்தை விட்டு வெளியே போக வேண்டியதிருந்த காலத்தில் தாம் பிரியமாய்க் காப்பாற்றி

வந்த குணப்பட்ட ஒரு வாலிபனை அங்கிருந்த போலிக் கார்ப்பஸ் என்னும் குருவினிடத்தில் ஒப்புவித்து பத்திர மாய்ப் பார்க்கும்படித் திட்டம் செய்திருந்தார். அவர் திரும்ப வந்தவுடனே, என் சகோதரனையும் அவன் ஆத்துமா வையும் என்னிடத்தில் ஒப்புவி என்று கேட்டார். அப் பொழுது போலிக்கார்ப்பு மனவியாகுலத்தோடு பெருமூச் செறிந்து 'அவன் மரித்துப் போனான்' என்று சொன்னார். 'எப்படி? என்ன விதமாய் மரித்துப் போனான்' என்று கேட்டார். 'அவன் தேவனுக்குச் செத்துப் போனான், அவன் துன்மார்க்கத்தில் விழுந்து, கைவிடப்பட்டு கடைசியாக ஒரு கள்ளனாகிவிட்டான்' என்று சொன்னார். உடனே யோவான் அப்போஸ்தலன் தன் வஸ்திரங்களைக் கிழித்துத் தலையோடடித்துக்கொண்டு, 'நீ நல்ல காவற்காரனப்பா? உன்னிடத்திலும் நான் ஒரு சகோதரனுடைய ஆத்துமாவை ஒப்புவித்தேனே' என்று சொல்லி அந்த வாலிபன் வசித்த வனம் போய்ச் சேர்ந்தார். அவனை அக்காலத்தில் களவில் தேறி கள்ளரின் தளகர்த்தன் என்று பட்டம் பெற்றுக் கொண்டு அத்திசை எங்கும் அட்டகாசம் செய்து நிஷ்டூரங் களை நடப்பித்துக்கொண்டு வந்தான். இவர் அந்த வனத் திற்குப் போனவுடனே கள்ளரால் கைதியாகப் பிடிக்கப் பட்டு, தங்கள் தளகர்த்தன்வசம் கொண்டுபோய் விடப் பட்டார். இவரைக் கண்டவுனே கள்ளரின் தளகர்த்தன் பச்சாத்தாபத்தால் நெஞ்சுடைந்து சாஷ்டாங்கமாய் அவ ருடைய பாதம் பணிந்து தன் தப்பிதங்களைப் பொறுக்க வேண்டுமென்று மன்றாடினான்; அச்சமயத்தில் அவன் இரத் தத்தில் புரண்டிருந்த தன் வலது கையைத் தன் வஸ்திரத் துக்குள் மறைத்துக் கொண்டிருந்தான்; இவரோ தாழ விழுந்து முழங்காலில் நின்று அவன் மறைத்த கையைப் பிடித்திழுத்து அந்த இரத்தக் கையைத் தமது துக்கக் கண்ணீரால் கழுவி முத்தமிட்டார். உடனே அவன் அவரைப் பின்தொடர்ந்து மறுபடியும் குணப்பட்டு உத்தம பக்தனாய் தன் ஜீவ ஓட்டத்தை முடித்தான். இவருடைய சரித்திர சம்பந்தத்தில் ஐரேனியஸ் எழுதிய ஒரு வரலாறு மிருக்கிறது. ஒருநாள் இவர் ஒரு தெப்பக்குளத்தில் ஸ்நானம் செய்யப் போனபோது அங்கே கிறிஸ்துவின்

விரோதியாகிய செரிந்திஸ் என்னும் பதிதன் இருக்கிறதைக் கேள்விப்பட்டு ஓட்டம்பிடித்து செரிந்திஸ் உள்ளிருக்கும் போது தெப்பக்குளம் இடிந்து விழுந்து நாமும் சாகாதபடி ஓட்டம் பிடிப்போமாக என்று சொல்லி திரும்பி விட்டாராம். இந்தப் பிந்தின வரலாறு நம்பிக்கைக்கு விரோதமும், தருமசிந்தையில்லாததுபோலும் சிலருக்குக் காணப்படலாம். ஆனால் பரிசுத்தவான்கள் பாவங்களையும் பதிதரையும் எவ்வளவாய்ப் பகைக்கிறார்களென்பதை உணர்த்த இது தகுதியான திருஷ்டாந்தமென்பதற்கு ஐயமில்லை. செரிந்திஸ் என்னும் பதிதனைப்பற்றி அப்போஸ்தலனுக்கிருந்த வெறுப்பை உணர்த்தும் பாரம்பரையானது யோவான் சுவிசேஷத்துக்கு இசைந்திருக்கிறது. இந்த சுவிசேஷம் எபியோனியர் என்னும் பதிதரைக் கண்டிக்கும் நோக்கமாகவே எழுதப்பட்டதென்று ஆதிச்சபையில் ஒரு பாரம்பரை ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது. கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையைச் சரியானபடி எடுத்து உணர்த்த அப்போஸ்தலனே திறமுடையவரென்று கண்டு ஆசியா நாட்டு அத்தியட்சர் கூடி இந்த ஆகமத்தை எழுதும்படி அவரைக் கேட்டதின்பேரில் யோவான் அதை எழுதினாரென்று ஜெரோம் என்பவர் சொல்லியிருக்கிறார். இந்த ஆகமத்தைப் பற்றிய இலட்சணங்களையும் பொருள் அடக்கங்களையும் குறித்துப் பேசுவது நமக்கு கருத்தல்ல. அப்போஸ்தலன் பேரால் வழங்கப்படுகிற வேறு மூன்று நிருபங்களிருக்கின்றன. அதுவுமன்றி வெளிப்படுத்தின விசேஷமும் அவரால் எழுதப்பட்டிருக்கிறது. இதினாலே யோவான் திறந்த கர்த்தாவுமாயிருந்தாரென்று அறிகிறோம். புதிய ஏற்பாட்டாகமங்களில் பரி. பவுலுக்கு இரண்டாவதாக அதிக தொகையுள்ள ஆகமங்களை எழுதினவர் இவர்தான்.

கடைசியாக அவர் எபேசுவில் நடத்திவந்த தேவ ஊழியம் துன்பத்தால் நிறுத்தப்பட்டு, அப்போஸ்தலன் கிறிஸ்துவினிமித்தம் கைதியாகவேண்டியது நேரிட்டது. தோமிஷான் காலத்துத் துன்பத்தில் அவர் பிடிக்கப்பட்டு உரோமாபுரியில் எண்ணெய்க் கொப்பரையில் போடப்பட்டாலும், பூர்வகாலத்து மூன்று பக்தர்போல் (சாதிராக்,

மேஷாக், ஆபத்நேகோ.) இவரும் யாதொரு சேதமுமின்றி கொதிக்கிற கொப்பரையிலிருந்து கரையேறினர் என்று தெர்த்துலியான் எழுதியிருக்கிறான். இந்தப் பாரம்பரையைப்பற்றி நாம் சந்தேகத்துக்கு இடங்கொடுத்தாலும், அவர் அநேக உபத்திரவங்களின் வழியாய் ஈஜியன் கடலிலுள்ள பத்மு என்னும் ஒரு சிறு தீவுக்கு சிறையாக அனுப்பப்பட்டு, அங்கிருந்த கைதிகளோடு சுரங்கவேலை செய்யும் தண்டனையைப் பெற்றாரென்பது நம்பக்கூடிய வரலாறுதான். ஈஜியன் கடலிலுள்ள எல்லா தீவுகளிலும் இதுதான் சிறியதும், சுகக்கேடுள்ளதுமாயிருந்தது. இங்கே விருட்சங்களாவது பலவித பூண்டுகளாவது கிடையாது. இக்காலத்தில் முதலாய் சில ஈச்சமரங்களேயன்றி வேறொரு மகிமையும் அங்கில்லை. எபேசுக்கும் பத்மு தீவுக்கும் சுமார் அறுபது மைல் தூரமிருக்கும். பரி. யோவான் தரிசனம் கண்டதாக சொல்லப்படுகிற மலைக்கெபி இந்நாளுமிருக்கின்றன. அவர் கிறிஸ்துவுக்குள் வேலை செய்யாதபடி அவருடைய சரீர அவயவங்கள் கட்டப்பட்டுப்போனாலும், அவருடைய ஆவியினால் பரம தரிசனைகளையடையவும், பரமண்டலத்தையும் மோட்சத்தையும் காட்டும் படத்தைப் பிடித்துவைக்கவும் அருள் கிடைத்தது. சுயாதீனனாயிருந்து தேவகிருபைகளை இழந்துபோகிறதைவிட கிறிஸ்துவினிமித்தம் தம்மைக் கைதியாக்கி பரம வரங்களைப் பெறுவது தகுதியல்லவா? உலகத்தின் உபத்திரவம் பரலோகத்தின் சிநேகத்தைத் தருகிறது என்பது மெய்யாயிருக்கிறது.

பத்மு தீவில் பரி. யோவானுக்கு இருந்த சிறையிருப்பை தேவன் தோமிஷானுடைய மரணத்தால் குறுக்கினார். அவர் சிறைப்பட்ட சுமார் ஒரு வருஷத்துக்குள்ளாக நெர்வா இராயனைதால் அப்போஸ்தலன் விடுதலையாக்கப்பட்டு மறுபடியும் எபேசுக்கு வந்து முன்போல அங்குள்ள திருச்சபைகளை நடத்திவந்தார். அப்பால் அவருடைய ஜீவியம் நீடித்திருக்கவில்லை. பத்மு தீவில் கண்ட மோட்ச மகிமைகளின் ஆவல் மேலிட்டதால் பூலோகத்தையும் அங்குள்ள சம்பத்தையும் அவர் சீக்கிரம் விடவேண்டியதாயிற்று. அவருக்கு போலிக்கார்ப், இன்னேஷியஸ், பப்பியாஸ் என்ற

பக்தியுள்ள சீஷரிருந்தார்கள். அதிக வயசாக நடக்கப் பெலனற்ற தளர்ந்த வயசிலும் அவர் தம்மை ஆலயத்துக்குச் சுமந்துகொண்டுபோகச் செய்து 'பிள்ளைகளே ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என்ற சுருக்கமான புத்தியைச் சொல்லிவந்தார். இந்த வாசகத்தையே அடிக்கடி சொல்லி வந்தது பலருக்கும் பிரியமாயிருக்கவில்லை: அவர்கள் ஒரு தடவை அப்போஸ்தலனை நோக்கி, 'குருவே! எந்நாளும் இதுதானு பிரசங்கம்' என்று கேட்டார்கள்! 'அப்பா இதுதான் ஆண்டவருடைய கட்டளையாயிருக்கிறது; இதின்படிச் சரியாய் நடந்தால் சகலமும் நிறைவேறினதுபோலத்தான்' என்று சொன்னராம்.

சிலர் அவருடைய வயது நூறு என்றும் வேறு சிலர் நூற்றிருபது என்றும் சொல்லுகிறார்கள். இப்பூலோகத்தை அவர் விட்டுவிடவேண்டிய நாள் வந்தபோது, பக்திவிநயத்தோடு பூமிக்கு வந்தனம் கூறி, மரண வாகனமேறி, தாம் கெபிக்குள் தரிசனை கண்ட இரத்தின வாசல்களைக் கடந்து பொற்றள வீதி சேர்ந்தார். அவருக்கு அறிமுகமான பலர் அங்கே யிருந்தார்கள்; அவர்களோடு இவரும் கூடி அன்று முதல் இன்றுவரையும் ஆட்டுக்குட்டியானவரின் சிம்மாசனத்துக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து 'தேவரீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களும் ஆக்கினீர், அல்லேலூயா! என்று பாடிக்கொண்டிருக்கிறார்கள்.' இந்தக் கனம் அவர் மட்டுக்குமல்ல, இன்றைக்கும் இனியுள்ள காலத்திலும் கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் அனைவருக்கும் கிடைக்கும். ஆதலால் இம்மையைவிட்டுப் போகவேண்டியவனாகிய நீ மறுமைக்கு இப்பொழுதே உன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டுவா. 'மரண தூதனால் நீ மறுலோகத்துக்கு வரவழைக்கப்படுங் காலத்திலும் பரியோவானையும் அவருடன் சேர்ந்த கோடானுகோடி பக்தரையும் காண்பாய்; நீயும் அவர்களும் ஏகமாய்ச் சேர்ந்து அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும்,

ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தை யும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திராயிருக்கிறார்' என்று பாடும் குரலே பேயும் அவன் கூட்டாளிகளும் கேட்டு வெட்கமடைந்து பல்லைக் கடித்துப் புலம்புவார்கள்.

யூதாஸ் ஸ்காரியோத்து

குருத்துரோகி

இப்பொழுது நாம் தியானிக்கப்போகும் சரித்திரத்துக்கு இணையான சரித்திரம் இவ்வுலகில் இல்லையென்று சொல்ல வேண்டியது. இந்து சமய வரலாறுகளிலாவது, மகம்மது சமய சரித்திரங்களிலாவது இப்படிப்பட்ட யூதாசு இல்லை. உலகத்தில் பலர் விசேஷ கிரியைகளை நடப்பித்துப் பேர் பிரஸ்தாபமடைகிறதுண்டு. இவனே தன் ஆண்டவரும் இரட்சகருமான இயேசுவைப் பகைவருடைய சதியோசனைகளுக்கு இணங்கிக் காட்டிக்கொடுத்துப் பேரெடுத்தான். அன்றுமுதல் இவனுக்கு 'துரோகியாகிய யூதாசு' என்றும் 'காட்டிக்கொடுத்த யூதாஸ்' என்றும் பேர்கள் வழங்கப்பட்டு வந்தன. யூதருக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் ஆமான் என்ற பேர் எவ்வளவு அருவருப்பாயிருக்குமோ, கிறிஸ்தவர்களுக்கும் அவர் பிள்ளைகளுக்கும் யூதாஸ் ஸ்காரியோத் என்ற பேர் அதிலும் அதிக அருவருப்பாயிருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, யூதாசின் வரலாறை வாசிக்கிற எந்த இந்துவும் மகம்மதியனும் அவனைச் சபிப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. பேர் கிறிஸ்தவர்களும், கள்ள கிறிஸ்தவர்களும், மாய்மாலக் கிறிஸ்தவர்களும் எக்காலத்திலுமுண்டு என்று உலகத்துக்கு வெளிப்படுத்தும்படி இவன் கொடிமரம் போலிருக்கிறான். இனி நாம் இவனுடைய வரலாறுகளைச் சற்றே தியானிப்போமாக; இவனுடைய சரித்திர முழுவதிலும் குருத்துரோக இலட்சணமடங்கி யிருப்பதால் நாம் இவனைக் குருத்துரோகி என்ற பட்டப்பேரால் அழைப்போமாக.

இந்தக் குருத்துரோகியின் தகப்பனுக்கு சீமோன் என்று பேர் (யோவா. 12:4). சீமோன் என்ற பேர் யூதருக்குள்

சாதாரணமான ஒரு பேராயிருந்தது. இந்த சீமோன் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவனுகிய காணனியனுகிய சீமோன் அல்லது செலோத்தே என்னப்பட்ட சீமோன் என்று சிலர் நினைக்கிறார்கள் (மத். 10:4; லூக். 6:15). அப்படியானுல் தகப்பனும் மகனும் ஏகமாய் கிறிஸ்துவின் சீஷராயிருந்தார்கள் என்று சொல்லவேண்டியது. வேறு சிலர் இவன் தோல் பதனிடுகிறவனுகிய சீமோனுடைய குமாரனுயிருந்தானென்று அபிப்பிராயப்படுகிறதுண்டு (அப். 9:43). இந்தக் குருத்துரோகியின் தகப்பன் எந்த சீமோனுயிருந்தாலும் இருக்கட்டும். இவன் தன் பெற்ருரின் பெரிய எண்ணத்தைக் குலைத்து தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் இழிவைச் சம்பாதித்து வைப்பான் என்று அவர்கள் எண்ணவே இல்லே. ஒருவேளே இவனே அக்குடும்பத்தில் தலேப்பிள்ளேயாய் இருந்திருக்கலாம்; அல்லவென்று ஆண் மக்களில் இவன் முதலாவதாயிருந்திருக்கலாம். எப்படியும் இவனுடைய கர்ப்ப காலத்தில் நாம் அறியாத ஒரு பெரிய வாழ்வும் சந்தோஷமும் அக்குடும்பத்துக்கு சம்பவித்திருக்கிறது, மற்றப்படி அவனுடைய பெற்ருர் தேவனுக்கு ஸ்துதி என்று அர்த்தமுள்ள யூதாஸ் என்ற பேரைக் கொடுத்திருக்க மாட்டார்கள்.

இவன் தோல் பதனிடுகிற சீமோனுடைய குமாரனுயிருந்தது மெய்யானுல் யோப்பாப் பட்டணத்தில் பிறந்திருக்கவேண்டியது (அப். 9:43). இப்படி அபிப்பிராயப்படுகிறவர்கள் ஸ்காரியோத் என்ற பதம் ஒரு ஊரைக் குறியாமல் தோல் பதனிடுகிறவர்கள் தங்கள் வஸ்திரம் அழுக்காகாதபடி பெரும்பாலும் அரையில் ஒரு தோல் துண்டை குட்டை போல் வைத்துக்கொள்ளுவார்கள் என்றும் அப்படிப்பட்ட தோல் படுதாவில் ஒரு பையும் தைத்திருக்குமென்றும், அதற்கு இஸ்கோர்ட்ஜா என்று பேரென்றும் இந்தப் பதம் மருவி ஸ்காரியோத் என்று வழங்கப்படுகிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். வேறு சிலர் யூதாக் கோத்திரத்தின் தென் கடைகோடியில் மோவாப் தேசத்தின் எல்லேக்குச் சமீபமாயிருந்த 'கேரியோத்' என்ற ஊரில் இவன் பிறந்தவன் என்றும் அந்தப் பேர் பின்காலத்தில் உச்சரிப்புக் கெட்டு

ல்காரியோத்து என்று சாதாரணமாய் வழங்கப்பட்டதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள் (யோசு. 15:25; எரே. 48:24). இதுவே பெரும்பாலும் வேத வித்துவான்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற அபிப்பிராயமாயிருக்கிறது. அப்படியானால் யூதாவின் வட எல்லையை அடுத்த பெத்லகேமில் நீதியின் சூரியன் அவதார ரூபியாய் எழுந்தருளின காலத்தில் அதின் தென்பாகத்தில் அப்பாலகனைத் தேண்டும் வல்லசர்ப்பக் குட்டி யூதாஸ் என்ற பேருள்ள பாலகனுக பூமியில் வெளிப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம்.

யூதாசின் பாலிய வாலிப வரலாறு ஒன்றும் நமக்குத் தெரியாது. அப்போஸ்தலருடைய அட்டவணையில்தான் முதலாவது நாம் இவனுடைய பேரைக் காண்கிறோம். எப்படியும் இவன் சிறு பிராயமாயிருக்கும்போது, பெற்றோர் இவனுடைய பல குணங்களைக் கண்டு அதிசயித்து தங்கள் குமாரன் பேரெடுப்புள்ள ஒருவன்தான் என்று தங்கள் கருத்தில் எண்ணியிருக்கலாம். இவனிடத்தில் பணங்களைச் சம்பாதிப்பதும், காப்பாற்றுவதும், செலவிடுவதுமான குணமிருந்தது. பணக் கணக்கும் வியாபாரப் போங்கும் இவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. இப்படிப்பட்ட ஒருவன் அப்போஸ்தலக் கூட்டத்துக்கு அவசியமாயுமிருந்தது. ஏனெனில் இயேசுவைப் பின்பற்றினவர்கள் தங்கள் ஆஸ்திகளை எல்லாம் விட்டுப்போட்டு அவரை பின்பற்றினபோதிலும், அவருடைய உபதேசங்களைக் கேட்டு மனந்திரும்பின பலர் சீஷரின் சரீர சவாட்சணைக்கேற்ற பண உதவிகளைச் செய்துவந்தார்கள். அந்தப் பணங்களை வாங்கவும், அதைச் செலவிடவும் யூதாஸ் தகுந்த அனுபோகமுடையவனாயிருந்தான். இந்தப் பணப்பையின் அதிகாரத்தை இயேசு யூதாசுக்குக் கொடுத்தாரா? என்பது ஒரு விசேஷித்த கேள்விதான். இயேசு ஒருக்காலும் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கமாட்டார். யூதாஸ் பணந் திருடும் புத்தியுள்ளவனாகவே இருந்தானென்பது அவருக்குத் தெரியும். திருடன் திருடும்படியான உதவியை இயேசு செய்யவேமாட்டார். இந்த வேலையை அவனே அபகரித்திருக்கவேண்டியது. ஒரு வேளை பணச்செலவு வேலையை அவர் அப்போஸ்தலரில்

ஒருவனுக்குக் கொடுத்திருந்தால் அது பிலிப்புவாயிருக்கலாம். ஒருதரம் இயேசு திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு பிலிப்புவை நோக்கி அவர்களுக்கு அப்பம் கொள்வதைக் குறித்துப் பேசியிருக்கிறார் (யோவா. 6:5). பிலிப்பு பார்த்துவந்த பணவேலை தமது பிரசங்க வேலைக்கும் தமது பல விஷயங்களுக்கும் தடையாயிருந்தால் அவர் அதைக் கைவிட்டிருக்கலாம். அச்சமயத்தில் யூதாஸ் அதற்கு நானுச்சுது என்று சொல்லி ஏற்றுக்கொண்டிருக்கலாம்; அல்லது அப்போஸ்தலர் அடிக்கடி சாமான்களை வாங்கும்படி தங்களுக்குள் பலரை பலதரம் அனுப்பினதில் யூதாஸ் எப்போதும் நயமாயும் இலாபமாயும் கொள்ளத் திறமையுள்ளவனென்று கண்டு பண கணக்கு பார்க்கவும் பைதூக்கிச் சுமக்கவும் அவன்தான் சரியானவன் என்று தீர்மானித்து சீஷராய் அவன் கையில் ஒப்புவித்திருக்கலாம். இவன் துவக்கத்தில் நயத்தைக் காட்டி சீஷருடைய கண்ணை மயக்கி அப்பால் அவர்கள் வயிற்றை ஒடுக்கி தன் பண ஆசையை நிறைவேற்றினான். எப்படியும் அவன் பண விஷயத்தில் செய்துவந்த பித்தலாட்டமும், மாறுபாடும் சீக்கிரத்தில் சீஷருக்குத் தெரியவந்தது. அவன் பொதுப் பணத்தைத் திருடுகிறான் என்று பேசிக்கொண்டார்கள் (யோவா. 12:6). இயேசு இந்த உத்தியோகத்தில் அவனை வைக்கவில்லையென்றும் அவன் தானாக இதை அபகரித்துக் கொண்டிருக்கவேண்டும், அல்லது அப்போஸ்தலர் தங்கள் மன இஷ்டத்தின்படி அவனை நியமித்திருக்கவேண்டுமென்றும் நாம் தீர்மானிக்கிறோம். யூதாஸ் இந்த உத்தியோகத்தை எடுத்துக்கொண்டது இயேசுவுக்குப் பிரியமாயிருந்திருக்கமாட்டாது. அவருடைய சம்மதம் அதிலிருந்ததானால் பஸ்காவுக்குரிய ஆயத்தங்களைச் செய்யும்படி கட்டளையிட்ட ஆட்களில் யூதாசும் ஒருவனாயிருக்கலாமே. அப்படியும் அவன் அவர்களில் ஒருவனல்ல, தேவனுடைய சபையின் பண அதிகாரங்களை இக்காலங்களில் நாடித்தேடும் யூதாஸ்ஸ்காரியோத்துகள் அநேகரிருக்கிறார்கள். அவர்கள் தாங்களே பல உபாயத் தந்திரங்களினால் அவ்வதிகாரங்களைத் தங்களுக்கு இழுத்துக்கொண்டு கர்த்தர் எங்களுக்கு இவ்வளவு பொறுப்பான ஊழியத்தைத் தந்தாரென்று சொல்லி

மனம் மகிழுகிறதுண்டு. அந்த மகிழ்ச்சி, பண மகிழ்ச்சியே யன்றி அருள் மகிழ்ச்சியல்ல; பண அதிகாரமுள்ள ஊழியங் களே நாம் நாடுகிறது நல்லதல்ல; அப்படிப்பட்ட வேலைகளே இக்காலத்திலுள்ள யூதாஸ் ஸ்காரியோத்துகள் எனக்கு, என் மகனுக்கு என்று சொல்லி இழுத்துக்கொள்ளுவார்களானால் சந்தோஷமாய் விட்டுவிடவேண்டியது. அப்படிப்பட்ட ஊழியம் கர்த்தரால் வருமானால், அவர் அதினால் நம்முடைய ஆத்துமா இழுக்கப்பட்டு நாசமடையாதபடி தமது கிருபை யையும்கூடத் தருவார். இனி நாம் யூதாசின் குணங்கள், அவனுடைய வார்த்தையினாலும் செய்கையினாலும் விளங்கும் பல வரலாறுகளே வரிசையாக ஆராய்வோமாக.

கிறிஸ்துவின் ஊழிய காலத்தின் கடைசி வாரத்தில்தான் நாம் இந்த யூதாசைப்பற்றிய முதலாம் விபரத்தை அறி கிறோம். இயேசு கடைசி விசையாய் எருசலேமுக்குப் போனபோது பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவ ருக்கு இராவிருந்து பண்ணினார்கள். இந்த விருந்து பஸ்கா பண்டிகைக்கு ஆறுநாளுக்குமுன் நடந்தபடியால் அன்றைய தினம் பாடுபட்ட வாரத்துக்கு முந்தின ஞாயிற்றுக் கிழமையாயிருக்க வேண்டியது. சிலர் இந்த விருந்து யூத ருடைய ஓய்வுநாளாகிய சனிக்கிழமை இரவு நடந்ததாக கணக்கு வைக்கிறதுண்டு. இயேசு வந்தவுடனே ஒரு பெரிய விருந்து வைக்கவேண்டுமென்று இலாசருவின் சகோதரிகள் எல்லாக் காரியங்களையும் ஒழுங்குபண்ணி வைத்திருக்கிறார் கள். இந்த விருந்துக்கு இயேசு தமது சீஷருடனே அழைக்கப் பட்டிருந்தார், இந்தச் செய்தியைக் கேட்டு பல ஜனங்கள் அங்கே கூடினார்கள். சில மாசங்களுக்குமுன்னே கல்லறையி விருந்து உயிரோடெழுப்பப்பட்ட இலாசருவும் அவர்களோ டிருந்தான். அவன் உயிரோடெழுப்பப்பட்ட சந்தோஷத் தைக் கொண்டாடவே இந்த விருந்து அவனுடைய சகோதரிக ளால் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கலாம். இயேசு அன்றையத் தினம் விருந்துக்கு வந்திருக்கிற சமயத்தில் இலாசருவின் சகோதரியாகிய மரியாள் தனக்கு இயேசுவின்மேலுள்ள அன்பையும், இயேசு அவள் வீட்டின்மேல் பாராட்டின தயவையும் நன்கு மதித்தவளாய், கலப்பில்லாத நளதம்

என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். தன் சகோதரன் இயேசுவால் உயிரோடெழுப்பப்பட்ட மகிழ்ச்சியோடு தன்னுடைய ஆத்துமாவின் பாவங்கள் அனைத்தும் அவரால் மன்னிக்கப் பட்டனவென்ற நிச்சயமானது அவள் மனதைத் துள்ளப் பண்ணினதால் தன் ஐசுவரியத்தால் அவரைக் கனப்படுத்தி தன் கிரீடமாகிய தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். இதினால் தன்னுடைய எல்லா வகையான மேன்மையும் பெருமையும் கிறிஸ்துவின் பாதத்துக்கு மிஞ்சினதல்லவென்று காண்பிக்கப் பிரயாசப்பட்டாளாக்கும். விருந்து வீடுகளில் சந்தனம், சவ்வாது, அத்தர், பனிநீர் முதலிய வாசனைகள் சம்பூரணமாய் பரிமாறப்படுகிறதுண்டு; இந்த பரிமள தைலம் அப்படிப்பட்ட பொதுவான வாசனைச் சரக்காயிராமல் கிறிஸ்துவுக்கென்று ஆயத்தம் பண்ணப்பட்ட விசேஷ சரக்காயிருந்தது. ஒருவேளை மரியாளே இந்த தைலத்தை இறக்கி வைத்திருக்கலாம், அல்லது வாங்கி வைத்திருக்கலாம், எப்படியும் இந்த நளது தைலம் இந்து தேசத்தை இவ்வுலகத்திலுள்ள எல்லா தேசங்களைப் பார்க்கிலும் கனப்படுத்திவிடுகிறது. ஏனெனில் நாம் பூதத்துவ சாஸ்திரிகளால் அறிகிறபடி, நளதுசெடி இந்தியாவிலுள்ள ஒரு பூண்டு. இது இமயமலைச் சார்பிலும், கங்காநதி தீரங்களிலும் இன்னும் பல இடங்களிலுமுண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு தேசங்களில் இந்த அரிய பூண்டு இல்லை. ஒருவேளை நமது தேசத்திலுள்ள தவனமருக்கொழுந்து, அல்லது வெட்டிவேரிலிருந்து இறக்கப்பட்ட தைலமாயிருக்கலாம். நளது என்று அக்காலத்தில் வழங்கப்பட்ட பேர் பின்பு மாறியிருக்கலாமே. இந்த நளது தைலத்தால் இந்தியா உலக இரட்சகருக்கு தைலபானமாகிவிட்டதென்று சொல்லத் தடையுண்டா? இந்தியாவின் இன்பம் இம்மானுவேலின் பாதத்தின் காணிக்கையாயிருக்கிறதென்பது ஒவ்வொரு இந்தியனும் சந்தோஷப்படத்தக்க விஷயம்தான்.

மரியாள் அச்சமயத்தில் தைலம் பூசினது எல்லாருடைய நாசியிலும் இன்பமான வாசனையைக் கொடுத்து அவர்கள்

மனதை சந்தோஷமான வார்த்தைகளினால் நிரப்பிற்று. ஆனால் ஒருவனுடைய நாசிக்கும் மனதுக்கும் அது கோபத்தைக் கிளப்பும் வாசனையாயிற்று. அவன் பேர் குருத்துரோகியாகிய யூதாஸ்தான். கிறிஸ்துவைக் கனப்படுத்துவது இந்த நரகத்து மகனுக்குப் பிடிக்கவில்லை. இராஜாக்களுக்கும் கிடையாத கனம் இவருக்குக் கிடைக்கிறதே என்ற எரிப்பு இவனை வதைத்தது. வீடு முழுவதும் பரிமளத்தால் நிரம்பி அவ்வீட்டிலிருந்த ஒவ்வொருவரும் மகிழ்ச்சிகொள்ளுகையில் இந்த குருத்துரோகி எழுந்து, ஐயோ மரியாளே என்ன புத்தி செய்தாய்! 'இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன?' என்றான். இந்த வார்த்தைகளால் தைலம் வார்த்த மரியாளை, பொருளின் விலையை அறியாத மூட்டாள் என்றும், தரித்திரரைப்பற்றி நினைவில்லாத கடின நெஞ்சமுள்ளவளென்றும் காட்டி தன்னைப் புத்திமானும் பரோபகாரமுள்ளவனுமாகப் பேசுகிறான்.. இந்த மூடன் தைலம் பூசப்பட்ட ஆளை அறியவுமில்லை, அதின் நோக்கத்தை உணரவுமில்லை. இவன் போட்ட விலையின்படி இந்தத் தைலம் சுமார் நூறு ரூபாயாகிறது. உள்ளபடி அதற்கு அதிகமாகவே இருக்கவேண்டியது. இந்தக் கேட்டின் மகன் மரியாள் வீட்டுக்கு விருந்துண்ண வந்தானு? செல்லும் செலவைக் கணக்கெழுத வந்தானு? விருந்துக்கு வந்தவன் தன் வேலையைப் பாராமல் அந்த வீட்டை கொள்ளையடிக்க வந்தவன்போலிருக்கிறதல்லவா? 'இவன் தரித்திரரைக் குறித்து கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல் அவன் திருடனானபடியாலும் பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியாலும் இப்படிச் சொன்னான்' என்று பார்க்கிறோம்; 'கள்ளனுக்குத் திருட்டு புத்தி பாடம்' என்றொரு பழமொழியுமுண்டு. இந்தக் கள்ளன் இம்மட்டும் பணப்பையை வைத்துக்கொண்டு நாள்தோறும் ஏழைகளுக்கென்று கொஞ்சம் கணக்குப்போட்டும் எடுத்துக்கொள்வான்போலிருக்கிறது. அன்றையத்தினம் வீணாய்ப் போனதுபோல அவன் நினைத்துக்கொண்ட பணமும் தன் கையில் வந்திருந்தால் ஏழைகள் பேரைச் சொல்லி கண்டபடி திருடலாமென்று நினைத்திருக்கலாம். ஐயோ திருட்டு புத்தியுள்ள யூதாசின்

சாமர்த்தியமான நியாயத்தைப் பார்த்தீர்களா? இப்படி இக் காலத்திலும் பிறர் பொருளைச் சரியான நியாயம் சொல்லி கள்ளத்தனமாய்த் திருடுகிற யூதாசுக்குள்ளிருக்கிறார்கள். 'அப்பொழுது இயேசு இவளை விட்டுவிடு, என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்' என்று சொன் னார். 'இவளை விட்டுவிடு' என்ற வாசகத்தால் யூதாஸ் ஓடிப் போய் அவள் கையைப் பிடித்துத் தடுத்து இன்னும் பூசாமல் புட்டியிலிருக்கிற தைலத்தை காப்பாற்றி அதை விலைப் படுத்தி தன் பைக்குள் போட்டுக்கொள்ள முயன்றானென்றும் அபிப்பிராயப்படலாம். இதினிடையில் நாம் வேறொரு போதனையை அறிந்துகொள்ளவேண்டியது. இக்காலத்திலும் சில கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்கடுத்த அலங்காரங் களுக்கும் கட்டடங்களுக்கும், திரண்ட பணங்களைச் செல விடுவது புத்தியீனம் என்று சொல்லி அந்தப்படி செலவிடப் படுகிறதை வேறு நல் நோக்கங்களில் செலவிடலாமென்பார் கள். இவர்கள் பழைய யூதாசின் கூட்டத்தாரேயன்றி வேறல்ல.

யூதாசின் மனப்போக்கை இயேசு தடுத்தது அவனுக்குச் சொல்லமுடியாத மனநோவைக் கொடுத்தது. இவ்வளவு ஜனங்களின் மத்தியில் நம்மை எவ்வளவேனும் கனப்படுத்தா மல் வெட்கப்படுத்திவிட்டாரே என்று உடனே தன் நெஞ்சில் கொர்வம்கொண்டு, அதுமுதல் நான் இவரைப் பகிரங்கமாய் அவமானத்துக்குட்படுத்த வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான். இந்தக் கெடுபுத்தியை அவன் நிறை வேற்றும்படி துணிந்ததற்கு இயேசு மரியாளைப் புகழ்ந்தது ஒரு காரணமாயிருந்தது. இதினிடையில் இயேசு இலாசருவை உயிரோடெழுப்பின நாள்முதல் எருசலேமி லுள்ள பல பிரபுக்களும் ஆசாரியரும் அவரை விசுவாசித்து அவர் பட்சமானார்கள். அதனாலே யூதமார்க்கத்துக்குப் பெரிய நஷ்டமுண்டாகிறதென்பதை யூதர் அறிந்து இயேசுவையும் இலாசருவையும் கொலைசெய்துபோட ஆலோ சனைப்பண்ணி ஒரு விசேஷித்த பண்டிகை அடுத்து வந்த படியால் அச்சமயத்தில் தங்கள் ஆலோசனையை முடிக்கத்

தீர்மானித்து அவரைக் காட்டிக்கொடுப்பவனுக்குப் பணம் கொடுப்பதாக விளம்பரம் பண்ணினார்கள். பண்டிகை வந்த போது இயேசுவை ஜனங்கள் மதித்துவந்ததையும், நேசித்த தையும் கவனித்து தற்சமயம் நாம் எண்ணின ஆலோச னையை நிறைவேற்றப்போனால் பெருங்கலகமுண்டாகும். ஏனெனில் எல்லாரும் அவர் பட்சமே இருக்கிறார்களென்று சொல்லி, தங்கள் தீர்மானத்தை வேறொரு சமயத்தில் முடித்துவிடலாமென்று கடத்திவைத்தார்கள். யூதாசு எப்படியோ இதன் விபரங்களை அறிந்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும்படி அவர்களையடுத்து, 'நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு எவ்வளவு பணம் கொடுக்கிறீர்கள்?' என்று கேட் டான். துவக்கத்தில் கிறிஸ்துவின் எதிரிகள் காலத்தைக் கடத்தி வைத்தபடியால் யூதாசின் விண்ணப்பத்திற்கு உடனே சம்மதிக்கமாட்டார்கள். அவர்களுடைய ஆட்சே பனைகளையெல்லாம் இவன் தன் ஆலோசனைகளால் மடக்கி, அவர்கள் செய்ய நினைத்த தீமைகளை சீக்கிரம் செய்யும்படி துரிதப்படுத்தினதுபோலிருக்கிறது. அவர்களும் இப்படிப் பட்ட துணையாளை நாம் இப்போது விட்டால் இனி ஒரு போதும் கிட்டாதென்று ஆலோசனைப்பண்ணி, நீ அவரைக் காட்டிக்கொடுத்தால் உனக்கு முப்பது வெள்ளிக்காசு தரு வோம் என்று உடன்பட்டார்கள்; அவனும் நல்லது என்று சம்மதித்துக்கொண்டான். இந்த யூதாஸ் மரியாள் பூசின தைலத்துக்கு முந்நூறு வெள்ளிக்காசு, அல்லது சுமார் நூறு ரூபாய் விலைபோட்டு இயேசுவுக்கோ முப்பது ரூபாய் விலை போட்டான். இயேசு மரியாள் தமது பாதத்தில் பூசின தைலத்தில் மூன்றிலொரு பங்குக்குரிய மகிமைக்கு மாத்திர முடையவனென்று யூதாசின் மனதில் பட்டது என்ன ஆச்சரியமாயிருக்கிறது. சாத்தானின் மகனுக்கு தேவ னுடைய குமாரனை விலைமதிக்கத் தெரியுமா?

இயேசு அகப்படுகிறதால் முப்பது ரூபாய் செலவாகிறது யூதருக்குப் பெரிய காரியமா? அல்லவே. அதுமுதல் இயேசு வைக் காட்டிக்கொடுக்கும்படி யூதாஸ் சமயம் பார்த்துக் கொண்டே யிருந்தான் என்று பார்க்கிறோம். ஐயோ

இயேசுவைப் பிடிக்க சமயம் பார்க்கவும் வேணுமா? திருடரையும், வேவுகாரரையும், துரோகிகளையும் சமயம் பார்த்துப் பிடிப்பார்கள். இயேசு அப்படிப்பட்டவரா? இயேசுவைப் பிடிக்க அவர்மட்டில் சமயம் பார்க்கவேண்டியிருந்ததில்லை. அவரை ஆலயத்திலும், தெருவிலும், உள்ளூரிலும், அயலூரிலும், தரையிலும், மலையிலும், ஜலத்திலும் காணலாம். அவர் இரவிலும் அகப்படக்கூடும், பகலிலும் அகப்படக்கூடும்; அவரைக் காட்டிக்கொடுப்பது யூதாசுக்கு வருத்தமில்லை. அவன் சமயம் பார்த்ததெல்லாம் ஜனங்களின் சம்பந்தமாயிருந்தது. ஜனசந்தடி இல்லாமல் அவர் தனித்திருக்கிற சமயத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதுதான் அவன் சிந்தையிலிருந்தது.

இயேசுவுக்கு துரோகம் செய்யும்படி அவன் செய்துவந்த பிரயத்தனங்களை எல்லாம் அவர் நன்றாய் அறிந்திருந்தார். ஆனால் அவர் அக்காலத்தில் நிறைவேற இருந்த பிதாவின் தீர்மானத்தை நன்றாய் அறிந்திருந்தபடியாலும் அதற்கென்று ஆவலோடு காத்திருந்தபடியாலும் இவனுடைய பிரயத்தனத்தை ஒருபொருட்டாக எண்ணினதுமில்லை, அதையிட்டு மனக்கவலை கொண்டதுமில்லை; என்றாலும் தமக்கு நேரிடப்போகிறதைக் குறித்து கவலைப்படாத அவர், அதனால் யூதாசுக்கு நேரிடப்போகிற பெரும் சாபத்தையறிந்து அனுதாபப் பட்டாரென்பதற்கு சந்தேகமில்லை.

யூதாஸ் அன்றிரவு யூதரோடு ஒப்பந்தம்பண்ணி திரும்பி வந்து முன்போல தன் வேலைகளை நடப்பித்து வந்தான். மறுநாள் அதிகாலையில் இயேசு பெத்தானியாவிலிருந்து ஒரு அரசனைப்போல கோவேறுகழுதையின்மேலேறி எருசலேமுக்கு எழுந்தருளியானார். அப்போது முன்நடப்பாரும் பின்நடப்பாரும் அவருக்கு ஓசன்னா பாடி, வஸ்திரங்களை விரித்து அதன்மேல் கோவேறுகழுதையை நடத்தி, மரங்களின் கிளைகளை வழிகளில் தெளித்து, குருத்தோலைகளைப் பிடித்து, ஆர்ப்பரித்து ஊர்க்கோலம் நடத்தினார்கள். இந்த எல்லாக் காட்சிகளும் யூதாசின் மனதை வருத்தப்படுத்தினதென்பது நிசம். அவருக்குத் தீமைசெய்த பரிசேயர் முதலாய் இதைப் பார்த்தபோது பிரமித்து 'நீங்கள்

செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா, இதோ உலகமும் அவனுக்குப் பின்சென்று போயிற்றே, என்று அறிக்கையிட்டார்கள். ஆனால் யூதாசின் மனம் இவைகளால் அசையவில்லை. இவன், இது சமயமல்லவென்று நினைத்து, தகுந்த சமயம் பார்க்கிற மனஸ்திதியில் மூன்று நாலு நாளிருந்தான். இதற்குள்ளாக யூதருடைய பஸ்கா பண்டிகை வந்தது. இந்த நாட்களில் இயேசுவும் மற்ற சீஷரும் நாடோறும் தங்களுடைய சுவிசேஷ வேலையைச் செய்துவந்தார்கள். யூதாசோ அவர்களோடு சேர்ந்து வேலை செய்தாலும், அவன் கவனமும், சிந்தையும் இயேசுவை ஜனக்கூட்டமில்லாத வேளையில் காட்டிக்கொடுக்கிற நோக்கத்திலிருந்தது. அவன் தனக்குக் கிடைத்த பணத்தை எந்த இடத்தில் பத்திரம்பண்ணி வைத்திருந்தானே தெரியவில்லை.

பஸ்காபண்டிகையின் காலையில் யூதாசு எங்கே போனானே தெரியாது. ஆனால் மற்ற சீஷர் அதை வழக்கமான சடங்குகளோடு கொண்டாடும்படி தகுந்த ஆயத்தங்களை செய்தார்கள். எப்படியும் அவன் பஸ்காவைக் கொண்டாடும்படி ஆயத்தப்படுத்தியிருந்த வீட்டில் மற்றவர்களோடு இருந்தான். அது மேல்மெத்தையாயும் கம்பளம் முதலானவைகள் விரித்திருந்த விஸ்தாரமான அறையாயுமிருந்தது இயேசு பஸ்காவைப் புசித்துக்கொண்டு இருந்தபோது, யாதொரு காரணமுமில்லாமல், அவருடைய முகரூபும் சம்பாஷணையும் வேறுபட்டது. அவர் ஆவியிலே கலங்கி 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்' என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார். இந்த வார்த்தை அந்தக் கூட்டம் முழுமையும் கலங்கப் பண்ணிற்று. இதற்குமுன் இயேசு மூன்று வெவ்வேறு தடவைகளில் தமக்குண்டான பாடுகளைக் குறித்து சொல்லியிருந்தார்.[1] அதெல்லாம் பொழுதுப்போங்காக இருந்தது.

---

[1] (1) அவர் மறுரூபமாவதற்குமுன் (மத். 16:21; மாற். 8:31; லூக். 9:22). (2) மறுரூபமானபின்பு (மத். 17:22, மாற். 9:30; லூக். 9:43). (3) கடைசியாக எருசலேமுக்குப் போகும் வழியில் (மத். 20:17; மாற். 10:32–34).

இப்பொழுது தமக்கு முன்னிருந்த பன்னிருவரையும் தொடத்தக்கதாக 'உங்களில் ஒருவன்' என்று சொன்னார். ஆதலால் இது அவர்களைக் கலங்கப்பண்ணுவது நியாயம் தானே. மேலும் அது இரட்டித்த ஆணையோடே கூறப் பட்டதால் அவர்கள் கலக்கமும் சாதாரணமாயிருக்கவில்லை. அப்பொழுது அவர்கள் துக்கமடைந்து நானே, நானே வென்று ஒவ்வொருவராய் அவரிடத்தில் கேட்கத் துணிந் தார்கள். இப்படிப் பன்னிருவரும் கேட்டு முடிகிறதற் குள்ளாக, சிலர் இயேசுவையே நோக்கி ஆண்டவரே அவன் யார் என்று கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். அவர்க ளுடைய அதிசயம் அப்படி கேட்கப்பண்ணிற்று. ஆதலால் நானே நானேவென்று கேட்கும் வரிசை யூதாசுக்கு வருகிற தற்குள்ளாக, இயேசு, இடையில் அவரைத் தொந்தரவு பண்ணி கேட்டவர்களுக்கு ஒரு மறுமொழி கொடுக்க வேண்டியதாயிற்று. அப்போது இனி வாயால் பேர் சொன் னால் போதாது என்றும் செய்கையால் உணர்த்துவது நல மென்றும் அவர் கருதி 'நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனே அவன்தான்' என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து யூதாசுக்குக் கொடுத்து, மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார், ஆகிலும் 'எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ, அந்த மனுஷன் பிறவாதிருந்தானால் அவனுக்கு நலமா யிருக்கும்' என்றார். யூதாஸ் துணிக்கையை வாங்கி இவ்வளவும் கேட்ட பின்பு இயேசுவை நோக்கி, போதகரே நானே? என்றான். அதற்கு அவர் 'நீ சொன்னபடிதான்' என்றார். இப்படி சொன்னவுடனே யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான் என்று வாசிக்கிறோம். இதின் கருத்து இயேசு வின் எச்சரிப்பையும் உணர்த்துதலையும் யூதாஸ் அசட்டை பண்ணி, அவர் என்ன சொன்னாலும் சொல்லட்டும் என்ற அடம் சாதித்து சமயத்துக்குத்தக்கதாய் ஆண்டவரே நானே என்று மற்றவர்களைப்போல் கேட்டு உள்ளத்திலே இவரைக் காட்டிக்கொடுக்கவே கொடுப்பேனென்று தீர்மானம்பண்ணி னான் என்பதுதான். இயேசுவோ இவனுடைய குற்றத்தைத் தாம் நன்றாக, அறிந்திருக்கிறதென்பதை யூதாஸ் அறிந்து

கொள்ளட்டும் என்று சகலத்தையும் திறந்து சொன்னார். யூதாசு பட்சமாய்ப் பேச விரும்பும் பதிதர் இவ்விஷயத்தில் இயேசுவைக் குற்றப்படுத்தி, அவர் இவ்வளவு வெளிப்படையாக யூதாசை வெட்கப்படுத்தாமல் தனித்துப் புத்திசொல்லியிருந்தால் ஒருவேளை அவன் சீர்ப்பட்டு தான் செய்ய நினைத்த பொல்லாப்பை செய்யாதிருந்திருக்கலாம் என்று சொல்லுவார்கள். இது மனுஷ போங்கான நினைவேயன்றி வேறல்ல. யூதாசின் பூர்வோத்தரத்தை அவனைவிட நன்றாய் இயேசு அறிந்திருந்ததோடு, அதனுடன் சம்பந்தப்பட்டிருந்த தேவனுடைய அநாதி ஆலோசனைகளையும் அறிந்திருந்தார். அவர் தமக்கு வரும் நிஷ்டூரங்களையும் துன்பங்களையும் குறித்து, எவ்வளவேனும் கவலைப்படாமல் அத்துன்பத்தைச் செய்யத் தங்களை ஏதுக்களாக்கும் ஆட்களுக்கு வரும் முடிவை மாத்திரம் எண்ணி அனுதாபப்பட்டார். யூதாசின் தலை எடுப்பால் தேவ தீர்மானங்களும், பூர்வ தீர்க்கதரிசனங்களும் நிறைவேறுதலைப் பெற்றாலும் அவன் மட்டுக்கு அப்பிரயத்தனங்களுக்குத் தானாக முந்திக்கொண்டது சாபவழியாகவே இருந்தது.

கடைசியாக இயேசு நீ செய்கிறதைச் சீக்கிரம் செய் என்று சொல்லி அனுப்பினார், இவ்வாசகத்துக்குள்ளடங்கின பல நுட்ப வரலாறுகள் இன்னதென்று யூதாசுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும், மற்றவர்கள் அதை வேறுவிதமாய்த் தாற்பரியப்படுத்தி, பணப்பையை அவன் வைத்திருந்தபடியால் பண்டிகைக்கடுத்த செலவுகளையும், ஏழைகளுக்குத் தருமங் கொடுப்பதையும் குறித்துப் பேசி அவனைத் துரிதப்படுத்துகிறதாக நினைத்தார்கள். அவனே இனி இவர் முகத்தில் விழிக்கமாட்டேன் என்று சொல்லுகிறவனைப்போல் திடீரென்று எழுந்து போனான். யூதாசே! யூதாசே, எங்கே போகிறாய்! ஆ, இது நீ எழுந்து போகவேண்டிய நேரமா? நீ தரையில் விழுந்து அழவேண்டிய நேரத்தில் எழுந்து போகிறாயே. உன் மனச்சாட்சியை என் அருமை இரட்சகரின் கனிந்த குரலும் குளிர்ந்த சொல்லும் குளிரப்பண்ணக் கூடாதே போன அந்தரங்கமென்ன? ஆ, நீ நரகத்தின் அக்கினியால் கொளுத்தப்பட்டு வேகிறாயே. யூதாசே

வெளியே கடந்து போகாதே; உன் தீர்மானங்களை எல்லாம் இப்பொழுதே மாற்று; நீ வாங்கின முப்பது வெள்ளிக்காசு உன்னை முப்பது நாளைக்குக் காப்பாற்றமாட்டாது; நீ என் இயேசுவின்பேரில் கோபம்கொள்ளாதே. உன்னைக் குணப் படுத்தும்படி அவர் உன்னை நடத்தினதேயன்றி வேறல்ல. உன் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினால் இயேசு வின் கண்களில் கிருபைக் கிடைக்கும்.—நீ இக்கூட்டத்தை விட்டுப் போகத்தான் செய்வாயாக்கும்; நல்லது போ, உன் முடிவு என் கண்ணைப் பிழிந்து நீராய் இறைக்கும். துணிந்த பாவிகள் இப்படியும் செய்வார்கள், இதற்கு மிஞ்சியும் செய் வார்கள். அவர்களுடைய முடிவு அழிவுதான்.

யூதாஸ் போன சமயம் இராக்காலமாயிருந்தது. அப் பொழுது சுமார் எட்டுமணி இருக்கலாம் என்று தோன்று கிறது. அவன் மாத்திரம் போகாமல் மனந்திரும்பும்படி பிரயாசப்பட்டு, அக்கூட்டத்தோடு பின்னும் இருந்திருப்பா னால், அப்பால் கிறிஸ்து சொன்ன பல நல்லுபதேசங்களைக் கேட்டு நிலையான மனந்திரும்புதலை அடைந்திருக்கலாம். அவன் உடனே போய்விட்டதால், ஒருவரிலொருவர் அன்பா யிருங்களென்ற புதிய கட்டளையையும், பேதுருவின் மறு தலிப்பின் வரலாறையும், பரிசுத்த இராப்போசன பந்தியின் வாழ்வையும், பரிசுத்த ஆவியைப்பற்றிய நல்ல வாக்குகளை யும், கிறிஸ்துவின் அந்நியோந்நியத்தை உணர்த்தும் போதனையையும், அவருடைய கடைசியான ஒருமைப்பாட் டின் ஜெபத்தையும் இழந்தே போனான்.

யூதாசோடு நாம் போனால் அவனை இப்போது எங்கே காணலாம்? அவன் பிரதான ஆசாரியர், வேதபாரகர் முதலியவர்களுடைய வீடுகளின் கதவைத் தட்டி ஆட்களைத் திரட்டுகிறதும், ஆயுதங்களைச் சேர்க்கிறதும், கயிறுகளைத் தேடுகிறதும், பந்தங்களைக் கொளுத்துகிறதுமான வேலையி லிருக்கிறதாகக் காணலாம். அவன் ஊருக்குட் செய்த அமளிகளையெல்லாம் அறிந்த இயேசு சுவாமி பொறுமை யோடு தமது போதனைகளைச் செய்து, ஸ்தோத்திரப் பாட் டோடு தமது பூலோக வேலையை முடித்து, கெத்செமனே

யென்ற தோட்டத்துக்குப் போகிறார். இந்தத் தோட்டத்தை யும், கல்வாரி மலைமேட்டையும், வானதிதேவன் தமது குமார னுடைய யுத்த ஸ்தலமாகத் தெரிந்துகொண்டார், கெத்சே மனேயில் வேதாளத்தோடும், கல்வாரியில் மனுமக்களோடும் இயேசு போர்புரிய வேண்டியதிருந்தது. பாதாள வேதாளம் ஆதிகாலத்தில் செழிப்புள்ள ஏதேனில் வந்து மனுமக்களைக் கெடுத்தானே; தேவன், தமது குமாரன் அந்த வேதாளத்தை ஒரு தோட்டத்துக்குள் வெல்லச் சித்தம்கொண்டாராக்கும்; பாதள பூதகணங்கள் அணிவகுத்து நின்ற கெத்செம னேக்கு, தேவகுமாரன் வெறுங்கையாயும், ஒண்டியாயும் போய் ஜெபத்தை ஆயுதமாகப் பிரயோகித்து சுமார் மூன்று மணிநேரம் ஆவிக்குரிய பெரும்போர் புரிந்தார். அந்தப் போர்வேளையில் அவர் முழங்காற்படியிடவும், சாஷ்டாங்க மாய் விழவும், முகம் குப்புறக் கிடக்கவும், பெருமூச்செறிய வும், கண்ணீர் சொரியவும், பெருஞ் சத்தமிடவும், வியாகுலப் படவும் நேரிட்டது. இந்தப் போரை மனுஷன் ஒருவனும் கண்டதில்லை, கண்டாலும் அதின் உள்ள தன்மையை உணர்ந் தறிந்துகொள்ளவும் கூடாது; ஆவியின் பிரகாரமாக அவ ரடைந்த கடும்போரை பூதகணங்களும், இயேசுவும் தேவ தூதரும், தேவனும் மாத்திரம் அறிந்துகொண்டார்கள்; கடைசியாக வானத்திலிருந்து ஒரு தேவதூதன் வந்து அவரைத் தேற்றித் தைரியப்படுத்தும் வரையும், அவர் தரையிலிருந்து எழும்ப இயலாமல் கிடந்தார். ஆ! என் இரட்சகர்! கெத்செமனே கோனே! உமக்கு வியாகுலம் என்னத்துக்கு! மனநோவு என்னத்துக்கு! கண்ணீர் என்னத் துக்கு! நான் அநுபவிக்கவேண்டியதை எல்லாம் நீர் அநுப விக்கும் காரணமேன்? காரணமேன்? உன்னை இரட்சிக்கும் படிக்கே—ஸ்தோத்திரம் இயேசுவே! ஸ்தோத்திரம் உமக்கு, நான் உம்மை எந்நாளும் நேசிப்பேன் ஐயா!

இவ்வண்ணம் நாம் இயேசுவைத் தொடர்ந்து போவதுண் டானால், யூதாஸ் நமது கண்ணுக்கு மறைந்துபோவான், ஆதலால் நாம் யூதாசைச் சற்று பின்தொடர்ந்து அவன் வரலாறுகளை இன்னும் ஆராய்வோமாக. இயேசு இந்தத் தோட்டத்துக்கு வந்துவிட்டதை யூதாஸ் அறிந்து, தான்

எருசலேமில் திரட்டின புதுச் சேனையோடு கெத்செமனேக்கு வந்தான். அவன் வருகிறதை, இயேசு ஞானதிருஷ்டியிலே கண்டு, தோட்டத்தில் தம்மோடிருந்த சீஷரை நோக்கி, வேளை வந்துவிட்டது, இதோ நான் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப்போகிறேன். என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் வந்துவிட்டான், எழுந்திருங்கள் போவோம் என்றார். இதினூலே யூதாஸ், மற்றவர்களைப் பின்னே நடந்து வரச்சொல்லி, தான் அதற்குச் சம்மதப்படாதவன்போல் சீஷருக்கு விளங்கும்படி சில நேரத்துக்கு முந்திவந்தான்போலிருக்கிறது. கெத்செமனே தோட்டம் ஒரு மலையடிவாரத்திலிருந்தது. இவர்கள் மலையிலிருந்து தங்கள் பந்தங்களோடு சீக்கிரமாய் இறங்கினார்கள். மலை இறக்கமும், அவர்கள் ஆத்திரமும், எரிச்சலும் அவர்களை அடிவாரத்துக்குத் தள்ளிவிட்டது; இல்லை பிசாசுக்கள் அவர்களுக்குட் பிரவேசித்து அவர்களை மலையிலிருந்து சீக்கிரம் தள்ளிவிட்டதென்று சொன்னாலும் குற்றமில்லை. இச்சமயத்தில், நாம் அவர்களைப் பார்த்தால் அதிகாலையின் மகனுகிய விடிவெள்ளி வானத்திலிருந்து என்னமாய் விழுகிறானென்றும், பேலியாளின் பிள்ளைகள் பந்தம் பிடித்துப் பாதாளம் போகிறார்களென்றும், பக்தி விநயமாய்ச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. இந்த அரிய காட்சி ஒருவேளை சீஷருக்குச் சிம்சோனுடைய சரித்திரத்தை நினைப்பூட்டி, யாரோ பழைய சிம்சோனைப் போல் நரிகளைப் பிடித்து வாலோடு பிணைத்து, பந்தம் கட்டி வேடிக்கை பண்ணுகிறார்களென்று நினைத்திருக்கலாம்; ஐயோ ஒருவகையில் இது நரிகளுடைய பந்தம்தான். யூத நரிகளும், ரோம நரிகளும் ஏகமாய்க் கூடி பந்தம் பிடித்து இயேசு என்னும் தேவாட்டுக்குட்டியை, அந்த வனத்தில் பிடித்துப் பீறிப்போடும்படி திரண்டு வருகின்றனவென்று சொல்வதில் தோஷமில்லை. இவையனைத்தையும் திட்டவட்டமாய் ஒழுங்குப்படுத்தித் திரட்டிக்கொண்டுவந்த யூதாசின் திறமை இதனால் விளங்குகிறதோடு, அவனுடைய ஆத்தும நிலைமையின் தாழ்வான ஸ்திதி யின்னதென்பதும் தெளிவாகிறது. கிறிஸ்துவைக் கனப்படுத்தும்படி திரண்ட சேனையைச் சேர்க்கவேண்டிய இவனே, அவரைக் கைதியாக்கும்படி இந்தத் திரள் சனத்தைக் கொண்டுவருகிறான். அவரைக்

கனப்படுத்துகிறதில் முந்தாத இவன் அவரைக் கனவீனம் பண்ணுகிறதில் முந்திக்கொள்ளுகிறான். இவ்வண்ணம் கிறிஸ்து சபைகளில் பலரைத் திரட்டி தன்னை அதற்குத் தலைவனாக்கி, திருச்சபைக்கு விரோதமாய் கலகம்பண்ணித் தங்களுடைய கவுரதைகளைச் சம்பாதிக்கிற குருக்களு மிருக்கலாம். இயேசு தமக்கு நேரிட்ட சரீரப் பாடுகளாகிய விசாரணை, வாரடி, உமிழ்நீர், முள்முடி, சிலுவைப்பங்கி, பரி யாசம், சிலுவை சுமத்தல், சிலுவையில் ஏறுதல் ஆகிய இவை களைப்பற்றி எவ்வளவேனும் சஞ்சலப்பட்டு அபயமிடாமல், இந்த யூதாசின் துரோகச் செய்கையைக் குறித்து மாத்திரம், அடிக்கடி அநுதாபப்பட்டுப் பேசியிருக்கிறார். ஏனெனில், அவனால் இருதயத்திலுண்டான பாடுகள் அவருடைய சரீரப் பாடுகளை யெல்லாம் ஒன்று மில்லாததாக்கிவிட்டது.

முந்திவந்த யூதாஸ், கெத்செமனே தோட்டத்தின் வாச லண்டையிலிருந்த சில சீஷருடன் சமாதான வார்த்தை களைப் பேசிக்கொண்டு நிற்கலாம். இதற்குள்ளாக நாம் சொன்ன யூத நரிகளும், ரோம நரிகளும், பந்தங்களோடு அங்கே வந்து கூடினார்கள். இயேசுவும் உள்ளிருந்து வெளியே வந்து அவர்களைச் சந்தித்து, எதிர்கொண்டுபோய் யாரைத் தேடுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு 'நான்தான்' என்றார். நான்தானென்று அவர் சொன்னவுடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். இதில் இயேசுவின் தெய்வீகத்தின் சுடர் வீசுகிறதல்லவா? சத்துருக்களுக்கு ஒளித்தோடவேண்டிய இவர்தானே எதிர்கொண்டுபோகிறதும், தன் தலையை தற்காத்துக் கொள்ளும்படி மௌனஞ்சாதிக்கவேண்டிய இவர், முந்தி அவர்களை விலுவுவதும், தாமே தம்மைக் காட் டிக்கொடுக்கிறதும் என்னவாயிருக்கிறது. இப்படி ஒரு திருடன் அல்லது மோசக்காரன் செய்வானா? நான்தா னென்று அவர் சொன்னவுடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தது அதிலும் அதிக அதிசயமல்லவா? ஓய் சேவகரே, வீரரே நீங்கள் விழும்படி உங்களைத் தாக்கின தென்ன? உங்கள் நெஞ்சின் பயமோ, நீங்கள் கேட்ட

சத்தத்தின் அதிர்ச்சியோ? தேவ எச்சரிப்போ? அவருடைய முகத்தின் மகிமையோ? அது என்னவாயிருந்தாலும் அதினால் கிறிஸ்துவின் மகிமை விளங்குகிறதேயன்றி வேறல்ல. ஒருவேளை நீங்கள் செய்யப்போகிற வேலையையும், தொடப்போகிற ஆளையும் சமானியமானவரென்று எண்ணவேண்டாம் என்று அவர்களுக்கு அறிவிக்கிறது போலிருக்கிறதென்று சொல்லலாமே. அவரைக் காட்டிக் கொடுக்கிற யூதாசும் அவர்களோடு நின்றான். அவனும் கும்பலோடு கும்பலாய் விழுந்திருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. இம்மட்டும் குணப்படாத யூதாசுக்கு இது எம்மாத்திரம்.

இச்சமயத்தில் கிறிஸ்து ஓடிப்போயிருக்கலாமே, ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் ஓடிப்போனது மெய்யானால், நானும் நீயும் இரட்சிக்கப்படக் கூடாதே! அவர் தம்மையல்ல, நம்மை நாடிவந்ததால் தாமாய் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கச் சித்தங்கொண்டார். மயங்கி விழுந்த சத்துருக்கள் சற்றுநேரம் பொறுத்து எழுந்து என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள். ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள் தாங்கள் முன் சொன்னதுபோல நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக, நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே, என்னைத் தேடுகிறதுண்டானால் இவர்களைப் போகவிடுங்கள் என்றார். இதினாலே மயங்கி விழுந்து எழுந்த சேவகர் மதிகெட்டு இயேசுவை விட்டுப்போட்டு, அவரவர் உத்தேசப்படி ஒவ்வொரு சீஷனைப் பிடித்து, இவன்தான் இயேசுவென்று கட்டிவைத்திருந்தார்கள் போலிருக்கிறது. இச்சமயத்தில் யூதாசும் தட்டுக்கெட்டுத் தடுமாறி யலைந்தானென்பதற்குச் சந்தேகமில்லை. கடைசியாக யூதாஸ் எல்லாச் சந்தேகத்தைத் தீர்க்கவும், தன் பணத்தைத் தக்கப்பண்ணவும் யோசித்து, அவன் முன் சொல்லியிருந்த குறிப்பின்படி முத்தமிட இயேசுவை நெருங்கினான். அவன் கைகள் அவரைத் தழுவுமுன்னே, இயேசு அவனைப் பார்த்து, சிநேகிதனே என்னத்துக்காக

வந்திருக்கிறுயென்று சொன்னார். இந்தச் சமயத்திலும் யூதாஸ் அவருடைய இருதயத்துக்குச் சிநேகிதனுகவே இருந்தான். ஆனல் அவருடைய இருதயத்துக்கோ இயேசு பகையாயிருந்தார். பாவிகள் இயேசுவைப் பகைத்தபோதிலும், அவர் அவர்களே நேசிக்கிறார். தம்மைத் திட்டமாய், இனமறிந்த சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்கப்போகிற பிராணபகைஞனே 'சிநேகிதனே' என்று இயேசு அழைப்பது எவ்வளவு விந்தையாயிருக்கிறது. இது உலகப் போங்கான வார்த்தையாயிராமல் தெய்வீக நேசத்தின் போங்காயிருக்கிறது. இந்த வார்த்தைக்கு யூதாஸ் பாத்திரனு? இந்தச் சமயத்தில் இயேசு இவனைப் பார்த்து எல்லாக் கபடமும், எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, தேவகுமாரனைக் காட்டிக் கொடுக்கவந்த பாவியேயென்று சொன்னலும் தகும். இரட்சண்ய அன்பு இப்படிப்பட்ட சத்துருவைச் சிநேகிதனுக்கி விட்டது. யூதாஸ் குணப்பட இந்த ஒரு வார்த்தை போதாதா? கலிலேயாவிலும், பெத்தானியாவிலும் விருந்து வீட்டிலும், பஸ்கா ஆசரிக்கப்பட்ட மெத்தையிலும், குணப்படாத யூதாஸ் கெத்சமனேத் தோட்டத்தின் ஓரத்திலாவது குணப்படட்டுமென்று இரட்சகர் விரும்பினராக்கும். அவனே குணப்படவில்லை, 'என்னத்துக்கு வந்திருக்கிறுய்' என்ற வாசகம் அவன் செய்ய நினைத்த கிரியையைத் தடுக்கப் போதுமான எச்சரிப்பாயிருக்கிறதல்லவா? அவனே தான் வந்த காரியத்தை வாயால் சொல்ல இயலாமல் கிரியையால் சொன்னன். அவன் வந்து ரபீ வாழ்கயென்று சொல்லி அவரை முத்தமிட்டான். ஐயோ யூதாசே! கிறிஸ்து இன்னும் உனக்கு ரபியோ, நீ அவருடைய சீஷனே, வாழ்க என்கிறுனே! என்ன வாழ்வு இயேசுவுக்கு வரவேண்டுமென்று இந்த வார்த்தையைச் சொன்னன்? அவன் நினைத்த வாழ்வுகள் அடிபடுதல், கட்டப்படுதல், தூஷணம், அவமானம், நிந்தை, உமிழ்நீர், முள்முடி, சிலுவை மரணமல்லவா? இதுதான் யூதாஸ் விரும்பின வாழ்வு; ஆ, இவன் சத்தம் சிநேகிதன் சத்தம்போலும், நினைவு சத்துருவின் நினைவுபோலு மிருக்கிறதல்லவா? இப்படிப்பட்ட கள்ளச் சிநேகிதரை நாம் இக்காலத்திலும் காணலாம்.

யூதாசின் நெஞ்சில் கள்ளம் ஆளுகை செய்தபோதிலும், நமது இயேசுவின் நெஞ்சில் இரட்சண்ணிய நேசம் ஆண்டு கொண்டிருந்தது. அப்பொழுது இயேசு யூதாசே மனுஷ குமாரனை முத்தத்தினாலேயா காட்டிக்கொடுக்கப்போகிறாய் என்று சொன்னார். சேஷர்கள் அவரை விட்டுநீங்கி மறு படியும் அவரிடத்தில் வரும்பொழுது அவரை முத்தமிடு கிறது வழக்கமாயிருந்ததென்று ஒருவர் சொல்லுகிறார். அப்படியானால் தற்செயலாய் நடக்கும் வழக்கத்தையே சத்துருக்களின் அறிகுறியாயிருக்கும்படி அவன் திட்டம் பண்ணியிருக்கிறான். இதுதான் இயேசுவை இன்னொன்று திட்டமாய்க் காட்டிக்கொடுக்கிறதாயிருந்தது. இதினாலே யூதாஸ் முத்தமிடுகிற ஆள் தப்பான ஆளல்ல, நிசமான ஆள்தானென்று சத்துருக்கள் அறிந்துகொண்டார்கள். யூதாஸ் முத்தமிட்டபோது இயேசு ஒரு வார்த்தையும் பேசா மல் மௌனமாயிருந்திருப்பது மெய்யானால் ஒரு வேளை காரியம் இன்னும் முடிவாகாமலிருக்கலாம். இதில் மனுஷ குமாரன் என்ற பேர் இயேசுவைக் காட்டும் கண்ணாடி போலும், படம்போலு மிருந்ததென்று சொல்லலாம்; தம்மை எப்போதும் அவர் அப்படியே அழைத்துவந்தார். உடனே மற்றவர்கள் இம்மட்டும் நாம் பிடித்த ஆட்கள் சரியல்ல, இவர்தான் சரியான ஆளென்று நினைத்து அவர்மேல் கைபோட்டுப் பிடித்து அவரைக் கட்டினார்கள்! யூதாசையும் நேசித்தனுக்கிய இயேசுவே அடியேனையும் மறவாதேயும்.

ஐயோ, என் இயேசுவைப் பிடித்து அவர்கள் என்ன செய்தார்கள்? என்று நீ கேட்கலாம். அந்தப் பிரலாப வரலாற்றைச் சொல்ல என் வாய் எழும்பவும்மாட்டாது. அதை எழுத என் கை ஓடவுமாட்டாது; நீயே அதை ஆசையோடு ஆராய்ந்து, தியானத்தோடு வாசித்து, விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு, நேசத்தோடு அதை நினைவுகூர்ந்து வருவாயாக. இப்பொழுது நானுன்னை யூதாசின் வரலாற்றைக் கடைசிமட்டும் கவனிக்கும்படி கேட்கிறேன்.

இயேசு பிடிபட்ட நிமிஷமுதல் யூதாஸ் என்ன செய்தா னென்று தெரியவில்லை. அவன் வாங்கின பணத்துக்குச்

சரியாயும், அதற்கதிகமாய் அவன் செய்து முடித்தாயிற்று. இவன் கும்போடுகும்பாய் அந்தாவில் எருசலேமுக்கு வந்தான். இயேசுவுக்கு அப்பால் சம்பவிப்பதைக் கவனிப்பதே அவன் வேலையாயிருந்தது; அப்போதுதான் எதிர் பார்த்த சங்கடங்களிலும் அதிகம் அவருக்கு நேரிடுகிறதென்று தீர்க்கப்பட்டான் என்பதற்குச் சந்தேகமில்லை. நிச்சயமாகவே அவரைத் துப்பினது, கன்னத்தில் அடித்தது, முகத்தை மூடினது, முள்முடி சூடினது ஆகிய இந்தப் பாடுகளை அவன் பார்த்து, ஐயோ இவ்வளவுக்கும், நானே காரணனாயிருந்தேனென்று அழுதிருப்பான். இவ்வளவு துன்பத்துக்குட்படுத்த அவன் நினைத்திருக்கவேமாட்டான். ஐயோ, பேலியாளின் மகனே, உன் துயரத்தையும், பெரு மூச்சையும் உன் மட்டில் வைத்துக்கொள். உன்னைப்பற்றி நான் இனிக் கவலைப்படவேமாட்டேன். இவ்வளவையும் கேட்கிற ஒரு சினேகிதன் ஆத்திரப்பட்டு இந்த யூதாஸ் என்ன காரணத்தையிட்டு, என்ன லாபத்தைக் கருதி இந்தப் பெருந்தீமையைச் செய்தான்? என்று கேட்பார்கள்; இதின் காரணத்தைப் பலரும் பலவிதமாய்ச் சொல்லுகிறதுண்டு. சிலர் இயேசுவைச் சீக்கிரத்தில் இப்படிப்பட்ட சங்கடத்துக் குட்படுத்தினால், அவர் உடனே அற்புதங்களைச் செய்து தமது சத்துருக்களை அழித்து, தமது இராச்சியத்தை ஸ்தாபித்துத் தன்னைப் பிரதான மனிதனாக்குவார் என்றெண்ணிச் செய்திருப்பானென்றும், வேறு சிலர் இயேசு அடிக்கடி தப்பிக்கொண்டதுபோல இச்சமயத்திலும் தப்பவேதப்புவார், தன் பணம் தனக்குக் கிடைத்துப்போமென்று செய்திருப்பானென்றும், தன்னுடைய சக்தியை இயேசு முன்னிலும் தெளிவாக அறிந்து அவன் ஆலோசனையின்படி செய்ய ஏவப்படும்படி இப்படிச் செய்திருப்பானென்றும், பணத்துக்கு ஆசைப்பட்டு இப்படிச் செய்தானேயன்றி, வேறொரு நோக்கமும் அவனுக்குள் இருந்ததில்லையென்றும், சொல்லுவார்கள். இதெல்லாம் நமக்குச் சரியான காரணமாகத் தோன்றுகிறதில்லை. அவன் சாத்தானாக மாறிப்போனதினாலே இப்படிச் செய்தான். அந்த நாட்களில், தேவகுமாரனை மரணக்கிரணக்குட்படுத்த பிதாவாகிய தேவன் நிர்ணயித்திருந்தார். சாத்தான் இரட்சண்ணியக் கிரியையில்

சில பழுதுகளை யுண்டாக்கும்படி அந்தத் தேவ தீர்மானங்களின் நடுவில் நுழைந்து பிரயத்தனம் செய்தான். அப்பிரயத்தனங்களை சாத்தான் தானுய் நடத்தக்கூடாதபடியால் யூதாசுக்குட் புகுந்து அதை நடத்தினன். அவன் யூதாசுக்குட் புகுந்தவழி பொருளாசைதான். பொன்னும் பணமும் தேவனுடையதாயிருந்தாலும் பொன்னாசையும் பொருளாசையும் சாத்தானைச் சேர்ந்தது; 'பொருளாசை தீமையாவற்றுக்கும் வேர்' என்பதே கிறிஸ்து வேத சுலோகமாயிருக்கிறது.

கடைசியாக இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரணக்கினை அடையத் தீர்ப்புப்பெற்றார். இதையறிந்த யூதாஸ் மனஸ்தாபப்பட்டு அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்துக்கும் மூப்பரிடத்துக்கும் திரும்பக் கொண்டு வந்து 'குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவம்செய்தேன்' என்று அறிக்கையிட்டான். இவ்விடத்தில் யூதாசின் சரித்திரமாகிய அமாவாசை இருட்டு அர்த்தராத்திரியில் பௌர்ணமி வெளிச்சமாய் மாறுகிறது போல் தோன்றலாம்; இல்லை உள்ளபடி பார்த்தால் அமாவாசை இருட்டில் அக்கினி மழை பெய்ய மின்னும் மின்னலையன்றி வேறல்லவென்று காண்கிறோம். யூதாசின் மாரிசமான பச்சாத்தாபம் பலிக்கவில்லை. அதற்கு அவர்கள், எங்களுக்கென்ன அது உன் பாடு என்றார்கள். யூதாசின் பட்சமாய்ப் பேசவிரும்பும் சில பதிதர் அவன் மனஸ்தாபப்பட்டது, ஆசாரியரிடம் போனது, பணத்தைத் திரும்பவும் கொடுக்கப் பிரயாசப்பட்டது, இயேசுவின் குற்றமில்லாமையை அறிக்கையிட்டது, தன்னைப் பாவியென்று ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டது ஆகிய வரலாறுகளைக்கொண்டு, அவனுக்குள் உண்டான உணர்வைப் புகழ்ந்து, அவனையும் நல்ல மனுஷனென்று சொல்லத் துணிகிறதுண்டு. அவன் மெய்யாய்த் தன் பாவங்களை அறிக்கையிடவில்லையென்பதும், அவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொன்னபோதிலும் மெய்யுணர்வு அவனுக்குள்ளிருக்கவில்லையென்பதும்; அவனில் அப்போது காணப்பட்ட குணம் மாமிச இயல்புக்குரிய

குணமேயன்றி ஆவிக்குரிய மாறுதலின் குணமல்ல வென் பதுமே நமது அபிப்பிராயம்.

இக்காலத்திலும் அனேகம் போக்கிறிஸ்தவர்கள் யூதா சைப்போல பேசித் தங்களைத் தேற்றிக்கொள்ளாதபடிக்கு அவனுடைய பாவ அறிக்கையின் தன்மையைச் சற்று ஆராய்வோமாக. இவன் தன் அறிக்கையைத் தேவனிடத்தி லல்ல, பிரதான ஆசாரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் போய்ச் செய்கிறான். ஆதலால் இது மெய்யான அறிக்கை யல்ல. இயேசு தேவனுக்கு விரோதமாய்த் துரோகம் செய்த இவன் அவருடைய பாதத்தண்டையிலிருந்து, ஏரோதும், பொந்தியு பிலாத்துவும், ஏக ஜனத்திரளும் காணத்தக்கதாக வும், கேட்கத் தக்கதாகவும் தன் பாவங்களை அறிக்கையிட் டிருந்தால் இவனைப் புகழலாம், இயேசுவண்டை போக வெட்கப்பட்டானுக்கும். பாவத்தினிமித்தம் வெட்கப்பட்டுப் பாவநாசகரிடம் போகாதவனுக்குப் பாவமன்னிப்பேது. நாமும் அடிக்கடி கண்டிக்கவும், மன்னிக்கவும் இயலாத மனுஷரிடத்தில் நமது பல பாவங்களையும் சொல்லி அழுது மனதைத் தேற்றிக்கொண்டிருந்தாலுமிருக்கலாம். இதினால் பாவமன்னிப்புக் கிடையாது. இவன் இயேசுவின் மரணக் கினைத் தீர்ப்புக்குப்பின்தான் அறிக்கையிட்டான், இதிலொரு கள்ளத்தனமிருக்கிறது. இவன் மெய்யுணர்வுள்ளவனாயிருந் தால் ஏன் முந்திச் செய்யவில்லை. இவ்வளவு கடுந்தீர்ப்புக்கு வராதென்று அவன் எண்ணினானுக்கும். நம்முடைய பாவம் நாம் நினைத்திருந்த கஷ்டங்களுக்கும், எதிர்பாராத மோசங்களுக்கும் ஏதுவான ஸ்திதியில் நம்மை நிறுத்தும் போது நாமும் மனஸ்தாபப்பட்டு யூதாசைப்போல பேச லாம். அது சரியான பாவ அறிக்கையல்ல. மேலும் இவன் தான் வாங்கின பணத்தோடு போகிறான். இதுதான் யூதாஸ் பணத்தை வெறுத்ததில் முதலும் கடைசியுமான தடவையா யிருக்கிறது. பணத்தை வாங்கிச் செய்த குற்றம் அந்தப் பணத்தைக்கொடுத்துவிட்டால்போய்விடுமென்றுஎண்ணினா னுக்கும்; ஆகையால் இது மெய்யான பாவ அறிக்கையல்ல. இது நாம் முன் சொல்லிய வண்ணம் மாம்ச சுபாவத்துக்கு இயல்பாயுள்ள அநுதாப பச்சாத்தாப அறிக்கையேயன்றி

இரட்சண்ய பச்சாத்தாப அறிக்கையல்ல. தம்மைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குண்டாகும் தீமைகளைப்பற்றி இரட்சகர் அடிக்கடி சொல்லிவந்த வார்த்தைகளெல்லாம் அப்பால் அவன் ஞாபகத்தில் வந்து 'வேதனைப்படுத்தினதால், வேட்டையில் குத்துண்டமான் கதறுமாப்போல் தொனிக்கும் வெறும் அபயக்குரலேயன்றி இரட்சண்ய பச்சாத்தாபக் குரலல்ல. எப்படியும் இவன் வசனமானது இரட்சகரின் குற்றமில்லாத நிலைமையையும், தன்னுடைய மாரிச மனஸ்தாபத்தையும தெளிவாக வெளிப்படுத்துகிறது.

யூதாஸ் தன் சினேகிதரிடம் போய் அழுதுதொழுது தன் குற்றத்தை அறிக்கையிட்டும் கிடைத்த லாபம் என்ன? அவர்கள் 'எங்களுக்கென்ன? அது உன் பாடு' என்று சொல்லிவிட்டார்கள். ஐயோ யூதாசே, இனி என்ன செய்வாய்? இயேசு உன்னைக் கைவிடாது பிடிக்கப் பார்த்தாலும், அவரை நீயே கைவிட்டு யூதருடைய கையையும் சோமருடைய கையையும் பிடித்தாயே, அவர்களும் உன்னை விட்டுவிட்டார்கள். ஐயோ யூதாசே, உனக்குக் காசு கொடுத்த கைதானே உனக்கு விரோதமாகக் கத்தி எடுக்கிறதுபோலிருக்கிறதே. இவ்வளவு பேச்சும் தேவாலயப் பிராகாரத்தில் நடந்திருக்கவேண்டுமென்று அநுமானிக்க வேண்டியதாயிருக்கிறது. யூதாசே இனிக் கடைசியாக நீ யாரோடு போவாய், நீ யாருடைய மார்பிலே சாய்வாய், யாருடைய வீட்டுக்குள் புகுவாய்? கேட்டின் மகனே! நீ சகல கேட்டுக்கும் பிதாவாயிருக்கிற சாத்தானின் சவாட்சணைக்கு உன்னை ஒப்புவித்துவிட்டுச் சும்மாயிருப்பாயாக கும். அது சரிதான், அவனுக்கு நீ செய்த பெரிய வேலைக்குத் தகுந்த கூலியைத் தரும்படி அவன் வீட்டு வாசலைத் தேடிப் போகவேண்டியதுதானே.

அவன் அந்த முப்பது வெள்ளிக்காசையும் காணிக்கையாகப் படைக்கிறதுபோல தேவாலயத்திலே எறிந்துவிட்டுப் புறப்பட்டுப்போய் நான்றுகொண்டு செத்தானென்று வேதம் அறிவிக்கிறது. ஐயோ யூதாசு பணத்தை ஆலயத்தில் எறிந்துவிட்டு தன் அழிவுக்கேற்ற இடத்துக்குப் போகாமல் இரட்சிப்புக்கேற்ற இடத்துக்குப் போயிருந்தால் எவ்வளவு

நலமாயிருக்கும். அவன் மற்ற அப்போஸ்தலரிடம் போக லாகாதா; அல்லதுமற்ற சத்துருக்களிடமாவது போய் அழுது கொள்ளலாகாதா; அந்த இருகதவுகளும் அவனுக்கு அடை பட்டிருந்தது. சிநேகிதரிடம் போகுங் கதவைத் தானே அடைத்துக்கொண்டான். மற்றக் கதவை அவன் சத்துருக்கள் அடைத்துவிட்டார்கள். இரட்சகரிடம் போகக்கூடிய மூன் ரும் கதவு அச்சமயத்தில் திறந்திருந்ததே, அங்கும் அவன் போகவில்லை. ஒருவேளை அவன் இயேசுவுக்கு நேரிட்ட பல பாடுகளையும் கண்ணுற்று அச்சமயத்தில் அவ்விடம் போய் அழுது புலம்பினாலும் அல்லது சிலுவையில் தொங்கும் போது பாவ அறிக்கை செய்தாலும் மன்னிப்புப் பெற்றிருக்க லாம். இல்லை அவன் தனக்கேற்ற ஒரு இடத்தைத் தேடி னான், சாத்தானும் தன் சிரேஷ்ட சீஷனாகிய யூதாசுக்கு உடனேஉயர்ந்தபலனைக்கொடுக்கும்படி துரிதப்பட்டு, அவனை நான்றுகொண்டு சாகச் சொன்னான். அந்த ஆலோசனையை அவன் தட்டாது நிறைவேற்றி நரகலோகம் சேர்ந்தான். அவனைச் சீக்கிரத்தில் கொல்லாவிட்டால் சிலுவையண்டை வந்து அழுது பாவமன்னிப்பைப், பெற்றுக்கொள்ளுவா னென்று சாத்தான் பயந்து இப்படிச் செய்தானுக்கும்; அல்லவென்று இயேசுவின் சீஷனொருவனை அவர் உயிருள்ள காலத்திலேயே நரகத்தில் சேர்த்துவிட்டேனென்று எந்நாளும் சொல்லி தன்னைத் தேற்றிக்கொள்ளும்படி அப்படிச் செய்தா னுக்கும். பிலேயாமாவது தன் சகலபொருளாசைகளோடும் கூட நான் நீதிமான்களின் மரணமாய் மரித்து என் முடிவு அவர்கள் முடிவுபோலிருப்பதாக என்று விரும்பினான். அந்த வீண் விருப்பமாவது யூதாசுக்கு இருக்கவில்லை. யூதாஸ் நான்றுகொண்டு தன் காலால் நரகவாசலைத் தட்டி னான். உடனே அழிவின் தூதன் அவனை இழுத்து நரக பள்ளத்தில் ஆழ்த்தினான், அதின் விசையால் அவன் தலை கீழாக விழுந்து வயிறு வெடித்துக் குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. ஆகவே இயேசுவைக் காட்டிக்கொடுத்த தற்கு சாத்தான் கொடுக்கக்கூடிய பெரிய வெகுமதியான இந்தச் சாவைக் கொடுத்தான். நான்றுகொண்டு சாகும் சாவு இவ்வுலகத்தில் சாதாரணமானதல்ல, உலகமுண்டா னதுமுதல், அகித்தோப்பேல் ஒருவன்தான் இப்படிச் செத்த

வன். அவனுக்குப்பின் யூதாஸ் அவ்விதச் சாவைத் தெரிந்து கொண்டு நரகபாதாளத்துக்குள் விழுந்தான்.

இம்மட்டோடு நாம் யூதாசை நிறுத்திவிடவேண்டியதா யிருந்தாலும் இவனுடைய சரித்திரத்தால் இயேசுவின் சம்பந்தமான ஒரு பெரிய கேள்வியை கிறிஸ்துமார்க்க விரோதிகள் கேட்கிறதுண்டு. அதாவது இப்படியெல்லாம் யூதாஸ் துரோகம் செய்தானென்று இயேசுவுக்குத் தெரிந் திருக்க அவனை அவர் சீஷனாக ஏற்றுக்கொண்ட காரண மென்ன? என்பதுதான். இதற்கு நாம் சொல்லவேண்டிய உத்தரவாவது: எப்படிப்பட்ட பாவிக்கும் அவன் ஆயுள் காலத்தில் இயேசுவினிடத்தில் இடமுண்டு என்றும், இயேசு நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்ப அழைக்க வந்தாரென்றும், சோதனைக்குட்படுகிற எவனும் கர்த்தரால் சோதனைக்குட்படாமல் அவன் அவனுடைய சுய இச்சையில் சோதனைக்குட்பட்டுக் கெட்டுப்போகிறான் என்றும், கிறிஸ்து வுக்குத் துரோகிகள் கிறிஸ்து சபைக்குள்ளுமிருப்பார்க ளென்றும், பொருளாசை எவ்வளவு பெரிய கேட்டுக்கு மனுஷனை இழுத்துவிடுமென்றும் உலகத்துக்கு வெளிப் படுத்தும்படி யூதாஸ் அவருடைய சீஷனாகச் சேர்க்கப்பட் டிருக்கிறானென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. இயேசு இவனைச் சீஷனாக தெரிந்துகொண்டதில், அவருடைய நேசம் அதிக விஸ்தாரமாய் விளங்குகிறதேயன்றி வேறல்ல; அவனை அவ்வன்புக்கு அபாத்திரனாகி, சாபமான சாவைத்தான் ஆதாயமாகப் பெற்றான். 'கர்த்தாவே உமது சத்துருக்கள் அழிவார்கள்; உமது சத்துருக்கள் அழிந்தேபோவார்கள். சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டு போவார்கள்.'

பொந்தியு பிலாத்து

இப்பொழுது நாம் வாசிக்கப்போகும் சரித்திரம் உலகத்திலும், வேதத்திலுமுள்ள எல்லா மனித சரித்திரங்களிலும் ஒரு வகையில் விசேஷமானதென்று சொல்லவேண்டியது. இதின் வரலாறுகள் முந்தின யூதாசின் சரித்திரத்தை திரையிட்டு மறைத்துப்போடுகிறதென்று சொல்லலாம்: இவன் ஜாதியின்படியும், சன்மார்க்கத்தின்படியும், அறிவின்படியும் ஐசுவரியத்தின்படியும் பூலோக மானிடரின் தலைவனுய் தலை காட்டக் கூடாதேபோனுலும், இயேசுவை மரணக்கினை செய்த கிரியையால் இவன் தலை எல்லாருடைய பார்வைக்கும் வருகிறது. இவன் தேவனைக் கொலைக்குட்படுத்தின பாதகனுயிருக்கிறதால், மனுப்புத்திரர் அனைவரும் இவனை உலகம் முடியுமட்டும் மறந்துபோகாதபடி, கடவுள் அவனை தமது வேதத்திலும், தமது சபையின் விசுவாசப்பிரமாணத்திலும் ஞாபக ஸ்தம்பமாக்கியிருக்கிறார். 'பொந்தியு பிலாத்தின் காலத்தில் பாடுபட்டு' என்ற வாசகத்தால் நாடோறும் காலையிலும் மாலையிலும் இவன் திருச்சபையால் நினைவுகூரப்படுகிறான். இந்த அழிம்பனின் சரிதையில் நமது அருமை இரட்சகருடைய பாடுகளின் வரலாறும் மிச்சமாய் வரவேண்டியதாயிருக்கிறதால் இவன் சரித்திரம் அதன் விசேஷமடைகிறது.

இவனுடைய சுயபேர் பிலாத்து; பொந்தியூஸ் என்பது இவனுடைய குடும்பப் பேராயிருக்கிறது. பொந்தியூஸ் தெலசினஸ் (Pontius Telesiness) என்ற பேருடைய ஒரு உரோமைச் சேனுவீரனுடைய குடும்பத்தில் இவன் தோன்றினதினுல் பொந்தியு பிலாத்து என்று அழைக்கப்பட்டான். பொந்தியு பிலாத்து என்ற பேருக்கு அம்பு அல்லது வேல் தரித்தவன் என்று அருத்தம்.

ஆ! இந்த அம்பு தரித்த பிலாத்து நமது நேச இயேசுவின்மேல் மரணக்கினைத் தீர்ப்பு என்னும் அம்பை எய்து தன்னுடைய பேரை உறுதிப்படுத்துகிறானல்லவா?

இந்தப் பொந்தியு பிலாத்து, இயேசு சுமார் இருபத்தாறு வயசாயிருக்கையில் யூதேயாவுக்கு அதிபதியானான். ஆகவே இயேசுவின் அவதார ஊழியங்கள் அனைத்தும் இவனுடைய காலத்துக்குட்பட்டிருக்கிறது. காலத்தின் சரித்திர முறைப்படி இவன் பேர் கிறிஸ்துவின் முப்பதாம் வயதில் வருகிறது. 'தீபேரியூ இராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே பொந்தியு பிலாத்து யூதேயாவுக்கு தேசாதிபதியானான்' என்று பரி. லூக்கா சொல்லுகிறார் (3:1).

பிலாத்து அரசாட்சிக்குரிய திறமையுடையவனாயிருந்தபோதிலும், அதற்குரிய சிறந்த குணங்களுடையவனாய் இருந்ததாகத் தோன்றுகிறது இல்லை. எப்படியெனில், அவன் தன் அரசாட்சியின் ஆரம்பத்தில் தன் ஆட்சிக்குட்பட்ட ஜனங்களுக்கு மனமடிவுண்டாகத்தக்க இரண்டு பெருங் கிரியைகளை நடப்பித்ததாக நாம் சரித்திரத்தில் அறிகிறோம். முதலாவது, அவன் தன் இராஜதானியை முன்னிருந்த செசரியாவிலிருந்து எடுத்து அதை எருசலேமில் ஸ்தாபிக்க முயன்றான். யூதரின் தலைநகரியில் இருந்துகொண்டு அவர்களுடைய பிரமாணங்களையும் ஒழுங்குகளையும் மாற்றவேண்டுமென்பதே அவனுடைய நோக்கமாய் இருந்தது. அதற்காக அவன் உரோமை இராயனுக்குரிய விக்கிரக சின்னங்களையும் விருதுகளையும் சேனையுடன் இராக்காலத்தில் எருசலேமுக்குள் கொண்டுபோகும்படிச் செய்தான். பிலாத்துவுக்கு முன்வந்த ஐந்து தேசாதிபதிகளாலும் துணிந்து செய்யப்படாத இந்த வழக்கத்தை அவன் செய்ததால் பெருங்குழப்பம் உண்டானது; இவன் ஜனங்களின் மனோபாவத்தை அறியும்படிக் கவலைப்படவுமில்லை. ஜனங்கள் விடியற்காலத்தில் உரோமையின் விக்கிரக அருவருப்புகளும், விருதுகளும் பரிசுத்த தெருக்களில் காணப்பட்டதைக் கண்டவுடனே உக்கிர கோபமாகி, ஏகமாய்த் திரண்டு செசரியாவிலிருந்த பிலாத்துவினிடத்தில் போய், பிலாத்து தன் உத்தரவை மாற்றவும், அந்த விக்கிரக சின்னங்கள் எடுபட்டுப்போகவும்,

அநேகநாட்களாய் மன்றாடினார்கள். பிலாத்துவோ, அப்படிச் செய்தால் உரோமை இராயனுடைய மரியாதைக்குக் குறைச்சலாகுமென்று சொல்லி ஜனங்களுடைய விண்ணப்பத்துக்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால், ஜனங்கள் அந்த முகாந்தரம் செல்லாதென்பதுபோல் மேன்மேலும் அவனிடத்தில் விண்ணப்பம் பண்ணிக்கொண்டே இருந்தார்கள். ஒருநாள் ஜனங்கள் அப்படித் தன்னை வருந்திக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவனால் மறைவில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சேவகர் திடீரென்று அவர்களைக் கைதிகளாக்கினார்கள். அப்போது பிலாத்து அவர்களை நோக்கி நீங்கள் உங்கள் விண்ணப்பத்தை நிறுத்தி அவரவர்மட்டில் போகாதபட்சத்தில் உங்களுக்குச் சிரசாக்கினை செய்யப்படுமென்று பயமுறுத்தினான். அவர்களோ அதற்கு அஞ்சாமல் தங்களைக் குப்புறக் கிடத்திக்கொண்டு, கழுத்துகளைத் திறந்து கொடுத்து, எங்கள் தேவனுடைய பிரமாணம் அசட்டை பண்ணப்படுகிறதைப் பார்க்கிறதைவிட எங்கள் கழுத்தை உமது கத்திகளுக்கு இதோ ஒப்புக்கொடுக்கிறோமென்று அபிமானமாய்ப் பேசினார்கள். அவர்களிடத்தில் விளங்கின மார்க்க அபிமானத்தைப் பிலாத்து கண்டு அதிசயித்து, தன் கட்டளைகளை மாற்றி, எருசலேமுக்கு அனுப்பப்பட்ட விக்கிரகங்களையும், விருதுகளையும், மற்றச் சின்னங்களையும் அங்கிருந்து திரும்பவும் செசரியாவுக்குக் கொண்டுவந்து விடும்படிக் கட்டளையிட்டான்.

மேலே சொல்லிய கலகம் நடந்து சில வாரத்துக்குப் பின்பு அவன் எருசலேமின் குடிகளுக்கு ஜலசவுக்கியத்தை உண்டாக்கவேண்டுமென்று கருதி சுமார் இருபத்தைந்து மைலுக்கப்பாலிருந்து வாய்க்கால் வெட்டி அதின் வழியாக ஜலத்தைக் கொண்டுவரும்படி ஆலோசித்தான். இந்த ஆலோசனை குடிகளுடைய க்ஷேமத்தைக் கருதியே செய்யப்பட்டதென்றும், இது அதிபதிக்கிருக்கவேண்டிய செய்கைதானென்றும் நாம் ஒத்துக்கொள்ளுவோம். இதில் அவன் நோக்கம் குடிகளுக்கு அனுகூலமாயிருந்தாலும் அதை நிறைவேற்றும்படி போனவழி சரியானதாயிருக்கவில்லை. எருசலேமின் ஆலயத்தின் பணத்தை எடுத்து இதற்குத் தன்

இஷ்டப்படிக்கே செலவிட்டான். இது யூதர் ஒருவருக்கும் பிடிக்கவில்லை. இதினால் ஜனங்கள் ஆயிரமாயிரமாய்த் திரண்டு அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து, அந்த வாய்க்கால் வெட்டும் வேலைக்குக் கோயில் சொத்தை எடுக்க லாகாதென்று பலமாய்த் தடுத்தார்கள். இதையிட்டு சிலதரம் ஜனங்கள் அவனை முகதாவில் திட்டவும் கண்டபடி பேசி பழிக்கவும் நேரிட்டது. அப்போது பிலாத்து அவைகள் ஒன்றையும் கவனியாததுபோல் ஜனங்களைச் சாந்தத்தோடு அனுப்பிவிட்டு, அவர்கள் தன்னிடத்தில் மறுபடியும் கூடி வந்து பேசுவார்கள் என்று அவன் நினைத்திருந்த ஒரு இடத்தில், சேவகர் தங்கள் ஆயுதங்களை மறைத்துக்கொண்டு பதிவிருக்கும்படி திட்டஞ்செய்தான். குடிகள் அப்படியே மறுபடியும் ஒருதரம் கூடி தங்கள் கோவில் பணத்தை இப்படிப்பட்ட செலவில் எடுத்துப்போடக் கூடாதென்று கேட்டு, அவனைத் தோந்தரவு செய்கையில் அவன் முன் திட்டம் பண்ணியிருந்த குறிப்பினால் மறைந்திருந்த சேவகர் திடீரென்று வெளிப்பட்டுத் தங்களுடைய ஆயுதங்களை உடுப்புகளுக்குள்ளிருந்து உருவி கண்டவர்களையெல்லாம் கொலைசெய்து நகர முழுவதையும் சவக்காடாக்கினார்கள். இதினால் கலகக்காரரும் மற்றவர்களும் ஏகமாய்ப் பிணமானார்கள். இந்தக் கலக சம்பந்தத்தில்தான் சில கலிலேயரும் தேவாலயத்தில் பலியிடும்போது அநியாயமாய்க் கொலை செய்யப்பட்டார்கள் என்றும் 'பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடு கலந்திருந்தான்' என்று (லூக். 13:1) சொல்லப்படும் வாசகம் இதனோடு சம்பந்தப்பட்டதென்றும் நாம் சொல்லவேண்டியதாயிருக்கின்றன. மேலே சொல்லிய இரண்டு சரித்திர வரலாறும் பிலாத்து இரத்தம் சிந்த அஞ்சாத கல்நெஞ்சனென்று நன்றாய் ருசுப்படுத்துகிறது.

இந்த வரலாறுகளுக்குப் பின்புதான் பிலாத்து இயேசுவின் பாடுகளின் விஷயத்தில் அதிகமாய்ச் சம்பந்தப்பட்டு வருகிறான். அவை ஒவ்வொன்றையும் நாம் நுட்பமாய் ஆராய்வோமாக:—

இயேசு கெத்செமனேயில் பிடிக்கப்பட்டுக் கட்டுண்டவராய் எருசலேமுக்குள் கொண்டுபோகப்பட்டார். சத்துருக்கள் அவரைப் பிடிக்கும்போது இரவு பன்னிரண்டுமணி இருக்கலாம். சத்துருக்களால் பிடிபட்ட இயேசு அந்த இராத்திரியிலேதானே பிரதான ஆசாரியனுடைய அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டார். அவர்கள் அவரை விடியற்காலமட்டும் அங்கே வைத்து பலவாறுய் விசாரணை பண்ணி, குற்றம் சாட்டி இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறானென்று தீர்மானம் பண்ணி வாயால் சொல்லக் கூடாத இம்சைகளையெல்லாம் செய்தார்கள். விடிய இன்னும் கொஞ்ச நேரமிருக்கும்போதே அவர்கள் எல்லாரும் எழுந்திருந்து அவரை பொந்தியு பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு வந்தார்கள். யூதர் இயேசுவைத் தங்கள் வேதப் பிரமாணப்படி கல்லெறிந்து கொன்றுபோட விரும்பினால் இப்படிப் பிலாத்துவினிடம் வந்திருக்கமாட்டார்கள். அவரை உரோமருடைய முறைப்படி சிலுவையிலறைந்து கனவீனப்படுத்திக் கொல்லவேண்டுமென்று அவர்கள் விரும்பினதினாலேதான் பிலாத்துவினிடம் கொண்டுவந்தார்கள். விடியற்காலத்தில் திரள் ஜனம் தன் அரண்மனையில் வந்து கூடுவது வழக்கமில்லை. மேலும் அது யூதர் அவரவர் மட்டில் தங்களுடைய பண்டிகைக்கடுத்த ஆயத்தங்களை சாக்கிரதையாய்ச் செய்கிற காலாயுமிருந்தது. தான் எதிர் பாராத வண்ணமாய் இந்தப் பெருங்கூட்டம் அதிகாலையில் வந்தது அவன் மனதுக்கு அச்சத்தைக் கொடுத்தது. ஆதலால் பிலாத்து திடீரென்று அவர்களிடத்தில் வெளியே வந்து, பலமான கயிறுகளால் கட்டப்பட்டு தனக்குமுன் நிறுத்தப்பட்ட இயேசுவைக் கவனித்து 'இந்த மனுஷன்மேல் என்ன குற்றம் சாட்டுகிறீர்கள்' என்று கேட்டான். அவர் இன்னாரென்று பிலாத்துவுக்குத் தெரியாது; இதற்குமுன் அவன் அவரை ஒருகாலும் பார்த்திருக்கமாட்டான்; ஆதலால் அவரைச் சாதாரணமான யூதனென்று மாத்திரம் நினைத்திருக்கலாம். பிலாத்துவின் கேள்விக்கு ஜனங்கள் மாறுத்தரமாக 'இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம்' என்று சொன்னார்கள். இதினால் இப்பிலாத்துவின் கேள்விக்கு அவர்கள் வடாகோட

மான மறுமொழியைச் சொல்லுகிறார்களென்று தெரியவரு கிறது. பிலாத்துவைக் குறித்து அவர்கள் எவ்வளவேனும் மதிப்பற்றவர்களாய் இருந்தார்களென்று இதினுலே விளங்கு கிறது. பிலாத்து அப்படிக் கேட்டது தங்கள் கவுரதைக்கு ஏற்றதல்லவென்றும், தாங்கள் ஒருவனைக் குற்றவாளியென்று கொண்டுவந்தால் பிலாத்து மறுபேச்சு பேசாமல் அவர்கள் சொல்லே நம்பக் கடமைப்பட்டவனேயன்றி வேறல்ல வென்றும் சொல்லுகிறதுபோலு மிருக்கிறதல்லவா?

இப்படித் தன்னை அற்பமாய் எண்ண பிலாத்து இடங் கொடுக்கவில்லை. அவர்களுடைய உத்தரவைக் கேட்ட வுடனே, இவனை நீங்கள் குற்றவாளி என்று கண்டதாகச் சொல்லுகிறீர்களே, நீங்கள் கொண்டுபோய் உங்கள் நியாயப் பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்று சற்று கோபத் தோடு சொன்னன். அவ்வளவு எடுப்பாய் உத்தரவு சொன்ன லும் யூதர்கள் உடனே போகவில்லை. தங்களுடைய விசாரணை யில் இயேசுவின்மேல் சாட்டின குற்றத்தை ஒளித்துவிட்டு, அவரை இராஜ துரோகி என்றும் இராயனுக்கு வரி கொடுப் பதைத் தடுக்கிறவரென்றும், நாடெங்கும் கலகஞ்செய்கிறவ ரென்றும் சொல்லி, இவருக்கு நீ உரோமருடைய முறைப் படி சிலுவையிலறையத் தீர்ப்புக்கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.

இதின் பின்பு பிலாத்து இவரை விசாரிக்கக் கடமைப் பட்டவனென்று நினைத்துக்கொண்டு தனக்குமுன் நிறுத்தப் பட்ட கைதியாகிய இயேசுவினிடம் பல கேள்விகளைக் கேட் டான். அக்கேள்விகளையும் அதற்கு இயேசு சொன்ன மறு மொழிகளையும் சம்பாஷணை முறையாய் அடியில் காட்டுவது எவர்க்கும் எளிதாய் விளங்கும் என்று எண்ணுகிறோம். பிலாத்துவின்முன் இயேசுவின்மேல் மூன்று குற்றங்கள் சாட்டப்படுகின்றன. அக்குற்றங்களாவன:—(1) இவன் தன்னை கிறிஸ்து என்னப்பட்ட இராஜா என்கிறான். (2) இராயருக்கு வரி கொடுக்க வேண்டியதில்லை என்கிறான். (3) ஜனங்களைக் கலகப்படுத்துகிறான் என்பதுதான். இந்த மூன்று பிரியாதுகளையும் பிலாத்து ஒவ்வொன்றாய் விசாரிக் கிறான்:—

பிலாத்து: 'நீ யூதருடைய இராஜாவா?'

இயேசு: 'நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ அல்லது மற்றவர்கள் என்னைக் குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ?'

பிலாத்து: 'நான் யூதனு! உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். என்ன செய்தாய்?'

இயேசு: 'என் இராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல, என் இராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடி என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல.'

பிலாத்து: 'அப்படியானால் நீ இராஜாவோ?'

இயேசு: 'நீர் சொல்லுகிறபடி இராஜாதான்: சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்.'

பிலாத்து: 'சத்தியமாவதென்ன?'

இந்தக் கேள்விக்குக் கிறிஸ்து உத்தரவாகப் பேசுமுன் பிலாத்து அவரை விட்டுப்போட்டு வெளியே போய் யூதரோடு சம்பாஷித்ததாக நாம் வாசிக்கிறோம்: ஆனால் நிக்கோதேமுவின் சுவிசேஷம் என்றழைக்கப்படுகிற ஒரு புதிய ஏற்பாட்டு அப்போகிரிப்பா ஆகமத்தில் சத்தியமாவது என்ன என்ற கேள்விக்கு மறுமொழியாக இயேசு 'சத்தியம் பரமண்டலத்திலிருந்து வந்திருக்கிறது' என்றார்; அதற்குப் பிலாத்து 'சத்தியம் பூமண்டலத்தில் இல்லையோ?' என்றான். அதற்கு இயேசு மறுமொழியாக 'சத்தியம் நானே: பூமிக்குரிய அதிகாரத்தையுடையவர்கள் சத்தியத்தை எவ்விதமாய் நியாயந்தீர்க்கிறார்கள் பாரும்' என்று சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது.[1]

---

[1] நிக்கோதேமுவின் சுவிசேஷம் 3-ம் அதி.

எப்படியும் இந்தச் சுருக்கமான விசாரணைக்குள் இயேசுவின்மேல் யாதொரு குற்றமும் இல்லையென்று பிலாத்து கண்டு யூதரிடத்தில் போய் 'நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்' என்று சொன்னான். இயேசுவின் எதிரிகளோ அவர்மேல் அநேக குற்றங்களைச் சாட்டினார்கள். குற்றஞ் சாட்டுவது லேசு, அதை நிரூபிப்படுத்த வேண்டாமா? அப்படியவர்கள் நிரூபிப்படுத்தினதாக யாதொரு குறிப்பும் இல்லை.

மூன்றின மூன்று குற்றங்களையல்லாமல் சத்துருக்கள் இயேசுவின்மேல் அநேக குற்றங்களைச் சாட்டினார்களே. அதின் விபரம் இன்னதென்று சுவிசேஷங்களில் சொல்லப்படவில்லை. ஆனால் அப்போகிரிப்பா ஆகமங்களில் இவருடைய பிறப்பு, இவருடைய நிமித்தம் பாலகர் மாண்டது, இவர் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது, இவர் சூனியவான் என்பது, மாயவித்தைக்காரன் என்பது, தூஷணிக்கிறவர் என்பது முதலிய விஷயங்கள் அவர்மேல் குற்றங்களாகச் சொல்லப்பட்டதாம்.

யூதர் சாட்டின அநேக குற்றங்களைப் பிலாத்து கேட்டு அவைகளின் உண்மையை ஒவ்வொன்றுப் ஆராயாமல், 'இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே அதற்கு நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா?' என்று கேட்டான். இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்.

என் நேசு இயேசுவே! உம்முடைய மேல் சத்துருக்கள் எத்தனையோ குற்றம் சாட்டினாலும் நீர் பேசாதிருந்தீரே! அதைக் கண்ட பிலாத்து முதலாய் ஆச்சரியப்பட்டானுமே. இதின் இரகசியமென்ன என்று என் ஆத்துமா கேட்கிறது.

உத்தரவு: பேசாமலிருப்பதே சரி. உலக வழக்கப்படி பேசுவோம். சாட்டப்பட்ட குற்றங்கள் மூன்று. அதில் முதலாம் குற்றத்தை நுட்பமாய் விசாரிக்கத் துவக்கும் போதே குற்றமில்லாமை வெளிப்பட்டுப்போனதால் நியாயாதிபதி 'ஒரு குற்றமும் காணேன்' என்று தீர்ப்புச் சொல்லியாயிற்று. தீர்ப்புச் சொன்ன பின்பு கைதியை விடுதலை செய்யவேண்டியதேயன்றி மறுபேச்சுண்டா?—ஆகை

யால் இச்சமயத்தில் பேசாதிருப்பதுதான் நியாயம், பேச அவசியமில்லாத சமயத்தில் பேசித் தன் காரியத்தின் உண்மையை நிலைநிறுத்துகிறதைவிட, பேசாமல் அதை நிலை நிறுத்திக்கொள்வதே வாசி; அது தேவஞானம். பரம வழக்கின்படியும் அவர் பேசாமலிருப்பதே சரி. ஏனெனில், 'அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார். ஆனாலும் அவர் தம்முடைய வாயைத் திறக்கவில்லை; அடிக்கப்படும் படிக் கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும் தன்னை மயிர்க் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்' (ஏசா. 53:7,8) என்ற தீர்க்க தரிசனம் அவரைப்பற்றி எழுதப்பட்டிருந்தது. அது பரலோக ஏற்பாடானதால் இயேசு பேசாமலிருப்பது சரிதான்.

இயேசு பேசாமலிருந்ததால் அந்த விசாரணையில் அவருடைய காரியம் க்ஷமமானதேயன்றி கெட்டுப்போகவில்லை. அவர் பேசாதிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்ட பிலாத்து உடனே பிரதான ஆசாரியர்களையும் ஜனங்களையும் நோக்கி, 'இந்த மனுஷனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை' என்று அறிக்கையிட்டான். ஆதலால், இவன் ஆச்சரியப்பட்ட காரணம், ஒரு அணுவளவு குற்றமும் சொல்லக் கூடாத இந்த புண்ணிய புருஷனை துஷ்டர் இக்கோலம் பண்ணுகிறார்களே என்று அநுதாபப்பட்டதால் ஆச்சரியப்பட்டானேயன்றி வேறல்லவென்று தோன்றுகிறது.

இவ்வளவு விசாரணைக்குள்ளாகப் பிலாத்து இயேசுவினிடத்தில் குற்றமில்லையென்று இரண்டுதரம் பகிரங்கமாய்ச் சொன்னது சத்துருக்களுக்கு அதிக விசனத்தை உண்டாக்கிற்று. ஆதலால், அவர்கள் 'இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உபதேசம் பண்ணி ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்' என்று வைராக்கியத்தோடு சொன்னார்கள்.

இந்தக் கலகத்தில் தலையிடுகிறது தோஷமென்றும் இதிலிருந்து எப்படி தன்னை விலக்கிக்கொள்ளலாமென்றும் சமயம் பார்த்திருந்த பிலாத்து இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே உள்ளுக்குள் அகமகிழ்ந்து 'இந்த மனுஷன்

கலிலேயனு' என்று விசாரித்து, அவர் ஏரோதுவின் விசாரணைக்குட்பட்டவர் என்று அறிந்து அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான்.

இது பிலாத்துவின் விவேகத்தைக் காண்பிக்கிறதென்று சொல்லக்கூடாது, அவனுடைய அக்கிரமத்தைத்தான் காட்டுகிறது. ஏனெனில், தனக்குமுன் கொண்டுவரப்பட்ட கைதி குற்றமற்றவனென்று தானே அறிந்திருக்க, தானே அறிக்கையிட்டிருக்க பின்னும் அந்த வியாச்சியத்தை நீடிக்கப்பண்ணுவது அக்கிரமமல்லவா? குற்றமற்ற கைதியை விடுதலை பண்ணி, கள்ளப் பிரியாதுக்காரரை மறியலில் வைப்பதற்குப் பதிலாக அவன் இயேசுவை ஏரோதுவினிடம் அனுப்புவது விவேகம் என்றுவது நியாயம் என்றுவது சொல்லலாகாது. இவனுடைய நடபடிக்கையைப் பார்க்கும்போது, பிலாத்து தன்னை இந்தச் சங்கதிக்கு விலக்கிக்கொள்ளப் பார்த்தானேயன்றி கிறிஸ்துவை அவருடைய சத்துருக்களின் மும்முரத்திலிருந்து விலக்கிவிட எவ்வளவேனும் கவலைப்படவில்லை என்று விளங்கிற்று. இது பிலாத்துவின்மேல் சுமத்தப்பட வேண்டிய ஒரு நியாயமான குற்றம்தான்.

இயேசு ஏரோதுவினிடம் போன வரலாறுகளைப்பற்றி நாம் பேச அவசரமில்லை; எப்படியும் ஏரோது கடைசியாக அவரிடத்தில் யாதொரு குற்றமும் காணவில்லையென்றே தீர்ப்பு எழுதியனுப்பினான். தன் அபிப்பிராயத்தோடு ஏரோதுவின் அபிப்பிராயமும் சேர்ந்தது பிலாத்துவுக்கு ஒரு பலம்போல் காணப்பட்டது. என்றாலும், இது நியாயாதிபதியின் லட்சணமா? அவன் தன் பலத்திலும், பக்கத்துப் பலத்திலுமல்ல, நியாயத்தின் பலத்திலே நிற்கவேண்டியதல்லவா?

இயேசு ஏரோதுவினிடத்திலிருந்து கொண்டுவரப்பட்டவுடனே, பிலாத்து பிரதான ஆசாரியரையும் அதிகாரிகளையும் கூடிவரச்செய்து பின்வரும் தீர்ப்பைக் கூறுகிறான்:—

தீர்ப்பு: 'ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனென இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள். நான்

உங்களுக்கு முன்பாக விசாரித்தபொழுது இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்கள் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதுவினிடத்திற்கும் அனுப்பினேன், அவரும் இவனிடத்தில் குற்றங் காணவில்லை; மரணத்துக்கேதுவாக ஒன்றுஞ் செய்யவில்லையே, ஆனபடியால் இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன்' என்பதே பிலாத்துவின் தீர்ப்பு.

இப்பொழுது நியாயத்துக்குட்படுகிற எவனும் பிலாத்துவினிடத்தில் கேட்கவேண்டிய இரண்டொரு கேள்வியுண்டு. அந்தக் கேள்வியைக் கேட்போம்; பிலாத்துவே உன்னிடத்தில் கலகத்துக்குத் தூண்டிவிட்டவனாகக் கொண்டுவரப்பட்ட கைதியாகிய இயேசுவை நீ விசாரித்தும் குற்றம் கண்டுபிடிக்கவில்லை; ஏரோதுவினிடம் அனுப்பி, அவன் விசாரித்தும் குற்றங் கண்டுபிடிக்கவில்லை என்று உன் தீர்ப்பில் கூறுகிறாயே. அப்படியிருக்க நான் தண்டித்து விடுதலைசெய்வேன் என்கிறாயே அதெப்படி? நீ தண்டிக்கிறது எந்தக் குற்றத்திற்கு? நீ விடுதலைசெய்கிறது எந்தக் குற்றமில்லாமைக்கு? உத்தரவு சொல்:—எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் இதற்கு நியாயமான உத்தரவு சொல்லமுடியாது. பிலாத்து இந்த அநியாயமான தீர்ப்பைக் கூறினாலும் அது இயேசுவின் சத்துருக்களுக்குத் திருப்தியாயிருக்கவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையின் மரணத்துக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். அப்படி இணங்குவது முழு அநியாயமென்று பிலாத்து நினைத்து இயேசுவை விடுதலையாக்குகிறதற்கு நியாயம் தேடினான். இயேசுவின் குற்றமில்லாமையே பூரண நியாயமாயிருக்க பிலாத்து அதில் நின்று சாதியாமல் பண்டிகை காலத்தில் ஜனங்கள் கேட்டுக்கொள்ளும் ஒரு கைதியை விடுதலைசெய்கிற வழக்கத்தின் மூலமாய் இயேசுவை விடுதலைசெய்யப் பிரயாசப்பட்டான். இந்த வழியாய் அவன் இயேசுவை இலேசாகத் தப்பவிடலாமென்று எண்ணினான் போலிருக்கிறது. ஏனெனில் அக்காலத்தில் கலகஞ்செய்து, அந்தக் கலகத்தில் கொலைசெய்து அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான். பிலாத்து இயேசுவின் பேரையும்,

பரபாஸ் பேரையும் சொல்லி இவர்களில் யாரை இந்தப் பண்டிகையில் விடுதலைசெய்ய உங்களுக்கு இஷ்டம் என்று கேட்டான். அவர்கள் பரபாஸைவிட இயேசுவை விடுதலை செய்யவே கேட்பார்கள் என்று அவன் நினைத்திருக்கலாம். ஜனங்களோ, ஆசாரியர் மூப்பர் முதலியவர்களால் ஏவப் பட்டு பரபாஸை விடுதலைசெய்ய வேண்டுமென்று ஓலமிட் டார்கள்.

விசாரணை இப்படிப்பட்ட அமளியிலிருக்கையில், பிலாத்துவின் மனைவி ஒரு ஆள் அனுப்பி 'நீர் அந்த நீதிமானை ஒன்றுஞ் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன்' என்று சொல்லச் சொன்னாள். இது ஆச்சரியமான சொப்பனமாயிருக்கிறது. இவளுடைய பேர் புரோக்கிலா (Procle) என்று சரித்திரங் களினால் அறிகிறோம். இவள் அஞ்ஞானியாயிருந்தாலும் ஒரு உத்தமியென்று தோன்றுகிறது.[1] இந்தச் சொப்பனம் இவ ளுக்குக் காணப்படவேண்டியதென்ன? இதின் மூலமாய் தேவன் தமது குமாரனை மரணக்கினைக்கு விலக்கிப்போட அல்ல, அவருடைய குற்றமில்லாமையை உலகத்துக்கு பகிரங்கமாய் பிரகடித்தப்படுத்தி அவர் மரணமடைந்ததெல் லாம் முற்றிலும் வேறே காரணமென்று உலகத்தார் உணர்ந் தறியும்படியாகத்தான் என்று சொல்லவேண்டியது.

தன் மனைவியிடமிருந்து வந்த செய்தி பிலாத்துவின் மனதை அதிகமாய்ப் பயப்படுத்தினபோதிலும் சத்தியத்தில் அவன் நிற்கும்படி அவனுக்கு தைரியத்தைக் கொடுக்கவில்லை. அப்பால் அவன் ஆகா நாம் இந்தக் குற்றவாளியைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்று தீர்ப்புச்சொல்லி, பின்பு தண்டியாமலே பண்டிகை வழக்கம்போல் இவனை விட்டுவிடலாமென்று கேட்டதால் இவ்வளவு அமளியுண் டாகிறதாக்கும்; அதை நிறுத்தி பழைய தீர்மானப்படித் தண்டித்து ஜனங்களுக்குமுன் காட்டினால் அவர்கள் மனம்

---

[1] இயேசு உயிரோடெழுந்திருந்து கலிலேயாவுக்குப் போயிருக்கிற செய்தியை இவள் கேள்விப்பட்டு அவரைப் போய்ப் பார்த்தாளென்றும் ஒரு கதையுண்டு.

சாந்தப்படும் என்று கருதி கைதிகளே அடிக்கும் வாரைத் தானே எடுத்து அவற்றால் இயேசுவை அடித்து காயப்படுத்தி, போர்ச்சேவகரின் கூட்டமுழுவதையும் அவரிடத்தில் கூடி வரச்செய்து, அவர் வஸ்திரங்களைக் களற்றி இரத்தமும் இரத்தமோடின அவருடைய படுகாயமும், மறையும்படி சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து அவருடைய வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பாக முழங்கால் படியிட்டு யூதருடைய இராசாவே வாழ்கவென்று பரியாசம் செய்து, அவர்மேல் துப்பி அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்து, இவ்வளவு அலங்கோல ரூபத்தோடு பிலாத்து மறுபடியும் அவரை ஜனங்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து: இதோ இந்த மனுஷனைப் பாருங்கள்; உங்கள் நிமித்தம் இவ்வளவு இம்சை செய்திருக்கிறேன் என்றான். இயேசு முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வந்து காணப்பட்டார்.

எவ்வித அவமானமும், நிந்தையும் சிட்சையும் யூதரைத் திருப்திபடுத்தவில்லை; ஒகோ பிலாத்து இவரை விட்டுவிடும் படியல்லவா இந்த உபாயத்தைச் செய்கிறான் என்று அவர்கள் அறிந்து மூர்க்கவெறிகொண்டு, இவனை

சிலுவையில் அறையும்
சிலுவையில் அறையும்

என்று சத்தமிட்டார்கள். ஆ யூதேயா தேசத்து நரிகளே! காளான் நாட்டு ஓநாய்களே! நீங்கள் உங்கள் அமளியால் பரிசுத்தமும் பிழையற்றவருமான தேவாட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பூமியில் சிந்தப்பார்க்கிறீர்கள்; மகா தேவனே இதின்மூலமாய் சர்வலோகத்தையும் தமக்குள்படுத்தும்படி பார்க்கிறார். ஆனாலும் தேவநியம தீர்மானமானது உங்கள் அக்கிரம அமளியையும் அதற்கு வரவேண்டிய ஆக்கினையையும் தடுத்துவிடமாட்டாதென்பதையும் நன்றாய் அறிந்து கொள்ளுங்கள்.

இவ்வளவு செய்தும் யூதருடைய ஆசை தீரவில்லை என்று கண்ட பிலாத்து கோபமடைந்து, சிலுவையில் அறையும்படி

நான் ஒரு குற்றமும் காணேன், வேண்டுமானால் நீங்களே இவனைக் கொண்டுபோய் சிலுவையில் அறையுங்கள் என்று சொல்லி அக்கால வழக்கம்போல் தண்ணீரை அள்ளி அவர்களுக்கு முன்பாகத் தன் கைகளைக் கழுவி 'இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்; நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்' என்றான்; அதற்கு ஜனங்கள் எல்லாரும் இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலுமிருப்பதாக என்றார்கள்.

இம்மட்டோடே பிலாத்து தன் வேலையை முடித்துவிட வேண்டியது. அப்படியிருந்தால், அவன் கைகழுவினபோது சொன்னபிரகாரம், குற்றமில்லாத இரத்தத்துக்கு அவன் நீங்கினவனுயிருப்பான். அவனை அப்படியிருக்கவில்லை, அவனிடத்தில் ஒரு நாவல்ல இரு நாவிருந்தது. ஒரு சமயத்தில் தன் சுயநாவாலும் மறுசமயத்தில் மற்றவர்கள் நாவாலும் பேசி கிரியை நடப்பித்தான்.

பிலாத்து பலதரம் இறிஸ்துவின் குற்றமில்லாமையைக் கூறினதும், தண்டித்ததும், விடுதலைசெய்ய முயன்றதும், கைகளைக் கழுவினதுமான விஷயமொன்றும் யூதருடைய தீர்மானத்தை மாற்றவில்லை. துன்மார்க்கர் சட்டத்தையும் மதியார்கள்; நியாயத்தையும் பாரார்கள்; அதிகாரத்தையும் எண்ணுர்கள். தாங்கள் கொண்டதே கொள்கையென்று சாதிப்பார்கள். இது பாதாளத்தின் மூல உபதேசம் என்று சொல்லவேண்டியது. ஏனெனில் ஆதியில் சர்ப்பத்துக்குள் புகுந்து ஏவாளைக் கொன்ற பாதாளவேந்தன் இச்சமயத்தில் தன் சேனையனைத்தையும் அக்காலத்தில் எருசலேமிலிருந்த யூதருடைய மனதுக்குள்ளும் பிலாத்துவின் மனதுக்குள்ளும் பிரவேசிக்கச் செய்து அவர்களை இவ்வளவு கேட்டுக்குட்படுத்தினன் என்று அறியவேண்டியது.

கடைசியாக இனி நாம் பிலாத்துவை விசனப்படுத்துவதால் காரியம் முடியாது, நயந்து பேசுவதால்தான் காரியம் கைகூடுமென்று அந்தப் பாதகர் நினைத்து, துரையே! நீங்களே கொண்டுபோய் சிலுவையில் அறையவேண்டுமானால் அறையுங்கள், நான் அவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று சொல்லுகிறீரே, ஆனால் ஒரு சங்கதியை நீர் கவனிக்கவேண்

டியது அதாவது 'எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்ன படியால் அந்த நியாயப்பிரமாணத்தின்படியே இவன் சாக வேண்டும்' என்று தாழ்மையாய்ச் சொல்லி அவன் மனதை வசப்படுத்தினார்கள். பிலாத்து இந்த முகாந்தரத்தால் இயேசுவை விடுதலை செய்ய அதிக நியாயமிருக்கிறது. இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே பிலாத்து ஜனங்களைப் பார்த்து, என் குடிகளில் எவனுவது தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னாலும், அல்லது நான் சூரியனுடைய குமாரன், சந்திரனுடைய குமாரன் என்று சொன்னாலும் எனக்குக் கவையென்ன? அது என் தேசப்பிரமாணத்தோடே சேர்ந்ததல்ல, ஆதலால் இந்த கைதிக்கு விடுதலை செய்கிறேன் என்று சொல்லி வழக்கை முடிக்கவேண்டியது. அதற்குப் பதிலாக யூதர் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டபோது அவன் அதிகமாய் பயந்து இயேசுவை நோக்கி 'நீ எங்கே இருந்து வந்தவன்' என்று கேட்டான். அதற்கு அவர் மறு மொழி சொல்லவில்லை. இயேசு பிலாத்து கேட்ட கேள்விக்கு மறுமொழி கொடாதது அவனுக்குள் எரிச்சலை எழுப்பிற்று. ஒருவேளை இயேசு பேசாமலிருந்ததைக் கண்ட யூதர், இது பிலாத்துவின் மனதை அவருக்கு விரோதமாக்க நல்ல சமய மென்று கவனித்து, துரையே! நீர் கேள்வி கேட்க இவன் வாய்பேசாமலிருக்கிறானே; இவன் கர்வி, இவன் இடும்பன்; இவனை நீர் இலேசில் விடலாகாது என்று சொல்லியுமிருக்க லாம். ஏனெனில் இதுமுதல் பிலாத்துவின் பேச்சு மாறு கிறது. அவன் இயேசுவை நோக்கி 'நீ என்னோடே பேசுகிற தில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும் உன்னை விடுதலை செய்ய எனக்கு அதிகார முண்டென்றும் உனக்குத் தெரியாதா? என்று உருட்டினான். இந்த வாசகம் யூதருக்கு ஆனந்த சந்தோஷத்தையுண்டாக்கி இருக்கவேண்டியது. இந்த வீம்பான வார்த்தையைத் தடுத் துப் பேசாத பட்சத்தில் பிலாத்துவின் பெருமையும், உலக முடியுமட்டும் பல இடங்களில் அதிகாரம் பெறும் மனுமக்கள் பெருமையும் அடங்காதென்று, தேவகுமாரன் மறுமொழியாக 'பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என் மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது, ஆனபடியினாலே

என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிகப் பாவ முண்டு' என்றார். இந்த வார்த்தைகளால் தம்மை விடுதலை செய்ய அல்லது சிலுவையில் அறைய பிலாத்துவுக்கு அதிகார மில்லை என்றும், இச்சமயத்தில் அந்த அதிகாரத்தை தாமே அவனுக்குக் கொடுத்திருக்கிறதுபோலவும் உணர்த்தி, தம் முடைய வாதிகள் அனைவரையும் பாவிகள் வரிசையில் வைத்து தம்மை பாவமில்லாத புண்ணிய புருஷனாக விளங் கப்பண்ணினார். அத்தோடு பிலாத்துவின் கருவம் அடங் கிற்று. அவன் எப்படியும் நாம் இயேசுவை விடுதலைசெய்து போடவேண்டுமென்று தீர்மானம் பண்ணினான்.

இம்மட்டும் பிலாத்து இந்த வியாச்சியத்தில் நீதிநெறி தவறி யூதருக்கு வெகுவாய் இடங்கொடுத்து குற்றமற்ற கைதியை இம்சைக்குள்படுத்தி தன் நிலவரமில்லாமையை ருசுப்படுத்தினதால், யூதர் அவனுடைய தோள்மேல் ஏறி இருக்கிறவர்கள்போலானார்கள். இனி அவர்களை கீழே தள்ள அவனால் கூடுமா? கூடாதே, இல்லை அவர்கள் அவன் தோள் மேல் இருந்துகொண்டே அவன் தலையை கோடரியால் வெட்ட வெகு சுளுவல்லவா? அவர்கள் அப்படியே செய்தார் கள். அவர்கள் அனைவரும் பிலாத்துவை நோக்கி 'இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயருக்கு சிநேகிதன் அல்ல; தன்னை இராஜா என்கிறவன் எவனை அவன் இராயனுக்கு விரோதி' என்று சத்தமிட்டார்கள். இந்த வார்த்தையைக் கேட்டவுடனே பிலாத்து பயந்து, நாம் இந்தச் சமயத்தில் குடிகளுக்கு இணங்காத பட்சத்தில் அவர்கள் அனைவரும் நமக்கு விரோதமாய் ரோம இராயனுக்குப் பிரியாது எழுது வார்கள், அந்தச் சங்கடம் என்னத்துக்கு என்று அஞ்சி,

அவரைச் சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தான்.

பூலோகம் தோன்றினதுமுதல் இப்படிப்பட்ட அநியாய மான தீர்ப்பு எந்தக் கச்சேரியிலும் கூறப்பட்டிருக்கமாட் டாது. உலக அதிகாரிகள் நியாயம் தப்பி நடக்கிறதும், குற்றமற்றவர்களை கொலைக்குள்படுத்துகிறதும் எவ்விதம் என்று உலகம் அறியும்படி பிலாத்துவின் நடபடிகள் ஒரு ஞாபக ஸ்தம்பம்போல் இருக்கின்றன.

பிலாத்து என்ற பேருக்கு வேலாயுதம் தரித்தவன் என்று பொருளாகும். மெய்யாகவே இவன் குற்றமற்ற இயேசுவை தன் அநியாயம் என்னும் வேலால் மரணத்துக்குட்படுத்தினான். அப்பால் நாம் பிலாத்துவைப்பற்றி இரண்டு நல்ல குறிப்புகளைக் காண்கிறோம். சிலுவையில் அறையப்படுகிறவர்கள் பேரை சிலுவைக்குமேலே எழுதிவைக்கிற வழக்கப்படி இயேசுவின் சிலுவையின்மேலும் ஒன்று எழுதிவைக்கப்பட்டிருந்தது. அந்த வாசகம் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. அவை ஒன்றுக்கொன்று வார்த்தைகளில் சற்று வித்தியாசப்பட்டிருந்தாலும் பொருளில் ஒன்றுதான். நாலு சுவிசேஷங்களிலும் வருகிற வார்த்தைகள் ஒன்றையும் விட்டுவிடாமல் பூரணமாய் அமைத்து ஒரு வாசகம் எழுதினால் பின்வருமாறு வரும்:

'நசரேயனாகிய இவன்
யூதருடைய இராஜாவாகிய இயேசு.'

இந்த வாசகம் சரியாய் எழுதப்படவில்லை என்றும் இதை மாற்றி யூதருடைய இராஜாவென்று இயேசு சொன்னதாக எழுதவேண்டுமென்றும் பிலாத்துவைக் கேட்டார்கள். அதற்குப் பிலாத்து,

'நான் எழுதினது எழுதினதே'

என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டான். இந்தச் சிறந்த தீர்மானமான குணத்தையிட்டு நாம் இவனைப் புகழவேண்டியதுதான். ஆனால் இதில் இவனுக்கு லாபமும் இல்லை, கிறிஸ்துவுக்கு லாபமும் இல்லை, யூதருக்கு நஷ்டமுமில்லை. எப்படியும் இது அவனுக்குப் புதிதாய் வந்த புத்தி. இந்த புத்தி இவனுக்குச் சுயமாய் உண்டாயிற்றோ, அல்லது அவன் மனைவியின் ஏவுதலால் உண்டாயிற்றோ தெரியவில்லை. எப்படியும் இது தேவஆவியின் ஏவுதல் கலந்தது என்று நாம் சொல்லவேண்டியது. ஒருவேளை அவன் தான் செய்த புத்தியீனங்களையும் அநீதமான தீர்மானங்களையும் சிந்தித்து கடவுளுடைய கிருபை வரத்துக்குப் பிரார்த்தித்துக்கொண்டிருந்த சமயத்தில் யூதர்கள் இந்த மேல்விலாசத்தை மாற்றும்படிக் கேட்டிருக்கலாம். அவன் அந்த தியான அனல் மூண்டதால், ஒரே சாதனையாய் 'நான் எழுதினது எழுதி

னதே' என்று சொல்லிவிட்டான். எப்படியும், ன் மாற்றும்படி சம்மதியாத அந்த வாசகத்தால் இயேசுவை யூதருடைய இராஜாவாக என்றென்றைக்கும் பட்டம் சூட்டி னன் என்று சொல்லவேண்டியது. இதை கிறிஸ்துவின் ஆறும் அபிஷேகம் என்று சொல்லலாம். அவர் ஆதியிலே தேவாவியாலும் (ஏசா. 61:1; லூக். 4:18) அதின்பின்பு மகிழ்ச்சியின் எண்ணெயாலும் (சங். 45:7) அப்பால் ஜலத்தா லும் (மத். 3:16) அதன்பின்பு ளது தைலத்தாலும் (மாற். 14:3) அதற்குப்பின் குட்டு அடி என்னும் தைலத்தாலும் (மத். 26:67) கடைசியாக இரத்த தைலத்தாலும் உலகத்தா ரின் இரட்சண்ய இராஜாவும் யூதரின் மேசியாவுமாக அபிஷேகம் பெற்றார்.

'நான் எழுதினது எழுதினதே' என்று பிலாத்து இப் போது சொன்ன மாதிரியாக கிறிஸ்துவின் விசாரணையின் நெடுக, 'இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நான் சொன்னது சொன்னபடியே' என்றும், 'நான் கையை கழுவினது கழுவினதே' என்றும் இவரை விடுதலை செய் கிறேன் என்று சொன்னது சொன்னபடியே என்றும் சொல் லிக்கொண்டேயிருப்பானதால் நாம் இவனை எவ்வளவோ புகழவேண்டியதிருக்கும்.

அப்பால் பிலாத்து இயேசுவின் உடலை அடக்கம் செய்யும் படி தன்னிடத்தில் கேட்ட யோசேப்புக்கு இணங்கினான் என்று பார்க்கிறோம். இப்படிப் பிலாத்து இணங்கினது பரி தானத்தினால் அல்ல பரிதாபத்தினால் என்று சொல்லவேண் டியது. ரோமைச் சிறைவாசிகள் சிலுவையில் சாகவைக் கப்பட்டு நாய் நரிகளால் தின்னப்பட விடப்படுகிறதுண்டு. பிலாத்து யூதருக்குள் வழங்கின மரியாதையான அடக்க முறையை இந்த விஷயத்தில் அநுசரிப்பது பிசகல்ல என்று சம்மதித்திருக்கலாம். இப்படி சிலுவையில் அறையப்பட்ட பிரேதங்களைக் கொடுப்பது சாதாரண வழக்கமில்லை. சிலர் இப்படிக் கேட்டதினிமித்தம் மரணத்துக்குள்ளானதாக பிற்கால சரித்திரங்களுமுண்டு. யோசேப்புக்கும் இதினி மித்தம் துன்பமுண்டாகி அவர் சிலநாள் தமது உயிர் தப்பும் படி ஒளித்திருந்ததாக சிலர் எழுதியிருக்கிறார்கள்.

கிறிஸ்து கொலைசெய்யப்பட்ட பின்பு, யூதர் தங்கள் எரிச்சலிலிருந்து ஓயவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலைப் பரிட்சிக்கும்படி கல்லறையைக் காவல்பண்ண வேண்டுமென்று பிலாத்துவினிடம் கேட்டார்கள். அதற்கு பிலாத்து 'உங்களுக்கு காவற்சேவகர் உண்டே; போய் உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்' என்று உத்தரவு கொடுத்தான். இதுதான் அவனுடைய சரித்திர சம்பந்தமாய் நாம் அறிகிற கடைசிக் குறிப்பா யிருக்கிறது. செத்த பிரேதத்துக்கு காவல் வைப்பதற்கும், முத்திரை வைப்பதற்கும் இதுதான் முதல் குறிப்பு என்று காண்கிறோம். இயேசுவின் உயிருக்கும், பேருக்கும், கீர்த் திக்கும், காவலாய் இருக்கவேண்டிய காலத்தில் காவல் காராமல், துன்மார்க்கத்தில் அந்த பரம பொக்கிஷத்தை ஒப்புவித்து கனவீனப்படுத்தின பிலாத்து, அவர் மரித்த பின்பு காபந்துபண்ண உத்தரவு செய்கிறான். அவர் எப்போ தும் காபந்துபண்ணத்தக்க உயர்ந்த பொக்கிஷம்தான். வானத்துப் புருஷனை பூலோகமக்கள் கூடிக் கொன்று போட்டு அவர்களே பிணங்காக்கும் வெட்டியான்களாகிறது வேடிக்கையாயிருக்கிறதல்லவா? ஆசாரியரே, கூட்டம் கூடுங்கள்; மூப்பரே ஆலோசனை செய்யுங்கள்; சேவகரே! தடிகளோடும் ஈட்டிகளோடும் புறப்படுங்கள்; கல்லறை யண்டை வாருங்கள்; சூழ நில்லுங்கள்; கல்லறையை முத்திரையிடுங்கள்; தூங்காமல் காவல் காருங்கள். பிலாத் துவே சகல நடபடிக்கைக்கும் உறுதிப்பாடு கொடு. யூதர் 'அந்த எத்தன்' என்கிறார்களே, அவர் எத்தனல்ல அவர் உனக்கும் எனக்கும் யூதருக்கும் 'அத்தன்' அல்லது ஆண்ட வர், அல்லது தேவன். தேவனை கல்லறையில் மூடி மனுஷர் கள் காவல் காக்கிற வேடிக்கையை பரலோகமே நீ குனிந்து பார்; பூலோகமே நீ கூர்ந்துபார்; பாதாளலோகமே நீ நிமிர்ந்து தலையைத் தூக்கிப்பார். காவல் காத்தவர்கள் கலங்கி நின்று இதென்ன அதிசயம் என்று திகைக்கவும், ஆசாரியர் அலறவும், பிலாத்து புலம்பவும் நானும் நீயும், விசு வாசமுள்ள லோகமனைத்தும் கீதம் பாடவும் துவக்குவோ மாக; ஏனெனில் அவர் கல்லறையையும் மரணவாசலையும் திறந்து உயிரோடெழுந்திருந்து பரமேறி நின்றுகொண்டு

'மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலமாய் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்துக்கு முரிய திறவுகோல்களை யுடையவனாயிருக்கிறேன்' என்று திருவுளம்பற்றுகிறார்.

இம்மட்டும் எழுதிய பிலாத்துவின் சரித்திரக் குறிப்புகளால் அவனைப் புகழவும் இகழவுமான அநேக விஷயங்கள் வெளிப்படுகின்றன. என்றாலும் எல்லாவற்றுக்கும் மேலாக அவன் நியாயமறிந்தும் அதை நிறைவேற்றமாட்டாதவனும், உணர்ச்சியடைந்தும் அதை சட்டைபண்ணாதவனும், குற்றமில்லையென்று கண்டும் தண்டிக்கிறவனும், ஆள் கூட்டத்துக்கு அஞ்சி தன் மனச்சாட்சிக்கு விரோதம் செய்கிறவனுமான மூடன் என்றும் திட்டமாய் விளங்குகிறது. மேலும் இவன் இரட்சிப்பைக் கண்டடையாமல் போனவிஷயம் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. கிறிஸ்துவைக் கொலை செய்யும்படி அனுப்பப்பட்ட போர்ச்சேவகனிடத்தில் விளங்கிய புத்தி இவனிடத்தில் விளங்கவில்லை என்று பார்க்கிறோம் (லூக். 23:47). இதிலும் அதிகமாய் குணப்பட்ட கள்ளனிலும் இவன் ஆத்தும நிலைமையில் தாழ்ந்த ஸ்திதியுடையவனாயிருக்கிறான்.

இந்தப் பிலாத்துவின் பேரை அப்போஸ்தலரும், ஆதிக் கிறிஸ்தவர்களும் மறக்கவேயில்லை (அப். 3:13; 4:28; 13:28; 1 தீமோ. 6:14). பிற்காலத்து கிறிஸ்தவர்களும் அவன் பேரால் உலக இரட்சகர் மரணக்கினையான காலத்தையும் வகையையும் என்றென்றைக்கும் உலகத்தில் ஸ்தாபிக்கிறவண்ணமாய் அவனுடைய பேரை தங்களுடைய விசுவாச அறிக்கையிலும் அமைத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த விசேஷித்த மனுஷனுடைய் பிற்காரியத்தைப்பற்றி புறச் சரித்திரங்களில் பல குறிப்புகளடங்கியிருக்கின்றன. இந்த வரலாறுகளுக்குப் பின்பு பிலாத்து சமாரியருக்கு ஒரு பெரிய அநியாயம் செய்தான். எப்படியெனில் அவன் யூதேயாவுக்கு அதிபதியான பத்தாம் வருஷத்தில் (கி. பி. 36) ஒருவன் தன்னைச் சமாரியருக்குள் பெரியவனாக்கிக் கொள்ளும்படித் துணிந்து அவர்களிடம் போய் மோசேயினால் கெர்சீம் மலையில் மறைத்துவைக்கப்பட்டிருக்

கிற பரிசுத்த பாத்திரங்களை நான் உங்களுக்குக் காண்பிக் கிறேன் என்று சொல்லி ஜனங்களை வரும்படி அழைத்தான். மோசேயின்மேலும் கெர்சீம் மலைமேலும் மூடபத்தி வைராக் கியம் கொண்டிருந்த சமாரியர் அதைக் கேட்டவுடனே மெய்யென்று தப்பாய் நம்பி ஒரு புண்ணிய யாத்திரைக்குப் புறப்படுவதுபோல் கூடி ஆயுதபாணிகளாக கெர்சீம்மலைக்கு வந்தார்கள். இந்த சமாசாரத்தை வழியில் கேட்ட சமாரிய ரும் அவர்களோடு கூடிக்கொண்டார்கள். இச்செய்தியைப் பிலாத்து கேள்விப்பட்டு, அவர்கள் அனைவரும் உரோமை இராச்சியத்துக்கு விரோதமாகக் கலகம் பண்ணும்படிக் கூடுகிறார்களென்று தப்பாய் எண்ணி அநேக குதிரை வீரரோடும், காலாட்சேனையோடும் புறப்பட்டுப்போய் அவர் களை வழிமடக்கி அநேகரை யடித்து மற்றவர்களைச் சிறை பிடித்து அக்கூட்டத்தின் முக்கியமானவர்களை கொன்று போட்டான். உடனே சமாரியர் ஒரு மாநாடுகூடி பிலாத்து வின் அநியாயங்களையும் பழிகளையும் எடுத்துக்காட்டி அவ னுக்கு விரோதமாய் எழும்பி, அக்காலத்தில் அத்திசை களுக்கு உரோம இராயனின் பிரதிநிதியாயிருந்த வைற்றே லியஸ் (Vitellius) என்பவனிடத்தில் பிரியாதுசெய்தார்கள் வைற்றேலியஸ், உடனே மார்சேலியாஸ் என்ற தன் சிநேகி தனை யூதேயாவுக்கு அதிபதியாக வைத்து, பிலாத்துவை உரோமை இராயனிடம் விசாரணைக்கு அனுப்பினான். பிலாத்து உரோமையில் சேருமுன் திபேரியு இராயன் மரித் துப்போய் கலிகுலா இராயனாயிருந்தான். அவ்விடத்தில் அவனுக்கு க்ஷேமமான தீர்மானம் கிடையாததால் உத்தியோ கத்தை இழந்து, தனக்குண்டான சங்கடங்களினால் மன முடைந்து தற்கொலை புரிந்து மரித்ததாகச் சொல்லுகிறார்கள். 'கர்த்தரோடு வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்; வானத்திலிருந்து அவர்கள்மேல் குமுறுவார்' என்ற வேத வாசகம் பொய்யாகுமா?

பிலாத்து இன்ன இடத்தில் மரணமடைந்தானென்று திட்டமாய் நாம் சொல்ல ஏதுவில்லை. அவன் ரோன் நதியின் மேல் கட்டப்பட்டிருக்கிற வியன்னு என்னும் நகரத்தில் சிறையாயிருந்து மரித்தான் என்று ஒரு பாரம்பரை

சொல்லப்படுகிறது. அங்கே 52 அடி உயரமுள்ள ஒரு சமாதிகோபுரம் பொந்தியு பிலாத்துவின் கல்லறை என்ற பேரால் அழைக்கப்பட்டுவருகிறது. வேறு சிலர் அவன் தன் மனவேதனையை மறைத்துக்கொள்ளும்படி. ஒரு மலையை அடுத்து அங்கே சந்நியாசிபோல் சஞ்சரித்து, சஞ்சலத்தால் காலம் கழித்து கடைசியாக அவன் சஞ்சலம் பொறுக்கக் கூடாமல் அம்மலைமேலிருந்த ஒரு சுனையில் மூழ்கி தன் உயிரை மாய்த்துக்கொண்டான் என்று சொல்லுகிறார்கள். அந்த மலை இந்நாளிலும் பிலாத்துவின் மலை என்று அழைக்கப்பட்டுவருகிறது.

கிறிஸ்துவின் மரணக்கினையின் வரலாறுகளை பிலாத்து உரோமை இராயனுக்கு எழுதியனுப்பினதாக இரண்டு மூன்று கடிதங்கள் இக்காலத்தில் வழங்கப்பட்டுவருகின்றன. அவைகள் அனைத்தும் கட்டுப்பாடான நிருபங்கள் என்று பலர் அபிப்பிராயப்படுகிறபோதிலும், வேறு சிலர், அந்த நிருபங்களைக் குறித்து ஆதிச்சபைப் பிதாக்களுடைய ஆகமங்களில் சில குறிப்புகள் வருகிறதால், முற்றிலும் கட்டுப்பாடென்று தள்ளிவிடலாகாதென்றும், மெய்யாகவே பிலாத்து எழுதியனுப்பின பூர்வ நகலோடு சில கூடுதலும் குறைதலும் உண்டாகியிருக்கலாமென்றும் தீர்மானிக்கிறார்கள். அதின் விபரத்தை இதினடியில் காட்டுவது அவசரமில்லை.

குணப்பட்ட கள்ளன்

இம்மட்டும் நாம் வாசித்த சரித்திரங்களில் இதை விசேஷமானது என்கலாம். ஒரு கள்ளன் மனம்திரும்பிக் குணப்பட்ட வரலாறை நாம் இதிலுலே அறிய வதுவிருக்கிறது. குணப்படுதல் கடினமான ஒரு முயற்சியாய் இருந்தபோதிலும் எந்த மனுஷனும், எந்த பாவியும் அது எனக்குத் தூரமான காரியம் என்று சொல்லக்கூடாது. 'பரலோக இராச்சியம் பலவந்தம் பண்ணப்படுகிறது, பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்' என்பதே அதின் இரகசியத்தை உணர்த்தும் வேதசூத்திரமாயிருக்கிறது. மனம்திரும்பவேண்டும், குணப்படவேண்டும், பரிசுத்தமாய் நடக்கவேண்டும் என்று ஒரு பாவி விரும்பிக் கொள்ளுகிறதிலுலே மனம்திரும்புதலும், குணப்படுதலும், பரிசுத்தமும் உண்டாகமாட்டாது. இவைகளையடைய அந்தந்தப் பாவி செய்யவேண்டிய முயற்சிகளுமுண்டு. இரட்சண்யமும், பாவமன்னிப்பும் தேவனுடைய இலவசமான ஈவாக இருந்தபோதிலும், பாவிகள், அதை தங்களுக்கு வேண்டுமென்று கேட்கவும்வேண்டும், வாங்கும்படி தங்கள் இருதயத்தின் கரங்களை நீட்டவும்வேண்டும். இப்படிச் செய்கிறதுண்டானுல் எவ்வித பாவியும், எவ்வளவு காலத்து பாவியும் ஏமாந்துபோகமாட்டான். இரட்சிப்பின் விஷயத்தில் நாங்கள் ஏமாந்துபோனேம் என்று சொல்லிக்கொண்டு திரிகிற பாவிகள், தங்கள் பாகத்து கடைமைகளை நிறைவேற்றுமல் போகிறதினுலேதான் அதை இன்னும் அநுபவித்துக்கொள்ளாதே போகிறார்கள் என்று தீர்மானமாய்ச் சொல்லவேண்டியது. நெடுங்காலம் பாவத்தில் நிலைத்திருந்தாலும் தேவகிருபையானது அப்படிப்பட்டவர்களையும் இரட்சிக்கத்தக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது என்பதை நாம் பின்வரும் சரித்திரத்தின் மூலமாய் அறிந்துகொள்ள இடமுண்டு.

காளன் என்னும் தேசம் மலைகளும் பள்ளத்தாக்குகளும், ஆறுகளும் கேணிகளும் புதர்களும் காடுகளுமுள்ள ஒரு காடாக இருந்தது. அந்த நாட்டின் விளைவு விருத்தியினாலும் வியாபார முறுக்கினாலும் குடிகள் அதிகத் தனவான்களாயிருந்தார்கள். பழமரச்சோலையில் பட்சிகளும், புஷ்பச்செடி வனத்தில் தேனீக்களும், தானியப்பட்டரைகளில் எலிகளும் எப்படி தங்கியிருக்குமோ அவ்வண்ணம் கனம் தனமுள்ளோர் தங்கும் நாடுகளில் கள்ளர் சஞ்சரிப்பது இயல்பாகக் காண்கிறோம். காளன் நாடு வாழ்வுள்ள ஒரு நாடாயிருந்தது. அதின் வாழ்வு வித்தியைத்தொட்டு அதற்கு பாலும் தேனும் ஓடும் தேசம் என்ற வழக்கச் சொல் வழங்கிவந்தது. காளன் நாட்டுக் கள்ளரை நம்முடைய நாட்டுக் கள்ளருக்கொத்தவர்கள் என்கலாம். அவர்கள் மலைக்கெபிகளிலும் மரஒதுக்குகளிலும் பதுங்கியிருந்துகொண்டு வழிப்பயணம் செய்கிறவர்களை கொள்ளையிட்டு கொலைசெய்து சகிக்கக் கூடாத அநியாயங்களைச் செய்துவந்தார்கள் (லூக். 10:30). இந்தக் கள்ளர், கூட்டம்கூட்டமாய் திரிந்தலைவார்கள். இவர்களைப் பிடிக்கும்படி கத்திகள், ஈட்டிகள், தடிகளோடும் திரண்ட சேனையோடும் போகவேண்டியதாயிருந்தது (லூக். 22:52).

நாம் இப்போது தியானிக்கும்படிப்போகிற திருடன் இப்படிப்பட்டவர்களில் ஒருவன்தான். உலக இரட்சகராகிய இயேசு தமது ஊழியத்தை முடிக்கப்போகிற காலத்தில் இவனும் வேறு சில திருடரும் அக்காலத்து இராசாங்கத்தால் பிடிபட்டு தங்களுடைய திருட்டுத் தொழிலை விட்டோயும் படிக் கட்டாயம்செய்யப்பட்டார்கள். இயேசுவை அநியாயமாய் கொலைசெய்யவேண்டுமென்று யூதர் செய்த முயற்சியினாலே சாவகாசத்தில் சிலுவையில் அறையப்படும்படி வைக்கப்பட்டிருந்த சில கள்ளருடைய மரணகாலம் சமீபித்துவிட்டது. இவர்களில் மூன்று கள்ளர் விசேஷமானவர்களாய் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பேர்மாத்திரம் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரபாஸ்—இந்த பரபாஸ் மரணக்கினைத் தீர்ப்பைப் பெற்றவனாயிருந்தாலும், பண்டிகை தோறும் ஒரு குற்றவாளியை விடுதலைசெய்யவேண்டிய

முறையின்படி ஜனங்களுடைய விருப்பத்தின்மேல் விடுதலை யாக்கப்பட்டு தன் வீட்டுக்குப் போய்விட்டான் என்று சொல்லவேண்டியது. வேறு இரண்டு திருடருடைய பேரும் அப்போகிரிபா ஆகமத்து ஆக்கியோனால் எழுதப்பட்டிருக் கிறது. அவர்களில் ஒருவன் பேர் திஸ்மாஸ் (Dysmas) மற்றவன் பேர் கெஸ்ற்றஸ் (Gestas). இதுதான் அவர்க ளுடைய மெய்யான பேர் என்று நாம் அப்போகிரிபா ஆகமத்தைக்கொண்டு சாதிக்கக்கூடாது.

கள்ளரின் தலைவனுகிய பரபாஸ், குடிகளுடைய விண் ணப்பத்தின்படி விடுதலையானபோதிலும் இந்த இரண்டு திருடரும் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படும்படி திட்டம்செய்யப்பட்டது. இயேசுவை தனித்துக் கொலை செய்வதால் அவருக்குண்டாகிற கனவீனத்திலும் இப்படி கள்ளரோடு சேர்த்து கொலைசெய்வதால் அதிகக் கனவீனம் உண்டாகும் என்றெண்ணிச் செய்தார்களாக்கும். அல்ல வென்று, மூன்று திருடர் பிடிபட்டு கொலைசெய்யப்பட்டப் போகிறார்கள் என்ற பொதுச் செய்தியை சனத்தாருக்குள் பரம்பச்செய்து, அந்தவிதமாய் மிகுந்த நன்மைகளைச் செய்து வந்த இயேசுவின் மரண வரலாற்றை மறைத்துப்போடலா மென்று இவ்வண்ணம் ஏற்பாடு பண்ணியிருந்தாலுமிருக்க லாம். கள்ளரோடு மாண்டாலும் வெள்ளரோடு மாண்டாலும், இயேசு இயேசுதான் என்ற உயர்ந்த ஞானம் அவர்களுடைய மனதுக்கு விளங்கவில்லை. குப்பையிலிருந்தாலும் குன்று மணி மங்காது. ஆயிரம் காகங்கள் மத்தியில் ஒரு அன்ன மிருந்தாலும் அன்னம் அன்னமே.

இயேசுவோடு மரணக்கினையடையும்படி தீர்ப்புப்பெற்ற இந்த இரண்டு திருடரும், தங்களைப் பிடித்த சேவகரையும் அடித்த ஆட்களையும், சாட்சி சொன்னவர்களையும் தீர்ப்புச் செய்த நியாயாதிபதியையும் திட்டுகிறதைவிட இயேசுவைத் திட்ட அதிகமாய் ஏவப்பட்டார்கள்; ஏனெனில் இயேசுவி னிமித்தம்தான் இவர்களுடைய சாவுநாள் இப்படித் திடீ ரென்று நெருங்கிவிட்டது; மற்றப்படி பண்டிகையெல்லாம் ஓய்ந்து வெகுகாலம் செல்லும்; அதற்குள்ளாக அவர்கள் ஒருவேளை பரிதானத்தாலும் அல்லது கள்ளத்தனமாய்தப்பி

ஓடுவதாலும் தங்கள் உயிரை நீடித்திருக்க பண்ணிக்கொள்ள லாம். இப்பொழுது அதற்கு இடமில்லாததால் அவர்கள் இயேசுவின்மேல் ஆங்காரம் கொண்டார்கள்.

சிலுவையில் அறையும்படி தீர்ப்புப்பெற்றவர்கள் வழக்கம் போல தங்கள் சிலுவைக் கட்டைகளைச் சுமந்துபோகவேண்டி யது. அப்படியே இயேசுவும் திருடர் இருவரும் தங்கள் தங்கள் சிலுகைவளைச் சுமந்து கொலைக்களம் சேர்ந்து, அவ ரவர் சிலுவையின்மேல் கிடத்தி ஆணியடிக்கப்பட்டு அதன் பின் அதற்கென்று தோண்டப்பட்டிருந்த குழிகளில் இறக்கி விடப்பட்டார்கள். சிலுவையைச் சுமப்பதும், அதிலே அறையப்படுவதும், அதிலிருந்தே சாவதும் சின்னக் காரிய மல்ல. அப்படிப்பட்ட சாவும் வேதனையும் அவமானமுமான சாவாக இருந்தது. அந்த வேதனையைக் குறைப்பதற்காக கரியபோளம் கலந்த திராட்சரசம் கொடுப்பதும் வழக்கமா யிருந்தது.

இந்த இரண்டு திருடரும் இயேசுவின் வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலுமாக சிலுவையில் தொங்கினார்கள். இப்படி அவர்கள் மரத்திலே மரணமடையும்படித் தொங்கின விஷய மானது இனிமேல் பூமிக்கும் அதின் வாழ்வுகளுக்கும் பாக்கியங்களுக்கும் அவர்களைத் தூரமானவர்கள் என்பதை உணர்த்திற்று. திருடர் இயேசுவோடு தொங்கும்போது தங்களுக்கு ஒரு அவமானமுண்டானதுபோல எண்ணவே இல்லை. அவர்களை ஒருவரும் அவமானப்படுத்தவுமில்லை; ஆனால் அச்சமயத்தில் இயேசு காதால் கேட்கக்கூடாத அநேக அவமானங்களையும் நிந்தையான வார்த்தைகளையும் சகித்தார். அவரைக் கொலைசெய்த பகைஞரெல்லாரும் அவரை நிந்திக்கிறதை இந்த இரண்டு திருடரும் கேட்டு தாங்களும் அவரைத் தூஷிக்க ஆரம்பித்தார்கள். சிலுவை யில் அறையப்பட்டவர்கள் என்ன பேசினாலும் அதற்கு கேள்வியில்லை. ஆதலால் அப்படிப்பட்டவர்கள் பெரும்பா லும் தங்கள் பகைவரைப் போ சொல்லி, தூஷித்து, நிந்தித்து சபித்துக்கொண்டே இருப்பார்கள். இயேசுவை அவர்கள் இப்படிப்பட்ட விஷயத்துக்காக தூஷித்துப் பேசும்படி ஏவப்படாவிட்டாலும் இவர் நிமித்தமல்லவா நம்முடைய ஜீவ

காலம் இப்படித் திடீரென்று குறுகிவிட்டது என்று எரிச்சலடைந்து தூஷித்தார்கள் என்று சொல்லவேண்டியது. அந்தத் தூஷணங்களையெல்லாம் இயேசு பொறுமையாய் சகித்தார். அவர் வையப்படும்போது பதில் வையாமலும் பாடுபடும்போது பயமுறுத்தாமலும் இருந்தார். அவர் நாட்டிலும் காட்டிலும், ஊருக்குள்ளும் சிலுவைமேலும் இயேசுவாகவே இருந்தார்.

சற்றுநேரத்துக்குள்ளாக அவ்விரு குற்றவாளிகளில் ஒருவனுடைய குணம் திடீரென்று மாறிற்று. இந்த மாறுதலுக்குக் காரணம் இன்னதென்று நாம் அறிய ஏதுவில்லை. இந்த மாறுதலடைந்த திருடனைக் குறித்துத்தான் நாம் தியானிக்கிறவர்களாயிருக்கிறோம். இயேசுவின் இடது பக்கத்திலிருந்த குற்றவாளி தன் தூஷணத்தையும் நிந்தையையும் பொழிந்துகொண்டேயிருந்தான். வலதுபக்கத்தில் அறையப்பட்டிருந்த கள்ளனோ முதலில் அவனோடுகூடி நிந்தையான வார்த்தைகளை கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பேசினாலும் பிற்பாடு மாற்றிப்பேசினான். நிந்தித்த குற்றவாளி கிறிஸ்துவைப் பார்த்து 'நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்' என்று நிந்தித்தான். இப்படி இகழ்ந்து பேசினால் இயேசு மானம்கொண்டு தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தி அற்புதமாய் தன்னையும் அவர்களையும் சிலுவையிலிருந்து இறங்கிவரப்பண்ணினாலும் பண்ணுவார். அப்போது நாம் தப்பிக்கொள்ளலாம் என்று எண்ணிச் சொன்னாலும் சொல்லியிருக்கலாம். ஏனெனில் கிறிஸ்து நடப்பித்த அநேக அற்புத செயல்களையும் விசேஷமாய் மரித்த நாலாம் நாளில் கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டலாசருவைப்பற்றிய வரலாறுகளையும் அவன் கேள்விப்பட்டு அல்லது பார்த்திருக்கலாம். இப்படிப் பந்தயம்போட்டு அற்புதம் செய்வது இயேசுவின் வழக்கமில்லை. தன் உடன் கள்ளன் இப்படிச் சொன்ன விஷயம் வலதுபக்கத்தில் தொங்கின மனுஷனுக்கு ஆச்சரியமாய்க் காணப்பட்டது. அவன் அந்தத் திருடனை நோக்கி 'நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ குற்றவாளிகளாய் இருக்கிறோம், நாம் நடப்பித்தவை

களுக்குத் தக்க பலனை நியாயப்படி அடைகிறோம், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே' என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே நீர் உம்முடைய இராச்சியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்று விண்ணப்பம்பண்ணி தன் வார்த்தைகளை முடித்தான்.

இந்த சுருக்கமான வாசகம் இவனை இரட்சண்ய சேனையின் சிரேஷ்டரில் ஒருவனுக்குகிறது. ஒரு கள்ளனிடத்திலும், களவு செய்ததினிமித்தம் மரணக்கினையை சகிக்கிறவனிடத்திலும் இப்படிப்பட்ட மாறுதல் உண்டாகிறது. ஆச்சரியமல்லவா? இந்த மாறுதலின் இரகசியமென்னவென்று தெரியுதில்லை. இயேசுவின் குற்றமில்லாமையும், அவரில் விளங்கின பொறுமையும், அவர் தமது சத்துருக்களுக்காக மன்றாடினதும் (லூக். 23:34) காரணமாயிருந்ததோ, அல்லது அவருடைய மூன்றின சரித்திரத்தைப்பற்றிய அவனுடைய அறிவு காரணமாயிருந்ததோ தெரியுதில்லை. இதற்குமிஞ்சின காரணம் ஒன்றிருந்ததென்றே சொல்லவேண்டியது அதென்ன? இயேசு சிலுவையிலிருந்தும் பாவிகளை இரட்சிக்க வல்லவர் என்ற சத்தியம் உலகத்துக்கு வெளிப்படும் பொருட்டாக இப்படி நடந்ததென்றே சொல்லவேண்டியது. ஆ என் இயேசுவே நீர் பூமியிலிருந்தும். ஆகாயத்திலிருந்தும், வானத்திலிருந்தும் பாவிகளை இரட்சிக்க வல்லவராயிருக்கிறீர். உமக்கு எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக இதை கள்ளரும் திருடரும் கண்டுபிடித்து உம்மை விசுவாசித்தாலும் வெள்ளரும், ஞானிகளும் அறியாது சாகிறார்களே! இதென்ன அதிசயம்!!

குணப்பட்ட கள்ளன் வாயிலிருந்துவந்த வாசகத்தால் நாம் அவனுடைய இருதய நிலைமையைச் சற்று ஆராய்ந்து தியானிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

1. அவனுக்குத் தேவபயமிருந்தது. 'நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனுயிருந்தும்தேவனுக்குப்பயப்படுகிறதில்லையா?' என்று அவன் கேட்டான். தேவனைப்பற்றிய இந்த பயத்தினால் இரட்சண்ய ஞானம் இவன் இருதயத்தில் குடிகொண்டிருந்ததென்று பார்க்கிறோம். 'கர்த்தருக்குப் பயப்படுதலே

ஞானத்தின் ஆரம்பம்' என்று ராஜஞானியார் சொல்லியிருக்கிறார் (நீதி. 1:7). மனம் திரும்புதல் ஒரு மனுஷனில் உண்டாக வேண்டுமானால் அவன் தேவ பிரசன்னத்தைப் பற்றிய பயமடையவேண்டும். தேவன் தன்னை எப்போதும் பார்க்கிறார், அவர் தன் சமீபத்திலிருக்கிறார் என்கிற உணர்வு உண்டாகுமட்டும் பாவச் செய்கையை விட்டோய வகையிராது. மனம் திரும்ப மனமுடையவர்களுக்கு தேவன் எப்போதும் தன்னைப் பார்க்கிற தேவனாக இருக்கிறார் (ஆதி. 16:13).

2. பாவ உணர்விருந்தது. 'நாமோ குற்றவாளிகளாக இருக்கிறோம்' என்கிறான். தேவ பயத்தால் பிறக்கும் ஞானத்தின் முதல் வேலை மனுஷனுடைய இருதய நிலைமையை அவனுக்கு உணர்த்துவதுதான். பாவ உணர்வு மனம் திரும்ப விரும்புகிற ஒவ்வொரு மனுஷனுக்கும் வேண்டியது. ஆனால் பாவமன்னிப்பைப் பெறும்படி இந்த உணர்வு மாத்திரம் போதாது. இந்த உணர்விலே சிலர் நின்று மறுபடியும் பாவம் செய்வார்கள். இந்த உணர்ச்சியில் இரண்டு விதமுண்டு; அதில் ஒன்றுக்கு சாதாரண உணர்ச்சி என்றும் மற்றதற்கு இரட்சண்ய உணர்ச்சி என்றும் பேர். சாதாரண உணர்ச்சி தன்னால் பிறருக்குண்டான நஷ்டங்களையும் தனக்குண்டான சங்கடங்களையும் தழுவினதாயிருக்கும்; இரட்சண்ய உணர்ச்சியோ தேவனுடைய தயவையும் பரிசுத்தத்தையும் நீதியையும், தன்னுடைய இருதய சமாதானத்தையும் மோட்ச வாழ்வையும் தழுவினதாய் இருக்கும். இந்தக் கள்ளனுக்குண்டான உணர்ச்சி சாதாரணமானதாயிராமல் இரட்சண்ய சம்பந்தமானதாயிருந்தது. ஏனெனில் அவன் மோட்ச வாழ்வை நாடிக்கொண்டிருந்தான் என்று பின் வரும் குறிப்புகளால் அறிகிறோம்.

3. தனக்கு வந்த தீர்ப்பை நியாயம் என்று ஒத்துக் கொள்ளுகிற சுபாவமிருந்தது. 'நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை நியாயமானபடி அடைகிறோம்' என்கிறான். மனம் திரும்பவேண்டியவர்களுக்கு இருக்கவேண்டிய சிறந்த குணங்களில் இது ஒன்றாயிருக்கிறது. பாவத்தின் தொடர்ச்சி தண்டனைகளும், அதின் முடிவு அல்லது சம்பளம் மரண

மாயுமிருக்கிறது. இந்தக் கள்ளன் தன்னுடைய பாவத்தின் கடைசிப் பலனைக் காணும்படி நெருங்கினான். அதோடு முந்தின தன் நடபடிக்கைகளை எல்லாம் நினைவுகூர்ந்து தனக்கு விதிக்கப்பட்டிருக்கிற தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டு அறிக்கையிடுகிறான். இப்படிப்பட்ட குற்ற வாளிகளை நாம் கண்டுபிடிப்பது அருமை. மனம் திரும்பும் படி விரும்புகிற மனுஷாட்களுக்குள் இப்படிப்பட்ட குண முடையவர்களை நாம் அடிக்கடி காண்கிறதில்லை. பக்தி னியின் படிகளில் ஏறிப்போகிறவர்களிலும் பலர், தங்க ளுக்குண்டாகும் உபத்திரவங்களின் ஒரு பாகம் முந்தின பாவங்களினிமித்தம் நியாயமாய் வரவேண்டிய தண்டனைகள் என்று ஒத்துக்கொள்ளாமல் மலைந்து தேவ செயலைப் பழுது கூறத் துவக்குகிறதுண்டு. தங்களுக்குண்டாகும் துன்பங் களின் இரகசியங்களை அறியாதிருக்கிற எல்லாரும் அவை களை தங்களுடைய முந்தின பாவத்துக்கு நியாயமாய் வர வேண்டிய தண்டனைகள் என்று உணர்ந்துகொள்ளுவதால் தங்கள் மனதுக்கு ஆறுதலையும் தேவ நீதிக்கு கனத்தையும் கொடுத்து வருகிறார்கள் என்று தாராளமாய்ச் சொல்லலாம்.

4. கிறிஸ்துவின் பாவமில்லாமையை வெளிப்படுத்தி னான். 'இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே' என்கிறான். இதினாலே கிறிஸ்துவின் வரலாறுகள் அனைத் தையும் இவன் எப்படியோ நுட்பமாய் விசாரித்தறிந்திருந் தான் என்று விளங்குகிறது. கிறிஸ்துவின் குற்றமில்லா மையை அஞ்ஞான நியாயாதிபதியும், நாட்டுக் கள்ளரும் அறிந்திருந்தாலும் ஆசாரியரும், வேதபாரகரும் அதை அறியாதே போனார்கள். மெய்யாகவே விசுவாசிக்கிறவர் களுக்கு கிறிஸ்து விலையேறப் பெற்றவர் (1 பேது. 2:7). கிறிஸ்து பாவமில்லாதவர் என்கிற உணர்ச்சி அவருடைய மரணத்தைச் சிறப்பிக்கிறதாயிருக்கிறது. இயேசுவின்மேல் விசுவாசத்தை வளரப்பண்ணுதற்கு இந்தச் சத்தியம் மன தில் ஊன்றக் கட்டப்படவேண்டும். இந்தச் சத்தியத்தின் முடிவு கிறிஸ்து தேவனாயிருக்கிறார் என்கிற தீர்மானம்தான். அதையும் நாம் இந்தக் கள்ளனிடத்தில் காண்கிறோம்.

5. இயேசுவை மோட்சத்தின் அதிகாரியாகிய தேவன் என்று அறிவிக்கிறான். முந்தின நாலு குறிப்புகளும் தன் உடன் கள்ளனோடு பேசின வார்த்தைகளால் விளங்கின. இந்தக் கடைசிக்குறிப்பு இயேசுவோடு பேசின வார்த்தை களால் விளங்குகிறது. அவன் இயேசுவை நோக்கி 'ஆண்ட வரே நீர் உமது இராச்சியத்தில் சேரும்போது அடியேனை நினைத்தருளும்' என்கிறான். இந்த வார்த்தைகளால் அவன் இயேசுவின் தெய்வீகத்தையும், அவருக்கு ஒரு இராச்சியம் உண்டென்பதையும், அதின் அதிகாரம் இந்தச் சமயத்தி லும் அவருடைய வசத்திலிருக்கிறதென்றும் உலகத்துக்கு நன்றாய் வெளிப்படுத்துகிறான். அவன் இயேசுவை நோக்கி இந்தச் சமயத்தில் 'ஆண்டவரே' என்று அழைப்பதும், 'உம் முடைய இராச்சியத்தில்' என்று சொல்லுவதும், 'அடியேனை நினைத்தருளும்' என்று கெஞ்சுவதும் ஆச்சரியமல்லவா? இது பரியாசப் போங்கு என்று சொன்னால் நியாயம்தான். ஏனெ னில் யூதர் இயேசுவைக் கொலை செய்யும்முன், அவருக்கு சிவப்பங்கியை உடுத்தி முள்முடி சூடி, மூங்கில்தடி கொடுத்து அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு யூதருடைய இராஜாவே வாழ்க என்று பரியாசம் பண்ணினார்கள். ஆனால் இந்தக் கள்ளனே சகல பரியாசங்களும் நிந்தைகளும் ஓய்ந்து, அவருடைய உலக ஜீவியம் முடியும்போது அவருக் குரிய அதிகனத்தால் அவரை முடிசூட்டுகிறான் என்று பார்க்கிறோம். இடுப்பிலோர் முண்டு கட்டி, சிரசிலோர் முள் முடி தாங்கி, சாகும்படி தலையை அங்குமிங்கும் சாய்க்கும் இயேசு குணப்பட்ட கள்ளனுக்கு 'ஆண்டவர்' ஆகிறதைப் பார்க்கிறோம். இந்தக் கள்ளன் இயேசுவின் ஆண்டவத்து வத்தையும், இவருக்கு இருக்கிறதாகச் சொல்லும் இராச்சி யத்தையும் என்னவாய் கண்டான் என்பது நாம் கேட்க வேண்டிய ஒரு கேள்விதான். ஒரு வேளை இச்சமயத்தில் மற்றவர்களுடைய காட்சிக்குப் புலப்படாத தூதகணங்களை யும், அவர்கள் இயேசுவுக்குச் செய்த தெய்வீக வணக்கத் தையும், கண்டானோ? ஒரு வேளை அப்படியிருந்தாலும் இருக்கலாம். எப்படியும் அவன்மேல் பரிசுத்த ஆவியின் அருளும் கிருபையும் தங்கியிருந்தது என்பது மெய். அந்த ஆவியால் அவன் இயேசுவை கர்த்தர் என்று கண்டறிந்தானே

யன்றி வேறல்ல. ஏனெனில் 'பரிசுத்த ஆவியாலன்றி இயேசுவை கர்த்தரென்று ஒருவரும் சொல்லக்கூடாது' (1 கொரி. 12:3). இவனுடைய விசுவாசம் சாஸ்திரிகளுடைய விசுவாசத்தையும், சிமியோனுடைய விசுவாசத்தையும்விட அதிகப் பலமானதென்று தாராளமாய்ச் சொல்லலாம். பாவமன்னிப்பையும் பூரண தேவ தயவையும் பெற விரும்புகிற பாவிகளுக்கு இவ்வித குணங்களும் இவ்வித பலத்த விசுவாசமுமே வேண்டியது. வாசிக்கிறவனே உன்னிடத்தில் இப்படிப்பட்ட குறிப்புகளுண்டாவென்று ஆராய்ந்து பார்ப்பாயாக.

இதுதான் அந்தக் கள்ளன் இயேசுவோடு பேசின முதலாம்தரமும் கடைசித்தடவையுமாயிருந்தது. இவன் தன்னுடைய ஒரே விண்ணப்பத்தால் தனக்கு வேண்டிய நித்திய வாழ்வனைத்தையும் பெற்றுக்கொண்டான் என்பதை நாம் அறிகிறோம். 'இயேசு அவனை நோக்கி, இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார். இவ்வித வாழ்வையும், இவ்வளவு வாழ்வையும் மனுமகன் ஒருவனும் ஒருக்காலும் பெற்றதில்லை. இத்தோடு கள்ளன் வெள்ளைகிவிட்டான். பாவி பாவமன்னிப்பைப் பெற்றான். நரகதண்டனையை நோக்கி நடந்தவன் மோட்சவாழ்வுக்குத் திரும்பிவிட்டான். இதைக் கண்ட பரலோகம் களிகூராதிருக்குமோ? இதைக் கேட்கும் பூலோகம் கெம்பீரமடையாதோ? 'கள்ளனுக்குப் பரதீசு, கள்ளனுக்கு மோட்சம்' என்று தூதர் கூட்டத்திலுண்டாகும் ஆச்சரிய பேச்சை இன்றைக்கும் கேட்கலாம். துன்மார்க்கத்தில் நிலைத்திருந்து, நல்வழியை விட்டு விலகி நரகத்தின் ஓரத்தில் நின்று அதின் அழிவுக்குள் சாகப்போகிற பாவிகளும், தாங்களே அப்படிச் சாகுமுன் சிலுவையில் அறையுண்ட இயேசுவை ஒருதரம் விசுவாசத்தால் கண்ணோக்கி, ஆண்டவரே என்னை நினைத்தருளும் என்று உண்மையோடு கெஞ்சுகிறதுண்டானால், அவனையும் அவர் இரட்சிப்பார் என்பதற்கு இந்த கள்ளனை சகோதரன் அடையாள ஸ்தம்பமாய் இருக்கிறான் அல்லவா?

குணப்பட்ட கள்ளனுடைய வரலாற்றைக் கேட்கிற பல பேர்க் கிறிஸ்தவர்கள் தப்பிதமாய் தங்களைத் தேற்றிக்

கொள்ளுகிறதுண்டு. மனம்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அவர்கள் விரைந்து தேடவேண்டுமென்று எச்சரிக்கப்படுகிறபோது இந்தக் கள்ளனுடைய வரலாற்றை நினைத்துக் கொண்டு, 'என் இரட்சகர் தயவுடையவர், அவர் என் மூச்சொடுங்கி நிற்கும் கடை இக்கட்டிலும் சகாயர்தான், அந்த நேரத்தில் அவரை நோக்கி மன்றாடி எனக்கு வேண்டிய மோட்சவாழ்வை நான் தேடிக்கொள்வேன்; இப்போது அதையிட்டு அதிகக் கவலைபட்டு என் மனதை வருத்தப்படுத்துவானேன்? அவனைப் பரதீசில் சேர்த்தவர் என்னைத் தள்ளிப்போடுவாரா?' என்றெண்ணுகிறார்கள், இப்படியே சொல்லுகிறவர்களையும் ஒரு வேளாவேளைச் சந்திக்கிறோம். இப்படி நினைத்தவர்களிலும் சொன்னவர்களிலும் ஒருவராவது பரதீசில் சேரவில்லை என்று நானும் நீயும் பரதீசில் சேரும்போது அறிவோம் என்று நினைக்கிறேன். எவ்விதபாவ நிலைமையுள்ளவனுக்கும் பாவமன்னிப்படைய இடமுண்டு என்பதற்கு இவன் திருஷ்டாந்தமாகிறானேயன்றி, பாவமன்னிப்பின் காலத்தை கடத்திவைக்கலாமென்பதற்காவது, அக்காலத்தைக் குறிப்பிக்கிறதற்காவது இவன் திருஷ்டாந்தமாகமாட்டான். இவனுடைய திருஷ்டாந்தமானது இரட்சண்ய அன்பின் வல்லமையை விளக்குகிறதேயன்றி இரட்சிப்பின் நாளைக் குறிக்கிறதில்லை. 'இப்பொழுது அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்' என்பதுதான் சத்தியவேதத்தால் குறிக்கப்படும் மனம்திரும்புதலின் நாளாயிருக்கிறது (2 கொரி. 6:2). மேலும் மரண சமயத்தில் குணப்பட்ட கள்ளனுக்கிருந்த மனநிலைமை உனக்கும் இருக்கும் என்று யாரால் சொல்லக்கூடும்? அவனையும் உன்னையும் ஒரே படியில் வைத்துப் பேசுவது உன் புத்தியீனத்தை வெளிப்படுத்துகிறதேயன்றி வேறல்ல. இயேசுவை சிலுவை சுமந்ததும் அதில் அறையப்பட்டுத் தொங்கினதுமே அவன் கண்ட காட்சி; 'பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறதின்னதென்று அறியாதிருக்கிறார்கள்' என்ற வாசகமே அவன் கேட்ட பிரசங்கம். பரிசுத்த ஆவியானவரே அவனுடைய உள்வீட்டுப் போதகர். அவர் இரத்தமே அவனுக்கு நீட்சை கொடுத்த ஜலம், இயேசுகிறிஸ்துவே அவனைப் பரதீசில் சேர்த்த ஆண்டவர். அவனுக்குக்

கிடைத்த வாழ்வின்படியே உனக்கும் கிடைக்கவேண்டுமா னல் இயேசு மறுபடியும் அவதாரமாகி சிலுவையில் அறையப் பட்டு உன்னோடுகூட மாம்சத்தின்படித் தொங்கவேண்டும், அப்படி நடக்குமா, அப்படி நடக்கவேண்டுமென்று நினைக் கிறது தோஷமும் அக்கிரமுமான காரியமல்லவா! அப் படியே நடந்தபோதிலும் உனக்கு பாவமன்னிப்புக் கிடைக்கு மென்று யார் சொல்லக்கூடும். இன்னொரு கள்ளனுக்கு இவ் வளவு சலாக்கியமுமிருந்தும் அவன் கடைசிமட்டும் மனம் திரும்பாதிருந்து தன் பாவத்தோடு செத்தானே; உன் காரிய மும் அப்படி முடியலாமே. ஆதலால் அவ்வித நினைவை விட்டுவிடு. இதை வாசிக்கிறவனே இன்றையத்தினத்தி லேயே மனம்திரும்பி பரிசுத்தவானுய் நடக்கும்படி தேவ ஆவிக்காக வேண்டிக்கொள்.

இயேசு மரணமடைந்த நாளில் நடந்த அதிசயங்களையும் அற்புதங்களையும் அநேகர் கண்டாலும், அவைகளின் மூலமாய் தன் இரட்சண்ய வாழ்வை கண்டடைந்தவன் இந்தக் கள்ளன் ஒருவன்தான். அநேகம் தேவ ஊழியக்கார ருடைய போதனைகளையும், தேவனுடைய பரிசுத்த வேதத்தின் விதிகளையும் பலதரம் கேட்டும் இன்னும் குணப்படாதிருக்கிற கள்ள கிறிஸ்தவனே, இதோ ஒரே வாசகத்தைக் கேட்டு மனம்திரும்பி பரதீசைக் கண்ட கள்ளனை நீ பார்த்து வெட்க மடைவாயாக.

குணப்பட்ட கள்ளனுக்கு முந்தி இயேசு மரித்தார். கள்ளர் இருவரும் அன்றையத்தினமே சாகவேண்டுமென்று சத்துருக்கள் தீர்மானித்து அவர்களுடைய கால்களை முறித் தார்கள். இதுவே அக்காலத்து வழக்கமாயுமிருந்தது. கிறிஸ்துவின் கால் எலும்புகள் முறிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக அவருடைய விலா குத்தப்பட்டது. ஒரு கள்ளன் இருதய கடினத்தோடும் பாவத்தோடும் சிலுவையில் மடிந் தான். குணப்பட்ட கள்ளனோ பாவமன்னிப்பைப் பெற்ற இருதயத்தோடும், பரதீசின் வாழ்வுக்குள் பிரவேசிக்கும் நம்பிக்கையோடும் சிலுவையிலிருந்து மரித்தான். அவனு டைய உடல் மற்ற குற்றவாளிகளின் மயானத்தில் அடக்கம் பண்ணப்பட்டபோதிலும், ஆவியானது இயேசுவோடுகூட

பரதீசில் பிரவேசித்தது. இவன் மரணமடைந்த முதலாம் கிறிஸ்தவன் என்று சொல்லவேண்டியது. சிலுவையிலிருந்து பழுத்த முதலாம் இரட்சண்ய பழம் இவன்தான். இன்றைக்கும் அவன் பரலோகத்தை ஆச்சரியத்தால் நிரப்புகிறான். பூலோகத்திலிருந்து பரலோகம் சேரும் ஒவ்வொரு ஆத்துமாவும் இந்தச் சிலுவையின் முதல்பலனைக் கண்ணுற்று களிகூருகிறார்கள்.

திருச்சபையில் கிறிஸ்துநாதரால் ஏற்படுத்தப்பட்ட ஞானஸ்நானத்தை அற்பமாய் எண்ணுகிறவர்களும்; ஞானஸ்நானம் அவசரமேயில்லை என்று சொல்லத் துணிகிற பலரும் இந்த மனுஷனுடைய திருஷ்டாந்தத்தைத் தங்களுடைய கோட்பாட்டுக்கு ஆதாரமாக வைத்துப் பேசுகிறார்கள். இது சரியல்ல. இவன் வெளியரங்கமான திருச்சபையில் சேரும்படியாதொரு சமயமும் வகையுமிருக்கவில்லை. மேலும் இவன் தன் இரத்தத்தால் கிறிஸ்துவின்மூலமாய் தீட்சை பெற்ற கிறிஸ்தவனையும், பரிசுத்த ஆவியாலும், மரண நதி ஜலத்தாலும் ஞானஸ்நானம் பெற்றவனையுமிருந்தான். அதுவின்றி ஞானஸ்நான கட்டளை தேவ பணிவிடைக்காரரைக் கட்டுமேயன்றி, தேவனைக் கட்டுகிறதில்லை. இயேசு அந்தக் கட்டளைக்கு மேலான தேவனுகவும் அதையே கொடுத்தவராகவும் இருப்பதால், அவரால் நடப்பிக்கப்பட்ட ஒரு விஷயத்தை மனுஷ முறைகளோடு சமரசப்படுத்திப் பேசக் கூடாது. அப்படிப் பேசுவது கிறிஸ்துவின் தெய்வீக குருத்துவ ஆதிக்கத்தைத் தாழ்த்துகிறதாய் இருக்கிறதென்கலாம்.

'இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்' என்ற வாக்குத்தத்தமானது குணப்பட்ட கள்ளன்மட்டில் நின்றுபோயிற்றென்று எண்ணவேண்டியதில்லை. இது விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கிற பொது வாக்குத்தத்தமாயுமிருக்கிறது. வாசிக்கிறவனே நீயும் இந்தக் கள்ளனைப்போல மனம்திரும்பி விசுவாசத்தினாலே இயேசுவை அண்டிக்கொண்டு, அவருக்கு உன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்கிறதுண்டானால் அவர் உனக்கு மோட்ச பாக்கியத்தை அருளாதிரார். நீ உபத்திரவங்களையும் பாடுகளையும் சகித்துக்கொண்டபின்பு மகிமையும் கனமும் உனக்குப்

பின்செல்லும் என்று நினைத்து இப்படிப்பட்ட நினைவிலே வருத்தமும் சங்கடமும் உண்டாயிருக்கும் காலத்திலும் மரணசமயத்திலும் உன்னைத் தேற்றிக்கொள்வாயாக. மோட்ச பாக்கியம் நம்மெல்லாருக்காகவும் சம்பாதிக்கப்பட்டிருக் கிறது. இரட்சிப்பு யாவருக்கும் ஆயத்தமாக்கப்பட்டிருக் கிறது. ஜீவகிரீடம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் கிரீடத்தையும் பந்தயத்தையும் இரட்சிப்பையும் அடையும் படிக்கு மரணபரியந்தம் உண்மையுள்ள விசுவாசிகளாயிருப் போமாக. அப்படியானால் நாம் சாகும் தருணத்தில் மோட் சத்தின் எஜமானுகிய இயேசு நமது படுக்கையின்மேல் ஆகாயத்தில் நின்று 'இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசி லிருப்பாய்' என்று சொல்லும் ஆறுதலான வாக்கை நமது காதுகள் கேட்கும்.

ஸ்தேவான்

கிறிஸ்துமார்க்கமானது அடிக்கடி மிகுந்த உபத்திரவங்களின் மூலமாய் தன் ஓட்டத்தை நடத்தவேண்டியதாயிருக்கிறது. அதின் ஆரம்பமுதல் இதுவரையும் சுமார் இரண்டாயிரம் வருஷம் சென்றபோதிலும் அதற்கு உண்டாகும் தடைகளும், உபத்திரவங்களும் அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. அநேக உபத்திரவங்களின் மூலமாயும் துன்பங்களின் மூலமாயும் கிறிஸ்து சபையை நடத்திவருவதே தேவ தீர்மானமாயிருக்கிறது. இதை பிசகென்றுவது நஷ்டம் என்றுவது சொல்லவே கூடாது. தேவனுடைய வழிகளும் முறைகளும் மனுஷப்போங்காயும் உலகப்போங்காயும் இருக்கவேமாட்டாது. மேலும் உலக இயல்பினிமித்தம் தேவ போங்கு மாறவுமாட்டாது.

கிறிஸ்துவோடு ஆரம்பமான இந்த மார்க்கம், அவருக்கு உண்டான உலகப் பிரகாரமான அநியாய மரணத்தால் வளரத் துவக்கிற்று. அதுமுதல் கிறிஸ்துமார்க்கம் வளருவதற்கும் செழிப்பதற்கும் துன்பமும், உபத்திரவமும் சாவும் மருந்துகளாயிருக்கின்றன. மோசேயின் முட்செடியும், அதில் ஜ்வாலித்து எரிந்த அக்கினியும் திருச்சபையின் எக்கால நிலைமையையும் உணர்த்தும் படமாயிருக்கின்றன. மனுஷர் உணவு பதார்த்தங்களாலும், மரங்கள் ஜலம் காற்று இவைகளாலும், விளக்குகள் எண்ணெய் தீபங்களாலும் வளருகின்றதைக் காண்கிறோம். கிறிஸ்து சபையோ துன்பங்களால் வாழ்வடைந்து, பலப்பட்டு ஸ்திரப்படுகின்றன.

இயேசுவின் மரணத்துக்குப்பின், அவருடைய மார்க்க சம்பந்தமாய் உண்டான முதலாம் மரணம், ஸ்தேவானுடைய மரணந்தான். கிறிஸ்து தமது மரணத்தால் ஜீவனையும் அழியாமையையும் உலகத்துக்குச் சம்பாதித்தார். அவ

ருடைய பக்தாட்கள் அதே மாதிரியைக் காலாகாலங்களில் பின்தொடர்ந்து அதே சத்தியத்தை உறுதிப்படுத்தி வருகிறார்கள்.

இந்த ஸ்தேவானுடைய பூர்வோத்தரம் இன்னதென்பதைக் குறித்து நமக்கொன்றும் தெரியாது. ஸ்தேவான் என்ற பேர் கானான் தேசத்தில் குடியிருந்த யூதரால் வழக்கமாய் வழங்கிவந்த பேரல்ல; அவர்கள் பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் பேரையே தங்களுடைய பிள்ளைகளுக்கு இட்டு வந்தார்கள். இந்தப் பேர் அயல் தேசங்களில் வியாபார விஷயமாய் சஞ்சரித்து அந்நிய நாட்டில் பிறந்து எபிரெயு பாஷை தெரியாமல் கிரேக்க பாஷையை மாத்திரம் அறிந்திருந்த யூதருடைய பேராயிருக்கிறது. இப்படிப்பட்ட யூதர் ஆப்பிரிக்காவின் வடதிசைகளிலும் சின்னாசியாவின் திசைகளிலும் மிச்சமாயிருந்தார்கள். ஸ்தேவான் என்பவர் இப்படிப்பட்ட யூத குடும்பத்தில் பிறந்த பிள்ளையாயிருந்தார். இவருடைய பிந்தின வேத அறிவையும், பக்திவைராக்கியத்தையும், சொல் வளத்தையும், நியாய தோரணைகளையும் நாம் கவனிக்கும்பொழுது இவருடைய பெற்றோர் பக்தியுள்ளவர்களுக்கும் தங்களுடைய குமாரனை வேத அறிவிலும், பூர்வ சத்திய வழியிலும் நன்றுகப் பழக்கி வந்தார்கள் என்று தெரியவருகிறது.

கிறிஸ்து பரலோகத்துக்கு எழுந்துபோனதுமுதல் அப்போஸ்தலர் பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டு சுவிசேஷத்தை எருசலேமின் தெருக்களில் பலமாய்ப் பிரசங்கித்தார்கள். அதின் மூலமாய் துன்பம் உண்டானது. அத்துன்பம் நெடுங்காலம் இருக்கவில்லை. கமாலியேல் என்னும் யூத ரபி, அப்போஸ்தலரில் சிலர் பிடிபட்டு விசாரிக்கப்பட்டபோது சொன்ன ஞானமான ஆலோசனையால் (அப். 5:34–39) அக்காலத்துத் துன்பம், பயமுறுத்தலோடும் சில அடிகளோடும் முடிந்தது. அதுமுதல் சுமார் மூன்று வருஷக்காலம் யாதொரு துன்பமும் உண்டாகவில்லை. சபையும் வளர்ந்தது. அப்பால் அயலிலிருந்த துன்பம் ஓய்ந்தாலும் அந்தரங்கத்தில் வேறுவித சங்கடம் நேரிட்டது. எப்படியெனில் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்த யூதர்களில் இரண்டு பிரிவிருந்தது. அதில் ஒரு

பிரிவார் காலனில் குடியிருந்த யூதராயும், மறு பிரிவார் அயல் நாட்டில் பிறந்த யூதராயும் இருந்தார்கள். இவ்விரு பட்சத்தாரும் கீரியும் பாம்பும்போல் இணக்கமற்றிருந்தார் கள். அக்காலத்தில் ஏழைகளுக்கென்று சேகரித்துப் பொதுவில் வைக்கப்பட்டிருந்த தரும சகாயமானது அயல் நாட்டுப் பிறவிகளான யூதருக்கு சரியாகப் பங்கிடப்பட்டு வராததால், சபைகளுக்குள்ளே முணுமுணுப்பும் ஆளுக்காள் மனத் தாங்கலும் நேரிட்டது. இதை வளரவிட்டால் இளங்கிளை போல் எழும்பும் சபையானது சீக்கிரத்தில் கருகிக் குறுகிப் போம் என்று அப்போஸ்தலர் அஞ்சி அதை உடனே நிவிர்த்தி செய்யும்படி முயன்றார்கள். ஒவ்வொரு சூனகோகிலும் ஏழைகளை விசாரித்து தரும் பணத்திலிருந்து படியளக்கும் படி மூன்று ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அம்மாதிரியைப் பின்பற்றுகிறது நலமென்று அப்போஸ்தலர் எண்ணி உடனே சீஷரை வரவழைத்து ஒரு விசேஷ கூட்டம் வைத்து, சபையாருக்குள்ளிருக்கும் மனமாச்சரியத்தை உணர்த்தி, ஏழைகளைப் பராமரிக்கும்படி 'பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரைத் தெரிந்துகொள்ளும்படித் திட்டம் செய்தார்கள். அப்படியே ஏழு பேரைத் தெரிந்துகொண்டார்கள். அவர்களில் ஸ்தேவான் ஒருவராயிருந்தார். தெரிந்துகொள்ளப்பட்ட ஏழு பேரில் ஸ்தேவானுடைய பேர் முதலாவது வருகிறதால் இவர் அவ்வேழு பேருக்குள்ளும் விசேஷித்தவராயிருந்தார் என்று சொல்லவேண்டியது. அப்போஸ்தலர் ஜெபம்பண்ணி இவர்கள்மேல் கைகளை வைத்து பந்தி விசாரிப்பு என்னும் புதிய அலுவலுக்கு இவர்களை நியமித்தார்கள். இதுதான் கிறிஸ்து சபையின் முதலாம் பட்டாபிஷேகம் என்று பார்க்கிறோம். இந்தச் சடங்கு சபையார் முன்பாக அப்போஸ்தலரால் நிறைவேற்றப்பட்டது. இதினாலே தேவ ஊழியத்துக் கடுத்த பணிவிடை வேலைக்கென்று நியமிக்கப்படுகிற ஆட்கள், சபையாரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், பரிசுத்த ஆவியின் வரத்தையும், ஞானத்தையும் பெற்றவர்களாயும், நற்சாட்சி பெற்றவர்களாயும் இருக்கவேண்டும் என்றும் விளங்குகிறது. இக்காலத்தில் தங்களைத் தாங்களே குருக்களாக்கிக்கொள்ளுகிறதைப் பார்க்கிறோம்; இவர்கள்

கிறிஸ்து சபையின் ஏற்பாட்டை அசட்டைசெய்து, சபைக்குள் பிரிவினைகளையும் குழப்பங்களையும் உண்டுபண்ணுகிற கள்ளச் சகோதரராய் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. மேலும் அநேக சபையார். குருக்கள் பலரை குறைகூறி அவர்களுக்குப் பட்டங் கொடுத்தது அநியாயம் என்று சிலதரம் அபயமிடுகிறார்கள். இந்தக் குற்றத்துக்குக் காரணர் சபையாரேயன்றி, ஒழுங்கின்படி அந்த அபிஷேக ஆராதனையை நடத்துகிறவர்கள் காரணரல்ல. எப்படியெனில் ஒருவர் குருவாகுமுன் சபையின் சம்மதத்தை அறிக்கைகள் மூலமாய் கேட்கும்போது, சபையார் சும்மாயிருந்துவிட்டு, அல்லது அதற்கு சம்மதித்துக்கொண்டு பிற்பாடு சபை அதிகாரிகளைக் குற்றம் கூறுவது பிசகு.

குருத் தொழிலை விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றவனாயிருக்கவேண்டும். மற்றப்படி இதை விரும்புகிறது நியாயமல்ல. இந்த லட்சணங்களின்றி அதை விரும்பி வஞ்சகமாய் நடந்து மாயமாலம் பண்ணிக்கொண்டு திரிகிறவர்கள் கிறிஸ்து சபையை அவமானத்துக்குட்படுத்தத் துணிகிற சண்டாளர் என்று தடையின்றிச் சொல்லலாம். இதை வாசிக்கிறவனே, நீ ஒரு குருவானால், அதற்குரிய லட்சணங்களுடையவனாய் இருக்கிறாயா என்று சற்றுநேரம் ஆராய்ந்து பார்த்துக்கொள். அப்படி உண்டானால் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்து, அப்படியில்லையானால் நீ பரிசுத்த ஆவியில் நிரப்பப்பட்டு, தேவ ஞானத்தில் விருத்தியாகி நற்சாட்சி பெறும்வரையும் மன்றாடி வருவாயாக; நீ ஒரு சபையானாலும் உன்னுடைய குருவும், உலகமெங்குமுள்ள குருக்களும் அந்த ஊழியத்துக்குத் தகுதியுடையவர்களாகும்படியாகவும், இனி குருக்களாகிறவர்கள் ஸ்தேவானைப்போல பரிசுத்தாவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றவர்களாய் இருக்கவேண்டுமென்றும் தேவனை நோக்கி ஜெபம்செய்து வருவாயாக.

இந்த ஏழு பேரும் ஆதிச்சபைக்கு அதிகப் பிரயோசனம் உள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்த ஏழைகளைக் கருத்தாய்ப் பார்த்து வந்ததால், அப்போஸ்தலமாருக்கு அவ்விஷயத்தில் யாதொரு

சங்கடம் இருந்ததில்லை. மேலும் இந்த ஏற்பாட்டினாலே அவர்கள் சுவிசேஷத்தை முன்னிலும் அதிகமாய்ப் பிரசங்கிக்கவும் சமயம் கிடைத்தது. அதினாலே அநேகர் தேவ வசனத்தைக் கேட்கவும், அநேகர் கிறிஸ்தவர்களாகவும் ஏதுவாயிற்று. எருசலேமுக்குள்ளேயே அநேகர் கிறிஸ்தவர்களானதோடு, ஆசாரியரில் மிச்சமானவர்களும் கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திருப்பினவர்களில் காலாயிரத்து இருநூற்று எண்பத்தொன்பது ஆசாரியர் இருந்தார்கள் (எஸ். 2:36,39). இவர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த விஷயமானது யூத மார்க்கத்துக்கு ஒரு பலத்த அடியாயிருந்தது.

புதிதாக தேவ பணிவிடைக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களும் இந்த சுவிசேஷ ஊழியத்தில் அப்போஸ்தலருக்கு உதவிசெய்து வந்தார்கள். அவர்கள் தங்கள் அபிஷேகத்திலே முன்னிலும் அதிகமாய் பலப்படுத்தப்பட்டு, தங்கள் பணிவிடைகளை நிறைவேற்றி வந்தார்கள். பரி. ஸ்தேவானுக்கோ போதுமான இந்த வரத்தோடு விசேஷித்த வரங்களும் இருந்தன. இவர் தம்மோடு பட்டம் பெற்ற மற்றவர்களைப் பார்க்கிலும் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவராயும், ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறவராயும் விளங்கினார் (அப். 6:8). இதினாலே கிறிஸ்து மார்க்க விருத்திக்கு அற்புத வரம் இருக்க வேண்டியது. அவசியம் என்றுவது, அற்புதம் செய்ய வல்லமையற்ற குருக்கள் இன்னும் பூரணமாய் தேவ அருளைப் பெறவில்லை என்றுவது சொல்லக்கூடாது. தேவன் தமது வரத்தை யாருக்கு அருளுகிறாரோ, அவர்கள் பாக்கியவான்கள்தான். ஆனால் ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் சிரேஷ்டனான யோவான் ஸ்நானகன் அற்புதம் செய்யும் வரத்தையுடையவராய் இருக்கவில்லை. தேவபக்தி மறுஜனனம், மனம் திரும்புதல், இருதய சுத்தம் ஆகிய கிறிஸ்து மார்க்க மகத்துவங்களுக்கும் அற்புத வரங்களுக்கும் எவ்வளவேனும் சம்பந்தமில்லை. அற்புதங்களால் ஆச்சரியமும் பயப்பும் அதிர்ச்சியும் உண்டாகுமேயன்றி மனமாறுதல், இருதய சுத்தம், தன்னை வெறுத்தல் முதலிய மேலான

ஆத்தும வாழ்வுகளுண்டாக மாட்டாது. சரீர வாழ்வுக் கடுத்த விஷயங்களுக்கு அது உதவிதான். ஆனால் மெய் கிறிஸ்தவன் அதையா நாடுகிறான்? அல்லவே. ஆதலால் அற்புத வரங்கள் கிறிஸ்து மார்க்க விருத்திக்கு இன்றியமை யாது அவசியம் என்று எண்ணவே வேண்டாம்.

ஸ்தேவானுக்கு அருளப்பட்டிருந்த எல்லா வரங்க ளோடும் பிரசங்க வரமும், நியாயசாஸ்திர வரமுமிருந்தது. அக்காலத்தில் கிறிஸ்தவர்களான யூதர், யூத மார்க்கத்தார் தொழுதுவந்த சூனகோகு என்னும் ஸ்தலங்களுக்கே போய் வந்தார்கள். ஸ்தேவானுடைய முயற்சி அதற்கு ஒரு முடிவை உண்டாக்கிற்று. சில யூதர் கிறிஸ்து மார்க்கமானது யூத மார்க்கத்துக்கடுத்ததான ஒரு போங்கேயன்றி வேறல்ல என்று எண்ணி வந்தார்கள். ஸ்தேவானே அது முற்றிலும் விந்தியாசமானதென்று முதலாவது உலகத்துக்கு வெளிப் படுத்த முயன்றார். இதையிட்டு பல சம்பாஷணைகளும், தர்க்கமான பேச்சுகளும் அடிக்கடி நடந்துவந்தன. இந்தக் கூட்டத்தில் ஸ்தேவான் ஒரு பட்சமும் மற்ற யூதர் அனை வரும் வேறு பட்சத்தாருமாய் இருந்தார்கள். இவ்விதத் தர்க்கக் கூட்டமே ஸ்தேவானை கொலை செய்யும் கும்பாக மாறிற்று. மார்க்க விஷயமாய் தர்க்கம் பண்ணுவதில் அதிக லாபமுண்டென்று சொல்லக்கூடாது. சத்தியம் தர்க்கத்தில் அல்ல தன்னிலே நிலைத்திருக்கிறது. ஸ்தேவான் தன்னை எதிர்க்கும் யாவருக்கும் சரியாய் உத்தரவு சொல்லி அவர்கள் வாயை அடக்க சக்தியுள்ளவராயிருந்தார்.

கடைசிவிசை உண்டான தர்க்கம் ஒரு விசேஷமானதா யிருந்தது. ஒவ்வொரு சூனகோகின் ரபியும் சில வாலிபரை சிஷராக வைத்து யூத மார்க்கப் போதனைகளை அவர்களுக்குப் படிப்பித்து வந்தார்கள். எல்லா ரபிகளும் அவரவர் சிஷ ரோடு இந்த தர்க்கக் கூட்டத்திற்கு வந்தார்கள்போலிருக் கிறது. லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், அலெக் சாந்திரியா பட்டணத்தாரிலும், சிலிஷியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் ஸ்தேவானோடே தர்க்கம்பண்ணி னார்கள் என்ற வாசகம் அன்று கூடின கூட்டத்தின் விசேஷத்

தைக் காட்டுகின்றன. இப்படி ஏகக் கூட்டமாய்க் கூடி பலருடைய அறிவையும் கொண்டு ஸ்தேவானுடைய நியாயங்களை அடித்துப்போடாத பட்சத்தில் எருசலேமிலுள்ள ஆலயத்தையும் சூனகோகுகளையும் சீக்கிரம் சாத்திப்போட நேரிடும் என்று பயந்தார்களாக்கும். இந்தக் கூட்டத்திலிருந்த சிலிஷியா நாட்டாரில் சவுல் என்னப்பட்ட பவுல் அப்போஸ்தலனும் ஒருவராயிருந்தார் என்று எண்ண நியாயமிருக்கிறது. இந்தச் சவுலாகிய பவுல், கமாலியேலின் பாதத்தில் படித்த நம்மைவிட நியாயவாதியுண்டா என்று சபதம் கூறி அங்கே வந்திருந்தார் என்று சொன்னாலும் குற்றமில்லை. பரி. ஸ்தேவானே கமாலியேலிலும் பெரிய வித்துவானாகிய பரிசுத்த ஆவியால் போதனையடைந்த வித்துவ சிங்கமாய் இருந்தாரென்பதை பவுல் அப்போது அறியவில்லை. 'ஆயிரம் காகத்தின் நடுவில் ஒரு அன்னம்' என்றாற்போல் ஸ்தேவான் இந்த யூத காகங்கள் மத்தியிலிருந்தார். இந்த தர்க்கத்தின் கடைசி முடிவு தமது மரணமாய் இருக்குமென்பதை அவர் துவக்கத்தில் அறியாமல் இருக்கலாம். கூடிவந்த யூதர் தர்க்கத்தை ஆரம்பித்தார்கள். அதற்கு ஸ்தேவான் ஞானமாய் உத்தரவு சொன்னார். 'அவர் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமல் போயிற்று.' ஸ்தேவான் நியாய தோரணையில் ஜெயம் பெற்றார். எதிரிகள் தோல்வி அடைந்தார்கள்.

இந்த சமாசாரம் ஊருக்குள் பரம்பலாமா? பரம்பினால் என்னவாய் முடியும்? சில நாட்கள் சென்ற பின்பு மூடப்பட வேண்டிய சூனகோகுகள் இன்றைக்கே மூடப்பட்டுப்போமே என்று சத்துருக்கள் எண்ணி, இன்றோடு இவனைக் கொன்று போட வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். இந்த மோசமான தீர்மானத்தை சவுல் என்னப்பட்ட வாலிபன் தான் முதலாவது ஆலோசனைபோல் சொல்லி இருக்கலாம். ஏனெனில் ஸ்தேவான் கொலை செய்யப்பட்ட விஷயத்தில் இந்த வாலிபன்தான் முக்கியஸ்தனாக இருந்தான் என்பதை நாம் பின்னாலே அறிவோம் (அப். 7:58; 8:1). பொல்லாதவர்கள் தங்கள் நடுவில் நல்லவனை குடியிருக்க விடார்கள், குடியிருக்க கொஞ்சக்காலம் இடம் கொடுத்தாலும், அவன்

சொத்துக்களும் வாழ்வுகளும் அவர்கள் வயிற்றுக்கு இரை யாகும்படி வகை பண்ணிக்கொண்டே இருப்பார்கள்; அவ னிடத்தில் சன்மார்க்கத்தையும், நல்ல போதனையையும் தவிர வேறொன்றுமில்லை என்று காணும்போது, அது தங்கள் மனதுக்கு விரோதமான போசனமாதலால் அவனையே கொன்று அவனுடைய இரத்தத்தில் ஆளுக்கொரு சொட்டு குடித்து கைதட்டி அவனை விழுங்கிவிட்டோம், இதோ அவன் இல்லை என்று ஆர்ப்பரிப்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள்மேல் தேவ கோபத்தை வருவித்துக்கொள்ளுகிறார் கள் என்பதே தேவ ஞான சாஸ்திரமாயிருக்கிறது.

சமய வாதம் உயிர் நாசமாகும்படி வளர்ந்துவிட்டது. ஸ்தேவானுடைய வார்த்தைகளை வெல்ல தங்களுக்கு வல்லமை இல்லை என்று கண்ட சத்துருக்கள், சில சாட்சிகளைக் கட்டுப் பாடுபண்ணி, ஜனங்களுடைய மனதில் அவனை விரோதிக்கும் படியான வார்த்தைகளை கிளப்பிவிட்டு கலகத்தை ஆரம்பித் தார்கள். அந்தக் கள்ளச் சாட்சிக்காரர் நகரமெங்கும் போய் ஸ்தேவான் என்கிறவன் 'மோசேக்கும் தேவனுக்கும் விரோத மாக தூஷண வார்த்தைகளைப் பேசக் கேட்டோம்' என்று சொல்லிக்கொண்டு திரிந்தார்கள். அதைக் கேட்ட மூப்பர் வேதபாரகர் எல்லோரும் உக்கிர கோபமடைந்து அவர்மேல் பாய்ந்து, அவரைப் பிடித்து ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோய் பிரியாது சொன்னார்கள். அந்தப் பிரியாதாவது:

'இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷணமான வார்த்தை களை ஓயாமல் பேசுகிறான். எப்படியென்றால், நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம்' என்பதுதான்.

இந்தப் பிரியாதை சற்றே கவனித்தால் இதின் மொத்தப் பொருள் இயேசுகிறிஸ்துவின்பேரில் சாட்டப்பட்ட குற்றத் துக்கு சமமானதென்று விளங்குகிறது (மத். 26:61). இது போலொத்த வாசகந்தான் இயேசுவுக்கு விரோதமாக ஜனங்க ளுடைய விரோதத்தை எழுப்பிவிட்டதென்பதை அவர்கள்

உணர்ந்து இப்படிக் கட்டுப்பாடு பண்ணச் சொன்னார்களாக்கும். ஒருவேளை ஸ்தேவான் எருசலேமின்மேல் வரும் அழிவைப்பற்றி இயேசு சொன்ன வார்த்தைகளை எடுத்துக் கூறி எச்சரித்து, யூத மார்க்கம் ஒயும் காலம் நெருங்கிற்று என்று உணர்த்தியிருக்கலாம். அந்த வசனம் அவர்களுடைய ஜாதிக்கும், எதிர்பார்த்தலுக்கும் முற்றும் விரோதமாயும், வீணை சாபச்சொல்போலும் காணப்பட்டதால் அவர்கள் அவர்மேல் மூர்க்கவெறி அடைந்தார்கள்போலிருக்கிறது.

இந்தக் காரியத்தை முடிவுபண்ணுகிறது சங்கத்தாருக்கு வருத்தமாகக் காணப்பட்டது. ஏனெனில் இதற்குமுன் இரண்டொருதடவை வேறு சிலர்மேல் இப்படிப்பட்ட குற்றம் வந்து விசாரிக்கப்பட்டிருந்தும், கிறிஸ்துமார்க்கம் அதிகமாய் வளர்ந்துகொண்டே வந்தது. இப்போது குற்றவாளியாகப் பிடிபட்டுவந்த ஸ்தேவானும் சாமானிய கிறிஸ்தவனுயிராமல் அற்புதங்களைச் செய்யும் அரிய வரம்பெற்ற புருஷனுயும், வேத அறிவில் தேர்ந்தவனும், தேறின மாணக்கனுமாயிருந்தார். ஆதலால் இவரை என்ன செய்யலாம் என்று கலக்கமடைந்து அவரை எட்டிப்பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அச்சமயத்தில் தேவமகிமை அவருடைய முகத்தில் விளங்கினதால் அது தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள். முன்காலத்தில் இப்படிப்பட்ட மகிமை ஒருதரம் மோசேயின் முகத்தில் விளங்கினதாக அறிகிறோம்.

ஸ்தேவானுடைய முக மகிமையைக் கண்ட பிரதான ஆசாரியன் மதிமயங்கி, சாந்தமடைந்து, உன்மேல் வந்திருக்கும் பிரியாதின் வரலாறுகள் எல்லாம் நிசந்தானு என்று கேட்கிற பாவனையாக 'காரியம் இப்படியாயிருக்கிறது?' என்று கேட்டான். உடனே ஸ்தேவான் தன்னுடைய பிரசங்கத்தின் சாரத்தைச் சொல்லத் துணிந்து அதின்மூலமாய் சுவிசேஷ சத்தியத்தை அச்சங்கத்தாருக்கு உணர்த்த ஆரம்பித்தார்.

அவர்பேரில் சாட்டப்பட்ட குற்றங்கள் இரண்டு. அதில் ஒன்று தேவதூஷணம், மற்றது மோசேக்கு விரோதமான தூஷணம். இஸ்ரவேலர் இயேசுவை விசுவாசியாதபட்சத்தில் தேவன் அவர்களுடைய பரிசுத்த ஸ்தலத்தை அழித்துப்

போடுவார் என்று சொன்னது தேவதூஷண பாகமாகவும், தேவன் ஒரு புதிய ஜாதியைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு புதிய முறைமைகளை ஏற்படுத்தி அவர்களை ஆசீர்வதிப்பார் என்பது மோசே தூஷணமாகவும் அவர்களால் எண்ணிக் கொள்ளப்பட்டது. இந்த இரண்டு பாகத்துக்கும் அவர் உத்தரவு சொல்லவேண்டியதாயிருந்தது. முதலாம் பாகத் துக்கு உத்தரவாக, தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் கிருபைகளையும் ஒரு ஜாதிக்கும், ஒரு இடத்துக்கு உரியதாக பாவித்து அவரைத் தொழுதுகொண்டு வருவது தேவவல்ல மையை மட்டுப்படுத்தி அவரை மற்ற ஜாதியாரின் தேவர் களுக்கு ஒப்பாக்குகிறதாயிருக்கும் என்ற நியாயத்தைக் கொண்டு ரூபித்தார். இரண்டாம் பாகத்தின் உத்தரவாக தேவன் அப்படியே ஒரு ஜாதியைத் தெரிந்துகொண்டு அதற்கு விசேஷித்த வாழ்வுகளை வாக்குத்தத்தம் செய்திருந்தபோதி லும் அவர்கள் தங்களுடைய நடபடிகளால் அவரை விரோ தித்து, அவருக்குத் துரோகம் செய்துவிட்டபடியால் அவரால் தள்ளிவிடப்படத்தக்க ஸ்திதியிலும், ஆக்கினையை அடையும் நிலைமையிலுமிருக்கிறார்கள் என்ற நியாயத்தையும் கொண்டு ரூபித்தார். இவ்விரு நியாயதோரணைகளையும் அவர் யூத ருடைய சரித்திரங்களிலிருந்தே எடுத்துக்கூறி ஞானவெறியா லும் கிறிஸ்துவின்மேலுள்ள நேசவெறியாலும் பொங்கி 'வணங்காத கழுத்துள்ளவர்களே! இருதயத்திலும் செவிகளி லும் விருத்தசேதனம் பெறுதவர்களே உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமல் இருந்தார்கள்? நீதிபரனுடைய வரு கையை முன் அறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய் தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவ தூதரைக் கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற் றிருந்தும் அதைக் கைக்கொள்ளாமல்போனீர்கள்' என்ற வார்த்தைகளோடு தமது கடைசிப் பிரசங்கத்தை முடித்தார்.

இவ்வளவையும் அவர்கள் கேட்டபோது மூர்க்கமடைந்து அவரைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். துன்மார்க்கரும்

காட்டு மிருகங்களும் ஒன்றுபோலிருக்கிறார்கள். புகைவ ருடைய பற்கடிப்பும் முணுமுணுப்பும் அவருடைய கண் ணுக்கும் காதுக்கும் புலப்பட்டபோது வானத்தின் அருள் அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் பரிசுத்த ஆவியால் நிறைந்தவராய் வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவ னுடைய மகிமையையும் அவருடைய வலதுபாரிசத்தில் இயேசுகிறிஸ்து நிற்கிறதையும் கண்டார். தேவன், தமது காட்சியைத் தமது பக்தாட்களுக்கு அருளுகிறதுண்டு. அந்தக் காட்சி அவரவருடைய பக்தி வளர்ச்சியின் அளவின் படியல்ல பூரண தயவின்படியே கிடைக்கிறது. முற்றிலும் பக்திமான்கள் தங்கள் ஜீவகாலத்தில் இந்த மகிமையைக் காண ஆசைப்பட்டும் காணுமலே மரிக்கலாம்; பலவீன பக்த ருக்கும் அவிசுவாசிகளுக்கும் தேவ விரோதிகளுக்கும் அது தேவகிருபையால் அருளப்பட்டாலும் படலாம். இந்தச் சமயத்தில் ஸ்தேவான் தன் இருதயத்தில் உணர்ந்து அநுப விக்க ஆனந்த வாழ்வை யார்தான் வர்ணித்துச் சொல்லக் கூடும்? ஆ! இந்தக் காட்சி பூமியைக் குப்பை என்று தள்ள வும், விரோதத்தை ஒன்றுமில்லை என்றெண்ணவும் மர ணத்தை நித்தியத்துக்குக் கொண்டுபோகும் ரதம் என்று வாழ்த்தவும் வழி பண்ணிற்று. இக்காட்சி பெரும்பாலும் பக்தாட்களுக்கு தோன்றுமியான காட்சியாய் மாத்திரமிரா மல் மெய்க் காட்சியாய் இருந்தபடியால் ஸ்தேவான் வாய் விட்டு அலறி 'ஆதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதை யும் காண்கிறேன்' என்று சொன்னார். இந்தக் காட்சி அங் கிருந்த வேறொருவருக்கும் தெரியவில்லை; தெரியவுமாட்டாது. ஸ்தேவானுடைய வேலை இன்றோடு முடியவேண்டுமென்றும், இன்றையத்தினம் அவரை மங்கள ஆசீர்வாதங்களோடு மறுமைக்குள் படுத்திக்கொண்டு, அவரை கிறிஸ்து சபையின் இரத்தச்சாட்சிகளுக்குப் பிதாவாகப் பட்டம் சூட்டவேண்டு மென்றும் தேவன் திருவுளமாகி தமது உன்னத கதவுகளைத் திறந்துவைத்துக்கொண்டு காத்திருக்கிறது என்ன அசதியமா யிருக்கிறது. 'பிதாவே! நீர் சற்றுநேரம் காத்திரும், இதோ உமது தாசன் உமது வீடுவந்து சேரப் புறப்பட ஆயத்தப் படுகிறான். மனுஷகுமாரனே? இயேசுகிறிஸ்துவே, நீர்

வாழ்க! உமக்காக தன் உயிரை ஒப்புக்கொடுக்கும் இரத்தச் சாட்சியை கிரீடம் சூட்ட எழுந்து நிற்கிறீராக்கும். சற்றே நில்லும், இதோ உமது இரட்சண்ய குமாரன் புறப்பட்டாயிற்று; இன்னும் சில நிமிஷங்களுக்குள் வருவார். ஆனால் ஒரு விண்ணப்பத்தை அடியானுக்கு அநுக்கிரகம் செய்யும். என் முறை வரும்போது எனக்கும் இந்த வாழ்வு கிடைக்கும் படி தயவுசெய்வீராக!'

வான காட்சி கண்ட ஸ்தேவானின் வார்த்தைகளை சத்துருக்கள் கேட்டவுடனே முன்னிலும் அவர்கள் அதிக உக்கிரம்கொண்டு உரத்த சத்தமாய் கூக்குரலிட்டு, தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து அவரை நகரத்துக்குப் புறம்பே தள்ளி கொலைக் களம் சேர்த்தார்கள். இதென்ன அநியாயம்! மரணக்கினை தீர்ப்பாருமில்லை மரண குற்றம் சாட்டுவாருமில்லை, அப்படியிருந்தும் அவர் கொலைக்களம் கொண்டுபோகப்பட்டார்; போம்—பக்தரே போம். வானம் உமக்குக் காத்திருக்கையில் பூமி உம்மை இனி வைத்திருக்குமோ? இந்த நாய்களின் நடுவில் சஞ்சரிப்பதிலும் அந்த தூதர் கூட்டத்தில் சஞ்சரிப்பது மேலான வாழ்வுதான். நடவும், பக்தரே நடவும். நீர் போய் கதவைத் தட்ட இடமிராதபடி கதவு இப்பொழுதே திறந்துவிடப்பட்டிருக்கிறது. அதோ பிதாவும் தேவசுதனும் உமது வருகைக்கு காத்திருக்கிறார்கள். சம்மன்சோர் அனைவரும் வாத்தியமேந்தி வாழ்த்தும் பாடலோடு காத்திருக்கிறார்கள்.

கொலைக்களம் சேர்ந்தவுடனே அவர் 'கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்று தொழுது கொண்டார். அச்சமயத்தில் அவர்மேல் கற்கள் விழுந்தன. உடனே அவர் முழங்கால்படியிட்டு 'ஆண்டவரே இவர்கள் மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்.' ஸ்தேவானுடைய கடைசி வார்த்தைகளால் நாம் மூன்று சத்தியங்களைக் காண்கிறோம். முதலாவது கிறிஸ்து தேவனை தொழுதுகொள்ளப்பட்டிருக்கிறார். இது யூதமார்க்கத்துக்கு முற்றிலும் விரோதமான போங்கு; என்றாலும் ஸ்தேவானுக்கு கிறிஸ்துவைப்பற்றி உண்டான அறிவு

பரிசுத்த ஆவியாலுண்டானதால் அந்த அறிவை தன் மரணத்தால் உறுதிப்படுத்திக் காட்டினார். 'தொழுது' என்ற பதம், அவருடைய வணக்கத்தின் மாதிரியைக் காட்டுகிறது. யூதர் தொழுதுகொள்ளும்போது தற்காலத்து துலுக்கரைப் போல தலையையும் முதுகையும் குனியப்பண்ணி முழங்கால் கையூன்றி நின்றும் தொழுதுவந்தார்கள். கர்த்தராகிய இயேசுவே! என்று சொன்னபோது ஸ்தேவான் யூதருடைய தொழுதல் முறைப்படி குனிந்து வணங்கி நின்றிருக்கலாம். ஒருவேளை, வானம் திறக்கப்பட்டிருந்த சமயத்தில் கிறிஸ்துவுக்கு தேவதூதர் செலுத்தின வணக்கத்தையும்; அவர் பிதாவுக்குச் சமமானவராய் விளங்கினதையும் அவர் கண்டுதானும் அப்படிச் செய்ய ஏவப்பட்டிருக்கலாம். இயேசுவின் நாமத்துக்கு வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோர் எல்லாரும் தங்கள் முழங்கால் முடக்கி அவரை தேவனுக வணங்கவேண்டியது நியாயமாகவே இருக்கிறது. அவர் சகல வணக்கத்துக்கும், ஸ்தோத்திரத்துக்கும் பாத்திரராகவே இருக்கிறார். இரண்டாவது, ஸ்தேவான் தன் ஆவியை இயேசுவின் வசம் ஒப்புவிக்கிறார். இயேசு மரணமடைந்தபோதோ தமது ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புவித்தார். இவர் இயேசுவினிடத்தில் ஒப்புவித்தார். இந்த இரண்டுவிதமான ஒப்புவித்தலும் ஒரேமாதிரிதான் என்பதை இது உணர்த்துகிறது. கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறது என்பது இதுதான். மூன்றுவது தமது சத்துருக்களுக்காக செபம் செய்திருக்கிறார். இது கிறிஸ்துவின் மாதிரியாயிருக்கிறது. இதினாலே இயேசு மரணமடைகிற சமயத்தில் ஸ்தேவான் ஒருவேளை சமீபத்தில் நின்றிருக்கலாம் என்றும், அவர் 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்' என்று சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மனப்பாடம் பண்ணிக்கொண்டார் என்றுவது நினைக்கவேண்டியதாய் இருக்கிறது. அப்படி இல்லாவிட்டாலும், இயேசு சிலுவையில் இருக்கையில் சத்துருக்களுக்காக செய்த இந்த ஜெபம், அவருடைய சிநேகிதராலும் சத்துருக்களாலும் ஆச்சரியமாய் சொல்லிக்கொள்ளப்பட்டிருந்ததென்றும் அதை ஸ்தேவான் அறிந்து படித்திருந்தாரென்றும் சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

இந்த மூன்று குறிப்புகளாலும் ஸ்தேவான் கிறிஸ்துவின் தெய்வீகத்தை உறுதிப்படுத்தி தமது இரத்தத்தால் முத்திரை இட்டிருக்கிறார் என்று அறிகிறோம். ஒன்றான மெய்தேவனையும் அவர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் பற்றிய சரியான அறிவுதான் நித்தியஜீவனுக்குரிய மேலான அறிவாய் இருக்கிறது (யோவா. 17:3). ஸ்தேவானிடத்தில் கடைசியாக விளங்கின பக்திவைராக்கியமும், கிறிஸ்துவை நோக்கி அவர் செய்த விண்ணப்பமும் சவுல் என்ற வாலிபனின் இரத்தத்தைக் கொதிக்கப்பண்ணிற்று என்று சொல்லலாம். நல்லோரின் மரணமானது, தீயோர் தங்கள் தீமையை விருத்தி பண்ணிக்கொள்ளத்தக்க சமயத்தைக் கொடுக்கிறது.

ஸ்தேவானை கொலை செய்வதற்கு சவுலும் சம்மதித்திருந்தான் என்ற வாசகம், இவருடைய மரண விஷயமாய் சவுல் எடுத்துக்கொண்ட முயற்சியைக் காட்டுகிறது. ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்லும் துஷ்ட கும்புக்கு சவுல் தலையாய் நின்று அவர்களுடைய வஸ்திர காவலாளனாய் இருந்தார் (அப். 7:58). ஸ்தேவானின் ரத்தத்திலிருந்து பிறக்கும் முதலாம் பிள்ளை தான் என்பதும், அவருடைய செபத்தின் முதல்பலன்தான் தான் என்பதும் அப்போது சவுலுக்குத் தெரியாமல்போயிற்று. ஆனால் உன்னத தேவனே இந்தச் சவுலையே, ஸ்தேவானுக்குப் பதிலாக தமது ஊழியக்காரனாக்கி, ஸ்தேவானால் ஆரம்பிக்கப்பட்ட சுவிசேஷ உபதேச மகத்துவங்களின் இரகசியத்தை உலகத்துக்குப் பிரசித்தப்படுத்தும்படித் தீர்மானித்துக்கொண்டார். மனுஷன் தேவனை விரோதிக்கும்படி பந்தயம் கூறுகிறான். தேவன் மனுஷனை நேசிக்கும்படி பந்தயம் கூறுகிறார். இவ்விரு பந்தயங்களில் தேவ பந்தயமே கெலிக்கும். நாம் இதற்கடுத்த சரித்திரத்தில் இந்த சவுலைப்பற்றி விபரமாய் எடுத்துக் காட்டுவோமாகையால் இம்மட்டோடு அவருடைய விஷயத்தை நிறுத்துவோமாக.

கடைசியாக பரிசுத்த ஸ்தேவான் தமது ஜீவன் முடிவை பிரசங்கத்தால் ஆரம்பித்து, வான காட்சிகளால் பலப்படுத்தப்பட்டு, தொழுதலோடும், விண்ணப்பத்தோடும் நடத்தி, முழங்கால்படியிட்டே தமது மரண தோணியிலேறி கல்லெறிதலின்

விசையால் தமது மரண நதியைக் கடந்து நித்திய லோகம் சேர்ந்தார். அவருடைய கடைசி முடிவு 'நித்திரை அடைந்தான்' என்ற சொல்லால் காட்டப்பட்டிருக்கிறது. அவர் நித்திரை அடைந்து சுமார் ஆயிரத்தெண்ணூற்று அறுபது வருஷங்களானபோதிலும், இன்னும் விழிக்கவில்லை. இனி விழிக்கமாட்டாரோ? இல்லை, இல்லை. விழிப்பார். பின்னை அவர் இம்மட்டும் தூங்குவானேன்? அவருடைய பிரயாசத்துக்கு இவ்வளவுநாள் தூக்கமும் போதாது; அவர் விழிக்கும் காலம் உண்டு; அப்போது அவர் தமது உடன் பரிசுத்தவான்கள் நடுவில், முதலாம் இரத்தச்சாட்சிக்குரிய விசேஷித்த கிரீடம் அணிந்தவராய் விளங்குவார். அதை நானும் நீயும் பார்க்கலாம். அதுமட்டும் ஸ்தேவான் தொழுதுகொண்டு வந்த இயேசுவை நோக்கி 'கர்த்தாவே, உமது சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறதினிமித்தம் பூமியில் துன்பப்படுகிறபொழுதெல்லாம் வானத்தை அண்ணாந்துபார்த்து இனி வெளிப்படும் மகிமையை விசுவாசத்தினால் தரிசிக்கும்படி செய்தருளும். உமக்காக துன்பப்படுகிற எல்லாரையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் நின்று ஆதரித்து வருகிற எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாயிருக்கிற இயேசு சுவாமி, உமது முதலாம் இரத்தச்சாட்சியாகிய பரிசுத்த ஸ்தேவான் தன்னைக் கொலை செய்கிறவர்களுக்காக உம்மை நோக்கி வேண்டிக்கொண்ட திருஷ்டாந்தரத்தைப் பார்த்து நாங்களும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, எங்களைத் துன்பப்படுத்துகிறவர்களில் அன்புகூர்ந்து அவர்களை ஆசீர்வதிக்கும்படி கிருபைசெய்தருளும்' என்று விண்ணப்பம் பண்ணிவருவாயாக.

ஸ்தேவான் மரணமடைந்தபின்பு தேவபக்தியுள்ள மனுஷர் கூடி அவரை மரியாதையுடன் அடக்கம்பண்ணி, அவருக்காக மிகவும் துக்கம்கொண்டாடினார்கள். அவருடைய மரணம் ஆகஸ்ட்டு மாசம் நடந்ததாக (கி.பி. 38) பாரம்பரைகளில் எழுதப்பட்டிருக்கிறது. இவருடைய உடல் ஐந்தாம் நூற்றாண்டில் (கி.பி. 418) கண்டுபிடிக்கப்பட்டு ஒரு கிரேக்க சபைக் குருவால் ஐரோப்பாவுக்குக் கொண்டு போகப்பட்டதென்று எழுதப்பட்டிருக்கிறது; அதை

உண்மையென்று நாம் ஒப்புக்கொள்ளக்கூடாதானாலும் அந்த உடல் முதலாம் உயிர்த்தெழுதலின் பலனைப் பெற்று மகிமையாய் விளங்கி, என்னையும் உன்னையும் பிரமிக்கப்பண்ணும். அப்போது இவர்தானே ஸ்தேவான் என்னும் முதலாம் இரத்தச்சாட்சி என்று நாமிருவரும் அதிசயித்துப் பேசிக்கொள்ளுவோம்.

ஸ்தேவான் நாம் விசுவாசிக்க வேண்டியதற்கும், ஜீவிக்க வேண்டியதற்கும், கிறிஸ்துவைப் பிரஸ்தாபிக்கவேண்டியதற்கும் அவர் நிமித்தம் துன்பங்களை சகித்துக்கொள்ளவேண்டியதற்கும் அவருக்குள் மரணமடையவேண்டியதற்கும் நல்ல மாதிரியாயிருக்கிறார். இவருடைய மாதிரியைப் பின்பற்றி நடக்கிற கிறிஸ்தவனுக்கு ஜீவகிரீடம் கிடைக்கும். அவனுக்கு எந்தவிதமான மரணம் சம்பவித்தாலும் வானம் அவனை ஏற்றுக்கொண்டு, தன் கதவுகளைத் திறக்கும். இயேசு அவனை வாழ்த்தும்படி எதிர்கொண்டுவருவார். அவன் அவரைக் கண்ணால் கண்டு அவரோடு என்றென்றைக்கும் வாழுவான். 'மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்' என்று ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கூறுகிறார் (வெளி. 2:10).

பவுல் அப்போஸ்தலன்

பாயிர பருவம்

சில மனுஷாட்களுடைய சரித்திர வரலாறுகளைக் கவனித்தால், அவர்கள் அந்தந்தக் காலத்தில் முடியவேண்டிய ஒரு விசேஷித்த வேலையினிமித்தம் இவ்வுலகத்தில் வந்துபோனதாகவே விளங்கும். சீர்திருத்தலின் காலத்தில் திருச்சபையில் எழும்பின பக்தாட்கள், பாப்புவின் ஆதிக்கத்தையும், கள்ள உபதேசங்களையும் அதம்பண்ண நோக்கமாய், அனுதினம் தேவனுடைய அருள்பெற்று அந்தந்தக் கிரியைகளை நிறைவேற்றி முடித்தார்கள் என்று சொல்லவேண்டியதிருக்கிறதல்லவா? பவுல் அப்போஸ்தலனுடைய காரியமும் அப்படியே இருக்கிறதென்கலாம். இவர் அலெக்சாந்தர், சார்லிமன், நிப்போலியன் முதலிய வீரர்போல் பூலோக இராச்சியபாரத்துக்கடுத்த மாறுதலைப் பிறப்பித்த முடிமன்னனுயிராமல், சாமுவேல், தாவீது, எலியா, ஸ்நானகன் முதலிய வீரபக்தர் போல் பரலோக இராச்சியபாரத்துக்கடுத்த மாறுதலைப் பிறப்பித்த பக்திமுடி மன்னனுயிருந்தார். கிறிஸ்துமார்க்கமாகிய விருட்சம் முளைத்து, தன் முதல் இலைகளைவிட ஆரம்பிக்கிற தருணத்தில் இவர் தோன்றினார். அந்த மார்க்கம் பலவீனமுள்ளதுமில்லை மனுஷ உதவியில்லாமல் அது விருத்தியாகாது என்று சொல்லவும்கூடாது; ஏனெனில் அதனுள் தெய்வீக வல்லமை அடங்கியிருந்தது. காலக்குறைவேயன்றி காரியக்குறைவு அதிலிருந்ததில்லை. காலம் நிறைவேற நிறைவேற இரட்சண்ய மகத்துவமாகிய அந்தக் காரியம் உலகத்தில் விளங்கி உறுதிப்பட்டிருக்கிறது.

அக்காலத்திலிருந்த கிறிஸ்துமார்க்க ஸ்திதியானது பவுலைப்போலொத்த ஒரு ஆள் தனக்கு வேண்டுமென்று சொல்லுகிற பாவனையிலேதானிருந்தது. ஆனால் கிறிஸ்து மார்க்

கத்துக்கு அக்கால ஸ்திதிப்படி வேண்டிய ஆள், அதற்குள் அல்ல, யூதமார்க்கத்துக்குள்ளும், அதன் அநுசாரியாயல்ல, விரோதியாயுமிருந்தது. அது பவுல் அப்போஸ்தலன்தான்.

கிறிஸ்துமார்க்க குணமின்னபடி இருக்கவேண்டுமென்பதற்கு பரி. பவுல் சரியான ஒரு மாதிரி மனுஷனாயிருந்தார். அதன் பூரண முதல்மாதிரி, அம்மார்க்கத்தை ஸ்தாபித்த இயேசுதான். ஆனால் அவர் தேவனாயிருந்தபடியால் இயல்பாகவே தமக்கு உவமையில்லாத குணமுடையவராயிருந்தார். பரி. பவுலோ நம்மைப்போல பாடுள்ள மனுஷர், எவ்வளவாய் கிறிஸ்துமார்க்கம் எதிர்பார்க்கிற சுத்தாங்க குணத்தையுடையவர்களாயிருக்கவேண்டுமென்பதை வெளிப்படுத்திக் காட்டின மனுஷனாயிருந்தார். அவருக்கு மட்டற்ற மனோகதியும், தீர்க்கசுபாவமும் இருந்தது. அவர் கிறிஸ்துமார்க்கத்திற்கு மனம்திரும்பாதபடி யூதமார்க்கத்திலேயேயிருந்து காலம் கழித்திருந்தாலும் சாமானிய மனுஷனாயிராமல் விசேஷமுடையவராகவே இருப்பார். மற்ற அப்போஸ்தலர் கிறிஸ்துமார்க்கத்தால் எழுப்பிவிடப்படாதபட்சத்தில், அவரவர் தம்தம்மட்டில் தாங்கள் வாசம்பண்ணின மூலைகளில் பேர்பிரஸ்தாபமில்லாமல் மாண்டு தங்கள் மண்ணறைக்குள் பிரவேசித்திருக்கலாம். ஆனால் தருசுப்பட்டணத்தானாகிய சவுலைப்பற்றி அப்படிச் சொல்லக்கூடாது. கிறிஸ்துமார்க்கம் இல்லாமலே இருந்தாலும் அவர் பிரஸ்தாபமுடையவராகவேயிருப்பார் என்று சொல்லவேண்டியது. கிறிஸ்துமார்க்கமானது தன்னிலுள்ள ஆவிக்குரிய வல்லமை இவ்வளவு என்பதை பரி. பவுலின்மூலமாய் காட்டிவிட்டது என்று சொன்னாலும் குற்றமில்லை. பரி. பவுலும் இதை ஒருவாறு நன்றாய் அறிந்திருந்தார். ஆதலால்தான் அவர் ஒருதரம் 'நித்தியஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவர்களுக்கு திருஷ்டாந்தமுண்டாகும்பொருட்டு பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன்'[1] என்று தாழ்ச்சியுள்ள மனதோடு அறிக்கையிடுகிறதைப் பார்க்கிறோம்.

---

[1] 1 தீமோ. 1:16.

அவருடைய மனந்திரும்புதலானது, எவ்வளவு பலமான தடைகளையும் எதிர்க்கும் குணங்களையும் தடுக்கவும் மாற்றவும் கிறிஸ்துமார்க்கத்துக்கு வல்லமை இருக்கிறதென்பதையும், திடீரென்று அது ஒருவனுடைய சருவ சுபாவத்தையும் கீழது மேலதாக மாற்றி அவனில் தன்னுடைய தெய்வீக தன்மையை முத்திரித்து, அவனை நிலையுள்ள கிருபாபாத்திரமாக்கிவிடுமென்பதையும் வெளிப்படுத்திவிட்டது. பவுல் அப்போஸ்தலனுடைய குணப்போக்கைப் பார்த்தால், இவரே தான் கிறிஸ்தவனாகிறதே தென்று எவரும் எண்ணத்தக்கதாக இருந்தபோதிலும், இப்படிப்பட்டவரே கிறிஸ்துமார்க்கத்துக்கு திரும்பி, தனக்கு இணையற்ற தனி பக்தனாய் நிற்கிறதை நாம் பார்க்கிறது, அவரைத் திருப்பின அந்த மார்க்கத்தின் வல்லமையை நமக்கு தெளிவிக்கிறதாய் இருக்கிறது. பரி. பவுல் தன் ஜீவகாலத்தில் ஒருதரமாவது கிறிஸ்துமார்க்க ஏணியின் படிகளிலிருந்து சறுக்கவே இல்லை என்பதும், கிறிஸ்துவின்மேல் அவர் ஆதியில் வைத்த அன்பின் அனல் குறையவே இல்லை என்பதும், அவர் அந்த மார்க்கத்தில் எவ்வளவு பற்றுதலாயிருந்தார் என்பதைக் காட்டுகிறது போல, அந்த மார்க்கத்தின் சத்துவானது எவ்வளவு பலமாய் அவரைப்பற்றி தழுவிக்கொண்டிருந்ததென்பதையும் நன்றாய் விளக்குகிறது. அவருடைய சரீர உறுப்புக்கள் இயல்பாகவே நல்ல தசைகளும், நரம்புகளும், மூளையும், நயனமும், உதிரமும், உடையதாய் இருந்தனவென்று சொல்லவேண்டியது; ஆனால் கிறிஸ்துவின் ஆவி அததற்குள் பிரவேசித்து அவைகள் ஒவ்வொன்றையும் எழுப்பி பலப்படுத்தி, அவருடைய உடலின் உறுப்புகளை மற்றவர்களுடைய சரீரத்துக்கு இணையற்றதாக வித்தியாசப்படுத்திவிட்டது. கிறிஸ்துவின் அருள் அநுக்கிரகத்தினாலேதான் இவ்வித மாறுதல் உண்டாகி இருக்கிறதென்பதை அவரும் அறிந்திருந்தார், மற்றவர்களும் அறிந்துகொண்டார்கள். 'நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'[1] என்று ஒருதரம் சொன்ன வசனமே அவருடைய ஜீவகாலத்தின் தின வாசகமாயிருந்தது என்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் குணம்

---

[1] கலா. 2:20.

இன்னபடி இருந்ததென்று நுட்பமாய் அறிய விரும்புகிறவன் இவருடைய குணங்களைக் கவனிக்கிறதால் இலேசில் கண்டு கொள்ளும்படி அவருடைய சாயல் அவ்வளவு அதிக பலமாய் பரி. பவுலில் பதிந்திருந்தது. சொல்லவேண்டுமென்றால், புதிய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சுபாவத்தையும் குணத்தையும் நேரே அறிந்து உணர்ந்து ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறதைவிட பரி. பவுலின் குண பரிசோதனை மூலமாய் இலேசாக அறிந்துகொள்ளலாம். எப்படியெனில் கிறிஸ்துவின் பரிசுத்த குணங்களின் ஜோதி அவ்வளவு அதிகமாயிருப்பதால் அதின் நுட்பத்தை இலேசில் கண்டுபிடிக்க இயலாமல் அவையனைத்தும் ஏக ஜோதிபோல் எரிகிறது. பரி. பவுலின் மூலமாய், பாவமும் பலவீனமுமான விசுவாசியின்கண் நயனத்து காட்சிக்குத் தகுந்தபிரகாரம் கிறிஸ்துவின் குணம், பிரிவு பிரிவாய் வெளியாகிறதாய் இருக்கிறது.

மேலும் பரி. பவுலில், கிறிஸ்துமார்க்கமானது சுய கருத்துடைய ஒரு விந்துவ பக்தனையுடையதாய் இருக்கிறது. அக்காலத்து கிறிஸ்து சபைக்கு அப்படிப்பட்ட ஒரு ஆள் இன்றியமையாத அவசியமாயிருந்தது. பூலோக இரட்சகர் பரமேறிவிட்டார்; அவருடைய சீஷர்கள் பெரும்பாலும் கல்வியற்ற பேதைகளாயிருந்தார்கள். இது கிறிஸ்துமார்க்க மகத்துவத்துக்கு ஒரு அத்தாட்சியாயும் இருக்கிறது. அது மனுஷர் பலத்திலும் வல்லமையிலும் அல்ல தேவ பலத்தில் நிற்கிறதென்றும் உலகத்துக்கு என்றென்றைக்கும் உணர்த்துகிறது. எப்படியும் இக்காலத்தில் பவுல் அப்போஸ்தனைப் போல் ஒரு ஆள் தமது வேலைக்காக இந்தப் பூலோகத்தில் வேண்டியதென்று இயேசு தீர்மானித்தார். கிறிஸ்து தமது பிதாவின் மகிமையுடையவராய் வெளிப்பட்டு இரட்சண்ய வேலைக்குரிய சகல பாகத்தையும் முடித்துவிட்டார். அது மாத்திரம் போதாதிருந்தது. அவர் வெளிப்பட்ட காரணமும், கருத்தும் உலகத்திற்கு விளக்குவிக்கப்படவேண்டியதாய் இருந்தது. பூலோகத்தில் மனுஷாவதாரமான இவர் யார்? அவர் வந்து நிறைவேற்றிய வேலைதானென்ன? ஆகிய இப்படிப்பட்ட ஆழ்ந்த கிறிஸ்துமார்க்க ஞானசாஸ்திரக் கேள்விகளுக்கு அப்போஸ்தலர் பொதுவான உத்தரவுகளை மாத்திரம்

சொல்லக்கூடியவர்களாய் இருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவராவது கல்விமான்களின் கருத்துக்கிசையவும் படிப்பாளிகளின் படிப்புக்கு ஏற்றதாகவும் அந்தச் சத்தியத்தை ஆழ்ந்து நுழைந்து விளக்கிச்சொல்ல வல்லவர்களாய் இருக்கவில்லை. அவ்வளவுதூரம் சொல்லத்தக்கதாக அவர்களுடைய கல்வித்திறமை இருக்கவில்லை. இதினால் நாம் மற்ற அப்போஸ்தலரைத் தாழ்த்துகிறோமென்றுவது, இரட்சிப்புக்குரிய அறிவைக் கொடுக்க இவ்வளவு சுடந்த உலசுக் கல்வி வேண்டியதென்றுவது சொல்லுகிறதில்லை. ஏனெனில் இப்படி சாஸ்திரப்போங்காகச் சத்தியத்தை அறிந்தால்தான் கிறிஸ்து மார்க்கம் ஒவ்வொரு நெஞ்சிலும் இரட்சிப்புக்கேற்ற பலனை உண்டாக்குகிறதில்லை என்பது நிச்சயம். அநேகர் கிறிஸ்து என் இரட்சகராய் இருக்கிறார் என்பதை சாஸ்திர அறிவின்றி அறிந்து விசுவாசித்து காலம் கழித்து மோட்ச கரை சேருகிறவர்களாகவே இருக்கிறார்கள். என்றாலும் அது பொதுப்போங்காய் மாத்திரமல்ல சாஸ்திரமேரையாயும் விளக்கிக் காட்டப்பட்டு கல்விமான்களையும் ஞானிகளையும் எட்டத்தக்கதான உயர்ந்த ஞானமாக உலகத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டியதும் அவசியம்தான். அது கிறிஸ்துமார்க்கத்தின் மகத்துவத்தைக் காட்டுமேயன்றி அதைக் தாழ்வாக்க மாட்டாது. அதற்கேற்ற ஆள் பரி. பவுலாக இருந்தார்.

அவர் சுய கருத்துடைய ஒரு பாலியனாகவே பிறந்தார் என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவருக்கு மட்டற்ற மனப்போங்கும் தீர்க்கவராமுள்ள சுபாவமுமிருந்தது. ஒரு காரியத்தின் முதல் கருத்தையும், ஆதிகாரணத்தையும் அதின் முடிவிலிருந்து பிடித்து மூலத்தைத் தொடவும், அதின் மூலத்திலிருந்து துவக்கி நூலிழைத்து பாவோட்டி படுதாவாகக் காண்பிக்கவும்தக்க வல்லமையுள்ள மனோதத்துவம் உடையவராய் இருந்தார். அல்லது ஒருக்காலும் காணாத ஒரு விருட்சத்தை அதின் விதையை கையில் வைத்து படமெழுதிக் காட்டுகிறவரும், ஒருக்காலும் காணாத விதையை அந்த விருட்சத்தின் பூவை வைத்துக்கொண்டு குறித்துக் காட்டுகிறவருமான கோசர யூகமும் ஞானசிந்தைப் போங்கும் உடையவராக இருந்தார். கிறிஸ்து தேவனுடைய குமாரனுய்

இருக்கிறதென்று பொதுவாக அறிந்துகொள்ளுகிறது மாத்திரம் அவருக்குப் போதுமானதாய் இருக்கவில்லை. அவர் அதின் இரகசியங்களை வெளியாக்கி, அந்த தேவ ஞானத்தின் போக்கை பங்கு பங்காக விளக்கி உணர்ந்துகொள்ளவேண்டுமென்ற சிந்தையுடையவராயும் இருந்தார். இயல்பாகவே அவர் மனோகாந்தி உடையவராய் இருந்ததோடு பலவித உலக ஞானங்களில் நிபுணத்துவம் உடையவராயும் இருந்தார். மற்ற அப்போஸ்தலரோ கல்லாதவர்களாய் இருந்தார்கள். இவர் அக்காலத்திலுள்ள கல்வியில் கரைகண்ட வித்துவ சிரோமணியாக இருந்தார். தமது கோட்பாட்டை நிலைநிறுத்தும்படி தமது மனதில் தோன்றும் நியாயங்களை எவ்வண்ணம் ஒழுங்குபடுத்திக்கொள்ளவேண்டுமென்று ரபிமார் மூலமாய் நன்றாகக் கற்றிருந்தார். கிறிஸ்துமார்க்கத்தின் ஞான சாரத்தை அவர் விளக்கும் போங்கால் அதின் உண்மை தெளிவாகிறது. அக்கருத்துகளைப் பார்த்தால் அவை அனைத்தும் கிறிஸ்துவால் பரலோகத்திலிருந்து அறிவிக்கப்பட்டு, முந்தினவைகளின் தொடர்ச்சியாக இருக்கும்படி சொல்லிக் கொடுக்கப்பட்டவைகள் போலவே விளங்குகின்றன.

கிறிஸ்துவினால் விவரிக்கப்படாமல் விட்டிருந்த ஒரு விசேஷித்த வரலாறு இருந்தது. அது அவருடைய மரண வரலாறுதான். அவருடைய மரணம் நிறைவேறுமுன் அதைப்பற்றிய ஆழ்ந்த நுட்பங்களை விவரித்துச் சொல்லி வைக்கவும் அவரால் ஏதுவில்லைதான். இதுதான் பரி. பவுலின் விசேஷ கவனமாயிற்று. அவர் ஏன்தான் பாடுபடவேண்டும் என்பதும், அவருடைய பாடுகளால் என்ன பலன் என்பதும் அவருக்கு தின காலதியானப் பொருளாயிருந்தன. அவையனைத்தையும் பற்றிய ஆழங்களையெல்லாம் பரி. பவுல் ஆராய்ந்து அறிந்துகொண்டார். அவர் எழுதியிருக்கிற பதின்மூன்று நிருபங்களையும் காலவரிசையின்படி ஒழுங்குபடுத்திப்பார்த்தால் இவ்விஷயங்களில் அவருடைய சிந்தை வரவர ஆழத்தில் இறங்கித் தியானித்து வந்தது. என்று லேசாகத் தெரியவரும். இந்தப் பரம இரகசியங்களின் ஆழங்கள் அவருக்கு எவ்வளவு விளங்கினதோ அதற்குத் தக்கதாக அவருடைய ஆத்தும அநுபோகங்கள் விருத்தியாகி பலப்பட்டது. மேலும் அதினாலே அவர் அக்காலத்தில்

சத்தியத்துக்கு விரோதமாய் எதிர்த்தவர்கள் எவரையும் உதாகரிக்கவும் சத்திய உபதேசத்தை நிலைநிறுத்துவதற்கேற்ற நியாயங்களைப் பொழியவும் இடமாயிற்று. மொத்தமாகச் சிலுவையில் அறையுண்ட இயேசுவே அவருடைய சிந்தையின் சிலையாய் இருந்தார்.

பரி. பவுலில் கிறிஸ்துமார்க்கத்துக்கு புறச்சாதியாரை மனந்திருப்பப் பண்ணும் ஒரு சுவிசேஷ பிரசங்கி கிடைத்தது. இவ்வளவு தீர்ந்த மனோகாந்தியோடு சுறுசுறுப்பாய் வேலைசெய்தும் தத்துவமுடைய ஒரு ஆள் கிடைப்பது அரிது. இவ்விரண்டும் பரி. பவுலில் கூடியிருந்தது. அவர் திருச்சபையின் சுய கருத்தானியாக மாத்திரமல்ல, முதல்தரமான வேலையாளாகவுமிருந்தார். அக்காலத்திலிருந்த கிறிஸ்து சபைக்கு அதின் ஆழ்ந்த ஞானங்களைக் கடைந்தெடுத்து காட்டும் ஒரு நிறமைசாலி வேண்டியதாயிருந்ததுபோல அவைகளைப் பிரசித்தப்படுத்தும் ஒரு வீரனும் வேண்டியதாகவே இருந்தது. ஏனெனில் புறச்சாதிகள் நிறைந்த லோகத்தில் இந்தச் சத்தியங்கள் முற்றிலும் மறைக்கப்பட்டதாகவே இருந்தது.

யூதருக்கும் புறஜாதியாருக்கும் இருந்த பிரிவினையை அழித்து, இரு ஜாதியையும் ஏக ஜாதியாக்கி, எல்லாரையும் ஒன்றுபோல் இரட்சண்ய வாழ்வாகிய ஜீவ விருட்சத்தின் நிழலுக்குள் கொண்டுவந்து சேர்த்துவிடவேண்டுமென்பதே கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தின் ஒரு நோக்கமாயிருந்தது. இரட்சண்ய விஷயத்தில் ஆண் என்றும் பெண் என்றும், அடிமை என்றும் சுயாதீனன் என்றும், யூதனென்றும் கிரேக்கனென்றும், கற்றவன் என்றும் கல்லாதவன் என்றும், வெள்ளையன் என்றும் கறுப்பன் என்றும் யாதொரு வித்தியாசமில்லை. இரட்சண்ய ஞானமானது சகலரையும் பாவிகள் என்ற ஒரே ஜாதிக்குள் அடக்கி அவர்களுக்கு மீட்பின் வழியைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது. இந்தச் சிறந்த கருத்தை கிறிஸ்துவானவர் தமது ஜீவகாலத்தில் பூரணமாய் நிறைவேற்றிவிட இடம்பெறவில்லை. காணுமற்போன இஸ்ரவேல் குடும்பத்துக்கு அந்த இரட்சிப்பைக் கூறுவதே அவ

ருடைய ஜீவகாலத்துக்கென்று குறிக்கப்பட்டிருந்தது.[1] அந்த வேலையை அவர் முடித்தவுடனே, சிலுவையின் வழியாய், சிம்மாசனபதியாகி, உலகமெங்கும் நிறைவேற்றப்படவேண்டியிருந்த மீதி வேலையை தமது ஊழியக்காரர் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார்.[2]

பரி. பவுல் புறத்தேச பிரசங்கியாக வெளிப்பட்டு வருமுன்னதாக இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதினாலே யூதருடைய தடைகள் ஒருவாறு நிராகரிக்கப்பட்டதோடு கிறிஸ்துமார்க்கமானது சர்வ ஜாதிகளுக்கும் அடுத்தமார்க்கமாக எண்ணப்படத் தொடங்கிற்று என்று சொல்லலாம். பேதுரு முதலாம் புறச்சாதியானை ஞானஸ்நானத்தின் மூலமாய் சபையில் சேர்த்தார். என்றாலும் புறச்சாதியாருக்குள் நடத்தப்படவேண்டியதாயிருந்த மட்டற்ற வேலைக்கு அக்காலத்திலிருந்த எந்த அப்போஸ்தலரும் தகுதியுடையவர்களாய் இருக்கவில்லை. அவர்களில் ஒருவராவது யூதரும் புறச்சாதியாரும் இரட்சண்ய விஷயத்தில் சமமாகவே இருக்கிறார்கள் என்று எண்ணவுமில்லை; அவர்களில் மிச்சமானவர்களை இழுத்துவரத்தக்க அறிவாளிகளாக இருக்கவுமில்லை. இவர்கள் தம் ஜாதிக்குள்ளும் தேசத்துக்குள்ளும் அலைந்து திரிந்து போதிக்கக்கூடிய சொற்ப அறிவாளிகளான செம்படவராகவே இருந்தார்கள். ஆனால் அக்காலத்திலுள்ள பெரிய நகரங்களாகிய ரோமை, அத்தேனே, பிலிப்பு, எபேசு முதலிய பட்டணங்கள் காளைக்குப் புறம்பான தேசங்களுக்குள்ளே இருந்தன. அந்த நாடுகளும் நகரங்களும்தான் அக்காலத்தில் ஆளுவத்திலும், ஐசுவரியத்திலும், கல்வியிலும், நாகரீகத்திலும், உலக ஞானத்திலும், இன்பத்திலும் பேர்போனதாயிருந்தன. இப்படிப்பட்ட இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக தேறிய வித்துவானும், அகன்ற மனப்போங்குள்ளவனும், மட்டற்ற அநுதாபக்காரனும், யூதருக்கு யூதனும், கிரேக்கனுக்கு கிரேக்கனும், ரோமனுக்கு ரோமனும், அடிமைகளுக்கு அடிமையானவனும், சூனகோகுகளில் ரபிமாரோடே ஆட்சேபணைபண்ணி வெல்லத்தக்கவனும், நியாயஸ்தலங்களில் அதிபதிகளையும் சத்தியத்

[1] மத். 10:6. [2] மத். 28:19.

தின் பட்சமாய் சாய்த்துவிடக்கூடியவனும், ஞானிகளை அவர்களுடைய ஞானத்தைக்கொண்டே வெட்கப்படுத்திவிடக்கூடியவனும், கடல் யாத்திரை கரை யாத்திரை செய்யத்தக்கவனும், எவ்விதச் சங்கட காலங்களிலும் சமய யுக்தியுடையவனும், எந்த உபத்திரவங்களிலும் மனமிளக்கரியாதவனுமான ஒருவன் அவசரமாயிருந்தது. இவ்வளவு குணாதிசயம் பொருந்தியவர்கள் அப்போஸ்தலருடைய கூட்டத்தில் இருந்ததில்லை; அக்காலத்துக் கிறிஸ்துமார்க்கத்துக்கு இப்படிப்பட்ட ஆள் ஒன்று அவசியமாயிருந்தது; அந்த ஆள் பரி. பவுலாக இருந்தார்.

மற்ற அப்போஸ்தலரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்தின் மேல் அதிகப் பற்றுதலாயிருந்த பரி. பவுல், அந்த பூர்வ அபிப்பிராயங்களை அனைத்தையும் தமது மனதைவிட்டு அகற்றி, கிறிஸ்துவில் சருவ ஜாதியும் சமம் என்ற சித்தாந்தத்தை அங்கிகரித்து அதைத் தமது முழு வல்லமையோடும் நிலைநிறுத்தும்படி முயன்றார். அவர் தம்மை புறச்சாதியாருடைய அப்போஸ்தலராக ஒப்புக்கொடுத்து தமது ஜீவகாலமெல்லாம் அந்த வேலையை உண்மையோடு நிறைவேற்றிவந்தார். அவரைப்போல சுவிசேஷ வேலையில் ஏக மன நிர்ணயமாயும், சம ஊக்க அளவாயும் ஊழியம்செய்து முடித்தவர்கள் ஒருவருமில்லையென்றே சொல்லவேண்டியது. மெய்யாகவே சுவிசேஷத்தை பிரசங்கித்தவர்களில் அவரைப்போல் வீரரும், துன்பங்களைச் சகித்தவர்களும், ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணினதால் வெற்றி அடைந்தவர்களுமில்லை. அவரில் இயேசுகிறிஸ்துவானவர் உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி எழுந்தருளியாகி, அவருடைய கைகளையும், கால்களையும், நாவையும், மூளையையும், இருதயத்தையும் பிரயோகித்து, தமது காலத்தில் நிறைவேறுமல் பாக்கிபட்டிருந்த வேலைகளை முடித்தார் என்றே சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

பிரசயமானபின்பு குணப்பட்டு பக்திநெறியில் நடந்துவருகிறவர்கள் தங்களுடைய பூர்வ பாவநிலைமையின் ஸ்திதியை அடிக்கடித் துக்கத்தோடு நினைவுகூர்ந்து, மன நோவாலும் வெட்கத்தாலும் தங்களுடைய மன மலினை மூடிக்கொண்டு

உன்னத தேவனின் கருணைகரமே தங்களுடைய பாவக் கார் மேகமனத்தையும் கலைத்துவிடவேண்டுமென்று கருதுகிறவர் களாய் இருக்கிறார்கள். இவ்வித உணர்ச்சியும் துக்கமும் பரி. பவுலின் நெஞ்சத்தில் பூரணமாயிருந்தது. அவர் தமது ஜீவகாலமுழுவதும், தாம் குணப்படுமுன் நடந்துவந்த தேவ துரோக வழிப்பாடுகளை அடிக்கடி தியானித்து தன்னைக் குறித்து 'நான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவனாயிருக் கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதி னாலே நான் அப்போஸ்தலன் என்று பேர்பெறுவதற்கும் பாத்திரனல்ல'[1] என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இப்படிப் பட்ட அவருடைய சில துயர வாசகங்கள் ஒரு போங்காய் மாத்திரம் சரியானது என்று சொல்லவேண்டியது. தேவ னுடைய ஆலோசனைகள் மகா ஆழமானவைகள். அவர் தம்மை அறியாதிருக்கிறவர்களுக்குள்ளும் தமது சத்தியத் தின் விதைகளை ஊன்றுகிறார். அந்த வித்துக்கள் அவரவர் தன்மார்க்க வழிகளில் நிலைத்திருக்கும் காலமட்டும் முளைக் காமல் மறைந்துகிடந்தபோதிலும், ஒருகாலத்தில் மனம் திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்படி முளைத்து விருத்தியாகலாம். பரி. பவுலின் ஜனனம் கல்விப்பயிற்சி, ஜனசகவாசம் முதலியவைகள் எல்லாம் பின்னுக்கு அவரால் நிறைவேற்றப்படும்படி தேவன் ஏற்பாடு பண்ணியிருந்த வேலைக்கு ஆயத்தப்படுகிற பாவனையாகவே இருந்தது. இப் படிப்பட்ட முந்தின ஆயத்தங்கள் இல்லாதபட்சத்தில் அவர் எடுக்கவேண்டியதாயிருந்த சிறந்த ஊழியத்துக்கு பூரணப் பட்டிருக்கமாட்டாரென்றே சொல்லவேண்டியது. தாம் எந்த வேலைக்கு ஆயத்தப்படுகிறார் என்பதை அவர் அறியவுமில்லை, தமது பிற்கால வேலையைப்பற்றி தாம் நினைத் திருந்ததற்கும் அதிக வித்தியாசமிருந்தது. நம்மைத் திருத்தி ஆயத்தப்படுத்துகிறதிலும் தேவனுடைய கரமிருக்கிறது. அந்த தெய்வீக கரமானது பரி. பவுல தேவனுடைய ஊழியத்துக்கேற்ற விசேஷ கருவியாக செப்பனிட்டு தயார் செய்துவந்தது. அந்த தேவமுறையை அவர் அறியாதிருந்தார்.

---

[1] 1 கொரி. 15:9.

ஜனன பருவம்

பரி. பவுலின் ஜனன காலத்தைத் திட்டமாய் சொல்ல எதுவில்லாவிட்டாலும், நமது வாசகத்துக்கேற்றதாக ஒருவாறு கணித்துக்கொள்ளலாம். கிறிஸ்துவுக்குப்பின் 33ஆம் வருஷத்தில் ஸ்தேவான் இரத்தச்சாட்சியானபோது அவன்மேல் கல்லெறிந்த 'சாட்சிக்காரர், தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்'[1] என்று வாசிக்கிறோம். இந்தக்காலத்தில் அவர் 'வாலிபனாய்' இருந்தார். இவ்விடத்தில் 'வாலிபன்' என்பது இருபது வயதுக்கு மேலும் முப்பது வயதுக்கு கீழுமான பிராயத்தைக் குறிக்கலாம். ஸ்தேவானைக் கல்லெறிந்த காலத்தையடுத்து பரி. பவுல் சனதரீம் சங்கத்தைச் சேர்ந்த ஒரு அவயவமாய் இருக்கிறார். இந்த சனதரீம் சங்கத்தில் 30 வயதுக்குக் குறைந்தவர்களைச் சேர்க்கமாட்டார்கள். மேலும் இதின் சமீபகாலத்தில் பரிசுத்த பவுலுக்குக் கொடுக்கப்பட்டதாக நாம் வாசிக்கிற அதிகாரம்:[2] அவரை முப்பது வயதுக்கு மேற்பட்டவர்போலவே ருசுப்படுத்துகிறது. ஏனெனில் கிறிஸ்தவர்களைக் கட்டவும் பிடிக்கவுமான அந்த பெரிய அதிகாரத்தை சங்கத்தார் சொற்ப வயசுள்ள ஒரு வாலிபனுக்குக் கொடுத்திருக்கமாட்டார்கள். பரி. பவுல் ஸ்தேவானைக் கொலைசெய்வதில் துணைநின்ற, சுமார் முப்பது வருஷத்துக்குப்பின்பு, அதாவது கி.பி. 62இல் ஸ்தேவான் கொலைசெய்யப்பட்ட காரணம் எதுவோ அதே காரணத்துக்காக உரோமையில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டு மரணக்கினையை எதிர்பார்த்திருந்தார். அங்கிருந்து அவர் எழுதின நிருபங்களில் ஒன்றில் தம்மை விருத்தாப்பியனைப்போல காட்டுகிறார். அவருடைய பிரயாசங்களின் திரட்சியினாலும், அவர் பட்ட கஷ்டநஷ்டங்களினாலும், அவருடைய முகம் விருத்தாப்பியனைப்போல காணப்பட்டிருக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டாலும், குறைந்தபட்சம் அவர் 60 வயது கடந்திராவிட்டால் தம்மைக் குறித்து தாமே 'நான் முதிர்வயதுள்ளவன்'[3] என்று சொல்லவேமாட்டார். இவ்வித காலக் கணக்குகளைக்கொண்டு கிறிஸ்து

[1] அப். 7:58. [2] அப். 9:1,2. [3] பிலமோ. 8 வச.

இரட்சகர் பிறந்த காலத்திலேயே பரி. பவுலும் பிறந்திருக்கிறார் என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஆகவே இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தின் தெருக்களில் விளையாடித் திரிந்தகாலத்தில் பவுல் கிலிக்கியா நாட்டின் தருசுப் பட்டணத்துத் தெருக்களில் திரிந்தலைந்து விளையாடிக் காலம்கழித்திருக்கிறார். இவ்விருவரும் வெவ்வேறு மலைகளின் சுனையிலிருந்து எழும்பி வெகுதூரம் பிரிந்து ஓடி கடைசியாய் ஒன்றுகூடி கலந்து ஏக ஆறாய் ஓடும் நதிபோலிருக்கிறதாகத் தோன்றுகிறது.

இவர் சின்னாசியாவின் தென்கீழ் பாகமாகிய கிலிக்கிய நாட்டின் தலைநகரியாகிய தருசுப் பட்டணத்தில் பிறந்தார். அது கடலுக்கு சற்று தூரத்திலுள்ள ஒரு செழிப்பான மைதானத்தில் ஓடின சித்னுஸ் (Cydnus) என்னும் ஆற்றின் இரு கரையிலும் கட்டப்பட்டிருந்தது. நகரத்தின் மத்தியில் ஓடின அவ்வாற்றின் இரு கரையும் துறைமுகம்போலிருந்து, அயல் தேசத்திலுள்ள பலவித சரக்குகளால் நிறைந்திருந்தன. அதின் தெருக்களில் பல பாஷைகள் பேசி பலவித உடை தரித்த அநேக படவுக்காரரும் வியாபாரிகளும் திரிந்தலைந்தார்கள். அந்த நாட்டில், வேலைபாடுக்கேற்ற அநேக விசேஷித்த விருட்சங்கள் தழைத்தோங்கினதால், உத்தர வியாபாரமே முக்கியமாய் அந்த ஊரிலே நடந்தது. அதற் கடுத்தாப்போல் ஆட்டுமயிர் வேலைப்பாடான பல கம்பிளி முதலியவைகளின் வியாபாரமும் மிச்சமாய் நடந்துவந்தது. ஆடுகளுக்கேற்ற மேய்ச்சல் தருசுப் பட்டணத்துக்குச் சமீபமான மலைச்சார்புகளிருந்ததால் மெல்லிய ரோமமுள்ள ஆட்டுமந்தைகளை பலரும் வைத்து, அதின் மயிரை விற்று திரண்ட லாபத்தைச் சம்பாதித்துவந்தார்கள். இவ்வித ஆட்டுமயிரால் கூடாரத் திரைகளும், படுதாக்களும், கம்பிளிகளும், சால்வைகளும் நெய்யப்பட்டு உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டதுமன்றி கடல்மார்க்கமாய் அயல் தேசங்களுக்கும் அனுப்பப்பட்டன. பரி. பவுல் இப்படிப்பட்ட ஒரு தொழில்துறையில்தான் கூடாரம் செய்யும் தொழிலைக் கற்றிருந்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. கடல்மார்க்கமாய் மாத்திரமல்ல, அந்தப் பட்டணத்துக்குச் சமீபத்திலிருந்து

கிலிக்கியன் கணவாய் வழியாக சின்ஞசியாவின் மத்திய மாகாணங்களுக்குள் கரைமார்க்கமாயும் மட்டற்ற வியாபாரம் நடந்துவந்தது. ஆகவே தருசுவுக்கு கிழக்கிலும் மேற்கிலு மான தேசங்களுக்கு வியாபாரம் போக்குவரத்தாகும்படி இது ஒரு வர்த்தகத் தாய்ப்பட்டணமாயிருந்தது. இம் முகாந்தரங்களால் இது ஒரு ஜனம்பெருத்த நகரமாயும் பணம் பெருத்த பட்டணமாயுமிருந்தது. இதின் குடிகளில் மிச்சமானவர்கள் சிலீஷியராய் இருந்தாலும், அங்குள்ள ஐசுவரியவான்கள் கிரேக்கராகவே இருந்தார்கள். இந்த நகரமானது சுய அதிகாரத்தையுடைய சலாக்கியத்தைப் பெற்றிருந்தாலும், உரோமை அரசாட்சிக்குள்பட்டிருந்தது; மலையாள இராச்சியம் எப்படி ஆங்கிலேய ஆதிக்கத்துக்குள் பட்டிருக்கிறதோ அவ்வண்ணமே தருசுப்பட்டணம் உரோமை அரசாட்சிக்குள்பட்டிருந்ததென்கலாம். மேலும் இந்த நகரம் கல்வியை அபிவிருத்திசெய்யும் சர்வகலாசாலையை உடையதா யிருந்ததால் பல இடங்களிலுமிருந்து கல்வி கற்கவரும் பல ஜாதி பாலியரால் நிறைந்திருந்தது. அக்காலத்தில் கல்வியை அபிவிர்த்தி செய்துவந்த மூன்று நகரங்களில் இது முக்கிய மானதாய் இருந்தது. மற்ற இரண்டு நகரங்கள் அத்தேனே யும் அலெக்சாந்திரியாவும்தான். தருசுப்பட்டணவீதியில் தினகாலம் திரிந்தலைந்த மாணக்கரின் காட்சியே அதின் அலங்காரங்களில் ஒன்று என்று சொல்லலாம்.

அப்போஸ்தலன் பிறக்கிறதற்கு இதைப்போல தகுதி யான ஸ்தானம் வேறொன்றுண்டா? சகல ஜாதியாருடைய நிறத்தையும், பாஷையையும், குணத்தையும் அறியவும் ஒரு ஜாதியையும் அசட்டைபண்ணுதபடிக்கும் இது ஒரு முன் ஆயத்தம்போலிருக்கிறது. பிந்தின காலங்களில் பவுல் அப் போஸ்தலன் தாம் பிறந்த பட்டணத்தைப்போல பெரிய நகரங்களையே நாடுகிறவராயிருந்தார். அவருடைய எஜமான னாகிய இயேசு எருசலேமை முதலாய் அதிகமாய் நாடாமல் மலைச்சார்புகளையும், கடலோரங்களையும், சிறிய கிராமங்களை யும் நாடுகிறவராயிருந்தாலும் பரி. பவுல் அந்தியோகியா, எபேசு, அத்தேனே, கொரிந்து, ரோமை முதலிய பெரிய பட்டணங்களிலே போக்குவரத்துப்பண்ணினார். கிறிஸ்து

பேசின உபமானங்கள் நாட்டுப்புறங்களையும், திராட்சச்செடி யையும், லீலி புஷ்பத்தையும், காட்டிலுள்ள ஆட்டுமந்தையை யும் தழுவினதாயிருந்தது. இவரோ நகரங்களையும், நாடக சாலைகளையும், யுத்தங்களையும், கட்டட மகத்துவ அலங்காரங் களையும் ஜெயகோலங்களையும் தழுவினதாயிருந்தது. ஆகவே அவருடைய பாலியகால காட்சியும் சகவாசமும் அந்தியகால மட்டும் அவரில் நிலைத்திருந்திருக்கிறது.

பரி. பவுலுக்கு தாம் பிறந்த ஊரைப்பற்றிய பெரிய எண்ணமுமிருந்தது. அவர் ஒருதரம் தம்மைப்பற்றி 'நான் சிலீஷியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தருசுப்பட்டணத்து யூதன்' என்கிறார்.[1] அவர் இயல்பாகவே தேசாபிமான முடையவராயிருந்தார். என்றாலும் அந்த அபிமானம், சிலீஷியாவின்மேலாவது தருசுப்பட்டணத்தின்மேலாகவா வது இருக்கவில்லை. தன் ஜனன நாட்டுக்கு அவர் அந்நியர் போலவே இருந்தார். அக்காலத்திலிருந்த யூதர் வியாபாரத்தி னிமித்தம் பல புறச்சாதியாருக்குள்ளும் கலந்திருந்து காலம் கழித்ததுபோல் இவருடைய தகப்பனாருமிருந்தார். அவர்கள் பரிசுத்த தேசத்துக்குப் புறம்பே குடியிருந்தாலும் அதை மறக்கவுமில்லை; அவர்களோடு கலந்து உடைநடை பாவனை களிலும் மற்ற ஆசாரங்களிலும் கலந்துபோகவுமில்லை. மார்க்க விஷயத்தில் அவர் கண்டிப்புள்ளவராயிருந்தபோதிலும் பலஸ்தீனுவுக்குள் குடியிருந்துவந்த யூதரைப்போல் மற்றப் புறச்சாதிகளை அவ்வளவாய் அவமதித்துப் பகைக்கவில்லை. பரி. பவுல் தம்மை எபிரேயரில் பிறந்த எபிரேயன் என்று சொல்லிக்கொள்ளுகிறதால் அவருடைய தகப்பனார் அவ ருடைய ஜனனத்தையொட்டித்தான் பலஸ்தீனுவைவிட்டு தரு சீசுக்கு வந்திருப்பார்கள். மேலும் அவர்கள் அடிக்கடி பலஸ்தீனுவுக்குப் போக்குவரவாயும் இருந்திருக்கவேண்டி யது. மற்றப்படி தமது ஜாதிபற்றைக் காட்டும் அந்த வாச கத்தை அவர் சொல்லியிருக்கமாட்டார். அவருடைய தாயாரைப்பற்றி நமக்கொன்றும் தெரியாது. ஆனால், 'என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல் என்னைப் பிரித்தெடுத்து

---

[1] அப். 21:39.

தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்"[1] என்று அவர் ஒருதரம் சொல்லிய வாசகமானது அவருடைய தாயாரின் பக்திவிநயமான குணத்தை நமக்கு வெளிப்படுத்துகிற தென்கலாம். இவருடைய பிறப்பு உலக இயல்பின்படி உள்ளதாயிராமல் சற்று விசேஷமாய் இருந்திருக்கவேண்டி யது. நமக்கு தோன்றுகிறபடி, ஸ்நானகனுடைய பெற்றோ ரைப்போல இவருடைய பெற்றோரும் வெகுகாலம் புத்திர சந்தானம் இல்லாதவர்களாயிருந்து, அநேக ஜெபங்களும் பொருத்தனைகளும் பண்ணிப் பிறந்த பாலகனாயிருக்கலாம். தாயாரும் இவர் புத்தி தெரிந்தபின்பு, தான் இவரைப் பெற்ற வாலாறையும், செய்த பொருத்தனையையும் அவருக்கு நினைப் பூட்டி தேவபணிவிடைக்கேற்ற விசேஷித்த போங்காய் இவரை வளர்த்திருக்கவேண்டியது. இவருக்கு ஒரு சகோ தரியுமிருந்தாள்.[2] பொதுவாகச் சொன்னால் சகரியா எலிச பெத்து என்பவர்களுடைய குடும்பத்தைப்போல் பரி. பவுலின் குடும்பமுமிருந்தது. அவர்கள் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் கட்டளைகளின்படியேயும் குற்ற மற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்க ளாய் இருந்தார்கள். பரி. பவுலின் கவனமானது உலக சரித்திர வீரரை ஒட்டினதாயிராமல் தேவனுடைய பரிசுத்த மார்க்கத்துக்கடுத்த வீரராகிய ஆபிரகாம், யோசேப்பு, மோசே, தாவீது, எஸ்ரா முதலியவர்களைத் தழுவினதாயிருந் தது. அவர் அக்காலத்தில் வல்லமையாய் விளங்கின உரோமை இராச்சியத்தின் மேன்மைகளை எவ்வளவும் கவனித்தவரா யிராமல், மோசேயின் மூலமாய் வாக்குத்தத்தம் செய்யப் பட்ட மேசியாவின் இராச்சியத்தைக் கவனிக்கிறவராயிருந் தார்.

ஒரு தெய்வீக ஆளுகையைப்பற்றிய எண்ணமும் கவன முமே இவருடைய மனமலையைக் கவிந்துகொண்டிருந்தபடி யால், அக்காலத்து மனுஷருக்குள் இவர் விசேஷ கவன முடையவராய் விளங்கினார். அவர் பிறந்த தருசுப்பட்டணத் தில் ஒருவித பாகால் வணக்கம் நடந்துவந்தது. அங்கே

---

[1] கலா. 1:15. [2] அப். 23:16.

ஏற்படுத்தப்பட்ட உற்சவங்களில் நடந்த ஆகாமியங்களுக்கும், அழிம்புகளுக்கும் ஒரு அளவில்லை. குறிக்கப்பட்ட காலங்களில் நடந்த உற்சவங்களுக்குப் பல இடங்களிலுமிருந்து வந்து கூடின திரளான ஜனங்கள் தங்களுடைய நாட்டிலும், நகரத்திலும், ஊரிலும், வீட்டிலும் நடத்திவந்த சகல அக்கிரமங்களையும் இங்கே வந்து கொட்டி, தருசுப் பட்டணத்தை வேசிப்பட்டணம் ஆக்கினார்கள். அந்த நகரத்தின் அழிம்புகள் மனுஷசுபாவத்தின் தாழ்ந்த ஸ்திதியையும் இரட்சண்ய இழுப்பின் அவசியத்தையும் அவருடைய இளமை மனதில் பதியப்பண்ணி இருக்கலாம்.

பவுலின் குழந்தைப்பிராயம் கடந்து, அவர் ஏதாவது ஒரு தொழில் துறையில் பிரவேசிப்பதைப்பற்றி ஒழுங்கு பண்ணவேண்டிய வயது வந்தது. அவர் தமது தகப்பனைப் போல ஒரு வியாபாரியாய் இருக்கத் தெரிந்துகொள்வது இலேசாயிருந்தது. ஆனால் நாம் முன் சொன்னபடி அவர் விசேஷ பொருத்தனையால் பிறந்த பாலனாக இருந்தபடியால் அந்தப் பொருத்தனையின்பிரகாரம் அவரை யூதமார்க்கத்துக்குரிய குருமுறை வரிசைக்குட்படுத்த அவருடைய பெற்றோர் முயன்றார்களாக்கும். அவருடைய பாலிய சுபாவத்தையும், பேச்சையும், நியாயப்பிரமாணத்தின்மேல் அவர் பாராட்டும் பற்றுதலையும், கண்ட பெற்றோர் நம்முடைய மகன் தெருத்தொழில்களில் அல்ல, தேவாலயத்தொழில்களுக்கடுத்தவன் என்று தீர்மானம் செய்தார்கள். அந்தப்படியே அவருக்கு ரபிமாருக்குரிய ஞான அறிவு சாஸ்திரத்தை படிப்பிக்க ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையான ரபி ஊழியத்துக்கு அடுத்த விஷயங்களை இவர் படிக்குமுன், நாடோடிய தொழில் ஒன்றும் இவருக்குத் தெரிந்திருக்கவேண்டியதாயிருந்தது. ஏனெனில் ஆபத்துக்கு அநுகூலம் பண்ணுவதற்கேற்ற ஏதாவதொரு கைத்தொழிலை கற்கவேண்டுமென்பது யூதஜாதியின் தீர்மானமான பிரமாணமாயிருந்தது. இந்தக் கைத்தொழில் சம்பந்தமாய் தல்மூத்து ஆகமத்திலிருக்கும் வினாவிடையாவது:

வினா: ஒரு தகப்பன் தன் மகனுக்கு செய்யவேண்டிய கடமை என்ன?

விடை: அவனை விருத்தசேதனம் செய்வதும், நியாயப் பிரமாணத்தை அவனுக்குப் போதிப்பதும், ஒரு தொழிலைக் கற்பிப்பதுமேயாம் என்பது. 'தன் மகனுக்கு ஒரு தொழிலை கற்றுக்கொடாதவன் அவனுக்குக் களவை கற்றுக்கொடுக் கிறான்' என்று ரூதா என்னும் ஒரு ரபி சொல்லியிருக்கிறார். கமாலியேல் என்னும் சாஸ்திரி, 'தனக்கு ஒரு கைத்தொழில் தெரிந்தவன் என்னமாயிருக்கிறான்? அவன் வேலியடைக்கப் பட்ட திராட்சத்தோட்டத்துக்கொப்பாயிருக்கிறான்' என்று சொல்லியிருக்கிறார். இதினாலே ஒவ்வொரு யூத ஆணும் ஏதாவதொரு கைத்தொழில் தெரிந்திருக்கவேண்டுமென் பதைப்பற்றி யூதருடைய மனதிலிருந்த அபிப்பிராயத்தின் தன்மை விளங்கும். பரி. பவுலின் பெற்றோர் அக்காலத்தில் திரண்ட லாபத்தை யுண்டுபண்ணின கூடாரம் தைக்கும் தொழிலை அவர் படிக்கும்படிச் செய்தார்கள். இந்த வேலை யில் அவருக்கு பின்காலத்தில் மிகுந்த பிரயோசனமும் லாபமும் உண்டாயிற்று. இந்த தொழிலால் அவர் சுயாதீன னும், பிறர்பேரில் சார்பில்லாதவரும், தன்னயத்தை விரும் பாதவருமான தேவஊழியக்காரனாயிருந்தார் என்று உலகத் துக்கு விளங்கிற்று; அதின் விபரங்களை இனிமேல் அறிவோம்.

கல்விப் பருவம்

பரி. பவுல் எருசலேமுக்குப்போய் வேதசாஸ்திரம் கற்று யூத ரபியாகுமுன்பு தருசுப்பட்டணத்து சர்வகலாசாலையில் கல்வி கற்றிருப்பாரோ என்பது எவர்களும் கேட்க விரும்பும் ஒரு கேள்வியாயிருக்கலாம். அவர் தமது ஆகமங்களில் எடுத்துக்கூறும் இரண்டு மூன்று கிரேக்க சுலோகங்களை நாம் கவனிக்கும்போது, அவர் ஹெலிக்கன் (Helicon) மலைச்சார்பிலிருந்த தருசுப்பட்டணத்து சர்வகலாசாலையி லிருந்து சுரந்தோடின கல்வியாற்றின் தண்ணீரைக் குளிரக் குடித்துக் கரையேறினவர்போலவே காணப்படும்; ஆனால் அந்த வாசகங்கள் தற்காலத்தில் படிப்பறியாதவர்களும் கேள்விப்பேச்சால் பல ஞான சுலோகங்களையும் முது மொழி களையும் கேட்டு வழங்கிவருவதுபோல, இவரும் பொதுவான அறிவால் சொல்லக்கூடுமென்றும், அதினால் அவர் தருசுப்

பட்டணத்தில் கல்வி கற்றூர் என்று சொல்லக்கூடாதென்றும், சிலர் அபிப்பிராயப்படுகிறூர்கள். மேலும் அவருடைய நிருபங்களின் வாசகப்போங்கு அக்காலத்தில் வழங்கிவந்த கிரேக்க நூல்களின் போங்காய் இராமல் செப்ற்றியு ஜென்ற் என்னும் வேதாகமத் திருப்புதலின் போங்காகவும் இருக்கிறதாம். பரி. பவுலின் பெற்றூர் அவரை ஒரு அஞ்ஞானிகளின் சாஸ்திரசாலையில் கல்வி கற்கும்படிச் சம்மதித்திருக்க மாட்டார்கள். அது பெரிய பாவமென்று பக்தியுள்ள யூதரால் எண்ணப்பட்டுவந்தது. அந்த நகரத்தில் வாசம்பண்ணி அங்கு சஞ்சரித்த பலவகைக்காரரையும் கண்டு பழகின விஷயமே, அவர் அநேக காரியங்களையும் அறியவும் பேசவும் ஏதுபண்ணிற்று என்கலாம். அவர் அத்தேனேயில் பண்ணின பிரசங்கமானது, யாதொரு ஆயத்தமுமன்றி பெருங்கூட்டத்தையும் கவர்ந்துகொள்ளத்தக்கவிதமாய் அவர் உபந்யாசம் செய்ய வல்லவரென்று விளங்குகிறதால் அவருக்கு இயல்பாகவேயிருந்த, அரிய வரத்தால், கல்லாமலே அநேக நூதன அறிவுகளை அடைந்துகொள்ள வல்லவராயிருந்தாரென்று வெளியாகும்.

பரி. பவுல் யூதசாதி முறைப்படி படிக்கவேண்டிய கைத்தொழிலை பன்னிரண்டு வயசுக்குள் கற்று பதின்மூன்றும் வயதில் யூத ரபிகளிடம் நியாயப்பிரமாண சாஸ்திரத்தை படிக்கும்படி எருசலேமுக்குப் போனூர். அந்தகாலத்தில் ரபிமாருடைய இரண்டு கல்விச்சாலையிருந்தது. அவை முறையே ஹில்லேல் (Hillel) கல்விச்சாலை என்றும், ஷாமாய் (Schammai) கல்விச்சாலை என்றும் பேர் வழங்கப்பட்டன. இந்த இரண்டு கல்விச்சாலைகளுக்கும் சக்களத்திப் போர் போல் கொடிய பகை இருந்தது. ஹில்லேல் ஷாமாய் என்ற இரண்டு வித்துவான்களும் யூதரால் அதிகமாய் மதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் சொன்ன ஞானபோதனைகள், எல்லா யூதருக்குள் பழமொழிபோல் வழங்கப்பட்டுவந்தன: இவ்விரு வித்துவான்களும் பரிசேயராகவே இருந்தார்கள்; ஆனல் ஹில்லேல் கல்விச்சாலைப் பட்சத்தார் பாரம்பரையை நியாயப்பிரமாணத்துக்கு மேலாக உயர்த்திவந்தார்கள். ஷாமாய் பட்சத்தாரோ அப்பாரம்பரைகள் மோசேயின் ஆகமத்துக்கு விரோதப்படுகிறதாயிருந்ததால் அதை தள்ளி

விட்டுவந்தார்கள். இவ்விரு பட்சத்தாருக்கும் இருந்த விரோதத்தையிட்டு 'திஸ்பியனாகிய எலியா வந்தாலும் ஹில்லேல் ஷாமாய் என்னும் இருபட்சத்தையும் இராசி பண்ணக்கூடாது' என்று யூதருக்குள் ஒரு சுலோகம் சொல்லப்பட்டுவந்தது.

இவ்விரு கல்விச்சாலைகளில், ஹில்லேல் பேரால் வழங்கி வந்ததே முக்கியமாய் எண்ணப்பட்டு அநேக ரபிகளால் அங்கீகரிக்கப்பட்டுவந்தது. கமாலியேல் என்பவர் இந்தக் கல்விச்சாலையின் வித்துவ அலங்காரமாய் இருந்தார். தல்மூத்தாகமம் முழுவதிலும் இவருடைய மாட்சிமை விளங்குகிறது. ஹில்லேல் என்பவர், கிறிஸ்துவை கையிலேந்தி வாழ்த்தின சிமேயோனுக்குத் தகப்பனும்,[1] சிமேயோன் இந்த கமாலியேனுக்கு தகப்பனுயுமிருந்தார். இந்தக் கமாலியேலினிடத்தில்தான் பரி. பவுல் கல்வி கற்கும்படி அவருடைய பெற்றோர் திட்டம் செய்தார்கள். கமாலியேல் கல்வியில் நிபுணனும் குணத்தில் மகத்துவமும் உடையவராயிருந்தார். யூதருக்குள் 'ரபான்' என்னப்பட்ட உயர்ந்த பட்டத்தைப் பெற்ற ஏழுபேரில் கமாலியேலும் ஒருவராயிருந்தார். இவருக்கு 'நியாயப்பிரமாணத்தின் அலங்காரம்' என்ற பட்டப்பேர் வழங்கிவந்தது. ரபான் என்ற பேர் 'ரபூனி' என்ற பதத்துக்கு ஒக்கும். மகுதலாவூர் மரியாள் நமது இரட்சகரை இந்தப் பட்டப்பேரால் அழைத்திருக்கிறுள்.[2] இவர் பரிசேயனுயிருந்தாலும் மற்றவர்களைப்போல அயல்ஜாதியாரையும் மார்க்கத்தாரையும் பகைக்கவில்லை. இவர் சகல ஜனங்களாலும் கனம்பெற்றிருந்தார் என்று பரி. லூக்கா செல்லுகிறார்.[3] சிலர் நினைக்கிறபடி இவர் கிறிஸ்தவனுகாமல் யூதமார்க்கத்தானுகவேயிருந்து, எருசலேமின் அழிவுக்கு பதினெட்டு வருஷத்துக்குமுன்பு மரித்து சொல்ல முடியாத ஆடம்பரத்தோடே அடக்கம்பண்ணப்பட்டார்.

ஒரு ரபியாகும்படி பரி. பவுல் அநேக வருஷங்களாகப் படிக்கவேண்டியதிருந்தது. வேத எழுத்துகளும், அதின்மேல் பூர்வ ரபிமாரும், ஆசான்மாரும் பண்ணியிருக்கும் வியாக்கி

---

[1] லூக். 2:25–32. [2] யோவா. 20:16. [3] அப். 5:34.

யானங்களும் அவருடைய பாடங்களாயிருந்தன. இவைகளை அவர்கள் பாராமல் படித்து, ஆட்சேபிக்கப்படும் விஷயங்களை தர்க்கித்துவருவார்கள். இந்தத் தர்க்கமுறையில் படிப்பிக்கிறவர்களும் படிக்கிறவர்களும் அவரவர் மனதின்படியான கேள்விகளை விஞ்விவந்ததால் சங்கதிகள் மனதில் பதிக்கப்பட்டு புத்தி விஸ்தாரப்படுத்தப்பட்டன. பரி. பவுலில் விளங்கின ஞாபகசக்தி, நியாயப்போங்கு, ஆழ்ந்த கருத்து, நூதன கோட்பாடு முதலிய சகல சிறந்த சக்திக்கும் இக்கல்விச்சாலை உறைவிடமாயிருந்தது என்கலாம். அவர் புறச்சாதிகளின் அப்போஸ்தலனாயிருந்தாலும், தமது சுய ஜனத்தாருக்கும் அப்போஸ்தலனாகவேயிருந்தார். எந்தெந்த இடங்களில் யூதர் வாசம்பண்ணிவந்தார்களோ அங்கெல்லாம் இவர் யூதருடைய சூனகோகுகளுக்குப் போய் அவர்களோடு பேசியிருக்கிறார். அவர் ரபியாக படிப்பிக்கப்பட்டதால் எந்த யூதர் கூட்டத்திலும் மார்க்கத்தைப்பற்றிப் பேச இடம் பெற்றதோடு, வேத எழுத்துக்களை எடுத்துக்காட்டி நியாயதோரணை பண்ணி அவர்களுடைய கவனத்தை இழுத்துக் கொள்ள வல்லவரானார். அவருடைய போதனைகளின் நியாயங்கள் வேத எழுத்துக்களால் ரூபிக்கப்பட்டதால் அவரை ஆட்சேபிக்க ஒருவராலும் கூடாமல்போயிற்று. அதுவுமன்றி அவரை தேவன் கிறிஸ்துமார்க்க ஞானங்களின் மூல ஆசாரியராக்க திருவுளம்கொண்டிருந்தார். இந்த புதிய மார்க்கம் பழையதிலிருந்தே துளிர்த்து வந்தது. ஒன்று தீர்க்கதரிசனமாயும் மற்றது அதின் நிறைவேறுதலாயுமிருக்கிறது. கிறிஸ்துமார்க்க ஞானத்தின் மூல ஆசாரியன் யூத மார்க்க ஞானத்திலும் பாண்டித்தியமுடையவனாயிருப்பது அவசியம் என்று தேவன் கண்டாராக்கும். பழைய ஏற்பாட்டு வேத எழுத்துக்கள் அவருடைய பல்லுக்குள்ளிருந்ததென்று சொல்லத்தக்கதாக அதில் அவ்வளவு அறிவுடையவராயிருந்தார். அதின் வாசகப் போங்கு அவருடைய பேச்சுப் போங்காயுமிருந்தது என்று பார்க்கிறோம். இவ்வண்ணம் அவர் நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம், சங்கீதம் என்னும் வேதாகம எழுத்துக்களில் வல்லவராகி தம்மை அறியாமலே ஒரு புதிய ஞான யுத்தத்துக்கடுத்த அஸ்திரங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்.

இந்தக் காலங்களிலுள்ள அவருடைய சன்மார்க்க நிலைமை எப்படிப்பட்டது? அவர் தேவபக்தி உடையவராயிருந்தாரா? அல்லது அதின் வேஷத்தைமாத்திரம் தரித்திருந்தாரா? என்பது ஒரு விசேஷித்த கேள்வி. தேவ பணிவிடைக்கென்று ஆயத்தப்படவேண்டுமென்று விரும்பி படிப்போரில் மிச்ச மானவர்கள் குணப்படாத இருதயமுடையவர்களாய் இருக்க லாம். பரி. அகுஸ்தீனைப்போல, திருச்சபையின் பிரதான போதகன்மார் முதலாய் தங்களுடைய பாலியகாலத்தின் ஆத்துமஸ்திதியை துக்கத்தோடு கண்ணோக்கவேண்டியவர்க ளாய் இருக்கிறார்கள். பவுல் அப்போஸ்தலனுடைய இருதய நிலைமையையும் அப்படியிருந்ததோ? அல்ல, அல்ல. அவ ருடைய மனதுக்குள் என்னென்ன பாவச் சுபாவத்துக்கு ஏற்ற சிந்தைகள் கோஷ்டம்பண்ணினாலும் அவருடைய நடக்கையில் பழுது காணப்படவே இல்லை. அக்காலத்தில் இருந்த எருசலேமியர் சுத்தமாக இருக்கவுமில்லை. அது மாய பக்திக்காரரால் நிறைந்து மெய்ப்பக்தியை இழந்துபோயிருந் தது. இப்படிப்பட்ட காலத்திலும் இடத்திலும் ஒரு வாலிபன் கெட்டுப்போக இடமுண்டு; ஆனால் பரி. பவுல் ஒருதரம் 'இந்நாள்வரையும் எல்லா விஷயங்களிலும் நான் நல் மனச் சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்துவந்தேன்'[1] என்று சொன்ன வாசகமானது அவருடைய பாலிய வயதின் பக்தி நிலைமையை நமக்கு உணர்த்துகிறது.

தேவனை நேசிப்பதும், அவருக்குப் பிரியமாய் நடந்து கொள்வதுமே தேவபக்தியின் ஆரம்பமென்றும், மனுஷன் என்றிருந்தால் தேவபக்தியாய் ஜீவிப்பதே காரியம் என்றும் அவர் சிறுபிராயமுதல் நன்றாய் உணர்ந்துகொண்டவராய் இருந்தார். இந்த உணர்ச்சி அவருக்குள் சரீர வளர்ச்சி போல வளர்ந்துகொண்டுவந்தது. இந்தச் சரியான ஜீவிய நிலைமை எப்படிக் கிடைக்கும் என்று அவர் விசாரித்ததில், அது நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறதினாலேதான் என்று அவருடைய ரபிமார் சொன்னார்கள். இது பயங்கர மான உத்தரவாக இருந்தது. ஏனெனில் நியாயப்பிரமாணம் என்பதில் சன்மார்க்கப் பிரமாணங்கள் மாத்திரம் அல்ல;

---

[1] அப். 23:1.

எண்ணிறந்த சடங்குப் பிரமாணங்களும் அதின் சார்பாக காலாகாலத்தில் ரபிமார் கூடித் தீர்மானித்த விதிகளுமாகிய யாவும் அடங்கியிருந்தன. அவைகளின்படி திட்பநுட்பமாய் நடப்பது இவ்வுலக ஜீவனை உத்திரிக்கும் ஸ்தலமாக்குகிறதா யிருந்தது. ஆனால் பரி. பவுல் வருத்தங்களைத்தொட்டு வதங்கு கிறவரும் அல்ல, பிரயாசங்களைத்தொட்டுப் பின்வாங்குகிற வருமல்ல; தேவதயவை நாடுவதே இச்சீவியத்தின் விசேஷம், அதை எந்த வருத்தத்தோடே சம்பாதித்துக்கொள்வேனுக என்று அவர் மனமூண்டார். தன் சுய ஆத்துமவாழ்வோடு தன்னுடைய ஜாதியின் சருவ வாழ்வும் அடங்கியிருக்கிற தென்றும் அவர் உணர்ந்தார். ஏனெனில் ஒருநாள் ஒரு யூதன் பூரண பக்தியாயிருந்தால் மேசியா எழுந்தருளிவரும் பாக்கியமும் உண்டாகும் என்பது யூதருடைய பொதுக் கொள்கையாயிருந்தது. ஆகையால் மேசியாவின் வருகையை துரிதப்படுத்தும்படி நான் பூரண பக்தியுள்ள யூதனுவேனுக என்று அவர் தமது மனதில் நிர்ணயம் செய்துகொண்டாராக் கும். மொத்தமாய்ச் சொன்னால் பரி. பவுல் நீதிமான் என்ற பந்தயப் பேரைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற உணர்ச்சி யோடு தமது ரபியின் பாதத்தைவிட்டு, அதே தொழிலை நிறைவேற்றும்படி தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இந்த ஒரு மாணுக்கனுடைய தீர்மானமானது உலக முழுவதுக்கும் அநுகூலமான விஷயமாயிற்று; ஏனெனில் இவரே நியாயப் பிரமாணத்தால் நீதியுண்டாகவேமாட்டாதென்று திருஷ் டாந்தமாய் ரூபிக்கவும், அதற்கு முற்றிலும் வேறொரு புது வழி இருக்கிறதென்கிறதைக் கண்டு செல்லவும் தக்கவரானார்.

வாலிப பருவம்

பரி. பவுல் கமாலியேலின் பாதத்தை எந்த வயதில் விட்டாரென்றும், அவர் கல்விகற்று முடிந்ததின் பின்பு எங்கே போனரென்றும் நமக்குத் தெரியாது. வாலிபரான ரபிகள் தங்களுடைய படிப்பு முடிந்தவுடனே தங்களுக்கு இஷ்டமான யூதருடைய குடியிருப்புகளுக்குள் சிதறிப் போய் தங்கள் ஊழியத்துக்குரிய முறைகளை பல சூனகோகு களிலுமிருந்து கற்றுக்கொள்ளுகிறதுண்டு; ஒரு வேளை பரி.

பவுல் தமது ஜனன ஊருக்கே போய் அவ்விடத்திலிருந்த சூனகோகில் வேலை பார்த்திருக்கலாம். எப்படியும் அவர் சிலகாலம் எருசலேமுக்கும் பலஸ்தீனுவுக்கும் தூரமான ஒரு இடத்திலிருந்தார் என்பது மெய்; எனெனில் இந்த இடையிட்ட காலங்களில்தான் ஸ்நானக யோவானும் இயேசு இரட்சகரும் கானானின் திசைகளில் நடமாடி காலம் கழித்திருக்கிறார்கள். பவுல் அந்த நாட்களில் கானானின் திசைகளில் திரிந்து அலைந்தது உண்டானால், ஒன்று அவர் இயேசுவின் சீஷராகி இருக்கலாம், அல்லது அவருடைய விசேஷ சத்துருவாக விளங்கி இருக்கலாம்.

எப்படியும் அவர் சில வருஷங்களுக்குள்ளாக எருசலேமுக்குத் திரும்பியிருக்கிறார். அவர் தம்முடைய கல்வித் திறமைக்கும், மார்க்க வைராக்கியத்துக்கும், சகவாசத்துக்கும், தருசுபட்டணமாவது, சிலீஷியாவின் திசைகளாவது தகுதியல்லவென்று கண்டு எருசலேமையே நாடிப்போனார் என்று சொல்லவேண்டியது. கல்வியில் தேர்ந்த ரபிகள் எருசலேமை அடுத்து ஜீவனம் செய்வதே அக்காலத்து வழக்கமாயும் இருந்தது. கிறிஸ்துவின் மரணத்துக்கு சற்றுப் பின்பு அவர் யூத மார்க்கத்தின் மத்திய ஸ்தானமாயிருந்த எருசலேமுக்கு வந்தார். அவர் வந்தவுடனே கானானின் எத்திசையிலும் இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பரமேறுதலுமே விசேஷ சமாசாரமாகப் பேசிக்கொள்ளப் பட்டு வந்தது என்பதை அறிந்தார். இக்காலத்தில் பரி. பவுலுக்கு யூத மார்க்கத்தைப்பற்றிய சந்தேகம் கொஞ்சமாகிலும் இருந்ததில்லை. இதற்கு முன்னமே, ஆத்தும வாழ்வை எப்படி அடையலாம் என்ற விசேஷ கேள்வி அவருடைய அந்தகரணத்தில் அடிக்கடித் தோன்றி மனதைக் கலக்கி விட்டிருக்கிறதென்பதை நாம் அவர் எழுதிய நிருபங்களினால் அறிகிறோம். இந்தக் கலக்கத்துக்கு நிவர்த்தியாக ரபிமார் யோசனையின்படி நியாயப் பிரமாணத்தைச் சரிவரக் கைக்கொண்டு, அதற்காக பக்தி வைராக்கியம் பாராட்டுகிறதே தன் வேலை என்று அவர் முயற்சிப்பட்டார். அவ்விதமுயற்சியால் தேவ தயவாவது, இருதய சமாதானம், பாவ மன்னிப்பு ஆகிய ஆத்தும வாழ்வாவது கிடைக்க

வில்லை என்பதையும் அவர் அறிந்துகொண்டார். அதுவு மன்றி நியாயப் பிரமாணத்தை எவ்வளவு நுட்பமாய்க் கைக் கொள்ளவேண்டுமென்று முயன்றாரோ அவ்வளவுக்கு அதிக மாகப் பாவச்சிந்தைக்கு அடுத்த அசைவுகள் அவருடைய இருதயத்தில் தோன்றிற்று; மனச்சாட்சியின் வல்லமையும் மேன்மேலும் அதிகப்பட்டு அவரைப் பெரும்பாவி என்று உணர்த்தி இருதய சமாதானத்தை அவரைவிட்டு விலக் கிற்று. அப்படி இருந்தாலும் யூத சூனகோகுகளில் போதிக் கப்பட்டு வந்த சத்தியங்களை அவர் ஆட்சேபிக்கவேயில்லை. தேவன் தமது பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாய் மனுஷ ருடைய ஆத்தும வாழ்வுக்கென்று திருவாய் மலர்ந்தருளின சத்தியம் இதையன்றி வேறில்லை என்பதே அக்காலத்தில் அவருடைய மனதின் தீர்மானமாயிருந்தது. தம்முடைய இருதயத்தில் சமாதானம் அற்றிருப்பது நியாயப் பிர மாணத்தின் தாழ்வினாலே அல்ல, தாம் அதைச் சரிவர இன்னும் கைக்கொள்ளாதிருக்கிறதாலும், தமது மனதின் இச்சைகளை அழிக்காதிருக்கிறதினாலுமேயன்றி, வேறல்ல என்றும், இவ்விருமுறையையும் அவர் சரியாக அநுசரித்து வருவதுண்டானால் தேவ தயவும் இருதய சமாதானமும் தன்னைப் போலவே அவருக்குள் குடிகொள்ளும் என்றும் அவர் எண்ணிக்கொண்டார். எந்த விசேஷித்த முயற்சியை நடத்தியாவது அந்த உயர்ந்த வாழ்வுக்களைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தவராக அவர் எருச லேமை நோக்கினார். இப்படிப்பட்ட சிந்தையால் மூண்ட பவுலுக்கு, இயேசுவே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று போதிக்கிறார்கள் என்ற செய்தியும், அவர் சிலுவை யில் அறையப்பட்டு மரித்ததும் உயிர்த்தெழுந்து பாமேறி இருக்கிறார் என்று சொல்லுகிறார்கள் என்ற செய்தியும்; அப்படிப்பட்டவர்கள் தங்களை ஒரு பிரிவாக்கிக்கொண்டு பல இடங்களிலும் யூத சூனகோகிலுமிருந்து விலகுகிறார்கள் என்ற செய்தியுமான பல வரலாறுனது வெடி மருந்து போலிருந்த அவருடைய யூத மார்க்க அபிமானத்தில் நெருப்பு வைத்ததுபோல் இருந்தது.

அக்காலத்திலுள்ள கிறிஸ்து மார்க்கமானது இரண்டு மூன்று வயதுள்ள ஒரு பாலகனைப்போல் மாத்திரமிருந்து

எருசலேம் நகரத்து அறை வீடுகளுக்குள்ளிருந்து வளர்ந்து வந்தது. பெந்தேகோஸ்தே நாளில் குணப்பட்ட பலர் தம் தம் தேசங்களிலும் ஊர்களிலும் சுவிசேஷத்தை விதைத்த போதிலும் அதின் முதலாளிகள் போலிருந்த அப்போஸ்தலர் எருசலேமை விட்டுப் போகவே இல்லை. துவக்கத்தில் அதிகாரிகள் அவர்களைத் தடுத்துத் துன்பப்படுத்தினார்கள்; பின்பு அவர்கள் கமாலியேலின் ஆலோசனையின்படி, ஒருவேளை அது தானாகவே அழிந்து அடங்கிப்போனாலும் போகலாம் என்று அப்போஸ்தலரை அவரவர் இஷ்டத்துக்கு விட்டுப் போட்டார்கள். அக்காலத்துக் கிறிஸ்தவர்களும் தொந்தரவுக்கும் சங்கடத்துக்கும் அடுத்த ஒரு காரியத்தையும் செய்யவில்லை. அவர்கள் பூர்வ வழக்கம்போல் தேவாலய ஆராதனை விஷயத்திலோ, சடங்குகளை கைக்கொள்ளுகிற விஷயத்திலோ, ராபிமாரைக் கனப்படுத்தும் விஷயத்திலோ வைராக்கியமுள்ள மற்ற யூதரைப்போலவே நடந்துகொண்டு வந்தார்கள். ஆனால் அதோடு கிறிஸ்து மார்க்கத்தை அந்த ரங்கமாக வேலியடைத்து வளர்க்கிறதுபோல வளர்த்து வந்தார்கள். அவர்கள் இரகசியமாய் மெத்தை அறைகளில் கூடி, அப்பம்பிட்டு, பரமேறின தங்கள் ஆண்டவரை நினைவு கூர்ந்து, அவரை நோக்கி விண்ணப்பம் செய்து வந்தார்கள். அது ஆச்சரியப்படத்தக்க ஒரு விந்தையாகவே இருந்தது. அவர்கள் அநுசரித்த புதிய மார்க்கமானது அவர்களுடைய மனதைப் புதுப்பித்து, அன்பையும் சமாதானத்தையும் அவர்கள் உள்ளத்தில் பரப்பிற்று. அவர்கள் ஒருவரோடொருவர் பாராட்டின நேசத்துக்கும் பட்சத்துக்கும் ஒரு அளவிருந்ததில்லை. அவர்கள் உன்னத அருள்பெற்று நூதன விஷயங்களை அறிந்துகொண்டார்கள். அவர்கள் கூடின சமயங்களில் எல்லாம், காணப்படாமலிருந்த அவர்களுடைய ஆண்டவர் தமது காட்சியை அவர்களுக்கு அளித்தார். இதெல்லாவற்றிலும் அவர்கள் மோட்சத்தை இப்பூமியில் கண்டு களிகூறுகிறது போலிருந்தது. அவர்களைச் சுற்றிலுமிருந்த எருசலேமியர் நாடோடிய போங்கின்படி நடந்துகொண்டிருந்த காலத்தில் கொஞ்சத் தொகையுள்ள

கிறிஸ்தவர்களினுடைய நெஞ்சில் தங்களுக்கும் பின்னடியா
ருக்கும் உண்டாகக்கூடிய இருதய வாழ்வின் இரகசிய மகத்
துவங்களெல்லாம் புலப்பட்டு வந்தது.

ஒரு பிள்ளையை எத்தனை நாள்தான் மறைத்து வைக்கக்
கூடும்? ஒரு செடியை எத்தனை மாசந்தான் வேலிக்குள்
ளிருக்கப் பண்ணக்கூடும்? இந்த ஆத்தும வாழ்வுக்கும்
இருதய சமாதானத்துக்கும் ஒத்த பரம இரகசியங்கள்
இரத்தம் சிந்தப்படுதலால் பூமியில் விருத்தியாக்கப்பட
வேண்டுமென்று தேவ திருவுளத்தில் பட்டது. கிறிஸ்து
மார்க்கமாகிய செடி வேலிக்குள் நின்றல்ல வெளியே தானுய்
நின்று கனிகொடுத்து சகல பட்சிகளையும் தன்னிடம் இழுக்
கும் சத்துடையதாயிருந்தது. அது யூத மார்க்கமாகிய
பழைய துருத்தியை சீக்கிரம் கிழித்து தானுய் ஓடி சகல பல
வீன பாவிகளுக்கும் ஞானபோதமாகும் சத்துவமுடைய
தாயிருந்தது. கிறிஸ்து மார்க்கத்தின் தனிச் சத்துவை
விளக்கும்படி அக்காலத்தில் தேவன் ஸ்தேவான் என்ற
ஒரு பக்தனைத் தெரிந்து கொண்டார். இவர் அக்காலத்
திலுள்ள ஏழைகளைப் பராமரிக்கும்படி ஏற்படுத்தப்
பட்ட ஏழு உதவிக்காரில் ஒருவராயிருந்தார். இவர்
விசுவாசத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிறைந்தவரா
யிருந்தார். அவர் அங்குள்ள பல சூனகோகுகளுக்குப்
போய் இயேசுவே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா
வென்றும், மனுஷர் நியாயப் பிரமாண அடிமைத்தனத்
திலிருந்து கிறிஸ்து மார்க்கத்தின் சுயாதீனத்துக்கு வர
வேண்டுமென்றும் பிரசங்கம் செய்தார். யூத மார்க்க அபி
மானிகள் அவரோடு வாதாட ஆரம்பித்தார்கள். ஆனால்
அவர் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க
அவர்களால் கூடாமல் போயிற்று. அவர் ஜனங்களுக்குள்ளே
பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்.
ஸ்தேவானோடே எதிர்த்து நிற்க இயலாதபோது, எதிரி
கள் இல்லாததும் பொல்லாததும் சொல்லி ஜனங்களைக்
கலகப்படுத்தி ஊரில் அமளிகளை எழுப்பினார்கள்.

ஸ்தேவான் போய் பிரசங்கித்த ஒரு சூனகோகு பவுலின்
நாட்டாராகிய சிலிஷியருடையதாய் இருந்தது. பவுல் அக்

காலத்தில் அந்த சூனகோகின் ரபியாயிருந்தாரோ என் னவோ தெரியவில்லை. எப்படியும் அவரும் அன்றையத் தினம் அங்கிருந்து தர்க்கித்தவர்களில் ஒருவராய் இருந்தார் போல் இருக்கிறது. அந்த தர்க்கவாதம் கடைசியாகத் தடி யடியாக மாறினபோது பவுல் அக்கலகத்தின் தலைவராய் நின்றார். ஸ்தேவான் கல்லெறியப்பட்ட சமயத்தில், சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களை கழற்றி இவருடைய பாதத்திலே வைக்க இவர் அதைக் காவல் காத்து அந்தக் கொலையை ஏவி நடத்தி இருக்கிறார். [1]இவ்விடத்தில் தான் இவருடைய பேர் முதலாவது வேதாகமத்தில் வருகிறது. சொல்லவேண்டுமானால் ஸ்தேவானுடைய இரத்தத்திலிருந்து சவுல் என்றழைக்கப்பட்ட பவுல் தோன்றுகிறார். அச் சமயத்தில் ஸ்தேவான் என்னும் இரத்தச் சாட்சியானவர் வானத்தை அண்ணாந்து பார்த்து 'கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்று சொன்னவாசகம் தேவ தூஷணம்போல மாத்திரம் பவுலின் மனதில் பட்டிருக் கலாம். இந்தச் சமயத்தில் இவர் வெளிப்படுத்தின மத வைராக்கியமானது யூதப் பிரதானிகள் அனைவருக்குள்ளும் புகழ்ச்சியாய்ப் பேசிக்கொள்ளப்பட்டன என்று சொல்ல வேண்டியது. இவ்வளவு மதாபிமானிக்கு தகுந்த மரியாதை செய்யவேண்டுமென்று அவர்கள் எண்ணி அவரை தங்க ளுடைய சனதிரீம் என்னும் மகா சங்கத்திற்கு ஒரு அவய மாக்கிக்கொண்டார்கள் என்று சொல்லவேண்டியது இருக் கிறது. ஏனெனில் இதை ஒட்டி அவர் கிறிஸ்தவர்களுக்கு விரோதமான ஏற்பாட்டை நிலைநிறுத்துவதில் தமது சம்மதத் தைக் கொடுத்திருக்கிறார். எப்படி இருந்தபோதிலும் இவர் ஸ்தேவானுடைய விஷயத்தில் காட்டின வைராக்கியத்தினால், கிறிஸ்தவர்களை அதம்பண்ணி அந்த மார்க்கத்தை அடியோடு அகற்றிவிடவேண்டுமென்று யூதப் பிரதானிகள் செய்த தீர் மானத்தைச் சரிவர நிறைவேற்ற இவரே தகுதியுடையவர் என்று அவர்கள் மனதில் பட்டு அதற்கென்று இவரை நிய மித்திருக்கிறார்கள். அந்த வேலை தேவனை மகிமைப்படுத்தி அவருடைய தயவைச் சம்பாதிக்கிற ஒரு வழியாக அவர்

---

[1] அப். 7:58.

எண்ணினபடியால், அவர்களுடைய தீர்மானத்தைச் சந்தோஷமாக அங்கீகரித்தார். அக்காலத்திலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கிறிஸ்து மார்க்கத்தின் போங்கு இன்னபடியாகும் என்பதை அவர் நன்றாய் அறிந்து, அதை இவ்வித பிரயத்தனத்தால் தடுத்து அழிக்காத பட்சத்தில் யூத மார்க்க மகத்துவமெல்லாம் சில காலத்துக்குள் கீழது மேலதாகி தொலைந்துபோம் என்றும், அதற்கென்றேதான் உலகத்தில் பிறந்திருக்கிறதாகவும் கருத்துக்கொண்டார். நியாயப் பிரமாணத்தின் வழிகளே ஒருவனுடைய ஆத்தும இரட்சிப்புக்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற முறையென்றும், சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் மூலமாய் பாவமன்னிப்பு உண்டாகுமென்பது சகிக்கக்கூடாத தேவதூஷணம் என்றும் அவருடைய மனதில் தோன்றினது. மேலும் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றி தனக்குப் பூரணமான நீதியைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும் என்று இவ்வளவுகாலம் பிரயாசப்பட்டும், அது கிடைக்காததால் இப்படிப்பட்ட உயர்ந்த கிரியையினாலாவது அந்தக் குறைவை நிறைவாக்கி தேவதயவை சம்பூரணமாய்ப் பெற்று மன வாழ்வை அடையலாமென்று இவர் ஆசைப்பட்டார். எப்படியாவது தேவதயவை பூரணமாய் பெறவேண்டும் என்ற சிந்தை அவருடைய மனதைத் தீட்டிவிடும் சாணைக் கல்போல் இருந்தது. அவர் எந்த வேலையையும் அறைகுறையாய்ச் செய்கிற குணமுடையவர் அல்லாததால், இந்த புதுவேலை வந்தவுடனே தமது முழுமனதையும் அதில் செலுத்தினார்.

இவர் எடுத்த முயற்சியின் வரலாறு பிரமிக்கத்தக்கதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு சூனகோகுகளுக்குள்ளும், ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய் காவலில் போடுவித்து துன்பப்படுத்தினார். அக்காலத்தில் அநேகர் கொலை செய்யப்பட்டார்கள்; அதிலிம் அதிகக் கேடொன்று நடந்தது. அதாவது, அநேகர் கிறிஸ்துவை தூஷணிக்கும்படிக் கட்டாயம் பண்ணப்பட்டார்கள். அதினாலே எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் சீவன் தப்ப வேறிடங்களுக்கோடி

அடைக்கலம் புகுந்தார்கள். இந்தத் துன்பமானது அந்நாடு எங்கும் கிறிஸ்தவர்களை சிதறியிருந்து அதைப் பிரஸ்தாபிக்க வழி பண்ணிற்று என்று சொல்லலாம். பவுலும் எருசலேமோடு நின்று போகவில்லை. அவர் யூத மார்க்கத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்தும் அப்போஸ்தலனைப்போல, தான் பெற்றுக்கொண்ட கட்டளையோடு பல இடங்களுக்குப் போய் அந்த வேலையை நிறைவேற்றி வந்தார். சொல்லவேண்டுமானால் இதுவும் அவரை சுவிசேஷ அப்போஸ்தலனாகப் பழக்கும்படி தேவன் செய்த முறையாயுமிருந்தது. இதை பவுல் அப்போஸ்தலன் அறியவே இல்லை. என்றாலும் இந்த அலைச்சலும், ஓட்டமும், ஊக்கமும் சுவிசேஷ ஊழியத்துக்கு அவசியமென்று தேவன் தீர்மானித்து இப்படி அவரை யூத மார்க்கத்துக்குள்ளேயே வைத்து பயிற்சிக்கிறார் என்கலாம்.

தரிசன பருவம்

பவுல் என்பவர் கிறிஸ்து மார்க்கத்தை அடியோடே அதம்பண்ணிப்போட வேண்டுமென்றிருந்தார்; அதிலிருந்த பரம பலத்தை அவர் அறியவே இல்லை. துன்பத்தில் அது துளிர்த்துச் செழிக்கிறது. வாழ்வு அதின் நஷ்டமாய் இருந்தும் துன்பம் ஒருகாலத்திலும் அதின் கெடுதலாய் இருந்ததில்லை. ஸ்தேவானுடைய துன்பத்தால் சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.[1] இம்மட்டும் கிறிஸ்து சபை எருசலேமின் கோட்டைச் சுவருக்குள் மாத்திரமிருந்தது. ஆனால் இத்துன்பத்துக்குப் பின்போ யூதேயா சமாரியா நாடெங்கும் தூரமான பெனிக்கிய சீரியா தேசங்களிலும் பிரபல்லியமாகி அஞ்ஞான இருளை அகற்றி சகலரையும் இரட்சிப்பின் வழிக்குவரக் கூப்பிடும் தீபஸ்தம்பம்போலிருந்தன. அங்கங்கே இருந்த இரண்டு அல்லது மூன்று பேர் பரிசுத்த ஆவியினாலே தாங்கள் அடைந்த சந்தோஷத்தை அந்தரங்க அறைவீடுகளிலும் மேல்மெத்தைகளிலுமிருந்து ஒருவருக்கொருவர் சொல்லி வந்தார்கள்.

---

[1] அப். 8:4.

நாம் விசேஷ முயற்சியோடு அடக்கிப்போடும்படிப் பிரயாசப்படுகிற மார்க்கம், அதிலும் அதிக முயற்சியாய் பிரப்ல்லியமாகிற இரகசியமென்ன என்பது பவுலின் விசேஷ ஆராய்ச்சியாயிருந்தது என்கலாம். என்றாலும் அவர் தாம் எடுத்த முயற்சியில் எவ்வளவேனும் மனச்சோர்படைய வில்லை. மூல முடக்குகளையும் அவர் தேடிப்போய் அங் கிருந்த பக்தரைத் துன்பப்படுத்திவந்தார். அவர் தம்மோடே சில ஆட்களை வைத்துக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கைதிகளாக்கிவந்தார். அப்பால் தப்பி ஓடின சில கிறிஸ்தவர்கள் தமஸ்குவில்போய் ஒதுங்கி இருந்து அங்கேயுள்ள யூதருக்கு இந்தப் புது மார்க்கத்தைப் பிரசங்கிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு உக்கிர கோபமாகி, தான் அங்கேயும்போய் அப்படிப்பட்ட ஆட்களைப் பிடித்து வர அதிகாரப்பத்திரம் கொடுக்கவேண்டுமென்று பிரதான ஆசாரியனிடம் கேட்டார். அந்தப் பிரதான ஆசாரியனுக்கு எருசலேமிலுள்ள யூதர்மேல் மாத்திரமல்ல பல அந்நிய இடங்களுக்குப் போயிருக்கிறவர்கள்மேலும் மார்க்க விஷய மான அதிகாரம் இருந்ததால், அப்படிப்பட்டவர்களைக் கட்டவும் கொண்டுவரவும் சவுலுக்கு நிருபம் எழுதிக் கொடுத்தான்.

சவுல் என்பவர் ஒரு விசேஷ வேலையாய்ப் புறப்பட்டுப் போகிறாரே; இச்சமயத்தில் அவருடைய இருதயத்தின் தோற்றங்கள் என்னவாயிருக்கலாம்? அவர் இயல்பாகவே கவுரவமுள்ள சிந்தையும் பட்சமுள்ள மனமுமுடையவர்; ஆனல் அவர் எடுத்துக்கொண்ட வேலையோ கன்னெஞ்சனும் மிருகக்குணமும் உடையவனுக்கேற்றதுபோல தோன்று கிறது. அச்சமயத்தில் அவருடைய மனதில் ஏதாவது வேதனை அல்லது மனநோவு உண்டாயிற்றோ? இல்லை. அவர் பைத்தியம்பிடித்தவர்போல் ஊரெங்கும்போய் கிறிஸ்தவர் களைத் துன்பப்படுத்தினர். தமஸ்குவுக்குப்போன பயணத் தில் அது அதிகப்பட்டிருந்ததேயன்றி தணியவில்லை. அவர் மதவைராக்கியப் பித்தமுடையவராய் இருந்தாரென்றே சொல்லவேண்டியது. அவருடைய இயற்கையான நற் குணத்தை யூதமார்க்கத்தின் நிமித்தம் மாற்றிக்கொள்வதி

னுலே மிச்சமான புண்ணியத்தைச் சம்பாதித்துக்கொள்ளலா மென்று இருந்தார். கடைசியாக இந்தப் பயணத்திலேதான் சந்தேகங்கள் அவருடைய மனதில் குறுக்கிட்டது. அது 160 மைலுக்கு அதிகமான நெடும் பயணமாயிருந்தது. அக்காலத்தில் இருந்த மெதுவான பிரயாண ஏதுக்களைக் கொண்டு அந்தப் பயணத்தை முடிக்க அவருக்குக் குறைந்தது எட்டுநாள் சென்றிருக்கும். இந்த எட்டு நாளில் இயேசு தமது ஆவியைக்கொண்டும், பின்பு தாமாகவும் அவரோடு போராடினர் என்று சொல்லவேண்டியது. அந்தப் பிரயாணத்தின் மிச்சமான பாகம், பயிர் பச்சையில்லாத பாலைவனமாகவே இருந்தது; ஆதலால் அவர் தமது கவனத்தை தமக்குள் செலுத்த வழியிருந்ததேயன்றி, தமக்கப்பால் செலுத்த வழி இருக்கவில்லை. இந்த மனமுட்டின நாட்களில் சந்தேகக் கார்மேகம் அவருடைய மனமலையை மூடிற்று; மற்றப்படி 'முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்' என்று இரட்சகர் அச்சமயத்தில் சொல்ல அவசியம் இருந்திருக்கமாட்டாது. தன் மனச்சாட்சி தனக்குள்ளே வாதித்துக்கொண்டு இருக்கப்பட்ட இருதயத்துக்கு இதுதான் ஏற்ற வாசகம் என்று சொல்லத் தடையில்லை. அவருக்குள் ஏதோ ஒரு போராட்டம் உண்டாகி, அவர் போகும் பயணம் தேவனுக்கு விரோதமான பாவமாயிருக்கிறதென்று உணர்த்தி இருக்கிறது.

இந்த மனோயுத்தத்துக்கு காரணம் என்னமாயிருக்கலாம் என்று நிதானிப்பது வருத்தமல்ல. இவர் மனுஷர்பேரிலும் விசேஷமாய் கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் அநுதாபமுடையவராயிருந்த கமாலியேலின் பாதத்தில் படித்தவரல்லவா; மேலும் இவர் புறப்பட்ட சமயத்திலும் கமாலியேலின் கருத்து இவருடைய கருத்துக்கு விரோதமாகவே இருக்கலாம். பவுலும் இக்காலத்தில் இருதயக் கடினத்தினால் ஒன்றைச் செய்ய ஏவப்பட்டார் என்று சொல்லும்படி அவ்வளவு முதிர்ந்த வயதுடையவருமல்ல. மேலும் அக்காலத்திலிருந்த கிறிஸ்தவர்களுடைய குணமும், நடக்கையும் அவருடைய தியானத்திற்கு வந்திருக்கலாம். பரிசுத்தவான் மனம் பதறுமல் செய்த அறிக்கையையும், அச்

சமயத்தில் அவருடைய முகம் தேவதூதனுடைய முகம்போலிருந்ததையும், அவர் முழங்கால்படியிட்டு தன்னை கொலை செய்தவர்களுக்கு செபித்ததையும் இவர் அறிந்திருந்தார். இப்படியே அவர் தண்டிக்கப்படும்போது எல்லாம் மற்ற கிறிஸ்தவர்களும் இவ்வண்ணம் தங்கள் தேவதாபக்தியை வெளிப்படுத்துகிறதைக் கண்டிருந்தார். இவையனைத்தும் அவர் ஞாபகத்தில் வந்தபோது, இந்த கிறிஸ்தவர்கள் தேவனுடைய விரோதிகள்போலவா இருக்கிறார்கள்? இல்லையே. இவர்களை நாம் போய் வீடுபுகுந்து இழுத்துச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகும்போது எவ்வளவு சாந்தமும், அமைதலும், பொறுமையும் உடையவர்களாய் இருக்கிறார்கள்; இது பிசாசின் குணமாகுமா? அல்லவே. நாம் ஆசையோடு நாடும் தேவதயவும் இருதய சமாதானமும் அவர்களுக்குள் பூரணமாய் நிலைத்திருக்கிறதுபோலவே காணப்படுகிறதல்லவா? மேலும் அவர்கள் மேசியாவைப்பற்றிச் சொல்லும் நியாயதாரணை எல்லாம் வேதத்துக்கு இசைவாகத்தானே இருக்கிறது; மேசியா மரணமடைந்து தமது மகிமைக்கு உட்பட வேண்டுமென்றுதானே தீர்க்கதரிசிகள் எல்லாரும் சாட்சி இடுகிறார்கள். ஆதலால் இயேசுவின் விஷயம் முற்றிலும் வேறுயிருந்தாலும் இருக்கலாமே என்று இப்படி அவர் மனதில் தோன்றியிருக்கலாம்.

இந்த எண்ணங்களையெல்லாம் மாற்றும்படி தமஸ்கு நகரியின் மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், விருட்சக் கூட்டங்களும் அவருடைய கண்ணுக்குத் தோன்றின. அப்போது அவர் இந்த எண்ணங்களெல்லாம் தமது ஊக்கத்தையும், முயற்சியையும், தேவவைராக்கியத்தையும் கெடுத்துப் போடும்படி சாத்தானால் தமது மனதுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று எண்ணி அவ்வெண்ணங்களைத் தமது மனதைவிட்டுத் துரத்தி எருசலேமிலிருந்து புறப்பட்ட சமயத்திலிருந்த மதாபிமான அக்கினியின் அளவாகவும் அதற்கு மேலாகவும் கொளுத்தப்பட்டார். வனத்தின் மத்தியிலிருந்த தமஸ்குவின் காட்சியும், அங்கே தாம் சந்திப்பதாய் நினைத்த சிநேகிதரின் கூட்டமும் அவர்களோடு காலம் கழிக்கும் விபரமும், தாம் போய் செய்யும் கிரியையின் விபரமும்,

அதிலுல் வரப்போகும் கீர்த்தி எல்லாம் அவருடைய மனதை மூடிக்கொண்டது. அவர் புது வைராக்கியத்தோடும், அநேக தீர்மானங்களோடும் நெடுக நடந்து தமஸ்குவை அடுத்தார்.

இவர் தமஸ்குவுக்கு வரும் செய்தியும், அதின் நோக்கமும் முன்னமே அதின் தெருக்களில் பிரசித்தம்பண்ணப்பட்டிருந்தது. அங்கே இருந்த சிறிய ஆட்டுமந்தையாகிய சபை, வானத்தை அண்ணாந்துபார்த்து தங்களைப் பீறவரும் புலி புல்லுவாயாக மாறிவிட்டால் நல்லதே! அல்லது ஒரு வல்ல சிங்கம் குறுக்கிட்டு அதின் வரவைத் தடுத்துவிட்டால் நலமாச்சுதே; அல்லது அந்த ஓநாய் ஆடாய் மாறிவிட்டாலாகாதா! என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள் என்றே சொல்லவேண்டியது. அவர் நகரத்தை நெருங்க நெருங்க கிறிஸ்தவர்களுடைய இரத்தத்தின்மேல் அவருக்கிருந்த தாகம் அதிகரித்தது. ஆனால் தமது ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுத்த இரட்சகரும், அதை மேய்க்கிற மேய்ப்பனும், அதின் காவல் சிங்கமுமாகிய இயேசு தமது மந்தையைப் பீறவரும் பவுல் என்னும் புலியைத் தடுக்கவும், அவனை ஆடாக்கிவிடவும், தமது ஜோதிரதமேறி வானலோகத்திலிருந்து வந்தார்.

இரக்கமுள்ள இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம்! இந்த வேலையை ஒரு தேவதூதன் முடிப்பானே, அல்லது உமது ஒரு நினைவு நிறைவேற்றுமே; நீரே வரவேண்டுமென்று நீர் சித்தம்கொண்ட தயவென்ன? பவுலைக்கொன்றுபோடாதபடி இரட்சிக்கவும், பவுலை உம்முடைய வேலைக்குச் சிறைபிடிக்கவும் நீர் வந்தீராக்கும்; எப்படியும் நீர் வராமல் மிகாவேல் சம்மனசை இதற்கு அனுப்பினதுண்டானால் பவுல் அன்று மரித்திருப்பார். உமது தயாளத்தை கிறிஸ்துமார்க்க விரோதிகளனைவரும் கண்ணுற்று மனம்திரும்பும்படி இப்படிச் செய்திருக்கிறீர்!

அப்பொழுது மத்தியானமாயிருந்தது. பவுல் தமஸ்குவுக்கு சமீபிக்கையில் சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனையும் அவர்கள் கூட்டம் முழுவதையும் சுற்றிப் பிரகாசித்தது. அது சூரிய பிரகாசத்தைவிட அதிகக் காத்திரமா

யிருந்தபடியால் அவர்களனைவரும் மயங்கி தரையில் பிணம் போல் விழுந்தார்கள். அப்பொழுது ஒரு சத்தம் 'சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்' என்று எபிரெயு பாஷையில் கேட்டது. அதற்கு அவன் ஆண்டவரே நீர் யார் என்றான். கர்த்தர் மறுமொழியாக:

நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே,

முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்,

என்று உத்தரவருளினார். இதை ஒரு மனோராச்சிய தரிசனையென்றி வேறல்லவென்று சொல்லவே கூடாது. இது கைக்கு மெய்யாய், கண்ணுக்குக் கண்ணாய் கண்ட காட்சியேயன்றி வேறல்ல. இதுதான் கிறிஸ்து தம்மைக் கடைசியாகக் காண்பித்த காட்சியாகவும், இது அவர் உயிர்த்தெழுந்தபின்பு நாற்பது நாட்களாய் காட்சியளித்ததற்குச் சமானமாகவும் பரி. பவுல் சொல்லியிருக்கிறார்.[1]

இந்த நிமிஷத்தில் பரி. பவுலின் மனதில் தோன்றின எண்ணங்களை யார்தான் சரியாக வர்ணித்துக் காட்டக்கூடும்? இந்த நிமிஷம், பவுலின் ஜீவகால வருஷங்களிலெல்லாம் விசேஷமானதாயிருந்தது. இந்தக் காட்சியில் தோன்றின ஜோதிமயத்தால் பவுலின் கண், நயனத்தில் பழுதுபட்டது. தேவ சந்திப்புக்கு சிலதரம் மாம்சத்தில் அடையாளம் கொடுக்கப்படுகிறது. யாக்கோபு தேவ தரிசனையடைந்து ரசம்பு சுளுக்கி அதுமுதல் நொண்டி யாக்கோபானான்; பவுல் கண் சேதப்பட்டு கபோதியானார்; பவுலின் கூட்டாளிகளுடைய மயக்கம் சீக்கிரம் தெளிந்தது; அவர்கள் கண்களில் யாதொரு மாறுதலும் உண்டானதில்லை. இவர் மாத்திரம் கைலாகு கொடுத்து நடத்தப்படும்படி சருவ கபோதியானார். இதின் காரணமென்ன! ஒரு வேளை பவுலின் கண் செவ்வையாயிருக்குமானால் இந்தத் தரிசனையையும் அவர் அசட்டை செய்துவிட்டு துன்பப்படுத்துகிற தொழிலை உடனே ஆரம்பித்திருக்கலாம்; அல்லது அவர் சரியான கண்ணோடே போய் இந்த தரிசனத்தைச் சொன்னாலும் மற்றவர்களால் மேற்கொள்ளப்பட்டு கிறிஸ்தவர்களை துன்பப்

---

[1] 1 கொரி. 15:8.

படுத்தலாம். கபோதியாய் ஊருக்குப் போகிறது உண்டா னல் காரணம் என்னவென்று மற்றவர்கள் வினவ, இவர் அதைச் சொல்ல இந்தப் பிரகாரமாய் பட்டணம் முழுவதில் இதைப் பற்றிய பேச்சுண்டாக ஏது விருந்தது. இதோ குருட்டுபவுலை நடத்திக்கோண்டு போகிறார்கள்; அவர் ஏறின குதிரை சுகமாய் பின்னல் நடந்து வருகிறது. ஒரு பிரஸ் தாபத்தையும் காணேம். தமஸ்குப் பட்டணம் நினைத்த தற்கு நேர் விரோதமான காரியம் நடக்கிறது. அவர் நடு நடுக்கத்தோடும் பயத்தோடும் மெதுவாய் நடந்து ஒரு அறையில் தாழ கவிழ்ந்து ஒருவனையும் வினவாமலும் ஒன்றும் பேசாமலும் சும்மாயிருக்கிறார். வெளிக்கு அவர் குருடனையிருந்தாலும் உள்ளுக்குப் பூரண ஞான வெளிச்சம் உடையவராயிருந்தார். உள்ளான மனுஷனில் நடக்கவேண் டிய பல மாறுதலுக்கு இந்த வெளிக்கதவை சற்றுவேளை அடைத்துவைப்பது அவசியமென்று தேவ திருவுளத்தில் பட்டது. இதினிமித்தமே அவர் மூன்று நாள் ஒன்றும் புசியாமலும் பானம் பண்ணுமலும் இருந்தார். அவருடைய மனதைக் கவிந்திருந்த பலவிதமான ஞான தியானங்களே அவருக்கு போசனமாயும் பானமாயும் இருந்தது.

இந்த மூன்று நாட்களிலே, அவர் பிந்தினகாலத்தில் பிர சங்கித்த கிறிஸ்துமார்க்க ஞானங்களின் சாரத்தை ஒருவாறு தியானித்து அறிந்துகொண்டாரென்று சந்தேகமறச் சொல்ல லாம்; ஏனெனில் பிந்தின காலத்தில் அவர் போதித்த ஞான சாஸ்திரமெல்லாம் தாம் குணப்பட்ட வரலாறின் விஸ்தரிப் பாகவே இருந்தது. முதலாவது அவருடைய முந்திய ஜீவிய மெல்லாம் மோசமாய் போயிற்று என்று உணர்ந்தார். தேவ சித்தத்தை விரோதித்து, வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை பொய்யாகமாற்றி காலங்கழித்து வந்ததாக அவர் மனதுக் குத் தெரிந்தது. தம்முடைய முந்தின ஜீவியத்தாலும் நடக்கையாலும் தன்னுடைய ஆத்துமாவை குற்றமுள்ள தாக்கி குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தும் கொலபாதகனாக தம்மை எண்ணினார். நியாயப் பிரமாணத்தின் மூலமாய் தாம் சம்பாதித்திருக்கிறதாக நினைத்த வெண்வஸ்திரம் இப் பொழுது கறுப்பு வஸ்திரமாக அவருக்கு விளங்கிற்று.

மொத்தமாகச் சொன்னால் அவருடைய முந்தின ஜீவியத்தின் ஆதிமுதல் அந்தம் வரையும் கேடுபாடாகிவிட்டது. நியாயப் பிரமாணத்தினால் நீதியுண்டாகிறதற்குப் பதிலாக குற்றமும் தண்டனையுந்தான் வந்தது என்பது அவருக்குத் தெரிய வந்தது. இதுதான் பரி. பவுல் கண்டுபிடித்த, அல்லது அவருக்கு அக்காலத்தில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டதாக நாம் சொல்லவேண்டிய புதிய ஞானமாயிருந்தது. இதுவே பிந்தின காலத்தில் அவருடைய பிரசங்கப் பேரிகையின் விளம்பரப்பொருளாயிருந்தது.

இவர் தேவ தரிசனை பெற்ற நிமிஷ முதல் பழைய ஜீவியம் தன்னையறியாமலே அவரைவிட்டு எடுபட்டுப் போயிற்று என்று சொல்லலாம். அதற்குரிய சாடையாவது, அநுமானமாவது அப்புறம் அவருடைய சரித்திரத்தில் இல்லை. அவர் புதிய மனுஷனானார்; அவர் மறுபடியும் பிறந்தார்; அவருடைய பேச்சு, நினைவு, பார்வை, யோசனை, செய்கை எல்லாம் மாறிப் போயிற்று. இது சவுல் அல்ல அவருடைய சாயலை வேஷமாகத் தரித்திருக்கிற வேறொரு மனுஷன் என்று ஆச்சரியப்பட்டுச் சொல்லத்தக்கதாயும் இருக்கிறதென்று காண்கிறோம். தேவ சந்திப்பு இவருக்கு ஆசீர்வாதமான முறையாகக் கிடைத்தது. அவரைச் சூழ்ந்த பரம ஜோதி அன்பின் கதிர்களால் அவரைக் கவிந்து இரட்சண்ய அருளை அவருக்குள் ஊட்டிற்று. இயேசு தமது சத்துருவைப் பட்சிக்கிறவராக அல்ல இரட்சிக்கிறவராக விளங்கினார். காலம் செல்லச் செல்ல தேவதயவின் நிச்சயமும், பாவமன்னிப்பின் நிலவரமும் அவருக்குத் தெரிந்தது. இதற்காகவே அவர் புத்தி யறிந்த நாள் முதல் முயற்சி செய்து வந்தார். அந்த முயற்சிகளெல்லாம் தேவனுக்கு விரோதமாய் போர் செய்கிறதாயும் அவரைத் துன்பப்படுத்தி தன்னை நஷ்டப்படுத்துகிறதாயுமே இருந்தது. அவர் நாடின வாழ்வு கடைசியாக எருசலேமில் அல்ல தமஸ்குவின் வழியிலும், ரபிகளிடத்தில் அல்ல இயேசு கிறிஸ்துவினிடத்திலும், நியாயப் பிரமாணத்தினால் அல்ல சுவிசேஷத்தினாலும் கிடைத்தது. இதுதான் அவருக்கு வெளிப்படுத்தப்பட்ட ஞானத்தின் முடிவுரையாயிருந்தது. பவுல் அப்போஸ்தலன்

தேவ கிருபையை முன்னிட்டுக் கண்டறிந்த புது ஞானத்தை இரண்டு வரியில் சொல்லவேண்டுமானால்,

நியாயப் பிரமாணத்தினாலே இரட்சிப்புக் கிடைக்கிற தில்லை.

கிறிஸ்துவின் மூலமாகவே இரட்சிப்புக் கிடைக்கிறது.

என்பதுதான். இந்த இரண்டு வரிக்குள்ளும் அடங்கிய ஞானத்தை பரி. பவுல் தமது ஜீவ காலமெல்லாம் எடுத்துக் காட்டி, விரித்து விஸ்தரித்து, போதித்து, திருஷ்டாந்தப் படுத்தி, ஸ்தாபித்து நிலைநிறுத்தி வந்தார்.

இந்த மூன்று நாளுக்குள்ளாக அவர் ஒரு புதுத்தீர்மான மும் செய்தார். அதாவது இந்த தேவ ஞானத்தை தமது ஜீவகாலமெல்லாம் பிரசங்கித்து இதற்காகவே தன் ஜீவனை யும் கொடுக்கவேண்டும் என்பதுதான். பவுல் இயல்பாகவே சங்கதிகளைப் பிரசித்தப்படுத்துகிறவராக இருந்தார். அதோடு இரட்சண்ய அன்பின் அனல் அவருக்குள் மூண்டது. ஆதலால் அவர் கூலிக்காக மாரடிக்கிறவர்களைப்போல இந்த சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிறவராயிராமல் தேவ பலத் தால் ஏவப்பட்டு செய்து வருகிறவர் போல் நடப்பித்து வந் தார். முன்னே இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகப் பிர யோகித்த எல்லா முயற்சிகளையும், இனி அவருக்காகப் பிர யோகிப்பேனே என்பதே அவருடைய பிரதிக்கினையா யிருந்தது.

பவுலின் குணப்படுதலின் வரலாறு இப்படியிருக்க, கிறிஸ்து தமஸ்குவிலிருந்த அனனியா என்ற ஒரு கிறிஸ்தவப் பக்தனுக்கு தரிசனமளித்து பவுல் போய்த் தங்கியிருந்த வீட்டுக்குப் போய் அவனுக்கு ஞானபோதனைகள் சொல்ல வும் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் கட்டளையிட் டார். சவுலின் பேரைக் கேட்டவுடனே அனனியாவுக்கு நடுக்கம் பிடித்தது; அவன் பயந்து கர்த்தாவே, அந்த சவுல், கிறிஸ்தவர்களைக் கொலை செய்து வருகிறான் என் று கேள்விப்படுகிறதோடு இவ்விடத்திற்கும் வந்து எங்களைத் தன்பப்படுத்தப் போகிறானாமே; அவனிடத்தில் நான் என்ன மாய்ப் போவேன் என்பதுபோல கலங்கினான். இயேசுவோ

அவனை தைரியப்படுத்தி 'நீ போ, நானவனை புறசாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டுமென்று அவனுக்குக் காண்பிப்பேன்' என்று வாக்கருளினார். உடனே அனனியா கர்த்தரால் குறிக்கப்பட்ட நேர் தெரு வழியாய்ப் போய் யூதா என்ற ஒருவனுடைய வீட்டிலே சவுலைக் கண்டான். அச்சமயத்தில் சவுல் ஜெபத் தியானத்திலிருந்தார். அப்போது அனனியாவென்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும் தான் பார்வையடையும்படி தன்மேல் கைகளைவைக்கவும் தரிசனையும் கண்டான். பவுல் தரிசனை கண்டு ஒய்ந்தான், அனனியாவும் அவனிருந்த வீட்டுக்குள் நுழைந்தான்.

அனனியா போனவுடனே பவுலின்மேல் கைகளை வைத்து 'சகோதரனுகிய சவுலே நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனையான இயேசுவாகிய கர்த்தர் நீ பார்வையடையும் படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்' என்றான். இப்படிச் சொன்னவுடனே அவருடைய கண்களிலிருந்து மீன் சிலாம்பு போன்றவைகள் தரையில் விழுந்தது, அவர் பார்வை திரும்பவும் வந்தது; அவர் ஞானஸ்நானமும் பெற்றார். பாவிகளை இயேசு எவ்வளவு அன்போடு சந்தித்து, அவர்களுக்கு தமது இரட்சிப்பின் வாழ்வுகளைப் பெருகவைக்கிறார் என்பதை இங்கே தெளிவாகப் பார்க்கிறோம். அவர் சாகிறவனுடைய சாவையல்ல அவன் மனம் திரும்பி பிழைப்பதையே விரும்புகிறார். இதை வாசிக்கிற ஒரு பாவி இயேசு இவ்வளவு கிருபையை எனக்குக் காண்பித்திருக்குமானால் நான் வெகு காலத்துக்கு முன்னே குணப்பட்டிருப்பேன், இந்தக் கிருபை பவுலுக்குப் பாரபட்சமாய் காட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லத் துணியலாம். அப்படி எண்ணவும் கூடாது, சொல்லவும் கூடாது; அது பாவமாகும். ஒரு வேளை உனக்கு காட்டின கிருபை பவுலுக்குக் காட்டின கிருபையின் மாதிரியாயிராவிட்டாலும், அளவில் அதிலும் அதிகமிருக்கலாம் என்பது

மெய். அம்மாதிரி எனக்கு வேண்டும் அப்போதுதான் நான் மனம் திரும்பக்கூடும் என்பது முண்டுத்தனம். அளவிலோ பவுலின் கிருபையின் அளவாக அல்லது அதிலும் அதிக மாகவே நீயும் பெற்றாய், ஆனால் பரி. பவுல் அந்த கிருபையை தனக்குள் காத்துக்கொண்டதால் லாபமடைந்தார். நீ அதைச் சட்டைபண்ணுமல் தள்ளுகிறதால் உன் பாவத்தில் நிலைத்திருந்து இன்னும் மனந்திரும்பாதிருக்கிறாய்; பிசகு உன்னிடத்தில் இருக்கிறதேயன்றி இயேசுவினிடத்தில் இல்லை; அனனியாவினால் பவுல் தீட்சைபெற்ற நிமிஷ முதல் தாம் எதற்காகப் பிடிக்கப்பட்டாரோ அதே வேலையைப் பிடித்துக்கொண்டு தமது மரண பரியந்தம் அதை நிறை வேற்றி வந்தார்.

பவுலின் சுவிசேஷம்

முந்தின பாகத்தில் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட சுவிசேஷ இரகசியத்தின் அடக்கத்தை மாத்திரம் சொன் னோம்; இவ்விடத்தில் அதைச் சற்று விவரித்துக் காட்டுவது அவசியம்தான். பவுலைப்போல் திடீரென்று மனமாறுதலை யும் தேவ அருளையும் பெற்றவர்கள் தங்களுடைய குணப் படுதலை எவர்களுக்கும் பிரசித்தம்பண்ண ஏவப்படுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அந்த வரலாறு கேட்பவர் களுக்கு அசைவையே உண்டாக்குமென்பது நிசம். பரி. பவுல் குணப்பட்டவுடனே சுவிசேஷத்தைப் பிரசங்கித் தாரோ என்னவோ தெரியவில்லை. அப்போஸ்தலர் நடபடி யில் 'சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சில நாளிருந்து தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆல யங்களிலே பிரசங்கித்தான் என்று கண்டிருக்கிறது' (அப். 9:20). ஆனால் வேறொரு குறிப்பினால் அவர் சில காலம் தனி வாசம் பண்ணி, அவையடக்கமாய் இருந்து தமக்கு வெளிப்படுத்தப்பட்ட பரம இரகசியங்களின் ஆழங்களை கிரகிக்க ஆரம்பித்ததாகத் தோன்றுகிறது. இப்படி அவர் சிலகாலம் தியான சிந்தையிலிருந்து காலம் கழிக்கிறது அவசி யந்தான். அவர் தமது மனதையெல்லாம் பூர்வ யூத மார்க் கத்திலே செலுத்தி, அதை உறுதியாய்ப் பிடித்திருந்தார். அந்த மனம் மாறினது அவருக்கு பலவித குழப்பங்களை

உண்டாக்கியிருக்கலாம். தமக்கு வெளிப்படுத்தப்பட்ட புதிய இரகசியமானது திட்ப நுட்பமாய் ஆராய்ந்து உணர்ந்து கொள்ளப்படாத விஷயத்தில் அவருடைய மனதுக்குள் பூரணமாய் புலப்பட ஏதுவற்றதாய் இருந்ததென்று சொல்லலாம். ஏனெனில் அந்தப் புது ஞானத்தின் பற்பல பங்குகளும் உடனே தெளிவாகத் தெரிகிறதும் அரிதுதானே. அவர் இயல்பாகவே சுய நினைவுடையவராய் இருந்தபடியால், இந்த புதிய ஞானத்தின் இரகசியத்தைப் பூரணமாய் அனுபவிக்கிறது மாத்திரம் போதாது, அறிந்து கொள்ளுகிறதும் அவசியம் என்று நினைத்தார். ஆதலால் அவர் குணப்பட்டவுடனே, அரபிதேசத்துக்குப் போனார் (கலா. 1:17). அவர் அங்கே போன நோக்கத்தை நாம் அறிய ஏதுவில்லை. ஆனால் தம்முடைய சுவிசேஷத்தின் நிச்சயத்தை ரூபிக்கும் நியாயதோரணையோடு இந்த வாசகம் வருவதால், அவர் குணப்பட்டவுடனே தாம் அடைந்த வெளிப்படுதலின் இரகசியத்தை தனித்திருந்து தியானித்து கிரகித்துக்கொள்ளவே போனார் என்று நாம் எண்ணத்தக்கதாய் இருக்கிறது. ஏனெனில் அவ்விடத்தில் அவர் பிரசங்கம் செய்ததாகயாதொரு குறிப்பையும் காணோம். இந்த தியான காலத்தில் அவர் அதின் இரகசிய ஆழங்கள் அனைத்தையும் அறிந்து தெளிந்துகொண்டு, அப்பால் தமது ஜீவகாலமெல்லாம் அதையே எங்கும் போதித்து வந்தார். அரபியாவிலுள்ள எந்த இடத்தில் தனிவாசம் செய்தாரோ தெரியுதில்லை. இஸ்ரவேலர் கடந்து வந்த சீனாய்மலையிலே அவர் இருந்ததாக பெரும்பாலும் எண்ணப்படுகிறது. இங்கேதான் முட்செடி தரிசனையை மோசே கண்டான்; இதின்மேலே தேவ காட்சியும் பத்துக் கட்டளைகளும் அவருக்கு அருளப்பட்டது. எலியா இவ்விடத்தில் தான் மனக் கவலையை நீக்கும் தேவ பிரசன்னத்தைப் பெற்று வெளிப்படுதலையடைந்தான். ஆதலால் பரி. பவுலுக்கு இதைவிட வேறு தகுந்த ஸ்தானம் இல்லையென்று சொல்லவேண்டியது. ஒரு காலத்தில் மன்னு பெய்தும் தேவ மகிமை விளங்கினதுமான சீனாயின் பள்ளத்தாக்கில் பவுலும் சிலகாலம் தங்கி நியாயப்

பிரமாணத்தை அடியோடு மாற்றும் புதிய சுவிசேஷப் பிரமாணத்தின் இரகசியத்தை கண்டுபிடித்தார் என்று சொல்ல வேண்டியது.

அவர் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். அதுமுதல் அந்த ஆவியானவரே அவருக்குள் ஞானபோதனைகளை உணர்த்திவருகிறவராயிருந்தாலும், இவருடைய இயல்பான சுய யோசனை அதற்கு அநுகூலமாயிருந்தது. அவர் அவ்விடத்தில் ஒரு வருஷமாவது அதற்குச் சற்று அதிகமாவது தாமதித்திருந்தார்போலிருக்கிறது. ஏனெனில் அவர் அரபியாவுக்குப் போனதற்கும் அப்பால் தமஸ்குவுக்குப் போனதற்கும் இடையில் மூன்று வருஷம் சென்றது (கலா. 1:18). இந்த மூன்று வருஷங்களில் ஒரு வருஷ காலத்தை இவர் அரபியாவில் பின்னிட்டிருக்கலாம். பரி. பவுலுடைய ஊழியத்தின் துவக்கத்தில் அவருடைய சுவிசேஷ போதனையின் சாரம் இன்னதென்று கண்டுபிடிக்க ஏதுவில்லாதேபோலும், பிந்தியகாலத்தில் அவர் எழுதிய கலாத்தியர் ரோமர் நிருபங்களின் பொருள் அடக்கத்தால் வெளிப்படுகிறது. ஆதலால் கலாத்தியர் நிருபத்திலும், ரோமை நிருபத்திலும் அவர் வெளிப்படுத்தும் சுவிசேஷ போதனையே ஆரம்பமுதல் அவருடைய போதனையாய் இருந்ததென்று சொல்லவேண்டியது. ஆத்தும இரட்சிப்பைப் பற்றி பரி. பவுல் கொண்டிருந்த அபிப்பிராயத்தை பின்வரும் குறிப்புகளால் உணர்த்தலாம்.

1. மனுஷனுக்கு வேண்டிய விசேஷ வாழ்வு தேவதயவைப் பெறுவதுதான்.

2. இந்த தயவு நீதியினால் சம்பாதிக்கப்படவேண்டியது.

3. நீதிமான்கள் மாத்திரம் தேவதயவுக்குப் பாத்திரராகி தேவனோடு சமாதானமும் அன்பும் உடையவர்களாய் இருப்பார்கள்.

4. ஆதலால் நீதியைச் சம்பாதிப்பதிலேயே மனுஷனுடைய கருத்தும் பிரயாசமும் இருக்கவேண்டியது.

5. ஆனால் மனுஷன் நீதியைச் சம்பாதிக்க இயலாமல் தேவதயவை இழந்து அவருடைய கோபத்துக்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் உள்ளாகிப்போனான்.

மனுஷரை அக்காலத்திலிருந்த பொதுப்பிரிவின்படி இரண்டு பங்காக வைத்து, அவர்களில் யூதர் அந்த நீதியைச் சம்பாதித்தார்களோ என்று பார்த்தால், இல்லை என்று காண்கிறோம். புறச்சாதியார் அதை அடைந்தார்களோ என்றால் அப்படியும் இல்லை. இவ்விரு பிரிவும் உண்டாகிறதற்கு முன்னே எல்லாம் ஏதமாய் ஆதாமில் அந்த நீதியை இழந்து மறுபடியும் ஒருகாலத்திலும் ஒருவகையிலும் அதைப் பெற்றுக்கொள்ளாதேபோனார்.

6. மனுஷ பிரயத்தின் முடிவு தேவ முயற்சியின் ஆரம்பம் என்ற சுலோகப்படி தேவன் கடைசியாக தம்முடைய நீதியை கிறிஸ்துவின்மூலமாய் உலகத்தார் சம்பாதித்துக்கொள்ளத் தீர்மானித்தார். இதுதான் கிறிஸ்துமார்க்கம்; இதுதான் கிறிஸ்து அவதாரமானதின் நோக்கம் என்பதுதான்.

இந்த நீதி யூதருக்குமாத்திரமல்ல புறச்சாதியாருக்கும் கிடைக்கும் என்பதும்; இது கிரியைகளினாலேயல்ல, கிருபையான ஈவு என்பதும்; விசுவாசிக்கிற எவனுக்கும் இது வித்தியாசமில்லாமல் கிடைக்கும் என்பதும்; அப்படிப்பட்டவர்கள் நீதிமான்களாகி தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறார்கள் என்பதும்; அவர்கள் ஜீவியம் சந்தோஷத்தாலும், நற்கிரியையாலும் முடிசூட்டப்படும் என்பதும்; மனுஷ இரட்சிப்புக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் எவ்வளவும் சம்பந்தமேயில்லை என்பதும்; ஆதலால் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுகிறதினால் நீதியைச் சம்பாதிக்கவாவது பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவாவது கூடாது என்பதும்; விருத்தசேதனத்தினாலே யாதொரு லாபமும் இல்லை என்பதும்; தானும் யூதனாயிருக்கிறதினாலே நீதியைப் பெறாமல், கிறிஸ்து இயேசுவை விசுவாசித்த ஒரு மனுஷனாயிருக்கிறபடியால் அது கிடைத்தது, அப்படியே எவனுக்கும் அது கிடைக்கும் என்பதும் அவருடைய சுவிசேஷ போதனையின் நுட்பங்கள் என்கலாம்.

கிறிஸ்துமார்க்கத்தின்மூலமாய் தேவன் உலகத்தாரெல்லாருக்கும் பாராட்டியிருக்கும் தயவுதான், அந்த மார்க்கத்தின்மேல் அதிக ஆவலை பரி. பவுலுக்கு உண்டாக்கிற்று. முன் அவருடைய பாசமும் அன்பும் வேலியடைத்து தடுக்கப்

பட்டதாயிருந்தது; கிறிஸ்துமார்க்கமோ, அந்த வேலியை வெட்டிவாங்கி தடுக்கல்களை அகற்றி உலக முழுவதிலும் அவர் தமது அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தும்படிக் திறந்துவிட்டது அவருக்கு ஒரு பெரிய விசேஷமாயிருந்தது. அதுமுதல் தேவன் அவருக்குப் புதிய தேவனாக விளங்கினார். இந்த இரட்சண்ய முறையை, ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தனக்கும், தன் உடன் ஊழியருக்கும் அநாதி தேவன் வெளிப்படுத்தின இரகசியம் என்கிறார் (ரோ. 16:25). மெய்யாகவே இது ஒரு புதிய இரகசியந்தான். அநேக இராசாக்களும் தீர்க்கதரிசிகளும் இந்த இரகசியத்தை அறியாமல் தங்கள் மண் அறைக்குள் பிரவேசித்தார்கள்.

இது இரகசியமேயன்றி முற்றிலும் நூதன இரட்சண்ய முறையாயிருக்கவில்லை. ஏனெனில் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் இந்த முறையைக்குறித்தே சாட்சி பகர்ந்திருக்கிறது. ஆபிரகாமுக்கு நீதி நியாயப்பிரமாணத்தினாலேயாவது, விருத்தசேதனத்தினாலேயாவது கிடையாமல் விசுவாசத்தினாலேதான் கிடைத்தது. ஏனெனில் நியாயப்பிரமாண ஏற்பாட்டுக்கும், விருத்தசேதன முறைக்கும் முன்னமே அவன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக எண்ணப்பட்டிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது. பரி. பவுல் குணப்பட்டதுமுதல் ஒரு புதிய வாழ்வு இருதயத்திலுண்டானதாக உணர்ந்தார். இம்மட்டுமில்லாத இந்த வாழ்வு எவ்வண்ணம் உண்டாயிற்று; இதுவரையும் அது ஏன் உண்டாகவில்லை என்பதே அவருடைய மனதில் வெகுகாலம் தியானமாயிருந்தது. அந்த வாழ்வு தனக்குத் தரிசனமான இயேசுவால் வந்ததேயன்றி வேறல்ல என்ற தீர்மானமே அவருடைய தியானத்தின் முடிவாயிருந்தது. ஆகையால் உலகத்தார் அனைவருக்கும் இந்த வாழ்வு இந்தவிதமாய்க் கிடைக்க வேண்டியதேயன்றி வேறு வழியில்லை. ஆதலால் அதை வெளிப்படுத்துவது தமதுமேல் விழுந்த கடமை என்பதை அறிந்தார். இந்த புது வாழ்வை அவர் 'நீதி' என்னும் பதத்தால் உலகத்துக்குப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார். இது எந்த மார்க்கத்தானுக்கும் அடுத்த பொதுச்சம்பிரதாயப் பதமாகவே இருக்கிறதென்கலாம்.

ஆதாமின் மூலமாய் அவருடைய சந்ததியாருக்கு தூக்கப் படத்தக்க இரண்டு சுதந்தரங்கள் உண்டாயிற்று. அதில் ஒன்று கொஞ்சமாகிலும் குறையாமல் சன்னம் சன்னமாய் பெருகிக்கொண்டுவருகிற ஒரு குற்றக்கடனும், மற்றொன்று நீதியைச் சம்பாதித்துக்கொள்ள இயலமாட்டாத பாவச் சுபாவமும்தான். ஒரு பாவியின் இருதய நிலைமை இந்த இரட்டை நஷ்டப்பட்ட நிலைமையுள்ளதாய் இருக்கிறது; இதினாலே அவனுக்குண்டாகும் உபத்திரவங்களும் இரட்டித்தவைகளாகவே இருக்கின்றன. ஆனால் கிறிஸ்து புதிய ஆதாரமாயும், மனுஷ ஜாதியின் புதிய தலைவராயுமிருக்கிறார். விசுவாசத்தினாலே அவரோடு ஐக்கியப்படுகிறவர்கள் முந்தின இரண்டு நஷ்டங்களுக்கும் முற்றும் எதிரிடையான இரட்டை வாழ்வுகளுக்குப் பங்காளிகள் ஆகிறார்கள்; அதில் ஒன்று குற்றக் கடன் நீங்கிப் புண்ணிய ஐசுவரியவானாகிறான். கடனுள்ள ஒரு தகப்பனுக்குப் பிறந்தவன் தலைமேல் அந்தக் கடனும் பொறுக்கிறதுபோல ஆதாமினாலுண்டான குற்றக் கடனுக்கு உள்பட்ட சாதியாராகிய பாவிகள், மறுபடியும் பிறக்கிறதால் இரண்டாம் ஆதமாகிய இயேசுவின் சந்ததியாராகி அவரால் சம்பாதித்துவைக்கப்பட்டிருக்கிற அளவற்ற நீதியின் ஐசுவரியம் என்னும் ஆஸ்திக்குப் பாத்தியஸ்தராகிறார்கள். இந்தச் சத்தியத்தை உணர்த்தும்படி பரி. பவுல் 'ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவனுடைய கீழ்ப்படுதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்' என்கிறார் (ரோம. 5:19). மற்றொன்று, ஆதாம் தன் சந்ததியார், தேவனை விரோதிக்கவும், நீதியைச் சம்பாதித்துக்கொள்ள இயலாமல் போகவுமான பாபச் சுபாவத்தை தன் மீறுதலினால் உண்டு பண்ணிவிட்டதுபோல, புதிய ஆதாமாகிய இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களின் தலைவராயிருந்து தேவனுக்கு இணங்குகிறதும், கீழ்ப்படிகிறதும், அவருடைய நீதியை நாடித் தேடுகிறதுமான ஒரு ஆவிக்குரிய சுபாவத்தை அருளுகிறார்.

பரி. பவுல் விளக்கிக்காட்டும் கிறிஸ்துமார்க்க ஞானசாஸ்திரத்தின்படி மனுஷன், சரீரம், ஆத்துமா, ஆவி ஆகிய

மூன்று பங்குடையவனுயிருக்கிறான். மனுஷன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறஇயல்பின்படி இவைமூன்றும், ஒன்றுக்கொன்று மேலான படித்தரமுள்ளதாயும், ஒன்றோடொன்று ஐக்கியப் பட்டதாயுமிருக்கின்றன. இவைகளில் சரீரம் தாழ்ந்த முத லாம் படியும், ஆவி உயர்ந்த மூன்றும் படியும், ஆத்துமா மத் திய இரண்டாம் படியுமாயிருக்கிறது. ஆனால் பாவத்தினால் இந்த ஆதிக்க ஒழுங்கும் அந்தஸ்து படியும் கீழது மேலதாகி விட்டது. பாவிகள் விஷயத்தில் சரீரம் அல்லது ஆத்துமா மூன்றும் ஸ்தானத்தைப் பிடித்து நின்று முழு மனுஷனையும் ஆண்டு நடத்துகிறது. மனம்திரும்ப விரும்புகிறவர்கள் நெஞ்சில், ஆவி மற்றது இரண்டையும் அடக்கி தனக்கு இயல்பாயுள்ள மேலான அந்தஸ்தை அடைந்துக்கொள்ளப் பிரயாசைப்படுகிறது; இதுதான் ஆவிக்குரிய போராட்டம். மனந்திரும்பி, நீதிமானாக்கப்பட்டு நிலையான பக்தி நிலைமையி லுள்ளவர்களிடத்தில் இம்மூன்றும் தன்தன் ஸ்தானத்தி லிருக்க ஆண்டு நடத்தப்படுகிறது. நமக்குள் உண்டாகிற பாவமெல்லாம் இந்தக் கோஷ்டத்தின் காரணங்களாகவே இருக்கின்றன. சரீரம் ஆத்துமா ஆகிய இரண்டு பாகங்களை யும் பரி. பவுல் மாம்சம் என்னும் பொதுப் பதத்தால் அழைத்துவருகிறார். இந்த இரண்டு பாகங்களும் மனுஷனை இவ்வுலகத்துக்கும் அதின் இச்சைகள் வாழ்வுகளுக்கும் இழுக்கின்றன. ஆவி என்னும் பாகமோ அவனை தேவ னிடத்திலும் பரலோகத்திலுள்ள மேலான விஷயங்களுக்கும் உயர்த்தும்படி பார்க்கிறது. இந்த ஆவியின் ஆதிக்கம் அழிக்கப்பட்டு, மாம்சத்தின் அதிகாரம் செலுத்தப்படுகிற இருதய நிலைமையை சாவு என்று அழைக்கிறார். அதிகாரம் பறிபோய் செத்த நிலைமையிலிருக்கிற ஆவிக்கு கிறிஸ்துவான வர் தமது ஆவியைக் கொடுத்து உயிரேற்றி பலப்படுத்தி வருகிறார். ஆதலால் அப்படிப்பட்ட இருதயங்கள் உயிர டைந்த அல்லது மறுபடியும் பிறந்த மனுஷன் என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் ஆவியால் உயிரேற்றி பலப்பட்ட இருதயங்கள் மேன்மேலும் ஸ்திரமாகிறதால் சீக்கிரத்தில் ஆத்தும தத்துவங்களையும் சரீரப் புலன் களையும் தன் ஆதீனத்துக்குள்ளாகி, அவைகளில் பரவி குடிகொண்டு, அவனை ஆவிக்குரியவனாக்கிவிடுகிறது. அது

முதல் ஆவியின் அதிகாரமே அவனுள் நிலைத்திருக்கிறதால் மாம்சத்துக்கடுத்த அவனுடைய ஜீவனத்தின் போங்கு முற்றிலும் மாறி, பரிசுத்தமும் தெய்வீகமுமான விஷயங்களிலே ஜீவனம் செய்யும்படி ஏவப்படுகிறான். மாம்சமானது தான் ஒருகரம் அடைந்த பாவ அதிகாரத்தின் ஆதிக்கத்தை இலேசில் பறிகொடுக்கிறதில்லை. அது ஆவியைப் பலவிதமாகத் தடுத்து, அதின் கலைய எழும்பவிடாதபடிச் செய்துவருகிற பலவித பிரயத்தனங்களுக்கு ஒரு கணக்கில்லை. இந்தப் போராட்டத்தை பரி. பவுல்தான் முதலாவது அநுபோகத்தால் அறிந்து சொன்னார்; ஆனால் மனந்திரும்பின ஒவ்வொரு பக்தனும் இவ்வித போரை தன் தினகால அநுபவத்தில் உணர்ந்துவருகிறவனாயிருக்கிறான். இது முடிவில்லாத போருமல்ல, ஏனெனில் கிறிஸ்துவின் ஆவி தங்கி கிரியை செய்யும் இருதயங்களில் பாவ அதிகாரம் சொல்லுகிறதில்லை. 'மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டுப் பிரிக்கமாட்டாது' (ரோம. 8:38,39).

இவ்வித உயர்ந்த கிறிஸ்துமார்க்க ஞானம், யூதமார்க்க அபிமானியாயிருந்த பரி. பவுலுக்கு தற்செயலாய் உண்டாயிற்று என்று சொல்ல இடமேயில்லை. அவர் எவ்வளவு சுயநினைவுடையவராயிருந்தபோதிலும் இந்த ஞானத்தைக் கவர்ந்துகொள்ள இயலாது. இது பரிசுத்த ஆவியின் அருளால் அவருடைய ஆத்தும அநுபோகத்துக்கு வந்தெட்டின இரகசிய ஞானமாகவேயிருக்கிறது. கிறிஸ்துவின் மூலமாயுண்டாகும் ஆத்தும லாபத்தின் நுட்பங்களை வெளிப்படுத்துகிற விஷயத்திலுல்தான் பவுலின் சுவிசேஷ போதனையின் போங்கு மற்ற சுவிசேஷகரின் உபதேசப் போங்குக்கு மேலானதாக விளங்குகிறது. சுவிசேகர் கிறிஸ்துவின் மனுஷீக ஜீவியத்தின் வரலாறை மாத்திரம் குறிப்பித்து மனுஷர் இன்னபிரகாரமாய் நடக்கவேண்டும் என்பதற்கு ஒரு மாதிரியை மாத்திரம் வெளிப்படுத்துகிறார்கள்; ஆனால்

பவுலோ அவரை சர்வலோக இரட்சகராக வைத்து அவர் மூலமாய் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனுஷனுக்கும் உண்டாகியிருக்கிற இரட்சண்ய வாழ்வுகளின் ஆழத்தையும் நீளத்தையும் அளந்து; அதின் தன்மையையும், மேன்மையையும் விளக்கி மனுஷன் அதை அடைத்துக்கொள்ளும்படியான வழியும் வகையும் இன்னபடி என்று சொல்லிக் காட்டுகிறார். அவர் இயேசுவின் பூலோக ஜீவியத்தைப்பற்றி அவ்வளவாய்ப் பேசுகிறதேயில்லை; தமஸ்குவின் சமீபத்தில் தனக்கு காட்சியளிக்கப்பட்டவண்ணமாக அவர் எப்போதும் இயேசுவின் சாயலை ஒரு ஜோதிமயரூபியாகவும், தனக்கு பரம சந்தோஷத்தையும், முன்னெருக்காலும் கிடையாதிருந்த சமாதானத்தையும், புதிய ஜீவனையும் தந்தவராகவும் எண்ணி பேசிவந்திருக்கிறார். பரி. பவுலின் சுவிசேஷ போதனையின் போங்கையும் பொருளடக்கத்தையும் குறித்து இவ்வளவு சொன்னது போதுமென்று எண்ணுகிறேம். தன்னைப் பாவத்திலிருந்தும் நரகத்தினின்றும் இரட்சிக்கவந்த இரட்சகராக இயேசுவைக் கண்ணோக்குகிறவனும், அவரை தன் மனதின் மத்தியில் ஸ்தாபித்துக்கொள்ளுகிறவனும், அவரில் தனக்கு இரட்சிப்பையும், பரிசுத்தவானுகுதலுக்குரிய பலத்தையும் அடையவே அடைவான்.

பவுலின் சுவிசேஷ வேலை

புறச்சாதியாருக்கு பாக்கியமுள்ள தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தைப் பிரஸ்தாபிப்பதே தமது வேலை என்று பரி. பவுல் எண்ணிவந்தார்; என்றாலும் அந்த வேலையை ஆரம்பிக்க அவர் அதிகக் காலம் காத்திருக்கவேண்டியதாயிருந்தது. அப்பால் ஏழு அல்லது எட்டு வருஷங்களாக நாம் அவருடைய வரலாறைக் குறித்து ஒன்றும் அறியக் கூடாதிருக்கிறது. எப்படியும் இந்தத் தாமதத்துக்கு தேவத்தனமான ஒரு காரணமிருந்திருக்குமென்றே நாம் எண்ணவேண்டியது ஒருவேளை இந்தத் தாமதம் பரி. பவுலின் ஆவிக்குரிய ஸ்திதியை அடுத்ததாகவே இருக்கலாம்; யாதாமொரு விசேஷித்த காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்று தேவனால் குறிக்கப்பட்டிருக்கிறவர்களை பெரும்பாலும் காத்

திருக்கப்பண்ணி திருத்தி ஆயத்தப்படுத்துகிறதே தேவமுறையின் தன்மையாயிருக்கிறதென்கிறதை நாம் பார்க்கிறோம். அந்தத் தாமதத்துக்கு ஒரு வெளியரங்க காரணமும் இருந்தது என்கலாம். அக்காலத்திலிருந்த யூதரும், கிறிஸ்தவர்களும் பவுலின் பேச்சை ஒப்புக்கொள்ளாமல் அசட்டை பண்ணத்தக்க நிலைமையில்தானிருந்தார்கள்:—யூதர் தங்கள் மார்க்கத்தை நிலைநிறுத்த முயன்ற பவுல் இப்படி அதற்கு விரோதமாய் பேசுகிறானே என்று கொதிப்படைய இடமிருந்தது; கிறிஸ்தவர்கள் இவர் நம்மோடு சேர்ந்தவர்போலவே வேஷம்போட்டு, நம்மைப் பீறவரும் ஓநாயோ என்று சமுசயப்பட்டார்கள். மனுஷ இயற்கையின்படி இவ்விருதரத்தாரும் இப்படி அவரைக் குறித்து நினைத்துப் புறக்கணிப்பது இயல்புதான். அவர் தூணப்பட்டவுடனே தமஸ்குவில் தமது வேலையை ஆரம்பித்தார்; அங்கே அவரைக் கொலை செய்யும்படி யூதர் பிரயத்தனம் செய்தார்கள் (அப். 9:23). ஆதலால் உபாயமாய் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போக நேரிட்டது; பின்பு எருசலேமுக்குப்போனார்; இரண்டுமூன்று வாரத்துக்குள் அங்கும் அவரைக் கொலைசெய்யும்படி முயற்சி பண்ணினார்கள். அதற்குப்பின்பு அவர் தமது ஜனன ஊராகிய தருசுவுக்கு வந்து அநேக வருஷங்களாக தலைமறைவாய் இருந்தார் (அப். 9:30). அவர் தருசுப்பட்டணத்திலும் அதையடுத்த சிலிசியாவின் திசைகளிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார் என்பதற்கு சில குறிப்புகளுண்டு; ஆனால் அவ்விடத்தில் அவர் நடப்பித்த வேலை அடக்கமாயும் சாதாரண சம்பாஷணை முறையாயும் இருந்ததேயன்றி வேறல்ல என்று சொல்லவேண்டியது. எப்படியும் இந்தக் காலங்களில் அவர் சிலிசியாவின் திசைகளில் சிலரைக் கிறிஸ்தவர்களாக்கினார் (அப். 15:23,41). இந்தக் காலங்களில்தான் பவுலின் இனத்தார் சிலரும் அவருடைய சகோதரியும் கிறிஸ்தவர்களாகி இருக்கலாம் (ரோம. 16:7; 11:21).

கடைசியாக அவர் அமைதலாய் அடங்கியிருக்கவேண்டுமென்று தேவன் குறித்த காலம் நிறைவேறிற்று. எப்படியெனில் புறஜாதியாரும் யூதரைப்போல தேவகிருபைக்கும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களுக்கும் பங்குள்ளவர்களாய்

இருக்கிறார்கள் என்பதை கர்த்தர் ஒரு தரிசனத்தின்மூல மாய், அப்போஸ்தலரில் சிரேஷ்டமான பரி. பேதுருவுக்கு வெளிப்படுத்தினார் (அப். 10:10–16). அந்த வெளிப்படுத்த லின்படி பேதுரு கொர்நேலியு என்னும் புறச்சாதியானை ஞானஸ்நானத்தினால் கிறிஸ்து சபையின் அவயவமாக்கினார்; உடனே அந்தத் திசைகளிலுள்ள அநேக புறச்சாதியார் மனம் திரும்பி கிறிஸ்தவர்களானார்கள். இந்த சமாசாரம் பவுலின் சுவிசேஷ வேலையை பகிரங்கமாய் ஆரம்பிக்க காலம் வந்து விட்டதென்று அறிக்கைபண்ணுகிறதுபோலிருந்தது. இந்தக் காலத்தையொட்டி அந்தியோகியாவிலிருந்த புறச்சாதியாருக் குள்ளும் கிறிஸ்துமார்க்கச் சார்பான பெரும் அசைவுண்டா யிற்று. எப்படியெனில் துன்பத்தினிமித்தம் சிதறிப்போன பலர் சீரியாநாட்டின் தலைநகரியாயிருந்த இந்த அந்தியோகி யாவில் ஒதுக்கிடம் தேடி அங்கே பிரசங்கித்துச் சபையை உண்டாக்கினார்கள். இந்தச் செய்தியை அப்போஸ்தலர் கேள்விப்பட்டு, அதை மேல் விசாரிக்கும்படி பர்னபாவை அனுப்பினார்கள். இவர் பவுலை அறிந்து பழகினவராயிருந் தார். பரி. பவுல் முன் எருசலேமுக்குப்போயிருந்தபோது அவரைப்பற்றி பயந்த சகோதரருக்கு இந்த பர்னபா பயம் தீர நற்சாட்சி பகர்ந்து பரி. பவுலின் சமய சகாயராய் விளங்கி னார் (அப். 9:27). அக்காலத்தில் பரி. பவுலும் பர்னபாவும் சில நாட்கள்மாத்திரம் பழகினவர்களாய் இருந்தாலும், அவ் வளவு நாட்களுக்குள் பவுலின் குணசீலங்களையும் பிரசங்கத் திறமையும், ஆவியின் ஜீவனத்தையும் பர்னபா நன்றாய் ஆராய்ந்து அறிந்துகொண்டதால் இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தபின்பு பர்னபா அவரை மறந்து போக வில்லை. பர்னபா அந்தியோகியாவிலுண்டான எழுப்பு தலையும், கிறிஸ்துமார்க்கத்துக்கு அநுசரணையாக உண்டான ஏதுக்களையும், பெரும் அசைவையும், அங்கிருந்த வேலை யின் அதிகரிப்பையும் கண்டபோது தனக்கு எப்படியும் தகுதியான ஒரு துணையாள் அவசரமென்று விளங்கிற்று. அதற்கேற்ற ஆளைத் தேடினபோது பவுல்தான் இதற்கேற்ற மனுஷன் என்று அவருடைய மனதில்பட்டது. தருசுப் பட்டணம் அவ்வளவு நெடுந்தூரத்தில் இராதபடியால் பர்ன பாவே அவரைத் தேடிக்கொண்டு வரப்போனார். பவுல்

உடனே பர்னபாவின் விருப்பத்துக்கு இணங்கி அந்தியோகியாவுக்கு வந்து சேர்ந்தார். அவர் வந்தவுடனே புதிய பலத்தோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் தமது சுவிசேஷ வேலையை நடப்பித்துவந்ததால் திரளானபேர்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். அந்த புதிய மந்தையின் தொகையும், அவர்கள் பாராட்டின பக்திவிஷயமும், சுற்றிலும் இருந்தவர்களுடைய கவனத்துக்கும் நாடோடிய பேச்சுக்கும் வந்துவிட்டதால் அவர்களுக்கு 'கிறிஸ்தவர்கள்' என்ற புதிய பேரும் கிடைத்தது. இது துவக்கத்தில் பழிப்பாகவும், பரியாசமாகவும் கொடுக்கப்பட்டதானாலும், அக்காலமுதல் இக்காலம்வரையும் இயேசுவை விசுவாசிக்கிறவர்களுடைய விருதுபோல் வழங்கிவருகிறது. அதுமுதல் எருசலேமல்ல, அந்தியோகியாவே கிறிஸ்துமார்க்கத்தின் தலைநகரியாக எண்ணப்பட்டுவந்தது. அதுவுமின்றி மற்ற இடங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப்போகும் வழக்கம் முதல்முதல் இந்த இடத்திலிருந்து உண்டாயிற்று. இதற்கு பவுல் அப்போஸ்தலனே தகுந்த மனுஷனாய் இருந்தார்.

அக்காலத்தில் பிரபலமாயிருந்த ரோமர், கிரேக்கர், யூதராகிய மூன்று பிரிவாருக்கும் முறையே மூன்று இடங்கள் தலைநகரியாயிருந்தன. அவை ரோமை, அத்தேனே, எருசலேம் என்னும் நகரங்கள்தான். இந்த மூன்று ஜாதியாரும் அக்கால உலகத்தில் கலந்து பரம்பி, அவரவர் ஜாதிக்குரிய சீர்திருத்தங்களையும் ஒழுக்கங்களையும் பரப்பி வந்தார்கள். இம்மூவரில் கிரேக்கர் விசேஷித்தவர்களாய் இருந்தார்கள். இவர்கள் தங்கள் கல்வித் திறமையாலும் வியாபார விருத்தியினாலும் கிரேக்க பாஷையை ஏக பாஷையாக்கி விட்டார்கள் என்று சொல்லலாம். இது கிறிஸ்து மார்க்க சத்தியம் ஒடிப் பிரபல்லியப்படும்படி விசேஷ அநுகூலமாயிற்று. கிறிஸ்து மார்க்கத்துக்கடுத்த பொதுவான சில சத்தியங்கள், அது பிரசங்கிக்கப்படுவதற்குமுன்னே யூத மார்க்கத்தின் மூலமாயும் ஞானிகள் மூலமாய் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்தன. மேலே சொல்லியமூன்று ஜாதியார்கலந்து குடியிருந்ததும், அவர்கள் ஏக பாஷையைப் பேசினதுமே இதற்கு விசேஷ காரணமாயும் சுவிசேஷத்துக்கு ஆயத்தமாயுமிருந்தது. ஆகையால்

சுவிசேஷ பிரசங்கிகள் எங்கே போனாலும் மெய் மார்க்கத்தின் பொதுவான அஸ்திபார சத்தியங்களை ஒப்புக்கொள்ளுகிற திரண்ட சனங்களைச் சந்தித்து வந்தார்கள். கிறிஸ்து மார்க்க போதகன்மார் முதலாவது தங்கள் பிரசங்கங்களை சூனகோகு களிலே தான் செய்து வந்தார்கள். முதலாவது கிறிஸ்து மார்க்கத்துக்குள்பட்டவர்கள் யூதராய், அல்லது யூத மார்க் கத்துக்கமைந்த புரோசிலோத்துகளாய் இருந்தார்கள். ஆதலால் கிறிஸ்து மார்க்கமானது சூனகோகு என்னும் பாலத்தின் வழியாய் நடந்து புறச்சாதியாரிடத்திற் சென் றது என்று சொல்லலாம். இந்த மூன்று பிரிவாரோடே அங்கங்கே சுயதேசத்தாரும், அடிமைகளுமான இரண்டு பிரிவார் பல இடங்களிலுமிருந்தார்கள். அவர்களுடைய இயல்பான உலக நிலைமை சுவிசேஷ அங்கிகாரத்துக்கு ஏற்றதாகவே இருந்தது. இப்படி எல்லாம் சுவிசேஷ பிர பல்லியத்துக்கு இசைந்திருந்த காலத்தில் பரி. பவுல் தமது வேலையை முதலாவது அந்தியோகியாவில் பகிரங்கமாய் ஆரம்பித்து, அதன்பின் பல இடங்களுக்குப் போய் பிர சங்கித்தார். இனி அவருடைய பல சுவிசேஷ பிரசங்க பிர யாண வரலாறுகளைச் சொல்லிக் காட்டுகிறோம்.

முதலாம் பிரயாணம்

கிறிஸ்து மார்க்க ஆரம்பம் முதல் அதைப் பிரசங்கிக்கிற வர்கள் இரண்டிரண்டு பேராகச் சேர்ந்து போனார்கள்; பரி. பவுல் இதை சற்று மாற்றினார். அவர் பெரும்பாலும் தம்மோடு இருவரையும் சேர்த்து மூன்று பேராகப் போய்ப் பிரசங்கித்து வந்தார். அதில் ஒருவன் சற்று வாலிபனாகவே இருந்தான். அவன் பிரயாணத்துக்கு அடுத்த சாமான்களை ஒழுங்குப் படுத்துவதும் போசன விஷயங்களைத் திட்டம் செய்கிற வனையும் இருந்தான் என்கலாம். பவுலின் முதலாம் பிர யாணத்தில் பர்னபாவும், மாற்குவும் அவரோடே யாத்திரை பண்ணினார்கள். இந்த மாற்கு பர்னபாவின் இனத்தா னாயிருந்தார். பர்னபா தான் பவுலைக் கண்டுபிடித்து சுவிசேஷ வேலைக்கு முதலாவது உட்படுத்தினது என்று நாம் முன் சொன்னோம். இந்த முதலாம் பயணத்தில் பர்னபா தலை

வரும், பவுல் அவர் சொன்னபடி நடந்து வேலை நிறைவேற்றின வராயும் இருந்தார். பல இடங்களிலுமிருந்து எருசலேமில் கூடி பெந்தேகோஸ்து நாளில் குணப்பட்டு அவரவர் இடங் களில் தங்கியிருந்த கிறிஸ்தவர்களைக் கண்டுபிடிப்பதும், அவர்களை ஸ்திரப்படுத்துவதுமே பர்னபாவின் விசேஷித்த கவனமாயிருந்தது. பர்னபா பலராலும் மதிப்பாய் எண்ணப் பட்ட ஒரு சீமானுய் இருந்தார். அவருக்கு சீப்புருதீவில் விஸ்தாரமான காணி பூமியும் இருந்தது. அவர் கிறிஸ்த வனுனவுடனே அவையனைத்தையும் விற்று சுவிசேஷம் பிர பல்லியமாகும் விஷயத்துக்கென்று அதன் தொகையை ஒப்புக்கொடுத்தார். அதுமுதல் அவர் அங்குமிங்கும் சுவி சேஷ பிரசங்கியாகவே திரிந்தலைந்தார். அவருடைய சொற் சாதுரியத்தையும் பிரசங்க இனிமையையும் தொட்டு அவ ருக்கு 'ஆறுதலின் மகன்' என்ற பட்டப்பேர் உண்டா யிற்று. பர்னபாவின் ஆதிக்கம் லீஸ்திராவில் நடந்த ஒரு சங்கதியாலும் விளங்குகிறது; அந்த ஊரார் பர்னபாவையும் பவுலையும் தேவர்கள் என்று தப்பாய் எண்ணி பர்னபாவை யூப்பித்தர் என்றும் பவுல மொர்க்கூரி என்றும் அழைத் திருக்கிறார்கள் யூப்பித்தர் வளர்ந்து ஸ்தூலித்த ஒரு ரூபமா யும், மொர்க்கூரி குறுகிய மெல்லிய தேகமுடைய ரூபமாகவும் பூர்வத்தார் எண்ணி நமஸ்கரித்து வந்தார்கள். இதினாலே பர்னபா நெட்டையும் புஷ்டியும் கவுரவ தோற்றமுடைய வராயும் பவுல் அதற்கு எதிரிடை ரூபமாகவும் இருந்ததாக நாம் அநுமானிக்கலாம். மேலும் அவர்கள் தங்கள் பயணத் தில் முதலாவது சீப்புருதீவை நோக்கினார்கள். இது பர்ன பாவின் ஜனன தேசமாய் இருந்தது. முதலாவது தன் சொந்த தேசத்திலே பிரசங்கிக்க வேண்டுமென்று தீர்மானித்ததாக தெரிகிறது. கடல் மார்க்கமாய்ப் பயணம் பண்ணினால், அந்தியோகியாவுக்கு 80 மைல் தூரத்திலிருந்த சீப்புரு தீவுக்கு ஒரு நாளில் சேரலாம்.

பிரயாண ஆரம்பத்தில் பர்னபா அந்தக் கூட்டத்துக்கு தலைவராய் இருந்தாலும் சில நாட்களுக்குப்பின் அவர் பரி. பவுல தம்மிலும் சிரேஷ்டப்படுத்தி வந்தார் என்று தோன்று கிறது. பரி. பவுலின் ஆழ்ந்த பக்தியும், பிரசங்க வல்லபமும்,

கிறிஸ்து மார்க்க ஞானத்தை அவர் வருத்து விவரித்த முறையும், அதினுலுண்டான மனம் திரும்புதல்களும் இதற்குக் காரணமாய் இருக்கலாம். அவர்கள் அந்தத் தீவின் பல திசைக்ளிலும் பிரசங்கித்தான பின்பு அதின் தலைநகரியாகிய பாப்போப் பட்டணத்துக்கு வந்தார்கள். கிறிஸ்துவினுலுண்டான இரட்சண்ய சாஸ்திரத்தை நூதன முறையாய் எடுத்துச் சொல்ல இது ஏற்ற இடமாயிருந்தது. இந்த நகரம் நேசதேவதை என்று சொல்லப்பட்ட வீனஸ் வணக்கத்துக்கு விசேஷித்த ஸ்தானமாயிருந்தது. இந்த வீனஸ் தேவதை இந்த ஊரையடுத்த கடலின் நுரையிலிருந்து உற்பத்தியானவள் என்று சொல்லிக்கொள்ளப்பட்டது. இவளுடைய வணக்கத்தின் சம்பந்தமாய் நடந்துவந்த காமவிகார கோரணிகளையும், வேசித்தனங்களையும் வாயால் சொல்லவொண்ணாது. கிரேக்கரின் துன்மார்க்கத்துக்கு இந்த நகரம் ஒரு படம் என்று சொல்லலாம். இந்த நகரம் ஒரு ரோமை தேசாதிபதி (கவர்னரின்) வாசஸ்தலமாயும் இருந்தது. அக்காலத்திலிருந்த கவர்னருக்கு செருகியு பவுல் என்று பேர். இவர் எவரும் மெச்சிப் பேசிக்கொள்ளக்கூடிய நற்குணமுடையவராய் இருந்தபோதிலும் மார்க்க விஷயத்தில் நிலைவரமற்ற மனமுடையவராய் இருந்தார். அந்த ஊரில் வாய்மிரட்டாலும் கைமிரட்டாலும் இந்திர ஜாலத்தாலும் ஜனங்களை ஏமாற்றி வயிறு வளர்த்துக்கொண்டிருந்த எலிமா என்றொரு யூதன் இருந்தான். அதிபதியை கைவசப்படுத்திக் கொண்டால் தன் காரியம் அந்த இடத்தில் நன்றாய் பலிக்கும் என்று அவன் நினைத்து அவரிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்தான். பர்னபாவும் பவுலும் வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள் என்ற செய்தியை அதிபதி கேள்விப்பட்டு அவர்களிடத்தில் தேவ வசனத்தைக் கேட்க ஆசைப்பட்டு, தன்னிடம் வரும்படி அழைத்தான். பர்னபாவும் பவுலும் சந்தோஷத்தோடே அதிபதியிடம் போய் இரட்சிப்பின் மார்க்கத்தைப் போதித்தார்கள். அச்சமயத்தில் எலிமா என்ற அந்த மந்திரவாதியும் அதிபதியோடு இருந்தான். இந்தப் புதிய குருக்கள் அதிபதியின் மனதில் கிறிஸ்து மார்க்கத்தைப் பதியப்பண்ணி, நமது வாயில் எங்கே மண்ணை வாரிப்போட்டு விடுகிறார்களோ தெரியுதில்லையே, நாமும்

அச்சமயத்தில் பவுல் வீண் வாதாட்டம் பண்ணியாவது சத்தியம் அதிபதியின் மனதுக்குள் இறங்காதபடித் தடுத்துவிடலாமே என்றெண்ணித் தானே போயிருக்கலாம். கிறிஸ்துவ போதகன்மார் இருவரும் சொல்லும் சமாச்சாரங்களாலும் போதனைகளாலும் அதிபதியின் மனம் கிறிஸ்துமார்க்கத்துக்குச் சாய்கிறது, என்கிறதை நன்றாய் அறிந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்திலிருந்து திரும்பும்படி வகைதேடி அவர்களோடே எதிர்த்து நின்றான். செருகியு பவுல் இயல்பிலே விவேகமுள்ளவனாய் இருந்தபடியால் சத்தியத்தை அங்கிகரித்து கிறிஸ்தவனாக இணங்கிக் கொண்டார் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். சத்தியத்துக்கு இணங்கினவரை இந்தப் பாதகன் கெடுத்துப்போடப் பார்த்தான். பரலோகம் முழுவதையும் ஆனந்தத்தால் நிரப்பத்தக்கதாக ஒரு விசேஷித்த குணப்படுதல் இப்பூலோகத்தில் நடக்கையில் இந்தப் பாதகன் இவ்வளவு அழிம்பு செய்கிறானேயென்ற சிந்தை பரி. பவுலின் நரம்புகளில் மின்சாரம் போல் ஏறவே அவர் தேவாவியால் பலப்படுத்தப்பட்டு சூடான கண்ணோடே அவனை உற்றுப் பார்த்து 'எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயா' என்று கடிந்துகொண்டு, இந்த அழிம்பனுக்கு இவ்வளவு போதாது, இவனை இன்றோடு தொலையவைத்து தேவ வல்லமையை வெளிப்படுத்தி நிலைநிறுத்தவேண்டுமென்று நினைத்து 'இதோ இப்பொழுதே கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது சிலகாலம் சூரியனைக் காணுமல் நீ குருடனாயிருப்பாய்' என்று சாபமிட்டார். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான். சத்தியத்தைக் கேட்டு உட்கொண்ட அதிபதி அதின் நிச்சயத்துக்கடையாளமாக நடந்த இந்த அற்புதத்தைக் கண்டு அதிசயித்து விசுவாசித்தான். அந்த ஊரிலே ஒரு 'கிறிஸ்து சபை உண்டாயிற்று. இந்த நகரம் பிரபல்லியமாய் இருந்த ஒரு காலத்தில் இதனுள் 365 ஆலயங்களில் கிறிஸ்தவர்கள் கூடி தேவனைத் தொழுதுகொண்டு வந்தார்கள். இக்காலத்திலோ இது சிறுத்

துப்போனதால் நாலைந்து கோயில் மாத்திரமிருக்கின்றன. இது முதல் பரி. பவுலின் பேர் முதலாவதும் பர்னபாவின் பேர் பிந்தியும் வருகிறது என்று நாம் அறிகிறோம். பவுல் முதல் கனத்துக்குப் பாத்திரன் என்பதை உணர்ந்து பர்னபா தம்மைத் தாழ்த்திக் கொண்டார் என்று சொல்லலாம். இதற்கு முன் பரி. பவுல் எப்போதும் 'சவுல்' என்று அழைக்கப்பட்டிருந்தாலும் இது முதல் 'பவுல்' என்ற நாமத்தால் அழைக்கப்படுகிறார்.[1]

அப்பால் அவர்கள் பாப்போவை விட்டு கப்பல் வழியாய் பெருகேக்கு வந்தார்கள். இங்கிருந்து, துணையாளாயிருந்த மாற்கு பிரிந்து எருசலேமுக்குப் போனான். ஒருவேளை பரி. பவுலின் ஆதிக்கமானது அவனுடைய மனதுக்கு இசையாமல் போயிருக்கலாம்; அல்லது அவர்கள் அப்புறம் சுற்றும்படி பண்ணின ஒழுங்கு சங்கடமானதென்று கண்டு பின் வாங்கினானே தெரியுதில்லை; அதன்பின் பிசிதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து ஓய்வுநாளிலே ஜெபாலயத்திற்குப் போனார்கள். அன்றையத்தினம் வாசிக்கவேண்டிய நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனமும் வாசித்தான பின்பு புதிதாய்ப் போயிருந்த பவுலையும் பர்னபாவையும் புத்தி சொல்லும்படி ஜெபாலயத் தலைவன் சொல்லியனுப்பினான். உடனே பவுல் எழுந்திருந்து கையமர்த்தி பிரசங்கித்து நியாயப் பிரமாணத்தினால் இரட்சிப்பு வராமல் கிறிஸ்து இயேசுவினாலே தான் வருகிறதென்று திருஷ்டாந்தப்படுத்தினார். அன்றையத்தினம் யூதரிலும், புரோசிலோத்துகளிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களை புறச்சாதியார் வருந்தி அழைத்து வருகிற ஓய்வுநாளில் இந்த வசனங்களை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள். இதற்குள்ளாக அந்த ஊரெங்கும் பவுலின் போதனையும் நியாயமும் பேசிக்கொள்ளப்பட்டது. மறு ஓய்வுநாளில் கொஞ்சம் குறையப் பட்

---

[1] சவுல், பவுல் என்ற இரண்டு பேரும் ஆதிமுதல் இவருடைய சொந்தப் பேராயிருந்தது. இதில் சவுல் என்ற பேரால் யூதரும், பவுல் என்ற பேரால் கிறிஸ்தவர்களும் அழைத்து வந்தார்கள் என்று அபிப்பிராயப்படுகிறவர்களுமுண்டு.

டணத்தார் அனைவரும் தேவ வசனத்தைக் கேட்கவந்தார்கள். இவனுடைய பிரசங்கத்தைக் கேட்க இவ்வளவு கூட்டம் வருகிறதேயென்று பொறுமையடைந்த யூதர் அப்போஸ் தலரோடே வாதாடவும் கலகத்துக்கு ஆரம்பம் செய்யவும் துணிந்தார்கள். அன்றையதினம் அநேகர் குணப்பட்டு கிறிஸ்தவர்களானார்கள். அதன் பின்பு அவர்கள் சிலகால மாக அத்திசைகளில் எல்லாம் போய் சுவிசேஷத்தைப் பிர சங்கித்து சபைகளை ஸ்தாபித்தார்கள். அதினால் யூதர்கள் பொறுமையடைந்து பெரிய வீட்டுக்காரரை எழுப்பிவிட்டு அவர்களைத் துன்பப்படுத்தித் துரத்தினார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போட்டு இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள். கி. பி. 46 (அப். 13:14-50). மற்றுமுள்ள அவருடைய பயணத்தை பொருளடக்கமாய்ச் சொன்னால் போதுமென்று நினைக்கி றோம்.

வரு.	இடம்.	விசேஷம்.	வேதம்.
கி. பி. 46.	இக்கோனியா.	யூதரிலும் கிரேக்கரிலும் அநேகர் விசுவாசித்தார்கள்; கடைசியில் கல்லெறியப் பார்த்தார்கள்.	அப். 13:51, 52:14; 1–5.
,, 46.	லிஸ்திரா.	பிறவிச்சப்பாணி பார்பவுலின் அற்புதத்தால் நடந்தான்; பவுலையும் பர்னபாவையும் தேவர்கள் என்று பூஜிக்க வந்தார்கள்; கல்லெறியுண்டார்கள். பவுல் குற்றுயிரானார்.	,, 14:8–20.
,, 47.	தெருபை	அநேகர் சீஷரானார்கள்.	,, 14:20,21.

வரு.	இடம்.	விசேஷம்	வேதம்.
கி. பி. 47.	லிஸ்திரா, இக்கோனியா, பிசிதியா, அந்தியோகியா.	மறுபடியும் பயணம்; முன் உண்டான சபைகளை ஸ்திரப்படுத்தினது; அந்தந்தச் சபைகளுக்கு மூப்பரை ஏற்படுத்தினார்கள்.	அப். 14:21-23.
,, 48.	பிசிதியா, பெர்கே, பம்பிலியாவிலுள்ள அத்தாலியா.	பிரசங்க வேலை. கடைசியிடத்திலிருந்து கப்பலேறினார்கள்.	,, 14:24,25.
,, 48.	அந்தியோகியா.	பயண விவரங்களை சபையாருக்கு சொன்னார்கள்; சிலகாலம் தங்கினார்கள்.	,, 14:26-28.

கி. பி. 49. பரி. பவுல் தமது முதலாம் சுவிசேஷ பயணத்தை முடித்து அந்தியோகியாவில் அவருடைய சரீரத்துக்கு சற்று இளைப்பாறுதல் கொடுக்க விரும்பினாலும், அவர் வந்தவுடனே மனவிசனமும் துக்கமுமான சம்பவங்கள் அந்தியோகியாச் சபையில் நேரிட்டது. எப்படியெனில் சிலர் யூதேயாவிலிருந்து வந்து நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனம் அடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்களென்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள் (அப். 15:1). இந்த உபதேசம் பவுலும் பர்னபாவும் போதித்து வந்த சுவிசேஷ சாஸ்திரபோங்குக்கு முற்றும் எதிரிடையானதால் சபையில் பிரிவினைகள் உண்டாகி அதின் பலம் குன்றிப்போகாதபடிக்கு அப்படிப் போதிக்க வந்தவர்களை எதிர்க்க நேரிட்டது. கிறிஸ்துவின் பேரைச் சொல்லிக்கொண்டு சபைகளில் நுழைந்து பிரசங்கிக்க விரும்புகிறவர்களையெல்லாம் நம்பலாகாது. அவர்கள் பாலோடு வச்சநாபியையும் கொடுக்கும் பாதகர்போல் சத்தியத்தோடு, அசத்தியத்தையும் கலந்து போதித்து விசுவாசிகளுடைய இருதயத்தைக் கெடுத்துப் போடுகிறது முண்டு. இந்த வீணான உபதேசத்தை நிராகரிக்கும்படி எருசலேமுக்கு ஒரு பயணம் போய் வருவதே சரியென்று பரி.

பவுலும் பர்னபாவும் நினைத்து, சில சபையாரையும் சேர்த்துக் கொண்டு போனார்கள். அவர்கள் தங்கள் பயணத்தில் எதிர்ப் பட்ட பெனிக்கிய சமாரியா நாடுகளிலுள்ள கிறிஸ்தவர் களுக்கு புறச்சாதியார் மனந்திரும்பின செய்தியை அறி வித்து, சகோதரர் மனதைச் சந்தோஷப்படுத்தினர்கள். (அப். 15:3).

எருசலேமில் சேர்ந்தவுடனே அங்குள்ள சபையார் அவர்களை மலர்ந்த முகத்தோடும், மங்கள வாழ்த்துதல்க ளோடும் அங்கீகரித்தார்கள். அவர்களுக்கும் புறச்சாதியாருக் குள் உண்டான மனந்திரும்புதலின் விவரங்களைச் சொன் னார்கள்; அதைக் கேட்ட சில பரிசேயரான கிறிஸ்தவர்கள் எழுந்து, புறச்சாதியார் கிறிஸ்தவர்களாகிறது சந்தோஷம் தான். ஆனால் அவர்கள் விருத்தசேதனம் பண்ணுகிறதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி கற்பிக்கிறது அவசியம் என்று சொன்னார்கள். நாம் சொல் லிய வண்ணம், இது பவுலும் பர்னபாவும் போதித்த சுவி சேஷ ஞானத்தின் போங்காய் இராததால் அவர்கள் அந்த அபிப்பிராயத்தை ஆட்சேபிக்க நேரிட்டது. இவ்வித அபிப் பிராயமுடைய பலர் கூடி அந்தியோகியாவுக்கு சிலரை அனுப்பினார்கள் போலிருக்கிறது. பரி. பவுலும் பர்னபாவும் இதைப்பற்றி சரியான ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டு மென்று எருசலேமுக்கு வந்தார்கள். இதையிட்டு வெகு பேச்சு நடந்ததால் அப்போஸ்தலரும், மூப்பரும், ஆலோசனை பண்ணும்படிக் கூடினார்கள். கூட்டத்தில் மிகுந்த தர்க்க முண்டாயிற்று. பரி. பேதுரு பவுலின் அபிப் பிராயத்துக்கு ஒத்துப்பேசினார். கடைசியாக அந்தச் சங்கத் தின் தலைவராய் இருந்ததாக நாம் நினைக்கக்கூடிய யாக்கோபு என்பவர் பொதுவான சில தீர்மானங்களைச் சொன்னார். அதை கூட்டத்தார் எல்லாரும் அங்கீகரித்துச் சபைகளில் பிரசித்தமாக்கத் தீர்மானித்தார்கள். அத்தீர்மானங்களாவன:

1. புறச்சாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களை கலகம் பண்ணலாகாது.

2. புறச்சாதியாரான கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கலாகாது.

3. வேசித்தனத்துக்கு அவர்கள் இடம் பண்ணலாகாது.

4. நெருங்குண்டு செத்ததைச் சாப்பிடலாகாது.

5. இரத்தத்தைப் புசிக்கலாகாது (அப். 15:19, 20).

என்பவைகளே. இவைகளில் முதலாம் தீர்மானம் யூதராயிருந்து கிறிஸ்தவர்களானவர்களையும், மற்றவர்கள் புறஜாதியாயிருந்த கிறிஸ்தவர்களையும் கட்டுகிறதாயிருந்தது. இதுதான் திருச்சபையின் முதலாம் பொதுவான சங்கமென்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. இத்தீர்மானங்கள் ஒவ்வொன்றும் பரி. பவுலின் நோக்கத்துக்கு இசைவாகவே இருந்தது. ஆதலால் அவர் வெற்றியடைந்தவர்போல் மனம் களித்து எருசலேமிலிருந்து எழுந்து அந்தியோகியாவுக்கு வந்து சேர்ந்தார்(அப். 15:30-35).

அவ்விடத்தில் சிலகாலம் இருந்த பின்பு அவர் மறுபடியும் தேசம் சுற்றி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆவல் மூண்டு ஒருநாள் திடீரென்று பர்னபாவை நோக்கி: 'நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலும் உள்ள சகோதரர் எப்படி இருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும்' என்று கூப்பிட்டார். பர்னபாவும் அதற்கு இணங்கினார்; ஆனால் தங்கள் கூடவரும்படியாரைக் கூட்டிக்கொண்டு போகலாம் என்பதைப்பற்றிய விஷயத்தில் இருவருடைய நோக்கமும் வித்தியாசப்பட்டது பர்னபா தன் இனத்தானாகிய மாற்குவைக் கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று சொன்னார்; பிரயாண கஷ்டத்தையிட்டோ வேறு முகாந்தரத்தையிட்டோ முன் பிரிந்து விலகிப்போன மாற்கு, பவுல் பர்னபா மூலமாயுண்டான பலனின் திரட்சியைக் கவனித்து தானும் கூடிப் போக மறுபடியும் ஆசைப்பட்டான் போலிருக்கிறது. பவுல் என்பவரோ முன் மாட்டேன் என்று போனவன் பரிசேதம் வேண்டாமென்று தடுத்தார். இதையிட்டு இருவருக்கும் மனஸ்தாபமுண்டாயிற்று; அதினால் இருவரும் என்றைக்கும் பிரிந்தே வேலை செய்து வந்தார்கள் என்று அறிகிறோம். இந்தப் பிரிவினையில் யாரைக் குற்றப்படுத்துவது நியாயமோ தெரியுதில்லை. என்றாலும் இவர்கள் பிரிவினை சரீர சம்பந்தமான ஒவ்வாமையாய் இருந்ததேயன்றி ஆழ்ந்த

பகையாயிருக்கவில்லை. எப்படியெனில் பரி. பவுல் பர்ன பாவை தம்முடைய நிருபங்களில் கனமாகவே பேசி வருகிறார் (1 கொரி. 9:6). அதுவின்றி பரி. பவுல் சிறை யிலிருக்கையில் மாற்குவைக் கூட்டி வரவேண்டுமென்றும் (2 தீமோ. 4:11). அவனை ஒரு 'பிரயோசனமுள்ளவன்' என்றும் புகழ்ந்து சொல்லுகிறார் (பிலே. 24). இந்தக் குறிப்புகளால் அவர்களுக்குள் உண்டான மனமாச்சரியம் சீக்கிரம் மாறிப்போயிற்றென்று விளங்குகிறது.

பவுலும் பர்னபாவும் கூடி சபைகளை முன் ஸ்தாபித்தார் களை; அவர்களுக்குள் இந்த அற்பமனஸ்தாபமுண்டான பின்பு அவர்கள் தங்கள் வேலைகளையும் எல்கைகளையும் பிரித்துக்கொண்டு இரண்டு பவுஞ்சாகப் புறப்பட்டார்கள். பர்னபாவோடே மாற்கு போனார். பவுல் தமது மனதுக்கும் வேலைக்கும் ஏற்ற துணையாக சீலா அல்லது சிலுவானுவைக் கூட்டிக்கொண்டார். இந்த சீலா சாமானியவராய் இராமல் அப்போஸ்தலர் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவரும், அக்காலத்து கிறிஸ்தவர்களின் ஒரு விசேஷித்தவருமாயிருந் தார் (அப். 15:22). இனி நாம் பர்னபாவின் வரலாறுகளைப் பின் தொடர்ந்து சொல்லவேண்டியதில்லை. நாம் பவுலின் பிறகாலே சென்று அவருடைய பயண வரலாறுகளைக் கூறு வோம்.

இரண்டாம் பிரயாணம்

இது முந்தினதிலும் விசேஷமானதும் நீளமானது மாயிருந்தது. இந்தப் பிரயாணத்தில் அவர் ஐந்து வருஷம் பின்னிட்டார் என்று தோன்றுகிறது (கி. பி. 50-54). இதின் வரலாறுகளை பரி. லூக்கா நுட்பமாய்ச் சொல்லு கிறதில்லை. முந்தினது பவுலின் ஜனன தேசத்தைச் சுற்றிலு முள்ள நாடுகளுக்குள் மாத்திரமிருந்தது; இதுவோ மோசங் களுக்கும் அபாயங்களுக்குள்ளுமாகும் நெடும் பிரயாண மாயிருந்தது. மனுஷருக்குள் இதுமட்டும் அவ்வளவு நெடும் பிரயாணம் செய்தவர்களில்லை என்றே சொல்லவேண்டியது. உள்ளபடிச் சொன்னால் அலெக்சாந்தர் தன் படையோடு ஆசியாவின் மத்தியில் சென்றதற்கும், சீசர் என்பவன்

பிரித்தானியாவுக்குச் செய்த பயணத்துக்கும், கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டுபிடிக்கப் போனதற்கும் மிஞ்சின பிரயாணமாகவே இருந்தது. பவுல் புறப்பட்ட சமயத்தில் இவ்வளவு பெரியதும், பிரயோசனமானதுமான பயணத்தைச்செய்து முடிக்கவேண்டுமென்று நோக்கம் கொண்டிருக்கவில்லை. அவர் தமது பயணத்தில் முதலாவது தம்மாலும் பர்னபாவாலும் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை சந்தித்து ஸ்திரப்படுத்தும்போதே ஆவி பலப்பட்டது. தேவாவியானவர் அவர் நினையாத இடங்களுக்கெல்லாம் அவரை நடத்தி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப்பண்ணினார். 'நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்; அதிகமாய் அடிபட்டவன்; யூதரால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; ஒருதரம் கல்லெறியுண்டேன்; மூன்று தரம் கப்பல் சேதத்திலிருந்தேன்; கடலிலே ஒரு இராப்பகல் முழுதும் போக்கினேன்; அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும்; கள்ளரால் வந்த மோசங்களிலும்; என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும்; அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும்; பட்டணங்களிலுண்டான மோசங்களிலும்; வனாந்தரங்களிலுண்டான மோசங்களிலும்; சமுத்திரத்திலுண்டான மோசங்களிலும்; கள்ளச் சகோதரராலுண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும் வருத்தத்திலும்; அநேக முறை கண் விழிப்பிலும்; பசியிலும் தாகத்திலும்; அநேக முறை உபவாசங்களிலும் குளிரிலும் நிருவாணத்திலுமிருந்தேன்' (2 கொரி. 11:23-27). என்று சொல்லிய பரி. பவுலின் மிச்சமான பாடுகள் இந்தப் பிரயாணத்தில் உண்டாயின. இந்தக் குறிப்புகளில் அவர் ஐந்து தரம் யூதரால் அடிபட்டதைப்பற்றி லூக்கா ஒன்றும் சொல்லுகிறதேயில்லை; ரோமரால் மூன்றுதரம் அடிபட்டதில் ஒரு தடவை பட்ட அடி மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது (அப். 16:22, 23). அவர் ஒரு தரம் கல்லெறியுண்டது எழுதபட்டிருந்தாலும், மூன்று தரம் கப்பல் சேதத்திலிருந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறதில்லை; ஏனெனில் நடபடி ஆகமத்தின் கடைசியில் நடப்பாய் காட்டப்பட்டிருக்கும் கப்பல் பயணம் இதோடு சேர்ந்ததல்ல. பவுல் முதல் முதல் ஐரோப்பாவுக்குச் சுவிசேஷத்

தைக்கொண்டு போனதும், பித்தோன் ஆவி துரத்தப்பட்ட தும், லீதியாள் குணப்பட்டதும், சிறைச்சாலைக்காரன் மனம் திரும்பினதும், அத்தேனே மேடையில் நின்று அஞ்ஞான நத்தை கண்டித்ததும்; கிறிஸ்து மார்க்கத்தினிமித்தம் அதி பதிக்குமுன் கைகட்டி நின்றதுமான சகல விசேஷங்களும் இந்தப் பிரயாணத்தை அடுத்ததாகவே இருக்கிறது. கடைசி யாக அவர் மிகுதியான இடங்களில் கிறிஸ்துவின் சுவிசே ஷத்தைப் பிரசங்கித்து, சபைகளை ஸ்தாபித்து இளைப் படைந்தவராய் தாம் புறப்பட்ட அந்தியோகியா வந்து சேர்ந் தார். இந்தப் பயணத்தில் அவர் லிஸ்திராவிலிருந்து, மாற்கு வுக்குப் பதிலாக தீமோத்தேயுவைக் கூட்டிக்கொண்டபோதி லும், சில இடங்களில் அவர் தனிமையாயும், மற்ற இரு வரும் தனிமையாயுமிருந்து சுவிசேஷ வேலையை நடத்தி இருக்கிறார்கள். இதினடியில் இந்த இரண்டாம் பிரயாணத் தைக் குறிப்பித்து காட்டிவிட்டால் அதின் விபரம் பொதுப் பட விளங்கும் என்று நம்புகிறோம்.

ஆண்டு.	இடம்.	வரலாறு.	வேதம்.
கி. பி. 50.	அந்தியோகியாவிலிருந்து சீரியா சிலிசியா.	சபைகளை ஸ்திரப்படுத்தினார்; சங்கத்தின் தீர்ப்பைப் பிரசித்தப் படுத்தினார்	அப். 15:41. ,, 16:4,5.
,,	தெருபை லிஸ்திரா.	தீமோத்தேயுவை சேர்த்துக்கொண்டார்.	,, 16:1-3.
,, 51.	பிரிகியா கலாத்திரா.	வசனத்தைப் போதியாதபடி பரிசுத்தாவியால் தடையுண்டாயிற்று.	,, 16:6.
,,	மீசியா வழியாக துரோவக்.	மக்கெதோனியன் கூப்பிட்ட தரிசனம்	,, 16:7-10.

வரு.	இடம்.	வரலாறு.	வேதம்.
கி.பி. 51.	சமுத்திரோகா, நியாப்போலி வழியாக பிலிப்பு பட்டணம்.	லீதியாள் குணப்பட்டாள்; பீத்தோன் ஆவி துரத்தண்டது; வஸ்திரம் கிழிக்கப்பட்டது; அடி விழுந்தது; காவலில் போடப்பட்டார்; குட்டையில் இடந்தார்; சிறைச்சாலையின் கதவு திறந்தது; சிறைச்சாலைக்காரன் குணப்பட்டான்; தாழுக விடுதலை இடைத்தது.	அப். 16:11-40.
,, 51.	அம்பிப் போலி, அப்பலோனி வழியாக தெசலோனிக்கே.	மூன்று ஓய்வுநாளாக ஜெபாலயத்தில் பிரசங்கம்; பட்டணத்தார் அமளி செய்தார்கள்; ஜாமீன் மேல் விடுதலை; கலாத்தியர் நிருபம் எழுதப்பட்டது.	,, 17:1-9.
,,	பெரோயா.	பிரசங்கம்; அநேகர் இரட்சித்தவர்கள் ஆனார்கள்; தெசலோனிக்கியர் வந்து கலகம் செய்தார்கள்; சீலாவையும் தீமோத்தேயுவையும் நிறுத்திவிட்டு தனியாய்ப் புறப்பட்டார்.	,, 17:10-14.
,,	அத்தேனே.	ஞானிகளோடு வாக்கு வாதம்; மார்ஸ் மேடைப் பிரசங்கம்; சிலர் விசுவாசித்தார்கள்.	,, 17:16-34.

ஆண்டு.	இடம்.	வரலாறு.	வேதம்.
கி.பி. 52.	கொரிந்து.	கூடாரம் தைத்து ஜீவனம் செய்தார்; ஓய்வுநாட்களில் பிரசங்கம் செய்தார்; சீலாவும் தீமோத்தேயும் கூடினார்கள்; யூதர் விரோதித்தார்கள்; தேவதரிசனத்தால் தைரியமடைந்தார்; பலர் கிறிஸ்தவர்களானார்கள்; 18 மாசம் தங்கினார்; கல்லியோனுக்கு முன் கைதியானார்; விடுதலையானார்; தெசலோனிக்கியருக்கு இரண்டு நிருபம் எழுதினார்.	அப். 18:1-17.
,, 53.	கிரேத்தை, நிக்கொபோலிஸ்.	தீத்து நிருபத்தை எழுதினார்.	தீத்து நிருபம்.
,, 54.	கெங்கிரேயா.	பிராத்தனையை நிறைவேற்றினார்.	அப். 18:18.
,, ,,	எபேசு.	யூதரோடு சம்பாஷணை.	,, 18:19.
,,	செசாரியா.	சபை சந்திப்பு.	
,,	எருசலேம்.	சபை சந்திப்பு.	,, 18:22.
,,	அந்தியோகியா.	பயணத்தின் முடிவு.	

இவ்வண்ணமாய் அவர் சின்னாசியாவின் தென்கிழக்கு மூலையிலிருந்த அந்தியோகியாவிலிருந்தும் வடமேற்கிலிருந்தும் பயணம் பண்ணினதும் போதாதென்று ஐரோப்பாவின் எல்லைகளிலும் சென்று திரும்பி அக்காலத்திலிருந்த விசேஷித்த நகரங்களிலும் சுவிசேஷ விருதை ஏற்றி, இரட்சண்ய ஞானமானது உலக ஞானத்தைக் கவிழ்த்துப்போடத்

தக்க வல்லமையுள்ளதென்று திருஷ்டாந்தப்படுத்தினர். அவர் அந்தியோகியாவில் அதிகக் காலம் தங்கி சுகத்தை அடையவுமில்லை; கூடிய சீக்கிரத்தில் புறப்பட்டுப்போனர்.

மூன்றும் பிரயாணம்

அவர் முதலாவது பிரயாணத்தில் சின்னசியாவின் திசைகளிலும், இரண்டாம் பிரயாணத்தில் கிரேக்கை தேசத்திலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபைகளை ஸ்தாபித்தார்; ஆனல் இந்த இரண்டுக்கும் மத்தியிலிருந்த மேல்பக்கத்து சின்னசியாவில் அந்தகாரம் நீங்கி சுவிசேஷ ஒளி வீசியாதொரு பிரயத்தனமும் செய்யப்படவில்லை; ஆதலால் அதையே முதலாவது சந்திக்கவேண்டுமென்று நிர்மானித்தார். அந்தத் திசையில்தான் சின்னசியாவின் பிரதான நகரங்களும் குடிஜனங்களின் திரளுமிருந்தது. அங்கே சுவிசேஷம் பிரபல்லியமாகும்போது ஒரே சங்கிலித் தொடர்கள்போல் சபைகளுண்டாகுமென்றும், மத்தியில் அஞ்ஞான இருள் தங்கியிராதென்றும் அறிந்துகொண்டார்.

அவர் தமது பயணத்தின் ஆரம்பத்தில் சின்னசியா, கிரேகை என்னும் தேசங்களில் முந்தி ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை பார்வையிட்டு ஸ்திரப்படுத்தினர். இதில் அவா எபேசுவில் நடப்பித்த வேலையைப்பற்றி மாத்திரம் விவரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பயணத்தில் அவர் வழக்கம் போல அந்தியோகியாவுக்குத் திரும்பாமல் எருசலேமில் கைதியாகி, சிறைச்சாலையின் இம்சைகளையும் அநுபவித்தார். இந்தப் பிரயாணத்தில் அவர் சந்தித்த இடங்களையும் அங்கே நடந்த விசேஷ சம்பவங்களையும் பின்வரும் அட்டவணைக் குறிப்புகளால் அறியலாம்.

வரு.	இடம்.	விசேஷம்.	வேதம்.
கி.பி. 55.	அந்தியோகியாவிலிருந்து கலாத்தியா பிரிகியா.	சபைகளைச் சந்தித்தார்; சீஷரைத் திடப்படுத்தினர்.	அப். 18:23.
,, 56.	எபேசு	யூதரோடு மார்க்க சம்வாதம் செய்தார்; சபைகளைத் திடப்படுத்தினர்; இரண்டு வருஷம் சஞ்சரித்தார்; அற்புதங்கள் செய்தார்; பில்லி சூனிய சாஸ்திரங்கள் சுட்டெரிக்கப் பட்டன; சபை பலமாய் ஸ்தாபிக்கப்பட்டது;	,, 19. அதி.
		கொரிந்தியருக்கு முதல் நிருபத்தை எழுதினர்; தேமேத்திரியுவால் கலகமுண்டாயிற்று.	,, 20:1.
,, 58.	மக்கெதோனியா, ஆகாயா.	தீமோத்தேயு முதல் நிருபத்தை எழுதினர்; சபைகளை ஸ்திரப்படுத்தினர்; மூன்று மாதம் சஞ்சரித்தார்; கொரிந்தியருக்கு 2-ம் நிருபத்தை எழுதினர்.	1 தீமோத்தேயு. அப். 20:3.
	மக்கெதோனியா.	ஆகாயாவிலிருந்து மக்கெதோனியாவுக்குப் பயணமாயிருக்கையில் ரோமர் நிருபத்தை எழுதினர்.	
	துரோவாஸ்.	ஐத்திக்கை உயிரோடெழுப்பினர்.	,, 20:6–12.
	ஆசோஸ், மித்திலேனே.	கப்பல் பயணம்.	,, 20:13, 14.

வரு.	இடம்.	விசேஷம்.	வேதம்.
கி.பி. 58.	கியுதீவு, சாமுத்தீவு, தரோக்கில்லியோன்.	கப்பல் பயணம்.	அப். 20:15, 16.
	மிலேத்து.	எபேசு சபைகளின் மூப்பருக்குப் போதனை; கண்ணீரோடு வழியனுப்புதல்.	,, 20:17–38.
	கோஸ்தீவு, ரோதுதீவு, பத்தாராதுறை.	கப்பல் பயணம்; கரை இறங்குதல்.	,, 21:1.
	சிப்புருதீவு வழியாக தீருபட்டணம்.	பத்தாராவில் பெனிக்கியகப்பலில் மறுபடியும் ஏறி தீருவைச் சேர்ந்தார்; ஏழுநாள் சஞ்சரித்தார்; சபைகளைச் சந்தித்து ஸ்திரப்படுத்தினார்; பவுல் எருசலேமுக்குப் போகக்கூடாதென்று ஆவியானவரால் தடைசெய்யப்பட்டார்; கடலோரத்தில் ஜெபம் செய்தார்.	,, 21:2, 3. ,, 21:4, 5.
	பித்தோலோமாய்.	தீருவிலிருந்து கப்பல் பிரயாணம்; முடிவு.	,, 21:7.
	செசாரியா.	பிலிப்பு சுவிசேஷகன் வீட்டில் தங்கினார்; பவுலுக்கு எருசலேமிலுண்டாகும் துன்பங்களை அகபு தீர்க்கதரிசன முரைத்தது.	,, 21:8–14.
	எருசலேம்.	யாக்கோபையும், மூப்பரையும் சந்தித்து; புறச்சாதிகளான சபையின் வரலாற்றை சொன்னார்.	,, 21:15–28.

ஆண்டு.	இடம்.	விசேஷம்.	வேதம்.
கி.பி. 58	எருசலேம்.	சுத்திகரிப்புச் செய்தல்; ஆசியாநாட்டு யூதர் கலகம் பண்ணினது; பவுல் கொலை செய்யப்படும்படித் தீர்மானிக்கப்பட்டது; பவுல் அடிபட்டது; இரண்டு சங்கிலியால் கட்டப்பட்டது; பவுல் பிரசங்கித்தார்; கலகம் அதிகப்பட்டது; அவர் சங்கத்தார்முன் விசாரிக்கப்பட்டார்; தேவதரிசனை அடைந்தார்.	அப். 21:27 23:30.
	அந்தப் பத்திரிவழியாக செசாரியா.	கைதியாக அனுப்பப்பட்டார். காவலிலிருந்தார்; பேலிக்ஸ் முன் விசாரணை செய்யப்பட்டார்; பெஸ்து வரும் வரையும் இரண்டு வருஷம் காவலில் இருந்தார்.	,, 24. அதி.
,, 60.	செசாரியா.	பெஸ்துதுரையால் விசாரிக்கப்பட்டார்; கச்சேரியில் பவுல் பிரசங்கித்தார்; அகிரிப்பா கொஞ்சம் குறைய கிறிஸ்தவன் ஆனான்; பவுல் ராயருக்கு அபயமிட்டதால் ரோமைக்கு அனுப்பப்படத் தீர்மானிக்கப்பட்டது.	,, 25,26. அதி.

இத்தோடு பவுலின் மூன்றும் சுவிசேஷ பிரயாணத்தை முடிக்கவேண்டியதாயிருக்கிறது. இவர் இதின்பின் செய்த பயணம் கைதிப் பயணமாயிருந்தாலும், அதின்மூலமாய் அநேக சுவிசேஷ பலனுண்டானதால் அதை அவருடைய நாலாம் பயணமென்று சொன்னாலும் குற்றமில்லை. இதின் வரலாறுகள் அப். 27,28ஆம் அதிகாரங்களில் நுட்பமாய் காட்டப்பட்டிருக்கிறதால் இவ்விடத்தில் அந்தப் பயணத்திலுள்ள நுட்பங்களை எடுத்து எழுதுவது அவசியமில்லை. பொதுவாகச் சொன்னால் அவர் சிறைச்சாலை கைதியாயிருந்தாலும், அங்கும் சுவிசேஷ பிரசங்கியாகவே இருந்தார். அக்காலத்தில் அவர் கடும் சிறையிலிராமல் தனது வீட்டில் வாசம்பண்ணவும், வந்தவர்களோடு தாராளமாய் சம்பாஷிக்கவும் இடம்பெற்றார். அவருடைய கால் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தாலும் வாய் கட்டப்பட்டிருக்கவில்லை. இவர் ரோமையில் சிறையாயிருந்த காலத்தில்தான் எபேசியருக்கும், பிலிப்பியருக்கும், கொலோசெயருக்கும், பிலேமோனுக்கும், எபிரெயருக்கும் நிருபங்களை எழுதியனுப்பினார் (கி.பி. 61, 62). ரோமையிலும் அவர் இரண்டு வருஷம் கைதியாயிருந்தார். ஆகவே நாலு வருஷங்களாக அவர் கைதி நிலைமையிலிருந்து, சுயாதீன காலத்தில் கிறிஸ்துவுக்காக எவ்வளவு செய்தாரோ அதிலும் அதிகமாகவே ஊழியம் செய்துவந்தார். அப்போஸ்தலர்நடபடியில் அவருடைய சரித்திரத்தை முடிக்கிற பரி. லூக்கா 'பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் தேவனுடைய இராச்சியத்தைக்குறித்துப் பிரசங்கித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்' என்ற வாசகத்தோடு நிறுத்துகிறார்.

முடிவுரை

அப்போஸ்தலர்நடபடியைக்கொண்டு பரி. பவுலின் கடைசி முடிவு இன்னதென்று திட்டமாய்த் தெரியாதே போனாலும், பாரம்பரையின்மூலமாய் அவர் விடுதலையாகி

மறுபடியும் பல இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார் என்று தெரியவருகிறது. தீமோத்தேயுத்து என்னும் நிருபங்களாலும் அவர் விடுதலையான விஷயம் நிச்சயம் என்று ரூபகாரப்படுகிறது. அவர் விடுதலையானபின்பு முன் போல மறுபடியும் ஒருதரம் எபேசு, துரோவா, கிரேத்தை, கிரேக்கை முதலிய இடங்களுக்குப் போனதாகவும் சபைகளை ஸ்திரப்படுத்தினதாகவும், சபைகளை நடத்தும்படி ஆட்களை நியமித்ததாகவும் தெரியவருகிறது. அவர் ஸ்பானியா, இங்கிலாந்து என்னும் தேசங்களில் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று எழுதப்பட்டிருக்கும் குறிப்புகளு முண்டு அதின்பின்பு அவர் கடைசிவிசையாக எருசலேம், அந்தியோகியா, கொலோசே, பிலிப்பு, கொரிந்து, துரோவா, மிலேத்து முதலிய இடங்களைச் சந்தித்து ரோமையில் மறு படியும் ஒருதரம் சுயாதீனருயிருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி போனராம். அவ்விடத்தில் அக்காலத்தில் அரசுபுரிந்த நேரோ இராயனுலுண்டான துன்பத்தில் பிடி பட்டு அவ்விடத்தில் கடும் சிறையில் வைக்கப்பட்டு, குளிரை யும் கஷ்டத்தையும் அநுபவித்து இரத்தசாட்சியாக மாண் டார். அவரை மரித்தார் என்று சொல்லாமல் உபிரோடிருக் கிறார் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அவர் இக் காலத்தில் தம்முடைய நிருபங்களினுல் ஒவ்வொரு கிறிஸ்தவ னிடத்திலும் வந்து கிறிஸ்துமார்க்க ஆழ்ந்த ஞானங்களைப் போதித்துவருகிறார் என்று சொல்லலாம். பரிசுத்தத்தில் வளரவேண்டுமென்று விரும்புகிற கிறிஸ்தவனுக்கும், பக்தி ணியில் ஏறவேண்டுமென்று அவதிப்படுகிற பக்தனுக்கும், தேவனுக்கு உண்மையாய் உழைத்து காலம்போக்கவேண்டு மென்று ஆசிக்கும் தேவஊழியனுக்கும் பரி. பவுல் ஒரு மாதிரியாய் நின்று ஒவ்வொருநாளும் உதவிசெய்துவருகிறார் என்று உள்ளபடிச் சொல்லலாம். இனி அவருடைய குணங் களைப்பற்றிய சில குறிப்புகளைக் கவனித்து இவருடைய சரித்திரத்தை முடிப்போமாக.

பாவ மாம்ச சாயலுள்ள மனுஷன் ஆவிக்குரியவனுகும் போது அவனுடைய சரீரமும் ஆத்துமாவும் எவ்வளவாய் ஒத்திணங்கி நின்று தேவனை மகிமைப்படுத்தக்கூடும் என்

பதை நாம் பரி. பவுலின் விஷயத்திலும் நன்றாய் அறிந்து கொள்ளுகிறோம். அவர் பலவீன உடலுடையவராய் இருந்த போதிலும், அதில் ஆளுகை செய்த மாம்ச இச்சையானது அதிக பலமுள்ளதாய் இருந்ததால் அவர் அடிக்கடி பிரலாபிக்கவும் 'ஐயோ நிர்ப்பாக்கியமுள்ள மனுஷன் நான்' என்று புலம்பவும் நேரிட்டது; அதற்கு மாறாக மறுபிறப்பினாலுண்டான புதிய ஜீவனானது அந்த பலத்தை மேற்கொண்டு ஆவியை உன்னதத்துக்கு உயர்த்தும்படியான விசேஷ பலமுள்ளதாய் இருந்தது.

அவருக்குண்டாயிருந்த மாம்ச பலவீனத்தையும் அந்த மாம்சத்தில் அவர் நிறைவேற்றியிருக்கிற கஷ்டமான வேலைகளையும், சகித்திருக்கிற பலமான உபத்திரவங்களையும் கவனிக்கும்போது நாம் ஆச்சரியப்படவேண்டியதாய் இருக்கிறது. எக்காலத்திலும் எழும்பும் சுவிசேஷ பிரசங்கிகள் வெட்கப்படத்தக்கதாக பரி. பவுல் தமது வேலையை நிறைவேற்றிவந்திருக்கிறார் என்று பார்க்கிறோம். அதிலும் சிலரைப்போல ஒரே இடத்தில் ஒரே ஜனத்துக்குள் நெடுங்காலம் குடியிருந்து தமது காலத்தை சுவிசேஷ வேலையில் கழிப்பது அவருடைய மனதுக்கு ஒத்திருக்கவில்லை. புதிய தேசங்களையும், ஜனங்களையும் போய் சந்தித்து, ஒருவரும் பிரசங்கியாத இடங்களில்போய் வேலைசெய்து சபைகளை ஸ்தாபிப்பது அவருடைய வழக்கமாயிருந்தது. இப்படிப்பட்ட கருத்துடைய குருக்களைக் கண்டுபிடிப்பது இக்காலத்தில் அரிதாயிருக்கிறது.

பரி. பவுல் எவ்விடத்துக்குப்போனாலும் ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளத்தக்க வல்லமையுடையவராய் இருந்தார் என்று பார்க்கிறோம். இன்ன தேசத்திலும், இன்ன ஜாதியாருக்குள்ளும் அவருடைய காரியம் செல்லாது என்று சொல்ல இடமிருக்கவில்லை. இதை ஒரு அருள் என்று சொல்லவேண்டியதிருந்தாலும், அப்படிப்பட்ட சாயலும், தத்துவமும், குணமும், சொல்வளமும் அவருக்கு இயல்பாகவே இருந்தது என்று சொல்லலாம். அவர் ஒரு சமயம் இராஜ சமுகத்துக்கும், மறுசமயம் அடிமைகள் கூட்டத்துக்கும், இன்னும் சற்றுநேரமானபின் போர்ச்சேவ

கர் நடுவிலும் நின்று அவரவருக்கேற்றாற்போல பிரசங்கித்து உணர்த்தக்கூடியவராய் இருந்தார். அவர் காலையில் யூதர் நடுவில் ஒரு ரபிப்போங்காகவும், மத்தியானத்தில் லோக ஞானிகள் நடுவில் ஒரு சாஸ்திர சிரோமணிபோலவும், அந்தி நேரத்தில் மிலேச்சர் கூட்டத்தில் தேவபராமரிப்பை உணர்த்தும் சாதாரண மனுஷன்போலவும் விளங்கியிருக்கிறார்.

கிறிஸ்தவ சபைகளில் அவரைப்பற்றியுண்டான மதிப்புக்கும் ஒரு கணக்கில்லை. அவர்கள் அவரை தேவதூதனைப் போலவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்போலும் மதித்தார்கள். அவருக்காக தங்களுடைய கண்களைப் பிடுங்கிக் கொடுக்கவும் அவர்களுக்கு ஆசையிருந்தது (கலா. 4:14,15). அவரை தங்கள் நடுவில் அதிகக்காலம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பல சபைகள் போட்டிக்கம் பண்ணினதுமுண்டு. அவர் ஒரு சபைக்கு வருவேன் என்று சொல்லியனுப்பியும் வராதிருந்தால், அதையிட்டு அவர்களுக்கு எரிச்சலும் மனவருத்தமும் உண்டாயிற்று. அவர் ஒரு சபையைவிட்டு வேறு இடத்துக்குப் போகும்போது, கழுத்தை கட்டுகிறதும், அழுகிறதும், முத்தமிடுகிறதும், அங்கலாய்க்கிறதுமான துக்கம் சபையாரெல்லாருக்கும் இருந்தது. அவர் ஏவின வேலையை நிறைவேற்றும்படி எப்போதும் பல வாலிபர் காத்திருந்தார்கள். இவ்வளவு சொற்சக்திக்கும் ஏதோ ஒரு அந்தரங்க சத்து அவருடைய தேகத்துவத்திலிருந்தது என்கலாம். இக்காலத்தில் உள்ள பல குருக்கள் கடுமுடுக்கினாலும், பணப்பையினாலும், அதிகாரப் போங்கினாலும் சபைகளை அரட்டி தங்கள் சொல்சக்தியை அடைந்துவருகிறார்கள் என்று துக்கத்தோடு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. இவர்கள் தங்களுடைய சொற்சக்தியை பரி. பவுலின் சொற்சக்திக்கு இணையிட்டு தங்களைத் தேற்றிக்கொள்ள இடம் இல்லை. பரி. பவுலோ கிறிஸ்து சபையை நேசித்து அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த நேசத்துக்கு இணையான நேசமாய் சபைகளை நடத்திவந்ததால் இவ்வளவு மதிப்பு அவருக்குக் கிடைத்தது.

பரி. பவுல் 'எவரும் வியந்துகொள்ளத்தக்கதாக தன்னியத்தை விரும்பாது நடந்துவந்தார். இதைவிட மேலான

மனுஷ லட்சணம் இல்லை என்று சொல்லவேண்டியது. இந்த லட்சணத்தை விருத்திபண்ணி தங்கள் ஜீவகாலத்தைக் கழிக்கும் கிறிஸ்தவ குரு சகல மதஸ்தராலும் நன்கு மதிக்கப்படுவான் என்பதற்கு ஐயமில்லை.

இந்த எல்லாக் குணங்களோடே வேறு இரண்டு சிறந்த குணங்களும் அவருக்கிருந்தது. அதிலொன்று, தான் தேவனுல் ஏற்படுத்தப்பட்ட சுவிசேஷ பிரசங்கி என்ற உணர்ச்சிதான். அநேக ஊழியக்காரர் தங்களை தேவனுல் அனுப்பப்பட்டவர்களைப்போல நினையாமல் தன் ஜீவனத்துக்கென்று இந்த வேலையை எடுத்துக் காலம் கழிக்கிறவர்களைப்போல் எண்ணிவருகிறார்கள். கடைசிமட்டும் அவர்களுடைய வேலை கூலிவேலைபோல் பல குறைவும் பழுதுமுள்ளதாகவே இருக்கிறது. அதினாலேதான் அவர்கள் சுகத்தை விரும்பி, சங்கடங்களை விலக்கி, உபத்திரவங்களை வேறு விசேஷ பிரயத்தனங்களால் மேற்கொண்டு வருகிறார்கள். இவர்கள் கூலிக்கு மாரடிக்கும் ஆட்களேயன்றி வேறென்ன? பரி. பவுலோ நான் 'ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன், என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்' என்று சொல்லிக்கொண்டு தமது ஜீவகாலத்தை முடித்தவராயிருந்தார். நியாயத்தீர்ப்புநாளும், ஜீவகிரீடம் கிடைப்பதும் எப்போதும் அவருடைய தியானத்திலிருந்ததால், அந்த நாளில் தான் ஏமாந்துபோகாமல் எப்படியும் கிரீடத்தை வசப்படுத்தவேண்டுமென்று ஆவல் மூண்டு தமது சுவிசேஷ ஊழியத்தை நடத்திவந்தார்.

வேறொரு சிறந்த குணம் கிறிஸ்துவின்மேல் அவருக்கு இருந்த அன்புதான். கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறதென்று சொல்லிக்கொண்டே வேலைசெய்துவந்தார். கிறிஸ்துவின் அன்பின் ஆழத்தையும், அகலத்தையும், உயரத்தையும் பரி. பவுலைப்போல மனுமக்களில் ஆராய்ந்தறிந்தவர்கள் இல்லையென்று சொல்லவேண்டியது. அந்த நேசத்தால் தம்மை கிறிஸ்துவின் அடியான் என்று சந்தோஷமாய்ச்

சொல்லிவந்தார். தன்னை கிறிஸ்துவின் பதிலாள் என்று உணர்ந்து, 'கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்' என்றும் (கலா. 6:17). 'கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்' என்றும் (கொலோ. 1:24) சொல்லியிருக்கிறார். இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவ குருவும் பின்பற்றவேண்டிய ஜீவனத்தின் மாதிரியாயிருக்கிறது. பரி. பவுலின் ஜீவியத்தின் வண்ணமாய் தன் ஜீவியத்தைத் திருத்திக்கொண்டு தேவ ஊழியத்தை நடப்பித்துவருகிற ஒவ்வொரு போதகனும், கிறிஸ்தவனும் தன் மரணநாளில் 'நான் என் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது; நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அதை எனக்குத் தந்தருளுவார்' என்று சொல்லி தன் கடைசி மூச்சைவிட்டு மறுமைக்குள் பிரவேசிப்பான்.

கொர்நேலியு

கிறிஸ்துமார்க்கமானது, சகல ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும் பொதுவான தெய்வீக மார்க்கமாய் இருக்கிறது. இந்தச் சத்தியம் அதின் ஆரம்பத்தில், அதைச் சேர்ந்திருந்த எல்லாராலும் அங்கிகரிக்கப்படவில்லை. கிறிஸ்துவின் அவதாரகாலத்துக்குமுன், யூத மார்க்கத்துக்குள், பரிசேயர், சதுசேயர், எசேனர் முதலிய பிரிவுகள் உண்டாயின. அவரவர் ஒரே மார்க்கத்துக்குள் இருந்தபோதிலும், வெவ்வேறு கோட்பாடுகளை அநுசரித்தும், ஒரு பட்சத்தார் மறுபட்சத்தாரைப் பகைத்தும் காலங்கழித்து வந்தார்கள். கிறிஸ்து மார்க்கம் முதலாவது யூத ஜாதியைச் சேர்ந்தவர்களால் அநுசரிக்கப்பட்டு வந்ததால் இதுவும் முந்தினவைகளைப் போலொத்த ஒரு யூத சபைப் பிரிவேயன்றி வேறல்லவென்று பலரும் தப்பாய் எண்ணி வந்தார்கள். அந்த எண்ணம் சீக்கிரத்தில் மாறிப்போயிற்றென்பதைப் பின்வரும் சரித்திரம் நமக்கு உணர்த்துகிறதாய் இருக்கிறது.

யூத ஜாதியல்லாத மற்றெல்லாரும் புறச்சாதியார் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். இவர்கள் எல்லாரும் பொதுவாக விக்கிரகாராதனைக்காரராகவே இருந்தார்கள். கிறிஸ்து மார்க்க ஆரம்ப காலத்தில், அதில் சேர்ந்திருந்தவர்களுடைய பரிசுத்த நடக்கையும், அன்பும், அதின் தலைவராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், உயிர்த்தெழுதலையும் பற்றிய சத்தியமும் அநேகர் அந்த மார்க்கத்தைப்பற்றிக் கவனிக்கவும் விசாரிக்கவும் ஏவப்பட்டதென்று சொல்லலாம். அப்படிப்பட்டவர்களில் கொர்நேலியு என்பவர் ஒருவராயிருந்தார். ரோமாபுரியில் இவருடைய பேரால் அழைக்கப்பட்டு வந்த ஒரு பேர்பெற்ற பிரபுக் குடும்பமிருந்தது. இவர் அந்த உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் இருக்கலாம். ஆதி கிறிஸ்து சபையின் பிராணப்பகைஞனாகிய யூலி

யான், கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்த பிரபுக்களில் இவரையும் ஒருவர் என்று குறிப்பித்திருக்கிறான்.

யூதேயாவை ஆளும்படி நியமிக்கப்பட்ட ரோமை ஆதிகாரி புரோக்கியுரேற்றர் (Procurator) என்று அழைக்கப்பட்டான். செசாரியா அவர்களுடைய அரசாட்சியின் தலைநகரமாயிருந்தது. இந்த அதிகாரிக்கு ஆறு பட்டாளங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அதில் ஐந்து பட்டாளங்கள் செசாரியாவிலே இருந்தன. கொர்நேலியு அதில் ஒன்றுக்குத் தலைவனாய் இருந்தார்.

மார்க்க விஷயத்திற்கடுத்த மாறுதல் இவருக்கு எந்தக் காலத்திலுண்டாயிற்றென்று திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. இவர் யூதேயாவுக்கு வந்து, யூதருடைய தொழுதலையும், வேதாசாரத்தையும் கவனித்து, அது நலமென்று எண்ணி, தன் மட்டில் அதை அநுசரித்து வந்திருக்கலாம்; அல்லது அக்காலத்து வழக்கம்போல் யூத மார்க்கத்து புரோசிலோத்தாகி இருக்கலாம். எப்படியும் இவர் தேவபயமும், தருமசிந்தையும், ஜெப குணமுமுள்ளவராயிருந்தார். இவர் மாத்திரமல்ல, இவருடைய மனைவி மக்களும் அப்படிப்பட்டவர்களாகவே இருந்தார்கள். 'அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்' என்ற வாசகமானது (அப். 10:2) அவருடைய குடும்பசகிதமான சன்மார்க்க அழகின் சாயலை உணர்த்தும் படம் போலிருக்கின்றன.

இவரிடத்தில் விளங்கின தேவ பயம், தரும சிந்தை, ஜெபம் ஆகிய திரிகுணங்களும், எந்தெந்த மார்க்கத்தாருக்குள்ளுமிருக்கிற வண்ணமானதாகவே இருந்ததென்று சொல்ல ஏதுவில்லை. ஏனெனில் ஒவ்வொரு மார்க்கத்தாரும் தம் தம் மதாசாரப்படி இந்த முக்குணங்களையும் உடையவர்களாயிருக்கிறதைக் காண்கிறோம். ஆனால் இதினாலே அவர்கள் ஒவ்வொருவரும் மெய்தேவ பக்தரென்று தீர்மானிக்கவும் கூடாது; அவர்களால் வெளிப்படும் இந்த முக்குணங்களும் மெய்தேவனால் அங்கிகரிக்கப்படுகிறதென்று சொல்

லவும் கூடாது. கொர்நேலியுவினிடத்தில் விளங்கின அரிய குணங்கள் கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்த உயர்ந்த சுகுணங்களாயும், ஆவிக்குரிய மாதுதலாலுண்டான புதிய மனுஷனின் போங்காயும், மெய்தேவனால் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான சிறந்த குணங்களாயுமிருந்தன. இவர் விக்கிரகத் தொழும் பனுப் இருந்த காலத்தில் இவருக்குள் விக்கிரக பத்தியாலுண்டான ஒருவித பயமும், தரும குணமும், ஜெப சிந்தையுமிருந்தது என்பது மெய்யாயிருக்கலாம். ஆனால் அவை யொன்றும் தேவனால் அங்கிகரிக்கப்படவுமில்லை, அவைகளால் அவருக்கு யாதொருபலன் உண்டாகவுமில்லை. கிறிஸ்துமார்க்க சம்பந்தமில்லாத பக்தியும், ஜெபமும், தருமமும் ஒரு பிரயோசனத்தையும் தரமாட்டாது. இந்துமார்க்க போதனரும், மகமது, புத்தமார்க்க ஞானிகளும் தம் தம் மார்க்க ஆசாரப்படி இந்த முக்குணங்களை உடையவர்களைப் போல நமது கண் காட்சிக்கு வரும்போது, அவர்கள், அப்பமல்லாததற்காக பணத்தையும் திருப்தி செய்யாத பொருளுக்காக தங்கள் பிரயாசத்தையும் செலவழிக்கிறார்கள் என்று நாம் துக்கத்தோடு அறிக்கையிடவேண்டியதாயிருக்கிறது.

கொர்நேலியு என்பவர் மனம் திரும்பின விஷயமானது அவர் மட்டுக்கு, அல்லது அவருடைய குடும்ப மட்டுக்கு அடுத்த ஒரு வாழ்வு விஷயமாயிராமல் புறச்சாதியார் அனைவரையும் அடுத்த விஷயமாயிருக்கிறது. கிறிஸ்து மார்க்கத்தின் அதிகாரியாகிய இயேசுகிறிஸ்து பரமேறின சமயத்தில், தமது சீஷரை நோக்கி, நீங்கள் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டார் (மத். 28:19, 20). அந்த சீஷர் எல்லாரும் யூத ஜாதியாராய் இருந்தபடியால், அவர்களுடைய போங்கெல்லாம் தங்களுடைய ஜாதியைத் தழுவினதாகவே இருந்தது. ஆதலால் புறச்சாதியாரும் தேவனுடைய இராச்சியத்துக்கடுத்த வாழ்வுகளில் சம பங்காளிகளாய் இருக்கிறார்கள் என்பதை விசேஷித்த தரிசனங்கள் மூலமாயும் வெளிப்படுத்தலின் வழியாயும் தேவன் அறிவிக்கும்படிச் சித்தம் கொண்டார். இந்த வெளிப்படுத்துதலுக்குப்பின் நாளதுவரையும் கோடானு

கோடி புறச்சாதியார் இரட்சண்ய வாழ்வுகளுக்குட்பட்டிருக்கிறார்கள் என்பதை ஸ்தோத்திர கீதத்தோடு நாம் அறிக்கையிடவேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்துமார்க்க ஆரம்பத்தில் சில யூதர் பரதீசின் வாசலைத் தட்டி அதற்குள் பிரவேசித்த போதிலும் அதன்பின் வர வர, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரிலுமிருந்து வந்தது மும் ஒருவரும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்துக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்பாக நின்று, மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்து வருகிறார்கள் (வெளி. 7:9,10). இந்தத் திரளான கூட்டத்தின் முதற்பலன் கொர்நேலியுதான். புறச்சாதியாருக்குள் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறுனவர்களின் சர்வ சங்கமாகிய சபைக்கு தேவன் கொர்நேலியுவை தலைவராக்கியிருக்கிறார் என்று சொல்லலாம்.

முன் சொல்லிய வண்ணம் கொர்நேலியு தமக்குள் உண்டாயிருந்த பக்திமுறை தவறாது நடந்துவரும் காலத்தில் ஒருநாள் சாயரட்சை மூன்று மணிவேளையில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். 'அச்சமயத்தில் தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும் கொர்நேலியுவே என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய் தரிசனம் கண்டார். இந்த தரிசனை வரம் அவருக்குக் கிடைத்த விஷயமானது, அவருக்குள்ளிருந்த பக்தியின் யதார்த்தத்தையும், தருமத்தின் உண்மையையும், ஜெபத்தின் தத்துவத்தையும்உணர்த்துகிறது. வெளிவேஷ பக்தருக்குள் சிலதரம் இந்த மூன்று குணங்களையும் நாம் காண்கிறதாய் இருக்கலாம். அவர்கள் வெளிக்கு பக்தர்போலும் பரோபகாரர்போலும் ஜெபத்திலே காலங்கழிக்கிறவர்கள் போலும் மற்றவர்களிடம் பேசலாம், அல்லது வேஷம் காட்டலாம்; அதே சமயத்தில் அவர்களிடத்தில் மெய்பக்திக்குரிய அம்சமென்று இல்லாமலே இருக்கலாம். கொர்நேலியு அப்படிப்பட்டவராய் இருக்க

வில்லை. அவரிடத்திலிருந்ததும், மற்றவர்கள் கண்ணோக்கினதுமான சிறந்த குணங்களெல்லாம் நிலையான பக்தியின் குணங்களாயிருந்தன. ஆகவே தேவ அருளை விளக்கும் இந்த தேவதூத தரிசனை இவருக்குக் கிடைத்தது. இது சாமானியமானவர்களுக்கு கிடைக்கவும் ாட்டாது. இதற்குமுன் தேவதூத தரிசனையை அடைந்தாக நாம் அறிகிற சகரியா, கன்னிமரியம்மாள் யோசேப்பு முதலியவர்கள் பூரணபக்தர்களாகவே இருந்திருக்கிறார்கள். இந்த தரிசனம் நியான தரிசனமாயாவது மனோராச்சிய தரிசனமாயாவது இராமல் நிச்சய தரிசனமாய் இருந்தது. இது சொப்பனப்போங்காயல்ல விழிப்பாயிருக்கையில் திடீரென்று காணப்பட்ட சத்திய காட்சியாய் இருந்தது.

கொர்நேலியுவுக்குத் தரிசனமான தூதன் நின்றுகொண்டே அவனோடு பேசினார் (அப். 11:13). இதற்குமுன் எத்தனையோ தடவை கொர்நேலியு இதே இடத்தில் ஜெபத்தியானம் செய்துவந்த போதிலும் இப்படி அந்நிய ஆள் அங்கே வந்ததில்லை. இன்றையத்தினம் வந்த ஆள் போலொத்தவரை இதற்குமுன் அவர் பார்த்திருப்பதுமில்லை. ஆதலால் இந்த ஆள் யார் என்று நுட்பமாய் அறியும்படி உற்றுப் பார்த்து நின்றார். ஒரு வேளை அந்த தூதனைப் பார்க்கப் பார்க்க ஒளி வீசினதாக்கும் (எபி. 1:7). வந்த தூதன், 'கொர்நேலியுவே' என்று பேர் சொல்லிக் கூப்பிட்டார். இது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இப்படி நம்முடைய பேரையும், பிறந்த வீட்டையும் கண்டவர்போல் பேசுகிறது யார் என்று தமக்குள் விசாரித்து, இது தேவனேயன்றி வேறல்லவென்று தீர்மானித்து, 'பயந்து ஆண்டவரே என்ன?' என்று கேட்டார்.

அதற்கு தூதன் சொல்லுவார்: 'உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது, இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி, அவன் தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் என்கிற ஒருவனுடனே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்ய

வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்' என்று விளம்பினர்.

கிறிஸ்துமார்க்கத்தை விரோதிக்கிற பலர், தேவ தூதன் கொர்நெலியுவுடனே, 'உன் ஜெபங்களும் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது' என்ற வாசகத்தைக்கொண்டு, கிறிஸ்துமார்க்க இரட்சண்ய முறை மனுஷர் மோட்சமடைய அவசரமல்லவென்றும், தேவ தயவையும் பாவமன்னிப்பையும் பெற்றுக் கொள்ளும்படி அவரவர் செய்யும் ஜெபங்களும் தருமங்களும் போதுமானதென்றும் சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. இது பிசகு. இப்படிப்பட்டவர்கள் தேவ தூதன் சொன்ன வாசகத்தின் ஒரு பாகத்தைப் பிடித்துக்கொண்டு மற்றப் பாகத்தை மறந்துபோகிறார்கள் என்று சொல்லவேண்டியது. மேலும் அவனுடைய ஜெப தருமங்களால் பாவமன்னிப்பு உண்டாகிவிட்டதாக தூதன் சொல்லவுமில்லை. அதற்குரிய முறையை கொர்நேலியு இனிமேல் தான் படிக்கவேண்டியதிருந்ததால், அதைப் படிப்பிக்கும் ஆளையும், அந்த ஆளின் இருப்பிடத்துக்குரிய நிட்பமான வரலாறுகளையும் தேவ தூதன் சொல்லி உடனே பேதுரு அப்போஸ்தலனுக்கு ஆள் அனுப்புப்படிக் கட்டளையிடுகிறான்.

தன்னுடனே பேசின தேவதூதன் இன்ன வகுப்பைச் சேர்ந்தவனென்று கொர்நெலியுவுக்குத் தெரியவில்லை. அவன் புறச்சாதியானாய் இருந்தபடியால் தேவதூதரின் அணி வகுப்புகளைப் பற்றியாவது, அவர்களுக்கும் மனுஷருக்கும் காலா காலங்களில் நடந்து வந்த சம்பந்த சலாக்கியங்களைப் பற்றியாவது அறியாதவனாய் இருக்கலாம். இந்தத் தூதன் இரட்சிப்பைச் சுதந்திரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படி அனுப்பப்படும் பணிவிடையாவிகளிலொருவனாயாவது (எபி. 1:14). மனம் திரும்புகிற பாவியினிமித்தம் பரலோகத்தில் மகிழ்ந்து பாடும் தூதகணங்களில் ஒருவராயாவது இருக்கலாம் (லூக். 15:10). தூதர் வரலாறுகளை கொர்நேலியு ஆதியோடந்தமாய் அறிந்து தெளிந்தவராய் இருந்திருப்பாரானால், தன்னிடம் வந்தவர் யார், எவர் என்று கேட்டறிந்திருக்கலாம்.

தேவ தூதன் போனபின்பு, கொர்நேலியு தன் வீட்டு மனுஷரில் இரண்டு பேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவ பக்தியுள்ள ஒருவனையும் அழைத்து எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச்சொல்லி அவர்களை யோப்பாப்பட்டணத்துக்கு அனுப்பினான்.

பேதுரு அப்போஸ்தலனை அழைத்துவரும்படி போன இந்த மூன்று ஆட்களின் வரலாறுகள் கொர்நேலியுவின் பக்தி விநயமான ஜீவனத்தை நமக்கு அதிகத் துலாம்பரப்படுத்துகிறது. அவர்களில் இருவர் அவருடைய சொந்த வீட்டு வேலைக்காரராயும் ஒருவன் தன் பட்டாளத்தைச் சேர்ந்த ஒரு சேவகனுமாம். 'பூவால் நாரும் மணம்பெற்றது' என்ற முதுமொழிபோல கொர்நேலியுவால் அவனுடைய வீட்டாரும், வேலையாட்களும், பட்டாளமும் சன்மார்க்க வாசனையைப் பெற்றுக்கொண்டது என்று பார்க்கிறோம். இவ்வகையால் கொர்நேலியு பூர்வ ஆபிரகாமுக்கு இசைந்து வருகிறதால் இவரை புதிய ஏற்பாட்டு ஆபிரகாம் என்று அழைத்தாலும், புறச்சாதியாரின் ஆபிரகாம் என்று அழைத்தாலும் சரியாயிருக்குமல்லவா? வேலைக்காரரை வைத்து ஆளும் கிறிஸ்தவர்களே, உங்கள் காரியம் இத்த கொர்நேலியுவின் மாதிரி போலிருக்கிறதா? நீங்கள் உங்கள் வீட்டார், வேலைக்காரர், உங்களையடுக்கிறவர்கள் எல்லாருடைய ஆத்தும வாழ்வையும் சன்மார்க்க விருத்தியையும் கருதி ஜீவனம் செய்து வருகிறீர்களா? அநேக எஜமான்கள் தங்கள் வேலைக்காரருடைய ஆத்தும விஷயங்களைக் குறித்து எவ்வளவேனும் கவலைப்படுகிறதில்லை. அப்படிப்பட்டவர்கள், நமக்கு ஒருவனுடைய வேலைதான் காரியம், அவனுடைய நடக்கையைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. இந்த நியாயம் இவ்வுலகத்திற்குச் செல்லுமேயன்றி மறு உலகத்திற்குச் செல்லாது. அப்படிப்பட்ட எஜமான்கள் தேவனுக்கு முன்பாக அந்த ஆத்துமாக்களைக் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டியதாய் இருக்கிறது என்பது நிச்சயம்.

கொர்நேலியுவினுடைய ஆட்கள், தரிசனை கண்ட மறுநாள் புறப்பட்டு, யோப்பா பட்டணத்தில் பேதுரு தங்கி

யிருந்த வீட்டை நோக்கிப்போனார்கள். அந்த ஆட்கள் பேதுருவினிடம் வருகிற தினத்தில், பகல் பன்னிரண்டு மணிவரையும் அவருக்கு சாப்பாடு கிட்டவில்லை. பசியின் அகோரம் அவருக்குள் அதிகரித்தது; என்றாலும் போசனம் ஆக பின்னும் சற்றுநேரம் செல்லும் என்பதை அவர் அறிந்து, அந்த நேரத்தை ஜெபத்தியானத்தில் கழிப்போம் என்று பரவசம் கொண்டு மேல் வீட்டில் ஏறினார். வயிற்றுப் பசி அமர ஞானபோசன அறையைத் தேடினார். அங்கே எப்போதும் ஆயத்தமாயிருக்கும் தேவபோசனம் பரிசுத்த ஆவியால் அவருக்குப் படைக்கப்பட்டது. பரவச சிந்தைக்கும், ஜெப குணத்துக்கும் சரீரப்பசி ஒரு எதுதான். ஆவியை உயரப்பண்ண விரும்புகிறவன் மாம்சத்தை பசியாலும் கூடுமானால் உபவாசத்தாலும் விழத்தட்டவேண்டியதுதான். அந்தி சந்தி பிசகாமல் அறுசுவையுள்ள அமுதுண்டு, உடலைக் கொழுக்கவைத்தால் தேவ தியானங்கள் குறைவுபடுமென்பது நிசம்தான். மாம்சமும் அதின் இச்சைகளும் மடக்கப்படுகிறதற்குத் தக்கதாக உள்ளான மனுஷன் பலப்பட்டு பரலோகம் பறப்பான். இங்கே பேதுரு அப்போஸ்தலனுடைய ஜெப குணமின்னதென்றும் நமக்குத் தெரிய வருகிறது. 'பந்திக்கு முந்து படைக்குப் பிந்து' என்பது உலகத்தாருடைய பழமொழி. மறு லோகத்தை நாடின பேதுருவோ அதை மாற்றி 'படைக்கு முந்து பந்திக்குப் பிந்து' என்று தமது செய்கையால் உறுதிப்படுத்தினார். அவர் தமது பந்தி போசனத்தைக் கவனியாமல் தேவனோடு ஆவியிலே போராடும்படி ஒரு மேல் வீட்டில் ஏறினார்.

அன்றையத்தினம் அவருக்குண்டான போராட்டம் சாமானியமாயிருக்கவுமில்லை. ஏனெனில் அவருக்கு ஒரு ஞான திருஷ்டி கிடைத்தது. இந்தக் காட்சியின் வரலாறும், இதினால் உணர்த்தப்படுகிற சத்தியமும் விசேஷமாய் இந்தியாவுக்கும் அதிலும் அதிகமாய் தென் இந்தியாவுக்கும் நூதனபோதனைகளை உணர்த்துகிறதாய் இருக்கின்றன. யோப்பாப்பட்டணம் கடலோரத்திலிருந்தது; ஆகவே பேதுரு போய் செபம் செய்த மேல் அறையிலிருந்து பார்த்தால் மெதித்திரேனியா கடலிலுண்டான அலைதிரையின்

அலங்காரமும், அங்கே பாய்விரித்தோடின படவுகள், கப்பல்களின் மாட்சிமையும் நன்றாய்த் தெரியும். கடலிலிருந்துண்டான குளுங்காற்றுக்கும் ஒரு குறைவும் இருந்திருக்க மாட்டாது. மேல் மெத்தை ஏறின பேதுரு இந்த காட்சி மகிழ்ச்சியிலும், காற்று மகிழ்ச்சியிலும் தமது கவனத்தைச் செலுத்தாமல் தியான மகிழ்ச்சியிலே பின்னிட்டார்.

அவர் கண்ட காட்சியிலே 'வானம் திறந்திருக்கிறதாகவும், நாலு மூலைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒரு விதமான கூடு தன்னிடத்தில் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும் அதிலே பூமியிலுள்ள சகல விதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டார். அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்கு பேதுரு அப்படியல்ல ஆண்டவரே!—தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றார். அப்பொழுது தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாம் தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாம் தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது' (அப். 10:11-16).

இது மிகவும் கவனிக்கப்படத்தக்க ஒரு தரிசனைதான். இதின் மூலமாய் யூத ஜாதியாருக்குப் புறச் சாதியாரைப் பற்றியிருந்த தாழ்ந்த எண்ணம் கண்டிக்கப்படுகிறது. யூதர் புறச்சாதியாரை 'நாய்கள்' என்று அழைத்துவர, தேவனோ அவர்கள் நாய்கள் அல்ல, தம்முடைய பிள்ளைகள் என்று உறுதிப்படுத்திப் பேசுகிறார். புறச்சாதியாரும் தேவனுடைய இரக்கங்களுக்குப் பங்காளிகளாய் இருக்கிறார்கள் என்ற சத்தியத்தை ஆதிகால முதல் தேவன் தமது பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாய் முன்னறிவித்திருந்தபோதிலும் யூதர் அச்சத்தியத்தை அசட்டை செய்து புறச்சாதியாரைப் புறக்கணித்தே வந்தார்கள்.[1] கிறிஸ்து தமது அவதார காலத்தில்

[1] ஏசா. 42:1; 49:6,22; 60:2; 65:1, எரே. 16:19; ஓசி. 2:23; யோவே. 2:32; மீகா 4:1; செப். 3:9; மல். 1:11.

இதே சத்தியத்தை மறுபடியும் தமது வார்த்தையாலும், செய்கையாலும் உணர்த்தி வந்தார்.[1] அப்படி இருந்தபோதிலும் அவருடைய அப்போஸ்தலர் அதைசரியாய்உணர்ந்துகொள்ளவில்லை. விசேஷமாய் பேதுரு அப்போஸ்தலன் அவர்களைப் பற்றித் தமக்கு உள்ளுக்குள்ளிருந்த வெறுப்பை வெளிப்படுத்திவந்தார் (கலா. 2:11). இந்தப் பிசகை சீஷர் கூட்டத்திலிருந்து வேரோடே எடுத்துவிடவேண்டுமென்று மேலே சொல்லிய தரிசன காட்சி அவருக்குண்டாயிற்று. இந்தக் காட்சியால் கிறிஸ்துமார்க்க ஆசீர்வாதங்கள் எந்த தேசத்தானுக்கும் பாஷைக்காரனுக்கும், நிறத்தானுக்கும் பொதுவானதாகிறது.

இந்த தரிசனமானது கிறிஸ்துமார்க்கத்தில் ஜாதி வித்தியாசம் என்னப்பட்டதே கூடாதென்று தேவனால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்பது தெளிவாகிறது. அப்படி இருந்தபோதிலும் கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்திருக்கிறவர்களிலும், அதைப் போதித்துவருகிறவர்களிலும் சிலர் ஜாதி வித்தியாசம் பாராட்டி வருகிறதைக் காண்கிறோம். இவர்களில் சிலர் கிறிஸ்துமார்க்க பிரபல்லியம் இந்தியாவில் அநுகூலப்படுவதற்கு ஜாதி வித்தியாசம் அவசியம் என்று அந்தரங்கத்தில் சொல்லிக்கொள்ளுகிறதுமுண்டு. இது எவ்வளவு துக்கமான விஷயம். இந்தியாவிலுள்ளவர்களின் மனம் இயல்பாகவே எளிதில் இரக்கத்துக்கும் தேவதாபத்திக்கும் சாரத்தக்கதுமாயிருக்கிறது என்பதைப் பிசாசு கண்டு அந்த நல்ல எண்ணத்தில் நஞ்சு கலந்தாலன்றி தன் காரியம் கடைசிமட்டும் செல்லாதென்று உத்தேசித்து ஜாதி வித்தியாசம் என்னும் நஞ்சைக் கலந்திருக்கிறான். இதினால் இந்தியாவுக்குப் பொதுவாகவும் கிறிஸ்தவர்களுக்கு விசேஷமாகவும் உண்டான தீமைகளுக்கு ஒரு அளவில்லை. இந்தியாவின் பொதுநன்மையைப்பற்றி நாம் இப்பொழுது பேசவேண்டியதில்லை, மார்க்க விஷயத்தில் இந்த ஜாதி வித்தியாசத்தால் இந்திய சபைகளுக்கு கணக்கற்ற நஷ்டமுண்டாகிறது. இது சகோதர நேசிதத்தைக் கெடுத்து, ஆவிக்குரிய அங்கியோங்கியத்தை அழித்து சண்டைகளை வளர்த்து, பிரி

[1] மத். 8:11; லூக். 2:32; 3:6; 24:47; யோவா. 10:16.

வாழ்வை நஷ்டப்படுத்தி, பெருமைக்குணத்தை விருத்தியாக்கி, கிறிஸ்துமார்க்கத்தின் தெய்வீகமகத்துவத்தை அடியோடு நாசம்பண்ணி விடுகிறதாயிருக்கிறது.

ஜாதி வித்தியாசத்தை நெஞ்சுக்குள் வைத்து வளர்க்கும் சில கிறிஸ்தவர்கள் நாம் இப்படிச் சொல்லுவதையிட்டு வருத்தமடைந்து தங்கள் கருத்துக்கு ஒரு வேஷம்போட்டு, அதிலுல் இரட்சிப்புக்குக் கெடுதலுண்டா? அது ஒரு அந்தஸ்து முறை தானே? அதற்கும் மார்க்கத்துக்கும் சம்பந்தமென்ன? என்று பலவிதமாய் பேச ஆரம்பிப்பார்கள். எவ்வித வெளிவேஷமான நியாயங்களைச் சொன்னபோதிலும், அது பிசாசின் ஏற்பாடும் நரகத்தின் கேடுபாடுமேயன்றி வேறல்ல. கிறிஸ்துமார்க்கத்துக்கு விக்கிரகாராதனை, பொய் முதலிய கேடுகள் எப்படி நேர்விரோதமாய் இருக்கிறதோ அது போலவும் அதற்கு மேலாகவுமே ஜாதி வித்தியாசமிருக்கிறது என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறோம். கிறிஸ்து சபையில் ஜாதி வித்தியாசத்தைப் பற்றி கண்சாடையாயிருப்பதால் சபைகள் விருத்தியடைகிறதில்லை. அதிலுல் சபையின் பக்தி குன்றிப்போகிறது மாத்திரமல்ல, சுவிசேஷ பிரபல்லியமும் குன்றிப்போகிறதென்பது தென்இந்திய சபையின் முந்தின சரித்திரங்களால் தெரியவருகிறது. மேலும் அறிவும் விவேகமுமுள்ள அநேக இந்துக்கள் ஜாதி வித்தியாசத்தை கண்டித்து அதை அகற்றிவிடும்படி விசேஷ முயற்சிகளைச் செய்துவருகிற இக்காலங்களில் கிறிஸ்தவர்களில் சிலர் மாரிச நியாயங்களைச் சொல்லி அதை வளர்த்துக்கொண்டு வருகிறது சகிக்கக்கூடாத அநியாயமாய் இருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதை அழித்துவிடப் பிரயாசப்படவேண்டும். அதை விருத்திபண்ணவும் நிலை நிறுத்தவும முயற்சி செய்கிறகிறிஸ்தவன் சாத்தானின் பவனிபோகுதலுக்கு பந்தம் பிடிக்கிறவனைப்போலும், கிறிஸ்துவுக்கு விரோதமாய் செய்யும் யுத்தசேனைக்கு வழி காட்டி போலவுமிருக்கிறான். நாம் இந்தத் தரிசனத்தின் ஞானபோதனையை இம்மட்டோடே நிறுத்தி, சரித்திரத்தைத் தொடர்ந்து போவோமாக.

பேதுரு அப்போஸ்தலன் இந்த அதிசய தரிசனையைக் கண்டவுடன் அதைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில் தேவ ஆவியால் ஒரு அசரீரவாக்குப் பிறந்தது. மூன்றுதரிசனை ஒரு அற்புதமாயிருந்ததோடு, இது அதை உறுதிப்படுத்தும் இரண்டாம் அற்புதம்போலாகிறது. அந்த அசரீரவாக்கில் 'இதோ மூன்று மனுஷர் [1] உன்னைத் தேடுகிறார்கள், நீ எழுந்து இறங்கி ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன்' என்று தொனித்தது. இதென்ன ஆச்சரியம் என்று அவர் மேல்மெத்தையிலிருந்து கீழே வரும்போது, இதோ கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட ஆட்கள் அந்த வீட்டு வாசல் படியில் நின்றுகொண்டு 'பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா' என்று கேட்டார்கள். இந்தக் காட்சியும், செய்தியும் அவருடைய சந்தேகத்தையும், மயக்கத்தையும் அகற்றி தேவ சித்தத்தை அவருக்குள் தீர்மானப்படுத்துகிறதாய் இருந்தது என்று சொல்லலாம்.

பேதுரு கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட ஆட்களை கண்டு 'இதோ நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'நீதிமானும் தேவனுக்கு பயப்படுகிறவரும் யூத ஜனங்கள் எல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மை தம்முடைய வீட்டுக்கு அழைத்தனுப்பி உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளை கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய் கட்டளை பெற்றார். 'நாங்கள் உம்மை வருந்தி அழைக்கும்படி அனுப்பப்பட்டு வந்தோம்' என்றார்கள். அப்பொழுது பேதுரு அவர்களை உள்ளே வரவழைத்து, அவர்களுக்கு உபசாரம் செய்து, மறுநாளிலே அவர்களோடு கூடப் புறப்பட்டுப் போனார். யோப்பாப்பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்கள் சிலரும் அவரோடே கூடப்போனார்கள்.

---

[1] அப். 11:12இல் இவர்கள் ஆறுபேர் என்று சொல்லப்படுகிறது.

யோப்பாவுக்கும் செசாரியாவுக்கும் முப்பதுமைல் தூர மிருந்ததால் அவர்கள் புறப்பட்ட அன்று வழியில் தங்கி மறுநாளிலே செசாரியாவில் சேர்ந்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசுவாசித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து அவர்களுக்காகக் காத்திருந்தான். தான் கிறிஸ்துவை வெளியரங்கமாய் அறிக்கை பிட்டு அவருடைய மார்க்கத்தில் சேருகிறதை எல்லாரும் அறியட்டும் என்று நினைத்தானாக்கும். இக்காலத்தில் பல வாலிபர் கிறிஸ்துமார்க்கத்தில் தலைமறைவாயிருந்து இரகசியத்தில் சேருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தன்பத்திற்கு இலக்கும்படி ஞானமாய் நடந்துகொள்ளுகிறேம் என்று சொல்லிக்கொள்ளுகிறதுமுண்டு. இது நியாயம்தான் என்று சிலர் நினைத்து அப்படிப்பட்டவர்களுக்கு பணஉதவி கள் செய்து ஆதரித்து வருகிறார்கள். இது மிகவும் பிசகான ஒரு முறையென்று நமக்குத் தோன்றுகிறது. கிறிஸ்துமார்க்கத்தில் சேர விருப்பங்கொண்ட வாலிபர் தங்கள் மன விருப்பத்தைத் திறந்து தங்களுடைய இனபந்துகளுக்குச் சொல்லி அவர்கள் மனதில் அதின் சத்தியத்தை உணர்த்தி அவர்களுடைய நடுவில் சஞ்சரித்து வரத்தக்கதாக ஒழுங்கு செய்யக்கூடுமானால், மார்க்கவிருத்திக்கு அது அதிக அநுகூலமாயிருக்கும் என்பதே நமது அபிப்பிராயமாயிருக்கிறது. கொர்நேலியு பலஸ்தீனாவுக்கு உத்தியோக விஷயமாய் வந்த போது அவருடைய உறவின் முறையார் சிலரும் அவரோடே கூட வந்தார்கள் போலிருக்கிறது. அல்லவென்று அவர் இருந்த பட்டாளத்தில் அவருடைய இனத்தார் சிலரும் சேர்ந்திருக்கலாம். அவர்கள் அறியாமல் இத்தப் பெரிய ஞானியும் தமது குடும்பத்தில் நடக்க அவர் எண்ணவே இல்லை. இது புகழப்படத்தக்க ஒரு குணம்தான்.

பேதுரு அவருடைய வீட்டுக்கு வந்தவுடனே கொர்நேலியு அவருக்கு எதிர்கொண்டுபோய் அவர் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டான்: பேதுரு அவனைத் தூக்கி யெடுத்து 'எழுந்திரும் நானும் மனுஷன்தான்' என்று சொன்னார். ஒருவேளை இச்சமயத்தில் கொர்நேலியு பேதுருவை மட்டுமிஞ்சின ஆசாரவார்த்தைகளாலும், தேவ

துக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையாலும் மேன்மைப் படுத்தப் பார்த்திருக்கலாம். அதை பேதுரு அறிந்து இப்படிச் சொன்னார் என்று நினைக்கவேண்டியது. உத்தம போதகன்மார் கனத்துக்கும் மரியாதைக்கும் பாத்திரராய் இருக்கிறார்கள். ஆனால் அதினால் அவர்கள் மேற்கொள்ளப் படாமலும் பெருமைக்கு இடங்கொடாமலும் இருக்கிறார்கள்.

பேதுரு வீட்டுக்குள்ளே போகவே அங்கே அநேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டு, மனமகிழ்ந்து தம்மை அழைப் பித்த காரணமென்னவென்று கேட்டார். அதற்கு கொர் நேலியு தன் தரிசனையின் வரலாறுகளைச் சொல்லி, நீர் வந்தது நல்லகாரியம். தேவனாலே உமக்குக் கட்டளையிடப் பட்டயாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப் பொழுது இங்கே கூடி வந்திருக்கிறோம் என்று சொன்னார். கொர்நேலியுவின் வார்த்தைகளும் தம்முடைய தரிசனையும் ஒத்து இருந்தபடியால், பேதுரு வேறொன்றும் பேசி தாமதம் செய்யாமல் கிறிஸ்துவின் அற்புத வல்லமையையும், அரிய போதனைகளையும், சிலுவை மரணத்தையும், உயிர்த்தெழு தலையும் சுருக்கிச்சொல்லி அவரே உயிரோடிருக்கிறவர்களுக் கும் மரித்தோருக்கும் நியாயாதிபதி என்றும் 'அவரை விசு வாசிக்கிறவன் எவனே அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்' என்றும் விளங்கச் சொன்னார். பேதுருவின் பிரசங்கத்தோடே பரிசுத்த ஆவியும் இறங் கினார். அங்கிருந்தவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டபடியால் பல பாஷைகளைப் பேசி தேவனைப் புகழ்ந்தார்கள். இது எல்லாருக்கும் பிரமிப்பைக் கொடுத் தது. அன்றையத்தினமே கொர்நேலியுவும் அவன் வீட்டா ரும் வேறு அநேகரும் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர் களானார்கள்.

இதன்பின்பு நாம் கொர்நேலியுவைப்பற்றிய ஒரே ஒரு குறிப்பை மாத்திரம் காண்கிறோம்; அவன், பேதுருவை சில நாள் அங்கே தங்கும்படி வேண்டிக்கொண்டான். தான் பெற்ற நன்மைக்கு நன்றி செலுத்துகிறதாகவும் இன்னும் கிறிஸ்துமார்க்கத்தைப பற்றிய பூரண அறிவை அடை யும்படியாகவும் இப்படிக் கேட்டானுக்கும். சபையார்

தேவ ஊழியக்காரரை இப்படி மதித்து, ஆதரித்துவரக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இக்காலத்திலோ, ஒரு குடும்பத்தின் பணவரும்படி குறைகிறதினிமித்தம் செலவைக் குறைக்க வேண்டியிருந்தால், அது கோவிலே அல்லது குருவையடுத்த காணிக்கை பணங்களாய் இருக்கலாம். இது சரியல்ல, 'திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு, சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக் கடவன்' என்பதே சுவிசேஷ ஏற்பாடாயிருக்கிறது. (கலா. 6:6).

இதற்கப்புறமுள்ள கொர்நேலியுவின் சரித்திரமொன்றும் நமக்கு வேதத்திலே சொல்லப்பட்டிருக்கவில்லை. அவர் தம்முடைய பழைய உத்தியோகத்திலே உண்மையாயும் பக்தியாயும் நடந்து தேவனை மகிமைப்படுத்தி வந்தார் என்றே சொல்லவேண்டியது. பாரம்பரையில் அவருடைய சரித்திரத்தையும், செய்கைகளையும் உணர்த்தும் பல கட்டுப்பாடான விபரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கொர்நேலியு என்பவர் செசாரியாவில் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்டுவித்தார் என்று ஜெரோம் என்பவர் எழுதியிருக்கிறார். வேறொரு ஆகமக்காரன் அவர் தமது அந்திய காலத்தில் ஸ்காமந்தியஸ் (Scamundios) என்னும் இடத்தில் கண்காணியாராயிருந்து சபைகளை நடத்தி, அநேக அற்புதங்களைச் செய்ததாக எழுதி வைத்திருக்கிறான். எப்படியிருந்தபோதிலும் இவர் தமது விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்து, தமக்கு அருளப்பட்ட ஆவியின் அனலை அவித்துப்போடாமல் வளரச்செய்து, தமக்கு செசாரியாவில் காட்சியளித்த தூதரின் பாதுகாப்புக்குள்ளிருந்து, புறச்சாதியாரின் முதற் பிதாவும், முதற்பலனுமாக பரதீசின் வாசலுக்குள் பிரவேசித்தாரென்று சொல்லத் தடையில்லை.

தீமோத்தேயு

இப்பொழுது நாம் தீமோத்தேயுவைப்பற்றி எழுதப் போகும் சில வரலாறுகளை நீங்கள் கருத்தோடு வாசிப்பீர்கள் என்று நம்புகிறோம். இவரைப்பற்றிய வரலாறுகள் தேவ பணிவிடைகளைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிற பல ருக்கு கல்ல போதனைகளைத் தருகிறதாய் இருக்கின்றன.

தீமோத்தேயு பிறந்த ஊரைப்பற்றி இரண்டு விதமான அபிப்பிராயங்களுண்டு. சிலர் இவர் தெருபை ஊரில் பிறந்த தாகவும், வேறு சிலர் இவர் லிஸ்திராவில் பிறந்ததாகவும் சொல்லுகிறார்கள். இவர் எந்த ஊரில் பிறந்தாலும் அதைப் பற்றி நமக்குக் கவையில்லை. இவருடைய கிறிஸ்துமார்க்க பக்தி வைராக்கியத்தையும் ஊழியத்தையும் பற்றியே நாம் கவனித்துத் தியானிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

இவர் ஒரு கலப்புக் குடும்பத்தில் பிறந்தவராய் இருந் தார். இவருடைய தகப்பன் கிரேக்கனும் தாய் யூத குலத் தாளுமாய் இருந்தார்கள். இப்படிப்பட்ட கலப்பு விவாகம் யூதருக்குள் ஊடேயூடே நடந்து வந்தது. அப்படிப்பட்ட விவாகங்கள் நடக்கும்போது, பெரும்பாலும் அந்த கிரேக்கை மாப்பிள்ளைகள் யூதப் புரோகிலோத்துகளாகி, விருத்த சேதனம் பண்ணுகிறதுண்டு. இவருடைய பெற்றோர் யூத மார்க்க முறையின்படி நியாயப்பிரமாணத்தைக் குறித்து பக்தி வைராக்கியம் பாராட்டி அதை தங்கள் பிள்ளை களுக்குப் போதித்து வந்தார்கள். ஆதலால் தீமோத்தேயு சிறு வயது முதல் வேதத்தை அறிந்தவராய் இருந்தார். இவ ருடைய தகப்பனுருடைய பேரைப் பற்றியாவது வரலாறு களைப் பற்றியாவது நமக்கொன்றும் தெரியாததால், இவ ருடைய பாலியத்திலேயே தகப்பனை இழந்த அநாத பாலனாகிவிட்டார் என்று சொல்லவேண்டியதாய் இருக் கிறது. இவருடைய தாயும் பாட்டியும் இவரை வளர்த்து

வந்தார்கள். இவ்விருவருடைய கவனத்துக்கும் இவர் பாத்திரமுள்ள பிள்ளையாய் இருந்தார். அவர்கள் இவருடைய சரீரத்தை நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்த்ததோடு தங்களுடைய மகன் தேவ பக்தியுள்ளவனுய் தன் காலத்தைக் கழிக்க வேண்டுமென்றும் கவலைப்பட்டார்கள். ஆகவே பக்தியின் சுவாலை இளம் பிராயத்திலே இவரைப் பற்றிக்கொண்டது.

இவருக்குச் சுமார் பதினைந்து பிராயமாயிருக்கையில் இரண்டு கிறிஸ்தவ போதகர்களாகிய பவுலும் சீலாவும் தங்கள் ஊர்த் தெருக்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுகிறதையும் கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்கிறதையும் கண்டு, தன் வீட்டாரோடே மனம் திரும்பி குணப்பட்டார். அவர் குடியிருந்த ஊரார் விக்கிரக பக்தியில் அதிக வைரம் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களிடம் வந்த குருக்களை அடிக்கவும் துன்பப்படுத்தவும் கொலைசெய்யவும் துணிந்தார்கள். ஆதலால் அவர்கள் வேறொரு இடத்துக்குப் போகவேண்டியது நேரிட்டது. அவர்கள் போய்விட்டாலும் தேவனுடைய ஜீவவிதை அந்த ஊரில் பலனைக் கொடுத்தது. அந்தப் பலனில் தீமோத்தேயும், அவருடைய தாயும் பாட்டியும் பங்காளிகளாய் விளங்கினர்கள்.

முதலாம்தரம் துன்பப்படுத்தப்பட்ட இடத்துக்கு மறுபடியும் வரவேண்டுமென்று பவுல் நாட்டங்கொண்டு சில காலத்துக்குப் பின்பு அந்த ஊருக்கு வந்தபோது, அங்கே சில கிறிஸ்தவர்கள் இருக்கிறதைக் கண்டார். கிறிஸ்து மார்க்கத்தை முன்னேக்கப் பண்ணுகிறதும், பலப்படுத்துகிறதும், துன்பமாகிய அக்கினி மழைதான். 'இரத்த சாட்சிகளின் இரத்தம் சபையின் வித்து' என்ற சுலோகம் நிசமென்பதை திருச்சபை சரித்திரத்தை வாசிக்கிற எவனும் கண்டறிவான். தேவ ஊழியத்தில் துன்பமில்லாமல் இருக்கவேண்டும் என்று நினைப்பது பிசகு. உபத்திரவங்களும் துன்பங்களும் அதன் ஆஸ்திபோலிருக்கிறது. 'என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்' என்றும் என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி பலவித தீமையான

மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாகச் சொல்லாக்கொண்டும் இயேசு அறிவித்திருக்கிறார் (மத். 5:11).

தீமோத்தேயுவின் ஊரிலே பவுல் அடிபட்டு செத்துப் போனதென்று தெருவழியில் இழுத்து அல்லற்கோலப்படுத்தப்பட்டு ஊராரெல்லாராலும் கைவிடப்பட்ட சமயத்தில் இவர் பவுலைப் பாதுகாத்து, அவருக்குக் காயம் கட்டி உதவி செய்திருக்கலாம். எப்படியும் இந்தத் தூண்பம் இக்காலத்தில் பவுலிடத்தில் விளங்கின பொறுமையும் கிறிஸ்துமார்க்கத்தின் தெய்வீகதன்மையும் தீமோத்தேயுவின் மனதில் பதியப்பண்ணிவிட்டது என்று சொல்லவேண்டியது. ஆதலால் அவர் தமது வீட்டாரனைவரோடும் கிறிஸ்தவனுக்கு உத்தம பக்தி முறையை அனுசரித்து வந்தார்.

பவுல் அப்போஸ்தலன் இரண்டாம்தரம் சுவிசேஷ பிரபல்லிய விஷயமாயும் சபைகளை ஸ்திரப்படுத்தும் விஷயமாயும் பிரயாணம் செய்ய ஆரம்பித்தபோது, அவருக்கு தமது மனதின்படியும் ஒழுங்கின்படியும் ஒத்து வேலை நடத்தத்தக்க ஒரு ஆள் வேண்டியிருந்தது. தீமோத்தேயு தான் அதற்கேற்ற வாலிபனாய் இருந்தார். ஆதலால் அவர் தமது பயணத்தில் தீமோத்தேயுவைச் சேர்த்துக்கொண்டார். அன்று முதல் அவர் ஒரு தாணையாள்போல் அல்ல, பெற்ற பிள்ளைபோல் நடந்து பவுல் அப்போஸ்தலனுடைய மனதை மகிழச் செய்தார். அப்போஸ்தலனுடைய பட்சமும் தயவும் தன்மேல் வைக்கப்பட்டிருக்கிறதைக் கண்டு தீமோத்தேயு கர்வம் கொண்டதுமில்லை, தெம்பு பாராட்டவுமில்லை. தேவ ஊழிய விஷயத்தில் அவர் பவுலின் உடன் வேலையாளாயும் (ரோம. 16:21; 1 தெச. 3:2), அநிமித்தம் உண்டான தூண்பங்களில் சம பங்காளியாகவும் (எபி. 13:23), அப்போஸ்தல அந்தஸ்தில் சமநிலைமையுள்ளவனாகவும் (1 தெச. 3:2, 1 தீமோ. 6:20), அந்நியோந்நிய விஷயத்தில் குமாரனாகவும் பாவித்து நடத்தப்பட்டார் (2 தீமோ. 1:2).

இவர் கிறிஸ்தவனானவுடனே அந்தந்த இடங்களில் ஏற்படுத்தப்பட்ட மூப்பருடைய உபதேசத்துக்குள் இருந்தார் என்று நினைக்கவேண்டியது (அப். 14:23). பவுலின் முதலாம் பயணத்துக்கும் இரண்டாம் பயணத்துக்கும் இடை

யில் சுமார் ஏழு வருஷம் சென்றதால், இவர் பூரண வாலிபனுய் விளங்கினர். கிறிஸ்து மார்க்கத்திலிருந்த வைராக்கியமும், இவருடைய பக்தி விஷயமும் அத்திசைகளிலெங்கும் பேசிக்கொள்ளப்பட்டது. அவரை அறிந்த எல்லாரும் தேவனுடைய ஊழியத்தை நடத்தும்படி இவர் தகுந்தவர் என்று சற்சாட்சி கொடுத்தார்கள் (1 தீமோ. 1:18, 4:14). பவுல் அப்போஸ்தலனுடைய கருத்தும் இதற்கு இசைவாகவே இருந்தது. ஆகவே அவர் சுவிசேஷ பிரசங்கியாக நியமிக்கப்பட்டார் (1 தீமோ. 4:14; 2 தீமோ. 1:6; 4:5).

தீமோத்தேயு தமது சுவிசேஷ ஊழியத்தை நடத்துவதற்கு இடையில் ஒரு இடறலிருந்தது. எப்படியெனில் அவர் யூதத் தாயினிடத்தில் பிறந்திருந்தும் விருத்தசேதனம் பெறுதிருந்தார். என்ன முகாந்தரத்தையிட்டு அவர் அவ்வளவு காலமட்டும் விருத்தசேதனத்தை தள்ளி வைத்திருந்தார் என்று அநுமானிப்பதற்கு யாதொரு முகாந்தரத்தையும் காணேம். எப்படியும் இதினுலே அவரும் அவருடைய தாயும் பாட்டியும் யூத மார்க்கச் சடங்குகளை அவ்வளவாய் மதித்து வந்தவர்களாய் இராமல் இருதயத்தின் விருத்தசேதனத்தையும் ஆவிக்குரிய மாறுதலையும் பெரிய காரியமாக எண்ணி கைக்கொண்டு வந்தார்கள் என்பதை அறிகிறேம். எப்படியும் இந்தத் தடையை நிவிர்த்தியாக்கிக் கொள்ளாத பட்சத்தில் தீமோத்தேயு யூதர்கள் கும்பில் அன்போடு ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைச்சலோடு தன் வேலைகளை நிறைவேற்றிக்கொள்ள இடமிருக்க மாட்டாதென்று பவுல் அறிந்து அவரை விருத்தசேதனம் செய்தார். ஒரு புறச்சாதியான் விருத்தசேதனம் செய்யாவிட்டாலும் அதையிட்டு யூதர் கவனியார்கள்; அவர்கள் நடுவில் ஒரு யூதன் விருத்தசேதனத்தை அசட்டை செய்திருந்தால் அவனைச் சன்மப் பகையாய்ப் பகைப்பார்கள்.

தீமோத்தேயு பவுலின் தோழனுக பிலிப்பி பட்டணத்துக்குப் போயிருந்த காலத்தில் 'தகப்பனுக்குப் பிள்ளை ஊழியம் செய்வதுபோல' உத்தம குணத்தோடு தமது வேலையை பவுலுடன் நடப்பித்து வந்தார் என்று பார்க்கிறேம் (பிலி. 2:22). தெசலோனிக்கை சபையாரைத்

தேற்றும்படி தீமோத்தேயுவே தகுந்த ஆளென்று அனுப்பப் பட்டார் (1 தெச. 1:1; 2 தெச. 2:1). சில காலம் சென்ற பின்பு தீமோத்தேயு தானுகவே சுவிசேஷ வேலையை நடத்தி பல இடங்களையும் சந்தித்து வந்தார் என்று விளங்குகிறது.

இவர் தமது பலத்தையும் முயற்சியையும் எல்லாம் சுவி சேஷ வேலைக்காகச் செலவிட்டதால் சீக்கிரம் பலவீனப் பட்டார். அவருடைய பலவீனம் குடலைப்பற்றின .ஏதோ ஒழுங்கீனத்தால் உண்டாகி இருக்கிறது. ஆதலால் பரி. பவுல் 'நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றுக்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங் களுக்காகவும் கொஞ்சம் திராட்ச ரசமும் கூட்டிக்கொள்' என்று சொல்லுகிறார். இதினாலே மதுபானம் சாப்பிட பவுல் அப்போஸ்தலன் இடம் கொடுக்கிறார் என்று சிலர் பிதற்றி குடிவெறியில் நிலைத்திருக்கிறார்கள். இப்படிச் சொல்வது அக்கிரமமாயிருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்குச் சொல்லும் மருந்து, குடிக்காரர் மது பானம் பண்ணுவதற்குரிய கட்டளையாகமாட்டாது.

இவர் தமது அந்திய காலத்தில் பல குருக்களுக்கு மேலான கண்காணியாயிருந்து சபைகளை ஆண்டு வந்தார். கடைசியாக அவர் எபேசுவில் குடியிருந்தாரென்றும் 'எபேசு சபையின் தூதன்' என்று ஆசியானவர் யோவான் அப் போஸ்தலன் மூலமாய்ப் பேசுவது இந்த தீமோத்தேயுவையே குறிக்கிறதென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள் (வெளி. 2:1).

எபிரெயர் நிருபத்தின் மூலமாய் இவர் பவுலோடு ஒரு தரம் சிறையிலிருந்து பின்பு விடுதலையானார் என்று தெரிய வருகிறது (எபி. 13:23). அப்படியானால் இவர் நேரோ இராயனால் சிறையில் அடைபட்டு அவன் மரித்தபின்பு விடுதலையாகி யிருக்கவேண்டியது. இவர் எபேசுவின் கண் காணியாயிருந்து தொமிஷான் அல்லது நெர்வா இராயன் காலத்தில் இரத்த சாட்சியாய் மரித்தாரென்று ஆதிசபை ஆகமக்காரர் எழுதியிருக்கிறார்கள்.

இவருடைய வாலாறுகளைப்பற்றி நாம் இவ்வளவு சுருக்கமாய் மாத்திரம் அறியக்கூடியதாய் இருப்பதால் தீமோத்தேயு அவ்வளவு புகழ்ச்சிக்கும் கவனத்துக்கும் உரியவர் அல்ல என்று கனவிலும் நினைக்கலாகாது.

1. இவர் சிறு வயது முதல் வேத எழுத்துக்களை அறிந்தவராய் இருந்தார் (2 தீமோ. 3:15).

2. இவர் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் தேவ பணி விடைக்கென்று குறிப்பிக்கப்பட்டார் (1 தீமோ. 1:18).

3. விசேஷ வரம் பெற்றவராய் இருந்தார் (1 தீமோ. 4:14).

4. பரி. பவுலுக்கு மகனைப்போல் இருந்தார் (1 தீமோ. 1:2, 18; 2 தீமோ. 1:2).

5. அவருடைய உடன் ஊழியனுய் வேலைசெய்து வந்தார் (ரோம. 16:21; கொலோ. 1:1; 1 தீமோ. 3:2).

6. கிறிஸ்துவுக்காக அவர் செய்த வேலையினிமித்தம் காவலிலும் இருந்தார் (எபி. 13:23).

7. கிறிஸ்துவைப் பிரசங்கித்ததாலேயே அவருடைய பலம் குன்றி வியாதியஸ்தனுகிவிட்டார் (1 தீமோ. 5:23).

என்று வரும் குறிப்புகள் அவர் சாமானியமான ஒரு பக்தன் அல்ல, நமது விசேஷ கவனத்துக்குரிய பக்தன் என்றும் அவருடைய மாதிரியைப் பின்பற்றி நடப்பது நியாயமென்றும் நமக்கு உணர்த்துகிறது.

ஒரேசிலை

இவ்வுலகத்தில் மனுஷருடைய சரீரத்தின் உறுப்புகளையும், அளவையும், சாயலையும் காட்ட படம் பிடித்துக் கொடுக்கிறதுண்டு. அதைப் பார்த்தவுடனே ஒருவனுடைய கண், மூக்கு, முகம், கைகால், தேகம் இன்னபடி இருக்கிறதென்று அறிந்துகொள்ளக்கூடும். ஆனால் அவனுடைய சுபாவம், பேச்சு, மனநிலைமை இன்னதென்பது அந்தப் படத்தினால் அறியப்படக்கூடாது. அந்த உள்ளான சாயலே வேதம்தான் படம் பிடித்துக் காட்டுகிறதென்று சொல்ல வேண்டியது.

வேதாகம வரலாறுகள் மூலமாய் நாம் ஒரு மனுஷனுடைய நடபடிகளையும் இருதய நிலைமையையும் அறியும் போது தேவனுடைய மகிமையையும் பரிபூரணத்தையும் வியந்து, ஆவிக்குரிய விஷயத்தில் அவர்களுக்குள் அவர் செய்து வரும் மேலான தயவுகளை உணர்ந்து புகழவேண்டியதாகவே இருக்கிறது. பாவத்தினாலே பரலோகவாழ்வை இழந்துபோன மனுமக்களுக்கு அவர் பாராட்டிவரும் அன்பானது அவருடைய நீதியின் வல்லமைக்கு மிஞ்சின அன்பாகவே இருக்கிறதென்று காண்கிறோம். பாவிகள் குணப்பட்ட வரலாறுகளடங்கிய ஒவ்வொரு சரித்திரத்தின் மூலமாயும், இந்த அவருடைய அன்பின் வல்லமையின் மாட்சிமையே துலங்குகிறது. ஒரு மனுஷன் அழகேந்திரனும், பராக்கிரமனும், படிப்பாளியும், கனவானும், தனவானும், முடிமன்னனுமாயிருந்து இராச்சியங்களை ஜெயித்து, வெற்றி விருதுகளைப் பெற்று வாழ்ந்தானென்று கேள்விப்படுகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கெட்டகுணம் மாறி நல்லவனானான், அவன் பேச்சிலே சாந்தனும், நடக்கையிலே பரிசுத்தனும், கிரியையிலே அன்பனும், தேவ பக்தனுமாய் காலங்கழித்தான் என்ற வரலாறுகள் மகா மேன்மையான விஷயங்களாய் இருக்கின்றன. மொத்தமாகச்

சொன்னால் ஒரு பாவி மனம் திரும்பினான் என்ற சரித்திரத்துக்கு மேலான சரித்திரம் வேறொன்றில்லை யென்று சொல்ல வேண்டியது. இப்படிப்பட்ட சரித்திரங்கள் மூலமாய் கலை மனமுள்ள பாவிகள்மேல் தேவன் பாராட்டும் காருண்யத்தின் மேன்மையின்னதென்றும், கிருபையின் ஐசுவரியமின்னதென்றும், தெளிவாக ரூபிக்கப்படுகிறதென்கலாம்.

இப்பொழுது நாம் வாசிக்கப்போகிற சரித்திரத்தையடுத்த மனுஷன் உலகப் பிரகாரமாய் ஒரு பெரியவனல்ல, அவன் ஒரு இராசாவுமல்ல, பிரபுவுமல்ல, ஞானியுமல்ல, வீரனுமல்ல, புலவனுமல்ல, தலைவனுமல்ல. இவன் ஒரு அடிமையும் வேலையாளுந்தான். இவன் குணப்பட்ட ஒரு அடிமையானதால் இவனை நாம் விசேஷிக்க இடமுண்டாகிறதேயன்றி வேறு மேன்மை இவனிடத்தில் இல்லை என்று அறியவேண்டியது. இவனைப்பற்றி வேதத்தில் கொஞ்சமாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபோதிலும், அதினாலுண்டாகிற ஞான போதனைகள் மிகவும் அருமையாய் இருக்கின்றன.

ஒநேசிமு, பிலேமோன் என்ற ஒரு கிறிஸ்துமார்க்க முதலாளியின் அடிமையாயிருந்தான். இவனுடைய எசமானாகிய பிலேமோன் பூரண பக்தனாயிருந்தான். அவனிடத்தில் விசேஷமாய் விளங்கின குணம் எல்லா கிறிஸ்தவர்களையும் தன் சுய சகோதரரைப்போல் நேசிக்கிற நேசம்தான். இந்த நேசத்தை அவன் தன் வீட்டு வேலைக்காரருக்கும் பாராட்டி வந்தான். ஒநேசிமு தன் எசமானால் அதிகமாய் அன்பு கூறப்பட்டும் அந்த அன்புக்குப் பாத்திரவானாக நடந்துகொள்ளவில்லை. இப்படி அடிக்கடி நடக்கிறதை நாம் காண்கிறோம். கிறிஸ்துமார்க்கத்தின் பிரமாணத்தை ஒருவன் அநுசரித்து நடக்கக்கருதி தன் வேலைக்காரரையும், தனக்குத் தாழ்ந்தவர்களையும் பட்சமாய் நடத்தி ஆதரிக்கும்போது, அவர்கள் அதற்கு அபாத்திரராய் நடக்கிறார்கள். இதனாலே சில முதலாளிமார் கோபமடைந்து, வேண்டுமென்று தங்கள் குணத்தைமாற்றி, கிறிஸ்துமார்க்க அன்புக்கு விரோதமாய் தங்கள் வேலைக்காரரைக் கடினமாய் நடத்தவும், திட்டவும், அடிக்கவும், பயமுறுத்தவும் ஆரம்பிக்கிறார்கள்

இந்த முறையை நாம் சரியென்று ஒத்துக்கொள்ளக்கூடாது. தன் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், தன் வேலையை வாங்கிக்கொள்ளவும் கிறிஸ்துமார்க்க அன்பை விட்டு விடுவது சரியல்ல. பிலேமோன் இப்படிப்பட்ட ஒரு பேர் கிறிஸ்தவனுய் இருக்கவில்லை. இவர் கிறிஸ்துவுக்காக ஊழியஞ் செய்துவந்த உண்மையுள்ள கிறிஸ்தவனுய் இருந்தார்.[1] கொலோசை ஊரிலிருந்த கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் இவருடைய வீடே தேவாலயம் போலிருந்தது (பிலே. 2. வச.). இவருக்கு அப்பியாள் என்ற ஒரு பதிவிரதாபத்தினி மனைவியாயிருந்தாள். இவளுடைய பக்தி விஷயமும், சாமானியமாயிருக்கவில்லை. ஆகவே அவர்கள் குடும்பமும், அவர்கள் நடத்துதலும் எப்படிப்பட்ட கெட்டவனையும் நல்லவனுகச் செய்யத்தக்கதுதான்.

ஒநேசிமு இவ்வளவு நல்ல இடத்திலும், ஆட்களின் மத்தியிலும் இருந்தபோதிலும், அவனுடைய கேடு அவனை விட்டுப் போகவில்லை. தன் எசமானின் தருமசிந்தையாவது எசமாட்டியின் நேசகுணமாவது, அந்த வீட்டில் வீசின ஜெப தூபமாவது அங்கே கூடிவந்துபோன பக்தரின் ஆவி அனலாவது, அவர்களுடைய வணக்கத்தின் கனியாவது, கீதத்தின் தொனியாவது, அந்நியோந்நியத்தின் முத்தமாவது, போதனையின் சாரமாவது, சாதனையின் உணர்ச்சியாவது, அவர்களுடைய நடக்கையின் முன் மாதிரியாவது ஒநேசிமுவை மனம் திரும்பப் பண்ணக்கூடாமல் போயிற்று. எனெனில் அவன் அவ்வளவு பொல்லாத மனமுடையவனுய் இருந்தான். அவன் இருதயம் அவ்வளவு கடினப்பட்ட ஸ்திதியிலிருந்தது. அவனுடைய கல்நெஞ்சை உடைக்கவும், கடின மனதை இளகப்பண்ணவும், இரும்புக் கழுத்தை வளையச் செய்யவும் அந்த ஊரிலுள்ள கிறிஸ்தவர்களுடைய பக்தியின் சம்மட்டியும், பரிசுத்தத்தின் அனலும், கிருபையின் யத்தனங்களின் முயற்சியும் போதுமானதாய் இருக்கவில்லை.

---

[1] சிலர் பிலேமோன் கொலோசை ஊரிலுள்ள சபையை நடத்தின குருவாய் அல்லது கண்காணியாராய் இருந்தாரென்றும் அபிப்பிராயப்படுகிறதுண்டு. (பிலே. 1. வச.)

இதிலுலே பிலேமோனும், அவன் மனைவியும் அவ்வூரிலுள்ள கிறிஸ்தவர்களும் குறைவான பக்தராயிருந்தார்களென்பது நமது கருத்தாயிராமல், இவனுடைய இருதயத்தின் கெடு அவ்வளவு தாழ்ந்ததாய் இருந்ததென்பதே நமது கருத்து. இவன் தன் கண்ணால் கண்டதும் காதால் கேட்டதுமான சகல ஆவிக்குரிய முயற்சிகளும் பாம்புக்குப் பால்வார்த்த வண்ணம் தானிருந்தது. 'மூக்காலம் காகம் முழுங்கிக்குளித்தாலும் கொக்கு ஆகுமா' என்று ஒரு சுலோகமுண்டே. இந்த ஒநேசிமு அப்படிப்பட்ட காகம் ஒத்த பாவியாய் இருந்தான். அவனில் இரட்சண்ய அனல் எறினதுமில்லை, மறு பிறப்பின் ஜனனம் உண்டாகவுமில்லை இப்படிப்பட்ட பாவிகளை நாம் ஒவ்வொரு சபையிலும் காணலாம். அப்படிப்பட்ட சபையாரின் நடுவில் எவ்வளவு பக்தியுள்ள போதகர் ஊழியம் செய்தாலும், எத்தனை உருக்கமான புத்திகள் சொல்லப்பட்டாலும், எவ்வளவு கண்டிப்பான வார்த்தைகளை அவர்கள் கேட்டாலும், அவர்கள் மனம் அசையவும் மாட்டாது. திரும்பவும் மாட்டாது. சிநேகிதனே, நீ இப்படிப்பட்ட ஒருவனே என்று உன்னை ஆராய்ந்து பார்த்துக் கொள்.

இதிலில் இரட்சண்ய முறை பழுது கூறப்படத் தக்கதோ? அல்ல, அல்ல. இது அதன் பலத்தை விருத்தி பண்ணுகிறதென்றே சொல்லவேண்டியது. எனெனில் இப்படிப்பட்ட ஒநேசிமுவும் சில காலத்துக்குப்பின் குணப்பட்டு உண்மையுள்ள கிறிஸ்தவனானன் என்று அறிகிறோம். அவன் நெடுங்காலம் தன்னை இழுக்கும்படிப் பிரயோகிக்கப்பட்ட கிருபையின் எத்தனங்களை தள்ளி காலால் மிதித்து வந்தபோதிலும் கடைசியாக தேவ கிருபையால் குணப்பட்டான். அதின் வரலாறுகளை இனிமேல் கவனிப்போமாக.

ஒநேசிமு என்பவன் ஆவிக்குரிய மாறுதலை அடையக் கூடாத கடின மனமுடையவனாய் இருந்தது மாத்திரமல்ல, உலகப் பிரகாரமான ஞானயமும், யதார்த்தமும் அவனிடத்தில் இருந்ததில்லை. அவன் தன் நேச எசமானை மோசம் பண்ணி, வஞ்சித்து, திருட்டுத்தனமாய் அவனைவிட்டு ஓடிப் போய் விட்டான். இவன் செய்த குற்றமின்னதென்று நாம்

தெளிவாக அறிந்துகொள்ளக்கூடாதே போனாலும் சாடையாய் அறிகிறோம். பிலேமோன் இவனை தன் உண்மையுள்ள உக்கிராணக்காரனைப்போல எண்ணி இவன் வசத்தில் சில பணங்களை ஒப்புவித்திருக்க இவன் அந்த நம்பிக்கைக்குமோசம் பண்ணி, அவன் வீட்டை விட்டு ஓடிப்போயிருக்கலாம்; அல்லது ஏதோ தனக்கு அவசியமான ஒரு விஷயமாய் தன் எஜமானிடத்தில் கடன் வாங்கி, அப்புறம் கடன் செலுத்துகிறதற்கு முன்னே இரகசியமாய் ஓடிப்போயிருக்கலாம் (பிலே. 18. வச.) இக்காலத்தில் இவ்வண்ணமாவது, வேறு விதமாயாவது, மோசம் செய்வது ஒரு பெரிய தீமையாக எண்ணிக்கொள்ளப்படுகிறதில்லை. சிலர் தங்கள் உலக வாழ்வுக்கு, உண்மையான ஜீவனமல்ல, மோசமான ஜீவனமே வழி என்று சொல்லி வருகிறார்கள். இது எவ்வளவு துக்கமான காரியமாயிருக்கிறது. வாசிக்கிறவனே, நீ மோசம் பண்ணி காலம் கழிக்கிற ஒரு மனுஷனுயிராதே. இதைக் கேட்கிற கிறிஸ்தவனே, மோசம் பண்ணுவது ஒரு பெரிய பாவமென்று எண்ணுகிறாயா? உனக்கு ஒப்புவிக்கப்பட்ட பணத்தை உண்மையோடு பாதுகாத்துச் செலவிடுவது உன்னுடைய பிரதான கடமை என்று உணருகிறாயா? அற்பக் களவும் ஆகாதென்று வெறுக்கிறாயா? எல்லாருக்கு முன்பாக உண்மையும் யோக்கியமுமாய் நடந்துவருகிறாயா? நீ எவ்வளவு இரகசியமாயும் உபாயமாயும் உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருட்களை அல்லது பணங்களை அபகரித்துக்கொள்ளும்படிப் பார்த்தாலும், அவை எல்லாம் கடைசி காளின் நியாயத்தீர்ப்பு நேரத்தில் சகல மனிதரும் தேவதூதரும் பிசாசுக்களும் அறிய விளம்பரம் செய்யப்படும் என்றும் உணர்ந்துகொள். ஒருவனும் தன் சகோதரனை வஞ்சியாமல் இருக்கவேண்டும், இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் குறித்து கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார் என்று சத்தியவேதம் சாட்சி பகருகிறது (1 தெச. 4:6).

ஒநேசிமு இந்த குணத்தோடேயே தன் ஜீவனை முடித்திருப்பானுல் இவன் நரகத்துக்கே போயிருப்பான். ஆனல் இவனுக்கு ஆத்தும வாழ்வான நற்காலமுண்டானதென்

பதை நாம் காண்கிறோம். இவன் தான் மோசம் பண்ணின பணத்தை வைத்துக்கொண்டு, பல இடங்களுக்கும் பயணம் பண்ணி, அலைந்து திரிகிற நாடோடியானான். இவன் நிலையற்றவனாயும் நாடோடியாயும் திரிந்தலைந்த காலத்தில் என்னென்ன பொல்லாப்புகளையெல்லாம் செய்தானோ தெரியுதில்லை. மெய்யாகவே இவன் கிறிஸ்துவின் உவமை ஒன்றில் சொல்லப்படுகிற கெட்ட குமாரனைப்போல், தான் திருடின பொருட்களையெல்லாம் போக்கிரி ஜீவனத்தில் செலவழித்திருப்பான் என்பது மெய். இதினாலே அவன் ஒரு பெருந் தொகையான பணத்தைத் திருடினவன் என்று நாம் அனுமானிக்கவேண்டியதாயிருக்கிறது. கடைசியாக இவன் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தான். இவனிருந்த கொலோசை ஊருக்கும் ரோமைக்கும் வெகு தூரமிருந்தது. ஆதலால் தேவனே இவனுடைய குணப்படுதலுக்கென்று அவனை அவ்வளவு தூரம் போகப் பண்ணினார் என்று சொல்லவேண்டியது. எந்த விதமாகவோ அவன் பவுல் அப்போஸ்தலனைக் கண்டுபிடிக்க நேரிட்டது. அந்தக் காலத்தில் அவரும் வேறு சிலரும் கிறிஸ்துவினிமித்தம் கைதிகளாகி சிறைப்பட்டிருந்தார்கள். ஒரு வேளை இவன் ரோமைக்குப்போனபின் கையில் காசு இல்லாமல் பவுல் அப்போஸ்தலனைப் போய்ச் சேர்ந்திருக்கலாம், ஏனெனில் அவர் தம்மிடம் வருகிற எவர் கஷ்டமும் ஏற்றுக்கொள்ளவும், சம்பாஷிக்கவும் இடம் பெற்றிருந்தார். அவன் எவ்வகையாய் பவுலண்டை வந்து சேர்ந்த போதிலும், அவனுடைய ஆத்துமா அதினால் வாழ்வைக் கண்டடைந்தது. பரி. பவுலின் போதனைகள் அவன் மனதில் தைத்தது. கர்த்தர் அவன் இருதயத்தைத் திறந்தார். அவன் தன் குற்றத்தை அறிக்கையிட்டு, தன் இரட்சகராகிய தேவனால் பாவமன்னிப்பைப் பெற்றான்.

குணப்பட்ட அநேக பாவிகளிடத்தில் துலாம்பரமாய் விளங்காத ஒரு குறிப்பை நாம் இவனிடத்தில் காண்கிறோம்; அதாவது இவன் கிறிஸ்தவனான பிற்பாடு தான் செய்த மோசங்கள், துரோகங்கள் எல்லாவற்றையும் அப்போஸ்தலனுக்கு அறிக்கையிட்டதோடு இனி அப்படிப்பட்ட தீமைகளுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்று திட்டமாய்

தீர்மானம் பண்ணினான். அவன் கிறிஸ்துவுக்குட்பட்டு புது சிருஷ்டியாய் விளங்கினான். அவனுடைய மனமாறுதல் நிலையானதும், குணப்படுதல் உண்மையானதுமாயிருக்கிறதை பரி. பவுல் அறிந்து அவனைக் குறித்துப் பேசும்போது 'கட்டப்பட்டிருக்கும்போது நான் பெற்ற ஒநேசிமு' என்று அழைத்திருக்கிறார். ஒருவன் மற்றவனை மனம் திரும்பச் செய்கிறபோது அவனை இரட்சண்ய புத்திரனாகப் பெறுகிறான். ஆதலால் மற்றவர்களுடைய மறு பிறப்புக்காகவும் குணப்படுதலுக்காகவும் நாம் எவ்வளவு கரிசனையுள்ளவர்களாய் இருக்கவேண்டியது என்பது வெளியாகிறது.

ஒநேசிமுவின் மனம் திரும்புதலானது, உலகத்தாருக்கு பாவமன்னிப்பை அருளும் தேவ கிருபையானது எவ்வளவு வல்லமையும் தயாளமுமானதென்பதை நமக்கு உணர்த்துகிறது. நாம் ஒருவனுடைய குணப்படுதலைப் பற்றி எவ்வளவேனும் எதிர்பார்க்கக் கூடாததுபோலிருந்தாலும் அவனையும் அவர் குணப்படுத்தி, அவனுக்கு பாவமன்னிப்பை அருளக்கூடும் என்று பார்க்கிறோம். அவர் படுதோஷிக்கும் இரங்கி அவனுடைய பாவக்கறை அனைத்தையும் கழுவிப் போட வல்லவராயிருக்கிறார். தமக்கு விரோதமான பிராணப் பகைஞனையும் அவர் குணமாறப்பண்ணி அவனைத் தமக்குப் பிராண சிநேகிதனாக்கிக்கொள்ளுகிறார். அவர் தமது இரட்சண்யத்தால் ஒரு பாவியைச் சந்திக்கச் சித்தங்கொள்ளும் பொழுது, மலையளவான அவனுடைய பாவங்களும், பர்வதங்கள்போன்ற அவனுடைய அக்கிரமங்களும் அதைத் தடுத்துவிடமாட்டாது. அந்தப் பாவப்பர்வதங்களை அழித்துவிடவும், அக்கிரம மலைகளை உருக்கிவிடவும் அவருடைய இரட்சண கதிர்களின் காந்தி வல்லமையுள்ளதாயிருக்கிறது. இந்த எண்ணத்தால் நமது பெரும் பாவங்களும் மன்னிக்கப்படக் கூடுமென்று நாம் நம்ப இடமாகிறது.

இப்படி நாம் சொல்லும்போது சிலர், தேவன் மனம் திரும்புதலுக்கு அழைக்கிற பாவிகளை இவ்வளவு தாழ்வான பாவ நிலைமைக்கு என் விட்டுவிடுகிறார்? அவர்களுடைய பாவ வழிகளின் துவக்கத்திலே அவர்களை தடுத்து நிறுத்தி நமது இரட்சண்ய மகத்துவத்தை அவர்களில் வெளிப்படுத்தலா

காதா? என்று கேட்கத் துணிவார்கள். இப்படிக் கேட்கிறவனே நீ யார்? இப்படிக் கேட்க எம்மாத்திரம்? இது உன் சொந்தக் கேள்வியாயிராமல் உனக்குள்ளிருக்கிற சாத்தானுடைய ஏவுதலால் கேட்கும் கேள்வியேயன்றி வேறல்ல. தேவனுடைய வழிகளை நீ கடைசிமட்டும் அறியாய்; தேவனுதருமும் அதை அறியார்கள். 'மறைவானவைகள் நமது தேவனுடைய கர்த்தருக்கே உரியவைகள்' என்று சத்திய சாஸ்திரம் அறிவிக்கிறது. வெளிப்படுத்தப்பட்டவைகளைக் கொண்டு மாத்திரம் நாம் அவரை நேசிக்க ஏவப்பட்டு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். அவருடைய செயல்கள் நமக்கு விளங்காமலிருக்கையிலும், விரோதம்போல காணப்படுகையிலும், அவர் தமது கிரியைகளிலெல்லாம் நீதியுள்ளவர் என்றே நாம் அறிக்கையிடவேண்டியது. இப்பொழுது நமக்கு மறைவாயும் மகிவாயும் காணப்படுகிறதெல்லாம் கடைசி நாளில் தெளிவாயும், துலாம்பரமாயும் விளங்கும். பெரும் பாவிகளாயிருந்து மனம் திரும்பின பலர் பெரும்பாலும் பக்திசிரோமணிகளாய் விளங்கி, மற்றவர்களைப் பார்க்கிலும் அதிசமாய் தங்கள் இரட்சண்ய மூர்த்திக்காக உழைத்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தி வருகிறார்கள் (லூக். 7:47). தேவ ஞானத்தையும் தயவையும் மனுஷருக்கு வெளிப்படுத்தும்படி இதுவும் ஒரு முறையாக இருக்கலாமே. இதினாலே ஒருவனுவது சுவிசேஷ வாழ்வை கனவீனப்படுத்தாதிருப்பானாக. பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகுகிறதைக் காண்கிற ஒருவன் அதினால் பாவத்தில் நிலைத்திருக்க, அல்லது பாவத்தில் பெருகத் துணியாமல், தேவனுடைய அன்பின் ஐசுவரியத்தைக் கனிந்து தியானித்து அவரை ஸ்தோத்திரிக்க ஏவப்படவேண்டியது. (ரோம. 5:20; 6:1, 2).

ஒநேசிமுவின் இருதய மாறுதல் 'தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவனுடைய நிர்மானத்தின்படியே' இருந்தது என்று சொல்லவேண்டியது (எபே. 1:12). தேவன் தமையிலிருந்து கன்மையைப் பிறப்பிக்கிறவர். அவர் தமக்குக் கீழ்ப்படியாத

இருதயங்களிலிருந்து கீழ்ப்படிதலையும், கனத்தை சம்பாதித்துக்கொள்ளவும் கூடும். இதிலுலே அவர் பாவத்தைக் கண்சாடையாய் விட்டு விடுகிறார் என்று சொல்லக்கூடாது. யோசேப்பின் சகோதரர் அவனை விற்றுப்போட்ட அநியாயச் செய்கையானது அநேக நன்மைகளுக்கு ஏதுவாயிருக்கும்படி தேவனால் நடத்தப்பட்டது. 'நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனே அதை நன்மையாக முடியப் பண்ணினார்' என்று யோசேப்பு சொன்னார் (ஆதி. 50:20). அவ்வண்ணமே ஒநேசிமுவின் நீச நிலைமையைக்கொண்டு தேவன் தமது இரட்சண்யத்தின் தயவுள்ள சித்தத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். பரி. பவுல் ஒநேசிமுவைப்பற்றிப் பேசும்போது 'அவன் என்றைக்கும் உம்முடையவனாய் இருக்கும்படிக்கும், பிரியமுள்ள சகோதரனாய் இருக்கும்படிக்கும் கொஞ்சக் காலம் உம்மை விட்டுப் பிரிந்து போனானைக்கும்' என்று சொல்லுகிறார். இதை வேறு விதமாய்ச் சொன்னால் அவன் முற்றிலும் கல்லவனாகிறதற்கு இப்படிக் கெட்ட குணம் காட்டினானுக்கும் என்று சொல்லுகிறபோ விருக்கிறது. இதில் நமக்கு விளங்காத ஒரு தேவ ஞானமும், தயாளமும் வெளிப்படுகிறதேயன்றி வேறல்ல. தேவன் ஒரு பாவியைக் குணப்படுத்தும்படி பல ஆட்களையும் பல வழிகளையும் திட்டம் பண்ணியிருக்கிறார். கொலோசை ஊரில் குணப்படாதவன் ரோமையில் குணப்படலாம். பிலேமோனால் குணப்படாதவனுக்கு பவுலால் குணப்பட வழியுண்டாகிறது.

இதைக் கேட்கிற ஒருவன், இப்படி ஒரு பாவியின் குணப்படுதலையிட்டு தேவன் இவ்வளவு சங்கடப்படுவானேன், இப்படிப் பிரயத்தனப்படுவானேன் என்று பழிப்பாய் பேசலாகாது. தேவன் தாமே ஒவ்வொரு பாவியையும் தமது ஆவியைக்கொண்டு மனம் திரும்பப்பண்ணுகிறதாய் இருந்தபோதிலும் அந்த மனம் திரும்புதலுக்கென்று உலகப் பிரகாரமாய் அவர் ஏற்படுத்தியிருக்கும் எத்தனங்களையும், ஆட்களையும் அசட்டை பண்ணுமல் கனப்படுத்திக்கொண்டே வருகிறார். எந்த ஆளால் அல்லது கருவியால் ஒரு பாவி மனம் திரும்பினபோதிலும் அதின் கனத்துக்கு தேவனே பாத்திரராயிருக்கிறார்.

ஒநேசிமுவின் குணப்படுதல் உத்தமமான குணப்படுதலா யிருந்தது. இதைப் பவுல் அப்போஸ்தலன் அறிந்தபடியி னாலே அவனைக் குறித்து பூரண திருப்தி உடையவராய் இருந்தார். அந்த ஏழைப் பாவி தன்னுடைய இருதயத்தின் கேட்டையும் விசேஷமாய் தான் செய்த களவையும் நன்றாய் உணர்ந்தான். அதற்கு அத்தாட்சியாக தன் பிழைகளை பவுல் அப்போஸ்தலனிடத்தில் விபரமாய் அறிக்கையிட்டு அவர் மூலமாய் தன்னுடைய பழைய எசமானிடத்தில் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படிக் கருதினான். மெய் மனம் திரும்புதலானது ஒருவன் செய்த பாவங்களை அறிய வும், உணரவும், அதற்காகத் துக்கப்படவும் செய்கிறதோடு, தேவனிடத்திலும், தான் நஷ்டப்படுத்தின ஆளிடத்திலும் மன்னிப்புக் கேட்கவும், கூடுமானால் தன்னாலுண்டான நஷ்டத்தை நிவர்த்தியாக்கிக்கொள்ளவும் ஒருவனை ஏவு கிறது. பாவமன்னிப்பை விரும்பும் பல பாவிகள், தாங்கள் செய்த பாவங்களுக்கு மன்னிப்பையும், தங்களுக்குள் ளிருந்து வேதனை செய்யும் மனச்சாட்சிக்கு சமாதானமும் கிடைக்கும்படி அந்தப் பாவங்களை அறிக்கையிடுவது அவசியம் என்று அறிந்து, அந்தரங்கத்தில் தேவனிடத்தில் மாத்திரம் போய் அறிக்கையிட்டு, மனுஷரிடத்தில் அதை மறைத்து அல்லது நியாயம் பேசி வருகிறார்கள்; தங்களா லுண்டான நஷ்டத்தை நிவர்த்தி செய்கிறதைப்பற்றி அவர் கள் கவலைப்பட வேண்டியதில்லை என்பதும் அவர்கள் அபிப்பிராயமாயிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு பாவ மன்னிப்புக் கிடைக்காது இவர்கள், எங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று என்று தப்பாய் எண்ணிக்கொண்டு திரியலாம். உள்ளபடி அவர்கள் பாவங்கள் நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று கட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல லாம். இதை வாசிக்கிற சிநேகிதனே, உன்னுடைய பழைய பாவங்களெல்லாம் சமூலமாய் மன்னிக்கப்பட வேண்டு மென்று ஆசைப்பட்டால் நீங்கள் செய்த பாவங்களை தேவ னிடத்தில் மாத்திரமல்ல, எந்த மனுஷனுக்கு விரோதமாய் தீமை செய்தீர்களோ அவனிடத்திலும் அறிக்கையிட்டு அதைக் கூடுமானால் நிவாரணம் செய்யவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இதின் சம்பந்தமாய்ச் சொல்லவேண்டிய

இன்னொரு விஷயமுமுண்டு; அதாவது இனிமேல் பாவம் செய்யாதிருக்கும்படி தேவன் தங்கள் மனதை முற்றிலும் மாற்றி, தங்களைப் புது மனுஷராக்கி, தமது ஆவியைக் கொண்டு, நல்ல வழிகளில் நடத்த வேண்டுமென்று எப்போதும் ஜெபம் செய்து வரவேண்டும். பாவமன்னிப்பைப் பெறுகிறதோடு பாவங்களையும் செய்துகொண்டு வந்து அந்தப் பிரகாரமாய் மரணமடைவது கிறிஸ்துமார்க்க மாகமாட்டாது, மெய் தேவ பக்தியாகவுமாட்டாது, மோட்ச வாழ்வை அடையவும் வழியாகவும் மாட்டாது.

ஒநேசிமு குணப்பட்ட பின்பு தன்னுடைய பழைய எசமானிடத்திற்கு மறுபடியும் போகவும், கீழ் அடங்கி நடக்கவும் ஆசைப்பட்டான். இப்படிப்பட்ட குணம் எல்லாப் பாவிகளுக்குள்ளுமிராது. சில துஷ்டர் தாங்கள் துரோகம் செய்த எசமான்களிடத்தில் சிலகாலம் பொறுத்து மறுபடியும் வேலையமருமப்படிப் போகலாம்; அதின் காரணம் பச்சாத்தாபத்தால் அல்ல, அதிக மோசமும், நஷ்டமும் உண்டு பண்ணும்படியாக இருக்கலாம். ஒநேசிமுவோ அப்படிப்பட்ட எண்ணத்தோடே மறுபடியும் தன் எசமானிடத்தில் போக நினைக்கவில்லை. தன்னுலுண்டான பண நஷ்டம் எவ்வளவோ அவ்வளவையும் கொடுத்துத் தீர்க்கவும் அவனுக்கு மனமிருந்தது. ஆனால் அதற்குரிய பெலன் அவனிடத்திலிருக்கவில்லை. தான் திருடின பணம் அளவு சம்பாதிக்கும்படி அவ்வளவு திறமையுடையவனுயு மிருக்கவில்லை. ஆதலால் அந்த நஷ்டத்துக்கு வேறொரு புண்ணியவான் மூலமாய் சகாயம் கிடைக்காதாவென்று ஆசைப்பட்டான். அவன் ஆசைப்பட்ட வண்ணமே கிடைத்தது. ஏனெனில் அவனை மனம் திரும்பப்பண்ணின பவுல் அப்போஸ்தலனே, தாம் அதற்கு உத்தரவாதியாவதாக வாக்களித்தபடியால் அவன் மனதுக்குப் பூரண சந்தோஷமாயிற்று.

ஆதலால் இனி நாம் இவ்விடத்தில் காலதாமதம் பண்ணுவதில் காரியமில்லை என்று தீர்மானித்து, பவுல் அப்போஸ்தலனிடத்தில் ஒரு கடிதம் பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அந்தக் கடிதத்தில், ஒநேசிமு குணப்பட்ட பின்பு முற்றிலும் புதிய ஆளாக மாறிவிட்டான் என்றும்,

அவனை நீர் அன்போடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவன் யாதொரு அநியாயம் செய்ததும், கடன் பட்டது முண்டானால் அதை தன் கணக்கிலே வையும் நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன் என்றும் எழுதியிருந்தது. இவ்வளவு அன்பு பாராட்டி, ஒநேசிமுக்கு சகாயம் செய்யும்படி பவுல் அப்போஸ்தலனை ஏவின காரணம், அவனிடத்தில் விளங்கின மெய்யான இருதய மாறுதலும், நிலையான பக்தியும், பரிசுத்த மான ஜீவியம்தான்.

ஒநேசிமுக்காக பவுல் அப்போஸ்தலன் பிணைப்பட்டதும், அவன் கடனை தன் கணக்கில் வைத்துக்கொண்டதுமான விஷயம் வேறொரு மேலான போதனை நமக்கு உணர்த்து கிறதாயிருக்கிறது. நாம் தேவனுடைய கட்டளைகளை மீறிப் பாவிகளானோம். ஒவ்வொரு பாவமும் ஒரு பெரிய கடன் தொகையாயிருக்கிறது. அந்தக் கடனைத் தீர்க்க நம்மிடத் தில் யாதொரு புண்ணிய பொக்கிஷமுமில்லை. நாம் நமது ஜீவ காலமெல்லாம் சம்பாதிக்கும் எவ்வகைப் புண்ணியங்களு மெல்லாம் கூடி நம்முடைய ஒரு பாவத்தின் கடன் தொகை யைச் சரிப்படுத்த மாட்டாது. உள்ளபடி புண்ணியம் என்ற வார்த்தை அதற்குச் சொல்லப்படக் கூடாது. ஏனெனில் நம்முடைய முதற்றரமான புண்ணியங்களிலும் பாவம் கலந் திருக்கிறது. நமது பாவக் கடன்களைத் தீர்க்கும் புண்ணிய புதையலை வேறொருவர் நமக்குத் தந்திருக்கிறார். அவர்தான் இயேசுகிறிஸ்து. அவர் பரிசுத்தமுள்ள தேவனாயிருந்து மனுஷனுக்கு தேவநீதியை வழுவற நிறைவேற்றி, நமது பாவங் களுக்காக மரித்து உயிர்த்தெழுந்ததால் உலகத்தார் அனை வருடைய பாவக் கடன்களுக்கும் போதுமானதும் நிறை வானதுமான புண்ணிய புதையலை யுடையவராயிருந்து, தம்மிடத்தில் பாவமன்னிப்பைத் தேடிவரும் யாவருக்கும் அதை இலவசமாய் அருளி வருகிறார். இந்தப் புண்ணி யத்தை யுடையவர்களுக்கு தேவன் பாவமன்னிப்பைக் கொடுக்கிறார்; அல்லது வேறுவிதமாய்ச் சொன்னால் அவர்கள் பாவக் கடன்களை மன்னித்துவிடுகிறார். கிறிஸ்துவின் புண்ணிய பொக்கிஷத்தை நாடிவரும் ஒவ்வொரு பாவிக்காக வும் அவர் தமது பிதாவை மன்றாடி 'அதை என் கணக்கிலே

வைத்துக்கொள்ளும்; நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன்' என்று சொல்லுகிறார், அப்படிப்பட்டவர்கள் பாவக் கடனுண்டாகும் நரக தண்டனைக்குத் தப்பிக்கொள்ளுகிறார்கள். இதை வாசிக்கிற சிநேகிதனே, உன்னுடைய பாவக்கடன் தொலையும்படி நீயும் இந்தப் புண்ணியவானை நாடித்தேடுவாயாக.

ஒநேசிமு தேவனிடத்திலும் தன் பழைய 'எசமானிடத்திலும் மன்னிப்பைப்பெற்று மனச் சாமாதானமாய் காலம் கழித்தான். பிந்திய காலத்தில் இவன் சபையில் கண்காணியாயிருந்ததாக ஆதிச்சபைச் சரித்திரங்களால் அறிகிறோம். கிறிஸ்துமார்க்கத்தில் அடிமை என்றும், சுயாதீனனென்றும் வித்தியாசமில்லை. அஞ்ஞான தேசத்தாருக்குள் வழங்கும் அடிமை முறையும், ஜாதி வித்தியாசப்போங்கும் கிறிஸ்துமார்க்கத்தில் இல்லை. அக்காலத்திலிருந்த அஞ்ஞான ரோமர் தங்களுடைய அடிமைகளை இஷ்டம்போல நடத்தவும் கொலை செய்யும் சலாக்கியமுடையவர்களாயிருந்தார்கள். இதே காலத்தில் ரோமையிலுள்ள ஒரு பிரபுவின் அடிமை ஒருவன் தன் எசமானைக் கொன்று போட்டான். அதற்குத் தண்டனையாக அவனுக்கு இருந்த ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமான நானூறு அடிமைகள் ஒரே நேரத்தில் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களில் மிச்சமானவர்கள் அந்தக் குற்றத்தில் எவ்வளவேனும் சம்பந்தப்படாதவர்களாயிருந்தாலும் அவனுக்கு அடிமைகளாயிருந்த முகாந்தரத்தையிட்டே கொல்லப்பட்டார்கள். ஒநேசிமுவின் எசமான் ஒரு அஞ்ஞானியாயிருந்தால் பிலேமோனை தப்பாமல் கொன்றிருப்பான். அல்லது சித்திரவதை செய்திருப்பான். அவன் கிறிஸ்தவனானதால் அப்படிச் செய்யவில்லை. கிறிஸ்துமார்க்கம் எல்லாரையும் கிறிஸ்துவுக்குள் சகோதரராக்குகிறது. அது அடிமை வியாபாரத்தையும், இம்சையையும் தடுத்து சுயாதீனத்தையும் அருளுகிறது.

சிலர் இப்படிப்பட்ட போர்போன துஷ்டரை கிறிஸ்துமார்க்கத்தில் சேர்க்கிறது சரியல்ல என்பார்கள். இப்படிச் சொல்வது பிசகு. மனம் திரும்புகிற ஒரே பாவியைக் குறித்து பரலோகத்திலே தேவதூதர் கூட்டத்தில் சந்தோஷ

முண்டாகிறது மெய்யானால் அவர்களை அசட்டைபண்ணுவது தகுதியீனமாகுமா? எல்லாரும் மனம் திரும்பவும் சத்தியத்தை அறிகிற அறிவுக்கு வரவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று வேத சாஸ்திரம் அறிவிக்கிறது. நாம் எல்லாரும் கோபாக்கினையின் பிள்ளைகளாகவே இருக்கிறோம், ஆதலால் ஒவ்வொருவரும் தன்னை மற்றவனிலும் பெரிய பாவி என்று உணர்ந்து, பேரெடுத்த பாவிகள் மனம் திரும்பும்போது கோபப்படாமல், சந்தோஷப்பட்டு என் சகோதரனாகிய இவன் மரித்தான் இப்போது உயிரோடிருக்கிறான், காணாமல் போனான் இப்பொழுது காணப்பட்டான் என்று பாடிக்களிகூருவோமாக (லூக். 15:32).

ஒநேசிமு மறுபடியும் தன் எசமானிடம் அனுப்பப்பட்டதால், அவரவர் தாங்கள் அழைக்கப்பட்டிருக்கிற நிலைமையிலும், பணிவிடையிலும் உண்மையாய் நடந்து வருகிறதுதான் தேவனுக்குப் பிரியமான ஊழியம் என்பது தெரியவருகிறது. சிலர் நாம் கிறிஸ்தவர்களாகி விட்டோம், இனி நாமும், எசமானும் சரி என்று திண்டாட்டமான எண்ணம் கொள்ளலாகாது. கிறிஸ்துமார்க்க அன்பு அந்தந்த நிலைமைக்குரிய தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் அழித்துவிடாமல் நிலைநிறுத்துகிறதென்றே சொல்லவேண்டியது. இதே சத்தியத்தை பரி. பவுல் தமது நிருபங்களில் திட்டமாய் உணர்த்துகிறார் (எபே. 6:5-10; கொலோ. 3:22; 4:1).

நமது தேசத்திலுள்ள அனேக எசமான்கள், பெருமையும் அகங்காரமும் பாராட்டி வேலையாட்களை இம்சைப்படுத்தி வருகிறதை அடிக்கடி காண்கிறோம். இது சரியல்ல. இவ்வுலகத்துக்கடுத்த அந்தஸ்துமேன்மையும், ஆணவத்தின் படிகளும் சீக்கிரம் ஒழிந்துபோம். மறுமையில் எசமான் வேலையாள் என்ற தாரதம்மியமின்றி ஏக சகோதரராய் பரிசுத்தவான்கள் தேவனைத் தொழுது கொண்டு வருவார்கள். ஒரு காலத்தில் கொலோசை ஊரில் எசமானும் அடிமையுமாயிருந்த பிலேமோனும், ஒநேசிமும், அவ்விருவரையும் மனம் திரும்பச் செய்த பவுல் அப்போஸ்தலனும் ஏக சகோதரர் போல் மோட்சலோகத்தில் நின்று தேவனை ஸ்துதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

முடிவுரை

வேத புருஷருடைய வரலாறுகளை நாம் இப்படி மூன்று பங்கான பிரபந்தத்தின் மூலமாய் உங்களுக்குக் காட்டின நோக்கம், அவர்களுடைய சரித்திரங்களையும் அவர்களுடைய சரீர உறுப்புகளின் தன்மையையும் நீங்கள் ஒரு வாறு அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தினாலே யல்ல; அவர்களுடைய உள்ளான மனுஷனுடைய தன்மையை அறிந்து, அவர்களுடைய பரிசுத்த அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும்படி உங்களை ஏவி, அவர்களில் விளங்கும் பிசகுகளுக்கு உங்களை விலக்கிக் கொள்ளும்படியாகத்தான்.

தேவ பக்தியானது வெறும் அபிப்பிராயமாய் அல்லது கருத்தாயிராமல் நிலையான ஒரு சத்தியமாயிருக்கிறது. இந்தச் சத்தியம் அவரவருடைய அநுபோகத்தினால் உணர்ந்துகொள்ளப்பட்டு, அவர்கள் கிரியைகளால் வெளிப்படவேண்டும். மற்றவர்களுடைய வரலாறுகளைப்பற்றிய அறிவைவிட தன் இருதய நிலைமையை அறிகிறதுதான் விசேஷமானது. ஆதலால் வேத புருஷர் என்னும் நூலை வாசிக்கிற ஒரு மனுஷன், ஒவ்வொரு சரித்திரத்தையும் வாசித்து முடித்தவுடனே நான் இந்த பக்தனைபோலிருக்கிறேனு அல்லவோவென்று தன்னைக் குறித்துக் கேட்டுக் கொள்ளவேண்டும். 'தன் இருதயமே தனக்கு ஜோஷியன்' என்றும், 'நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை' என்றும் உலகத்திலே சொல்லிக்கொள்ளுகிறதுண்டு. இது மெய்யான சுலோகம்தான். தன் மன நிலைமையை ஒருவன் மற்றவர்களைவிட தானே திட்டமாய்ச் சொல்லக்கூடும். ஆதலால் சிநேகிதனே! உன் இருதய நிலைமையைப்பற்றி என்ன சொல்லுகிறாய்? 'உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்.

உங்களை நீங்களே பரிட்சித்துப் பாருங்கள்' என்று பரி. பவுல் சொல்லி இருக்கிறார். (2 கொரி. 13:5).

வேதாகமத்திலடங்கிய பல சரித்திரங்களைக்கொண்டு, ஒவ்வொரு மனுஷனையும் சன்மார்க்கத்தில் உறுதிப்படுத்த வேண்டுமென்று கருதியே தேவன் அதின் மிச்சமான பாகத்தை பலருடைய சரித்திரத்தாலும் நிரப்பியிருக்கிறா ரென்று சொல்லவேண்டியது. அவைகளைக்கொண்டு நாம் நம்முடைய இருதய நிலைமையைச் சீர்ப்படுத்திக் கொள்ளாத பட்சத்தில் அந்தச் சரித்திரங்களிலே நமக்கு லாபமில்லை. ஆபிரகாம், தானியேல், யோவான், பவுல் முதலியவர்கள் தங்கள் தங்கள் காலத்தில் தேவனுக்குப் பிரியமாய் நடந்த பக்தராயும், காயீன், பிலேயாம், யூதாஸ் முதலியவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட தேவ கிருபையை அசட்டை செய்து அவபக்தராயும் தங்கள் காலத்தைக் கழித்தார்கள் என்று பார்க்கிறோம். உன்னுடைய இருதய நிலைமை எந்தப் பட்சத்தைச் சேர்ந்திருக்கிறதென்று நீ கண்டறிந்துகொள்ள வேண்டியது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் இருதய நிலையை கண்டறிந்துகொள்ளும்படி பரி. பவுலின் ஆலோசனைப் பிரகாரம் தன்னைப் பரிசோதிப்பது நலம். அந்த ஆலோசனைகளாவன:

1. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களைச் சோதித்து அறியவேண்டும் (2 கொரி. 13:5). வேதாகம சத்தி யங்களையும் தேவ பக்திக்கடுத்த முறைகளையும் ஆசாரங்களை யும் பொதுவில் அங்கிகாரம் பண்ணி காலட்சபம் செய்வது கிறிஸ்துமார்க்கத்துக்குப் போதாது. இவ்வளவும் வெளிப் படையான்கிறிஸ்துமார்க்கமேயன்றி ஆவிக்குரிய மாறுதலின் மார்க்கமில்லை. இது தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறதாயிருக்கிறது. நாம் விசுவாச முள்ளவர்களாய் நடக்கவேண்டுமென்பது பாவத்தைப் பகைக்கிற சுபாவத்தையும் பரிசுத்தமுள்ள இயேசுவின் மாதிரியின்படி நடக்க முயற்சிக்கிறதையும் ஆவிக்குரிய வளர்ச்சியில் நிலையாக விருத்தியாகிக்கொண்டு வருவதை யுமே குறிக்கிறது. உலகம் தேவ பக்திக்கடுத்த அநேக முறைகளையும் வழிகளையும் குறிக்கலாம், அவைகளில் நடப்

யது விசுவாச ஜீவனமல்ல. ஆகால் கிறிஸ்துவின் மாதிரியின் படி ஒருவன் தன் பேச்சையும், குணத்தையும், செய்கை களையும் திருத்திக்கொண்டு வருகிறதும், வாய்மையாகப் படுகிறதும் தான் விசுவாச ஜீவனமாகும்.

2. கிறீஸ்து உங்களில் வாசமாயிருக்கிறாரா? என்று உங்களைப் பரிசோதிக்கவேண்டும். கிறிஸ்து எங்கும் நிறைந் திருக்கிற முறையும், இரண்டு பேர் மூன்று பேர் அவருடைய நாமத்தினிமித்தம் கூடியிருக்கிறபோது வந்திருக்கிற முறை யும் அவர் தமது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற முறையும், விசுவாசத்தினாலே அந்தந்த இருதயங்களில் வாச மாயிருப்பதின் முறையும் வெவ்வேறு. இவை எல்லாவற்றி லும் பாவிக்கு அநுகூலமான முறை கடைசியான முறை தான். கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருப்பதால் அவருடைய குணமும், சுபாவமும், நம்முடைய குணங்களை யும், சுபாவங்களையும், பேச்சையும், செய்கையையும் மாற்றிப் போடுகிறதால் நாம் கிறிஸ்துவைப்போல் விளங்குவோம். இது இந்த ஜீவியத்தின் பக்தியின் பூரண ஸ்திதியாயிருக் கிறது. இவர்கள் தேவசாயலின்படியே மகிமையின்மேல் மகிமையடைவார்கள் (2 கொரி. 3:18). இவர்கள் கிறிஸ்து வைத் தரித்திருக்கிறவர்களாயும் (கலா. 3:27) அவருக்குள் நிலைத்திருக்கிறவர்களாயும் இருக்கிறார்கள் (1 யோவா. 2:6).

இவ்விதமாறுதலையடைந்தவனுடைய உள்ளான மனு ஷன் பரிசுத்த ஆவியினாலே வல்லமையாய்ப் பலப்படுத்தப் படுகிறதால் அவன் பாவங்களை லேசாக ஜெயிக்கவும் பரி சுத்தத்தை எளிதில் சம்பாதித்துக்கொள்ளவும் தகுதியுடையவ னாகிறான். இவனுக்குத்தான் கிறிஸ்தவன், அல்லது பக்தன் விசுவாசி என்ற பேர் தகும். ஆதலால் நீநேற்றாவது இவ்விதமாறுதலை நீ உடையவனோ அல்லவோ என்று பரி சோதனை செய்வது தகுதியாயிருக்கும்.

நம்முடைய பரிசுத்த ஜீவனத்தைப்பற்றி அவ்வளவாய் கவலைப்படவேண்டியதென்ன? கிறிஸ்து மார்க்கத்திலிருந் தால்போதாதா? என்று சற்று கவலையீனமாய்பேசுகிற கிறிஸ் தவர்களை நாம் அடிக்கடிக் காண்கிறோம். இவர்கள் மறுமை யின் நல்வாழ்வையும் இனிவரும் மோட்ச சுதந்தரங்களையும்

அநுபவித்துக் கொள்ளமாட்டார்கள். 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்று தீர்மானமாய்ச் சொல்லியிருக்கிறார் (யோவா. 3:3). இந்தப் பிரபந்தத்தில் வரும் பக்தாட்கள் எல்லாரும் மறுபடியும் பிறந்தவர்களாகவே விளங்கி, முத்தியை அடைந்திருக்கிறார்கள். மறுபடியும் பிறவாதவர்களுக்கு அந்த வாழ்வு கிடைக்கவே இல்லை.

மறுபடியும் பிறந்தவர்களாயிருக்கிற கிறிஸ்தவர்கள் பாக்கியவான்களாய் இருக்கிறார்கள். அவர்கள் பூர்வ பக்தருடைய வரலாறுகளால் தங்களுடைய பக்தியை விருத்தியாக்கிக்கொண்டு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, எலியா, தானியேல், பேதுரு, யோவான், பவுல் முதலிய மகாத்துமாக்களோடு சஞ்சரிக்கும்படி தங்கள் தங்கள் முறையின்படி இந்த பூலோகத்தை விட்டுப் பிரிந்து, பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்துக்கும், பூரணராகப்பட்ட நீதிமான்களுடைய ஆவியினிடத்துக்கும் போய்ச் சேர்ந்து (எபி. 12:23), தூதரோடும், பிரதான தூதரோடும், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், இரத்த சாட்சிகளாகிய திரண்ட சேனையோடும் கூடி, 'சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக' என்று பாடி ஆர்ப்பரிப்பார்கள் (வெளி. 5:13) இந்த மேலான கடைசி வாழ்வை தேவன் இந்த ஆகமங்களை எழுதுகிற எனக்கும் இதை வாசிக்கிற ஒவ்வொருவனுக்கும் அநுக்கிரகிப்பாராக. ஆமென்.

எங்களின் அண்மைக்காலத் தியான நூல்கள்

ஏழு வார்த்தைகள்
கிறிஸ்தவ ஜீவியம்
கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்
என் சுயசரிதை
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்
பரமானந்தம் ஐயரின் தியானக் குறிப்புக்கள்
— எஸ். பரமானந்தம்

நிமிடச் செய்திகள்
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

கண்ணீரைப் போக்கும் காலைப்பொழுது
— ஜான் எச்.பீட், தமிழாக்கம் : தி. தயானந்தன் பிரான்சிஸ்

உயர, உயர....
ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்
— கே.ஜி. எபநேசர்

எல்லாம் இயேசுவே
— எபநேசர் டிக்கிகஸ்

சிறுவர்களே உங்களுக்கு
— ராஜம்மாள் டிக்கிகஸ்

யாமறிந்த நூல்களிலே...
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

மோட்சப் பிரயாணம்
— ஜான் பனியன், தமிழாக்கம் : சாமுவேல் பவுல்

தியான ஆலயம்
கர்த்தருடைய ஜெபம்
உங்களோடு ஒரு நிமிடம்
ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்
தியானச் சோலை
— சாமுவேல் பவுல்

CLS
PUTHIA ĒRPATṬUP PURUṢHAR
By Samuel Paul
விலை ரூ. 90.00 (இந்தியாவில் மட்டும்)